Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.



©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.

வெளியீடு : 21-3-2014 Issued : 21-3-2014

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

திங்கட்கிழமை, அக்டோபர் 28, 2013—தொகுதி 57

Monday, the 28th October 2013—Volume 57

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

11-324

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

28–10–2013

உள்ளடக்கம்

	பக்கங்கள்
ஆளுநரும் அமைச்சரவையும்	v-x
Governor and Council of Ministers	xi-xv
பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்	xvii-xx
பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)	xxi-xxxi
1. வினாக்கள் விடைகள்—	
(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்	1-54
(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 9 முதல் 16 வரை)	54-651
2. தகவல் கோரல்—	
அரசு சிற்றுந்துகளில் வரையப்பட்டுள்ள படம் குறித்து	651-676
முனைவர் செ.கு. தமிழரசன்	651-652, 654-655, 658-661,664, 666-668,
*மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி	653-657,661-663
திரு. மு.க. ஸ்டாலின்	654,655
மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்	659,660
*மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்	669
மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி	669-676
3. கவன ஈர்ப்பு—	
அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை மற்றும் பணப் பயன்கள் தங்கு தடையின்றிக் கிடைக்கச் செய்தல்	676-688
*திரு. அ. சவுந்தரராசன்	676-677,685-686
மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்	677-685,687-688
திரு. எம். ஆறுமுகம்	686-687

பக்கங்கள்

4. அறிக்கைகள் அளித்தல்—

சட்டவிதிகள் ஆய்வுக் குழு 688-689

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு, 2013 689-690

*மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி 689,690

(ஆ) திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு, 2013 690-691

*மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி 690,691

(இ) தமிழ்நாடு இந்துசமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013 691

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன் 691

6. அறிவிப்பு—

கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2013–2014, முன்மொழிதல் (ஆ.செ.) 692

7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்— 692-793

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 692, 699, 701-702, 756, 763, 769, 792-973

திரு. எல். வெங்கடேசன் 698-703, 705-710, 712-715

*மாண்புமிகு திரு. பி.வி. ரமணா 701

*மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி 703,708-709, 751, 752

மாண்புமிகு திரு. என்டி. வெங்கடாச்சலம் 703-706, 708, 759, 760,

மாண்புமிகு திரு. ப. மோகன் 706

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் 707

பக்கங்கள்

7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 709, 712

*மாண்புமிகு திரு. செ. தாமோதரன் 710-711, 747-748

*திரு. பி.வி. கதிரவன் 712, 715-717, 731-733

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் 717-731, 733, 786

திரு. ஆர்.பி. உதயகுமார் 733-743

*மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் 743-744, 749-750, 765-769, 773-774, 791-792

*திரு. க. பாலகிருஷ்ணன் 745-747, 749 751-756

*மாண்புமிகு திரு. பி. தங்கமணி 754,761, 762, 764

திரு. சு. குணசேகரன் 695, 756-765, 768-769, 772, 773

செல்வி கே. பாலபாரதி 767

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு 770-772

*திரு. ஆர். சீனிவாசன் 774-783

திருமதி எஸ். விஜயதரணி 696-697, 783-791

மாண்புமிகு திரு. வீ. மூர்த்தி 784-785

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 793-795

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர் – முனைவர் கே. ரோசய்யா

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

பொது, இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, பொது நிருவாகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல் மற்றும் உள் துறை

2. நிதி அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள்

3. மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு

4. நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் மற்றும் இலஞ்ச ஒழிப்பு

5. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

6. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப. மோகன்:**

குடிசைத் தொழில் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

7. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள், மாற்றுத் திறனாளிகள் நலன் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்

8. உயர் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், பள்ளிக் கல்வி, தொல்பொருளியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு

9. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

10. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

11. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் ..	**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு
12. நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் ..	**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்
13. உணவுத் துறை அமைச்சர் ..	**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு
14. பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் ..	**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:** பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி
15. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ..	**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு
16. பொதுப் பணித் துறை அமைச்சர் ..	**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம் மற்றும் செயற்திட்டப் பணிகள்

17. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** *கால்நடை பராமரிப்பு*
18. தொழில் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *தொழில்கள், எஃகுக் கட்டுப்பாடு, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் மற்றும் சிறப்பு முயற்சிகள்*
19. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** *கைத்தறி மற்றும் துணிநூல்*
20. இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்:** *இந்து சமய மற்றும் அறநிலையங்கள்*
21. வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** *வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்*
22. சுற்றுலாத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** *சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்*
23. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** *ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்*
24. போக்குவரத்துத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** *போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்*

25. மீன் வளத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** *மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்*
26. தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்:** *தகவல் தொழில்நுட்பம்*
27. செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** *செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம் மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம் மற்றும் தேர்தல் அறிக்கை செயலாக்கம்*
28. வனத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:** *வனம்*
29. வருவாய்த் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** *வருவாய், மாவட்ட வருவாய் நிருவாகம், துணை ஆட்சியர்கள், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்கள் பதிவு*
30. கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. தோ.பெ. பூனாட்சி:** *கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராம தானம்*

31. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

32. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், வக்ஃபு உள்ளிட்ட சிறுபான்மையினர் நலன்

தமிழ்நாடு TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

GOVERNOR AND COUNCIL OF MINISTERS

GOVERNOR – Dr. K. ROSAIAH

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. Chief Minister .. **The Hon. Selvi J Jayalalithaa:**

Public, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, General Administration, District Revenue Officers, Police, Home

2. Minister for Finance .. **The Hon. Thiru O. Panneerselvam:**

Finance, Planning, Legislative Assembly, Elections and Passports

3. Minister for Electricity & Prohibition and Excise .. **The Hon. Thiru Natham R. Viswanathan:**

Electricity, Non-Conventional Energy Development, Prohibition and Excise, Molasses

4. Minister for Municipal Administration & Rural Development, Law, Courts and Prisons .. **The Hon. Thiru K.P. Munusamy:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply, Law, Courts and Prisons, Personnel and Administrative Reforms and Prevention of Corruption

5. Minister for Housing and Urban Development .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board and Accommodation Control, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

6. Minister for Rural Industries	..	**The Hon. Thiru P. Mohan:** Rural Industries including Cottage Industries and Small Industries
7. Minister for Social Welfare and Nutritious Noon Meal Programme	..	**The Hon. Tmt. B. Valarmathi:** Social Welfare including Women's and Children's Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes, Welfare of the Differently Abled and Social Reforms and Nutritious Noon Meal Programme
8. Minister for Higher Education	..	**The Hon. Thiru P. Palaniappan:** Higher Education including Technical Education, Electronics, Science and Technology, School Education, Archaeology, Sports and Youth Welfare, Tamil Official Language and Tamil Culture
9. Minister for Agriculture	..	**The Hon. Thiru S. Damodaran:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Waste Land Development
10. Minister for Co-operation	..	**The Hon. Thiru Sellur K. Raju:** Co-operation, Statistics and Ex-Servicemen Welfare
11. Minister for Labour	..	**The Hon. Thiru K.T. Patchaimal:** Labour, Population, Employment and Training, Newsprint Control, Census and Urban & Rural Employment

12. Minister for Highways & Minor Ports	..	**The Hon. Thiru Edappadi K. Palaniswami:** Highways & Minor Ports
13. Minister for Food	..	**The Hon. Thiru R. Kamaraj:** Food, Civil Supplies, Consumer Protection and Price Control
14. Minister for Milk and Dairy Development	..	**The Hon. Thiru V. Moorthy:** Milk and Dairy Development
15. Minister for Environment	..	**The Hon. Thiru M.C. Sampath:** Environment and Pollution Control
16. Minister for Public Works	..	**The Hon. Thiru K.V. Ramalingam:** Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works
17. Minister for Animal Husbandry	..	**The Hon. Thiru T.K.M. Chinnayya:** Animal Husbandry
18. Minister for Industries	..	**The Hon. Thiru P. Thangamani:** Industries, Steel Control, Mines & Minerals and Special Initiatives
19. Minister for Handlooms & Textiles	..	**The Hon. Dr. S. Sundararaj:** Handlooms & Textiles
20. Minister for Hindu Religious and Charitable Endowments	..	**The Hon. Thiru P. Chendur Pandian:** Hindu Religious and Charitable Endowments

21. Minister for Commercial Taxes & Registration	..	**The Hon. Thiru B.V. Ramanaa:** Commercial Taxes & Registration and Stamp Act
22. Minister for Tourism	..	**The Hon. Thiru S.P. Shunmuganathan:** Tourism, Tourism Development Corporation
23. Minister for Adi Dravidar & Tribal Welfare	..	**The Hon. Thiru N. Subramanian:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour
24. Minister for Transport	..	**The Hon. Thiru V. Senthil Balaji:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act
25. Minister for Fisheries	..	**The Hon. Thiru K.A. Jayapal:** Fisheries and Fisheries Development Corporation
26. Minister for Information Technology	..	**The Hon. Thiru N. Subramanian:** Information Technology
27. Minister for Information and Special Programmes Implementation	..	**The Hon. Thiru K.T. Rajenthra Bhalaji:** Information & Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing and Government Press and Implementation of Special Programmes and Implementation of the Election Manifesto
28. Minister for Forests	..	**The Hon. Thiru M.S.M. Anandan:** Forests

29. Minister for Revenue	..	**The Hon. Thiru N.D. Venkatachalam:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits, Registration of Companies
30. Minister for Khadi and Village Industries	..	**The Hon. Thiru T.P. Poonachi:** Khadi and Village Industries Board, Boodhan and Gramadhan
31. Minister for Health	..	**The Hon. Thiru K.C. Veeramani:** Health, Medical Education and Family Welfare
32. Minister for Backward Classes and Minorities Welfare	..	**The Hon. Thiru S. Abdul Rahim:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Overseas Indians, Refugees and Evacuees and Minorities Welfare including Wakf

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. ப. தனபால்

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்

மாற்றுத் தலைவர்கள்#

திரு. அ. பாப்பா சுந்தரம்

திரு. ஆர்.பி. உதயகுமார்

திரு. கே.பி. அன்பழகன்

திரு. ஆர். சின்னசாமி

திரு. பி.ஜி. நாராயணன்

திரு. சு. குணசேகரன்

செயலாளர்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன்

 # 24—10—2013 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	கூடுதல் செயலாளர்
திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. நா. வீரராகவன், எம்.ஏ., எம்.பி.ஏ., பி.ஜி.எல்., பி.ஜி.டி.சி.ஏ.	..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. க. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர்
செல்வி எஸ். பிலோமினா, எம்.எஸ்.டபிள்யூ., பி.எட்., பி.எல்.	..	இணைச் செயலாளர்
திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல்.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. பா.சி.க. சிங்காரவேலு, எம்.ஏ., பி.எல்.	..	துணைச் செயலாளர்
திருமதி மு. சுப்புலட்சுமி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. க. பூபதி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. தி.ஜெ. ஸ்ரீதர், பி.எஸ்சி.	..	குழு அலுவலர்
திரு. ந. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. க. சங்கர், பி.காம்., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. வே. ரவிசங்கர், எம்.ஏ., பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. கி. சீனிவாசன், எம்.ஏ., பி.எஸ்.சி., பி.ஜி.எல்., சி.எஸ்.ஐ.எஸ்.	.. பேரவைத் தலைவரின் தனிச் செயலர்
திரு. து. கணேசன், எம்.ஏ., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. இரா. சந்திரசேகரன், பி.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி.	.. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர்
திரு. ந. இரவிசந்திரன், பி.எஸ்சி., பி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. அ. வீராராஜேந்திரன், எம்.ஏ., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி க. செந்தாமரை, பி.ஏ., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. இராம.சோ. கிரிதரன், பி.ஏ., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி சி. சகுந்தலா, பி.ஏ., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. மா. கோபாலகிருஷ்ணன், பி.ஏ.	.. சார்புச் செயலாளர்
திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. தலைமை நிருபர்
திரு. ப. சிவராமன், எம்.ஏ., பி.ஜி.எல்.	.. தலைமை நிருபர்
திரு. பா. சுப்பிரமணியம், பி.காம்., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்

திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. செ. பாண்டியன், எம்.ஏ., எம்.ஃபில்., பி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. வெ. கலைராஜன், எம்.ஏ., பி.எட்., பி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. மு. ஆதிசேஷன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி. .. சார்புச் செயலாளர்

திரு. ப. பத்மகுமார், எம்.எஸ்சி., பி.எட்., பி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. மு. கருணாநிதி, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திருமதி பி. தேன்மொழி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எல். .. சார்புச் செயலாளர்

TRUTH ALONE TRIUMPHS

பேரவை உறுப்பினர்கள்

(அகர வரிசைப்படி)

பெயர்களும் தொகுதிகளும்

1. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. – கலசப்பாக்கம்
2. அசோக், திரு. எம்.கே. – வேளச்சேரி
3. அண்ணாதுரை, திரு. இரா. – மதுரை தெற்கு
4. அப்துல் ரஹீம், திரு. எஸ். – ஆவடி
5. அரங்கநாதன், திரு. ஆ.க. – கீழ்பெண்ணாத்தூர்
6. அருண் சுப்பிரமணியன், திரு. மு. – திருத்தணி
7. அருண் பாண்டியன், திரு. செ. – பேராவூரணி
8. அருள்செல்வன், திரு. ஆர். – மயிலாடுதுறை
9. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், திரு. – சேலம் வடக்கு
10. அழகுவேலு, திருமதி க. – கள்ளக்குறிச்சி (செ.வ.)
11. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. – திருச்செந்தூர்
12. அன்பழகன், திரு. க. – கும்பகோணம்
13. அன்பழகன், திரு. கே.பி. – பாலக்கோடு
14. அன்பழகன், திரு. ஜெ. – சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி
15. அஸ்லம் பாஷா, திரு. அ. – ஆம்பூர்
16. ஆறுக்குட்டி, திரு. வி.சி. – கவுண்டம்பாளையம்
17. ஆறுமுகம், திரு. எம். – வால்பாறை (செ.வ.)
18. ஆனந்தன், திரு. எம்.எஸ்.எம். – திருப்பூர் வடக்கு
19. இந்திராகாந்தி, திருமதி த. – துறையூர் (செ.வ.)

20. இராமகிருஷ்ணன், திரு. நா. .. கம்பம்
21. இராமச்சந்திரன், திரு. ச. .. ஆலந்தூர்
22. இராமச்சந்திரன், திரு. டி. .. தளி
23. இராமலிங்கம், திரு. கே.வி. .. ஈரோடு மேற்கு
24. இராஜி, திரு. வி.எஸ். .. செய்யூர் (செ.வ.)
25. இராஜேந்திரன், திரு. இரா. .. குறிஞ்சிப்பாடி
26. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
27. உதயகுமார், திரு. ஆர்.பி. .. சாத்தூர்
28. உலகநாதன், திரு. கே. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
29. எடப்பாடி கே. பழனிசாமி, திரு. .. எடப்பாடி
30. கடம்பூர் ராஜு, திரு. .. கோவில்பட்டி
31. கணிதா சம்பத், திருமதி எஸ். .. மதுராந்தகம் (செ.வ.)
32. கணேசன், திரு. பா. .. உத்திரமேரூர்
33. கணேஷ்குமார், திரு. அ. .. செஞ்சி
34. கதிரவன், திரு. பி.வி. .. உசிலம்பட்டி
35. கந்தன், திரு. கே.பி. .. சோழிங்கநல்லூர்
36. கருணாநிதி, திரு. மு. .. திருவாரூர்
37. கருப்பசாமி, திரு. ஏ.ஏ. .. அவினாசி (செ.வ.)
38. கருப்பையா, திரு. பழ. .. துறைமுகம்
39. கருப்பையா, திரு. மு.வீ. .. சோழவந்தான் (செ.வ.)
40. கலை அரசு, திரு. ம. .. அணைக்கட்டு
41. கலைராஜன், திரு. வி.பி. .. தியாகராய நகர்
42. காமராஜ், திரு. இரா. .. நன்னிலம்

43. காமராஜ், திரு. என்.வி. .. வேதாரண்யம்

44. காமராஜ், திரு. செ. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)

45. கார்த்திக் தொண்டைமான், திரு... புதுக்கோட்டை

46. கிட்டுசாமி, திரு. ஆர்.என். .. மொடக்குறிச்சி

47. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)

48. கிருஷ்ணமூர்த்தி, திரு. கொ.ஏ. .. பர்கூர்

49. கிருஷ்ணன், திரு. கு.ப. .. ஆலங்குடி

50. கிருஷ்ணன், திரு. சி. .. ஓமலூர்

51. குணசீலன், திரு. வே. .. வந்தவாசி (செ.வ.)

52. குணசேகரன், திரு. சு. .. சிவகங்கை

53. குணசேகரன், திரு. ம. .. மானாமதுரை (செ.வ.)

54. குப்பன், திரு. கே. .. திருவொற்றியூர்

55. குமரகுரு, திரு. இரா. .. உளுந்தூர்பேட்டை

56. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஜெயங்கொண்டம்

57. கோகுல இந்திரா, திருமதி எஸ். .. அண்ணா நகர்

58. கோபால்சாமி, திரு. க. .. ராஜபாளையம்

59. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்

60. சக்கரபாணி, திரு. அர. .. ஓட்டன்சத்திரம்

61. சக்தி, திருமதி ம. .. சீர்காழி (செ.வ.)

62. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்

63. சண்முகம், திரு. சி.வி. .. விழுப்புரம்

64. சண்முகவேலு, திரு. சி. .. மடத்துக்குளம்

65. சந்திரகுமார், திரு. வி.சி. .. ஈரோடு கிழக்கு

66. சந்திரசேகர், திரு. ஆர். .. மணப்பாறை

67. சம்பத், திரு. எம்.சி. .. கடலூர்

68. சம்பத்குமார், திரு. கோவி. .. வாணியம்பாடி

69. சம்பத்குமார், திரு. ப. .. திருச்செங்கோடு

70. சரத்குமார், திரு. ரா. .. தென்காசி

71. சவுந்தரராசன், திரு. அ. .. பெரம்பூர்

72. சாந்தி, திருமதி ஆர். .. சேந்தமங்கலம் (ஆ.வா.)

73. சாமி, திரு. ஆர். .. மேலூர்

74. சிவக்கொழுந்து, திரு. ப. .. பண்ருட்டி

75. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. குன்னம்

76. சிவசுப்பிரமணியன், திரு. எம்.பி.எஸ். .. நெய்வேலி

77. சிவபதி, திரு. என்.ஆர். .. முசிறி

78. சின்னசாமி, திரு. ஆர். .. சிங்காநல்லூர்

79. சின்னராஜ், திரு. ஓ.கே. .. மேட்டுப்பாளையம்

80. சின்னையா, திரு. டி.கே.எம். .. தாம்பரம்

81. சீனிவாசன், திரு. ஆர். .. ஆற்காடு

82. சுந்தரம், திரு. பி.எல். .. பவானிசாகர் (செ.வ.)

83. சுந்தரராஜ், டாக்டர் ச. .. பரமக்குடி (செ.வ.)

84. சுந்தர்ராஜன், திரு. ஆர். .. மதுரை மத்தி

85. சுபா, திருமதி ர. .. கெங்கவல்லி (செ.வ.)

86. சுப்பிரமணியன், திரு. ந. .. செய்யாறு

87. சுப்பையா, திரு. இ. .. அம்பாசமுத்திரம்

88. சுப்ரமணியன், திரு. ந. .. கந்தர்வகோட்டை (செ.வ.)

89. சுரேஷ்குமார், திரு. டி. .. செங்கம் (செ.வ.)
90. செங்குட்டுவன், திரு. டி. .. வேப்பனஹள்ளி
91. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிசெட்டிப்பாளையம்
92. செந்தமிழன், திரு. ஞா. .. சைதாப்பேட்டை
93. செந்தில்குமார், திரு. எஸ். .. திருவெறும்பூர்
94. செந்தில்பாலாஜி, திரு. வி. .. கரூர்
95. செந்தூர் பாண்டியன், திரு. பூ. .. கடையநல்லூர்
96. செல்லப்பாண்டியன், திரு. சி.த. .. தூத்துக்குடி
97. செல்லூர் கா. ராஜு, திரு. .. மதுரை மேற்கு
98. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி
99. செல்வராஜு, திரு. எம்.கே. .. சேலம் தெற்கு
100. செல்வி ராமஜெயம், திருமதி .. புவனகிரி
101. செழியன், முனைவர் கோவி. .. திருவிடைமருதூர் (செ.வ.)
102. சேகர், திரு. சி.எச். .. கும்மிடிப்பூண்டி
103. சோமசுந்தரம், திரு. வி. .. காஞ்சிபுரம்
104. சோழன் சித. பழனிச்சாமி, திரு. .. காரைக்குடி
105. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி
106. டில்லி பாபு, திரு. ப. .. அரூர் (செ.வ.)
107. தங்கமணி, திரு. பி. .. குமாரபாளையம்
108. தங்கம் தென்னரசு, திரு. .. திருச்சுழி
109. தங்கவேலன், திரு. சுப. .. திருவாடனை
110. தங்கவேல், திரு. கே. .. திருப்பூர் தெற்கு
111. தமிழரசன், திரு. கா. .. மதுரை கிழக்கு

112. தமிழரசன், முனைவர் செ.கு. .. கீழ்வைத்திணான்குப்பம் (செ.வ.)
113. தமிழழகன், திரு. க. .. திட்டக்குடி (செ.வ.)
114. தமிழ்ச்செல்வன், திரு. இரா. .. பெரம்பலூர் (செ.வ.)
115. தமிழ்ச்செல்வன், திரு. தங்க. .. ஆண்டிப்பட்டி
116. தனபால், திரு. ப. .. ராசிபுரம் (செ.வ.)
117. தனியரசு, திரு. உ. .. பரமத்தி வேலூர்
118. தன்சிங், திரு. ப. .. பல்லாவரம்
119. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
120. திராவிடமணி, திரு. மு. .. கூடலூர் (செ.வ.)
121. தினகரன், திரு. க. .. சூலூர்
122. துரைக்கண்ணு, திரு. இரா. .. பாபநாசம்
123. துரைசாமி என்கிற சேலஞ்சர் துரை, திரு. ரா. .. கோயம்புத்தூர் தெற்கு
124. துரைமுருகன், திரு. .. காட்பாடி
125. துரையப்பா, டாக்டர் ச. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
126. நஞ்சப்பன், திரு. ந. .. பெண்ணாகரம்
127. நடராஜ், திரு. என்.எஸ்.என். .. காங்கேயம்
128. நத்தம் ஆர். விசுவநாதன், திரு. .. நத்தம்
129. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
130. நல்லதம்பி, திரு. கு. .. எழும்பூர் (செ.வ.)
131. நாகராஜன், திரு. கே.பி. .. மயிலம்
132. நாகைமாலி, திரு. வீ.பி. .. கீழ்வேளூர் (செ.வ.)
133. நாஞ்சில் முருகேசன், திரு. அ. .. நாகர்கோவில்
134. நாராயணன், திரு. ஆ. .. நாங்குநேரி

135. நாராயணன், திரு. பி.ஜி.	..	பவானி
136. நீலகண்டன், திரு. வ.	..	திரு.வி.க. நகர் (செ.வ.)
137. பச்சைமால், திரு. கே.டி.	..	கன்னியாகுமரி
138. பரஞ்ஜோதி, திரு. மு.	..	திருச்சிராப்பள்ளி மேற்கு
139. பரமசிவம், திரு. கே.பி.	..	பல்லடம்
140. பவுன்ராஜ், திரு. சு.	..	பூம்புகார்
141. பழனிசாமி, திரு. கே.சி.	..	அரவக்குறிச்சி
142. பழனிச்சாமி, திரு. ச.	..	வேடசந்தூர்
143. பழனியப்பன், திரு. பி.	..	பாப்பிரெட்டிப்பட்டி
144. பன்னீர்செல்வம், திரு. ஓ.	..	போடிநாயக்கனூர்
145. பாண்டியராஜன், திரு. க.	..	விருதுநகர்
146. பாபு முருகவேல், திரு. ர.ம.	..	ஆரணி
147. பாப்பா சுந்தரம், திரு. அ.	..	குளித்தலை
148. பார்த்தசாரதி, திரு. ப.	..	விருகம்பாக்கம்
149. பார்த்திபன், திரு. எஸ்.ஆர்.	..	மேட்டூர்
150. பாலகிருஷ்ணன், திரு. க.	..	சிதம்பரம்
151. பாலபாரதி, செல்வி கே.	..	திண்டுக்கல்
152. பாஸ்கர், திரு. அ.	..	தருமபுரி
153. பாஸ்கர், திரு. கே.பி.பி.	..	நாமக்கல்
154. பிரபாகர், திரு. ஜே.சி.டி.	..	வில்லிவாக்கம்
155. பிரின்ஸ், திரு. ஜே.ஜி.	..	குளச்சல்
156. பீம்ராவ், திரு. க.	..	மதுரவாயல்
157. புத்திசந்திரன், திரு.	..	உதகமண்டலம்

158. புஷ்ப லீலா ஆல்பன், டாக்டர் (திருமதி) .. பத்மநாபபுரம்

159. பூனாட்சி, திரு. தோ.பெ. .. மணச்சநல்லூர்

160. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்

161. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்

162. பெருமாள், திரு. இரா. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

163. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. .. உடுமலைப்பேட்டை

164. பொன்னுசாமி, திரு. கே. .. தாராபுரம் (செ.வ.)

165. பொன்னுப்பாண்டி, திரு. வெ. .. ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.)

166. போஸ், திரு. ஏ.கே. .. மதுரை வடக்கு

167. மணிமாறன், திரு. இரா. .. பூந்தமல்லி (செ.வ.)

168. மணிவேல், திரு. துரை. .. அரியலூர்

169. மலரவன், திரு. தா. .. கோயம்புத்தூர் வடக்கு

170. மனோகரன், திரு. ஆர். .. திருச்சிராப்பள்ளி கிழக்கு

171. மனோகரன், திரு. க. .. திருப்போரூர்

172. மனோகர், திரு. பி.ஆர். .. சோளிங்கர்

173. மனோரஞ்சிதம், திருமதி .. ஊத்தங்கரை (செ.வ.)

174. மாதேஸ்வரன், திரு. சு. .. ஆத்தூர் (செ.வ.)

175. மார்க்கண்டேயன், திரு. கு.வ. .. விளாத்திகுளம்

176. முத்துகருப்பண்ணசாமி, திரு. எம்.கே. .. பொள்ளாச்சி

177. முத்துக்குமார், திரு. வி. .. விருத்தாசலம்

178. முத்துசெல்வி, திருமதி ச. .. சங்கரன்கோவில் (செ.வ.)

179. முத்துராமலிங்கம், திரு. ம். .. திருமங்கலம்

180. முருகன், திரு. மு. .. முதுகுளத்தூர்

181. முருகுமாறன், திரு. என். .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

182. முருகேசன், திரு. து. .. செங்கல்பட்டு

183. முனுசாமி, திரு. கே.பி. .. திருஷ்ணகிரி

184. முஹம்மத்ஜான், திரு. அ. .. இராணிப்பேட்டை

185. மூர்த்தி, திரு. வி. .. மாதவரம்

186. மைக்கேல் ராயப்பன், திரு. சி. .. ராதாபுரம்

187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை

188. மோகன், திரு. ப. .. சங்கராபுரம்

189. ரமணா, திரு. பி.வி. .. திருவள்ளூர்

190. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. அந்தியூர்

191. ரமேஷ், திரு. கா.கோ. .. திருப்பத்தூர்

192. ரவி, திரு. சு. .. அரக்கோணம் (செ.வ.)

193. ராமசாமி, திரு. ஆ. .. நிலக்கோட்டை (செ.வ.)

194. ராமச்சந்திரன், திரு. கா. .. குன்னூர்

195. ராமமூர்த்தி, திரு. ஆர். .. விக்கிரவாண்டி

196. ராஜநாயகம், திரு. மு. .. அறந்தாங்கி

197. ராஜலட்சுமி, திருமதி ஆர். .. மயிலாப்பூர்

198. ராஜா, திரு. ஏ.கே.டி. .. திருப்பரங்குன்றம்

199. ராஜா, திரு. டி.ஆர்.பி. .. மன்னார்குடி

200. ராஜா, திரு. பொன். .. பொன்னேரி (செ.வ.)

201. ராஜேந்திர பாலாஜி, திரு. கே.டி. .. சிவகாசி

202. ரெங்கசாமி, திரு. எம். .. தஞ்சாவூர்

203. ரெங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை

204. ரெத்தினசாமி, திரு. மு. .. திருவையாறு

205. லாசர், திரு. ஏ. .. பெரியகுளம் (செ.வ.)

206. லிங்கமுத்து, திரு. கு. .. குடியாத்தம் (செ.வ.)

207. வளர்மதி, திருமதி பா. .. ஆயிரம் விளக்கு

208. விஜயகாந்த், திரு. .. ரிஷிவந்தியம்

209. விஜயதரணி, திருமதி எஸ். .. விளவங்கோடு

210. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. விராலிமலை

211. விஜயலட்சுமி பழனிசாமி, திருமதி ப. .. சங்ரி

212. விஜய், டாக்டர் வி.எஸ். .. வேலூர்

213. வீரமணி, திரு. கே.சி. .. ஜோலார்பேட்டை

214. வெங்கடாச்சலம், திரு. என்.டி. .. பெருந்துறை

215. வெங்கடாஜலம், திரு. கோ. .. சேலம் மேற்கு

216. வெங்கடேசன், திரு. எல். .. திருக்கோவிலூர்

217. வெற்றிவேல், திரு. பு. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

218. வேணுகோபாலு, திரு. கேஎஸ்என். .. பழனி

219. வேதாச்சலம், திரு. எஸ். .. அம்பத்தூர்

220. வேலு, திரு. எ.வ. .. திருவண்ணாமலை

221. வேலுமணி, திரு. எஸ்.பி. .. தொண்டாமுத்தூர்

222. வைகைச்செல்வன், முனைவர் .. அருப்புக்கோட்டை

223. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு

224. வைரமுத்து, திரு. பி.கே. .. திருமயம்

225. ஜவாஹிருல்லா, முனைவர் எம்.எச். .. இராமநாதபுரம்

226. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். .. கிள்ளியூர்

227. ஜானகிராமன், திரு. ஐ. .. வானூர் (செ.வ.)

228. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்

229. ஜெயசுதா, திருமதி எல். .. போளூர்

230. ஜெயபால், திரு. கே.ஏ. .. நாகப்பட்டினம்

231. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஸ்ரீரங்கம்

232. ஸ்டாலின், திரு. மு.க. .. கொளத்தூர்

233. ஹரிதாஸ், டாக்டர் த. .. திண்டிவனம் (செ.வ.)

234. நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ், டாக்டர் (திருமதி) .. நியமனம்

235. வெற்றிடம் .. ஏற்காடு (ஆ.வா.)

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. ஏ.எல். சோமையாஜி .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விஜய, ஐப்பசி 11, திருவள்ளுவர் ஆண்டு - 2044

2013 அக்டோபர் 28, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை."

பொருள் வரும் வழிகளைப் பெருகச் செய்து, அவற்றால் வளத்தை ஏற்படுத்தி, வரும் இடையூறுகளை ஆராய்ந்து, நீக்க வல்லவரே செயல்புரிய ஏற்றவராவார்.

1. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 31, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

31—

துணை மின் நிலையம்

***33004—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) ஆண்டிப்பட்டி தொகுதி, க. விளக்கிலுள்ள அண்ணா கூட்டுறவு நூற்பாலை, மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் குடியிருப்புப் பகுதிகள் பயன்பெறும் வகையில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆம். தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி தொகுதி, க. விளக்கு அருகிலுள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அண்ணா கூட்டுறவு நூற்பாலை, நிஷான் கிஷான் நூற்பாலை மற்றும் குடியிருப்புப் பகுதிகளுக்கு ஒரு புதிய 110/22 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. க. விளக்கு அருகில் ஒரு புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு அண்ணா கூட்டுறவு நூற்பாலை, தங்களுக்குச் சொந்தமான ஆண்டிப்பட்டி வட்டம், சண்முக சுந்தராபுரம் கிராமம், சர்வே எண் 457/1 மற்றும் சர்வே எண் 489 இல் அமைந்துள்ள 2 ஏக்கர் 47 சென்ட் நிலத்தை அளிப்பதற்கு சம்மதம் தெரிவித்துள்ளது. நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்னர், நிருவாகம் மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அரியதாய், பெரியதாய், வணக்கத்திற்குரியதாய்!
எளியதாய், வலியதாய், என்றுமே இனியதாய்! (மேசையைத் தட்டும் ஒலி)
மலர்ந்ததாய், கனிந்ததாய், மனதிலே நின்றதாய்!
வாழ்ந்ததாய், வளர்ந்ததாய், வந்த தாய் எங்கள் தாய்! (மேசையைத் தட்டும் ஒலி)
தொட்ட இடம் துலங்க வரும் தாய்க்குலமே வருக!

2013 அக்டோபர் 28]

கண்பட்ட இடம் பூ மலரும் பொன்மகளே வருக!
பொன்மகளே வருக! நீ வருக! (மேசையைத் தட்டும் ஒலி)
கருணை என்ற தீபம் இரு கண்களில் ஏற்றிய தாயே!
காலந்தோறும் நெஞ்சில் வந்து கோயில்கொண்ட நீயே!
பூ முகத் தாமரை மேலே அருள் பொழிகின்ற தெய்வத் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)
வானம் பார்த்த பூமிக்கெல்லாம் மாரி என்பது நீயே!
முத்து மாரி என்பது நீயே! (மேசையைத் தட்டும் ஒலி)
இதயம் உன்னைப் பாடும், நல்ல எண்ணங்கள் மாலைகள் போடும்!
இன்னல் வந்த நேரம் உந்தன் புன்னகை ஆறுதல் கூறும்!
வா என வேண்டிடும்போது எதிர்வருகின்ற செல்வம் நீயே! (மேசையைத் தட்டும் ஒலி)
நாலும் கொண்ட பெண்மைக்கெல்லாம் தலைவி ஆகிய தாயே!
ஒரு தங்கத் தலைவி ஆகிய தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஓர் இலட்சியத்தோடு மூன்றாவது முறையாக முதல்வராக ஆட்சி அமைத்து, இன்று மக்களுக்கு வேண்டிய திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள். இலட்சியம் ஒன்றே மாற்றத்தைக் கொடுக்கும். இந்தச் சொல்லுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றவர் உலகத்தின் ஒப்பற்ற தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தின்போது, மாண்புமிகு அமைச்சர்களிடத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள் கேள்வியை எழுப்புவார்கள். இந்தச் சட்டமன்ற உறுப்பினர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே அருள்கூர்ந்து ஒரு கேள்வியைக் கேட்கிறேன். நீங்கள் அருள்கூர்ந்து பதில் அளிக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம்தான் கேள்வி கேட்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேள்வியைக் கேளுங்கள்.

[2013 அக்டோபர் 28

முற்பகல் 10-05

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: வரும் ஆண்டு, இந்திய மக்களின் வருங்காலத்தை நிர்ணயிக்கக்கூடிய ஆண்டு. தமிழகத்தை இந்தியாவிலேயே ஈடு இணையற்ற மாநிலமாக ஆக்க அல்லும், பகலும் அயராது பாடுபட்டுவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியப் பிரதமர் ஆவது என்பது உறுதி. (மேசையைத் தட்டும் ஒலி) நமது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினராக பொற்பாதங்களை எடுத்து வைத்த ஆண்டு 1989 ஆம் ஆண்டு. வருகிற ஆண்டு மாண்புமிகு அம்மாவின் வெள்ளிவிழா ஆண்டு. ஆகவே, நாம் இந்தச் சட்டமன்றத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஒரு பாராட்டு விழா நடத்த வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் வீற்றிருக்கும் இந்தச் சமயத்தில், இந்தச் சட்டமன்றத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வெள்ளிவிழா ஆண்டைக் கொண்டாடுவது, நம் அனைவருக்கும் சாலச் சிறந்ததாகும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மக்களுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அன்னை தெரசா அவர்களைப்போல மக்களுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அடுத்த ஆண்டில், வெள்ளிவிழா ஆண்டில், (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவை வல்லரசு நாடாக மாற்றுவதற்குண்டான ஆண்டாக, அடுத்த பாரதப் பிரதமராக வருவார்கள் என்பதைக் கூறி, இந்தச் சட்டமன்றத்தில் எனது கேள்விக்கு 'சரி' என்று செவிசாய்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றியைக் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை தொகுதி, மறவமங்கலத்தில் ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு கருத்துரு அனுப்பப்பட்டிருக்கின்றது. அந்தப் பகுதி மக்களுடைய

2013 அக்டோபர் 28]

தேவையைக் கருத்தில் கொண்டு, இந்த ஆண்டு மறவமங்கலத்தில் துணை மின் நிலையம் அமைக்கப்படுமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த இடங்களில் துணை மின் நிலையம் தேவைப்படுகிறது என ஆங்காங்கு இருக்கின்ற மின் பளுவின் தேவைக்கேற்ப ஆய்வு செய்து, Load Flow Study என்று சொல்வார்கள், மின் திறனாய்வு, தேவை என்ற அளவிலே ஆய்வு செய்து, எந்தெந்தப் பகுதிகளிலே புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று ஆய்விலே முடிவெடுக்கப்படுகிறதோ அந்தந்தப் பகுதிகளிலே துணை மின் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்த வகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய வகையில் பரிசீலனை செய்து, ஆய்வு செய்து, உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள்.

திரு. கா. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னூர் தொகுதி, கோத்தகிரி வட்டம், கீழ் கோத்தகிரி பகுதியில் ஒண்ணட்டி என்ற ஊரில் 30/11 கே.வி.ஏ. துணை மின் நிலையம் கட்டப்பட்டு நீண்ட நாட்களாகிவிட்டன. அந்தத் துணை மின் நிலையம் இன்றுவரை மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படவில்லை. அந்த நிலம் தனக்குச் சொந்தமான நிலம் என்று தனியார் ஒருவர் நீதிமன்றத்திற்குச் சென்றுள்ளதாகத் தெரிகிறது. அந்த நீதிமன்ற விசாரணையை எவ்வளவு விரைவாக முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக முடித்து, அந்தத் துணை மின் நிலையத்தைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவந்தால், சுற்றுவட்டாரத்தில் அதிகமாக வசிக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மிகவும் பயன்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பணியை விரைவாக இந்த அரசு செய்யுமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2013 அக்டோபர் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற பகுதியில் துணை மின் நிலையம் அமைக்கப்பட்டவுடன், அதற்கான நிலத்தைக் கையகப்படுத்துவதிலே பல்வேறு சட்டச் சிக்கல்கள் இருக்கிறதென்று சொல்லி, நில உரிமையாளர் வழக்குத் தொடுத்து, தடை உத்தரவும் பெற்றுவிட்டார். நீண்ட நாட்களாக வழக்கு நடைபெற்று, நில உரிமையாளருக்குச் சாதகமாகத் தீர்ப்பு வந்துவிட்டது. ஆனால், அந்த இடத்திலே துணை மின் நிலையம் அமைக்கப்பட்டுள்ள நிலையிலே, நில உரிமையாளரிடமே பேசி, அவருக்கு எவ்வளவு பணம் வேண்டுமோ, அதைக் கொடுத்து சரி செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் நமது துறை அதிகாரிகள் மேற்கொண்டார்கள். துரதிருஷ்டவசமாக அந்த நில உரிமையாளர் பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைக்க மறுக்கிறார். நீதிமன்றம் அவருக்கு சாதகமாகத் தீர்ப்பு வழங்கியிருந்தாலும், துணை மின் நிலையம் அமைக்கப்பட்டுவிட்டதால் ஏதோ மனிதாபிமான அடிப்படையில் நீங்கள் ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று தொடர்ந்து அவரிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. நமது அதிகாரிகளும், பல்வேறு அரசியல் கட்சிப் பிரமுகர்களும்கூட அவரிடம் பரிந்துரை செய்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருக்கு வேண்டியவராக இருந்தால் அல்லது அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்ற முறையிலே, அந்த நில உரிமையாளரிடம் பேசி, அதற்குரிய தீர்வுகளைச் சுமுகமான பேச்சு வார்த்தையின்மூலம் முடித்து, அந்த நிலத்தை மின்சார வாரியத்திற்கு ஒப்படைப்பதற்கு எடுக்கின்ற முயற்சியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் சற்று ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, தொடர்ந்து முயற்சிகள் எடுத்து வருகிறோம். இருந்தாலும், நிச்சயமாகப் பேச்சுவார்த்தையின்மூலம் பிரச்சினைகள் முடிக்கப்பட்டு, அந்தத் துணை மின் நிலையம் விரைவில் இயங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 அக்டோபர் 28]

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

32—

அங்கன்வாடி மையக் கட்டடம்

***1821—திரு. அ. கணேஷ்குமார்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி தொகுதி, மேல்புதுப்பட்டு ஊராட்சியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம், மேல்புதுப்பட்டு ஊராட்சியில், நடப்பு நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டுவதற்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 அக்டோபர் 28

33—

புதிய குடியிருப்புகள்

***19144—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி, 7-வது கோட்டத்தில் பழுதடைந்துள்ள வீட்டு வசதி வாரிய அரசு ஊழியர் குடியிருப்புகளை அகற்றிவிட்டு புதிய குடியிருப்புகள் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் அமைக்கப்பட்ட தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரையின்படி, சேலம் 7-வது கோட்டத்தில் உள்ள நீதிபதி மாளிகை வளாகத்தில் உள்ள 658 குடியிருப்புகளில் ரூ.46.24 இலட்சம் மதிப்பீட்டிலும், மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் உள்ள 96 குடியிருப்புகளில் ரூ.15.86 இலட்சம் மதிப்பீட்டிலும் சிறப்புப் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் 7-வது கோட்டத்தில், மொத்தம் 658 குடியிருப்புகள் இருக்கின்றன. அவை, 1976-1978 ஆம் ஆண்டில் 424 குடியிருப்புகளும், 1979-1981 ஆம் ஆண்டில் 72 குடியிருப்புகளும், 1982-1983 ஆம் ஆண்டில் 96 குடியிருப்புகளும், 1988-1989 ஆம் ஆண்டில் 66 குடியிருப்புகளும் என மொத்தம் 658 குடியிருப்புகள் கட்டப்பட்டன. அக்குடியிருப்புகளில் சிறப்புப் பழுது பார்க்கும்

2013 அக்டோபர் 28]

பணிகளுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அன்று, ஒதுக்குப்புறமாக இருந்த இடங்களிலே குடியிருப்புகள் கட்டப்பட்டன; இன்று, மாநகரத்தின் மையப் பகுதிகளிலுள்ள நல்ல அருமையான இடங்களிலே குடியிருப்புகள் உள்ளன. எனவே, இன்றைய நவீன காலகட்டத்திற்கேற்ப, நவீன குடியிருப்புகளைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தரைகள் மற்றும் குளியலறைகளில் டைல்ஸ் போட்டு நவீனப்படுத்திக் கொடுக்க வேண்டும். மராமத்துப் பணிகளுக்காகத்தான் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். எனவே, 1976-1978 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட 424 குடியிருப்புகளையும் இடித்துவிட்டு, புதிய குடியிருப்புகள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்தில் 96 குடியிருப்புகள் உள்ளன. அவற்றிலே ஏறக்குறைய 30 குடியிருப்புகள் காலியாகவுள்ளன. ஏனெனில், தமிழ்நாட்டில் அனைத்து வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளுக்கும் ஒரு வாடகையை நிர்ணயித்திருக்கின்றார்கள். சேலம் மாநகரத்தைப் பொறுத்தவரையில், வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளைவிட, வெளியிலே குறைந்த வாடகைக்கு வீடுகள் கிடைப்பதாகக் கூறப்படுகிறது. ஆகையால், அந்தக் குடியிருப்புகளையும் தற்காலத்திற்கேற்றவாறு, நவீனப்படுத்திக் கொடுக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். அதுமட்டுமல்லாமல், நான் இன்னொரு கோரிக்கையையும் வைக்கின்றேன். எனது தொகுதியிலுள்ள சீலாவரி ஏரியிலே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், கேள்வியைக் கேளுங்கள்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: 1,358 பிளாட்டுகள் டெவலப் செய்யப்பட்டுள்ளன. ஆனால், அங்கு சாலை, சாக்கடை போன்ற அடிப்படை வசதிகள் இன்று வரை செய்து தரப்படாமல் இருக்கின்றன. பக்கத்திலுள்ள பகுதிகள் நெசவாளர்கள் வாழும் பகுதிகளாக இருப்பதால், சாயப்பட்டறைக் கழிவுகள் அங்கு நிறைய வருகின்றன. அதற்கு சாலையை handover பண்ண வேண்டுமென்றால், உள்ளாட்சித் துறை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள், மூலக்

[2013 அக்டோபர் 28

கேள்வியையொட்டி துணைக் கேள்வியைக் கேட்டுவிட்டு உட்காருங்கள். மானியக் கோரிக்கையில் பேசுவதுபோன்று பேசிக்கொண்டே போகிறீர்கள். (குறுக்கீடு) துணைக் கேள்வியைக் கேட்டு, உட்காருங்கள்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: அதையும் மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் பரிசீலித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்திருந்தால், பொறியாளர்கள் ஆய்வு செய்து, அவற்றில் இனிமேல் குடியிருக்க இயலாது என்று ஒரு முடிவு எடுத்தால், அகற்றிவிட்டு புதிய குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்படும். ஆனால், இப்பொழுது பழுது பார்த்தாலே போதும் என்ற முடிவிற்கு வாரியம் வந்துள்ளது. அதனால்தான் ஒரு பகுதிக்கு 46.24 இலட்சம் ரூபாயும், இன்னொரு பகுதிக்கு 15.86 இலட்சம் ரூபாயும் பழுது பார்ப்பதற்கு ஒதுக்கீடு செய்து பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கின்ற கருத்தை ஏற்று மீண்டும் அதை ஆய்வு செய்து, இடிக்கக்கூடிய சூழ்நிலை இருக்குமென்று தெரிந்தால், நிச்சயமாக அதற்றிவிட்டு அங்கு புதிய குடியிருப்புகள் கட்டித் தர அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. பழுது பார்க்கும் பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டுடன் flooring மற்றும் bath room-களை நவீனப்படுத்துவதற்குத் தேவையான நிதியை ஒதுக்கி தற்காலத்திற்கு ஏற்றவாறு அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

2013 அக்டோபர் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பராமரிப்புக்கு என்று ஒதுக்கப்படும் நிதியிலேயே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சோழவந்தான் தொகுதியில், சோழவந்தான், வாடிப்பட்டி, அலங்காநல்லூர் மற்றும் பாலமேடு ஆகிய நான்கு பேரூராட்சிகள் இருந்தாலும்கூட, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கக்கூடிய பசுமை வீடுகளையோ, தொகுப்பு வீடுகளையோ அங்கு வழங்கக்கூடிய நிலையில்லை. இருந்தாலும், அங்கு ஏழையெளிய மக்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பேரூராட்சிகளில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டித் தர ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக பேரூராட்சிகளில் அரசு ஊழியர்களுக்கோ, பொதுமக்களுக்கோ இப்பொழுது வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற நிலைமை இல்லை. ஏனென்றால், அரசு ஊழியர்களுக்குக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்றால், அந்தப் பேரூராட்சியில் அதிக அரசு அலுவலகங்கள் இருக்க வேண்டும். அதிக அரசு ஊழியர்கள் அங்கு பணிபுரிய வேண்டும். இப்பொழுது அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆறாவது சம்பளக் கமிஷனில் வீட்டு வாடகைப் படி அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தால், அவர்கள் தனியார் வீட்டு வசதியையே விரும்புகிறார்கள். அதனால் பேரூராட்சிகளில், நகராட்சிகளில் வாரியத்தின் மூலமாக அரசு

[2013 அக்டோபர் 28

ஊழியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய திட்டம் எதுவும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் பேரூராட்சியில் 25 ஆண்டு காலமாகப் பணிபுரிந்துவரும் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் சார்பாக வீடுகள் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன். அதேபோல, தருமபுரி மற்றும் அரூர் போன்ற பகுதிகளில் ஏற்கெனவே தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் வீட்டு மனை வாங்கியவர்கள், Sale Deed பெற்றவர்வர்களுக்குப் பட்டா வழங்கப்படாமல் நிலுவையில் இருக்கிறது. ஆகவே, அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கும், பெயர் மாற்றம் செய்துகொள்வதற்கும் அதற்கான சிறப்பு ஆணை ஒன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளியிடுவார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமானது. அதை ஆய்வு செய்து, பட்டா மாறுதல் செய்வதற்கும், Sale Deed கொடுத்தாலும் நிலப் பெயர் மாற்றம் செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், அதில் தாமதம் ஏற்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வில் இருக்கின்றது. கூடிய விரைவில் அவர்களுக்குப் பட்டா கொடுப்பதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்குமென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன் அவர்கள்.

திரு. வி.பி. கலைராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள்

2013 அக்டோபர் 28]

மூன்றாவது முறையாக முதலமைச்சரான பிறகு, வீட்டு வசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் சென்னையிலுள்ள பழுதடைந்திருக்கிற பழைய வீடுகளையெல்லாம் சரி செய்யும் பணி விரைவாக நடந்து கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் என்னுடைய தியாகராய நகர் தொகுதியில், பழுதடைந்துள்ள வீடுகளையும், குடிசை மாற்று வாரிய வீடுகளையும் இப்பொழுது சரி செய்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வருகை தந்து, அவற்றை ஆய்வு செய்து பழுதடைந்திருக்கிற பழைய வீடுகளை மாற்றி புதிய வீடுகளைக் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த வருடம் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக 17 இடங்களில் 1,739.81 கோடி ரூபாய் செலவில் 6,254 குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்படுமென்று அறிவித்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியில் இடமிருந்தால் அங்கே வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் கட்டிக் கொடுப்பதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

34—

பகுதிநேர நியாய விலைக் கடை

***19585—திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

உளுந்தூர்பேட்டை தொகுதி, சாராயமேடு கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உளுந்தூர்பேட்டை தொகுதியில் உள்ள அரசூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 80 குடும்ப அட்டைகளையுடைய சாராயமேடு பகுதியையும் சேர்த்து, 514 குடும்ப அட்டைகளுடன் 'கிராமம்' என்ற திருமுண்டீஸ்வரம் முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. புதிய பகுதிநேரக் கடை அமைக்கப்பட்ட பிறகு, தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டுமென்ற நிபந்தனையும், புதிதாகத் தொடங்கப்படும் பகுதிநேரக் கடையில் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டுமென்ற நிபந்தனையும் பூர்த்தியாகாததால், சாராயமேடு கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க தற்போது வழிவகை இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். எனது உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட, திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியத்திற்குட்பட்ட சாராயமேடு கிராமத்தில் கிட்டத்தட்ட 92 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. அதன் தாய்க் கடையாக இருக்கின்ற திருமுண்டீஸ்வரம் நியாய விலைக் கடையிலே 540 ரேஷன் கார்டுகள் இருக்கின்றன என்பது உண்மை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தாய்க் கடையில் 500 ரேஷன் கார்டுகளும், பகுதிநேரக் கடையில் 150 ரேஷன் கார்டுகளும் இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அரசாங்கம் விதித்திருக்கின்ற விதிமுறைகளைத் தளர்த்தி, பகுதிநேர நியாய விலைக் கடையை ஆரம்பிக்க முன்வர வேண்டும்.

2013 அக்டோபர் 28]

நான் கடந்த முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தேன். அப்போதிருந்தே அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களெல்லாம் இதே கோரிக்கையை முன்வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, நீண்ட காலமாக சாராயமேடு கிராமத்திலிருந்து மக்கள், திருமுண்டீஸ்வரம் கிராமத்திற்கு 3 கிலோ மீட்டர் தூரம் சென்று பொருட்களை வாங்குகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், விதிமுறைகளைத் தளர்த்தி, சாராயமேடு கிராமத்திலே ஒரு பகுதிநேரக் கடை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் சார்பாக இந்த நியாய விலைக் கடை நடத்தப்பட்டு வருகிறது. ஏறத்தாழ 5 முழுநேரக் கடைகளும், ஒரு பகுதிநேரக் கடையும் செயல்பட்டு வருகின்றன. இந்தச் சங்கம் தொடர்ந்து குவிந்த நஷ்டத்தில் இயங்கி வருகிறது. கடந்த 2011-2012 முடிய, 77 இலட்சம் ரூபாய் வரைக்கும் இச்சங்கம் நஷ்டத்தில் இயங்கி வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அமைந்த பிறகு, பொது விநியோகத் திட்டத்தின்மூலமாக குடும்ப அட்டைதாரர்களுக்குத் தங்கு தடையின்றி பொருட்கள் எல்லாம் சீராக, சிறப்பாகக் கொடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் ஒரு கடையை அமைக்கும்பட்சத்தில், அச்சங்கத்திற்குக் கூடுதலாகச் செலவினம் ஏற்படும். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளுக்கிணங்க, அரசு அலுவலர்களிடம் தொடர்புகொண்டு, உரிய நடவடிக்கை எடுத்து, துறைரீதியாக அங்கே பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பிருக்கிறதா என்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

[2013 அக்டோபர் 28

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே பகுதிநேரக் கடை ஆரம்பித்தால், அரசூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குக் கூடுதல் செலவினம் ஏற்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலேயிருக்கிற மக்கள், பகுதிநேரக் கடை செயல்படுவதற்குத் தேவையான இடத்தை இலவசமாகக் கொடுப்பதற்கும், தாய்க் கடையிலிருந்து பொருட்களைக் கொண்டு வந்து விற்பனை செய்வதற்கு ஆகும் போக்குவரத்துச் செலவையும் அவர்கள் ஏற்றுக்கொள்வதாகவும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து, அங்கே கட்டாயமாக ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, தமிழகத்தில் நல்ல பல திட்டங்களையெல்லாம் செயல்படுத்தி வருகிறார்கள். தமிழகத்திலேயிருக்கிற மக்களெல்லாம் போற்றுகின்ற வகையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் சிறப்பாக ஆட்சிபுரிந்து வரும் வேளையிலே, என்னுடைய உளுந்தூர்பேட்டை தொகுதியிலே இதுபோன்று பகுதிநேரக் கடைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலேயிருக்கிற அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் உள்ள மக்கள் இதுபோன்ற பகுதிநேரக் கடைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், என்னுடைய உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட பகுதிகளைப் பார்த்தீர்களென்று சொன்னால், கிட்டத்தட்ட 15 இடங்களில் பகுதிநேர நியாய விலைக் கடைகள் வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றிட, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் நான் மனு கொடுத்திருக்கிறேன். அதற்கான கருத்துருக்கள் எல்லாம் கூட்டுறவுத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வந்திருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் சிறப்புக் கவனம் செலுத்தி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று,

2013 அக்டோபர் 28]

சட்ட திட்டங்களை, விதிமுறைகளையெல்லாம் தளர்த்தி, அந்தந்தப் பகுதிகளிலே இருக்கிற மக்கள் பயன்பெறும் வகையில், நீண்ட காலமாக இதுபோன்று பகுதிநேரக் கடைகள் நிறைய பகுதிகளில் வேண்டுமென்று வைக்கின்ற கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற வகையில், அனைத்துப் பகுதிகளிலும் பகுதிநேர நியாய விலைக் கடைகளை ஆரம்பிக்க வேண்டும். 100 கார்டுகள் இருந்தாலும், அந்தப் பகுதியிலே பகுதிநேர நியாய விலைக் கடையை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இருந்தாலும்கூட, இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வமாக இருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி அமைந்த பிறகு, விழுப்புரம் மாவட்டத்தில் 30 பகுதிநேரக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினரின் சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 7 பகுதிநேர நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. தற்போது 14 கடைகள் திறப்பதற்கு மாவட்ட மண்டல இணைப் பதிவாளரிடமிருந்து முன்மொழிவு அனுப்பப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனையில் இருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை விரைவாகப் பரிசீலிக்க முடியுமா என்று துறைரீதியாக ஆய்வு செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். பொது விநியோகத் திட்டத்தை நடத்துகின்ற சங்கங்கள் சாதாரணமான சங்கங்கள். இந்தச் சங்கங்களுக்கு வருமானமே குறைவுதான். விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பது, அவர்களுக்கு மற்ற உதவிகள் செய்வது, அதிலிருந்து கிடைக்கும் குறைந்த வருவாயை வைத்துத்தான் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குகின்றன. அதன்மூலமாகவே இந்த நியாய விலைக் கடைகள் நடத்தப்படுகின்றன. மேலும், மேலும் பகுதிநேர நியாய விலைக்

[2013 அக்டோபர் 28

கடைகளைத் தொடங்கிக்கொண்டே போகும்போது, பணியாளர் ஒருவர்தான் இரண்டு கடைகளுக்கும் செல்ல வேண்டியிருக்கிறது. வாரத்தில் இரண்டு நாட்கள் அல்லது மூன்று நாட்களுக்குத்தான் கடையைத் திறக்க முடியும். இதனால் பொருளை வாங்குபவர்களுக்கும், பொதுமக்களுக்கும்தான் சிரமம் ஏற்படுகிறது. இதில் மேலும் என்ன சிரமம் என்றால், கள ஆய்வுப் பணிகளின்போது அதிகாரிகளுக்கும் சிரமம் ஏற்படுகிறது. எனவே, இதுபோன்ற நிலைகளில் தவறு ஏற்படும் என்று துறைரீதியாக அரசு அலுவலர்கள் கருதுவதால், மாண்புமிகு உறுப்பினர் அவசியம் மற்றும் அவசரம் கருதி தொடங்க வேண்டுமென்று சொல்கின்றபொழுது, மாவட்ட ஆட்சித் தலைவரே அந்தப் பகுதியில் நியாய விலைக் கடையைத் திறக்க வேண்டுமென்று நினைப்பாரேயானால், சாதி மோதல், இன மோதல் அல்லது ஏதாவது சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை வரும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் நினைக்கும்பட்சத்தில், அவரே அந்த பகுதிநேர நியாய விலைக் கடையைத் (part-time shop) திறக்கலாம். இல்லாதபட்சத்தில், அக்கடையைத் திறப்பதற்கு உணவுத் துறை நுகர்வோர் ஆணையாளருக்கு அனுப்பும்பட்சத்தில், அவர்மூலமாகப் பரிசீலிக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

திரு. கு. லிங்கமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதி, பேர்ணாம்பட்டு நகரில் கற்பகம்-I கடையில் 1,700 கார்டுகள் இருக்கின்றன. அதைத் தனியாகப் பிரித்து பேர்ணாம்பட்டு காலனி பகுதிக்கு கற்பகம்-I கடையைப் பிரித்து, ஒரு நியாய விலைக் கடை அமைக்கப்படுமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். அதைப் பிரித்தால் 800 கார்டுகள் அந்தக் கடைக்கு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

2013 அக்டோபர் 28]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து நிச்சயமாக துறைரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கூடுதலாக ஒரு தகவல் என்னவென்றால், இந்தப் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டும் என்று எந்த இடத்தைச் சொல்கிறார்களோ, அதனுடைய சட்ட விதிகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும்; அந்த இடம் இலவசமாகக் கொடுக்கப்பட வேண்டும். கொண்டுபோகும் நுகர்வோர், பொருட்களுக்கான செலவை அவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதும், வாரத்தில் 3 நாட்கள்தான் அந்தக் கடை திறக்கப்படும் என்பதும் விதி. எனவே, இதற்கு உட்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும். துறைரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

35—

புதிய பாலம்

***26996—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் பாலக்கரையில் காவேரி ஆற்றின் குறுக்கே புதிய மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் பாலக்கரையில், காவேரி ஆற்றின் குறுக்கே புதியதாக மேம்பாலம் கட்டுவதற்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பாலம் கட்டும் பணிகள் தொடங்கப்படவுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

முற்பகல் 10-30

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் தொகுதி, பழைய பாலக்கரை பகுதியிலுள்ள விக்கிரவாண்டி-தஞ்சாவூர் சாலை S.H.-8-ல் கி.மீ.123/10-ல் உள்ள காவேரி பாலம் 1880 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. 133 ஆண்டுகளைக் கடந்த மிகவும் பழமையான அந்தப் பாலம் பழுதடைந்ததால் 29-8-2012 அன்று முதல் போக்குவரத்து நிறுத்தப்பட்டு, 4 கிலோ மீட்டர் சுற்றி மேலக் காவேரி பாலம் வழியாகத் திருப்பி விடப்பட்டது. அருகிலுள்ள அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களுக்கும் மற்றும் நீலத்தநல்லூர், மதனத்தூர், கொள்ளிடம் பாலம் வழியாக சென்னைக்கும் வரக்கூடிய மிகவும் இன்றியமையாத பாலமாகும். கும்பகோணம் நகர் விரிவாக்கம் செய்யப்பட்டதனால் புதிய நகரத்திற்கும், பள்ளிகள், கல்லூரிகள், நீதிமன்றங்கள், மாவட்ட தலைமை மருத்துவமனை, தீயணைப்பு நிலையங்கள் உள்ளிட்ட அரசு அலுவலகங்களுக்குச் செல்வதற்கும் மிகவும் சிரமமாக உள்ளது. இதுகுறித்த துணை வினாவிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலுரையில், 5-2-2013 அன்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என உறுதிமொழி கொடுத்தார்கள். உறுதிமொழிக் குழுவின் பரிந்துரைகளிலும் வரிசை எண் 20-ல் இதுகுறித்து உள்ளது. 23-10-2013 அன்று கவன ஈர்ப்புத் தீர்மானமும் கொடுத்துள்ளேன் என்பதை நினைவுகூர்ந்து, இந்தப் பாலத்தின் அவசர, அவசிய நிலையைக் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? என தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2013 அக்டோபர் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதையும், இதற்காக எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் கட்டுமானம் மற்றும் பராமரிப்புக் கோட்டம், கும்பகோணம் உட்கோட்டம் பராமரிப்பிலுள்ள விக்கிரவாண்டி., கும்பகோணம், தஞ்சாவூர் சாலையில் கிலோ மீட்டர் 123/10-ல் பழைய காவேரி ஆற்றுப் பாலம், பாலக்கரைப் பாலம் உள்ளது. இப்பாலம் பழுதடைந்ததைத் தொடர்ந்து போக்குவரத்திற்குத் தடை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பாலத்திற்கு மேற்புறத்திலுள்ள நகராட்சி பாலம் வழியாகவும், கீழ்புறத்தில் கும்பகோணம் புறவழிச் சாலையில் உள்ள பாலத்தின் வழியாகவும், தங்கு தடையின்றி போக்குவரத்து நடைபெற்று வருகின்றது. உறுப்பினர் குறிப்பிடும் பாலம் பழுது நீக்கம் செய்ய இயலாத சூழ்நிலையில் உள்ளதால், அதே இடத்தில் 500 இலட்சம் ரூபாய் செலவில் புதிய பாலம் கட்டுவதற்கு நிருவாக ஒப்புதல் அரசால் வழங்கப்பட்டு, தற்போது பாலத்தின் வடிவமைப்பினை இறுதி செய்வதற்காக அது ஆய்வில் உள்ளது. விரைவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணிகள் துவங்கப்பட உள்ளதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016 ஆம் ஆண்டு கும்பகோணத்தில் நடைபெறவிருக்கின்ற மகாமக திருவிழாவிற்கு இலட்சக்கணக்கான பக்தர்கள் நுழைவு வாயிலான இந்தப் பாலத்தின் வழியாக வந்து பாலக்கரையிலுள்ள சக்கரப்பட்டி துறையில் நீராடுவார்கள். அதற்கு இந்தப் பாலத்தைப் பயன்படுத்துவார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

[2013 அக்டோபர் 28

இந்தப் பாலத்தை உடனடியாகக் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். குடந்தை புறவழிச் சாலையில் உள்ள தாராசுரம், பெரும்மாண்டி, கொரநாட்டுகருப்பூர், உள்ளூர், பலவந்தன்கட்டளை, சாக்கோட்டை போன்ற பகுதிகளில் பாலங்களின் வேலைகள் நிறைவு பெறும் நிலையில் உள்ளன. அதனைத் தொடர்ந்து, சாக்கோட்டை, வரதநல்லூர், கொற்கை, கும்பகுடியூர், சோழமாளிகை, தாராசுரம் பணியையும் தொடர்ந்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டவாறு, விரைந்து பாலங்கள் கட்டுவதற்கு, அரசால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதிக்குட்பட்ட குறுந்தங்கோடு பாலம் மிகவும் பழமை வாய்ந்ததும், பல ஆயிரக்கணக்கான மக்கள் பயன்படுத்தி வரக்கூடிய ஒரு குறுகிய பாலம் என்பதாலும் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் பயன்பெறுகின்ற வகையில் புதிய பாலத்தைக் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் 2011-2012 ஆம் ஆண்டில் மட்டும் 65 புதிய பாலங்கள் கட்டுவதற்கு ஆணையிட்டுள்ளார்கள். அதேபோல், 2012-2013 ஆம் ஆண்டில் புதிதாக 121 பாலங்கள் கட்டுவதற்கு ஆணையிட்டுள்ளார்கள். நடப்பாண்டில் 2013-2014 ஆம் ஆண்டில் 125 பாலங்களுக்கு 256 கோடி ரூபாய் மதிப்பில் நபார்டு வங்கி

2013 அக்டோபர் 28]

உதவியுடன் கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற பாலத்தை ஆய்வு செய்து, அடுத்த ஆண்டு, நபார்டு வங்கி உதவியுடன் கட்டுவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.

திரு. ஆர். அருள்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மயிலாடுதுறை தொகுதிக்குட்பட்ட மண்ணமந்தல், மணக்குடிக்கு இடையிலே காவேரி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கு ஸ்தல ஆய்வுகளை அதிகாரிகள் செய்து விட்டுப்போயிருக்கிறார்கள். விரைவில் அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு உடனடியாக அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கு அரசு முயற்சிக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

முற்பகல் 10-35

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதியில் அணைக்கரை, அருவிக்கரை என்ற இரண்டு கிராமச் சாலைகளை இணைத்து பரளையாற்றின் குறுக்கே புதிய மேம்பாலம் கட்டும் திட்டம் ஏற்கெனவே அரசின் பிரேரணையில் உள்ளது. இந்தப் பணியைத் துரிதப்படுத்தி மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மேம்பாலம் கட்டித் தர மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2013 அக்டோபர் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதியிலே குறிப்பிட்டிருக்கிற பகுதியில் புதிய பாலம் கட்ட வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதை ஆய்வு செய்து, அந்தப் பகுதியில் பாலம் கட்டுவதற்கு அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரில் போக்குவரத்து நெருக்கடியைப் போக்குவதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 130 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, இரண்டு பாலங்கள் கட்டுவதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் ஏற்கெனவே துவங்கியிருக்கின்றன. அதேபோல, மதுரை மாநகரில் முனிச்சாலை-மதிச்சியத்தை இணைக்கக்கூடிய இடத்தில், வைகை ஆற்றில் ஒரு பாலம் கட்ட வேண்டுமென்பது நீண்டகாலமாக மதுரை மக்களுடைய கோரிக்கையாக இருக்கிறது. மதுரை மாநகராட்சி நிருவாகமும் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு தமிழக அரசுக்குக் கடிதம் எழுதியிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று முனிச்சாலை-மதிச்சியத்தை இணைக்கக்கூடிய இடத்தில் ஒரு புதிய பாலம் கட்டுவதற்கு முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்தப் பகுதியில் பாலம் கட்ட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். ஒவ்வோர் ஆண்டும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் பாலங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள்.

2013 அக்டோபர் 28]

ஏற்கெனவே குறிப்பிட்டவாறு, நபார்டு வங்கி உதவியுடன் 2011-2012 ஆம் ஆண்டில் 65 பாலங்கள், 2012-2013 ஆம் ஆண்டில் 121 பாலங்கள், 2013-2014 ஆம் ஆண்டில் 125 பாலங்கள் கட்டுவதற்கு ஆணையிட்டு அந்தப் பணிகள் எல்லாம் நடைபெற இருக்கின்றன. இருந்தாலும், இருக்கின்ற நிதியைப் பொறுத்துதான் பாலங்கள் கட்டப்படும். ஏற்கெனவே இருந்த ஆட்சியாளர்களின் ஆட்சியில் இல்லாத அளவிற்கு, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலேதான், மூன்றாண்டுகால பொற்கால ஆட்சியிலேதான், அதிக அளவிலே பாலங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், மதுக்கரையிலே இருந்து வாளையாறு வரையிலும் தேசிய நெடுஞ்சாலையில் ஏறக்குறைய ஐந்துக்கும் மேற்பட்ட பாலங்களை இரண்டாண்டு காலமாகக் கட்டாததன் விளைவு கடந்த இரண்டு வருடங்களில் மட்டும் 200-க்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் ஏற்பட்டு, அதனைத் தொடர்ந்து அந்தப் பகுதி மக்கள், பாலம் கட்ட வேண்டும் என்று கடந்த ஒரு மாதகாலமாகப் போராடி வருகிறார்கள். எனவே, தமிழ்நாடு அரசினுடைய நெடுஞ்சாலைத் துறை இதை தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கவனத்திற்கு எடுத்துச் சென்று விரைந்து அந்தப் பாலங்களைக் கட்டி முடிப்பதற்கும், சாலைகளை விரைவாகப் போடுவதற்கும் நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 அக்டோபர் 28

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற அந்தப் பாலங்கள் எல்லாம் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டில் வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசிடம் இதைச் சுட்டிக்காட்ட வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். இந்தத் துறை மத்திய அரசுக்குச் சுட்டிக்காட்டி, விரைந்து அந்தப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.

திரு. ஆர்.என். கிட்டுசாமி: தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுமுடி அருள்மிகு மதலீஸ்வர் ஆலயத்திற்கு பல்வேறு மாநிலங்களில் இருந்து பக்தர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, கொடுமுடியிலிருந்து காவேரி ஆற்றின் குறுக்கே நாமக்கல் மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில் குளிக்கல்பாளையம் வரை காவேரி ஆற்றின் குறுக்கே ஒரு மேம்பாலம் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்தப் பகுதியில் வாங்கல் பாலம் காவேரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருக்கின்றது. அதற்குப் பக்கத்தில்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டுகின்றார்கள். எனவே, அருகிலேயே அந்தப் பாலம் அமைந்திருக்கின்ற காரணத்தாலும், தற்போது நிதி இல்லாத காரணத்தாலும் புதிய பாலம் கட்ட இயலவில்லை. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 அக்டோபர் 28]

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. பழனிசாமி அவர்கள்.

திரு. கே.சி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், வாங்கல்-மோகனூர் இடையே காவேரி ஆற்றில் கட்டிக்கொண்டிருந்த மேம்பாலப் பணிகள் நிறுத்தப்பட்டிருப்பதற்கு என்ன காரணம்? எப்போது பணிகள் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வாங்கல் பாலப் பணிகள் தற்போது நிறுத்தப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே, இப்பாலம் கடந்த கால அவர்களுடைய ஆட்சியிலே, டெண்டர் விடப்பட்ட பாலம். சரியான ஒப்பந்ததாரருக்கு டெண்டர் விடப்படாத காரணத்தினாலே, அந்த ஒப்பந்ததாரர் இடையிலே அந்த வேலையை நிறுத்திவிட்டார். பலமுறை வலியுறுத்தியும், அப்பணியை மேற்கொண்டு தொடர இயலாத காரணத்தினாலே அந்த டெண்டர் இப்போது இரத்து செய்யப்பட்டு, புதிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருக்கின்றது. விரைந்து அந்தப் பாலப் பணிகள் நடைபெறுவதற்குரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, கடையால்மூடு பேரூராட்சியையும், பத்மநாபபுரம் தொகுதி, கல்குளம் தாலுகா, திற்பரப்பு பேரூராட்சியையும் இணைக்கும்விதமாக கோதையாறு ஆற்றின் குறுக்கே தெற்பக்கடவு ஊரில் புதிய உயர்மட்டப் பாலம் அமைக்கப்பட வேண்டும்.

[2013 அக்டோபர் 28

தற்போது இரு பேரூராட்சி மக்களும் 5 கி.மீ. தூரம் சுற்றி களியல் வழியாகச் செல்கின்றனர். இதனால் கால விரயம், எரிபொருள் விரயம், பண விரயம் ஏற்படுகின்றன. திற்பரப்பு அரசு தேவஸம் போர்டு உயர்நிலைப் பள்ளிக்கும், கடையால்மூடு அரசு தொடக்க மேல்நிலைப் பள்ளிக்கும் பரஸ்பரம் மாணவர்கள் சென்றுவர மிகவும் சிரமப்படுகின்றனர். ரூ.21 இலட்சம் செலவில் மேற்குறிப்பிட்ட இடத்தில் இரு சக்கர வாகனங்கள் சென்றுவரவும், மக்கள் கடந்து செல்லவும் நடைப்பாலம் கட்டப்பட்டு, 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாத வெள்ளப் பெருக்கில் அந்த நடைப்பாலம் அடித்துச் செல்லப்பட்டது. எனவே, பொதுமக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஆகையால், அந்த இடத்தில் ஒரு புதிய உயர்மட்டப் பாலம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டவாறு, ஒவ்வோராண்டும் மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், உள்ளாட்சிமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் ஆகியோரின் கோரிக்கைகளை ஏற்று புதிய பாலங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் அறிவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதன் அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கோதையாற்றின் குறுக்கே ஓர் இணைப்புப் பாலம் வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு இதனை எடுத்துச் சென்று, ஆவன செய்யப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த அவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வியாசர்பாடி மேம்பாலப் பணியை விரைவுபடுத்தி முடிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருந்தேன். மேம்பாலப்

2013 அக்டோபர் 28]

பணி முடிவடையாததால், அந்தப் பகுதியிலே, மிகக் கடுமையான போக்குவரத்து நெருக்கடி பிரச்சினைகள் ஏற்படுகின்றன. குறிப்பாக, மழைக்காலத்தில் அந்தப் பாலம் வழியாகக் கடந்து செல்ல முடியவில்லை. வட சென்னையில் ஒரு பகுதியும், பெரம்பூர் பகுதியும் துண்டிக்கப்படுகிற ஒரு நிலைமை ஏற்படுகிறது. ஆனால், கடந்த சில மாதங்களாக, அந்தப் பால வேலை முழுமையாக நின்றுபோய் இருக்கிறது. ஆகவே, அடுத்த சில மாதங்களுக்குள்ளாக அந்தப் பாலப் பணியை நிறைவு செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட வியாசர்பாடி இரயில்வே மேம்பாலப் பணிகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. நிலம் கையகப்படுத்தும் பிரச்சினை மற்றும் கழிவுநீர்க் குழாய்களை மாற்றியமைக்கும் பணியில் இப்பாலம் கட்டும் பணிகள் தாமதமடைந்திருக்கின்றன. இதை விரைந்து முடிப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

36—

காற்று மாசு

***36185—திரு. பொன். ராஜா:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, புழுதிவாக்கம் கிராமம், செட்டிநாடு நிறுவனத்தின் நிலக்கரி சேமிப்புக் கிடங்கிலிருந்து லாரிகள்மூலம் நிலக்கரி கொண்டு செல்லும்பொழுது ஏற்படும் காற்று மாசினைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

[2013 அக்டோபர் 28

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி சட்டமன்றத் தொகுதி, பொன்னேரி தாலுகா, புழுதிவாக்கம் கிராமம் சர்வே எண் 143-ல் தி/ள். செட்டிநாடு இன்டர்நேஷனல் கோல் டெர்மினல் என்ற தனியார் நிறுவனம் ஆண்டுக்கு 8 மில்லியன் டன் நிலக்கரியைக் கையாளுதல், சேமித்தல் போன்ற பணிகளை மேற்கொண்டுவருகின்றது. சேமிப்புக் கிடங்கிலிருந்து லாரிகள்மூலம் நிலக்கரியை ஏற்றிக்கொண்டு செல்லும்போது காற்று மாசினைத் தடுக்க தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் பின்வரும் சில நிபந்தனைகளை விதித்துள்ளது: (1) அளவிற்கதிகமான லோடுகளை ஏற்றிச் செல்லக்கூடாது, (2) தார்பாலின் கொண்டு மூடப்பட்டு, கரித்துகள்கள் காற்றில் பறக்காத வண்ணம் கொண்டு செல்ல வேண்டும், (3) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் இந்நிறுவனத்தின் செயல்பாடுகளைத் தொடர்ந்து கண்காணித்துவரும். நிபந்தனைகளை நிறுவனம் மீறும்பட்சத்தில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.

திரு. பொன். ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன். எனது பொன்னேரி தொகுதிக்குட்பட்ட புழுதிவாக்கம் கிராமத்தில், செட்டிநாடு நிறுவனத்தின் நிலக்கரி சேமிப்புக் கிடங்கிலிருந்து ஒரு நாளைக்கு சராசரியாக 950 லாரிகளில் நிலக்கரியை எடுத்துச் செல்கிறார்கள். ஒரு லாரியிலே எடுத்துச் செல்லவேண்டிய நிலக்கரியின் அளவு 16 டன்னிலிருந்து 17 டன்தான் இருக்கவேண்டும். ஆனால், இந்த லாரிகளிலே ஓவர் லோடாக 25 முதல் 30 டன்கள் ஏற்றிச் செல்கிறார்கள். அதேபோன்று தார்ப்பாய் கட்டாமல் லாரிகள் செல்வதால் வழியிலே இருக்கும் அந்தச்

2013 அக்டோபர் 28]

சாலை ஓரங்களிலே நிலக்கரி அதிகமாக சிந்திவிடுகிறது. இதன்காரணமாக அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்குச் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுகின்றது. இருப்பினும், இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாற்று வழியும் உண்டு. தற்போது எடுத்துச் செல்கின்ற அத்திப்பட்டு, வல்லூர், மீஞ்சூர் பேரூராட்சி, நாலூர் ஊராட்சி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், துணைக் கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. பொன். ராஜா: மேட்டுப்பாளையம் மற்றும் பொன்னேரி பேரூராட்சி வழியாக எடுத்துச் செல்லும்போது லாரிகளிலேயிருந்து அதிக அளவிலே நிலக்கரி கொட்டுவதால் அவற்றை மாற்று வழியில் கொண்டு செல்ல ஏற்பாடு செய்யும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாரிகளில் நிலக்கரியை அதிக லோடுகள், அதாவது 17 டன்களுக்குப் பதிலாக 30 டன்கள் எடுத்துச் செல்வதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மேலும், மாற்று வழிப் பாதையில் எடுத்துச் சென்றால் இந்தப் பாதிப்பு இருக்காது என்றும் குறிப்பிட்டார்கள். அதில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஆய்வுகளை மேற்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, காற்றில் மாசு கட்டுப்படுத்துகின்ற கருவி ஒன்று நிறுவப்பட்டு, Care Air Centre மூலமாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தொடர்ந்து 24 மணி நேரமும் கண்காணிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 8 மில்லியன் டன் இறக்குவதனால், அதிகப்படியான லோடுகள் செல்வதனால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, ஆய்ந்து, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை

[2013 அக்டோபர் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.

திரு. பொன். ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாற்று வழியாக அத்திப்பட்டு, வல்லூர், நாப்பாளையம், மணலி, மணலி புறவழிச் சாலை, 200 அடி சாலையில், அதாவது அவுட்டர் ரிங் ரோடு சாலை வழியாக என்.எச்.-5 இலே சென்று கும்மிடிப்பூண்டி, ஆந்திரா மாநிலங்களுக்குக் கொண்டு சென்றால், இந்தச் சிரமத்தைத் தவிர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும் என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற, ஆந்திரா மாநிலத்திற்குக் கொண்டு செல்கின்ற அந்த மாற்று வழியினை, மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அதற்குண்டான சாத்தியக்கூறுகள் இருப்பின் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

37—

தடுப்பணை

***19761—திரு. வீ.பி. நாகைமாலி:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

(அ) கீழ்வேளூர் தொகுதி, சோழவித்தியாபுரம் ஊராட்சி, வெள்ளையாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கீழ்வேளூர் தொகுதி, சோழவித்தியாபுரம் ஊராட்சியிலே வெள்ளையாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் திட்டப் பணி துறையினுடைய ஆய்விலே உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

முற்பகல் 10-50

திரு. வீ.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, சோழவித்தியாபுரம் ஊராட்சியில் வெள்ளையாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்டும் திட்டப் பணி அரசின் ஆய்வில் இருக்கிறது என்று கூறிய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, சோழவித்தியாபுரம் ஊராட்சியில் வெள்ளையாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டினால் தண்ணீரைச் சேமித்து வைத்து குடிநீருக்கும், பாசனத்திற்கும், மக்களின் இதர பயன்பாட்டிற்கும் பயன்படுத்த முடியும். சோழவித்தியாபுரம் கிராமம் அல்லாமல் அதைச் சுற்றியுள்ள கருங்கண்ணி, மீனம்பண்ணலூர், பாலக்குறிச்சி, கடல்திடல்கரை, ஏர்வைக்காடு ஆகிய ஊராட்சிகளில் தடுப்பணையைப் பயன்படுத்தி அந்தப் பகுதிகளிலே நிலத்தடி நீராதாரத்தைப் பெருக்கவும், விவசாயத்திற்குப் பயன்படுத்தவும் முடியும். ஆகவே, இந்தத் தடுப்பணையை விரைந்து கட்டி அந்தப் பகுதி மக்களுக்குக் கொடுக்குமாறு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டு, நன்றி தெரிவித்து, அமர்கிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 அக்டோபர் 28

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். கீழ்வேளூர் தொகுதி, வெள்ளையாற்றின் குறுக்கே கட்டப்படுகின்ற தடுப்பணையின் திட்டப் பணிகள் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் விரைந்து தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு ஒன்றியம், மசிகம் ஊராட்சியிலுள்ள பாலாற்றில் 5 ராட்சதக் கிணறுகள் தோண்டப்பட்டு அதிலிருந்துதான் ஆம்பூர் நகருக்குக் குடிநீர் விநியோகம் செய்து வருகின்றார்கள். அதேபோன்று பேரணாம்பட்டு நகருக்கும் அந்தக் கிணற்றிலிருந்துதான் குடிநீர் விநியோகம் செய்து வருகின்றார்கள். இரண்டு ஆறுகள் கலக்கின்ற அந்த இடத்திலே ஒரு தடுப்பணை கட்டப்பட வேண்டுமென்று நீண்ட வருடங்களாக கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதற்கான திட்ட மதிப்பீடுகளும் தயார் செய்து அரசுக்கு அனுப்பி வைத்திருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திட்ட மதிப்பீடுகளை ஆய்வு செய்து, உடனடியாக அந்தப் பகுதியிலே ஒரு தடுப்பணை கட்டுவதற்கு ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார் அவர்கள்.

திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விருத்தாசலம் தொகுதியானது சுமார் 200

2013 அக்டோபர் 28]

கிராமங்களைக் கொண்ட பகுதியாகும். அங்குள்ள அனைத்து கிராம மக்களுக்கும் விவசாயமே முக்கியமான தொழிலாக உள்ளது. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் மிக அருகிலே உள்ளதால், அவர்கள் நிலக்கரி எடுப்பதற்காக பல ராட்சதக் குழாய்கள்மூலம் அதிகப்படியான தண்ணீரை வெளியேற்றுகின்றார்கள். இதனால் 20 அடி, 30 அடியிலேயே தண்ணீர் கிடைத்துக் கொண்டிருந்த நிலை மாறி, தற்போது 200 அடி முதல் 400 அடி வரை இருந்தால் மட்டுமே ஓரளவுக்கு விவசாயத்திற்குத் தண்ணீர் கிடைக்கும் என்ற நிலை உள்ளது. எதிர்காலத்தில், அதாவது 10 வருட காலத்திற்காவது, விவசாயத்திற்குத் தண்ணீர் கிடைக்குமா என்ற அச்சத்தில் விவசாயிகள் உள்ளதால் விருத்தாசலம் பகுதியில் மணிமுத்தாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்க வேண்டும் என்று விவசாயிகள் பல ஆண்டுகளாகக் கோரிக்கை வைத்துள்ளனர். ஆகையால் அதிக முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வாக, குறைந்தபட்சம் 5 இடங்களிலாவது தடுப்பணை ஏற்படுத்தி விவசாயிகளின் அச்சத்தையும், வேதனையையும் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை அரசினுடைய ஆய்வில் உள்ளது. நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, கோரையாற்றில் பொன்னுக்குண்டான் ஆறு பிரியுமிடத்தில், அந்த ஆறுவழியாகத்தான் பைங்காட்டூர், வாட்டார், நல்லூர், அக்கரைக்கோட்டை, ரெங்கநாதபுரம் ஆகிய ஊராட்சிகளில் உள்ள வயல்களுக்குத் தண்ணீர் செல்ல வேண்டும். இந்த ஆண்டு போதிய அளவு தண்ணீர் இருந்தும் ஆற்றின் கொள்ளளவுக்கு மேல் அதிகமாக தண்ணீர் கொடுத்தாலும்கூட வயல்களில் ஏறி பாய முடியாத அளவுக்கு ஆற்றினுடைய மட்டம் கீழே இருக்கிறது. அந்தவகையில், பொன்னுக்குண்டான் கோரையாற்றில் ஒரு ரெகுலேட்டர் கட்டிக் கொடுத்தால் அந்தப் பகுதியில்

[2013 அக்டோபர் 28

இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு வசதியாக இருக்கும். ஆகவே, அந்த வகையில் அங்கே ஒரு ரெகுலேட்டர் கட்டித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், திருவாரூர் மாவட்டத்தில் உள்ள ஆறுகள் பாசனம் பெறமுடியாத அளவுக்கு பள்ளமாக இருக்கின்ற காரணத்தால், ஆற்றின் மட்டம் மேடாக இருக்கிறது. ஆகையால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிற தரைமட்டப் பாலங்கள் இந்த ஆண்டு திருவாரூர் மாவட்டத்தில் தேவைக்கு ஏற்ப அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை குறித்து திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, இப்பொழுது மத்திய அரசு நிதி உதவிக்காகச் சென்றிருக்கிறது. நிதியுதவி கிடைத்தவுடன் விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருக்கிற கெலவரப்பள்ளி அணையிலிருந்து, இடதுபுறக் கால்வாய் வழியாக வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதி, வரதாபுரம் ஏரி வரையிலே தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. வரதாபுரம் ஏரியிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரம் உள்ளது துரை ஏரி. துரை ஏரிக்குக்கீழே 1½ கிலோ மீட்டர் தூரமுள்ளது வேம்பள்ளி dam. இந்த இரண்டும் தண்ணீர் இல்லாமல் காய்ந்து போயிருக்கின்றன. கெலவரப்பள்ளி அணையிலிருந்து வரதாபுரம் வரையில் வரக்கூடிய கால்வாயை நீட்டித்துத் தருவதற்குண்டான முன்மொழிவுகள் எல்லாம் அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கால்வாயை நீட்டித்துத் தந்து, அந்தப் பகுதியிலே

2013 அக்டோபர் 28]

இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு நன்மையைச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

38—

கால்நடை மருத்துவமனை

***22533—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியம், வெங்கலூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர், காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியம், வெங்கலூரிலே கால்நடை மருத்துவமனை அமைக்க கோரிக்கை வைத்திருக்கிறார்கள். வெங்கலூரிலே கால்நடை பராமரிப்புத் துறையினுடைய விதிப்படி 3,000 கால்நடைகள் இருப்பதாலும், 3 கி.மீ. தொலைவு இருப்பதாலும் அங்கே ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்க

[2013 அக்டோபர் 28

மாண்புமிகு அம்மாவினுடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அம்மாவை மாதா பிதா குரு தெய்வம் என்ற நான்கையும் ஒருருவாய் இங்கே நாடு பார்க்கிறது. ஈரோட்டுப் புயல், காந்தித் தென்றல் இரண்டும் கலந்ததாய் ஈகையுடைய தாயை உலகம் பார்க்கிறது. பூக்களுக்கும் புன்னகை போதித்த புரட்சித் தலைவராக பொன்மனத் தாயை பூவுலகமே பார்க்கிறது. அல்லாடும் மக்களை அரவணைக்கும் அன்னை தெரசா வடிவில் அன்புலகம் பார்க்கிறது. மக்கள் பசி தீர்க்கின்ற மருத்துவராம் மாதரசியை அன்னலட்சுமி என்று அகிலமே பார்க்கிறது. 130 கோடி இந்தியரை நுண்ணறிவால், நுண்புலத்தால், பொன் மனத்தால் வழிநடத்த வருகை தரும் நுண்ணறிவுப் பெட்டகமே என ஆறறிவு மனித இனம் அறிவோடு பார்க்கிறது. தாய்நாட்டை வழிநடத்த தமிழர்க்கோர் வாய்ப்பு என்று தரணியே பார்க்கிறது. விழித்தெழு தமிழினமே, விடையிருக்கிறது தாயிடமே என்று கூறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி கேட்கும் முன்னே விடை தெரியும் என்பதைப்போல, இன்றைக்கு நான் கேட்ட கேள்விக்கு விடையாக அங்கே கால்நடை மருத்துவமனை அமைத்துத் தரப்படும் என்று கூறிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். மேலும், தேவகோட்டை ஒன்றியம், கீழஉச்சாணி பகுதியில் அரசு விதிகளுக்குட்பட்டு 15,000-க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன. அந்தப் பகுதியிலிருந்து மக்கள் கால்நடை மருத்துவமனைக்குச் செல்லவேண்டுமென்றால், திருவெம்புத்தூர் 9 கி.மீ. தூரத்திலும், ஆலந்தூர் 7 கி.மீ. தூரத்திலும் இருக்கிறது. ஆகவே, அங்கேயும் ஒரு கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தித் தரவேண்டும். அதேபோல, 25,000 கால்நடைகளுக்கு மேலே சாக்கோட்டை ஒன்றியம், பையாவயல் பகுதியில் இருக்கின்றன. அங்குள்ள மக்கள் பயனடைய வேண்டுமென்றால் 9 கி.மீ. தூரமுள்ள திருக்கள்ளிக்காடு பகுதிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது.

2013 அக்டோபர் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைக் கேள்வி ஒன்று கேளுங்கள். இன்னொரு துணைக் கேள்வியும் கேட்கலாம். மூலக் கேள்வி நீங்கள்தானே கேட்டிருக்கிறீர்கள்?

திரு. சோழன் சித. பழனிச்சாமி: மேலும் இரண்டு இடங்களிலே மருத்துவமனை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற கிராமங்களிலெல்லாம் என்னுடைய துறை ஆய்வுசெய்து, தேவைப்படுமென்றால், கிளை மருத்துவமனைகள் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, அம்மாபேட்டை ஒன்றியம், விராலிக்காட்டில் 5,000-க்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. எனவே, அங்கே கால்நடை துணை மருத்துவமனை அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தக்

[2013 அக்டோபர் 28

கிராமத்தில் கால்நடை பராமரிப்புத் துறை விதிகளுக்குட்பட்டு கால்நடைகளின் எண்ணிக்கை இருக்குமானால், நிச்சயமாக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் மற்றும் திரு. ரா. சரத்குமார். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

39—

சரிகை ஆலையை சீரமைத்தல்

***5703—திரு. வி. சோமசுந்தரம்:**
திரு. ரா. சரத்குமார்:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்நாடு சரிகை ஆலையைச் சீரமைத்து, உற்பத்தியைப் பெருக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காஞ்சிபுரத்தில் இயங்கும் சரிகை ஆலையைச் சீரமைத்து உற்பத்தியைப் பெருக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மாவினுடைய அரசால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சரிகை உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன், மூலப்பொருட்களை ஒப்பந்தப்புள்ளிமூலம் கொள்முதல் செய்யும் கால அளவான 45 நாட்களுக்கு ஒரு முறை என்ற நடைமுறையை மாற்றி, 15 நாட்களுக்கு ஒரு முறை ஒப்பந்தப்புள்ளி கோரும் நடைமுறை செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் சரிகை உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்கள் தடையின்றிக் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தின் விற்பனை யாவும் ஆலை வாயில் விலை திட்டத்தின்படி (Mill Gate Price Scheme) தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின்மூலம் பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுவதால், பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் இந்தத் திட்டத்தின்மூலம் 2.5 விழுக்காடு விலையில்

2013 அக்டோபர் 28]

மானியம் பெற்று வருகின்றன. காஞ்சிபுரம் சரிகை ஆலை உற்பத்திப் பிரிவில் முழுமையான சரிகை உற்பத்தியை எய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசால் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.

திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டை இந்தியா முற்றிலும் புறக்கணிக்க வேண்டுமென்கிற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை நிறைவேற்றிய (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவினுடைய இரும்புப் பெண்மணியாகத் திகழும், நாளைய பாரதத் திருநாட்டை வழி நடத்தப்போகும் எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன். காஞ்சிபுரத்தில் இருக்கின்ற சரிகை ஆலையில் சரிகை உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்கள் கிடைப்பதற்கும், சரிகை உற்பத்தியினை முழுமையாக எய்துவதற்கும் தேவையான நடவடிக்கையை எடுத்த, எங்களது தாய், நெசவாளர்களின் விடிவெள்ளியாகத் திகழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்த ஆலை மிகவும் பழமையான ஆலையாக இருப்பதினால், ஒரு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து இந்த ஆலை புனரமைக்கப்படுமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும் என்ற இலட்சியத்தோடு செயல்படுகின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு, மக்களைத் தேடி, மக்களின் தேவைகளை அறிந்து, மக்களுக்காகத் திட்டம் தீட்டி

[2013 அக்டோபர் 28

செயல்படுகின்ற அரசாக விளங்குகிறது. குடியிருக்க வீடு இல்லை என்கிற நிலையை அறிந்து நெசவாளர்கள் குடியிருக்கவும், குடியிருக்கும் வீடுகளில் நெசவுப் பட்டறை அமைக்கவும், 260 கோடி ரூபாயில் 10 ஆயிரம் விலையில்லா பசுமை வீடுகள் வழங்கியும், கைத்தறி நெசவாளர்களின் உற்பத்தியைப் பெருக்கிடவும், உற்பத்தியின்மூலம் அதிகக் கூலி கிடைக்கவும், 6,000 பெடல் தறிகள் ரூபாய் 24 கோடி விலையில் வழங்கியும், கைத்தறித் துறைக்கு சிட்டா நூல்கள் தங்கு தடையின்றிக் கிடைக்க, 25 ஆயிரம் மின் மோட்டார்கள் வழங்கியும், பட்டு உற்பத்தியை அதிகரிக்க Pneumatic Air Compressor உபகரணங்கள் வழங்கியும், நெசவாளர்களின் பொற்காலமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு செயல்படுகிறது. காஞ்சிபுரத்தில் பழமையான ஆலை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இன்றையதினம் பட்டுச் சேலையின் அழகினை மெருகூட்டுவதற்கு பார்டரில் சரிகை, புட்டாவில் சரிகை, முந்தியில் சரிகை, முகூர்த்தப் பட்டில் முழுவதுமாக சரிகை போன்று சரிகையினுடைய தேவையை அதிகப்படுத்துவதற்கு, நியாயமான முறையில், மக்களுக்கும், கூட்டுறவுச் சங்க நெசவாளர்களுக்கும் கிடைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.

திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே வேறு எந்தவொரு மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு நெசவாள மக்களுக்காக பல்வேறு திட்டங்களை வாரி வழங்கிக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாகவும், நெசவாள மக்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

2013 அக்டோபர் 28]

40—

சொந்தக் கட்டடம்

***24060—திருமதி க. அழகுவேலு:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி நகராட்சியிலுள்ள வணிக வரி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கள்ளக்குறிச்சி நகராட்சியிலுள்ள வணிக வரி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.

முற்பகல் 11-05

திருமதி க. அழகுவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம், தமிழகத்தின் காவல் தெய்வம், வருங்கால பாரதம், மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்கி, கேள்வி எழுப்பப்பட்டு அந்தக் கேள்வி இந்தச் சபைக்கு வரும் முன்னரே வணிக வரி அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட உத்தரவிட்டு, தற்போது கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. வரம் கேட்கும் முன்னே வாரிக் கொடுக்கும் வள்ளலாக விளங்கிக்கொண்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றியை என் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி, அமர்கின்றேன்.

[2013 அக்டோபர் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

41—

தரம் உயர்த்துதல்

***23952—திருமதி செல்வி ராமஜெயம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, அழிச்சிக்குடி ஊராட்சி, வண்டுராயன்பட்டிலுள்ள ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதி, அழிச்சிக்குடி ஊராட்சிக்குட்பட்ட வண்டுராயன்பட்டிலுள்ள அரசு ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளி, 2013-2014 ஆம் கல்வி ஆண்டில் உயர்நிலைப் பள்ளியாக, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று தரம் உயர்த்தப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி செல்வி ராமஜெயம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழகத்தை கண்ணை இமை காப்பதுபோல் காத்து, தமிழக மக்களின் வாழ்வொன்றே தன்னுடைய வாழ்நாளின் இலட்சியமாகக் கருதி, வருங்கால பாரதமாக விளங்கிக்கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும்

2013 அக்டோபர் 28]

திசை நோக்கி வணங்குகிறேன். வண்டுராயன்பட்டு, அழிச்சிக்குடி ஊராட்சி ஆதி திராவிட சமுதாய மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதியாக உள்ள காரணத்தினால், அந்தப் பகுதிவாழ் மக்களின் நீண்டநாள் கோரிக்கையினை ஏற்று, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படும் என்று சொன்ன மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சிக்கு என்னுடைய தொகுதிவாழ் மக்களின் சார்பாக கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

42—

பேருந்து வசதி

***6768—திரு. டி. சுரேஷ்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, ஆதிப்பாடி மற்றும் செம்மம்பட்டி கிராமங்களுக்குப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செங்கம் தொகுதி, ஆதிப்பாடி கிராமம், புறநகர் தடம் 122 E/Q மூலம் சென்னை-ஆதிப்பாடி-தானிப்பாடி வழித்தடத்தில் இரண்டு நடைகளும் மற்றும் தானிப்பாடி-ஆதிப்பாடி வழித்தடத்தில் ஒரு சிற்றுந்துமூலம் தினசரி 14 நடைகளும் நேரடிப் பேருந்து வசதி பெற்றுள்ளது. புறநகர் தடம் 313 திருவண்ணாமலை பீமாரப்பட்டி வழி தானிப்பாடி வழித்தடத்தில் தினசரி 8 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. செம்மம்பட்டி கிராமத்திற்கு பீமாரப்பட்டிலிருந்து செல்லும் சாலை மிகவும் குறுகலான மண் சாலை ஆகும். கனரக வாகனம் இயக்க இயலாத நிலையில் உள்ளது. பேருந்து போக்குவரத்து வசதிக்கு ஏற்ப இச்சாலை அமைக்கும் பணி நிறைவுபெற்றபின், மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று, இப்பகுதிக்குப் பேருந்து

[2013 அக்டோபர் 28

வசதியை ஏற்படுத்தித் தர நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. சுரேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கத் தாரகை அம்மா அவர்களை வணங்குகிறேன். நான் முன்பே கூறியதைப்போல, எனது தொகுதி மக்கள் நான் அம்மாவை சந்தித்தவுடன் "ஆளும் வளரணும், அறிவும் வளரணும் அதுதாண்டா வளர்ச்சி. நீ அம்மாவை சந்திக்க நினைத்ததே நீ எடுத்த சிறப்பான முயற்சி" என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், நாராயணன்குப்பம் கிராமத்தில் தடுப்பணையும், குப்பநத்தம் வரையிலே தடுப்பணையும், சாத்தனூர் அணைக்கு பராமரிப்புத் தொகையும், அரசுப் பேருந்து நிற்பதற்கு டெப்போவும், செங்கத்திற்கு ஆர்.டி.ஓ. அலுவலகமும் போன்ற எண்ணற்ற உதவிகளை அளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 4-10-2013 அன்று பட்டாசு வெடித்து, அந்தக் கோர விபத்தில் மூன்று பேர் உயிர்நீத்திருக்கின்றார்கள். ஒருவர் கால் இழந்திருக்கின்றார். அவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உதவிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். ஆதி திராவிட மக்களின் காவல் தெய்வமாய் விளங்குகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் குடும்பங்களுக்கு உதவி செய்திட வேண்டுமாய் மனப்பூர்வமாக வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

43—

தடுப்புச் சுவர்

***15279—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் தொகுதி, கீழக்கரையில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள படகுகள் நிறுத்தும் தளத்தின் இருபுறமும் தடுப்புச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2013 அக்டோபர் 28]

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராமநாதபுரம் தொகுதி, கீழக்கரையில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள படகுகள் நிறுத்தும் தளத்தை தற்போது 18 மீன்பிடிப் படகுகள் பயன்படுத்தி வருகின்றன. இப்படகு நிறுத்தும் தளத்தில் 5,400 கிலோ அளவிற்கு மீன்கள் கொண்டுவரப்படுகின்றன. இத்தளத்தில் தற்போது மீன் துறை சார் ஆய்வாளர் அலுவலகம், TAFCOFED மூலம் டீசல் பங்க், மீன் இறங்குதளம், Light House மற்றும் மீன் ஏலக்கூடம் போன்ற வசதிகள் உள்ளன. கீழக்கரையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள மீன் இறங்குதளத்தில், Fish Landing Center-ல் இருபுறமும் தடுப்புச் சுவர்கள் அமைத்தால் படகுகளிலிருந்து மீன்களை இறங்குதளத்தில் கொண்டுவர இயலாது. மேலும், மீன் இறங்குதளத்தில் தடுப்புச் சுவர்கள் இல்லாமல் கட்டுவதற்கு முக்கியமான காரணம், மீனவர்கள் எளிதாக தரையிலிருந்து ஐஸ், மீன்பிடி வலைகள் மற்றும் பிற பொருட்களைப் படகுகளுக்கு எடுத்துச் செல்லமுடியும். படகிலிருந்து மீன்களையும், மீன்பிடி வலைகளையும் தளத்திற்குக் கொண்டு வரமுடியும் என்பதால்தான். படகின் மேல் மட்டமும், இறங்குதளத்தின் தரை மட்டமும் சமமாக இருக்கும் அளவில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இராமநாதபுரம் தொகுதி, கீழக்கரையில் கட்டப்பட்டுள்ள படகு நிறுத்தும் தளத்தில் படகுகளைக் கட்டுவதற்கு தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆகையால், படகுகள் நிறுத்தும் தளத்தின் இருபுறமும் தடுப்புச் சுவர்கள் கட்ட சாத்தியமே இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் உள்ள கீழக்கரையில் ஏற்கெனவே ஒரு பழைய படகு தளம் இருக்கின்றது. அதற்குப் பதிலாகத்தான் 5 கோடி ரூபாய் செலவில் இந்தப் படகு தளம் அமைக்கப்பட்டது. ஆனால், அது மாண்புமிகு

[2013 அக்டோபர் 28

அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, இன்னும் பயன்பாட்டிற்கு வரவில்லை. மாலை நேரங்களிலே கீழக்கரை மக்களுக்குப் பொழுதுபோக்கு இடமாக அது அமைந்துள்ளது. குழந்தைகள், பெண்களெல்லாம் அங்கே செல்லக்கூடிய நேரத்திலே, பலமாகக் காற்று அடித்தால் மக்கள் கடலிலே விழக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அதனால்தான், இந்தக் கேள்வியை நான் எழுப்ப வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டது. எனவே, அதை படகு தளமாகப் பயன்படுத்தினால் நல்லது. இல்லாவிட்டால் அங்கே மக்கள் செல்வதைத் தடுக்க வேண்டும் அல்லது சுற்றுலாத்தலமாக அதை மாற்ற வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, கீழக்கரையை நாங்கள் ஆய்வு செய்தோம். அப்போது அங்கேயிருக்கிற மீனவர்கள் எல்லோரும் இது ஓர் அருமையான திட்டம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னால்தான் எங்களுக்கு மீன்பிடி இறங்குதளம் எல்லாம் கிடைத்திருக்கிறது என்று மிகவும் பெருமைப்பட கூறினார்கள். அங்கே மீனவர்களுக்கென்று 18 படகுகள் இருக்கின்றன. F.R.P. Boat இருக்கிறது, டீசல் பங்க் இருக்கிறது. மீன் ஏலக்கூடம் இருக்கிறது. மீன்பிடிப் படகுகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதுதான் மீன் இறங்குதளம். சுற்றுலாத்தலம் அமைக்க வேண்டுமென்றால், அதற்கு வேறு இடம் பார்க்க வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற எண்ணத்திலே, அனைத்துத் தரப்பினரையும் திருப்திப்படுத்தக்கூடிய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையான சுற்றுலாத்தலம் அமைக்க வேண்டும் என்பதற்கு அங்கே வேறு நல்ல சிறப்பான இடம் இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அதைத் தேர்வு செய்து, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கருத்துரு அனுப்பினால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செய்வதற்குத் தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 அக்டோபர் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. என்னுடைய தொகுதியிலே உள்ள மண்டபத்தில் 800 விசைப் படகுகள் இருக்கின்றன. மண்டபம் வடக்குக் கடலில் கடலோரக் காவல் படையினுடைய ஜெட்டி அருகிலிருந்து சுமார் 200 மீட்டர் தூத்திற்கு ஆற்றுவாய் சேனல் ஒன்று இருக்கின்றது. அந்தச் சேனல் ஆழமாக இல்லாததன் காரணமாக, ஒரே ஒரு படகு மட்டும் போகக்கூடிய நிலைமை இருப்பதால், சில நேரங்களிலே படகுகள் மோதிக் கொள்ளக்கூடிய ஒரு நிலையும் இருக்கின்றது. 34 ஆண்டு காலமாக இந்த ஆற்றுவாயை ஆழப்படுத்த வேண்டுமென்று மண்டபம் பகுதி மீனவர்கள் தொடர்ச்சியாக கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது மீன் இறங்குதளத்தில் இரு பக்க சுவர்கள் அமைப்பதுபற்றி. இப்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மண்டபம் பகுதியை ஆழப்படுத்துகிற விஷயத்தைப் பற்றிச் சொல்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அதை ஆய்வு செய்யும். Low water-ல் வரும்போது கொஞ்சம் கிரமமாக இருக்கும், high water-ல் வரும்போது அங்கே பிரச்சினை அவ்வளவாக இருக்காது. அங்கே பவளப் பாறை இருப்பதாக மத்திய ஆராய்ச்சி சுற்றுச்சூழல் துறை சொல்கின்ற காரணத்தினாலே, அதை ஆய்வு செய்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 அக்டோபர் 28

44—

மணிமண்டபம்

***33967—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், தொரப்பள்ளியில் மூதறிஞர் இராஜாஜி அவர்களுக்கு மணிமண்டபம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், தொரப்பள்ளியில் மூதறிஞர் இராஜாஜி அவர்களுக்கு மணிமண்டபம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

45—

காலிப் பணியிடங்களை நிரப்புதல்

***37101—திரு. என்.வி. காமராஜ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

(அ) வேதாரண்யம் தொகுதி, வேதாரண்யம் அரசு பொது மருத்துவமனையிலுள்ள மருத்துவர் காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 11-15

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேதாரண்யம் தொகுதி, வேதாரண்யம் அரசு பொது மருத்துவமனை 59 படுக்கை வசதிகளைக்கொண்ட தாலுகா மருத்துவமனையாகும். இங்கு நாளொன்றுக்கு 350 வெளி நோயாளிகளும், சராசரியாக 44 உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனைக்கு 12 மருத்துவர் பணியிடங்கள் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. 6 மருத்துவர்கள் தற்போது பணிபுரிகின்றனர். எஞ்சியுள்ள மருத்துவர் பணியிடங்கள் பணி ஓய்வு மற்றும் பணி உயர்வு காரணமாக ஏற்பட்ட வெற்றிடங்களாகும். இம்மருத்துவமனையில் 44 உள் நோயாளிகள் மட்டுமே தங்கி சிகிச்சை பெற்றுவருகின்றனர். எனவே, தற்போது பணியில் உள்ள 6 மருத்துவர்களைக்கொண்டு சிறப்பான முறையில் ஏழையெளிய மக்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.*

திரு. என்.வி. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா, 6 கோடி தமிழர்களின் மனசாட்சி! அம்மா நடத்தும் அரசாட்சி, அதற்கு இத்தனை நாட்களில் அவர் செய்த சாதனையே அத்தாட்சி! (மேசையைத் தட்டும் ஒலி) ஈழத் தமிழரை எண்ணித் துடிப்பதில் தாயானவர்! ஈழப் பகையினை முடிப்பதில் தீயானவர்! வையம் முழுவதும் வாழும் தமிழர்கள் பாராட்டவே சட்டமன்றப் பேரவை தன்னில் கொணர்ந்தார் தீர்மானமே! தமிழ் மொழியையும், தமிழ் இனத்தையும் காக்கின்றவர்! அறிவியலில் தமிழ் வளர வழி பார்க்கின்றவர்! அம்மா என்று சொல்லும்*

[2013 அக்டோபர் 28

சொல்லில் தேன் ஊறும்! நம் அம்மா வாழும் காலம் நூல் ஆகும்! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் தொகுதி, வேதாரண்யத்திலுள்ள அரசு பொது மருத்துவமனையில் உள்ள மருத்துவர் பணியிடங்கள் 12 ஆகும். அதில் பணியில் இருக்கும் மருத்துவர்கள் 5 பேர்தான். காலிப் பணியிடங்கள் 7 ஆகும். இங்கு மகப்பேறு வசதிகள் இல்லை. தீவிர சிகிச்சை தேவைப்படுகின்றவர்கள் தொலைவில் உள்ள ஊர்களாகிய நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களுக்குப் போகவேண்டியுள்ளது. நாளொன்றுக்கு சுமார் 500 ஏழையெளிய மக்கள் மாண்புமிகு அம்மா அவர்களை நம்பி புற நோயாளிகளாக மருத்துவ வசதி பெறுவதற்கு இம்மருத்துவமனைக்கு வருகின்றனர். மாண்புமிகு அம்மா அவர்களின் புகழுக்கு மேலும் ஒரு மாணிக்கமாக அமைய வேதாரண்யம் மருத்துவமனையில் காலிப் பணியிடங்களை நிரப்பியும், மகளிர் சிறப்பு மருத்துவப் பிரிவு தொடங்கியும், மகப்பேறு பிரிவு உருவாக்கியும் மற்றும் அமரர் ஊர்தி ஒன்று வழங்கியும், குளிரூட்டப்பட்ட பிணவறை அமைத்துத் தருமாறும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் அரசு பொது மருத்துவமனையில் மனநோய்ப் பிரிவு, சர்க்கரை நோய் சிகிச்சைப் பிரிவு, உயர் இரத்த அழுத்த சிகிச்சைப் பிரிவு, நுண்கதிர் பிரிவு, காசநோய் வெளி நோயாளி பகுதி, பேறுகால பின் கவனிப்பு மற்றும் குடும்ப நல மையம், குடும்ப நல அறுவை அரங்கம், அவசரகால ஊர்தி, சித்தா பிரிவு, அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் மற்றும் தொற்றாநோய்ப் பிரிவு போன்ற சிறப்பு சிகிச்சைப் பிரிவுகள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.*

மேலும், இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள 12 மருத்துவர் பணியிடங்களில் பல் மருத்துவர் உட்பட 6 மருத்துவர்கள் பணியில் உள்ளார்கள். 6 பணியிடங்கள் காலியாக

2013 அக்டோபர் 28]

உள்ளன. அதேபோன்று இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட 12 செவிலியர் பணியிடங்களும் நிரப்பப்பட்டு, அனைவரும் பணியில் உள்ளனர். தமிழகம் முழுவதும் காலியாக இருந்த 2,159 மருத்துவ அலுவலர் பணியிடங்களை நிரப்ப, மருத்துவப் பணி தேர்வு வாரியம்மூலம் மருத்துவ அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டு, 1,773 பொது மற்றும் சிறப்பு மருத்துவர்களுக்கு 13-9-2013 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் (மேசையைத் தட்டும் ஒலி) பணி நியமன ஆணை வழங்கப்பட்டு, அனைவரும் பணியில் சேர்ந்துள்ளனர். மேலும், இன்று மீதமுள்ள 386 காலி மருத்துவப் பணியிடங்களுக்கும் கலந்தாய்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கலந்தாய்வுக்குப்பின் இவர்களுக்கு உடனடியாக பணி நியமன ஆணை வழங்கப்பட்டு பணியில் சேரவுள்ளனர்.

அன்றாடம் ஒரு மருத்துவர் 100-லிருந்து 150 நோயாளிகளைப் பரிசோதனை செய்து சிகிச்சை அளிக்க வேண்டும். ஆனால், இம்மருத்துவமனையில் 350 வெளி நோயாளிகள் மட்டுமே சிகிச்சை பெறுவதால், தற்போதுள்ள 6 மருத்துவர்களே போதுமானது. இருந்தாலும், கூடியவிரைவில் காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்களும் நிரப்பப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மருத்துவமனையில், முக்கியமாக, பெண்களுக்கு மகப்பேறு காலங்களில் பிரசவம் பார்க்கக்கூடிய வசதி அங்கே இல்லை. பெண்கள் சிகிச்சைக்காக ஒரு தனிப் பிரிவு தொடங்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் இங்கே கோரிக்கை வைத்தார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு தேவைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்; ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.

[2013 அக்டோபர் 28

திரு. என்.வி. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

[பட்டியல்கள் 9 முதல் 16 வரை]@

பட்டியல் 9

1—

வாக்காளர் அடையாள அட்டை

வினா எண் 28294—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாக்காளர் அடையாள அட்டை மற்றும் பட்டியலில் திருத்தம் செய்ய இணையதளம்மூலம் விண்ணப்பிக்கும் முறையினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இந்திய தேர்தல் ஆணையத்தின் ஆணைகளின்படி வாக்காளர் பட்டியலில் பெயர்களைப் பதிவு செய்ய மட்டுமே இணையதளத்தின்மூலம் விண்ணப்பிக்க தற்போது வழிவகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு விண்ணப்பித்தோருக்கு, உரிய கள விசாரணைக்குப் பிறகு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டு, பின்னர் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்படுகிறது. வாக்காளர் பட்டியலில் பதிவுகளைத் திருத்தம் செய்ய இணையதளம்மூலம் விண்ணப்பிக்கத் தேவையான மென்பொருள் தயாரிக்கும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது. அப்பணி நிறைவடையும் போது வாக்காளர் பட்டியலில் பதிவுகளைத் திருத்தம் செய்ய இணையதளம்மூலம் விண்ணப்பிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்படும்.

@இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

2013 அக்டோபர் 28]

2—

துணை மின் நிலையம்

வினா எண் 8113—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், சாலைக்கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதிக்குட்பட்ட இளையான்குடி ஒன்றியம், சாலைக் கிராமத்தில் ஏற்கெனவே 1X10 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றியுடன்கூடிய ஒரு 110/11 கி.வோ. துணை மின் நிலையம் இயங்கி வருகிறது. இதன் உச்சகட்ட மின்பளுவை 3.8 எம்.வி.ஏ. மட்டுமே. சாலைக்கிராமத்திற்கு தற்சமயம் தரமான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இப்பகுதியில் மின்பளு விரைந்து அதிகரிக்க வாய்ப்பு இல்லை என்பதால், சாலைக்கிராமத்தில் உள்ள 110/11 கி.வோ. துணை மின் நிலையத்தில் இருக்கும் மின்மாற்றியின் திறனே போதுமானது. எனவே, சாலைக்கிராமத்தில் மேலும் ஒரு புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

3—

சீரான மின்சாரம்

வினா எண் 14342—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, காமக்கூரில் சீரான மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, காமக்கூரில் பாளையத்தில் 100 கே.வி.ஏ. மின்மாற்றிகள் 8 எண்கள் பொருத்தப்பட்டு இக்கிராமத்திற்குட்பட்ட அனைத்து மின் இணைப்புகளுக்கும் தற்போது சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

4—

மின் கடத்தி

வினா எண் 15845—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பன்னாட்டு நிறுவனங்கள் உள்ளிட்ட பெரிய தொழிற்சாலைகள் தனிப்பட்ட மின் கடத்தியினைப் பயன்படுத்தி தேவையான மின்சாரத்தை வெளியிலிருந்து பெற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

பன்னாட்டு நிறுவனங்கள் உள்ளிட்ட பெரிய தொழிற்சாலைகள் தேவையான மின்சாரத்தை வெளியிலிருந்து பெற விருப்பம் தெரிவித்து அனுமதி கோரினால், அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது.

5—

மின்சாரத்தின் அளவு

வினா எண் 15846—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டாரத்தில் உள்ள பன்னாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் உயர் அழுத்த மின்சாரத்தின் அளவு என்ன?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் மொத்தம் 29 புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்ட பன்னாட்டு நிறுவனங்களுக்கு 216.66 எம்.வி.ஏ. (மெகா வாட்) அளவுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. அவற்றில் சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டாரங்களில் உள்ள 26 பன்னாட்டு நிறுவனங்களுக்கு 184.01 எம்.வி.ஏ. (மெகா வாட்) அளவுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது.

6—

இலவச மின்சாரம்

வினா எண் 16105—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சொந்தமாக விசைத்தறிக் கூடம் வைத்திருப்பவர்களுக்கு 2 மாதங்களுக்கொருமுறை 500 யூனிட்டுகள் மின்சாரம் இலவசமாக வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், தமிழ்நாட்டில் பயன்பெறுவோர் எத்தனை பேர்?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) ஆம். தமிழ்நாட்டில் சொந்தமாக விசைத்தறிக் கூடம் வைத்து நெசவு செய்யும் மின் பயனீட்டாளர்களுக்கு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை 500 யூனிட்டுகள் மின்சாரம் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது.

(ஆ) கடந்த 2010-2011 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மொத்தம் 65,214 பேர் பயன்பெற்றனர். 2011-2012 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மொத்தம் 67,345 பேர் பயன்பெற்றனர். 2012-2013 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மொத்தம் 69,476 பேர் பயன்பெறுவார்கள்.

[2013 அக்டோபர் 28

7—

வீடுகள் பராமரிப்பு

வினா எண் 11066—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை ஒன்றியம், பாக்குடி ஊராட்சி, மங்களாப்பட்டியில் உள்ள காலனி வீடுகள் பழுதடைந்துள்ளதை பராமரிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

8—

ஆழ்துளைக் கிணறு

வினா எண் 14817—திரு. சு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம், 11-வது வார்டு, மதுரை பிள்ளை தெருவில் ஆழ்துளைக் கிணறு மற்றும் மின் மோட்டார் அமைத்து சின்டெக்ஸ் தொட்டி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம், 11-வது வார்டு, மதுரை பிள்ளை தெருவில் ஆழ்துளைக் கிணறு, மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

9—

கைப்பம்பை சீரமைத்தல்

வினா எண் 14820—திரு. சு. ரவி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம், 11-வது வார்டு, ராஜாபாதர் தெரு கடைசியில் உள்ள பழுதடைந்த குடிநீர் கைப்பம்பை சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம், 11-வது வார்டு, ராஜாபாதர் தெரு கடைசியில் உள்ள பழுதடைந்த குடிநீர் கைப்பம்பு சீரமைக்கப்பட்டு, பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

10—

வீடுகள் பராமரிப்பு

வினா எண் 16181—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2013 அக்டோபர் 28

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், பேராம்பூர் ஊராட்சி, பேராம்பூர் ஆதி திராவிடர் காலனி வீடுகளைப் பராமரிப்பு செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

11—

வீடுகள் பராமரிப்பு

வினா எண் 16182—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், நாங்குப்பட்டி ஊராட்சி, மேலசித்தக்குடிப்பட்டி ஆதி திராவிடர் காலனி வீடுகளைப் பராமரிப்பு செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை

2013 அக்டோபர் 28]

வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

12—

நாய்களைக் கட்டுப்படுத்துதல்

வினா எண் 21814—திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மெரினா, பெசன்ட் நகர் கடற்கரையில் திரியும் நாய்களைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

மெரினா கடற்கரையில் 26-9-2012 அன்று 2 நாய்களும், 29-9-2012 அன்று 8 நாய்களும் பிடிக்கப்பட்டன. எலியட்ஸ் கடற்கரையில் 14-11-2012 அன்று 5 நாய்களும், 5-12-2012 அன்று 4 நாய்களும் பிடிக்கப்பட்டுள்ளன. மேலும், இந்த நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப்படும்.

13—

மின் விளக்குகள்

வினா எண் 25498—திரு. சு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 33-வது வார்டு, சோமசுந்தரம் நகரில் மின் விளக்குகள் இல்லாத அனைத்து மின் கம்பங்களுக்கும் மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் நகராட்சி, சோமசுந்தரம் நகரப் பகுதியில் அனைத்து மின் கம்பங்களுக்கும் மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

14—

இலவச வீட்டுமனைப் பட்டா

வினா எண் 16929—திரு. சு. ரவி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், சிறுணமல்லி ஊராட்சி, சம்பத்துராயன்பேட்டையில் வசிக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கிடவும், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிடவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், சிறுணமல்லி ஊராட்சி, சம்பத்துராயன்பேட்டையில் வசிக்கும் மாற்றுத் திறனாளிகளுக்குத் தனியாக வேலைவாய்ப்பு ஏதும் வழங்கிட இயலாது. பணியிடம் காலியாக இருக்கும்பட்சத்தில், Tamil Nadu Public Service Commission மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்மூலம் கல்வித் தகுதியின் அடிப்படையிலும், 3 சதவிகித இட ஒதுக்கீட்டின்படியும் வேலைவாய்ப்பு வழங்கப்படும். இலவச வீட்டுமனைப் பட்டா முன்னுரிமை அடிப்படையில் வருவாய்த் துறையின் வட்டாட்சியர் அலுவலகம்மூலம் வழங்கப்படும்.

(ஆ) வினா எழவில்லை.

2013 அக்டோபர் 28]

15—

நிரந்தரப் பணி

வினா எண் 12888—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உயர் கல்வி மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் குறைந்த ஊதியத்தில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு நிரந்தரப் பணியும், அரசு ஊதியமும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

சுயநிதிக் கல்லூரிகள் துவங்க அரசு அனுமதித்து ஆணை வழங்கும்போது மானியம் வழங்க இயலாது என்ற நிபந்தனையுடன் அனுமதி வழங்கப்படுகிறது. எனவே, சுயநிதிக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு நிரந்தரப் பணி மற்றும் அரசு ஊதியம் வழங்குவது என்பது அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டதாகும். இருப்பினும், இதுகுறித்து கோரிக்கைகள் பெறப்படும்போது, தகுதியின் அடிப்படையில், உரிய விதிகளுக்குட்பட்டு ஆய்வு செய்யப்படும்.

16—

விவசாயக் கிடங்கிற்குக் கட்டடம்

வினா எண் 14411—திருமதி ம. சக்தி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருவெண்காடு, காரைமேடு மற்றும் வைத்தீஸ்வரன்கோவில் பகுதிகளிலுள்ள விவசாயக் கிடங்கிற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) சீர்காழி தொகுதி, திருவெண்காடு, காரைமேடு மற்றும் வைத்தீஸ்வரன்கோவில் பகுதிகளிலுள்ள விவசாயக் கிடங்கிற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

17—

நவீனக் கிடங்கு

வினா எண் 17350—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியிலிருந்து 50 நவீனக் கிடங்குகள் கட்டும் பணியினை விரைந்து முடிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியிலிருந்து 50 நவீனக் கிட்டங்கிகளைக் கட்டுவதற்கு அரசாணை நிலை எண் 224, வேளாண்மை (நீமே-2) துறை, நாள் 28-11-2011-ன் படி அனுமதிக்கப்பட்டது. தற்போது கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

18—

புதுப்பித்தல்

வினா எண் 21053—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2013 அக்டோபர் 28]

(அ) சங்ககிரி தொகுதி, மகுடஞ்சாவடி வட்டார வேளாண் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) சங்ககிரி தொகுதி, மகுடஞ்சாவடி, வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் மிகவும் பழைய கட்டடம் என்பதால், அவ்வலுவலகத்தைப் புதுப்பிக்க இயலாது.

(ஆ) வினா எழவில்லை.

19—

உழவர் சந்தை

வினா எண் 24972—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் பேரூராட்சியில் உழவர் சந்தை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் பேரூராட்சியில் உழவர் சந்தை அமைத்திடுவது தொடர்பாக திட்டம் ஏதுமில்லை.

புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கி, ஆலங்குடி, கந்தர்வக்கோட்டை, கரம்பக்குடி, விராலிமலை ஆகிய ஐந்து இடங்களில் விவசாயிகள் மற்றும் நுகர்வோரின் பயன்பாட்டிற்காக உழவர் சந்தைகள் இயங்கி வருகின்றன. விராலிமலை உழவர் சந்தையிலிருந்து அன்னவாசல் பேரூராட்சி 23 கி.மீ. தொலைவில் உள்ளதால், விராலிமலை உழவர் சந்தையினை அன்னவாசல் விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

(ஆ) வினா எழவில்லை.

[2013 அக்டோபர் 28

20—

திசுவாழை சாகுபடி

வினா எண் 27135—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் திசுவாழை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அரசு உதவி செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பரீட்சார்த்த முறையில் 2010-2011 மற்றும் 2011-2012 ஆம் ஆண்டுகளில் திசுவாழை சாகுபடிக்கு நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, முன்னோடி விவசாயிகளுக்கு மானியத்தில் திசுவாழைக் கன்றுகள் வழங்கப்பட்டன. பொதுவாக, மேற்படி வட்டாரத்தில் சொட்டு நீர்ப்பாசனத்தில் திசுவாழைக் கன்றுகள் நடப்பட்டதில், சாதாரண நாட்டு உயர் விளைச்சல் இரகங்களைவிட மகசூல் குறைவாகவும், இலைகள்மூலமாக வருவாய் இல்லாததாலும், விவசாயிகள் ஏற்கெனவே சாகுபடி செய்த உயர் விளைச்சல் இரகங்களில் (மொந்தன், ரஸ்தாளி, பூவன் மற்றும் இதர இரகங்கள்) வருவாய் அதிகமாகக் கிடைப்பதால், விவசாயிகள் திசுவாழை சாகுபடியில் முனைப்பு காட்டுவதில்லை. மேலும், திசுவாழை சாகுபடிக்கு மானாமதுரை வட்டாரத்தின் தட்பவெப்ப நிலை உகந்ததாக இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

21—

விவசாயத் தொழிலைப் பயிற்றுவித்தல்

வினா எண் 28773—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழில் பயிற்சி மையங்கள் மற்றும் பொறியியல் கல்லூரிகள்மூலமாக நிலம் உழுதல், பயிரிடுதல், களை எடுத்தல்

2013 அக்டோபர் 28]

போன்ற விவசாயத் தொழிலைப் பயிற்றுவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நிலம் உழுதல், பயிரிடுதல், களை எடுத்தல் போன்ற வேளாண்மைத் தொழில்களைப் பயிற்றுவிக்கும் பணியில் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையங்கள் ஈடுபட்டு வருகின்றன. பயிற்சிகள் மற்றும் வேளாண்மை உற்பத்தியை அதிகரிப்பதற்கான தொழில்நுட்ப உத்திகள் தேவைப்படும் விவசாயிகள், அந்தந்த மாவட்டங்களிலுள்ள வேளாண்மை அறிவியல் நிலையங்களின் திட்ட ஒருங்கிணைப்பாளர்களை அணுகி பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ளலாம். ஆகையால், தொழில் பயிற்சி மையங்கள் மற்றும் பொறியியல் கல்லூரிகள் மூலமாக நிலம் உழுதல், பயிரிடுதல், களை எடுத்தல் போன்ற விவசாயத் தொழிலைப் பயிற்றுவிக்க அவசியம் எழவில்லை.

22—

கட்டடம்

வினா எண் 24705—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், இடைப்பட்டி ஊராட்சி, கூவாட்டுப்பட்டி நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், இடைப்பட்டி ஊராட்சி, கூவாட்டுப்பட்டியில் நியாய விலைக் கடை எதுவும் செயல்படவில்லை. எனவே, நியாய விலைக் கடை

[2013 அக்டோபர் 28

இல்லாத கூவாட்டுப்பட்டி கிராமத்தில் கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை.

23—

கட்டடத்தைப் பழுது நீக்குதல்

வினா எண் 24802—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், கட்டக்குடி ஊராட்சி, கட்டக்குடி நியாய விலைக் கட்டடத்தை பழுதுநீக்கி பராமரிப்பு செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியம், மலைக்குடிப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கக் கட்டுப்பாட்டில் செயல்படும் HP 116 கட்டக்குடி முழுநேர அங்காடி (மொத்த குடும்ப அட்டைகள் 345) தற்போது அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அக்கட்டடத்தின் தரை தளத்தின் முன்பகுதி தோற்றம் பழுதடைந்திருந்தது. தற்போது பழுது நீக்கி சீர் செய்யப்பட்டுள்ளது.

24—

நிபந்தனை தளர்த்துதல்

வினா எண் 13165—திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தனியார் ஒதுக்குக்காடு சட்டம், 1949-ன்படி விற்பனை உள்ளிட்ட பரிவர்த்தனைக்கு விதிக்கப்பட்ட நிபந்தனையைத் தளர்த்தும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தனியார் காடுகளில் பெருமளவில் முறையின்றி மரங்கள் வெட்டப்படுவதைத் தடுக்கவும், சூழலியல் சமன்பாட்டினைப் பாதுகாக்கவும் 1949 தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டு, கன்னியாகுமரி மாவட்டத்தில் 1979 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இயற்கையாக வளர்ந்த மரங்களைக் கொண்ட பல தனியார் காடுகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் உண்டு. வனத்தைப்போல் தோற்றமளிக்கும் இயற்கையாக வளர்ந்த மரங்களைக் கொண்ட 2 எக்டேர் பரப்பளவுக்கு மேற்பட்ட தொடர்ச்சியான இடங்கள் இந்தச் சட்டத்தின்மூலம் தனியார் காடுகளாக அறிவிக்கப்பட்டன. இந்த வகையான இடங்களைக் கண்டறிந்து அறிவிப்பு செய்ய மாவட்ட ஆட்சியர் தலைமையிலான ஒரு குழுவும் உருவாக்கப்பட்டது.

இந்தச் சட்டத்தின் பிரிவு 3-ன்படி, எந்த நில உரிமையாளரும் தனது நிலத்தினை மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் உள்ள மாவட்டக் குழுவின் முன்னனுமதியின்றி விற்பதோ, அடமானம் வைப்பதோ செல்லத்தக்கதல்ல. மேற்படி சட்டத்திற்குப் புறம்பாக பல நபர்கள் மாவட்டக் குழுவின் முன் அனுமதி பெறாமல் தனியார் வன நிலங்களை விற்றும், வாங்கியும் உள்ளனர். இவ்வகை செயல்களை முறைப்படுத்த, தனியார் வன நிலங்களை வாங்கியவர்களுக்கு வழிவகை செய்ய தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம் 1949-க்கு திருத்தம் மேற்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு, கடந்த 2011 ஆம் ஆண்டு மேதகு குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. மேற்கண்ட சட்டமுன்வடிவுக்கு மேதகு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன், அதன்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், தமிழ்நாடு தனியார் வனச் சட்டம் 1949-ல் எழக்கூடிய பிரச்சினைகளை ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை தர உயர்நிலைக் குழு ஒன்று அரசாணை (டி) எண் 322, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 3-9-2012-ல் அமைக்கப்பட்டுள்ளது. அக்குழு அளிக்கும் பரிந்துரைகளின் அடிப்படையிலும் இதுகுறித்து அரசு ஆராய்ந்து முடிவு எடுக்கும்.

[2013 அக்டோபர் 28

25—

சாலை வசதி

வினா எண் 17419—திரு. ஒ.கே. சின்னராஜ்: மாண்புமிகு வனத் துறை அவர்கள் அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, தோலம்பாளையம் கோபனாரி சாலையில் வனத் துறைக்குச் சொந்தமான 4 கி.மீ. சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, தோலாம்பாளையம் கோபனாரி சாலையில் வனத் துறைக்குச் சொந்தமான 4.12 கி.மீ. சாலையைச் சீரமைக்க (கி.மீ. 5/940 முதல் 10/060) பகுதி 1 திட்டம் சேராதது திட்டத்தின்கீழ் ரூ.73.00 இலட்சம் தொகையானது அரசாணை எண் 307, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வ.10) துறை, நாள் 23-08-2012-ல் ஒப்புதல் பெறப்பட்டு, மேற்படி சாலையைச் சீரமைக்கும் பணி திருச்சி வனப் பொறியியல் கோட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு, 2012-2013 ஆம் நிதியாண்டில் இப்பணியை முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

26—

மரங்களை ஏலம் விடல்

வினா எண் 22649—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக வனப் பகுதிகளில் இயற்கையாகக் கீழே விழும் விலையுயர்ந்த மரங்களை ஏலம் விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

தமிழக வனப் பகுதிகளில், வனவிலங்கு சரணாலயம் மற்றும் வன உயிரின பூங்காக்களில் இயற்கையாகக் கீழே விழும்

2013 அக்டோபர் 28]

விலையுயர்ந்த மரங்கள் அப்படியே விடப்படுகின்றன. அவற்றை அகற்றுவது மற்றும் விற்பனை செய்வது இல்லை. அவை மக்கி எருவாக மாற ஸ்தலத்திலேயே விடப்படுகின்றன. மேலும், காப்புக் காடுகளில் இயற்கையாகக் கீழே விழும் பட்டுப்போன இறந்த மற்றும் அபாயகரமான மரங்களை (Decayed/Dead and dangerous trees) சேகரம் செய்து, அவற்றை படிவம் 5-ல் கொண்டு வந்து, அவற்றுக்கான விலை நிர்ணயம் செய்யப்பட்டு அவற்றை பொது ஏலம்மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

27—

சந்தன எண்ணெய் தொழிற்சாலை

வினா எண் 23335—திரு. கோவி. சம்பத்குமார்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி தொகுதி, தெக்குப்பட்டு பகுதியில் சந்தன எண்ணெய் தொழிற்சாலையை மீண்டும் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

சந்தன மரக்கட்டைகள் வனத் துறையிடமிருந்து கொள்முதல் செய்தல் மற்றும் அரசுக்கு ஏற்படும் இலாபம் போன்றவற்றைக் கருத்தில்கொண்டு, இத்தொழிற்சாலை மீண்டும் செயல்பட வாய்ப்பில்லை.

28—

புதிய குடும்ப அட்டை

வினா எண் 2599—திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகங்கை மாவட்டத்தில் புதிய குடும்ப அட்டை விரைந்து கிடைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

புதிய குடும்ப அட்டை கோரும் மனுக்கள் மீது தாமதமின்றி களப்பணியாளர்களால் 100% விசாரணை செய்து பரிந்துரை செய்யப்படும் விண்ணப்பங்கள் உரிய ஆவணங்களுடன் மாவட்ட வழங்கல் அலுவலருக்கு அனுப்பப்படுகின்றன. புதிய குடும்ப அட்டை வழங்குமாறு கோரும் விண்ணப்பங்களில் குடும்ப அட்டை பெறத் தகுதியுள்ளவர்களுக்கு விரைவில் புதிய குடும்ப அட்டைகள் வழங்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உண்மையான குடும்பங்களுக்கு சிரமமின்றி குடும்ப அட்டைகள் கிடைக்கப்பெறும்பொருட்டு, சம்பந்தப்பட்ட அனைத்துப் பணியாளர்களும் பணியாற்ற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

29—

சூரியசக்தி விளக்குகள்

வினா எண் 22404—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சூரியசக்தி விளக்குகள் மற்றும் ஆவின்பால் ஆகியவற்றை நியாய விலைக் கடைகள் மூலமாக வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

பெரும்பாலான நியாய விலைக் கடைகள் சிறிய பரப்பளவு கொண்ட இடத்திலேயே இயங்கி வருகின்றன. இவற்றில் பொது விநியோகத் திட்டம்/சிறப்பு பொது விநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருட்களை இருப்பு வைத்தால் இட நெருக்கடி ஏற்படும் என்பதால் சூரியசக்தி விளக்குகள் மற்றும் ஆவின்பால் ஆகியவற்றை விற்பனை செய்வது மிகுந்த சிரமம் ஆகும்.

2013 அக்டோபர் 28]

30—

குடும்ப அட்டை

வினா எண் 27501—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்ட வழங்கல் அலுவலகத்தில் குடும்ப அட்டைக்காக விண்ணப்பித்தவர்களுக்கு விரைவில் குடும்ப அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்ட வழங்கல் அலுவலகத்தில் குடும்ப அட்டைக்காக விண்ணப்பித்த தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு விரைவில் குடும்ப அட்டை வழங்கப்படும்.

31—

கழிவுநீரை வெளியேற்றுதல்

வினா எண் 10281—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் பூஜ்ய அளவிலான கழிவுநீரை வெளியேற்றும் வகையில் பல்வேறு வழிகளை ஆராய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூரில் உள்ள சலவை மற்றும் சாயப்பட்டறைகள் வெளியேற்றும் கழிவுநீரை உரிய தொழில்நுட்பமான எதிர்மறை சவ்வூடு பரவல் மற்றும் அடர்கசடு மேலாண்மை உத்திகளைப் பயன்படுத்தி அமைக்கப்படும் சுத்திகரிப்பு

[2013 அக்டோபர் 28

அமைப்பின்மூலம், சுத்திகரிக்கப்பட்ட நீரை மறுசுழற்சி செய்தும், பிரித்தெடுக்கப்பட்ட உப்பினை மறு பயன்பாடு செய்தும், கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்ய நிலை அடைவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 28-7-2011 அன்று திருப்பூர் சாயப்பட்டறைகள் உரிமையாளர்களின் சங்கப் பிரதிநிதிகளுடன் நடத்திய கூட்டத்தின் முடிவில், அரசு ரூ.200 கோடியை வட்டியில்லாத கடனாக, 20 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் அவற்றின் 502 உறுப்பினர்கள் பயன்பெறும்விதமாக, தலா ரூ.10 கோடி வீதம் வழங்குவது என முடிவெடுக்கப்பட்டது. இதற்காக, இருவேறு தொழில்நுட்பங்கள் தேர்வு செய்யப்பட்டன. அவற்றில் (1) தமிழ்நாடு வாட்டர் இன்வஸ்மென்ட் கார்ப்பரேஷன் லிமிடெட் (TWICL) நிறுவனம் உத்தேசித்துள்ள பிரைன் சொலுசன் தொழில்நுட்பம் (Brine Solution) மற்றும் (2) குஜராத் மாநிலம், பரூச் என்ற இடத்திலுள்ள தஹேஜ் பிர்லா சென்சூரி மில்ஸ் சாயப்பட்டறை நிறுவியுள்ள நானோ தொழில்நுட்பம் ஆகிய இரண்டில் ஏதேனும் ஒன்றை நிறுவி, கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்ய நிலையை அடைவதற்காக நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது. தமிழ்நாடு மாசுக் கட்டுபாடு வாரியம், அருள்புரம், அங்கேரிபாளையம், வீரபாண்டி, பார்க், இராயபுரம், சின்னக்கரை, கள்ளிக்காடு, மன்னரை, காசிபாளையம், திருப்பூர் முருகம்பாளையம், ஆண்டிபாளையம், குன்னன் கல்பாளையம், ஈஸ்டன், சிறுபுஞ்சவப்பட்டி மற்றும் கரைபுதூர் ஆகிய 15 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் உறுப்பினர்களாக உள்ள 412 உறுப்பினர் சலவை மற்றும் சாயப்பட்டறைகளை தற்போது உள்ள கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்ய நிலை அடைவதற்கான அமைப்பினை, அதிகபட்சமாக 30 முதல் 70 சதவீதம் வரையிலான கொள்ளளவில் இயக்கி, மேற்கூறிய தொழில்நுட்பத்தினை இத்தகைய அளவில் இயக்கி, அதனை நிரூபிக்க முன்னோட்டம் செய்ய அனுமதியளித்துள்ளது.

தமிழ்நாடு மாசுக் கட்டுபாடு வாரியத்தால் நியமிக்கப்பட்ட அலுவலர்கள், மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட கண்காணிப்புக் குழுவுடன், கூட்டாக கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்ய நிலை அடைவதற்கான அமைப்பினை நிறுவியுள்ள தனியார் சலவை மற்றும் சாயப்பட்டறைகளை ஆய்வு மேற்கொண்டனர். இக்குழுவின் பரிந்துரையின்படி, 51 தனியார் தொழிற்சாலைகள், வாரியத்தால் இயங்க அனுமதியளிக்கப்பட்டுள்ளன. மேலும், வாரியமானது மாண்புமிகு

2013 அக்டோபர் 28]

சென்னை உயர் நீதிமன்றம் 28-1-2011 அன்று வழங்கிய உத்தரவினை மீறி செயல்பட்ட 201 தொழிற்சாலைகளில், 177 தொழிற்சாலைகளுக்கு சீல் வைத்து மூட, திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உத்தரவிட்டது. இதுவரை 113 தொழிற்சாலைகளை மாவட்ட ஆட்சியர் சீல் வைத்து மூடியுள்ளார்.

நொய்யல் ஆற்றை 2-10-2011-ல் ஆய்வு செய்யும் போது, கரையின் இருபுறங்களிலிருந்து எடுக்கப்பட்ட நீர் மாதிரிகளில், அதிகளவிலான மொத்த கரைந்துள்ள திடப் பொருள்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டது. இதன் அடிப்படையில், நிலத்தடி நீர்க் கசிவு அல்லது நீர் நொய்யலாற்றைச் சென்றடைவது போன்ற காரணங்களால் நொய்யலாற்று நீரில் அதிகளவிலான மொத்த கரைந்துள்ள திடப்பொருட்கள் இருக்க வாய்ப்பு இருக்கிறது. மேலும், ஆற்று நீர் மாதிரிகள் நொய்யலாற்றின் மேல் புறத்திலிருந்து கீழ்ப் புறம் வரையில் அதாவது (1) அக்ரகாரபுதூர் (2) காசிபாளையம் (3) அணைபாளையம் மற்றும் (4) ஓரத்துப்பாளையம் அணை பகுதியில் மாதந்தோறும் எடுக்கப்பட்டு, பகுப்பாய்வின்படி ஆற்று நீரில் கரைந்துள்ள மொத்த திடப்பொருட்களின் அளவு 2100 மி.கி/லி. விட அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டது. சாயப்பட்டறைகளை ஜனவரி 2011-ல் மூடும்பொழுது ஓரத்துப்பாளையம் அணையில் 5660 மிகி/லி. அளவிலிருந்து, தற்பொழுது 1990-2508 மி.கி/லி. என்ற அளவில் உள்ளது.

காளிங்கராயன் மற்றும் நொய்யல் ஆறு ஆகியவற்றின் நீரின் தன்மையினை தொடர்ச்சியாகக் கண்காணிக்கும் பொருட்டு, ரூ. 50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் அரசானது, நொய்யல் ஆற்றில் சட்டத்திற்குப் புறம்பாக சுத்திகரிக்கப்படாத கழிவுநீரை வெளியேற்ற பயன்படுத்தப்பட்ட மண்ணில் புதைக்கப்பட்ட குழாய்கள் ஏதேனும் இருப்பின், அவற்றைக் கண்டறியவும் மற்றும் அகற்றிடவும் நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய நடவடிக்கைகள்மூலம் திருப்பூரில் பூஜ்ய அளவிலான கழிவுநீரை வெளியேற்ற அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

32—

ஆய்வு மாளிகை

வினா எண் 9306—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் பொதுப் பணித் துறை ஆய்வு மாளிகை கட்டும் பணியின் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் பொதுப் பணித் துறை மூலமாக ஆய்வு மாளிகை கட்டும் பணிகள் அனைத்தும் முழுமையாக நிறைவேற்றப்பட்டு முடிக்கப்பட்டன.

33—

தரைத்தளத்தைச் சீரமைத்தல்

வினா எண் 9351—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நபார்டு கடன் உதவித் திட்டம் மூலம் மதுரை மாவட்டம், விரகனூர் மதகின் தடுப்பு தரைத்தளத்தைச் சீரமைக்கும் பணியின் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், விரகனூர் மதகின் தடுப்பு தரைத்தளத்தைச் சீரமைக்கும் பணியானது ரூபாய் 5.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, அனைத்துப் பணிகளும் செய்து முடிக்கப்பட்டுவிட்டன.

34—

நீர் ஆதாரம்

வினா எண் 13989—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி/விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டம், வெள்ளாம்பட்டி நதியில் நீர் ஆதார அமைப்புகளை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

வல்லம்பட்டி ஓடை உபவடிநிலத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் உள்ள மையப்பாறை கண்மாய் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் உள்ள குகன்பாறை, சிப்பிப்பாறை, கோமபங்கிபுரம் மற்றும் வல்லம்பட்டி கண்மாய் ஆகிய நான்கு கண்மாய்களின் பாசனப் பரப்பு நிலங்களுக்குப் பாசன வசதியினை மேம்படுத்த நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ், ரூ.110.65 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் பெறப்பட்டு, இத்திட்டப் பணி 26-2-2011 அன்று துவங்கப்பட்டு, அனைத்துப் பணிகளும் முழுமையாக முடிக்கப்பட்டுவிட்டன.

35—

காணல் ஓடை

வினா எண் 14013—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர், சிவகங்கை மற்றும் மதுரை மாவட்டங்கள், காணல் ஓடை நதியில் நீர் ஆதார அமைப்புகளை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர், சிவகங்கை மற்றும் மதுரை மாவட்டங்களில், உலக வங்கி கடனுதவியுடன், நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ் காணல் ஓடை உபவடிநிலப் பகுதிகளில் உள்ள அணைக்கட்டுகள், கண்மாய்கள் மற்றும் வரத்துக் கால்வாய்கள் ஆகியவற்றின் புனரமைப்புப் பணிகள் மூன்று தொகுப்புகளாக ரூபாய் 889.09 இலட்சம் மதிப்பீட்டில், 2010-2011-ம் ஆண்டில்

[2013 அக்டோபர் 28

துவங்கப்பட்டு, தொகுப்பு-1 மற்றும் தொகுப்பு-2-ல் உள்ள பணிகளில் 60% முடிவுபெற்றுள்ளன. தொகுப்பு-3-ல் உள்ள பணிகள் முழுமையாக முடிவு பெற்றுள்ளன.

36—

நீர் நிலைகளை மேம்படுத்துதல்

வினா எண் 16420—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீர் நிலைகளை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் நீர் நிலைகளை மேம்படுத்துவதற்கு அரசு பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:

1. நீர்வள, நிலவளத் திட்டம்

தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டம் உலக வங்கியின் நிதி உதவியுடன் ரூ.2,547 கோடி மதிப்பீட்டில் 2007 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை, ஆறு ஆண்டு காலத்தில் 6.69 இலட்சம் எக்டேர் பாசனப் பரப்பு பயன்பெறும் வகையில், 61 உபவடி நிலங்களில் ரூ. 1,785.62 கோடி மதிப்பீட்டில், ஏரிகள், வரத்துக் கால்வாய்கள், அணைக்கட்டுகள் ஆகியவற்றைப் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதல் மற்றும் இரண்டாம் கட்டப் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன. மூன்றாம் கட்டத்தில் 15 உபவடி நிலங்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மூன்றாம் மற்றும் நான்காம் கட்டங்களில் மீதமுள்ள 21 உபவடி நிலங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2011-2012 ஆம் நிதி ஆண்டில் 315 ஏரிகள், 70 அணைக்கட்டுகள் மற்றும் 726.19 கி.மீ. நீளம் வரத்துக் கால்வாய்களில் புனரமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2012-2013 ஆம் நிதி ஆண்டில் 757 ஏரிகள், 132 அணைக்கட்டுகள் மற்றும் 1,331.14 கி.மீ நீளமுள்ள வரத்துக் கால்வாய்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

2013 அக்டோபர் 28]

2. நபார்டு நிதியுதவித் திட்டங்கள்

ஆறுகளில் வெள்ளத் தடுப்புப் பணிகள், ஏரிகள், அணைக்கட்டுகள் மற்றும் வரத்துக் வாய்க்கால்களைப் புனரமைத்தல், புதிய ஏரிகளை அமைத்தல், புதிய அணைக்கட்டுகள் கட்டுதல் போன்ற திட்டங்கள் ஆர்.ஐ.டி.எப். XIII, XV, XVI மற்றும் XVII-ன்கீழ் நடைபெற்று வருகின்றன. இத்திட்டங்களின்கீழ் ரூ. 760.49 கோடி மதிப்பிலான 97 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 66 திட்டங்கள் முடிவுற்றும், 31 திட்டங்கள் நடைபெற்றும் வருகின்றன. நபார்டு வங்கி 2012-2013 ஆம் ஆண்டில் ஆர்.ஐ.டி.எப். XIII-ல் ரூ. 164.92 கோடி மதிப்பிலான 9 திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

3. மாநில நிதிப் பணிகள்

மாநில நிதி உதவியின்கீழ் ரூ. 507.01 கோடி மதிப்பிலான பாசனத் திட்டங்களும், நீர் நிலைகளைப் புனரமைப்பு செய்யும் பணிகளும் செயலாக்கத்தில் உள்ளன. இவற்றுள் திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள சமமட்டக் கால்வாயின் தொலைகல் எல்.எஸ். 0/000 கி.மீ முதல் 49/300 கி.மீ. வரை ரூ. 184.50 கோடி மதிப்பில் புனரமைத்தல், ரூ. 18 கோடி மதிப்பில் இராமநாதபுரம் மாவட்டத்தில் கஞ்சம்பட்டி ஓடையிலிருந்து வெள்ள நீர்க் கால்வாய் அமைத்தல், சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கும் சோழவரம், செங்குன்றம், பூண்டி மற்றும் செம்பரம்பாக்கம் ஏரிகளின் கொள்ளளவினை ரூ. 19.22 கோடி மதிப்பில் அதிகரித்தல் ஆகிய பணிகள் மாநில நிதிமூலம் செயல்படுத்தப்படும் சில முக்கிய திட்டங்களாகும்.

4. 13–வது நிதிக் குழுவின் மானிய நிதியுதவித் திட்டம் (2011–2012 முதல் 2014–2015 வரை)

மத்திய அரசால் அமைக்கப்பட்ட 13 ஆவது நிதிக் குழு 2011-2012 முதல் 2014-2015 வரையிலான நான்காண்டு காலங்களில் 674 மரபு சார்ந்த நீர்நிலைகளைப் புனரமைக்கும் பணிகளை ரூ. 200.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்புதல் அளித்தது. 2011-2012 ஆம் ஆண்டில் (முதற்கட்டம்), 163 பணிகளை ரூ. 50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நிதி ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதில் 88 பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2013 அக்டோபர் 28

மேலும், 2012-2013 முதல் 2014-2015 வரை 511 மரபுசார்ந்த நீர் நிலைகளில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

5. அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் (DRIP)

நாட்டின் நீர்நிலைகளில் மிக முக்கிய அணைகளைப் புனரமைக்க அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் உலக வங்கியின் நிதியுதவியுடன் 2012-2013 ஆம் ஆண்டு முதல் 6 ஆண்டுகளில், 4 கட்டங்களில், 104 அணைகளைப் புனரமைக்க, ரு. 745.49 கோடி மதிப்பீட்டில் செயலாக்கப்படவுள்ளது. இதில் 66 நீர்வள ஆதாரத் துறை அணைகள் ரூ. 469.94 கோடி மதிப்பில் புனரமைக்கப்படவுள்ளன. முதற்கட்டத்தில், 20 நீர்வள ஆதாரத் துறை அணைகள் ரூ. 103.27 கோடி மதிப்பில் புனரமைக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தினை செயல்படுத்த ஏதுவாக, மாநில திட்ட மேலாண்மைப் பிரிவை நிறுவ, அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

37—

பாலத்தில் வாகனங்கள் செல்ல வசதி

வினா எண் 17960—திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், வடமலைக்குறிச்சி சாலை மற்றும் கலைஞர் நகருக்கு நடுவே உள்ள பாலத்தின் கீழே இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகனங்கள் செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், வடமலைக்குறிச்சி சாலையிலிருந்து கலைஞர் நகருக்கு செல்ல நான்கு வழிச்சாலையில் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலத்தின்கீழ் ஓடும் சத்திரரெட்டியபட்டி கண்மாயின் உபரி

2013 அக்டோபர் 28]

நீர் கால்வாயின்மேல் தற்காலிகமாக கிராவல் சாலை அமைக்கப்பட்டு, இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகனங்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. வெள்ளக் காலங்கள் மற்றும் சத்திரரெட்டியபட்டி கண்மாயிலிருந்து உபரி நீர் தொடர்ச்சியாக வெளியேறும் காலங்களில் பாலத்தின்கீழ் உள்ள சாலையின் வழியாக வாகனங்கள் செல்ல சாத்தியம் இல்லை. மேலும், நீர்நிலைப் புறம்போக்குகளை வேறு காரணத்திற்குப் பயன்படுத்தக் கூடாது என்ற அரசு மற்றும் நீதிமன்ற உத்தரவுகளின்படி, பாலத்தின்கீழே இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகனங்கள் செல்ல வழிவகை செய்ய இயலாது.

38—

தடுப்பணை

வினா எண் 19703—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, நல்லூர் பேரூராட்சி, சென்னித் தோட்டம் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு தொகுதி, நல்லூர் பேரூராட்சி, சென்னித்தோட்டம் அருகே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட உத்தேசிக்கப்பட்ட இடத்திலிருந்து சுமார் 2 கி.மீ. தூரத்தில் குழித்துறை சப்பாத்தில் தடுப்பணை கட்ட ரூ. 645 இலட்சங்களுக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பரிசீலனையில் உள்ளது. குழித்துறை சப்பாத்தி தடுப்பணைமூலம் சென்னித் தோட்டம் பகுதிகளுக்கு நிலத்தடி நீர் உயர்ந்து பயன்பெறும் நிலையில் மேற்படி தளத்தில் புதிய தடுப்பணை கட்டும் அவசியம் எழவில்லை.

[2013 அக்டோபர் 28

39—

தடுப்பணை

வினா எண் 19708—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, முல்லையாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு தொகுதி, முல்லையாற்றின் குறுக்கே பல்லிகூட்டத்தில் தடுப்பணை கட்ட அணை அமைத்து நெய்யாறு கால்வாயின் கிளை கால்வாயான முல்லையாறு கிளைக்கு திருப்பிவிடும் திட்டத்திற்கு ரூ. 26 கோடிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு பரிசீலனையில் உள்ளது.

40—

அணையைத் தூர் வாருதல்

வினா எண் 22396—திரு. ஜே.ஜி பிரின்ஸ்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை அணையைத் தூர் வாரும் பணியைத் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) உலக வங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் அணைகள் புனரமைப்புப் பணிகளுக்கான மதிப்பீட்டில்

2013 அக்டோபர் 28]

பேச்சிப்பாறை அணையினைத் தூர் வாரும் பணியும் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி புனரமைப்புப் பணிகளின் போது தூர் வாரும் பணியும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

41—

புதிய ரக மின்படகு

வினா எண் 22439—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளில் புதிய ரக மின்படகு இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அணைகள் மிகவும் பாதுகாப்பிற்குட்பட்ட பகுதிகளாகும். இவ்வணைகளில் பொதுப் பணித் துறையின்மூலம் புதிய ரக மின்படகு இயக்க திட்டம் ஏதும் இல்லை.

42—

நீர்க் கசிவினைச் சீர்செய்தல்

வினா எண் 24587—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், மாம்பழத்து அணையில் நீர்க் கசிவினைச் சீர்செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், மாம்பழத்து அணையில் இருந்த நீர்க் கசிவு தற்பொழுது சீர் செய்யப்பட்டுள்ளது.

[2013 அக்டோபர் 28

43—

உபரி நீர்

வினா எண் 25053—திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு ஒன்றியம், புலிக்கரை மற்றும் சுற்றுப்புற 14 ஏரிகளுக்கு சின்னாறு அணைமூலம் மழைக்கால உபரி நீரைக் கொண்டுவர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டத்தில் உள்ள எர்ணஹள்ளி ஏரி, புலிக்கரை ஏரி மற்றும் இதர 12 ஏரிகளுக்கு சின்னாற்றில் மழைக்காலங்களில் வரும் வெள்ள நீரை வழங்க ஜெர்தலாவ் கால்வாய் நெடுகை 5,000 மீட்டரிலிருந்து ஒரு வழங்கு கால்வாய் அமைக்கும் திட்டத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தற்போது பரிசீலனையில் உள்ளது.

44—

புதிய கட்டடம்

வினா எண் 3938—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, மருதம்பட்டி ஊராட்சி, மருதம்பட்டியிலுள்ள கால்நடை ஆய்வகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, மருதம்பட்டி ஊராட்சி, மருதம்பட்டி கால்நடை கிளை நிலைய கட்டடம் தற்போது வாடகையில்லா கட்டடத்தில் இயங்கி வருகிறது. கால்நடை கிளை நிலையம் கட்ட, இடம் ஒதுக்கீடு பெற்றவுடன் நிரந்தர கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

2013 அக்டோபர் 28]

45—

கூடுதல் கட்டடம்

வினா எண் 5376—திருமதி ஆர். சாந்தி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, எருமப்பட்டி ஒன்றியம், பழையபாளையம் கால்நடை மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேந்தமங்கலம் தொகுதி, எருமப்பட்டி ஒன்றியம், பழையபாளையம் கால்நடை கிளை நிலையம், பழையபாளையம் கிராம ஊராட்சியில் வாடகை இல்லா கட்டடத்தில் இயங்கி வந்தது. தற்போது தரம் உயர்த்தப்பட்டு கால்நடை மருந்தகமாக செயல்பட்டு வருகிறது. இந்நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்ட கால்நடை மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் நிறுவுதலும் மேம்படுத்துதலும் (ESVHD) திட்டத்தின் மூலம் 2012-2013 ஆம் ஆண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

46—

கட்டடம்

வினா எண் 9486—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, குடுமியான்மலை ஊராட்சி, குடுமியான்மலை கால்நடை மருத்துவமனைக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதியைச் சேர்ந்த குடுமியான்மலை, கால்நடை மருந்தகத்திற்கு புதிய கட்டடம் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (RIDF XVII) திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வருகிறது.

47—

வெறிநாய்க் கடி

வினா எண் 10479—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வெறிநாய்க் கடி நோயின் கடுமையான விளைவுகள் குறித்து போதிய விளம்பரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் இத்துறையின் கால்நடை மருந்தகங்கள் மற்றும் கால்நடை மருத்துவமனைகள்மூலம் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வெறிநாய் தடுப்பூசி மருந்து ரூ.34.4 இலட்சம் செலவில் 1,23,000 டோஸ் கால்நடைகளுக்கு போடப்பட்டு வருகிறது. மேலும், வெறிநாய்க் கடியினால் கால்நடைகளுக்கு ஏற்படும் நோயின் தாக்கம் மற்றும் கடுமையான விளைவுகள் குறித்த விளம்பரப் பலகைகள் தமிழகத்தில் உள்ள அனைத்து பன்முக மருத்துவமனைகளிலும் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. வெறிநாய்க் கடியினால் மனிதர்களுக்கு ஏற்படும் நோயின் தாக்கம் மற்றும் கடுமையான விளைவுகள் குறித்த விளம்பரம் ஏதும் இத்துறையின்மூலம் செய்யப்படுவதில்லை.

48—

மருந்து வழங்குதல்

வினா எண் 21576—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2013 அக்டோபர் 28]

(அ) விளவங்கோடு தொகுதியில் நடமாடும் கால்நடை நோய் கண்டறியும் ஆய்வகம் மலைப் பகுதிகளுக்குச் சென்று கால்நடை நோய் கண்டறிந்து மருந்து வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் இயங்கி வரும் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுமூலம் திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் நோய் கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையத்தின்மூலம் விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட கிராமங்கள், மலைப் பகுதிகள் மற்றும் அதனைச் சார்ந்த பகுதிகளுக்கும் நோயின் தன்மையைக் கண்டறிந்து அதற்கான சிகிச்சைப் பணி, சம்பந்தப்பட்ட கால்நடை மருந்தகம்மூலம் செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழாது.

49—

சுற்றுலாத் தலம்

வினா எண் 1959—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரில் சுற்றுலாத் தலங்கள் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகரில் உள்ள சீலநாயக்கன்பட்டி ஊத்துமலை முருகன் கோயிலில் பக்தர்கள் பயன்பாட்டிற்காக மூன்று சுனை நீர் கிணறுகள் ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ளன. மேலும் அங்கு ஏரி மேம்பாட்டிற்கு போதிய நீர் வசதி இல்லை. குரும்பம்பட்டி

[2013 அக்டோபர் 28

உயிரியல் பூங்கா மேம்பாட்டிற்காக வனத் துறைமூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சேலம்—ஆத்தூர் பிரதான சாலையில் உள்ள உடையார்பட்டி, கந்தாஸ்ரமம் தனியார் பராமரிப்பில் உள்ளதால், அங்கு பூங்கா அமைத்து பராமரிக்க இயலாத நிலை உள்ளது.

50—

கட்டமைப்பு வளர்ச்சி

வினா எண் 17668—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுற்றுலா மற்றும் புராதன நகர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் திருச்சி மாவட்டம், திருவெறும்பூர், திருநெல்வேலி மாவட்டம், பணங்குடி மற்றும் சேலம் மாவட்டம், சங்ககிரி ஆகிய பேரூராட்சிகளில் அடிப்படை கட்டமைப்பு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி முடிவடையும்?

விடை—

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், திருவெறும்பூர், திருநெல்வேலி மாவட்டம், பணகுடி மற்றும் சேலம் மாவட்டம், சங்ககிரி ஆகிய பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளுக்கான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், மாநில அரசு சுற்றுலாத் துறைமூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பின்வரும் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன:

(1) திருச்சி மாவட்டம், திருவெறும்பூரில் ரூ. 43,87,854/-ல் திருவெறும்பீஸ்வரர் திருக்கோயில் பகுதியில் சிமெண்ட் சாலை, அமரும் இருக்கைகள், பூங்கா, அலங்கார மின்விளக்கு வசதி ஆகிய பணிகள் செய்து முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

(2) சேலம் மாவட்டம், சங்ககிரி சென்னகேசவப் பெருமாள் திருக்கோயில் பகுதியில் ரூ. 55.00 இலட்சத்தில் அடிப்படை

2013 அக்டோபர் 28]

வசதிகளான மின்விளக்கு வசதி, சாலை வசதி, மழைநீர் வடிகால் அமைத்தல் ஆகிய பணிகள் செய்து முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

(3) திருநெல்வேலி மாவட்டம், பணகுடி பேரூராட்சி, குத்திரபாஞ்சான் அருவி பகுதியில் ரூ.111.25 இலட்சம் செலவில் அணுகு சாலை, கழிப்பிட வசதி, உடை மாற்றும் அறை, படித்துறை அமைத்தல் ஆகிய பணிகள் செய்து முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

51—

சுற்றுலாத் துறையை மேம்படுத்துதல்

வினா எண் 22403—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தி சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிக்க மாவட்டத் தலைநகரில் அலுவலகம் அமைக்கவும், முகவர்களை நியமித்து சுற்றுலாத் துறையை மேம்படுத்தவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகரமான நாகர்கோவில், கன்னியாகுமரியிலிருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. சர்வதேச சுற்றுலாத் தலமான கன்னியாகுமரிக்கு வருகைபுரியும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் நன்மைக்காக, கன்னியாகுமரியில் சுற்றுலா அலுவலகம் இயங்கி வருகின்றது. இந்த சுற்றுலா அலுவலகத்தின் மூலம், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆலோசனைப்படி, மாவட்டத்தில் உள்ள முக்கிய சுற்றுலா இடங்களை மேம்படுத்தும் பொருட்டு, திட்ட மதிப்பீடு மற்றும் கருத்துருக்கள் தயாரிக்கப்பட்டு, அரசுக்கு அனுப்பப்படுகின்றன. எனவே, கன்னியாகுமரியில் சுற்றுலா அலுவலகம் இயங்கிவரும் நிலையில், 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நாகர்கோவிலில் மேலும் ஒரு சுற்றுலா அலுவலகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும் சுற்றுலாத் துறைமூலம் முகவர்கள் நியமிக்கப்படுவதில்லை.

[2013 அக்டோபர் 28

52—

சுற்றுலாத் தலம்

வினா எண் 24645—திரு. மு. முருகன்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூர் தொகுதி, சித்தரங்குடி மற்றும் காஞ்சிரங்குளம் பறவைகள் சரணாலயத்தை சுற்றுலாத் தலமாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், சித்தரங்குடி பறவைகள் சரணாலயம் மேம்பாட்டிற்காக 2010-2011 ஆம் நிதியாண்டில், மாநில அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ், ரூ. 23.96 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டு, காட்சி விளக்க மையம், கண்காணிப்பு கோபுரம், அணுகுசாலை ஆகிய பணிகள் முடிக்கப்பட்டு, மேலும் தொலைநோக்கிக் கருவி, புகைப்படக் கருவி ஆகியவை வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

காஞ்சிரங்குளம் பறவைகள் சரணாலயத்தில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் கோரி பெறப்பட்டு அடுத்த நிதியாண்டில் பரிசீலிக்கப்படும்.

53—

சாதிச் சான்றிதழ்

வினா எண் 16806—திரு. சு. ரவி: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, தணிகைப் போளூர் இருளர் காலனியில் வாழும் பழங்குடியினருக்கு சாதிச் சான்றிதழ் உடனடியாக வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பழங்குடியின மக்களிடமிருந்து சாதிச் சான்று வழங்கக் கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் வருவாய் கோட்டாட்சியரின்மூலம் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அவர்களுக்கு 15 நாட்களுக்குள் பழங்குடியின சாதிச் சான்று வழங்குமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அரசால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அம்மக்களுக்கான சாதிச் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், பழங்குடியின மக்களுக்கான சாதிச் சான்றுகள் விரைவாக வழங்கிட அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் வருவாய்த் துறையின் கடிதம் எண் 45780/RA3 (2) 2012, நாள் 28-12-2012 மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

54—

இலவச வீடுகள்

வினா எண் 22055—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பட்டிணம்காத்தான் கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைக்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு இழப்பீடு வழங்க அரசு துரித நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டம், பட்டிணம்காத்தான் கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனை வழங்க கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு இழப்பீட்டுத் தொகை ரூ.22,08,571/- ஒப்பளிப்பு செய்து அரசாணை (ப) எண் 421, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (நி.எ-1) துறை, நாள் 26-09-2012-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

[2013 அக்டோபர் 28

55—

விட்டுமனைப் பட்டா

வினா எண் 22770–திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்ககிரி தொகுதியில் வீடுகள் இல்லாத ஆதி திராவிடர் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

சங்ககிரி தொகுதியில் வீடு இல்லாத ஆதி திராவிடர் இன மக்களைக் கண்டறிந்து அவர்களுக்கு நில எடுப்பு செய்து இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

56—

உதவித் தொகை

வினா எண் 27582—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 6 ஆம் வகுப்பு படிக்கும் 30,000/- ஆதி திராவிடர் பெண் குழந்தைகள் உதவித் தொகைத் திட்டத்தின் ஆண்டொன்றிற்கு ரூ. 12,000/- ,மாதம் ரூ. 1,000/- வீதம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (3ப) எண் 23, ஆதி (ம) பந. துறை நாள் 2-7-2010-ல் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகள் தொடர்ந்து கல்வி பயிலும் எண்ணத்தை ஊக்குவிக்கும் பொருட்டு 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை தொடர்ந்து கல்வி பயிலும், கல்வி நிலையில் பின்தங்கிய தருமபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், விருதுநகர், திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர்,

2013 அக்டோபர் 28]

பெரம்பலூர், கரூர், திருச்சி, நாகப்பட்டினம், சேலம், நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் பயிலும் கிராமப்புற ஆதி திராவிடர் மாணவியர்களுக்கும் மற்றும் பழங்குடியின மாணவிகளைப் பொறுத்தவரை சென்னையைத் தவிர அனைத்து மாவட்டங்களிலும் மாதம் ஒன்றிற்கு ரூ.50/- வீதம் அக்கல்வியாண்டின் பத்து மாதங்களுக்கான கல்வித் உதவித் தொகை அக்கல்வி ஆண்டு முடிவில் ரூ. 500/- என இத்திட்டத்திற்கு ரூ. 4.00 கோடியும் மற்றும் 6 ஆம் வகுப்பு முதல் தொடர்ந்து கல்வி பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு சென்னையைத் தவிர அனைத்து மாவட்டங்களிலும் மாணவியர் ஒருவருக்கு மாதம் ரூ. 100/- வீதம் அக்கல்வியாண்டின் பத்து மாதங்களுக்கான கல்வி உதவித் தொகை ரூ. 1,000/-ம் என இத்திட்டத்திற்கு ரூ. 4.00 கோடியும், ஆக மொத்தம் ரூ. 8.00 கோடி 2010-2011 ஆம் ஆண்டில் ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது. அரசாணை (3ப) எண் 40, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 25-08-2011-ல் தமிழகத்தில், சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களிலும் மூன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை தொடர்ந்து அனைத்துப் பள்ளிகளிலும் கல்வி பயிலும் (பொது பள்ளிகளையும் சேர்த்து) ஆதி திராவிடர்/பழங்குடியின மாணவிகளுக்கு ஒவ்வொரு ஆண்டு முடிவிலும், மாதம் ரூ. 50 வீதம் 10 மாதங்களுக்கு ரூ. 500/- என 4,76,688 மாணவிகளுக்கு ரூ. 2,383.44 இலட்சமும் (ரூ. 23.83 கோடி) மற்றும் ஆறாம் வகுப்பு கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ. 100/- வீதம் 10 மாதங்களுக்கு ரூ. 1,000/- என 1,61,664 மாணவிகளுக்கு ரூ. 1,616.64 இலட்சம் (ரூ. 16.17 கோடி) ஆக மொத்தம் ரூ. 4,000.08 இலட்சமும் (40.08 கோடி) ஊக்கத் தொகையாக ஆணையர் ஆதி திராவிடர் நலம் வழியாக வழங்கி அரசு ஆணைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

57—

உதவித் தொகை

வினா எண் 27588—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூய்மையற்ற தொழில் புரிவோர் குழந்தைகளுக்கு வழங்கும் உதவித் தொகையினை ஆண்டொன்றிற்கு ரூ. 50,000/-ஆக வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூய்மையற்ற தொழில் புரிவோர் குழந்தைகளுக்கான Pre Matric கல்வி உதவித் தொகை திட்டமானது மத்திய அரசினால் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தூய்மைப் பணிபுரிவோரின் குழந்தைகளுக்கு அவர்களது சாதி, மதம் மற்றும் பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பினைக் கணக்கில் கொள்ளாமல் உதவித் தொகை மற்றும் சிறப்பு மானியம் கீழ்வருமாறு வழங்கப்படுகிறது:

	உதவித் தொகை (ஒவ்வொரு மாதமும், 10 மாதங்களுக்கு)	சிறப்பு மானியம் (ஆண்டிற்கு)
விடுதியில் தங்காது கல்வி பயிலும் மாணவ/மாணவியர்க்கு	ரூ.110 (1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை)	ரூ.750
விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ/ மாணவியர்க்கு	ரூ.700 (3 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை)	ரூ.1,000

58—

போக்குவரத்து நெரிசலைத் தடுத்தல்

வினா எண் 9980—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடியில் போக்குவரத்து நெரிசலைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சட்டமன்றத் தொகுதி, இளையான்குடி நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தினமும் 8.00 மணி முதல் பகல் 13.00 மணி வரையிலும், மதியம் 14.00 மணி முதல் இரவு 21.00 மணி வரையிலும், தொடர்ந்து ஒரு சிறப்பு சார் ஆய்வாளர் மற்றும் இரண்டு காவலர்களை நியமித்து பொது மக்களுக்கு எவ்வித இடையூறின்றி போக்குவரத்து நடைபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், இளையான்குடி பேரூராட்சி எல்லைக்கு உட்பட்ட சாலைகள் அனைத்தும் குறுகலாகவும், அதிக வளைவுகளுடன் கூடியதாகவும் உள்ளதால் சுற்றுப் புற கிராமங்களில் இருந்து வரும் பொது மக்கள் அனைவரும் தாங்கள் வரும் இருசக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனங்களையும், வர்த்தக நிறுவனங்களுக்கு பொருட்களை ஏற்றி வரும் வாகனங்களையும் சாலையின் இருபுறமும் நிறுத்திவிட்டுச் செல்வதால், நகருக்குள் போக்குவரத்து இடையூறு ஏற்பட்டு வந்தது. தற்போது சரக்கு வாகனங்கள் மற்றும் நகருக்குள் தேவையற்று வரும் வாகனங்களைத் தவிர்க்கும் பொருட்டு, புறவழிச் சாலை அமைக்கப்பட்டு வாகனங்கள் நெரிசல் குறைக்கப்பட்டு தற்சமயம் சீரான போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

59—

நடவடிக்கை

வினா எண் 16431—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சி, மேல்கரையில் மாலை நேரம் சாலையில் இரு சக்கர வாகனங்களை நிறுத்துவோர்மீது நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை காவல் நிலைய சரகம், மானாமதுரை தொகுதி, மானாமதுரை மேல்கரை பேரூராட்சி அலுவலகம் முன்பு, போக்குவரத்துக்கு இடைஞ்சலாக மாலை நேரங்களில் இரு சக்கர வாகனங்களை நிறுத்துவோர் மீது, சட்டப்படியான வாகன மட்ட வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. மேலும், மேற்படி இடத்தில் வாகனங்களை நிறுத்தாமல் இருப்பதற்காக, "No Parking" பெயர் பலகை வைக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், மானாமதுரை, தேவர் சிலை முதல் பேரூராட்சி அலுவலகம் வரை காலை மற்றும் மாலை நேரங்களில் காவலர்களை ரோந்து அனுப்பி போக்குவரத்து ஒழுங்குபடுத்தப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

60—

இலவச பயண அட்டை

வினா எண் 17233—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி வார்டு உறுப்பினர்களுக்கு இலவச பயண அட்டை வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி வார்டு உறுப்பினர்களுக்கு, அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவச பயண அட்டை வழங்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2013 அக்டோபர் 28]

61—

நகரப் பேருந்து வசதி

வினா எண் 17966—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டையிலிருந்து குடிகாத்தான்பட்டி வழியாக காரைக்குடிக்கு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேவக்கோட்டையிலிருந்து குடிகாடு வழியாக காரைக்குடி வரை உள்ள வழித்தட தூரம் நகரப் பேருந்து இயக்குவதற்கு அனுமதிக்கப்பட்டதை விட கூடுதலாக இருப்பதால், இவ்வழித்தடத்தில் நகரப் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

62—

போக்குவரத்துக் காவலர்

வினா எண் 21701—திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பூர் தொகுதி, டாக்டர் அம்பேத்கர் கலைக் கல்லூரி எதிரில் சிக்னலை முறைப்படுத்தி நிரந்தரமாக போக்குவரத்துக் காவலரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி, வியாசர்பாடி போக்குவரத்து சரக எல்லைக்குட்பட்ட டாக்டர் அம்பேத்கர் கலைக் கல்லூரி எதிரில் உள்ள தானியங்கி கேபிள் பழுது

[2013 அக்டோபர் 28

சரிபார்க்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது. தற்போது மேம்பாலப் பணி நடைபெற்று வருவதால், வாகனங்கள் அதிகமாக வரும் நேரங்களில் எருக்கஞ்சேரி சாலையிலிருந்து எம்.கே.பி. நகர், சத்தியமூர்த்தி சாலை வழியாகத் திருப்பி விடப்படுவதால் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை சரிசெய்யும் பொருட்டு, சிறிது நேரம் தானியங்கி விளக்குகள் நிறுத்தி வைக்கப்பட்டு நெரிசல் குறைந்தவுடன் மீண்டும் இயக்கப்படுகின்றன.

மேற்கண்ட இடத்தில் காலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை இரண்டு போக்குவரத்துக் காவலர்கள் நியமிக்கப்பட்டு போக்குவரத்து சீர் செய்யப்பட்டு வருகிறது.

63—

பணிமனையில் அடிப்படை வசதி

வினா எண் 21720—திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி, மகாகவி பாரதியார் நகர் பணிமனையில் சாலை வசதி, மதில்சுவர், விளக்கு வசதிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெறப்பட்டால் பெரம்பூர் தொகுதி, மகாகவி பாரதியார் நகர் பணிமனையில் சாலை வசதி, மதில்சுவர், விளக்கு வசதிகள் செய்து தர உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

64—

இலவச பயணம்

வினா எண் 21852—திரு. சு. மாதேஸ்வரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

மருத்துவப் பரிசோதனைக்குச் செல்லும் மகப்பேறுற்ற பெண்கள் பேருந்தில் இலவசமாகப் பயணிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மருத்துவப் பரிசோதனைக்குச் செல்லும் மகப்பேறுற்ற பெண்கள், அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணிக்க வகை செய்யும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

65—

விபத்துகளைத் தவிர்த்தல்

வினா எண் 24010—திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி பெரிய கடை வீதியில் பெரியார் சிலையிலிருந்து பந்தலடி பகுதி வரை கனரக வாகனங்கள் செல்ல தடை விதித்து விபத்துகளைத் தவிர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி பெரிய கடை வீதியில் பெரியார் சிலையிலிருந்து பந்தலடி பகுதி வரை காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 09.00 மணி வரையிலும் கனரக வாகனங்கள் செல்லக்கூடாது என தடை விதித்து கீழ்க்கண்ட 5 இடங்களில் அறிவிப்புப் பலகை வைக்கப்பட்டுள்ளது:

1. வீரா ரெடிமேடு ஸ்டோர் வாசல்
2. தாமரைக்குளம் மேல் கரை
3. அரிசிக் கடை சந்து
4. கம்மாலத் தெரு
5. பந்தலடி

[2013 அக்டோபர் 28

மேற்கண்ட அறிவிப்புகளை மீறி செல்பவர்கள்மீது மோட்டார் வாகன சட்டத்தின்கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேற்கண்ட இடத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் வாகன விபத்து ஏதும் நடைபெறவில்லை.

66—

விலையில்லா பொருள்கள்

வினா எண் 29854—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுவதும் விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி ஆகியவற்றை அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 30-6-2011 அன்றைய நிலையில், அரிசிபெற தகுதியான குடும்ப அட்டை பெற்றுள்ள அனைத்துக் குடும்பங்களில் உள்ள மகளிருக்கு, தமிழகம் முழுவதும் விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி ஆகியவை வழங்க தமிழக அரசால் ஆவன செய்யப்பட்டுள்ளது. மேற்படி திட்டம் 3-6-2011 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிற அட்டைதாரர்களுக்கு வழங்கும் திட்டம் ஏதும் அரசின் கவனத்தில் இல்லை.

67—

தடுப்புச் சுவர்

வினா எண் 17708—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி, சாக்கோட்டை, தேவகோட்டை ஆகிய ஒன்றியங்களிலுள்ள கோயில் குளங்களைத்

2013 அக்டோபர் 28]

தூர் வாரி, முள்வேலி அமைத்து தடுப்புச் சுவர் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியத்தில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டிலுள்ள சிவகங்கை சமஸ்தானத்திற்குட்பட்ட திருக்கோயில்களில் திருக்குளங்கள் ஏதுமில்லை.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதிக்குட்பட்ட சாக்கோட்டை ஒன்றியம், திருத்தங்கூர், அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், தேவகோட்டை ஒன்றியம், அருள்மிகு சன்னவனசுவாமி திருக்கோயில் மற்றும் அமராவதிபுதூர், அருள்மிகு வந்தருளீஸ்வரர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்கள் சிவகங்கை சமஸ்தான நிருவாகத்திற்குட்பட்ட பரம்பரை அறங்காவலர்களால் நிருவகிக்கப்பட்டு வரப்பெறும் திருக்கோயில்களாகும். இத்திருக்கோயில்களின் திருக்குளங்கள் மட்டும் சீரமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. இக்குளங்களைச் செப்பனிட திருக்கோயில் நிருவாகத்தில் போதுமான நிதி வசதியில்லாததால், பொது மக்கள் மற்றும் அரசு நிதியுதவியுடன் சீரமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

68—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 10860—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், சங்கராமநல்லூர் (வடக்கு) மந்தை புறம்போக்கிலுள்ள காலி இடத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், சங்கராமநல்லூர் (வடக்கு) மடத்தூர் கிராமம், க.ச. 373/1, புலமானது கிராமக் கணக்குகளில் மந்தை என தாக்கலாகி உள்ளது. மேலும், மந்தைப் புறம்போக்கு போன்ற மேய்க்கால் இடங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு தடையாணை அமலில் இருப்பதால் பட்டா வழங்க இயலாது.

69—

பட்டா

வினா எண் 16369—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், கோதண்டராமபுரம் ஊராட்சி, குன்னக்குடிப்பட்டிக்கு பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோதண்டராமபுரம் ஊராட்சியில் குன்னக்குடிப்பட்டி (முருகராசுநகர்) புல எண் 1 திட்ட விஸ்தீரணம் எக்டேர் 127.97.5 ஏர்ஸ் மேஜர் இனாமாக இருப்பதால் அரசு விதிமுறைகளின்படி வீட்டுமனைப் பட்டா வழங்க வழியில்லை.

70—

சாதிச் சான்றிதழ்

வினா எண் 18221—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2013 அக்டோபர் 28]

(அ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், பாளைய ஏகாம்பரநல்லூரில் உள்ள கல் உடைக்கும் போயர் இன மக்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், அய்யம்பாளையம் மதுரா பாளைய ஏகாம்பரநல்லூரில் போயர் இனத்தைச் சேர்ந்தவர் எவரும் வசிக்கவில்லை. மேலும், சாதிச் சான்றிதழ் கோரி மனு ஏதும் செய்யவில்லை என ஆரணி வட்டாட்சியர் தெரிவித்துள்ளார். மேலும், மேற்படி கிராமத்தைச் சேர்ந்த கணேசன் மகன் சுப்பிரமணி மற்றும் 5 நபர்கள் குறவன் சாதிச் சான்று கோரி மனு செய்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் சொந்த ஊர் தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் மற்றும் கோயம்புத்தூர் ஆகும். இவர்கள் பிழைப்பைத் தேடி 25 வருடங்களுக்கு முன்பு பாளைய ஏகாம்பரநல்லூர் கிராமத்திற்கு வந்து கல் உடைக்கும் தொழில் செய்து வருகின்றனர். இந்த கிராமத்தில் மொத்தம் 11 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்களைத் தவிர வேறு யாரும் இல்லை. இவர்களுக்கு குறவன் சாதிச் சான்று ஏதும் வழங்கப்படவில்லை. இவர்கள் அனைவரும் தருமபுரி மாவட்டம், மேற்படி கிராமத்தில் சாதிச் சான்று பெற்றுக் கொள்ளுமாறு கடிதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

71—

அரசுத் துறை நிகழ்ச்சியைத் தவிர்த்தல்

வினா எண் 19860—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, மனுநீதி நாள் மற்றும் அரசுத் துறை நிகழ்ச்சிகளை சட்டமன்றக் கூட்டத்தொடர் நடக்கும் நாட்களில் நடத்துவதைத் தவிர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடப்பு ஆண்டில் வட்டத்திற்கான மனு நீதி நாள் மற்றும் அரசுத் துறை நிகழ்ச்சிகள் ஆகியவை நடைபெறும் நாட்கள் முந்தைய ஆண்டின் இறுதியிலேயே திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முடிவு செய்யப்பட்டு விடுகின்றன.

72—

பட்டா

வினா எண் 21774—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், அமராவதிபுதூர் காந்தி நகரில் வசிக்கும் மக்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி வட்டம், அமராவதி குரூப் காந்தி நகர் மக்களுக்கு தேவகோட்டை தனி வட்டாட்சியர் (ஆதி திராவிடர் நலம்) மூலம் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

73—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 22603—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, புதுவயல் பேரூராட்சி, முத்தப்பா பூங்கா பகுதியில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி வட்டம், சாக்கோட்டை உள்வட்டம், புதுவயல் பேரூராட்சிக்கு உட்பட்ட முத்தப்பா பகுதியானது, பாலையூர் வருவாய்க் கிராமம் புல எண். 177/1, பரப்பு 3.18.0 எக்டேர் நிலம் கிராமக் கணக்குகளில் நத்தம் நில வரி (Ground Rent) என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நகராட்சிக்கு உட்பட்ட நத்தம் நில வரி புலத்தில் பட்டா வழங்குவது தொடர்பான பணி தற்பொழுது நடைமுறையில் இல்லை என்பதால், முத்தப்பா பூங்கா பகுதியில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வழிவகை இல்லை.

74—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 22604—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், அரியக்குடி பஞ்சாயத்திற்குட்பட்ட சர்வே எண் 28/1இல் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி வட்டம், சாக்கோட்டை உள் வட்டம், அரியக்குடி பஞ்சாயத்திற்குட்பட்ட புல எண் 28/1 பரப்பு 42.56.5 எக்டேர் நிலம் கிராமக் கணக்குகளில் அரியக்குடி கண்மாய் என பதிவாகி உள்ளது. நீர்நிலைப் புறம்போக்கு இனங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்க நீதிமன்றத் தடை உத்தரவு அமலில் இருப்பதாலும், நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி நீர்நிலைப் புறம்போக்கு இனங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்க தடை இருப்பதாலும், அரியக்குடி கண்மாய் பகுதி என பதிவாகி இருக்கும் சர்வே எண் 28/1இல் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வழிவகை இல்லை.

[2013 அக்டோபர் 28

75—

சாதிச் சான்றிதழ்

வினா எண் 26560—திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், எடக் கீழையூர் ஊராட்சி, வடக்கு உடையார் தெருவில் வசித்து வரும் இருளர்கள் குடும்பத்திற்கு சாதிச் சான்றிதழ் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி வட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், எடக் கீழையூர் ஊராட்சி கிராமத்தில் பம்பாளியர் தெரு மற்றும் வடக்கு உடையார் தெரு ஆகிய பகுதிகளில் சுமார் 40 குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் அங்கேயே பிறந்து வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் சிறிய ஓலைக் குடிசை வீட்டில் வசித்துக் கொண்டு விவசாயக் கூலி வேலை செய்வதன்மூலம் ஜீவனம் செய்து வருகிறார்கள். மேலும், இவர்கள் பொதுவாக விவசாயக் கூலி வேலை செய்வதைப் பிரதான தொழிலாக செய்து வாழ்ந்து வருகிறார்கள். தற்போது வாழ்ந்துவரும் இவர்களின் முன்னோர்கள், அதாவது ஒருதலைமுறைக்கு முற்பட்டவர்கள் தற்போதைய அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த உடையார்பாளையம் பகுதியிலிருந்து பிழைப்பிற்காக இங்கு வந்து குடியேறி நிரந்தரமாகத் தங்கிவிட்டார்கள். அக்குடும்பத்தைச் சார்ந்தவர்களில் சிலர் தாங்கள் மிகவும் பிற்பட்ட வகுப்பினைச் சார்ந்த இந்து அம்பலக்காரர் சாதியைச் சார்ந்தவர்கள் என தெரிவித்து சாதிச் சான்றிதழ்கள் பெற்றுள்ளார்கள். மேலும், அவர்கள் அனைவரும் பொதுவாக விவசாயக் கூலி வேலை செய்வதன்மூலம் ஜீவனம் செய்து வருகிறார்கள். இவர்களில் யாரும் "இருளர்" இன மக்களின் சமூகப் பழக்க வழக்கங்களை கடைப்பிடிக்கவில்லை. எனவே, இந்தக் குடும்பத்தினர் இருளர் சாதியினைச் சார்ந்தவர்கள் எனத் தெரிவித்து சாதிச் சான்றிதழ் வழங்கிட இயலாது. மாறாக இவர்கள் அனைவரும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்த "அம்பலக்காரர்"

2013 அக்டோபர் 28]

சாதியினைச் சார்ந்தவர்கள் ஆவார்கள் என்று விசாரணையின் அடிப்படையில் கண்டறியப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

76—

நடவடிக்கை பற்றிய தகவல்

வினா எண் 28311—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட ஆட்சியாளரின் மின்னஞ்சலுக்கு அனுப்பப்படும் புகார்களுக்கு அதைப் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் மற்றும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை பற்றிய தகவல்கள், மறு பதிலாக தெரிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் பெறப்படும் மனுக்களுக்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது. அம்மனுவின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையைப் பற்றிய தகவல்கள் மனுதாரருக்குத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், மாவட்ட ஆட்சியாளரின் மின்னஞ்சலுக்கு அனுப்பப்படும் புகார்களுக்கு ஒப்புதல் அனுப்பப்படுவதில்லை. இனிவரும் காலங்களில் அவ்வாறு ஒப்புதல் அளிக்குமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்படும்.

77—

மேல்நிலைப் பள்ளியை அரசு ஏற்றல்

வினா எண் 4193—திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியம், பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலைக்குச் சொந்தமான மேல்நிலைப் பள்ளியை அரசே ஏற்று நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மதுரை மாவட்டம், பாண்டியராஜபுரம், உதவிபெறும் மதுரை சர்க்கரை ஆலை மேல்நிலைப் பள்ளியை அரசு ஏற்று நடத்த அரசாணை (நிலை) எண் 154, பள்ளிக் கல்வி (டி1)த் துறை, நாள் 26-6-2012-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) வினா எழவில்லை.

78—

அரசு ஊதியம்

வினா எண் 12887—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரசு உதவிபெறும் தனியார் பள்ளிக் கல்வி நிறுவனங்களில் அரசு ஊதியமில்லாது பணிபுரியும் ஆசிரியர் மற்றும் பணியாளர்களுக்கு அரசு ஊதியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகளில் ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களில் பணிபுரியும் தகுதியுள்ள ஆசிரியர்களுக்கு நடைமுறையிலுள்ள விதிகளின்படி அரசு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. புதிதாக காலியேற்படும் ஆசிரியரல்லாத காவலர், துப்புரவாளர், பெருக்குபவர் மற்றும் துப்புரவாளர் மற்றும் பெருக்குபவர் ஆகிய பணியிடங்களைப் பொறுத்தவரை, இதற்கான

2013 அக்டோபர் 28]

செலவினை அந்தந்தப் பள்ளி நிருவாகங்களே ஏற்று வெளியாட்களைக் கொண்டு (out sourcing) பள்ளி நிருவாகங்களால் நிரப்பிக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

79—

விலையில்லாத மிதிவண்டி, மடிக்கணினி வழங்குதல்

வினா எண் 14675—திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு நிதி உதவிபெறும் பள்ளிகளில் சுயநிதி வகுப்பு மாணவர்களுக்கு விலையில்லாத மிதிவண்டி, மடிக்கணினி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

தற்போது அரசு உதவிபெறும் பள்ளி மற்றும் அரசு நிதி உதவிபெறும் சுயநிதி அடிப்படையில் நடைபெறும் II ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டி விநியோகம் செய்யப்படுகிறது. அரசு நிதி உதவிபெறும் பள்ளிகளில் சுயநிதி வகுப்பு மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கப்படுவதில்லை.

80—

தடையில்லாச் சான்று

வினா எண் 15245—திருமதி ம. சக்தி: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு வழங்கப்படும் சுகாதாரச் சான்று மற்றும் தடையில்லாச் சான்றுகளை மூன்று வருடங்களுக்கு ஒரு முறை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு வழங்கப்படும் சுகாதாரச் சான்றானது தற்போதைய நடைமுறையின்படி ஆண்டுக்கு ஒரு முறை வழங்கப்பட்டு வருகின்றது. மாணவர்களுக்கான கழிவறை மற்றும் கழிப்பிட வசதிகளின் சுகாதாரத் தன்மை குறித்து, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டு, ஆண்டுக்கு ஒரு முறை வழங்குவதால் சுகாதாரச் சீர்கேடுகளைத் தவிர்க்க வாய்ப்புள்ளது. தீயணைப்பு தடையின்மைச் சான்றும் தற்போதைய நடைமுறையின்படி ஆண்டுக்கு ஒரு முறை வழங்கப்பட்டு வருகின்றது. ஆண்டுக்கு ஒரு முறை இச்சான்றினை வழங்குவதால் பள்ளி வளாகம் சுகாதாரத்துடனும், பாதுகாப்புடனும் அமைந்து அசம்பாவிதங்களைத் தவிர்க்க ஏதுவாக உள்ளது. எனவே, இதனை மூன்றாண்டுகளாக நீட்டிப்பது குறித்து பரிசீலிக்கும் அவசியம் எழவில்லை.

81—

பணியிடங்களை நிரப்புதல்

வினா எண் 20533—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாட்டில் அரசு உதவிபெறும் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள ஆசிரியர் பணியிடங்களைப் பொறுத்தவரை, நடைமுறையிலுள்ள விதிகளைப் பின்பற்றி, அந்தந்தப் பள்ளி நிருவாகத்தால் நிரப்பப்பட வேண்டும். ஆசிரியரல்லாத காவலர், துப்புரவாளர், பெருக்குபவர்

2013 அக்டோபர் 28]

மற்றும் துப்புரவாளர் மற்றும் பெருக்குபவர் ஆகிய பணியிடங்களைப் பொறுத்தவரை, இதற்கான செலவினை அந்தந்தப் பள்ளி நிருவாகங்களே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, இப்பணியிடங்களை வெளியாட்களைக் கொண்டு (out sourcing) சம்பந்தப்பட்ட பள்ளி நிருவாகங்களே நிரப்பிக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

82—

தாய் மொழி

வினா எண் 22051—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரையிலுள்ள சிறுபான்மையின மாணவர்கள் தம் தாய் மொழியைக் கற்றுக் கொள்ளவும், 10 ஆம் வகுப்புத் தேர்வில் சிறுபான்மை மொழி மதிப்பெண் தேர்ச்சிக்காக கணக்கில் எடுத்துக் கொள்ளவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கற்றல் சட்டம் 13/2006—ன்படி தமிழ் மற்றும் ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண்டிராத மாணவர்கள், அவர்கள் விருப்பப் பாடமாக அவர்களது தாய் மொழியினைக் கற்கலாம். தற்போது சிறுபான்மை மொழியில் பயிலும் மாணவர்களுக்கு பத்தாம் வகுப்பு தேர்வில் மதிப்பெண்கள் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், இச்சட்டம் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால் தற்போது கீழ் வகுப்பில் பயிலும் மாணவர்கள் அடுத்தடுத்த ஆண்டில் பயின்று பத்தாம் வகுப்பு பயிலும்போது சிறுபான்மை மொழி மாணவர்கள் விருப்பப் பாடமாக மட்டுமே சிறுபான்மை மொழியில் பயில்வர். இதனால் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் மதிப்பெண்கள் வழங்கும் நிலை இல்லை. எனவே, சிறுபான்மை மொழி பாட மதிப்பெண்களை பத்தாம் வகுப்புத் தேர்ச்சிக்கான கணக்கில் எடுத்துக்கொள்வது அரசின் கொள்கை முடிவுக்கு உட்பட்டது.

[2013 அக்டோபர் 28

83—

அரசு முழு உதவி

வினா எண் 22072—திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, திருமங்கலத்தில் அல் அமீன் உயர்நிலைப் பள்ளியை அரசு முழு உதவிபெறும் பள்ளியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1992-1993 ஆம் ஆண்டிற்குப் பின்பு தரம் உயர்த்தப்படும் அனைத்து உயர்நிலைப் பள்ளியும் அரசின் நிதி உதவியின்றி முற்றிலும் சுயநிதி அடிப்படையிலேயே செயல்படும் வகையில் ஆணை வழங்கப்பட்டு வருகிறது. மதுரை மாவட்டம், திருமங்கலம், அல் அமீன் உயர்நிலைப் பள்ளியானது 1-6-1994 முதல் நடுநிலைப் பள்ளியாகவும், 3-6-1996 முதல் உயர்நிலைப் பள்ளியாகவும் அரசின் நிதியுதவியின்றி 6 முதல் 10 வகுப்பு வரை முற்றிலும் சுயநிதி அடிப்படையிலேயே இயங்கி வருகிறது. மேற்படி பள்ளிக்கு அரசால் எவ்வித பணியிடமும் அனுமதிக்கப்படவில்லை. எனவே, மதுரை மாவட்டம், திருமங்கலம் அல் அமீன் உயர்நிலைப் பள்ளியை முழு உதவிபெறும் பள்ளியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

84—

நீள் இருக்கை

வினா எண் 22544—திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

(அ) துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் ஒன்றியம், ஏ.ஜி.எம். மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதலாக 100 செட் நீள் இருக்கை, சாய்வு மேஜை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் ஒன்றியம், ஏ.ஜி.எம். மேல்நிலைப் பள்ளியானது அரசு உதவிபெறும் மற்றும் சுயநிதிப் பள்ளி என்பதால் இப்பள்ளிக்குத் தேவையான தளவாடச் சாமான்கள் அப்பள்ளி நிருவாகத்தால் வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், அரசு உதவிபெறும் பள்ளிகளைப் பொறுத்தவரை, உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பராமரிப்புப் பணிகள், சம்பந்தப்பட்ட பள்ளி நிருவாகங்களால் மேற்கொள்ளப்பட வேண்டும். இது தொடர்பாக அரசு நிதியொதுக்கம் ஏதும் செய்வதில்லை.

(ஆ) வினா எழவில்லை.

85—

லிப்கோ அகராதி

வினா எண் 27568—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொடக்கப் பள்ளி முதல் மேல்நிலைப் படிப்பு வரையிலான மாணவர்களுக்கு லிப்கோ (ஆங்கிலம்—ஆங்கிலம்—தமிழ்) போன்ற பெரிய வகை அகராதிகளை இலவசமாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) தொடக்கப் பள்ளி முதல் மேல்நிலைப் பள்ளி வரையிலான மாணவர்களுக்கு லிப்கோ (ஆங்கிலம்-ஆங்கிலம்-தமிழ்) போன்ற

[2013 அக்டோபர் 28

பெரிய வகை அகராதிகளை இலவசமாக வழங்குதல் குறித்து தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

86—

காணொளி

வினா எண் 27603—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொடக்கப் பள்ளி முதல் மேல்நிலைப் பள்ளி வரையிலான பாடப் புத்தகங்களை காணொளி மூலமாக பயிற்றுவிக்கும் முறையை அமல்படுத்தி காணொளி கோப்புகளை இணையதளத்தில் வெளியிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) தொடக்கப் பள்ளி முதல் மேல்நிலைப் பள்ளி வரையிலான பாடப் புத்தகங்கள் காணொளி மூலமாக பயிற்றுவிக்கும் முறை தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

87—

மேல்நிலைப் பள்ளிக்கு அடிப்படை வசதி

வினா எண் 27695—திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, டி.கல்லுப்பட்டி ஒன்றியம், பாப்பநாயக்கன்பட்டியில் அரசு உதவிபெறும் ஸ்ரீகந்தசாமி

2013 அக்டோபர் 28]

வித்யாலயா மேல்நிலைப் பள்ளியில் தரைப் பகுதியைச் செய்ய சீரமைப்பு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகளில் கட்டடங்கள் கட்டுவது, உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது, கட்டடங்களை சீரமைப்பது ஆகிய பணிகள் அரசால் மேற்கொள்ளப்படுவதில்லை. அந்தந்தப் பள்ளி நிருவாகங்களே இப்பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

(ஆ) வினா எழவில்லை.

88—

வெளிநோயாளி பிரிவு

வினா எண் 4610—திரு. பி.எல். சுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் அரசு மருத்துவமனையின் வெளிநோயாளிகள் பிரிவை மீண்டும் பழைய இடத்திலேயே செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பழைய சத்தியமங்கலம் அரசு மருத்துவமனைக் கட்டட வளாகத்தில் பொது மக்களின் நலன் கருதி, நகர ஆரம்ப சுதாதார நிலையம் அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2013 அக்டோபர் 28

89—

மின்னாக்கி சீரமைத்தல்

வினா எண் 17060—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை அரசு மருத்துவமனையிலுள்ள பழுதான மின்னாக்கியைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அரசு மருத்துவமனையில் உள்ள 3 மின்னாக்கிகளும் நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

90—

கட்டடப் பணியை விரைந்து முடித்தல்

வினா எண் 17339—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சைக்கான கட்டடத்தின் பணியை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை அரங்குகளில் (அடுக்குமாடிக் கட்டடம் 2) பணிகள் டிசம்பர் 2011 இறுதியில் முடிக்கப்பட்டன.

2013 அக்டோபர் 28]

91—

தனிக் கட்டடம்

வினா எண் 17527—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை அரசு மருத்துவமனையில் நீர் இறைக்க நீரினுள் இயங்கும் மோட்டார் வழங்கவும், அவசர சிகிச்சைப் பிரிவுக்கு தனிக் கட்டடம் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை அரசு மருத்துவமனையில் நீர் இறைக்க நீரினுள் இயங்கும் மோட்டார் நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. மேலும், இம்மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவும் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

92—

சிறப்பு மையக் கட்டடம்

வினா எண் 17673—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, எழும்பூர் மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை மற்றும் திருவல்லிக்கேணி கஸ்தூரிபாகாந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை ஆகியவற்றில் மருத்துவமனை சிறப்பு மையக் கட்டடம் கட்டும் பணியைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சென்னை, எழும்பூர் மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் தேசிய ஊரக நல மேம்பாட்டுத் திட்டம்

[2013 அக்டோபர் 28

மூலமாக பணிகள் நடைபெற்று கட்டடங்கள் முடிவுறும் தருவாயில் உள்ளன. திருவல்லிக்கேணி கஸ்தூரிபாகாந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை கட்டுமானப் பணிகள் நடைபெற்று முடிவுறும் தருவாயில் உள்ளன.

93—

அடுக்குமாடிக் கட்டடம்

வினா எண் 17678—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் அடுக்குமாடிக் கட்டடம் கட்டும் பணியைத் துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் அடுக்குமாடிக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.4,120 கோடிக்கு அனுமதி வழங்கப்பட்டது. இக்கட்டடம் கட்டும் பணி துவக்கப்பட்டு, கட்டடத்திற்கு வர்ணம் பூச்சு வேலைகளும், மின்தூக்கி அமைக்கும் பணிகளும் நடந்துகொண்டு வருகின்றன. மேற்படி கட்டடத்திற்கு கூடுதலாக திருத்திய நிருவாக அனுமதி குறித்த கருத்துரு மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

94—

கல்லூரி கட்டடம்

வினா எண் 17694—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரத்தில் அரசு செவிலியர் கல்லூரிக்கு கட்டடம் கட்டும் பணியைத் தொடங்க அரசு முன்வருமா?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

இராமநாதபுரத்தில் அரசு செவிலியர் கல்லூரிக்கு கட்டடம் கட்டுவதற்காக ரூ.100 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டு, கட்டடம் கட்டும் பணிகள் முன்னரே தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

95—

மருத்துவமனையில் மின்னாக்கி

வினா எண் 20706—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை அரசு மருத்துவமனையில் மின்னாக்கி வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அரசு மருத்துவமனையில் தற்போதுள்ள 3 மின்னாக்கிகளும் நல்ல முறையில் இயங்கி வருவதால் மேற்கொண்டு மின்னாக்கி வசதி ஏற்படுத்தித் தரவேண்டிய அவசியம் எழவில்லை.

96—

குளிர்சாதன பிணை வைப்பறையைச் சீரமைத்தல்

வினா எண் 20715—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) மானாமதுரை அரசு மருத்துவமனையிலுள்ள குளிர்சாதன பிண வைப்பறையைச் சீரமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அரசு மருத்துவமனையின் பிணவைப்பறையில் பழுதடைந்துள்ள குளிர்சாதன இயந்திரங்களைப் பழுது நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

97—

ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இடம்

வினா எண் 22359—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், வீரை ஊராட்சி, வேலாயுதப்பட்டினம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தேவையான இடங்களை வனத் துறையிடமிருந்து பெற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திரு. ஆர்.எஸ்.எம். மகாதேவன் செட்டியார் அவர்களால் தானமாகக் கொடுக்கப்பட்ட இடத்தில் செயல்பட்டுவரும் வேலாயுதப்பட்டினம் ஆரம்ப சுகாதார நிலையம், சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் 30-11-1989 முதல் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையமாகச்

2013 அக்டோபர் 28]

செயல்படுகிறது. வேலாயுதப்பட்டினம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சொந்தமாக 1 ஏக்கர் 5 சென்ட் இடம் உள்ளது. எனவே கூடுதல் நிலம் தேவையில்லை.

98—

குளிர்சாதனப் பெட்டி

வினா எண் 22920—திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் பிணவறைக்கு குளிர்சாதனப் பெட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் உள்ள பிணவறை ஏற்கெனவே குளிர்சாதன வசதியுடன்தான் செயல்பட்டு வருகிறது. எனவே, இம்மருத்துவமனையின் பிணவறைக்கு குளிர்சாதனப் பெட்டி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

99—

மின்னாக்கியை இயக்குதல்

வினா எண் 22933—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரியில் மின்னாக்கிக்கு போதுமான அளவு டீசல் வழங்கவும், மின்னாக்கியை (ஜெனரேட்டரை) இயக்கிடவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் தற்போதுள்ள 4 மின்னாக்கிகள் பயன்பாட்டில் உள்ளன. மேற்படி மின்னாக்கிகளை மின்சாரத் தடையின்போது இயக்குவதற்கு ஏப்ரல் 2012 முதல் ஆகஸ்ட் 2012 வரை ரூ.9,14,316 எரிபொருளுக்காக செலவு செய்யப்பட்டு, தடங்கலின்றி மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

100—

புதிய கட்டடம்

வினா எண் 24689—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தலைமை மருத்துவமனை அருகிலுள்ள காலியிடத்தில் புதியதாக கட்டடம் கட்டி மருத்துவமனையை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தலைமை மருத்துவமனையில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பாட்டில் உள்ளதால் புதிய கட்டடங்கள் கட்டவேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2013 அக்டோபர் 28]

உடுக்குறியிடாத வினாக்கள்

பட்டியல் 10

1—

மின் கம்பியாளர் நியமனம்

வினா எண் 9524—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, கோத்திராப்பட்டி ஊராட்சியில் மின் கம்பியாளர் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, கோத்திராப்பட்டி ஊராட்சியில் மின் கம்பியாளர் பணியிடம் கடந்த 18-10-2010 முதல் காலியாக உள்ளது. மின்தடை சரிசெய்தல் போன்ற அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்வதற்காக 18-10-2010 முதல் மஸ்தூர் ஒருவரை பணியமர்த்தி பணிகள் தடையில்லாமல் மேற்கண்ட நாளிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விருப்ப மாறுதல் கோரினாலோ அல்லது கம்பியாளர் பதவி உயர்வு வழங்கும் நேரத்திலோ கோத்திராப்பட்டிக்கு தனியாக ஒரு கம்பியாளரைப் பணியமர்த்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

2—

இலவச மின்சாரம்

வினா எண் 16106—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சொந்தமாக கைத்தறிக்கூடம் வைத்து நெசவு செய்யும் மின் பயனீட்டாளர்களுக்கு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை 100 யூனிட்டுகள் மின்சாரம் இலவசமாக வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், தமிழ்நாட்டில் பயன்பெறுவோர் எத்தனை பேர்?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) ஆம். தமிழ்நாட்டில் சொந்தமாக கைத்தறிக்கூடம் வைத்து நெசவு செய்யும் மின் பயனீட்டாளர்களுக்கு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை 100 யூனிட்டுகள் மின்சாரம் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது.

(ஆ) கடந்த 2010-2011 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மொத்தம் 1,43,541 பேர் பயன் பெற்றார்கள். 2011-2012 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மொத்தம் 1,45,687 பேர் பயன் பெற்றார்கள். 2012-2013 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மொத்தம் 1,47,833 பேர் பயன்பெறுவார்கள்.

3—

அனல் மின் நிலைய இயக்கம்

வினா எண் 16097—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வடசென்னை அனல் மின் நிலையத்தில் நிலை I மற்றும் நிலை II-ன் அலகு 1 மற்றும் அலகு 2, 2012 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்குள் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். வடசென்னை அனல் மின் உற்பத்தி திட்டம் அலகு 2 (600 மெகா வாட்) 17-12-2012 அன்று மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டது. சில தொழில்நுட்ப இடையூறுகளை சரிசெய்த பிறகு 26-2-2013 அன்று எரியூட்டப்பட்டது. இந்த அலகானது பகுதி அளவிலான மின் உற்பத்தியை விரைவில் துவக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2013 அக்டோபர் 28]

மேலும் முழு உற்பத்தி அளவான 600 மெகா வாட் திறனை ஏப்ரல் 2013-ல் அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அலகு 1-ன் கட்டுமானப் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. இந்த அலகு மே 2013 முதல் 600 மெகா வாட் முழு திறனுடன் நிலையான மின் உற்பத்தியைத் துவக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழக அரசு மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகமும் அலகுகளை செயல்பாட்டுக்குக் கொண்டு வருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை தொடர்ந்து செய்து வருகின்றன.

4—

விவசாய மின் இணைப்பு

வினா எண் 16113—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினர்களுக்கு சிறப்பு விவசாய மின்னிணைப்புத் திட்டத்தின்கீழ் 2011-2012 ஆம் ஆண்டில் எத்தனை பேருக்கு விவசாய மின் இணைப்பு வழங்கப்பட்டது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினர்களுக்கு சிறப்பு விவசாய மின்னிணைப்புத் திட்டத்தின்கீழ் 2011-2012 ஆம் ஆண்டில் 400 பேருக்கு விவசாய மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

5—

மின் மோட்டார்கள் வழங்குதல்

வினா எண் 16162—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு இலவசமாக மின் சேமிப்புத் திறனுள்ள மின்மோட்டார்கள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், 2011-2012 ஆம் ஆண்டில் எத்தனை மின் சேமிப்புத் திறனுள்ள மின் மோட்டார்கள் சிறு, குறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் திறன் குறைந்த பம்பு செட்டுகளுக்குப் பதில் திறன் மிக்க புதிய பம்பு செட்டுகள், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு இலவசமாகவும், பெரிய விவசாயிகளுக்கு 50 விழுக்காடு மானியத்துடனும் வழங்குவதற்கு அரசாணை (நிலை) எண் 7, நாள் 4—2—2011 வாயிலாக குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு ஏற்ப, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன. ஆனால், இத்திட்டத்திற்கு விவசாயிகளிடமிருந்து போதிய வரவேற்பு இல்லாத காரணத்தினால், இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்த இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

(ஆ) சுமார் 147 எண்ணிக்கையுள்ள மின் சேமிப்புத் திறனுள்ள புதிய திறன்மிக்க பம்பு செட்டுகள் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, கடந்த 2011-2012-ம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின்கீழ் புதிய திறன்மிக்க பம்பு செட்டுகள் பெறுவதற்கு, சுமார் 222 சிறு மற்றும் குறு விவசாயிகள் முதலில் விருப்பம் தெரிவித்திருந்தபோதிலும், சுமார் 147 விவசாயிகள் மட்டுமே, புதிய திறன்மிக்க பம்பு செட்டுகளை பெற்றுக்கொண்டனர். புதிய பம்பு செட்டுகள் நிறுவுவதற்கு, மீதமுள்ள சுமார் 75 விவசாயிகளை அணுகியபோது, முதலில் விருப்பம் தெரிவித்த அவர்கள், பின்னர் அதனை பெற்றுக்கொள்வதற்கு முன் வரவில்லை.

6—

மின் பாதை

வினா எண் 16164—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

(அ) கயத்தாறு முதல் காரைக்குடி வரை 400 கி.வோ. மின் பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) காரைக்குடி 400 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து கயத்தாறு 400 கி.வோ. துணை மின் நிலையத்திற்கு அருகிலுள்ள விஜயாபுரி கிராமம் வரை 157 கி.மீட்டருக்கு 400 கி.வோ. இரட்டைச் சுற்று மின்பாதை அமைக்கும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பணி ஒப்பந்தப்படி வேலைகள் அக்டோபர் 2013-க்குள் முடிக்கப்படவுள்ளன.

7—

மின் பாதை

வினா எண் 16165—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புகலூர் முதல் சிங்காரப்பேட்டை மற்றும் ஒட்டியம்பாக்கம் வரை 400 கி.வோ. மின் பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புகலூர் முதல் ஒட்டியம்பாக்கம் வரையிலான 400 கி.வோ. இரட்டைச்சுற்று மின் பாதை அமைக்கும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பணி ஒப்பந்தப்படி வேலைகள் 18 மாதங்களில் முடிக்கப்படவுள்ளன. சிங்காரப்பேட்டை துணை

[2013 அக்டோபர் 28

மின் நிலையத்திற்கான மாற்று புதிய இடம் கண்டறியப்பட்டு கையகப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. கையகப்படுத்தப்பட்டபின் மின் பாதை அமைக்கும் பணிகளுக்கான நில அளவை மேற்கொள்ளப்படும்.

8—

மின் புதைவடம் இடுதல்

வினா எண் 16167—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2011-2012 ஆம் ஆண்டில் மின் புதைவடம் இடுதல், குறைந்த மின் அழுத்த பாதை நிறுவுதல், மின்மாற்றி நிறுவுதல், புதிய விவசாய குடிசை மின் இணைப்பு வழங்கல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன:

1. புதிய மின்மாற்றி — 6,615 எண்ணிக்கை
2. விவசாய மின் இணைப்புகள் — 40,000 எண்ணிக்கை
   அரசால் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது 31,520 எண்ணிக்கை
3. புதிய குடிசை மின் இணைப்புகள் — 5,598 எண்ணிக்கை

சென்னை போன்ற பெருநகரங்களில் மட்டுமே மின் கம்பிவடங்கள் நடைமுறையில் உள்ளன.

2011-2012 ஆம் ஆண்டில் சென்னையில் அமைக்கப்பட்ட மின் புதைவடங்களின் விவரம் பின்வருமாறு :

1. உயரழுத்த மின் புதைவடம் — 79.383 கி.மீ.
2. தாழ்வழுத்த மின்னழுத்தப் பாதை — 132.444 கி.மீ.

2013 அக்டோபர் 28]

9—

மின் பாதை

வினா எண் 16168—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2011-2012 ஆம் ஆண்டில் 55 துணை மின் நிலையங்கள் மற்றும் அதன் மின் பாதைகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) 2011-2012 ஆம் ஆண்டில் 55 துணை மின் நிலையங்களும் மற்றும் அதற்கான மின் பாதைகளும் அமைப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்தது. மின் வாரியத்தில் நிலவி வரும் கடும் நிதி நெருக்கடி காரணமாக அவற்றில் 28 துணை மின் நிலையங்களும் அதற்கான மின் பாதைகளும் இயக்கத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. மீதமுள்ள 27 துணை மின் நிலையங்கள் இந்த நிதியாண்டு, 2012-2013-க்கான திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இவற்றில் 16-8-2012 வரை 10 துணை மின் நிலையங்களும் அதற்கான மின் பாதைகளும் இயக்கத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. மீதமுள்ள துணை மின் நிலையங்களில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சில துணை மின் நிலையங்களில் நீதிமன்ற வழக்கு நிலுவையில் இருப்பதன் காரணமாகவும் மற்றும் சில நில உரிமையாளர்களின் எதிர்ப்பின் காரணமாகவும் இயக்கத்திற்கு கொண்டுவரமுடியாத நிலையில் உள்ளன. இத்துணை மின் நிலையங்களில் பணிகள் மேற்கொள்வதற்கு உள்ள தடைகளை நீக்குவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அனைத்துப் பணிகளும் முடிக்கப்பெற்று மீதமுள்ள துணை மின் நிலையங்கள் விரைவில் இயக்கத்திற்கு கொண்டுவரப்படும்.

[2013 அக்டோபர் 28

10—

மின் இணைப்பு வசதி

வினா எண் 16804—திரு. சு. ரவி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 14-வது வார்டுக்குட்பட்ட மாணிக்க முதலி தெருவில் உள்ள பழுதடைந்த மின் கம்பத்தை அகற்றி, புதிய மின் கம்பம் அமைத்து மின் இணைப்பு வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 14-வது வார்டுக்குட்பட்ட மாணிக்க முதலி தெருவில், 4 மின் கம்பங்கள் பழுதடைந்திருந்தன. பழுதடைந்த 4 மின் கம்பங்களை மாற்றி புதிய மின் கம்பங்கள் 26-10-2012 அன்று அமைக்கப்பட்டுவிட்டன.

11—

கூடுதலாக மின் கம்பங்கள்

வினா எண் 17166—திருமதி ர. சுபா: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியம், தகரப்புதூர் பகுதியிலுள்ள வடக்குத் தெருவில் கூடுதலாக மின் கம்பங்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கெங்கவல்லி தொகுதி, கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியம், தகரப்புதூர் பகுதியிலுள்ள வடக்குத் தெருவில் கூடுதலாக தெரு விளக்குகள் மற்றும் இதர காரணத்திற்காக மின் கம்பங்கள் அமைக்க தலைவர், தகரப்புதூர் ஊராட்சி அவர்களிடமிருந்து விண்ணப்பம் எதுவும் இதுநாள்வரை பெறப்படவில்லை. அவ்வாறு தெரு விளக்கு மற்றும் இதர காரணங்களுக்கு மின் கம்பம் அமைக்க வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டால், வாரிய விதிமுறைகளுக்குட்பட்டு பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

12—

பணி இடங்கள் நிரப்புதல்

வினா எண் 18587—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியிலுள்ள மின்சாரத் துறையில் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், சிவகங்கை மின் பகிர்மான வட்டம், மானாமதுரை சட்டமன்றப் தொகுதிக்குட்பட்ட மானாமதுரை கோட்டத்தில் கீழ்க்கண்டவாறு உபகோட்டப் பிரிவுகள் உள்ளன:—

(1) மானாமதுரை உபகோட்டம்

(2) திருப்புவனம் உபகோட்டம்

(3) இளையான்குடி உபகோட்டம்

அந்த உபகோட்டங்களில் உள்ள பிரிவு அலுவலகங்களில் மொத்தமாக 41 எழுத்துத் துறை பணியாளர் பணியிடங்களும், 141 களப் பணியாளர் பணியிடங்களும் காலியாக உள்ளன. பெரும்பான்மையான காலிப் பணியிடங்களான கள உதவியாளர் (Field Assistant) பணியிடங்களின் பணிகள் மஸ்தூர் பணியாளர்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், தற்போது வாரியத்தில் பரிசீலனையில் உள்ள கள உதவியாளர் காலிப் பணியிடங்களுக்கான நேரடி நியமனத்தின்போது (Direct Recruitment) கள உதவியாளர் காலிப் பணியிடங்களும் மற்றும் உள்முகத் தேர்வின்மூலம் எழுத்துத் துறை பணியாளர் காலிப் பணியிடங்களும் போதுமான அளவு பூர்த்தி செய்யப்படும்.

13—

மின் கம்பிகளை மாற்றுதல்

வினா எண் 19133—திருமதி ர. சுபா: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, நாகியம்பட்டி ஊராட்சி, என். காளிப்பட்டி பகுதியில் உள்ள எச்.டி. லைன் மின் கம்பிகளை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கெங்கவல்லி தொகுதி, நாகியம்பட்டி ஊராட்சி, என். காளிப்பட்டி பகுதியில் 2-8-2012 அன்று கள ஆய்வு செய்த சமயம், உயர் அழுத்த (HT) மின் கம்பிகள் மற்றும் உயர் அழுத்த மின் பாதையைச் சேர்ந்த மின் கம்பங்கள் எதுவும் சேதமாகவில்லை எனக் கண்டறியப்பட்டது. இந்நிலையில் என். காளிப்பட்டியைச் சார்ந்த திரு. G. மணி என்பவர் தாழ்வழுத்த மின் பாதையின் மின் கம்பியை சற்றுத் தள்ளி அமைக்கக் கோரி 11-9-2012 அன்று அளித்த விண்ணப்பத்தின் அடிப்படையில், வாரிய

2013 அக்டோபர் 28]

விதிமுறைகளுக்குட்பட்டு மின் பாதையை மாற்றியமைக்க மதிப்பீடு அனுமதி பெறப்பட்டு, உரிய தொகை வசூலிக்கப்பட்டு பணி முடிக்கப்பட்டது.

14—

மின் கம்பிகளை மாற்றுதல்

வினா எண் 20339—திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, பூவாணி சிற்றூராட்சி, கிருஷ்ணாபுரம் கிராமம் மற்றும் பி. மீனாட்சிபுரம், அதி திராவிடர் காலனி வீடுகளுக்கு மேல் செல்லும் மின் கம்பிகளை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, பூவாணி சிற்றூராட்சி, பி. மீனாட்சிபுரம் காலனியில் 7 வீடுகள் மீதும், கிருஷ்ணாபுரம் காலனியில் 5 வீடுகள் மீதும் சுமார் 3 அடி இடைவெளியில் தாழ்வழுத்த மின் பாதை செல்கிறது. இந்த மின் பாதை இங்கு வீடுகள் வருவதற்கு முன்பே போடப்பட்டது. பி. மீனாட்சிபுரம் காலனி மற்றும் கிருஷ்ணாபுரம் காலனியில் உள்ள 12 வீடுகளின் உரிமையாளர்கள் மின் பாதைகளை மாற்றியமைக்க ஆகும் மதிப்பீட்டுத் தொகையை வாரியத்திற்குச் செலுத்த முன்வந்தால் மின் கம்பிகளை மாற்றியமைக்க இயலும்.

15—

தடையில்லா மின்சாரம்

வினா எண் 20370—திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) விவசாயத்திற்கு தடையில்லா மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விவசாயத்திற்காக காவேரி டெல்டா பகுதிக்கு நாளொன்றுக்கு 12 மணி நேரமும் (இரவிலும் பகலிலுமாக) மற்ற பகுதிகளுக்கு நாளொன்றுக்கு 9 மணி நேரமும் (இரவிலும் பகலிலுமாக) மும்முனை மின்சாரம் வழங்க அறிவுறுத்தப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், இந்தியாவின் பல மாநிலங்களில் கடும் மின் பற்றாக்குறை நிலவி வருவதால் மின் கொள்முதலில் போட்டி நிலவி, கொள்முதல் விலை மிகவும் அதிகரித்துள்ளதுடன், மின் கட்டமைப்பில் நெருக்கடி இருப்பதால் கொள்முதல் செய்யும் மின்சாரத்தில் குறைந்த அளவே தமிழ்நாட்டிற்கு மின் பரிமாற்றம் நடைபெறும். எனவே, இந்திய மின் கட்டமைப்பு விதித்தொகுப்பு 2010-ன்படி தமிழக மின் கட்டமைப்பை சீராக வைத்துக்கொள்ள மின் கட்டுப்பாடு வரையறைகள் சுழற்சி முறையில் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, மின் தேவைக்கேற்ப மின் உற்பத்தி சீரானவுடன் விவசாய மின் இணைப்புகளுக்கு தடையில்லா மின்சாரம் (24 மணி நேரமும்) வழங்க ஆவன செய்யப்படும்.

16—

மானிய விலை மின்சாரம்

வினா எண் 20372—திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு மானிய விலையில் மின்சாரம் வழங்குவதை இரத்து செய்து, அனைவருக்கும் வழங்கும் அதே விலையில் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் தகவல் தொழில்நுட்பத் துறை நிறுவனங்களுக்கு, அனைத்து தொழிற்சாலைக்கு விதிக்கப்படும் கட்டணமே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேற்படி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு ஆணையம் நிர்ணயித்த மின் கட்டணம், மானியம் ஏதுமின்றி வசூலிக்கப்பட்டு வருகிறது.

17—

புதிய மின் கம்பங்கள்

வினா எண் 20743—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதி, ரீத்தாபுரம் பேரூராட்சி, பிரண்ட்ஸ் காலனியில் உள்ள பழுதான மின் கம்பங்களை அகற்றி புதிய மின் கம்பங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

குளச்சல் தொகுதி, ரீத்தாபுரம் பேரூராட்சி, பிரண்ட்ஸ் காலனியில் மொத்தம் உள்ள 53 மின் கம்பங்களில் 5 மின் கம்பங்கள் பழுதடைந்திருந்தன. அவற்றில் 4 மின் கம்பங்கள் (F2-78, 84, 93 & 62) மாற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள ஒரு மின் கம்பம் (F2-14) 23-8-2012 அன்று மாற்றப்பட்டது.

18—

மின் கம்பங்கள் சீரமைத்தல்

வினா எண் 20761—திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2013 அக்டோபர் 28

பெரம்பூர் தொகுதி, 34-வது வட்டம், முத்தமிழ் நகர் பகுதி-1 பிளாக் 13-வது தெருவிலுள்ள மின் கம்பங்களை சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

பெரம்பூர் தொகுதி, முத்தமிழ் நகர், பகுதி-1 பிளாக் 13-வது தெருவில் பழுதான 7.5 மீட்டர் நீளம் உள்ள மின் கம்பங்கள் மொத்தம் 7. பழுதான 7 மின் கம்பங்களும் மாற்றப்பட்டுவிட்டன.

19—

மின் பொருட்கள்

வினா எண் 20764—திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி, 36-வது வட்டம், மேற்கு இந்திரா நகரில் மின் பெட்டியை சீரமைக்கவும், கருணாநிதி சாலை 7-வது தெரு முனையில் உள்ள மின் கம்பத்தை அகற்றவும், எம்.கே.பி. நகர் டிவிஷனுக்கு தேவையான மின் பொருட்கள் வழங்கவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

பெரம்பூர் தொகுதி, காந்தி நகர் பிரிவிற்குட்பட்ட இந்திரா நகர் மேற்குப் பகுதியில் பழுதடைந்த மின்சார பில்லர் 1-8-2012 அன்று சரிசெய்யப்பட்டது. செம்பியம் பிரிவிற்குட்பட்ட கருணாநிதி சாலை 7-வது தெருவில் உபயோகமற்ற நிலையில் உள்ள மின் கம்பம் 1-8-2012 அன்று அகற்றப்பட்டது. மேலும் வியாசர்பாடி கோட்டத்திற்குட்பட்ட எம்.கே.பி. நகர் பிரிவிற்கு தடையற்ற மின் விநியோகத்திற்குத் தேவையான புதைவடம் மற்றும் மின் சாதனப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

2013 அக்டோபர் 28]

20—

இலவச மின்சாரம்

வினா எண் 21217—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும் இலவச மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

21—

புதிய மின்மாற்றி

வினா எண் 22194—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், எழுவன்கோட்டை ஊராட்சி, கோட்டவயல்—ஈகரை, புதுக்குடி, கம்பனி, பறையனேந்தல், வேட்டைக்காரன்பட்டி, சக்கந்தி ஆகிய பகுதிகளில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், எழுவன்கோட்டை பஞ்சாயத்துக்குட்பட்ட கோட்டவயல் கிராமத்திற்கு கோட்டவயல் SSI 100 KVA மின்மாற்றியிலிருந்து மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட

[2013 அக்டோபர் 28

மின்மாற்றியில் அதிக மின்பளுவோ, குறைந்த மின்னழுத்தக் குறைபாடோ இல்லாததால், தற்போது புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய தேவை எழவில்லை. எழுவன் கோட்டை பஞ்சாயத்துக்குட்பட்ட ஈகரை கிராமத்திற்கு புதுக்கோட்டை SS II 16 KVA மின்மாற்றிமூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட 16 KVA மின்மாற்றியினை 100 KVA மின்மாற்றியாக தரம் உயர்த்த மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அனுமதி பெற்றவுடன் பணிகள் விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். குருந்தனக்கோட்டை பஞ்சாயத்துக்குட்பட்ட புதுக்குடி மற்றும் சக்கந்தி பஞ்சாயத்துக்குட்பட்ட சக்கந்தி கிராமங்களுக்கு செலுகை SS II 100 KVA மற்றும் சக்கந்தி SS I 63 KVA மின்மாற்றிமூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்மாற்றிகளில் அதிக மின்பளுவோ, குறைந்த மின்னழுத்தக் குறைபாடோ இல்லாததால் தற்போது புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய தேவை எழவில்லை.

2. குருந்தனக்கோட்டை பஞ்சாயத்துக்குட்பட்ட கம்பனி, பறையனேந்தல் கிராமங்களுக்கு தளுத்தனூர் SS I 100 KVA மின்மாற்றியிலிருந்து மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்மாற்றியில் குறைந்த மின்னழுத்தக் குறைபாடு தொடர்பாக இடத்தினை ஆய்வு செய்து மதிப்பீடு தயார் செய்து புதிய 100 KVA மின்மாற்றி அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தானவயல் பஞ்சாயத்துக்குட்பட்ட வேட்டைக்காரன்பட்டி கிராமத்திற்கு வேட்டைக்காரன்பட்டி SS 100 KVA மற்றும் வேட்டைக்காரன்பட்டி SS II 16 KVA மின்மாற்றிமூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்மாற்றிகளில் அதிக மின்பளுவோ, குறைந்த மின்னழுத்தக் குறைபாடோ இல்லாததால் தற்போது புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

22—

புதிய மின்மாற்றி

வினா எண் 22201—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், திருமணவயல் ஊராட்சி, நயினார்வயல், சிறுநெல்லூர் ஊராட்சி கருப்பக்குடி, திருவேகம்பத்து ஊராட்சி, திருவேகம்பத்து, காயங்காடு, விளாங்காட்டூர் ஆகிய பகுதிகளில் புதிய மின்மாற்றிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், திருவேகம்பத்து பஞ்சாயத்துக்குட்பட்ட திருவேகம்பத்து கிராமத்திற்கு திருவேகம்பத்து SS I 100 KVA மற்றும் திருவேகம்பத்து SS II 100 KVA மின்மாற்றிமூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்மாற்றியில் அதிக மின்பளுவோ, குறைந்த மின்னழுத்தக் குறைபாடோ இல்லாததால் தற்போது புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. திருமணவயல் பஞ்சாயத்துக்குட்பட்ட நயினார்வயல் கிராமத்திற்கு கோட்டூர் SS I 100 KVA மின்மாற்றியிலிருந்து மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்மாற்றியில் குறைந்த மின்னழுத்தக் குறைபாடு தொடர்பாக இடத்தினை ஆய்வு செய்து, மதிப்பீடு தயார் செய்து, புதிய 100 KVA மின்மாற்றி அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சிறுநெல்லூர் பஞ்சாயத்துக்குட்பட்ட கருப்பக்குடி கிராமத்திற்கு சிறுநெல்லூர் SS I 100 KVA மின்மாற்றியிலிருந்து மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்மாற்றியில் குறைந்த மின்னழுத்தக் குறைபாடு தொடர்பாக இடத்தினை ஆய்வு செய்து, மதிப்பீடு தயார் செய்து, புதிய 100 KVA மின்மாற்றி அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். திருவேகம்பத்து பஞ்சாயத்துக்குட்பட்ட காயங்காடு கிராமத்திற்கு சுக்கிரப்பட்டி SS I 100 KVA மின்மாற்றியிலிருந்து மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்மாற்றியில் இருந்து ஒரு முனை மின் பாதை மட்டுமே சாயங்காடு கிராமத்திற்கு செல்கிறது. எனவே, ஒரு முனை மின் பாதையினை மும்முனை மின் பாதையாக மாற்ற மதிப்பீடு தயார் செய்து அனுமதி பெறப்பட்டு, பணிகள் முடிக்கப்படும். திருவேகம்பத்து பஞ்சாயத்துக்குட்பட்ட

[2013 அக்டோபர் 28

விளாங்காட்டூர் கிராமத்திற்கு விளாங்காட்டூர் SS I 100 KVA மின்மாற்றியிலிருந்து மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்மாற்றியில் குறைந்த மின்னழுத்தக் குறைபாடு தொடர்பாக இடத்தினை ஆய்வு செய்து, மதிப்பீடு தயார் செய்து புதிய 100 KVA மின்மாற்றி அமைக்கப்படும்.

23—

மின் கம்பிகளைச் சீரமைத்தல்

வினா எண் 22204—திரு. சோழன் சித. பழனிச்சாமி : மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியப் பகுதிகளில் பழுது அடைந்துள்ள மின் கம்பிகளைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியப் பகுதிகளுக்குட்பட்ட சாமியாடி பெரியகருப்பன் தெரு, பறையனேந்தல் மற்றும் காரை ஆகிய இடங்களில் இருந்த மின் கம்பிகள் மாற்றி சீரமைக்கப்பட்டுள்ளன. மேலும், பழுது அடைந்துள்ள மின் கம்பிகளை மாற்றியமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, விரைவில் இப்பணிகளை முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

24—

தனி மீட்டர்

வினா எண் 22052—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாடகைக்கு குடியிருப்போருக்கு தனி மீட்டர் பொருத்தி அரசு நிர்ணயிக்கும் மின் கட்டணத்தை நேரடியாகச் செலுத்துவதற்கான சட்டத்தை அமல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

வாடகைதாரர் நேரடியாக மின் கட்டணத்தைச் செலுத்துவதற்கு தனியாக மின் இணைப்பு பெற தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தை உரிய விண்ணப்பம் மற்றும் ஆவணங்களுடன் அணுகினால், கீழ்க்காணும் தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதித் தொகுப்பின்படி மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும்:

விதி 27(4)-ன்படிதான் பொறுப்பேற்றுள்ள இருப்பிடத்துக்குச் சொந்தக்காரராக இல்லாமல் மின் வழங்கல் கேட்கும் நுகர்வோர், அதைப்பெற தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித் தொகுப்பின் பின்னிணைப்பு III இல் உள்ள படிவம்-5 இன் படியான சம்மதக் கடிதத்தை இருப்பிட உரிமையாளரிடமிருந்து பெற்றுத் தர வேண்டும். சொந்தக்காரர் இல்லை என்றாலோ அல்லது சம்மதக் கடிதம் தர மறுத்து விட்டாலோ, சட்டப்படி அந்த இருப்பிடத்தின் பொறுப்பேற்றுள்ளதற்கான சான்றை நுகர்வோர் தர வேண்டும். மேலும், இவ்விதியின் பின்னிணைப்பு III இல் படிவம்-6 இன் படியான காப்புறுதி பத்திரத்தின் வாயிலாக, உரிமதாரருக்கு, பொறுப்பாளருக்கு மின்னிணைப்பு வழங்கலால் உருவாகும் தகராறுகளால் விளையும் இழப்புக்குக் காப்புறுதி தந்து, மேலும் இயல்பான காப்பு வைப்புத் தொகையைப் போல இரட்டிப்பு மடங்குத் தொகையை வைப்புத் தொகையாகச் செலுத்தவும் உறுதியேற்க வேண்டும்.

25—

மின் கம்பிகளை மாற்றுதல்

வினா எண் 22681—திரு. மு. முருகன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூர் தொகுதி, கடலாடி, சாயல்குடி, கமுதியிலுள்ள மின் கம்பிகளை மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பரமக்குடி கோட்டத்திற்குட்பட்ட முதுகுளத்தூர், கடலாடி, சாயல்குடி மற்றும் கமுதி ஆகிய பகுதிகளில் சாயல்குடி பிரிவிற்குட்பட்ட கண்ணிராஜபுரம் கிராமத்தில் பழுதடைந்த பழைய எண் 8 காப்பர் கம்பி மாற்றப்பட்டு அலுமினிய ACSR 7/3.35 mm மொத்தம் 5.2 கிலோ மீட்டர் தூரத்திற்கு அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. முதுகுளத்தூர் பிரிவிற்குட்பட்ட பொந்தம்புளி கிராமத்தில் பழைய ACSR 7/2.11 mm கம்பிக்குப் பதிலாக ACSR 7/2.59 mm கம்பிகள் 1.5 கிலோ மீட்டர் தூரத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. மேலும், இப்பகுதியிலுள்ள பழைய மின் கம்பிகளை மாற்றிட தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

26—

மின் கம்பத்தினை மாற்றுதல்

வினா எண் 22796—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, புங்கினிப்பட்டி, சாத்தம்பட்டி சாலைப் பிரிவில் உள்ள மின் கம்பத்தினை மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, புங்கினிப்பட்டி, சாத்தம்பட்டி சாலைப் பிரிவில் இருந்த சேதமடைந்த ஒரு மின் கம்பம் மாற்றப்பட்டு புதிய மின் கம்பம் நடப்பட்டுள்ளது.

2013 அக்டோபர் 28]

27—

மின் இணைப்பை சீரமைத்தல்

வினா எண் 22797—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, முக்கண்ணாமலைப்பட்டி ஊராட்சி, முக்கண்ணாமலைப்பட்டியில் உள்ள பழுதடைந்த மின் இணைப்பை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, முக்கண்ணாமலைப்பட்டி ஊராட்சியில் முக்கண்ணாமலைப்பட்டியில் எல்லா மின் இணைப்புகளும் நல்ல நிலையில் உள்ளன. மின் இணைப்புகளில் பழுது தொடர்பாக புகார் எதுவும் பெறப்பட்டால் உடனுக்குடன் சரிசெய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

28—

விவசாய பாதிப்பை தடுத்தல்

வினா எண் 22800—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டத்தில் தினந்தோறும் மின்மாற்றிகள் பழுதாவதால் விவசாயம் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மின்பகிர்மான வட்டத்தில் கடந்த ஏப்ரல் 2012 முதல் 17-8-2012 வரை சுமார் 439 மின்மாற்றிகள் பழுதாகி

இருந்தது கண்டறியப்பட்டு, அதில் 429 மின்மாற்றிகள் மாற்றப்பட்டு மின்னூட்டம் வழங்கப்பட்டுள்ளன. மின்மாற்றிகளின் பழுதிற்கு முக்கிய காரணம் இம்மாவட்டத்தில் உள்ள விவசாய மின் இணைப்புகள் அனுமதிக்கப்பட்ட மின்பளுவைவிட கூடுதல் மின்பளுவை பயன்படுத்துவதாலும், இருமுனை மின்சாரம் உள்ள நேரங்களில் கப்பாசிட்டர்களைப் பயன்படுத்தி மும்முனை மோட்டார்களை இயக்குவதாலும் ஆகும். இது தொடர்பாக விவசாயிகளுக்கு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. விவசாயிகளின் ஒத்துழைப்போடு மின்மாற்றிகள் தொடர்ந்து பழுதாவதை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

29—

மின் விசிறிகள் மாற்றுதல்

வினா எண் 22805—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் உள்ள மின் விசிறிகளை மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது, திருச்சி மின்வாரிய தலைமை அலுவலகத்தில் உள்ள அனைத்து மின் விசிறிகளும் நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மேலும், மின் விசிறிகள் பழுதாகும் பட்சத்தில் அவை உடனடியாக சரி செய்யப்பட்டு இயக்கத்திற்குக் கொண்டுவரப்படும்.

30—

புதுக் கம்பங்கள் அமைத்தல்

வினா எண் 23201—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

சங்ககிரி தொகுதி, சங்ககிரி பேரூராட்சி, முனியப்பம்பாளையத்தில் பழுதடைந்துள்ள மின் கம்பங்களை அகற்றி விட்டு புதுக் கம்பங்களை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

முனியப்பம்பாளையம் பகுதியில் இரண்டு மின் கம்பங்கள் பழுதானது கண்டறியப்பட்டு, மின் கம்பங்களை மாற்ற உரிய மதிப்பீடு அனுமதி பெறப்பட்டு, 8-10-2012 அன்று இரண்டு மின் கம்பங்களும் மாற்றப்பட்டன.

31—

மின்மாற்றி

வினா எண் 23546—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலையில் 110 கி.வோ. திறனுடைய துணை மின் நிலையத்தில் புதியதாக 16 மெ.வா. திறன் கொண்ட மின்மாற்றி அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதியில் உள்ள வடுகப்பட்டி 110/11 கி.வோ. துணை மின் நிலையம் மற்றும் விராலிமலை 33/11 கி.வோ துணை மின் நிலையத்தில் மின்மாற்றி திறனை அதிகரிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

[2013 அக்டோபர் 28

32—

துணை மின் நிலையம்

வினா எண் 23549—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் புதியதாக 230 கே.வி. திறனுடைய துணை மின் நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் புதியதாக 230 கே.வி. திறனுடைய துணை மின் நிலையம் அமைக்க அரசிடம் தற்போது செயற்குறிப்பு இல்லை. எனினும் மின் தேவையினை கருத்தில் கொண்டு, தேவைப்படின் புதிய மின் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போது, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு 230/110 கே.வி. துணை மின் நிலையம் உள்ளது. இருப்பினும், கீரமங்கலம் மற்றும் கொடிகுளம் சுற்றுப்புற பகுதிகளின் மின் தேவையினைக் கருத்தில் கொண்டு, தற்போதுள்ள கீரமங்கலம் மற்றும் கொடிகுளம் 33/11 கே.வி. துணை மின் நிலையங்களை முறையே, 110/11 கே.வி., 110/33-11 கே.வி. துணை மின் நிலையங்களாகத் தரம் உயர்த்திட தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் ஆணை வெளியிட்டுள்ளது. அந்தப் பணியினை 2012-2013 ஆம் நிதியாண்டில் எடுத்துக் கொள்வது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

33—

சீரான மின்சாரம்

வினா எண் 23929—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

சங்ககிரி தொகுதி, சங்ககிரி பேரூராட்சி, முனியப்பம்பாளையம், உஞ்சக்கொரையில் சீரான மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

சங்ககிரி தொகுதி, சங்ககிரி பேரூராட்சி, முனியப்பம்பாளையம், உஞ்சக்கொரை பகுதியில் மரங்கள் அதிகமாக உள்ளதால் தாழ் மின் அழுத்த பாதையில் அவ்வப்போது மரக்கிளைகள் மோதி மின்சாரம் தடைபடுவதாகத் தெரிய வந்தது. அதன்பேரில் 13-8-2012 அன்று புதியதாக ஒரு மின் கம்பம் நட்டு, மின் கம்பிகள் இழுத்து உஞ்சக்கொரை மின்மாற்றி எண் 1-ன் வழியாக மின்னூட்டம் செய்யப்பட்டு, தற்போது சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

34—

தனி மின் பாதை

வினா எண் 24356—திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் நகருக்கு தனி மின் பாதை அமைத்து அர்பன் பீடிங் சிஸ்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது, மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் நகருக்கு 2x16+1x10 எம்.வி.ஏ. திறனுடைய மின்மாற்றிகள் கொண்ட கோவில்வெண்ணி 110 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் செய்யப்படுகிறது. இதன் உச்ச மின்பளு 36.5 எம்.வி.ஏ. ஆகும். இத்திறனே நீடாமங்கலம்

[2013 அக்டோபர் 28

பகுதியின் மின் தேவையை நிறைவு செய்ய போதுமானது. மேலும், நீடாமங்கலம் பகுதி கோவில்வெண்ணியில் இருந்து 7 கி.மீ. தொலைவில் உள்ளது. இப்பகுதியில் தரமான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, நீடாமங்கலம் பகுதிக்கு தனி மின் பாதை அமைக்க தேவை எழவில்லை.

35—

தடையில்லா மின்சாரம்

வினா எண் 24930—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, கொடும்பாளூர், நீர்பழனி, மண்டையூர், விராலிமலை, பரம்பூர், ராப்பூர் ஆகிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, விராலிமலை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 11 KV தொழிற்சாலை பீடர் மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. நடைமுறையில் உள்ள வாரிய உத்தரவின்படி மின்தடை செய்யப்படும் நேரம் தவிர, எஞ்சிய நேரங்களில் தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. எஞ்சிய ஊர்களான கொடும்பாளூர், நீர்பழனி, மண்டையூர், பரம்பூர், ராப்பூர் ஆகிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கிராமிய மின் பாதைமூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருவதால், தடையில்லா மின்சாரம் வழங்க தற்போது சாத்தியகூறுகள் இல்லை. மேலும், மாவட்ட தலைமையிட தலைமை மருத்துவமனைக்கு மட்டுமே தடையில்லா மின்சாரம் வழங்க அரசு ஆணை உள்ளது.

2013 அக்டோபர் 28]

36—

புதிய மின்கம்பம் அமைத்தல்

வினா எண் 25141—திரு. சு. ரவி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 17-வது வார்டு, பாலசுப்பிரமணி கோயில் தெரு, கண்ணன் மாவு மில் 2-வது தெரு ஆகிய தெருக்களில் உள்ள பழுதடைந்த மின் கம்பங்களை அகற்றி புதிய மின் கம்பங்கள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 17-வது வார்டு, பாலசுப்பிரமணி கோயில் தெரு, கண்ணன் மாவு மில் 2-வது தெரு ஆகிய தெருக்களை ஆய்வு செய்ததில், பழுதடைந்த மின் கம்பங்கள் ஏதுமில்லாததால், தற்போது புதிய மின் கம்பங்கள் அமைக்க அவசியமில்லை.

37—

புதிய மின் கம்பம் அமைத்தல்

வினா எண் 25143—திரு. சு. ரவி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 17-வது வார்டு, மேட்டுத்தெரு, W. முனுசாமி தெருக்களில் உள்ள பழுதடைந்த மின் கம்பங்களை அகற்றி புதிய மின் கம்பங்கள் அமைக்கவும், கூடுதலாக மின் கம்பங்கள் அமைக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 17-வது வார்டு, மேட்டுத்தெரு, W. முனுசாமி தெருக்களை ஆய்வு செய்ததில், பழுதடைந்த மின் கம்பங்கள் ஏதுமில்லாததால் புதிய மற்றும் கூடுதலாக மின் கம்பங்கள் அமைக்க தேவை தற்போது எழவில்லை.

38—

மின் கம்பி அமைத்தல்

வினா எண் 25146—திரு. சு. ரவி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 9-வது வார்டு, கன்னியப்பன் நகர், லட்சுமி நகர், ரங்கப்பன் நகர் ஆகிய தெருக்களில் உள்ள மின் கம்பங்களுக்கு மின் கம்பி அமைத்து சிறுகுழல் மின் விளக்குகள் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 9-வது வார்டு, கன்னியப்பன் நகர், லட்சுமி நகர், ரங்கப்பன் நகர் ஆகிய தெருக்களில் ஏற்கெனவே 6 எண்ணிக்கை தெரு விளக்குகள் உள்ளன. இப்பகுதியில் புதியதாக சிறுகுழல் மின் விளக்குகள் அமைக்கக் கோரி நகராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

39—

ஆதி திராவிடர் காலனி பராமரிப்பு

வினா எண் 11074—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2013 அக்டோபர் 28]

(அ) அன்னவாசல் ஒன்றியம், விளாத்துப்பட்டி ஊராட்சி, புறமலை கிராமத்தில் ஆதி திராவிடர் காலனி பராமரிப்பு செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாக கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

40—

தொகுப்பு வீடுகள் பராமரிப்பு

வினா எண் 16183—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், மருதம்பட்டி ஊராட்சி, மருதம்பட்டி மற்றும் எம்.ஜி.ஆர். நகர் காலனி வீடுகளை பராமரிப்பு செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாக கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

[2013 அக்டோபர் 28

41—

தொகுப்பு வீடுகள் பராமரிப்பு

வினா எண் 16186—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், வேலூர் ஊராட்சி, கத்தாளம்பட்டி ஆதி திராவிடர் வீடுகளில் பராமரிப்பு செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாக கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

42—

தொகுப்பு வீடுகள் பராமரிப்பு

வினா எண் 16187—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், குன்னத்தூர் ஊராட்சி, குன்னத்தூர் ஆதி திராவிடர் காலனி வீடுகளில் பராமரிப்பு செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாக கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ. 25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

43—

தொகுப்பு வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 29331—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், செட்டிசத்திரம் ஊராட்சி, அய்யம்பேட்டையில் தொகுப்பு வீடுகளை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாக கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ. 25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

44—

தொகுப்பு வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 29334—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2013 அக்டோபர் 28

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஒன்றியம், கர்ணாவூர் ஊராட்சி, தரிசுவெளி கிராமத்திலுள்ள தொகுப்பு வீடுகளை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாக கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ. 25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

45—

தொகுப்பு வீடுகள் பராமரித்தல்

வினா எண் 29866—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், புளியம்பட்டி கிராம ஊராட்சி, புளியம்பட்டியிலுள்ள தொகுப்பு வீடுகளைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாக கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ. 25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2013 அக்டோபர் 28]

46—

நிதி ஒதுக்கீடு

வினா எண் 25533—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை வட்டார வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கத்திற்கு கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை வட்டார வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யும் திட்டமேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

47—

விவசாயிகளுக்கு மானியம்

வினா எண் 17356—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில், வேளாண்மை இயந்திரமாக்குதல் திட்டத்தின்கீழ், பண்ணை இயந்திரங்கள் மற்றும் கருவிகள் விவசாயிகளுக்கு மானியமாக வழங்கும் திட்டத்தினை செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில், வேளாண்மை இயந்திரமாக்குதல் திட்டத்தின்கீழ்,

பண்ணை இயந்திரங்கள் மற்றும் கருவிகள் விவசாயிகளுக்கு 2007-2008 ஆம் ஆண்டு முதல் 2011-2012 ஆம் ஆண்டுவரை 60,687 இயந்திரங்களும், ரூ. 16,559.83 இலட்சங்களும் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2012-2013 ஆம் நிதியாண்டில் பிப்ரவரி 2013 மாதம் முடிய 40,455 இயந்திரங்களும், ரூ. 6,741/- இலட்சங்களும் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

48—

மஞ்சள் சாகுபடி

வினா எண் 22425—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மஞ்சள் சாகுபடி எந்தெந்த மாவட்டங்களில் நடைபெறுகிறது?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மொத்தம் 36,140 எக்டர் பரப்பளவில் மஞ்சள் பயிரிடப்படுகிறது. மஞ்சள் பயிர் கோவை, தருமபுரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, நாமக்கல், பெரம்பலூர், சேலம், திருவண்ணாமலை, திருப்பூர், திருச்சி, வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் அதிக பரப்பளவில் பயிர் செய்யப்படுகிறது. மாவட்ட வாரியாக பிப்ரவரி 2013 வரை ஒத்திசைவு செய்யப்பட்ட மஞ்சள் சாகுபடி பரப்பு விவரம் பின்வருமாறு:—

வ. எண்	மாவட்டத்தின் பெயர்	மஞ்சள் சாகுபடி செய்யப்படும் பரப்பு (எக்டரில்)
1.	அரியலூர்	65
2.	கோவை	1216
3.	கடலூர்	342
4.	தருமபுரி	8212
5.	திண்டுக்கல்	22

2013 அக்டோபர் 28]

6.	ஈரோடு	8240
7.	காஞ்சிபுரம்	0
8.	கன்னியாகுமரி	0
9.	கரூர்	223
10.	கிருஷ்ணகிரி	1310
11.	மதுரை	12
12.	நாகப்பட்டினம்	3
13.	நாமக்கல்	1310
14.	பெரம்பலூர்	1367
15.	புதுக்கோட்டை	6
16.	இராமநாதபுரம்	0
17.	சேலம்	8108
18.	சிவகங்கை	0
19.	தஞ்சாவூர்	19
20.	தேனி	15
21.	உதகை	12
22.	திருவள்ளூர்	4
23.	திருவண்ணாமலை	710
24.	திருவாரூர்	2
25.	தூத்துக்குடி	2
26.	திருப்பூர்	1653
27.	திருச்சி	809
28.	திருநெல்வேலி	3
29.	வேலூர்	864
30.	விழுப்புரம்	1611
31.	விருதுநகர்	0
	மாநில மொத்தம்	***36,140***

[2013 அக்டோபர் 28

49—

விவசாயிகளை ஊக்குவித்தல்

வினா எண் 24790—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் தக்காளி சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். மானாமதுரை தொகுதியில் தக்காளி சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் 2012-2013 ஆம் ஆண்டில் கீழ்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன :—

1. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தக்காளி வீரிய ஒட்டு இரக விதைகள் 50 சதவிகித மானியத்தில் 35.00 எக்டர் பரப்பளவில் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளன.

2. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் துல்லிய பண்ணையத் திட்ட இனத்தின்கீழ் தக்காளி ஒட்டு இரக விதைகள் மற்றும் நுண்ணீர்ப் பாசன அமைப்புடன் நீரில் கரையும் உரங்களும் மானியத்தில் வழங்கப்படுகின்றன.

3. தேசிய நுண்ணீர்ப் பாசன இயக்கத்தின்கீழ் 20 எக்டர் பரப்பில் சொட்டுநீர் அமைப்புகள் தக்காளி சாகுபடி செய்யும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியத்திலும் நிறுவப்பட்டுள்ளன.

50—

விலங்குகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்

வினா எண் 8948—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

(அ) தமிழ்நாட்டில் சிறுத்தை, புலி, காட்டெருமை, சிங்கவால் குரங்கு, யானை, சாம்பல் நிற அணில் போன்றவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் வன உயிரினங்கள் அவற்றிற்குரிய உறைவிடத்தில் எவ்வித இடையூறுமின்றி இருக்கவும், அவற்றின் இனத்தைப் பெருக்கவும், அந்தந்த வன உயிரினத்திற்குத் தேவையான இரை கிடைக்கக்கூடிய சூழலை உருவாக்கவும், இந்த அரிய வன உயிரினங்களை வேட்டையாடும் சட்ட விரோதமான செயலினை முற்றிலும் தடுக்கவும், வன உயிரின (பாதுகாப்பு) சட்டம் 1972-ன்படி 5 தேசிய பூங்காக்கள், 10 வன உயிரின சரணாலயங்கள், 3 உயிர்கோள காப்பகங்கள், 4 யானைகள் காப்பகங்கள் மற்றும் 4 புலிகள் காப்பகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றில் உள்ள வன உயிரினங்களைப் பாதுகாக்கவும் அப்பகுதிகளின் மேம்பாட்டுக்காகவும், யானைகள் பாதுகாப்புத் திட்டம், புலிகள் பாதுகாப்புத் திட்டம் மற்றும் வன உயிரின மேம்பாட்டுத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் மைய அரசு நிதியுதவியுடன் முன்னேற்றப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2011-2012 ஆம் நிதியாண்டில் மத்திய அரசின் நிதியுதவி திட்டத்தின் கீழ் ரூ. 1332.84 இலட்சம் செலவிலும் மாநில அரசின் நிதியுதவி திட்டத்தின்கீழ் ரூ. 1466.55 இலட்சம் செலவிலும் பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2012-2013 ஆம் நிதியாண்டில் மேற்கண்ட பகுதிகளின் முன்னேற்றத்திற்காக மத்திய அரசு ரூ. 1,303.833 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அவற்றில் ரூ. 954.71 இலட்சம் விடுவித்துள்ளது. மாநில அரசின் பங்களிப்புடன் சேர்த்து ரூ. 1107.58 இலட்சம் தமிழக அரசு விடுவித்து பணிகள் நடைபெற்று வருகின்றன. இதைத் தவிர மாநில அரசு திட்டங்களின்மூலம் ரூ. 2,070.03 இலட்சம் விடுவித்து பணிகள் நடைபெற்று வருகின்றன. இம்மாதிரியான நடவடிக்கைகளின்மூலம் வன உயிரினங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதுடன் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது.

[2013 அக்டோபர் 28

51—

மிருகக்காட்சி சாலை

வினா எண் 17606—திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை வடக்கு பகுதியில் அரசுக்குச் சொந்தமான இடத்தில் மிருகக்காட்சி சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை வடக்கு பகுதியில் அரசுக்குச் சொந்தமான இடத்தில் மிருகக்காட்சி சாலை அமைப்பது தொடர்பாக செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

52—

சிறு வன மகசூல்

வினா எண் 22053—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வன உரிமைச் சட்டம் 2006-ன்படி சிறு வன மகசூல் சேகரிக்கும் உரிமையை வனக் குழுவிற்குப் பதிலாக அந்தந்த கிராம சபைக்கு வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

சிறு வன மகசூல் சேகரிக்கும் உரிமையை வனக் குழுவிற்குப் பதிலாக கிராம சபைக்கு நேரடியாக வழங்க சட்டத்தில் மற்றும் அரசாணையில் வழிவகை ஏதும் இல்லை. இருப்பினும், பழங்குடியினர் மற்றும் இதர மரபுவழி வனவாழ்வினர் (வன உரிமைகள் அங்கீகரிப்பு) சட்டம் 2006 (சட்டம் 2/2007)

2013 அக்டோபர் 28]

இயற்றப்பட்டு, செயலாக்கப் பணிகள் குறிப்பிட்ட கால வரையறைக்குள் செய்து முடிக்க வனத் துறை மற்றும் பழங்குடியினர் நலத் துறையும் ஒருங்கிணைப்பு துறையாக இருந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை இச்சட்டத்தினை நிறைவேற்றும் பணிகளை ஒருங்கிணைக்கும் துறையாக செயல்படுகிறது. இச்சட்டத்தினை நடைமுறைக்குக் கொண்டுவர, அரசாணை எண் 19, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 19-2-2008-ல் மாநில அளவிலான கண்காணிப்புக் குழு, தலைமைச் செயலாளர் தலைமையில் அமைக்கப்பட்டு, இக்குழுவின் உறுப்பினர் செயலாளராக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையில் ஆணையர் நியமிக்கப்பட்டுள்ளார். மேற்சொன்ன சட்ட விதிகளின்படியும், இந்த அரசாணையின்படியும் வன உரிமைகளை நிர்ணயித்து முடிவு செய்ய, கிராம சபை அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது 31-12-2012 முடிய 22,524 வன உரிமைக்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்கள் கிராம சபாவினால் இச்சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்டுள்ளன. வன உரிமைக்கான இவ்விண்ணப்பங்கள் பல்வேறு நிலைகளில் மேற்படி சட்டத்தின்படி, ஆய்வில் உள்ளன. மனுக்களின் பரிசீலனை நிலைகள், பழங்குடியினர் நலத் துறையினரால் கண்காணிக்கப்படுகிறது.

இச்சட்டத்தினை எதிர்த்து திரு. சாம்பசிவம் என்பவர் நீதிப் பேராணை எண் 4533/2008 மூலம் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதனைத் தவிர திரு. முருகதாஸ் தீர்த்தபதி என்பவர் நீதிப் பேராணை எண் 533/2008 மூலம் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கும் தற்போது நிலுவையில் உள்ளது. இதனைத் தவிர பாராளுமன்றத்தில் இச்சட்டத்தினை இயற்றுவதின் தகுதி குறித்து பாம்பே நேச்சரல் இஸ்டரி சொசைட்டி (Bombay Natural History Society) உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளது. அதுவுமின்றி இச்சட்டத்தினை அமல்படுத்துவதற்கு தடை கோரி பல்வேறு உயர் நீதிமன்றங்களில் ரிட் வழக்குகள் தொடரப்பட்டதால், இவ்வழக்கின் மீது ஒருமுகமான தீர்வு காணும்பொருட்டு, உயர் நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளை உச்ச நீதிமன்றத்திற்கு

[2013 அக்டோபர் 28

மாற்றுவதற்கான மாறுதல் மனுவினை இந்திய அரசின் பழங்குடியினர் நலத் துறை மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை மூலம் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்து தற்போது நிலுவையில் உள்ள நிலையில், சிறு வன மகசூல் சேகரிக்கும் உரிமையை கிராம சபைக்கு வழங்க இயலாது.

53—

தடை விதித்தல்

வினா எண் 22747—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

யானைகளை வாகனங்கள் செல்லும் சாலையில் நடத்திச் செல்வதற்குத் தடை விதித்திடவும், வேறு இடத்திற்குச் செல்வதற்கு கனரக வாகனங்கள் பயன்படுத்துவதை கட்டாயப்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

1-5-1996 நாளிட்ட தமிழ்நாடு நிருவாக தீர்ப்பாயம், சென்னை O.A. எண்கள் 7422/93, 7459/93 முதல் 7462/93 வரை மற்றும் 7517/93 மற்றும் 7652/93 ஆகியவற்றில் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி வளர்ப்பு யானைகள் விழாக்களில் பங்குகொள்ள அனுமதிக்கப்படுகிறது. மைய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை (யானைகள் திட்டம்) கடிதம் எண் 9-5/2003-PE, நாள் 8-1-2008 மற்றும் தமிழ்நாடு வளர்ப்பு யானைகள் (மேலாண்மை மற்றும் பராமரிப்பு) விதிகள் 2011 ஆகியவற்றில் வளர்ப்பு யானைகளுக்கு போக்குவரத்து அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. போக்குவரத்து அனுமதி பெரும்பாலும் வாகனங்களில் யானையை கொண்டு செல்வதற்கே வழங்கப்பட்டு வருகிறது. மேலும், யானைக்கு மதம் ஏதும் பிடித்திருக்கவில்லை, இயலாமை மற்றும் தொற்றுநோய் ஏதும் இல்லை என்று கால்நடை மருத்துவரின் பரிசோதனை சான்றுமூலம் உறுதி செய்யப்பட்ட பின்னரே அந்த யானைக்கு போக்குவரத்து அனுமதி வழங்கப்படுகிறது.

2013 அக்டோபர் 28]

மேற்படி நெறிமுறைகள் மற்றும் வகுக்கப்பட்ட விதிகளின்படி கீழ்க்கண்ட கட்டுப்பாடுகளைப் பின்பற்ற வளர்ப்பு யானை உரிமையாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்:—

1. ஒரே நாளில் 30 கிலோ மீட்டருக்கு மேல் யானையை கால்நடையாக நடத்திச் செல்லக்கூடாது.

2. 50 கிலோ மீட்டருக்கு மேல் உள்ள இடத்திற்கு யானையை கால்நடையாக கொண்டு செல்லக்கூடாது. வாகனத்தில்தான் கொண்டு செல்ல வேண்டும்.

3. மூன்று மணி நேரத்திற்கு மேல் யானையை தொடர்ந்து நடத்திச் செல்லக் கூடாது.

4. பகல் 10 மணி முதல் 2 மணி வரை யானையை வெயில் நேரத்தில் நடத்திச் செல்லக்கூடாது.

குறிப்பாக வாகனங்கள் செல்லும் சாலையில் யானைகளை நடத்திச் செல்லக்கூடாது என நேரடியாக விதி இல்லையாயினும் மேற்கண்ட விதிக்கட்டுப்பாடுகளினால் யானைகளை வாகனங்கள் செல்லும் சாலையில் கால்நடையாக அதிக தூரம் கொண்டு செல்வதற்கு வாய்ப்புகள் இல்லை.

54—

தடை விதித்தல்

வினா எண் 28321—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மனித உயிரிழப்பை தவிர்த்திடும் வகையில் யானைகளை சாலைகளில் நடத்திச் செல்வதற்குத் தடை விதித்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) 1-5-1996 நாளிட்ட தமிழ்நாடு நிருவாக தீர்ப்பாயம், சென்னை O.A. எண்கள் 7422/93, 7459/93 முதல் 7462/93 வரை மற்றும் 7517/93 மற்றும் 7652/93 ஆகியவற்றில் வழங்கப்பட்ட

தீர்ப்பின்படி வளர்ப்பு யானைகள் விழாக்களில் பங்குகொள்ள அனுமதிக்கப்படுகிறது. மைய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை (யானைகள் திட்டம்) கடிதம் எண் 9-5/2003-PE, நாள்: 8-1-2008 மற்றும் தமிழ்நாடு வளர்ப்பு யானைகள் (மேலாண்மை மற்றும் பராமரிப்பு) விதிகள் 2011 ஆகியவற்றில் வளர்ப்பு யானைகளுக்கு போக்குவரத்து அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. போக்குவரத்து அனுமதி பெரும்பாலும் வாகனங்களில் யானையை கொண்டு செல்வதற்கே வழங்கப்பட்டு வருகிறது. மேலும், யானைக்கு மதம் ஏதும் பிடித்திருக்கவில்லை, இயலாமை மற்றும் தொற்றுநோய் ஏதும் இல்லை என்று கால்நடை மருத்துவரின் பரிசோதனை சான்றுமூலம் உறுதி செய்யப்பட்ட பின்னரே அந்த யானைக்கு போக்குவரத்து அனுமதி வழங்கப்படுகிறது.

மேற்படி நெறிமுறைகள் மற்றும் வகுக்கப்பட்ட விதிகளின்படி கீழ்க்கண்ட கட்டுப்பாடுகளைப் பின்பற்ற வளர்ப்பு யானை உரிமையாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்:—

1. ஒரு நாளில் 30 கிலோ மீட்டருக்கு மேல் யானையை கால்நடையாக நடத்திச் செல்லக்கூடாது.

2. 50 கிலோ மீட்டருக்கு மேல் உள்ள இடத்திற்கு யானையை கால்நடையாக கொண்டு செல்லக்கூடாது. வாகனத்தில்தான் கொண்டு செல்ல வேண்டும்.

3. மூன்று மணி நேரத்திற்கு மேல் யானையை தொடர்ந்து நடத்திச் செல்லக் கூடாது.

4. பகல் 10 மணி முதல் 2 மணி வரை யானையை வெயில் நேரத்தில் நடத்திச் செல்லக்கூடாது.

குறிப்பாக வாகனங்கள் செல்லும் சாலையில் யானைகளை நடத்திச் செல்லக்கூடாது என நேரடியாக விதி இல்லையாயினும், மேற்கண்ட விதிக் கட்டுப்பாடுகளினால் யானைகளை வாகனங்கள் செல்லும் சாலையில் கால்நடையாக அதிக தூரம் கொண்டு செல்வதற்கு வாய்ப்புகள் இல்லை.

55—

புதிய பாலம் கட்டுதல்

வினா எண் 20889—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், ஓவர்ச்சேரி—கோட்டூர் கோட்டம் இடையே முள்ளியாற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், ஓவர்ச்சேரி—கோட்டூர் கோட்டம் இடையே முள்ளியாற்றின் குறுக்கே புதிய பாலம் கட்ட கோரப்படும் இடமானது கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஓவர்ச்சேரி—கோட்டூர் கோட்டம் சாலையில் கி.மீ. 0/2 ஆகும். இவ்விடத்தில் 2.50 மீட்டர் அகலம் 32 மீட்டர் நீளம் கொண்ட கான்கிரீட் பாலம் தற்போது பயன்பாட்டில் உள்ளது. எனவே, தற்போது புதிய பாலம் கட்ட அவசியம் ஏற்படவில்லை.

56—

புதிய பாலம் கட்டுதல்

வினா எண் 20893—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, சேந்தமங்கலம்—பெரியகுருவாடியை இணைக்க அரிச்சந்திர நதியில் புதிய பாலம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, சேந்தமங்கலம்—பெரியகுருவாடியை இணைக்க அரிச்சந்திர நதியில் புதிய பாலம் அமைக்க ஆய்வு செய்து கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தின் தடையில்லாச் சான்று பெற்று, வரும் நிதியாண்டில் நபார்டு வங்கி கடனுதவியுடன் நடவடிக்கை மேற்கொள்ள பரிசீலிக்கப்படும்.

[2013 அக்டோபர் 28

57—

பாலம் கட்டுதல்

வினா எண் 20901—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, கொத்தமங்கலம் ஊராட்சியில் முள்ளியாற்றில் பள்ளங்கோவில் கோட்டகம் இணைப்பு சாலையில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, கொத்தமங்கலம் ஊராட்சியில் முள்ளியாற்றில் பள்ளங்கோவில் கோட்டகம் இணைப்பு சாலையில் பாலம் அமைக்க கொத்தமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தின் தடையில்லாச் சான்று பெற்று, வரும் நிதியாண்டில் அரசின் நிதிநிலைமைக்கேற்ப நபார்டு வங்கி கடனுதவியுடன் செயல்படுத்த பரிசீலிக்கப்படும்.

58—

புதிய பாலம் கட்டுதல்

வினா எண் 20893—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, சேந்தமங்கலம்—பெரியகுருவாடியை இணைக்க அரிச்சந்திர நதியில் புதிய பாலம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, சேந்தமங்கலம் பெரியகுருவாடியை இணைக்க அரிச்சந்திர நதியில் புதிய பாலம்

2013 அக்டோபர் 28]

அமைக்க ஆய்வு செய்து கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தின் தடையில்லாச் சான்று பெற்று, வரும் நிதியாண்டில் நபார்டு வங்கி கடனுதவிடன் நடவடிக்கை மேற்கொள்ள பரிசீலிக்கப்படும்.

59—

இருவழிச் சாலை அமைத்தல்

வினா எண் 24827—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, சங்கரி—எடப்பாடி சாலையை அகலப்படுத்தி இருவழிச் சாலையாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) சங்கரி தொகுதி, எடப்பாடி சாலை கி.மீ. 0/0—13/2 வரை மாவட்ட முக்கிய சாலையாகும். மேற்கண்ட சாலை முழுவதும் இருவழிப் பாதையாக உள்ளது.

(ஆ) இக்கேள்வி எழாது.

60—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 24828—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், பூலாவாரி பாரப்பட்டி வழி மல்லூர் செல்லும் சாலையை அகலப்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், பூலாவாரி பாரப்பட்டி வழி மல்லூர் செல்லும் சாலையானது மாவட்ட இதர சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 0/0-1/0 வரை 5.50 மீட்டர் அகலமுள்ள இடைவழித்தடமாகவும், கி.மீ. 1/0-3/609 வரை 3.75 மீட்டர் அகலமுள்ள ஒருவழித்தடமாகவும் உள்ளது. இச்சாலையினை கி.மீ. 1/0-3/609 வரை அகலப்படுத்த முன்னுரிமை அடிப்படையில் வரும் நிதியாண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.

61—

இருவழிச் சாலையாக மாற்றுதல்

வினா எண் 24835—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எளம்பிள்ளை—வேம்படிதாளம் சாலையில் தப்பக்குட்டை வழியாக எட்டிக்குட்டை மேடு வரை செல்லும் சாலையை அகலப்படுத்தி இருவழிச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எளம்பிள்ளை—வேம்படிதாளம் சாலையில் தப்பக்குட்டை வழியாக எட்டிக்குட்டை மேடு வரை செல்லும் சாலையின் ஓடுதளம் 3.75 மீட்டர் அகலமுள்ள ஒருவழித்தடமாக தற்போதுள்ள போக்குவரத்துச் செறிவிற்கு ஏற்றாற்போல் உள்ளது. அகலப்படுத்தும் அவசியம் தற்போது எழவில்லை.

2013 அக்டோபர் 28]

62—

தார்ச் சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 26527—திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, வெட்டன்விடுதி—கருக்காகுறிச்சி வரை செல்லும் தார்ச் சாலையை அகலப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) (1) வெட்டன்விடுதி—கோட்டைக்காடு (வழி) கடுக்காகாடு சாலை கி.மீ. 0/0-4/0 இதில் கி.மீ. 0/0-2/0 வரை 2009-2010 ஆம் நிதியாண்டிலும், கி.மீ.2/6-4/0 வரை 2008-2009 ஆம் நிதியாண்டிலும் தனிச்சீர் பணிகளின்கீழ் மேம்பாடு செய்யப்பட்டது.

(2) வாணக்கண்காடு—கருக்காகுறிச்சி சாலை கி.மீ. 31/6-36/4 வரை நடப்பு 2012-2013 ஆம் நிதியாண்டில் மேம்பாடு செய்யப்பட்டது.

இவ்விரு சாலைகளும் ஒருவழித்தட அகலம் கொண்டவையாகும். அரசின் கொள்கை முடிவின்படி, இடைவழித்தடமாக உள்ள மாநில நெடுஞ்சாலைகளை இருவழித்தடமாகவும், ஒருவழித்தடமாக உள்ள மாவட்ட முக்கியச் சாலைகளை இடைவழித்தடமாகவும் அகலப்படுத்துவதற்கு முன்னுரிமை அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட இரு சாலைகளைப் பொறுத்தவரை, இடைவழித்தடமாக அகலப்படுத்திட தேவையான போக்குவரத்துச் செறிவு தற்போது இல்லாததால், இச்சாலைகளில் போக்குவரத்துச் செறிவு அதிகரிக்கும்போது இடைவழித்தடமாக அகலப்படுத்த பரிசீலிக்கப்படும்.

(ஆ) இக்கேள்வி எழாது.

[2013 அக்டோபர் 28

63—

புதிய குடும்ப அட்டை

வினா எண் 17553—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதியில் புதிய குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்துள்ளவர்களுக்கு புதிய அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் வட்டத்தில் புதிய குடும்ப அட்டைகள் கோரி 1-6-2011 முதல் 3,755 மனுக்கள் வரப்பெற்றதில், தகுதி வாய்ந்த 1,047 மனுதாரர்களுக்கு புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 511 மனுக்கள் உரிய ஆவணங்கள் இணைக்கப்படாததால் தள்ளுபடி செய்யப்பட்டன. மீதம் உள்ள 2,197 மனுக்களுக்கு புதிய குடும்ப அட்டைகள் அச்சிட்டு வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

64—

புதிய கட்டடம் கட்டும் பணி

வினா எண் 17989—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, அம்பத்தூரில் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலகம் கட்டும் பணியை விரைந்து முடிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

சென்னை, உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர்

2013 அக்டோபர் 28]

பாதுகாப்புத் துறை உதவி ஆணையாளர், அம்பத்தூர் மண்டல அலுவலகத்திற்கு ரூ. 91.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 11-8-2012 அன்று பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது. இந்த புதிய கட்டடத்தில் அலுவலகம் 13-8-2012 முதல் இயங்கி வருகிறது.

65—

சுற்றுச்சூழல் பாதிப்பு

வினா எண் 16541—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பூவந்தி பகுதியில் கிரானைட் ஆலைகளால் நிலத்தடி நீர் மற்றும் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தாலுகா எல்லைக்குட்பட்ட பூவந்தி கிராமத்தில் சுமார் 17 கிரானைட் கற்கள் பாலிஷ் செய்யும் தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. இத்தொழிற்சாலைகள் செயல்முறையில் (கிரானைட் கற்களை அறுத்தல்) உபயோகப்படுத்தப்படும் நீரை மீண்டும் உபயோகப்படுத்தி வருகின்றன. இத்தொழிற்சாலைகள் செயல்முறை கழிவு நீரை மறு உபயோகம் செய்வதால் கழிவு நீர் வெளியேற்றப்படுவதில்லை. மேலும், கழிவுநீர் சுத்திகரிப்பு மேற்கொள்ளும்போது உருவாகும் திடக் கழிவுகளை செங்கல் தயாரிக்கும் சூளைகளுக்கும் மற்றும் தொழிற்சாலையின் வளாகத்தில் தாழ்வான நிலப்பகுதிகளில் நிரப்புவதற்கும் பயன்படுத்தி வருவதால் நிலத்தடி நீர் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட வாய்ப்பில்லை.

[2013 அக்டோபர் 28

66—

அணையை தூர்வாருதல்

வினா எண் 3022—திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வைகை அணையை தூர் வார அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், வைகை அணையை தூர் வாருவதற்கு விருப்ப வெளிப்பாடு (Expression of Interest) 11 நிறுவனங்களிலிருந்து 26-9-2012 அன்று பெறப்பட்டது. 7-12-2012 அன்று முதன்மைத் தலைமைப் பொறியாளர், சேப்பாக்கம், சென்னை அவர்களின் தலைமையில் நடைபெற்ற தொழில்நுட்பக் குழுவின் அறிவுரைப்படி, வைகை அணை நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மணல் படிமானங்கள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ள உரிய மட்ட அளவுகள், நீர்ப்பரப்பு மேலாண்மை (Water Shed Management) பொறியாளர்களால் எடுக்கப்பட்டு வருகிறது. தொழில் நுட்பக் குழுவின் முடிவின்படி வைகை அணை தூர் வாருதல் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

67—

மடைகளை சீரமைத்தல்

வினா எண் 7754—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி வட்டம், ஏர்வாடி கிராமம், தளவாய்புரம் அணைக்கட்டிலுள்ள மணல்வாரி சட்டர், வடமலையான் கால்வாயில் மடைகளை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி வட்டம், நம்பியாற்றின் குறுக்கே தளவாய்புரம் அணைக்கட்டிலிருந்து வடமலையான் கால்வாயின் மூலம் பாசனம் பெறுகின்ற இராதாபுரம் வட்டத்தில் அமைந்துள்ள 44 குளங்கள், மடைகள் மற்றும் மறுகால் வரத்துக்கால்வாய்கள் உட்பட அனைத்து நீர் ஆதார கட்டமைப்புகளையும் புனரமைப்பு செய்வதற்காக ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நபார்டு திட்டத்தில் நிதியுதவி பெறும் வகையில் மதிப்பீடு தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

சட்டமன்ற உறுப்பினர், நாங்குநேரி தொகுதி அவர்களின் கோரிக்கைகளான நாங்குநேரி வட்டம், ஏர்வாடி கிராமம், தளவாய்புரம் அணைக்கட்டில் உள்ள மணல்வாரி ஷட்டர்கள் மற்றும் வடமலையான் கால்வாயில் பாசனம் பெறுகின்ற 8 நேரடி பாசன மடைகளையும் புனரமைத்து மேம்பாடு செய்யும் பணிகளும் இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்.

68—

தூர்வாரி சீரமைத்தல்

வினா எண் 19607—திரு. ஏ. லாசர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதி, பெரியகுளம் ஒன்றியம், மஞ்சளாறு அணையிலிருந்து தண்ணீர் செல்லும் நாகர்வள்ளி அணைக்கட்டை தூர்வாரி சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், மஞ்சளாறு அணையிலிருந்து நீர்பெறும் அணைக்கட்டுகள்,

[2013 அக்டோபர் 28

வாய்க்கால்கள் மற்றும் கண்மாய்கள், ஆண்டுதோறும் கிடைக்கப்பெறும் பராமரிப்பு நிதியின் கீழ் மராமத்துப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், நாகர்வள்ளி அணைக்கட்டை வரும் நிதியாண்டில் அரசிடமிருந்து நிதி பெற்று தூர்வாரி சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

69—

கால்வாய் புனரமைப்பு

வினா எண் 21523—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை நாட்டார் கால்வாயைப் புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியத்தில் உள்ள நாட்டார் கால்வாய் 2008-2009 ஆம் ஆண்டில் நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ் கோட்டைக் கரையாறு உபவடிநிலப் பகுதி உலக வங்கி நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்டுள்ளது.

70—

கால்வாய் தூர்வாருதல்

வினா எண் 22355—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியப் பகுதியில் சிறிய வரத்துக் கண்மாய்களின் நீர்வரத்துக் கால்வாய்களை தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) காரைக்குடி சட்டமன்றத் தொகுதி, சாக்கோட்டை ஒன்றியப் பகுதியில் பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் மொத்தம் 26 வரத்துக் கால்வாய்கள் உள்ளன. இவற்றில் 21 வரத்துக் கால்வாய்கள் தூர்வாரும் பணி நீர்வள, நிலவளத் திட்டம் மற்றும் வருடாந்திர மராமத்து நிதியின் வாயிலாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதமுள்ள 5 வரத்துக் கால்வாய்களை தூர்வாரும் பணி வரும் 2013-2014 நிதியாண்டில் கிடைக்கும் நிதியின் அளவைப் பொறுத்து, முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும். மேலும், இப்பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய கண்மாய்களின் வரத்துக் கால்வாய்கள் சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ளவையாகும்.

71—

கண்மாய் மராமத்து

வினா எண் 22898—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், கற்களத்தூர் கண்மாய்களை மராமத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி சட்டமன்றத் தொகுதி, தேவகோட்டை ஒன்றியத்தில் உள்ள கற்களத்தூர் கண்மாயினை சீரமைக்கும் பணியானது 2008-2009 முதல் 2009-2010 வரையில் இக்கோட்டத்தில் நடைபெற்ற நீர்வள, நிலவளத் திட்ட முதல்

[2013 அக்டோபர் 28

கட்டத் தொகுப்பு பணிகளின்கீழ் மேற்கொள்ளப்பட்டது. இக்கண்மாயில், 5 மதகுகள் மறு கட்டுமானப் பணி மற்றும் கண்மாய்க்கரை பலப்படுத்தும் பணி ஆகியவை செய்து முடிக்கப்பட்டுள்ளன.

72—

கதவுகளைச் சீரமைத்தல்

வினா எண் 26638—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, பார்த்திபனூர் மதகு அணையில் பழுதான கதவுகளைச் சீரமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, பார்த்திபனூர் மதகு அணையில் உள்ள பழுதான கதவுகளைச் சீரமைக்க 2010-2011 ஆம் ஆண்டில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, சீரமைப்புப் பணிகள் முழுவதும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. தற்பொழுது கதவுகள் (Shutters) நல்ல முறையில் இயங்கும் நிலையில் உள்ளன.

73—

தடையில்லாச் சான்று

வினா எண் 28776—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், தளி—அம்மாபட்டி ஒன்றியச் சாலையை மேம்பாடு செய்ய பொதுப் பணித் துறையின் தடையில்லாச் சான்று வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அம்மாபட்டி கிராமத்திற்கு தளியிலிருந்து சுமார் 4.50 கி.மீ. செல்ல வேண்டும். இதில் 1.20 கி.மீ. வரையுள்ள பாதையானது பொதுப் பணித் துறையினரின் கட்டுப்பாட்டில் உள்ள கரிசல் குளத்தின் கரை பகுதியாகும். மீதமுள்ள 3.30 கி.மீ. மட்டும்தான் ஒன்றியச் சாலையாகும். மேற்கண்ட 1.20 கி.மீ. வரையுள்ள பொதுப் பணித் துறை கட்டுப்பாட்டில் உள்ள கரைப்பகுதி பாதையை ஒன்றியச் சாலையாக மாற்ற உரிய துறையினரிடமிருந்து வேண்டுகோள் வரும்பட்சத்தில் இது குறித்து முடிவு எடுக்கப்படும்.

74—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 21573—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விளவங்கோடு தொகுதி, மேல்புறம் ஒன்றியம், படந்தாலுமூடு கால்நடை முதலுதவி மையத்தினை கால்நடை கிளை நிலையமாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் :

(அ) விளவங்கோடு தொகுதி, மேல்புறம் ஒன்றியம், படந்தாலுமூடு கால்நடை முதலுதவி மையத்தினை கால்நடை கிளை நிலையமாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் உள்ளன.

(ஆ) கால்நடை அலகுகள் 4,000-க்கும் அதிகமாக உள்ளதால், வரும் நிதியாண்டில், கால்நடை நிலையங்களை தரம் உயர்த்தும் முன்னுரிமைப் பட்டியலில் சேர்த்து தரம் உயர்த்துவதற்கு பரிசீலிக்கப்படும்.

[2013 அக்டோபர் 28

75—

கடனுதவி வழங்குதல்

வினா எண் 25641—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில், ஆட்டுப் பண்ணைகள், நாட்டுக் கோழிப் பண்ணைகள் அமைக்க கடனுதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) தற்பொழுது சிவகங்கை மாவட்டத்தில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இயங்கும் தேசிய புரதச்சத்து வழங்கும் திட்டத்தில், 8 சுய உதவிக் குழுக்களுக்கு, ஓர் சுய உதவிக் குழுவிற்கு 9 நபர்கள் என்ற விகிதத்தில், 9 பெட்டை ஆடுகள் மற்றும் 1 கிடா ஆடு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் பலர் ஆட்டுப் பண்ணை அமைக்க வாய்ப்பு உருவாகி உள்ளது.

மேலும், அம்மாவட்டத்தில் தமிழ்நாடு கோழி அபிவிருத்தித் திட்டத்தின்மூலம் 250 முதல் 500 நாட்டுக் கோழிகள் வரையிலான எண்ணிக்கையில் கோழிப் பண்ணைகள் அமைப்பதற்கு, கோழி கொட்டகை கட்டும் செலவில் 50 சதவீதம் மானியம் (25 சதவீதம் மத்திய அரசும், 25 சதவீதம் மாநில அரசும்) வழங்கவுள்ளது. இதைத்தவிர இரண்டாம் தொகுப்பு 1 நாள் வயது கோழிக் குஞ்சுகள் வாங்கும் செலவில், 50 சதவீதம் மானியமாக வழங்கவுள்ளது மற்றும் 3 ஆம் தொகுப்பு 1 நாள் வயது கோழிக்குஞ்சுகள் வாங்கும் செலவில், 30 சதவீதம் மானியமாக வழங்கவுள்ளது. இதன்மூலம் அம்மாவட்டத்தில் மானாமதுரை தொகுதிக்குட்பட்ட நாட்டுக் கோழிப் பண்ணைகள் அமைக்க பெரும் வாய்ப்புள்ளது.

(ஆ) கேள்வி எழாது.

2013 அக்டோபர் 28]

76—

புதிய தொழிற்சாலைகள் தொடங்குதல்

வினா எண் 28567—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் அரசுத் துறை சார்ந்த புதிய தொழிற்சாலைகள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் அரசுத் துறை சார்ந்த புதிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

எனினும், தகுந்த தொழில் முனைவோர்கள், மானாமதுரை தொகுதியில் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்குத் தேவையான நிதி முதலீடுகளுடனும், செயல்குறிப்புகளுடனும் முன்வந்தால், அவர்களுடன் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் இணைந்து திட்ட சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து திட்டத்தைச் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

77—

வரைபடத்தில் குற்றாலம்

வினா எண் 17315—டாக்டர் ச. துரையப்பா: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக சுற்றுலா வரைபடத்தில் குற்றாலம் இடம் பெற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சுற்றுலாத் துறையின்மூலம் வெளியிடப்படும் தமிழக சுற்றுலா வரைபடத்தில் குற்றாலம் இடம் பெற்றுள்ளது.

78—

திறந்தவெளி அரங்கம்

வினா எண் 17980—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சென்னை இசைக் கல்லூரியில் திறந்தவெளி அரங்கத்தை விரைந்து கட்டி முடிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

2008-2009 ஆம் ஆண்டு மைய அரசு நிதியுதவித் திட்டத்தின்கீழ் சென்னை இசைக் கல்லூரியில் திறந்தவெளி அரங்கம் கட்டுவதற்கு ரூ.368.08 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, கலை மற்றும் பண்பாட்டுத் துறை ஆணையர் அவர்களின்மூலம் பொதுப் பணித் துறையால் பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் இப்பணி முடிக்கப்படும்.

79—

விட்டுமனைப் பட்டா

வினா எண் 10641—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை தொகுதி, குமாரமங்கலம் ஊராட்சி, நாஞ்சிலார் நகர் மற்றும் மாத்தூர் ஊராட்சி, கே.கே.நகர் மக்களுக்கு பட்டா வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், குமாரமங்கலம் கிராமம், நாஞ்சிலார் நகர், புல எண் 342/2 மற்றும் 3/4 ஆகியவற்றிற்கு நிலமதிப்பு செலுத்தி பட்டா வழங்க ஆணையிடப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்கள் நில மதிப்பு செலுத்தாததால் பட்டா வழங்க இயலவில்லை. மேலும், குளத்தூர் வட்டம், மாத்தூர் கிராமம், கே.கே.நகர் புல எண். 2/5 மொத்த பரப்பு 1.49.5 எக்டேர் கிராமக் கணக்கில் வாரி என பதிவாகியுள்ளதால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

80—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 13479—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், ஆண்டியகவுண்டனூர் ஊராட்சி, கிழவன்காட்டூர் கிராமம், க.ச. 136/9, 2 2½ ஏக்கர் நிலத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஆண்டியகவுண்டனூர் கிராமம், புல எண் 136, கிராம ஆவணங்களின்படி அரசு புறம்போக்கு என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்புலத்தின் மொத்த விஸ்தீரணம் 1.83.5 எக்டேர், இதில் 0.94.5 எக்டேர் நிலத்தினை நத்தமாக வகைப்பாடு மாற்றம் செய்து 89 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) நிலமாற்றம் செய்து விரைவில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

81—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 18768—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் வட்டம், மாதப்பூர் கிராமம், க.ச.எண் 872 தீர்வை ஏற்பட்ட தரிசு நிலத்தில் 15 ஏக்கரை கையகப்படுத்தி ஏழைகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் வட்டம், பல்லடம் தொகுதி, மாதப்பூர் கிராமம், க.ச. 872 தீர்வை ஏற்பட்ட தரிசு பூமி 15 ஏக்கரில் கையகப்படுத்தி ஏழைகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரிய புலத்தின் பேரில் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்பதால் தற்போது பட்டா வழங்க வழிவகைகள் இல்லை.

82—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 18769—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஒன்றியம், வேலம்பாளையம் ஊராட்சி, க.ச.எண் 76/1 மந்தை புறம்போக்கில் குடியிருக்கும் குடும்பங்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) •பல்லடம் வட்டம், பல்லடம் ஒன்றியம், வேலம்பாளையம் கிராமம், க.ச. 76/1—இல் குடியிருந்து வருபவர்கள் ஆட்சேபகரமான மந்தை புறம்போக்கு நிலத்தில் குடியிருந்து வருவதால் பட்டா வழங்க வழிவகை இல்லை.

83—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 18770—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, மாணிக்கபுரம் ஊராட்சி, ஓம் சக்தி நகர் தரிசு நிலத்தில் வசிப்பவர்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) •பல்லடம் வட்டம், மாணிக்கபுரம் ஊராட்சி, ஓம் சக்தி நகர் தரிசு நிலத்தில் வசிப்பவர்களுக்கு உரிய முன்மொழிவுகள் திருப்பூர் வருவாய்க் கோட்டாட்சியரிடமிருந்து விவரம் பெற்ற பின் தகுதியுள்ள நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

84—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 18772—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஒன்றியம், வேலம்பாளையம் ஊராட்சி, வி.கே.பி. நகரில் வசித்து வரும் மக்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் வட்டம், பல்லடம் தொகுதி, வேலம்பாளையம் ஊராட்சி, வி.கே.பி. நகரில் வசித்து வரும் மக்களுக்கு பட்டா வழங்க கோரிய பூமி, தனி நபருக்குச் சொந்தமான பட்டா பூமி என்பதால் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

85—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 21172—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் வட்டம், கரைப்புதூர் கிராமம், க.ச. 444, 41, 42, 157, 372, 636/3 இல் குடியிருந்து வருபவர்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) பல்லடம் தொகுதி மற்றும் வட்டம், கரைப்புதூர் கிராமம், க.ச.41, 42, கரைப்புதூர் நத்தம் க.ச.157 பச்சாங்காட்டு பாளையம், நத்தம் க.ச. 444 அவரப்பாளையம் நத்தம் ஆகிய நத்தம் புறம்போக்கில் வசிப்பவர்களுக்கு நத்தம் நிலவரித் திட்டத்தில் ஏற்கெனவே மனைவரிப் பட்டா வழங்கப்பட்டுவிட்டது. இத்திட்டத்தில் விடுபட்டு மேற்கண்ட புலங்களில்

2013 அக்டோபர் 28]

குடியிருப்பவர்களில் தகுதியானவர்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கரைப்புதூர் கிராமம் க.ச. 372/1 மற்றும் க.ச. 636/3 ஆகிய பூமிகள் பட்டா பூமி என்பதால், அப்புலங்களில் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்க இயலாது.

(ஆ) 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் தகுதியானவர்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

86—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 21177—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் வட்டம், உப்பிலிபாளையம், கரைப்புதூர் கிராமம், க.ச. 93/1பி மந்தை மற்றும் வண்டிப் பாதையில் குடியிருந்து வருபவர்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பல்லடம் வட்டம், உப்பிலிபாளையம், கரைப்புதூர் கிராமம், க.ச. 93/1பி—இல் குடியிருந்து வருபவர்கள் ஆட்சேபகரமான மந்தை மற்றும் வண்டிப்பாதை என வகைப்பாடு செய்யப்பட்ட நிலங்களில் குடியிருந்து வருவதால், நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி வீட்டுமனைப் பட்டா வழங்க வழிவகைகள் இல்லை.

87—

பட்டாக்கள் இரத்து செய்தல்

வினா எண் 25767—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை, உடைகுளம் கண்மாய் மற்றும் கே.கே.பள்ளம் தொகுதியில் வழங்கப்பட்ட பட்டாக்களை இரத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை, உடைகுளம் கண்மாயில் வீட்டுமனைப் பட்டாவோ, அரசு நன்செய், புன்செய், புறம்போக்குகளில் பட்டாக்களோ எதுவும் வழங்கப்படவில்லை. உடைகுளம் கண்மாயில் வீடுகட்டி யாரும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை. மேலும், உடைகுளம் கண்மாய்க்கு மேற்குப் பகுதியில் செய்களத்தூர் குரூப்பில் சர்க்கார் புன்செய்யில் வீடுகட்டி ஆக்கிரமிப்பு உள்ளது. ஆக்கிரமிப்பை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

88—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 25786—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், அ.வெள்ளைக்கரை ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், நெல்முடிக்கரை குரூப் மற்றும் கிராமம், புல எண் 3/1B, 1A1 இல் விஸ்தீரணம் 1.79.5 எக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, நில ஆர்ஜிதம் செய்து பட்டா வழங்கப்பட்டது. உயர் நீதிமன்றத்தில்

2013 அக்டோபர் 28]

நில உரிமையாளர் வழக்குத் தொடர்ந்து 4(1) தவறு என்றும், தவறினைத் திருத்தி புதியதாக 4(1) நோட்டீசை அனுப்பி ஆர்ஜித நடவடிக்கை தொடர சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டுள்ளது. அதன்படி மீண்டும் அந்நிலத்தை 4(1) ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை தொடரப்பட்டுள்ளது.

89—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 25927—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கொந்தகை ஊராட்சி, மந்தைப் புறம்போக்கு இடத்தில் கொடுக்கப்பட்ட பட்டாக்களை இரத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை வட்டம் (தற்போது திருப்புவனம் வட்டம்) கொந்தகை கிராமம், புல எண் 1-2 விஸ்தீரணம் 3.82.5 மந்தைவெளி புறம்போக்கில் நாளது தேதிவரை பட்டாக்கள் ஏதும் வழங்கப்படவில்லை. எனவே, பட்டா இரத்து செய்ய வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

90—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 28127—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் வட்டம், கரைப்புதூர் கிராம ஊராட்சி, மீனம்பாறை கிராமம், க.ச.எண் 372 புறம்போக்கு நிலத்தை அரசுமூலம் தனி நபர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள

பட்டாவை இரத்து செய்து, அந்த இடத்தில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வீடு கட்டி வசித்து வரும் 60 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) •பல்லடம் வட்டம், கரைப்புதூர் கிராமம், க.ச. 372 இல் உள்ள நிலம் கிராம கணக்குகளில் பட்டா எண் 310 இன்படி அ. சுப்பராயக்கவுண்டர் என்பவர் பெயரில் பட்டா பூமியாக பதிவு செய்யப்பட்டுள்ளபடியால், அந்த இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வருபவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

91—

ஆசிரியர் நியமனம்

வினா எண் 15853—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், நடுப்பட்டி ஊராட்சி, ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஒன்றியம், நடுப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 1 முதல் 5 ஆம் வகுப்புகளில் 39 மாணவர்களும், 6 முதல் 8 ஆம் வகுப்புகளில் 74 மாணவர்களும், ஆக மொத்தம் 113 மாணவர்கள் பயில்கின்றனர். இப்பள்ளியில் குழந்தைகளுக்கான இலவச மற்றும்

2013 அக்டோபர் 28]

கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரப்படி 1 தலைமையாசிரியர், 2 பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் 2 இடைநிலை ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். எனவே, இப்பள்ளிக்கு கூடுதலாக ஆசிரியர் பணியிடம் அனுமதிப்பது குறித்த அவசியம் எழவில்லை.

92—

சிறப்பு ஆசிரியர் பணியிடம்

வினா எண் 22087—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ராதாபுரம் தொகுதி, சமூகரங்கபுரம் அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் ஆசிரியர், சிறப்பு ஆசிரியர் பணியிடங்ளை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதி, சமூகரங்கபுரம் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் உடற்கல்வி ஆசிரியர் ஒரு பணியிடமும், கைத்தொழில் ஆசிரியர் ஒரு பணியிடமும், ஓவிய ஆசிரியர் பணியிடம் ஒன்றும் காலியாக உள்ளது. இதுபோன்ற காலிப் பணியிடங்களை, அரசின் அனுமதி பெற்று, ஆசிரியர் தேர்வுவாரியம்மூலம் நிரப்பிட துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

93—

தலைமை ஆசிரியர் பணியிடம்

வினா எண் 27520—திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2013 அக்டோபர் 28

(அ) ஆம்பூர் தொகுதி, அகரம்சேரி அரசு உயர்நிலைப் பள்ளியிலுள்ள தலைமை ஆசிரியர் பணியிடத்தை நிரப்பும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம்பூர் தொகுதி, அகரம்சேரி அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடத்திற்கு திருவண்ணாமலை மாவட்டம், இளங்குன்னி அரசு உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய திருமதி ஏ. தாமரைச்செல்வி என்பவரை மாறுதல் செய்து 3-12-2012 அன்று ஆணை வழங்கப்பட்டு, அன்னார் அப்பள்ளியில் தற்போது தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்து வருகிறார்.

94—

மும்முனை மின் இணைப்பு

வினா எண் 25041—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், பீர்க்கலைக்காடு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் மற்றும் கூடுதல் கட்டடம் கட்டவும், அவசர ஊர்தி வழங்கவும், ஆழ்குழாய்க் கிணறுமூலம் குடிநீர் வசதி ஏற்படுத்தவும், மும்முனை மின் இணைப்பு வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் பீர்க்கலைக்காடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது. பீர்க்கலைக்காடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் 6 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் ஆகும். பீர்க்கலைக்காடு கூடுதல் ஆரம்ப சுகாதார

2013 அக்டோபர் 28]

நிலையத்தில் தடுப்பூசி அறை, பணியாளர் குடியிருப்பு, பிரசவ வார்டு (Labour ward) ஆகிய வசதிகள் உள்ளன. 2011-2012 நிதியாண்டில் தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் பிரசவ அறை விரிவாக்கம் செய்ய ரூ.9.66 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பொதுப் பணித் துறைமூலம் கட்டடப் பணி நடைபெற்று வருகிறது. பீர்க்கலைக்காடு ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தும் போது அவசர ஊர்தி வழங்கப்படும். குடிநீருக்கு ஆழ்குழாய்க் கிணற்று நீர் பயன்படுத்தப்படுகிறது. மின்சாரம் ஒரு முனை மின் இணைப்பு இயங்குகிறது. சுற்றுச்சுவர் கட்ட தற்போது நிதி ஒதுக்கீடு இல்லை.

95—

பல் மருத்துவ சேவைகள்

வினா எண் 10965—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பல் மருத்துவ சேவைகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் உள்ள 1,614 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 208 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் மருத்துவ சேவை இயங்கி வருகின்றது. மேலும், அரசு ஆணை (நிலை) எண் 335, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அஉதி-II (2) துறை, நாள் 7-12-2012-ன்மூலம் 65 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் மருத்துவ சேவை துவங்க அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மீதியுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்படும்போது பல் மருத்துவ சேவை துவங்கப்படும்.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

[2013 அக்டோபர் 28

96—

சுற்றுச்சுவர் அமைத்தல்

வினா எண் 16349—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், மாங்குடி ஊராட்சி, மாங்குடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் மாங்குடி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படவில்லை. ஆனால், காவேரி நகர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் மாங்குடி துணை சுகாதார நிலையம் செயல்படுகிறது. மாங்குடி துணை சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்ட தற்போது நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லையாதலால் சுற்றுச்சுவர் கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

97—

துணை சுகாதார நிலையத்திற்கு கட்டடம்

வினா எண் 20684—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கரைப்புதூர் ஊராட்சி, அருள்புரம் துணை சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் ஊராட்சி ஒன்றியத்தில் எண்ணை ஊராட்சியில் செம்மிபாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் அருள்புரம் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அருள்புரம் துணை சுகாதார நிலையம் மிகவும் பழுதடைந்துள்ளதால், தற்போது வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அருள்புரம் துணை சுகாதார நிலைய கட்டடம் கட்ட தற்போது நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை. எனவே, அருள்புரம் துணை சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

98—

தடுப்பூசி போடும் முறை

வினா எண் 22428—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வனப் பகுதிகளில் வாழும் ஆதிவாசி குழந்தைகளுக்கு அவர்களது இருப்பிடத்திற்கே சென்று தடுப்பூசி போடும் முறையை நடைமுறைப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கிராம சுகாதார செவிலியர்களால் ஒவ்வொரு வாரமும் தடுப்பூசி போடும் நாட்களில், துணை சுகாதார மையத்திற்குட்பட்ட கிராமங்களுக்குச் சென்று குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

99—

மருத்துவ உபகரணங்கள்

வினா எண் 25000—திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

மன்னார்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்குக் கட்டடம் கட்டவும் மருத்துவ உபகரணங்கள் வாங்கவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மன்னார்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் தேவையான அனைத்து மருத்துவ உபகரணங்கள் மற்றும் கட்டட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. எனவே, கூடுதல் கட்டடம் கட்டவும், மருத்துவ உபகரணங்கள் வழங்கவும் அவசியம் தற்போது எழவில்லை.

100—

பிரேத பரிசோதனைக் கிடங்கு

வினா எண் 25048—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, கண்டனூர் அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக் கிடங்கை திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், கண்டனூர் அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காகக் கொண்டு வரப்படும் பிணங்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதாலும், இம்மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக பிணங்கள் கொண்டுவரப்பட்டாலும் அவற்றை

2013 அக்டோபர் 28]

இம்மருத்துவமனையிலிருந்து 15 கி.மீ. தூரத்தில் உள்ள காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்வதால், மருத்துவமனையின் தற்போதைய பயன்பாட்டின் அடிப்படையில் கண்டனூர் அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக் கிடங்கு ஏற்படுத்தவேண்டிய முகாந்திரம் தற்போது எழவில்லை.

பட்டியல் 11

1—

மின் விளக்கு வசதி

வினா எண் 25147—திரு. சு. ரவி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 20-வது வார்டு, கற்பக விநாயகர் கோயில் தெருவின் பின்புறம் புதியதாக மின்கம்பம் அமைத்து, சிறுகுழல் மின்விளக்கு வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 20-வது வார்டு, கற்பக விநாயகர் கோயில் தெருவின் பின்புறத்தில் ஏற்கெனவே 15 எண்ணிக்கை தெருவிளக்குகள் உள்ளன. இப்பகுதியில் புதியதாக மின்கம்பம் அமைத்து, சிறுகுழல் மின்விளக்குகள் அமைக்கக் கோரி நகராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

2—

மின் கம்பங்களை மாற்றுதல்

வினா எண் 25148—திரு. சு. ரவி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 21-வது வார்டு, பாலசுந்தரம் தெருவிலிருந்து பைப் கம்பெனிக்குச் செல்லும் வழியில் உள்ள மின்கம்பம், அன்னை சிவகாமி தெருவில் நடுவில் உள்ள மின்கம்பம் ஆகிய மின்கம்பங்களை மாற்று இடத்தில் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 21-வது வார்டு, பாலசுந்தரம் தெருவிலிருந்து பைப் கம்பெனிக்குச் செல்லும் வழியிலுள்ள மின்கம்பம் மற்றும் அன்னை சிவகாமி தெருவில் உள்ள மின்கம்பங்களை மாற்றியமைக்கக் கோரி அரக்கோணம் நகராட்சியிலிருந்து மனு பெறும் பட்சத்தில், அதற்குண்டான மதிப்பீட்டுத் தொகை பெறப்பட்ட பின்னர் மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3—

மின் கம்பிகள் சீரமைப்பு

வினா எண் 25536—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி வட்டம், கீழநெட்டூர் கிராமப் பகுதியில் தாழ்வாகத் தொங்கும் மின்கம்பிகளை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் இளையான்குடி வட்டம், கீழநெட்டூர் கிராமப் பகுதியில் தாழ்வாகத் தொங்கிய மின்கம்பிகள் கடந்த 5-10-2012 அன்று இழுத்துக் கட்டப்பட்டு சீரமைக்கப்பட்டன.

4—

மும்முனை மின் இணைப்பு

வினா எண் 25575—திரு. கு. ரவி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 6-வது வார்டு, டவுன்ஹால் 3-வது தெருவிற்கு மும்முனை மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 6-வது வார்டு, டவுன்ஹால் 3-வது தெருவில் மொத்தம் ஐந்து குறுக்குத் தெருக்கள் உள்ளன. அவற்றில் மூன்று தெருக்களுக்கு மும்முனை மின்சாரம் ஏற்கெனவே உள்ளது. மீதமுள்ள இரண்டு தெருக்களில் ஒரு முனை வீட்டு மின் இணைப்புகளே உள்ளன. எனவே, மும்முனை மின்சாரம் தற்சமயம் அவசியமில்லை. அந்த குறுக்குத் தெருக்களில் இருந்து மும்முனை மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டவுடன் மும்முனை மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2013 அக்டோபர் 28

5—

சீரான மின்சாரம்

வினா எண் 25654—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், மூங்கில் ஊரணி பகுதிக்கு கூடுதல் மின் அழுத்த மின்சாரம் மற்றும் கங்கை அம்மன் குடியிருப்பிற்கு சீரான மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், மூங்கில் ஊரணி பகுதிக்கு ஆண்டிக்குளம் SS V 100 KVA மின்மாற்றியிலிருந்தும், கங்கை அம்மன் குடியிருப்பிற்கு உடைகுளம் SS I 100 KVA மின்மாற்றியிலிருந்தும் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்மாற்றிகளில் கூடுதல் மின்பளுவோ குறைந்த மின்னழுத்தக் குறைபாடோ இன்றி சீரான மின்விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

6—

புதிய மின்கம்பங்கள்

வினா எண் 25657—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், கலைக்குளம் கிராமத்தில் பழுதான மின்கம்பங்களை அகற்றி புதிய மின்கம்பங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், கலைக்குளம் கிராமத்தில் இரண்டு எண்ணிக்கை பழுதான மின்கம்பங்கள் 3-9-2012 அன்று மாற்றப்பட்டுள்ளன. மேலும் பழுதான மின்கம்பங்கள் கண்டறியப்பட்டால் விரைவில் மாற்றி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

7—

மின்விளக்குகள் பொருத்துதல்

வினா எண் 25658—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி பேரூராட்சியில் பழுதான மின்கம்பங்கள், மின்கம்பிகளை அகற்றிவிட்டு புதிய மின்கம்பங்கள், மின்கம்பிகளை அமைக்கவும், தரமான மின் விளக்குகளைப், பொருத்தவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி பேரூராட்சியில் புதூர், செங்கம்பட்டி, ஹமீதா பள்ளிவாசல் மற்றும் காசிம்ராவுத்தர் தெரு ஆகிய இடங்களில் இருந்த பழுதடைந்த மின்கம்பங்கள் மாற்றப்பட்டுள்ளன. இஸ்மாயில் தெரு மற்றும் காசீம் ராவுத்தர் தெரு ஆகிய இடங்களில் இருந்த பழுதடைந்திருந்த மின்கம்பிகள் மாற்றப்பட்டுள்ளன. மேலும் பழுதான கம்பங்கள் மற்றும் கம்பிகள் கண்டறியப்பட்டால் விரைவில் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் மின்விளக்குகள் பொருத்தப்படவில்லை. மின்விளக்குகள் பொருத்தும் பணி பேரூராட்சியினால் மட்டுமே செய்யப்பட்டு வருகிறது.

[2013 அக்டோபர் 28

8—

புதிய மின்கம்பங்கள்

வினா எண் 25661—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், வல்லக்குளத்தில் கூடுதலாக புதிய மின்மாற்றி அமைத்துத் தரவும் மற்றும் பழுதான மின்கம்பங்களை அகற்றி புதிய மின்கம்பங்களை அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், வல்லக்குளம் ஊராட்சிக்கு ஒரு 100 KVA மின்மாற்றி மற்றும் இரண்டு 16 KVA மின்மாற்றிமூலம் மின்விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்மாற்றிகள் வரையறுக்கப்பட்ட மின்பளுவிற்குள் இருப்பதாலும், குறைந்த மின்னழுத்தக் குறைபாடு இல்லாததாலும் தற்பொழுது புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. மேலும், வல்லக்குளம் பகுதியில் எட்டு எண்ணிக்கை பழுதான மின்கம்பங்கள் மாற்றப்பட்டு உள்ளன. மேலும் பழுதான கம்பங்கள் கண்டறியப்பட்டு விரைவில் மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

9—

புதிய மின்மாற்றி

வினா எண் 25975—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மணலூரில் கூடுதலாக ஒரு புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மணலூர் கிராமத்திற்கு ஒரு 100 KVA மின்மாற்றி மற்றும் ஒரு 63 KVA மின்மாற்றிமூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்மாற்றிகள் வரையறுக்கப்பட்ட மின்பளுவிற்குள் இருப்பதாலும், குறைந்த மின்னழுத்தக் குறைபாடு எதுவும் இல்லாததாலும் தற்பொழுது உள்ள மின்மாற்றிகளே போதுமானது. தேவை ஏற்பட்டால் புதிய மின்மாற்றி அமைத்திட ஆவன செய்யப்படும்.

10—

புதிய மின்மாற்றி

வினா எண் 25977—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், அதிகரை, கானூர் ஆகிய பகுதிகளில் புதிய மின்மாற்றி அமைக்கவும், பழுதான மின்கம்பங்களை அகற்றி புதிய மின்கம்பங்கள் அமைத்து பராமரிக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், அதிகரை கிராமத்திற்கு ஒரு 250 KVA மின்மாற்றி மூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்மாற்றி வரையறுக்கப்பட்ட மின்பளுவிற்குள் இருப்பதாலும், குறைந்த மின்னழுத்தக் குறைபாடு எதுவும் இல்லாததாலும் தற்பொழுது உள்ள மின்மாற்றிகளே போதுமானது. மேலும், அதிகரை கிராமத்தில் இரண்டு பழுதான மின்கம்பங்கள் 19-9-2012 அன்று மாற்றப்பட்டுள்ளன. மேலும் பழுதான மின்கம்பங்கள்

[2013 அக்டோபர் 28

கண்டறியப்பட்டு விரைவில் மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கானூர் கிராமத்திற்கு இரண்டு 100 KVA மின்மாற்றிமூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்மாற்றி வரையறுக்கப்பட்ட மின்பளுவிற்குள் இருப்பதாலும், குறைந்த மின்னழுத்தக் குறைபாடு எதுவும் இல்லாததாலும் தற்பொழுது உள்ள மின்மாற்றிகளே போதுமானது. கானூர் கிராமத்தில் இரண்டு பழுதான மின்கம்பங்கள் 12-10-2012 அன்று மாற்றப்பட்டுள்ளன. மேலும் பழுதான மின்கம்பங்கள் கண்டறியப்பட்டு விரைவில் மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

11—

புதிய மின்மாற்றி

வினா எண் 26023—திரு. ரபு. பாபு முருகவேல்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், சேப்பாக்கத்தில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதிக்குட்பட்ட சேப்பாக்கம் கிராமத்திற்கு ஆரணியிலுள்ள 110/33-11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து 11 கி.வோ. விண்ணமங்கலம் கிராமிய மின்பாதையில் உள்ள மூன்று மின்மாற்றிகள் (100 கே.விஏ-1, 63 கே.வி.ஏ.-1 மற்றும் 25 கே.வி.ஏ.-1) மூலம் சீரான மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்மாற்றிகள் வரையறுக்கப்பட்ட மின்பளுவிற்குள் இருப்பதால் தற்பொழுது உள்ள மின்மாற்றிகளே போதுமானது. தேவை ஏற்பட்டால் புதிய மின்மாற்றி அமைத்திட ஆவன செய்யப்படும்.

2013 அக்டோபர் 28]

12—

மின்கம்பிகளை சீரமைத்தல்

வினா எண் 26206—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், எஸ். காரைக்குடி, முனைவென்றி, கோட்டையூர், அதிகரை ஆகிய பகுதிகளில் தாழ்வாகச் செல்லும் மின்கம்பிகளை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், எஸ். காரைக்குடி, முனைவென்றி, கோட்டையூர், அதிகரை ஆகிய பகுதிகளில் தாழ்வாகச் செல்லும் மின்கம்பிகள் 10-9-2012 மற்றும் 14-9-2012 ஆகிய தேதிகளில் சரி செய்யப்பட்டுள்ளன. மேலும் தாழ்வாகச் செல்லும் மின்கம்பிகள் கண்டறியப்பட்டு விரைவில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

13—

மின்கம்பிகளை சீரமைத்தல்

வினா எண் 26210—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், செல்லப்பனேந்தல், அதிகரை ஆகிய பகுதிகளில் தாழ்வாகச் செல்லும் மின்கம்பிகளை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், செல்லப்பனேந்தல், அதிகரை ஆகிய பகுதிகளில் தாழ்வாகச் செல்லும் மின்கம்பிகள் 13-9-2012 மற்றும் 19-9-2012 ஆகிய தேதிகளில் சரி செய்யப்பட்டுள்ளன. மேலும் தாழ்வாகச் செல்லும் மின்கம்பிகள் கண்டறியப்பட்டு விரைவில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

14—

புதிய மின்மாற்றி

வினா எண் 26289—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, புதுப்பட்டி பிரிவு கரு. கீழத்தெரு மின்மாற்றி எண் 3, 13-னை பிரித்து புதியதாக மின்மாற்றி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, புதுப்பட்டி பிரிவு கரு.கீழத்தெரு மின்மாற்றி எண் 3-ல் இரண்டு 100 KVA மின்மாற்றிகள் உள்ளன. ஒன்றில் 9 விவசாய மின் இணைப்புகள் 98 HP மின்பளுவுடனும், மற்றொரு மின்மாற்றியில் 13 விவசாய மின் இணைப்புகள் 143 HP மின்பளுவுடன் இயங்கி வருகின்றன. கரு.கீழத்தெரு மின்மாற்றி எண் 13-ன் திறன் 100 KVA ஆகும். அதில் 7 விவசாய மின் இணைப்புகள் 62.5 HP மின்பளுவுடன் இயங்கி வருகின்றன. புதிதாக ஒரு மின்மாற்றி அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் இப்பணிகள் முடிக்கப்படும்.

2013 அக்டோபர் 28]

15—

அனுமதி

வினா எண் 26451—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குந்தா நீரேற்று புனல் மின் நிலையம் (4X125 மெகா வாட்) அமைக்க மத்திய நீர்வளத் துறை குழுமம் / மத்திய மின்சார ஆணையத்திடம் அனுமதி பெறப்பட்டுவிட்டதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மத்திய நீர்வளத் துறை குழுமத்தின் ஒப்புதல் பெறுவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டும் ஒப்புதல் கிடைக்கவில்லை.

(ஆ) அதனால் தமிழகத்தின் தற்போதைய மின் தேவையைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம், மாநில அரசின் அனுமதி அளிக்கும் அதிகாரத்திற்குள் வருமாறு திட்டத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்து முதற்கட்டமாக பகுதி-I-ன் கட்டுமானப் பணிகளை உடனடியாக எடுத்துக்கொள்ள உத்தேசித்து அதற்கான மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான 30 ஹெக்டேர் வன நிலங்களை, வன பாதுகாப்புச் சட்டம் 1980-ன் கீழ் எடுத்துக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்திடமிருந்து பெறப்பட்ட சுற்றுச்சூழல் ஒப்புதல் 7-5-2012 அன்றுடன் காலாவதியானதால் அவ்வொப்புதலுக்கான கால நீட்டிப்பு அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

[2013 அக்டோபர் 28

திட்டத்தின் எஞ்சிய ஆய்வுகள் மற்றும் ஆயத்தப்பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

திட்டத்தின் கட்டுமானப் பணிகளை எடுத்துக்கொள்வதற்குத் தேவையான ஆலோசனை சேவைகள் (Consultancy Service,) பெறுவதற்கான ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

16—

துணை மின் நிலையம்

வினா எண் 26469—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2012-2013 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 60 துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், தென்காசி தொகுதியில் எந்தெந்த இடங்களில் துணை மின் நிலையங்கள் அமையப்பட உள்ளன?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) ஆம். 60 துணை மின் நிலையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) தற்சமயம், தென்காசி தொகுதியில், தென்காசியில் ஒரு 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க ரூபாய் 133.337 இலட்சம் மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்துணை மின் நிலையம் 2012-2013-க்கான மின் தொடர் அமைப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு துணை மின் நிலையத்தின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்து வேலைகளும் முடிந்து இந்த நிதியாண்டு 2012-2013 இறுதிக்குள் துணை மின் நிலையம் இயக்கத்திற்குக் கொண்டுவரப்படும்.

2013 அக்டோபர் 28]

17—

சீரான மின்சாரம்

வினா எண் 26516—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை பேரூராட்சி 14-வது வார்டு, ஆர்.சி. நந்தன்குளம், கீழநந்தன்குளத்திற்கு சீரான மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை பேரூராட்சி 14-வது வார்டு, ஆர்.சி. நந்தன்குளம், கீழநந்தன்குளத்திற்கு அறிவிக்கப்பட்ட மின்தடை நேரம் போக மற்ற நேரங்களில் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

18—

மின்மாற்றி

வினா எண் 27199—திரு. சு. ரவி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, ஆண்டரசன்பேட்டை, பெருமூச்சி ஊராட்சி, டிபன்ஸ் காலனி, கீழ்ப்பாக்கம் ஊராட்சி, இராஜபாளையம், கீழ்குப்பம் ஆகிய பகுதிகளில் உள்ள 63 கே.வி.ஏ. திறனுடைய மின்மாற்றியை 100 கே.வி.ஏ. திறனுடைய மின்மாற்றியாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், கீழ்குப்பம் பகுதிக்கு 63 KVA மின்மாற்றியை 100 KVA-வாக 13-8-2012 அன்று மாற்றி அமைக்கப்பட்டது. அம்மனூர் ஊராட்சி, ஆண்டரசன்பேட்டை, பெருமூச்சி ஊராட்சி, டிபன்ஸ் காலனி, கீழ்ப்பாக்கம் ஊராட்சி, இராஜபாளையம், கீழ்குப்பம் ஆகிய பகுதிகளில் உள்ள 63 KVA மின்மாற்றியை 100 KVA மின்மாற்றிகளாக அமைக்க அனுமதி பெறப்பட்டுள்ளது. ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் மின்மாற்றி அமைக்கப்பட்டு இயக்கத்திற்குக் கொண்டுவரப்படும்.

19—

மின்மாற்றி

வினா எண் 27203—திரு. சு. ரவி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், காவனூர் ஊராட்சி, நரசிங்கபுரம் கிராமத்தில் உள்ள 50 கே.வி.ஏ. திறனுடைய மின்மாற்றியை 100 கே.வி.ஏ. திறனுடைய மின்மாற்றியாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், காவனூர் ஊராட்சி, நரசிங்கபுரம் கிராமத்தில் ஏற்கெனவே இருந்த 50 கே.வி.ஏ. திறனுடைய மின்மாற்றி 100 கே.வி.ஏ. திறனுடைய மின்மாற்றியாக மாற்றி அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

2013 அக்டோபர் 28]

20—

மின்கம்பங்களை மாற்றியமைத்தல்

வினா எண் 27205—திரு. சு. ரவி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 17-வது வார்டு, கண்ணன் மாவு மில் தெரு, ஒத்தவாடை தெரு, 30-வது வார்டு முனுசாமி முதலி தெரு, அங்காளம்மன் கோயில் தெரு ஆகிய தெருக்களின் நடுவில் உள்ள மின்கம்பங்களை அகற்றி தெரு ஓரமாக அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 17-வது வார்டு, கண்ணன் மாவு மில் தெரு, ஒத்தவாடை தெரு, 30-வது வார்டு முனுசாமி முதலி தெரு, அங்காளம்மன் கோயில் தெரு ஆகிய தெருக்களின் நடுவில் உள்ள மின்கம்பங்களை அகற்றி தெரு ஓரமாக அமைக்க (பிணை வைப்பு கேட்பு தொகை பணி) நகராட்சி அதற்குண்டான பணத்தை மின்வாரியத்திற்குச் செலுத்த முன்வந்தால் கம்பங்களை அகற்றி தெரு ஓரமாக அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

21—

மின்கம்பம்

வினா எண் 27212—திரு. சு. ரவி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், கீழ்குப்பம் ஊராட்சியில் பழுதடைந்துள்ள 37 மின்கம்பங்களை

[2013 அக்டோபர் 28

அகற்றி, புதிய 24 அடி உயரம் மின்கம்பங்களை அமைக்கவும், மூகாம்பிகை நகரில் பழுதடைந்த 4 மின்கம்பங்களை அகற்றி புதிய 24/30 அடி மின்கம்பங்களாக அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், கீழ்குப்பம் ஊராட்சியில் பழுதடைந்துள்ள 37 மின்கம்பங்களில் 13 மின்கம்பங்கள் 9-9-2012, 11-9-2012, 12-9-2012 மற்றும் 13-9-2012 அன்று புதிய மின் கம்பங்களாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பழுதடைந்த 24 மின்கம்பங்கள் விரைவில் மாற்றி அமைக்கப்படும். மேலும், மூகாம்பிகை நகரில் பழுதடைந்த 4 மின்கம்பங்கள் 14-8-2012 மற்றும் 16-8-2012 அன்று புதிய மின்கம்பங்களாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

22—

மின்விளக்கு அமைத்தல்

வினா எண் 27220—திரு. சு. ரவி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், பெருமூச்சி ஊராட்சி, அகன்நகர் சர்ச் 1-வது மற்றும் 2-வது தெரு, முத்துநகர் 2, 3-வது தெரு, திருவரங்கம் தெரு, அன்னை தெரசா தெரு, அரசமரத் தெரு ஆகிய தெருக்களில் புதிய மின்கம்பத்துடன் மின்விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், பெருமூச்சி ஊராட்சி, அகன்நகர் சர்ச் 1-வது மற்றும் 2-வது தெரு, முத்துநகர் 2, 3-வது தெரு, திருவரங்கம் தெரு, அன்னை தெரசா தெரு, அரசமரத் தெரு ஆகிய தெருக்களில் புதிய மின்கம்பத்துடன் மின்விளக்கு அமைக்கக் கோரி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

23—

மின்கம்பத்துடன் மின்விளக்கு

வினா எண் 27234—திரு. சு. ரவி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், பெருமூச்சி ஊராட்சி, பெருமூச்சி மணியக்கார குறுக்குத் தெரு, பிள்ளையார் கோயில் தெரு, மேட்டுத் தெரு ஆகிய தெருக்களில் புதிய மின்கம்பத்துடன் மின்விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், பெருமூச்சி ஊராட்சி, மணியக்கார குறுக்குத் தெரு, பிள்ளையார் கோயில் தெரு, மேட்டுத் தெரு ஆகிய தெருக்களில்

[2013 அக்டோபர் 28

புதிய மின்கம்பத்துடன் மின்விளக்கு அமைக்கக் கோரி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

24—

மின்கம்பத்துடன் மின்விளக்கு

வினா எண் 27237—திரு. சு. ரவி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், பெருமூச்சி ஊராட்சி, என். வெங்கடேசபுரம் ஏர்டெல், 1, 2-வது தெருக்கள், டிரான்ஸ்பார்மர் 2, 3-வது தெருக்கள், பாக்கியலட்சுமி 3-வது தெரு, காமராஜர் தெரு, பிள்ளையார் கோயில் தெரு ஆகிய தெருக்களில் மின்கம்பத்துடன் மின்விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், பெருமூச்சி ஊராட்சி, என். வெங்கடேசபுரம் ஏர்டெல், 1, 2-வது தெருக்கள், டிரான்ஸ்பார்மர் 2, 3-வது தெருக்கள், பாக்கியலட்சுமி 3-வது தெரு, காமராஜர் தெரு, பிள்ளையார் கோயில் தெரு ஆகிய தெருக்களில் மின்கம்பத்துடன் மின்விளக்கு அமைக்கக் கோரி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

2013 அக்டோபர் 28]

25—

மின்கம்பத்துடன் மின்விளக்கு

வினா எண் 27242—திரு. சு. ரவி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், பெருமூச்சி ஊராட்சி, டிபன்ஸ் காலனி 3, 4-வது குறுக்குத் தெரு, டேங்க் தெரு, அம்மன் கோயில் தெரு ஆகிய தெருக்களில் மின்கம்பத்துடன் மின்விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், பெருமூச்சி ஊராட்சி, டிபன்ஸ் காலனி 3, 4-வது குறுக்குத் தெரு, டேங்க் தெரு, அம்மன் கோயில் தெரு ஆகிய தெருக்களில் மின்கம்பத்துடன் மின்விளக்கு அமைக்கக் கோரி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

26—

மின்கம்பத்துடன் மின்விளக்கு

வினா எண் 27245—திரு. சு. ரவி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், பெருமூச்சி ஊராட்சி, இருளர் காலனி, திரௌபதியம்மன் கோயில் 2, 4, 6-வது தெரு, புளியந்தோப்பு சந்து தெரு, காவாகரை ஆகிய பகுதிகளில் மின்கம்பத்துடன் மின்விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், பெருமூச்சி ஊராட்சி, இருளர் காலனி, திரௌபதியம்மன் கோயில் 2, 4, 6-வது தெரு, புளியந்தோப்பு சந்து தெரு, காவாகரை ஆகிய பகுதிகளில் மின்கம்பத்துடன் மின்விளக்கு அமைக்கக் கோரி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

27—

புதிய மின்கம்பத்துடன் மின்விளக்கு

வினா எண் 27266—திரு. சு. ரவி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, அம்மனூர் போஸ்ட் ஆபிஸ் தெரு, யாதவர் தெரு, மாவேரிப்பேட்டை மெயின் தெரு, மாவேரிப்பேட்டை 3, 4-வது தெரு ஆகிய தெருக்களில் புதிய மின்கம்பத்துடன் மின்விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, அம்மனூர் போஸ்ட் ஆபிஸ் தெரு, யாதவர் தெரு, மாவேரிப்பேட்டை மெயின் தெரு, மாவேரிப்பேட்டை 3, 4-வது தெரு ஆகிய தெருக்களில் புதிய மின்கம்பத்துடன் மின்விளக்குகள் அமைக்கக் கோரி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

2013 அக்டோபர் 28]

28—

மின்சார அலுவலகம் அமைத்தல்

வினா எண் 27935—திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், தோப்பூரில் மின்சார அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது தோப்பூர் பகுதி, வெள்ளார் பிரிவு அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. தோப்பூர் பகுதிக்கும், வெள்ளார் பிரிவு அலுவலகத்திற்கும் இடைப்பட்ட தூரம் 10 கி.மீ. ஆகும். வெள்ளார் பிரிவில் மொத்தம் 115 மின் மாற்றிகள் உள்ளன. அதில் தோப்பூர் பகுதியில் 12 மின் மாற்றிகளும் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் 43 மின் மாற்றிகளும் சேர்ந்து மொத்தம் 55 மின்மாற்றிகள் (64 அலகுகள்) உள்ளன. வெள்ளார், சின்ன திருப்பதி, காடையம்பட்டு பிரிவுகளில் இருந்து மின்மாற்றிகளை மாற்றம் செய்யப்பட்டாலும், வெள்ளார் பிரிவிலும், தோப்பூர் பகுதியிலும் உள்ள மின்மாற்றிகள் வாரிய நிலை ஆணை எண் 222, நாள் 21-11-2009-ன்படி ஊரகப் பகுதியில் புதிதாக மின்சார அலுவலகம் அமைக்க 105 மின்மாற்றிகளைவிட குறைந்த எண்ணிக்கையில் இருக்கின்ற நிலையில் தோப்பூரில் மின்சார அலுவலகம் அமைக்க சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

29—

மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி

வினா எண் 13307—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், ஆண்டியகவுண்டனூர் ஊராட்சி, உரல்பட்டி கிராமத்தில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஒன்றியம், ஆண்டியகவுண்டனூர் ஊராட்சிக்குட்பட்ட உரல்பட்டி கிராமத்திற்கு மக்கள்தொகைக்கேற்ப தற்சமயம் பயன்பாட்டில் இரண்டு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும் மற்றும் 5,000 லிட்டர் கொள்ளளவுள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியும் உள்ளதால், புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அவசியம் எழவில்லை.

30—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 13315—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், அமராவதி நகர், இந்திராபுரத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஒன்றியம், அமராவதி நகர், இந்திராபுரம் கிராமத்தின் மக்கள் தொகைக்கேற்ப 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை

2013 அக்டோபர் 28]

நீர்த்தேக்கத் தொட்டிமூலம் மடத்துக்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக போதிய குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதால், தற்போது புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட வாரிய விதிகளின்படி சாத்தியக்கூறுகள் இல்லை.

31—

நீரேற்றும் நிலையம்

வினா எண் 21358—திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி, 36-வது வட்டம், எம்.கே.பி. நகரில் கழிவு நீரேற்று நிலையம் அமைத்து நலச் சங்கம் உதவியுடன் செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

பெரம்பூர் தொகுதி, 36-வது வட்டத்திலுள்ள மேற்கு நிழற்சாலை மற்றும் அசோக் லேலேண்ட் குடியிருப்போர் நலச் சங்கத்திற்குப்பட்ட பகுதிகளில் தற்போது கழிவுநீர் கட்டமைப்பு வசதி உள்ளது. எனவே, தனியாக கழிவுநீரேற்று நிலையம் அமைக்க அரசிடம் தற்போது செயற்குறிப்பு எதுவுமில்லை.

32—

ஆள் நுழைவுவாயில்

வினா எண் 21717—திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி, 46-வது வட்டம், 2,3,4,5 பள்ளத்தெருக்களில் Manhole (ஆள் நுழைவுவாயில்)-களை உயர்த்திக் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

பெரம்பூர் தொகுதி, 46-வது வட்டம், 2,3,4,5 பள்ளத்தெருக்களில் 20 ஆள் நுழைவுவாயில்கள் ஏற்கெனவே உயர்த்தி அமைக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள 5 ஆள் நுழைவுவாயில்களை உயர்த்தியமைப்பதற்கு ஆவன செய்யப்படும்.

33—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 21724—திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி, 46-வது வட்டம், சத்தியமூர்த்தி மற்றும் குடிசை மாற்று வாரிய அடுக்குமாடி குடியிருப்பில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் குழாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம், மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

சத்தியமூர்த்தி நகர் மற்றும் குடிசை மாற்று வாரிய அடுக்குமாடி குடியிருப்பில் போதுமான பொதுக்குழாய்கள் அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. எனவே, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் எழவில்லை.

2013 அக்டோபர் 28]

34—

குடிநீர்த் தொட்டி

வினா எண் 23206—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், இடங்கணசாலை 3-வது வார்டு, கே.கே.நகர் மக்களுக்கு உருக்காலையிலிருந்து 60,000 லிட்டர் குடிநீர்த் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், இடங்கணசாலை பேரூராட்சி 3-வது வார்டு, கே.கே.நகர் பகுதியின் தற்போதைய மக்கள் தொகை 1,118 ஆகும். இப்பகுதிக்கு வாரியத்தின் பராமரிப்பிலுள்ள இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் 70 lpcd அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போதைய மக்கள் தொகைக்கு அரசு விதிமுறைப்படி, ஏற்கெனவே உள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி போதுமானதாகும். எனவே, கூடுதலாக 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அவசியம் எழவில்லை.

35—

கழிவுநீர் கலப்பதைத் தடுத்தல்

வினா எண் 27436—திரு. கு. நல்லதம்பி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) எழும்பூர் தொகுதியில் குடிநீரில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எழும்பூர் தொகுதியில் அடங்கியுள்ள தெருக்களிலிருந்து குடிநீரில் கழிவுநீர் கலப்பது குறித்து புகார் பெறப்பட்டவுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உடனுக்குடன் சரிசெய்யப்படுகிறது. தற்பொழுது குடிநீரில் கழிவுநீர் கலப்பதாக எந்தப் புகாரும் இல்லை.

36—

புதியதாக வீடுகள்

வினா எண் 22829—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டையில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் புதியதாக வீடுகள் கட்டி பொதுமக்களுக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது புதுக்கோட்டையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் எந்த நிலமும் கைவசம் இல்லாததால் புதிய வீடுகள் கட்டி பொதுமக்களுக்கு வழங்க தற்போது இயலாது. எனினும் வீட்டு வசதி வாரியம் புதிய நிலங்களைத் தேர்வு செய்து, நிலங்களை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நிலங்கள் வாரியத்தின்மூலம் கையகப்படுத்தப்பட்ட பின் புதுக்கோட்டையில் புதிய வீடுகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2013 அக்டோபர் 28]

37—

கூடுதல் கட்டடம்

வினா எண் 22840—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில் கூடுதல் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். காரைக்குடி தொகுதி, தேவகோட்டை வீட்டு வசதி வாரிய அரசு அலுவலர் குடியிருப்புக்கு மாவட்ட ஆட்சியர், சிவகங்கை அவர்களிடமிருந்து கேட்பு அறிக்கை (Demand Particulars) கிடைக்கப்பெற்ற பின்னர் வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில் கூடுதல் கட்டடம் கட்டித்தர ஆவன செய்யப்படும்.

38—

பட்டு உற்பத்தி

வினா எண் 28568—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பட்டு உற்பத்தியை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் பட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்காக விவசாயிகளை ஊக்கப்படுத்தி, பட்டுப் புழு வளர்ப்புத் தொழில் துவங்குவதற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.1,70,358/- அளவிலான மானிய உதவிகளை அரசு வழங்குகிறது. அரசு மானிய உதவிகள் விவசாயிகள் மல்பரி நடவு செய்வதற்கும், மல்பரித் தோட்டத்தில் சொட்டு நீர்ப் பாசன அமைப்பு நிறுவுவதற்கும், தனியாக பட்டுப் புழு வளர்ப்பு மனை அமைப்பதற்கும், புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்கும், பட்டுத் தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சி பெறுவதற்கும், பட்டுப் புழு வளர்ப்பு காப்பீடு செய்யவும் வழங்கப்படுகிறது.

பட்டு விவசாயிகளுக்கு இளம் பருவ பட்டுப் புழுக்களை வளர்த்து விநியோகிப்பதற்கு "சிறிய அளவிலான இளம்புழு வளர்ப்பு மையங்கள்" துவக்குவதற்கு ரூ.50,000/- மதிப்பிலான புழு வளர்ப்பு தளவாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இளம்புழுக்களைப் பெற்று வளர்ப்பதனால் விவசாயிகளுக்கு பட்டுக்கூடு அறுவடைமூலம் வருமானம் உறுதி செய்யப்படுகிறது.

படித்த இளைஞர்கள், தொழில் முனைவோர்கள் பட்டு நூற்புத் தொழில் தொடங்குவதற்கு நூற்புத் திறன் மேம்பாட்டுப் பயிற்சியும், பலமுனை பட்டு நூற்புத் நிலையங்கள் துவக்குவதற்கு இயந்திரங்களின் மதிப்பில் 75 சதவீதம் மானிய உதவியாக ரூ.7,50,000/-ம் மற்றும் காட்டேஜ் பேசின் நூற்பு நிலையங்கள் துவக்குவதற்கு இயந்திரங்களின் மதிப்பில் 75 சதவீதம் மானிய உதவியாக ரூ.187,500/- தொகையினையும் அரசு வழங்குகிறது.

39—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 12183—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், புங்கினிப்பட்டி ஊராட்சி, புங்கினிப்பட்டி நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்டவும், இக்கடையைப் பிரித்து சத்தியநாதபுரத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை துவக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியம், புங்கினிப்பட்டி ஊராட்சி, புங்கினிப்பட்டி நியாய விலைக் கடைக்கு ஊர்ப் பொதுமக்களால் கட்டடம் கட்டப்பட்டு இலவசமாக அளிக்கப்பட்டுள்ளது. எனவே, புங்கினிப்பட்டி நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்டும் நிலை எழவில்லை.

மேலும் புங்கினிப்பட்டி அங்காடியில் 452 குடும்ப அட்டைகளும், சத்தியநாதபுரத்தில் 125 குடும்ப அட்டைகளும் உள்ளன. தாய்க்கடை செயல்படும் இடத்திலிருந்து உத்தேசிக்கப்பட்டுள்ள பகுதிநேர நியாய விலைக் கடை 1 கி.மீ. தூரத்தில் உள்ளது. அரசு விதிமுறைகள் பொருந்தாத நிலையில், சத்தியநாதபுரத்தில் புதிய பகுதிநேர அங்காடி அமைத்திட வாய்ப்புகள் இல்லை.

40—

வீட்டு வாடகைப் படி

வினா எண் 4947—திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆனைமலை புலிகள் காப்பக பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப் படி, குளிர்காலப் படி, மலைப் படி, சலவைப் படி போன்றவை வழங்க அரசு ஆவன செய்யுமா?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

ஆனைமலை புலிகள் காப்பகத்தில் ஒப்பளிக்கப்பட்ட 337 பணியிடங்களில் தற்போது 245 பேர் பணியில் உள்ளனர். 92 இடங்கள் காலியாக உள்ளன. அவர்களுக்கு வீட்டு வாடகைப் படி, குளிர்காலப் படி, மலைப் படி, சலவைப் படி போன்றவை பணியாளர்கள் பணிபுரியும் தலத்தின் இருப்பிடத்திற்கேற்ப உரிய விதிமுறைகளின்படியும் அவர்தம் தகுதிக்குட்பட்டும் வழங்கப்பட்டு வருகிறது.

41—

தேக்கு மரம் ஏலம்

வினா எண் 23942—திருமதி ம. சக்தி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் 'தானே' புயலால் சாய்ந்துள்ள தேக்கு மரங்களை ஏலம் விட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 'தானே' புயலில் சாய்ந்துள்ள 4,217 தேக்கு மரங்களை அப்புறப்படுத்துவதற்கு அரசால் ரூ.30.78 இலட்சம் அரசாணை (டி) எண் 437, சுற்றுச்சூழல் - வனத் துறை, நாள் 19-12-2012-ல் அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. இதன்படி 'தானே' புயலில் விழுந்த மரங்களை 2012-2013 நிதியாண்டில் அப்புறப்படுத்தும் பணி துவங்கப்பட்டுள்ளது. 2013-2014 நிதியாண்டிற்குள் முழுமையாக அப்புறப்படுத்தி அரசு மர மண்டியில் சேர்த்து, முறையாக ஏலம் விட தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2013 அக்டோபர் 28]

42—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 20698—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், வலையன்வயல், சாக்கோட்டையில் பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியத்தில் சிவகங்கை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின்மூலம் புதுவயல் கடை எண் 11, 1,446 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வந்தது. அதில் 2-7-2012 முதல் 151 குடும்ப அட்டைகளைப் பிரித்து வேங்காவயலில் பகுதிநேரக் கடை செயல்பட்டு வருகின்றது. தற்போது சாக்கோட்டையில் புதுவயல் கடை எண் 11-ல் 1,295 குடும்ப அட்டைகளுடன் செயல்படுவதாலும், 83 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ள வலையன்வயல் கிராம குடும்ப அட்டைதாரர்கள் வேங்காவயல் பகுதிநேரக் கடையில் குடிமைப் பொருட்கள் பெற்று வருகின்றனர். வலையன்வயல் கிராமத்திற்கும், வேங்காவயல் பகுதி நேரக் கடைக்கும் அரை கிலோ மீட்டர் தூரம் மட்டுமே உள்ளதால், அரசால் வகுத்தமைத்த நிபந்தனைகள் பொருந்தாத நிலையில் வலையன்வயல் சாக்கோட்டை கிராமத்தில் பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

43—

ஏரிகளில் தண்ணீர் நிரப்புதல்

வினா எண் 22141—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) அரூர் தொகுதி, சென‌க்கல் கால்வாய்த் திட்டத்தின்மூலம் கொங்கவேம்பு (கீழ்மொரப்பூர்), கே. வேட்ரப்பட்டி, மாம்பட்டி, மத்தியம்பட்டி ஆகிய ஊராட்சிகளில் உள்ள ஏரிகளில் தண்ணீர் நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், தொட்டாம்பட்டி கிராமத்தினருகே பெண்ணையாற்றின் குறுக்கே அணை அமைத்து சென‌க்கல் மதிகெட்டான் கால்வாய்மூலம் அருகிலுள்ள ஏரிகளுக்கு தண்ணீர் வசதி அளிக்க 1991-1992 ஆம் ஆண்டில் ரூ.475 இலட்சங்களுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. இதன் பயன் செலவு விகிதம் 0.12:1 என்ற அளவில் மிகக் குறைவாக இருப்பதனாலும், பாதுகாக்கப்பட்ட வன நிலம் கையகப்படுத்துவது கடினம் என்பதாலும் இத்திட்டம் கைவிடப்பட்டது. இத்திட்டத்திற்கு மாற்றுத் திட்டமாக, பொருளாதார ரீதியாக சாத்தியமான திட்டமாக மாற்றி அமைக்க தல ஆய்வு செய்ததில் சாத்தியக்கூறு இல்லை.

44—

மயான வசதி

வினா எண் 10123—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, அரசிராமணி பேரூராட்சி, குஞ்சாம்பாளையம் அருந்ததியர் தெருவிற்கு மயான வசதி அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, அரசிராமணி பேரூராட்சிக்குட்பட்ட குஞ்சாம்பாளையம் அருந்ததியர் தெரு மக்கள், அரசிராமணி கிராமத்தில் உள்ள புல எண்80/2-ல் 1.20.5 ஹெக்டேர் நிலம் மயானம் என்ற வகைப்படுத்தப்பட்ட அரசு புறம்போக்கு நிலத்தினை மயானமாகப் பயன்படுத்தி வருகின்றனர். இந்த மயானத்தை வேறு இன மக்களும் (வன்னியர்கள்), சுமுகமாகப் பயன்படுத்தி வருகின்றனர். மேலும் புதிதாக மயானம் அமைக்க தகுதியான அரசு புறம்போக்கு நிலம் ஏதுமில்லை. எனவே சங்கரி தொகுதி, அரசிராமணி பேரூராட்சிக்கு தனியாக மயானம் அமைக்க வழிவகைகள் இல்லை.

45—

மயான வசதி

வினா எண் 22667—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரூர் தொகுதி, வீரப்பநாயக்கன்பட்டி ஊராட்சி, இந்திரா நகர் அருந்ததியர் மக்களுக்கு மயானம் மற்றும் மயானப் பாதை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2012-2013 ஆம் நிதியாண்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதியை பயன்படுத்தி அரூர் தொகுதி, வீரப்பநாயக்கன்பட்டி ஊராட்சி, கூடலூர் இந்திரா நகரில் புல எண் 214/2-ல் 0.08.0 ஹெக்டேர் நிலம் தனியார் பேச்சுவார்த்தைமூலம் 7-1-2013 அன்று கிரையம் பெறப்பட்டு மயானம் மற்றும் மயானப் பாதை வசதி செய்து தரப்பட்டுள்ளது.

46—

உறை வெட்டும் இயந்திரம்

வினா எண் 15340—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை அரசு கிளை அச்சகத்திற்கு உறை வெட்டும் இயந்திரம் மற்றும் தானியங்கி உறை மடித்து பசை ஒட்டும் இயந்திரம் வாங்க அனுமதித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வாங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். மதுரை அரசு கிளை அச்சகத்திற்கு அரசாணை (நிலை) எண் 391, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, நாள் 27-09-2010 மற்றும் அரசாணை (நிலை) எண் 277, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, நாள் 14-08-2012 ஆகியவற்றின்படி தானியங்கி உறை மடித்து பசை ஒட்டும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ளன. தானியங்கி உறை வெட்டும் இயந்திரம் கொள்முதல் செய்ய திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளிமூலம் தெரிவு செய்யப்பட்ட L1 நிறுவனமான M/s. Nicepak, Ahmedabad நிறுவனத்திற்கு வழங்காணை அளிக்கப்பட்டுள்ளது.

47—

சமூகப் பாதுகாப்புத் திட்டம்

வினா எண் 19198—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்மூலம் அயல்நாட்டில் வாழும் இந்தியர்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் அதிக இந்தியர்களைச் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்மூலம் அயல்நாட்டில் வாழும் இந்தியர்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டம் உரியவாறு 13-5-2002 முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடங்கிய நாள் முதல் சுமார் 600 பேர் வரை இந்நிறுவனத்தின்மூலம் பயனடைந்துள்ளனர். இந்நிறுவனத்தின்மூலம் வெளிநாடு செல்லும் தகுதியுள்ள அனைவருக்கும் உரியவாறு இன்சூரன்ஸ் பாலிசி எடுத்து சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்க்கப்படுகின்றனர்.

(ஆ) எழாது.

48—

தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம்

வினா எண் 19202—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தை அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தி சிறார்களை மீட்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம், மத்திய அரசின் திட்டமாகும். இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான நிதி முழுவதும் மத்திய அரசால் வழங்கப்படுகிறது. தமிழகத்தில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம், சென்னை, கோயம்புத்தூர், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம், திருவண்ணாமலை, திருநெல்வேலி,

[2013 அக்டோபர் 28

திருச்சி, தூத்துக்குடி, வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய 15 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றது. மேற்படி திட்டம் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேரடி கண்காணிப்பின்கீழ் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்குத் தேவைப்படும் நிதி மத்திய அரசால் நேரடியாக அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பப்படுகிறது. தமிழ்நாட்டில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின்கீழ் தற்சமயம் 352 சிறப்புப் பயிற்சி மையங்களும், அதில் 12,763 குழந்தைகளும், தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் செயல்படுத்தப்படும் 15 மாவட்டங்களிலிருந்தும் குழந்தைத் தொழிலாளராக இருந்து மீட்கப்பட்டவர்களும் சிறப்புப் பயிற்சி மையங்களில் கல்வி பயின்று வருகின்றனர். மேலும் சிறப்புப் பயிற்சி மையங்களில் பயிலும் குழந்தைகளுக்கு இலவச சீருடை, இலவசப் பேருந்து பயண அட்டை மற்றும் இலவச மதிய உணவும் தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

(ஆ) தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் மத்திய அரசின் திட்டமாதலால், அத்திட்டத்தினை அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்துவது தொடர்பாக மத்திய அரசு தான் முடிவெடுக்க வேண்டுமென்று தெரிவிக்கப்படுகிறது.

49—

குழந்தைத் தொழிலாளர்

வினா எண் 19204—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்தியாவில் குழந்தைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதலுக்காக தமிழக அரசு செயல் திட்டம் ஒன்றினை அரசாணை (நிலை) எண் 53, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 12-5-2003-ன்மூலம்

2013 அக்டோபர் 28]

வகுத்து அனைத்து வகையான தொழில்களிலிருந்தும் குழந்தைத் தொழிலாளர் முறையை நீக்குவதை குறிக்கோளாகக் கொண்டு ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 12 ஆம் தேதி குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்புத் தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. இதுவரை 86,707 குழந்தைத் தொழிலாளர்கள் சிறப்புப் பள்ளிகளில் பயிற்றுவிக்கப்பட்டு முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டு பயனடைந்துள்ளனர். இச்செயல் திட்டத்தின்மூலம் 2011 ஆம் ஆண்டில், 25 மாணவர்கள் பத்தாம் வகுப்புத் தேர்வில் 90%-க்கும், மேலும் 39 பேர் 80%-க்கும் மேலும் மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். செங்கற்சூளையிலிருந்து மீட்கப்பட்ட R. உமா மகேஸ்வரி என்பவர் 97%-க்கும்மேல் மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றுள்ளார். இதேபோன்று, 14 மாணவர்கள் 12 ஆம் வகுப்புத் தேர்வில் 1000 மதிப்பெண்களுக்குமேல் பெற்றுள்ளனர். நாமக்கல் மாவட்டத்தில், 2004-ல் நெசவுத் தொழிலிலிருந்து மீட்கப்பட்ட திரு. ராமலிங்கம் மற்றும் 2005-ல் தருமபுரி மாவட்டத்தில் கட்டடத் தொழிலிலிருந்து மீட்கப்பட்ட திரு. மூர்த்தி ஆகிய இருவரும் 2011-ஆம் ஆண்டில் மருத்துவப் படிப்பில் (MBBS) சேர்ந்துள்ளனர் என்பது ஒரு சிறப்பு அம்சமாகும். 2003 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் 70,344 குழந்தைத் தொழிலாளர்கள் இருந்து வந்தனர். மேற்படி குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தற்போது 2011 ஆம் ஆண்டில் 14,227 ஆகக் குறைந்துள்ளது. இத்திட்டத்தின் வெற்றியைக் காட்டுவதாக அமைந்துள்ளது. இவ்வாறு தமிழ்நாட்டை குழந்தைத் தொழிலாளர்கள் இல்லாத மாநிலமாக மாற்ற அரசு அரிய பெரும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ஆ) எழாது.

50—

சொந்தக் கட்டடம்

வினா எண் 19679—திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூரில் செயல்படும் சிறப்புப் பள்ளிக்கு சொந்தமாகக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் சென்னை, கோயம்புத்தூர், தருமபுரி திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம், திருவண்ணாமலை, திருநெல்வேலி, திருச்சி, தூத்துக்குடி, வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய 15 மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான நிதி முழுவதும் மத்திய அரசினால் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்படுகிறது. மத்திய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையினரால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி, தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின்கீழ் இயங்கும் சிறப்புப் பள்ளிகள் தற்காலிகமானது. 50-க்கும் மேற்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் கண்டறியப்படும் இடங்களில் சிறப்புப் பள்ளிகள் ஆரம்பிக்கப்படுகின்றன. மேலும், சிறப்புப் பள்ளிகள் இயங்கும் கட்டடத்திற்கான வாடகை மத்திய அரசால் வழங்கப்படுகிறது. சிறப்புப் பள்ளிகளில் சேர்க்கப்பட்ட குழந்தைகள் அதிகபட்சமாக 3 ஆண்டு காலம் பயின்று, பின்பு முறையான பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர். குழந்தைத் தொழிலாளர் அதிகமாகக் காணப்படும் இடங்களில் சிறப்புப் பள்ளிகள் ஆரம்பிக்கப்படுகின்றன. எனவே, சிறப்புப் பள்ளிகள் தற்காலிகமாக இயங்குவதால், அப்பள்ளிகளுக்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டித்தர வேண்டிய அவசியம் எழவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

51—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 3245—திரு. கு. நல்லதம்பி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எழும்பூர் தொகுதிக்குட்பட்ட 42-வது வட்டம் கார்ப்பரேஷன் லைனில் வசிக்கும் 361 வீடுகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) எழும்பூர் தொகுதிக்குட்பட்ட கோட்டை-தண்டையார்பேட்டை வட்டம், வேம்பேரி கிராமம், புல எண் 1730/1 இல் உள்ள 8 காணி 19 மனை 1825 சதுர அடி நிலமானது மாநகராட்சிக்குச் சொந்தமான நிலம் (Corporation Private) *என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதால் பட்டா வழங்க வழிவகை இல்லை.*

(ஆ) இவ்வினா எழாது.

52—

விடுகள் கட்டுதல்

வினா எண் 3724—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தாலுகா பகுதியில் குட்டம், க.உவரி, உவரி, நவ்வலடி, கூந்தக்கிழி விஜயாபதி, செட்டிக்குளம், லெவிஞ்சுபுரம் ஊராட்சிகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆர்.ஜி.ஆர்.பி. மற்றும் ஈ.டி.ஆர்.பி. திட்டத்தின்கீழ் வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டத்தில் (RGRP) *திட்டத்தின்கீழ் 1831 வீடுகள் கட்டப்பட்டு, 2009 ஆம் ஆண்டிலேயே திட்டம் முழுமையடைந்துள்ளது. மாவட்ட நிருவாகத்தில் பரிந்துரை செய்யப்பட்டு வீடுகள் கட்டப்படாமல் நிலுவையில் ஏதும் இல்லை.*

திருநெல்வேலி மாவட்டம் (ETRP) *திட்டத்தின்கீழ் தற்பொழுது 750 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் அவசரகால சுனாமி மறுவாழ்வுத் திட்ட காலம் 31-12-2011-ல் முடிவடைந்துள்ள நிலையில் தற்பொழுது கூடுதலாக வீடுகள் கட்டித் தருவது குறித்து பரிசீலனை செய்ய வழிவகையில்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.*

[2013 அக்டோபர் 28

53—

சென்னை அமெச்சூர் ரேடியோ சங்கம்

வினா எண் 12390—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இயற்கை இடர்பாடுகள் மற்றும் பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளில் சென்னை அமெச்சூர் ரேடியோ சங்கத்தை (Madras Amateur Radio Society) பயன்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இயற்கைச்சீற்றங்கள் மற்றும் பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளில் தற்போது கம்பியில்லா தொலைதொடர்பு (TNSWAN) கைபேசி, VHF/HF உபகரணங்கள் நிகரி மற்றும் மின்அஞ்சல் பயன்படுத்தப்படுகின்றன. அமெச்சூர் ரேடியோக்களை இயற்கைச்சீற்றங்கள் மற்றும் பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளில் தற்போது பயன்படுத்துவதில்லை. எனினும், எதிர்காலங்களில் இயற்கைச்சீற்றங்கள் மற்றும் பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளில் சென்னை அமெச்சூர் ரேடியோ சங்கத்தின் உதவியினை நாடுவது குறித்து ஆவன செய்ய அரசின் கொள்கை முடிவிற்கேற்ப பரிசீலனை செய்யப்படும். இது அரசின் கொள்கைக்கு உட்பட்டதாகும்.

54—

சுனாமி முன்னெச்சரிக்கை உபகரணங்கள் அமைத்தல்

வினா எண் 12883—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

(அ) கன்னியாகுமரி மாவட்ட கடலோரங்களில் சுனாமி பாதுகாப்பு நிலையங்களும், முன்னெச்சரிக்கை உபகரணங்களும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் 12 பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் (Multipurpose Evacuation Shelters) ரூ.14.73 கோடியில் கட்ட அரசு ஆணை எண்387, வருவாய் (டி.எம்.4.1) துறை, நாள் 23-12-2011-ல் உத்தரவிடப்பட்டுள்ளது. அதேபோன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் 33 இடங்களில் புயல் முன்னெச்சரிக்கை கருவிகள் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் கட்டுவதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் பொதுப் பணித் துறை கண்காணிப்புப் பொறியாளரால் கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டதும் பணிகள் துவக்கப்படும். கடலோர மாவட்டங்கள் அனைத்திற்கும் 439 முன்னெச்சரிக்கை கருவிகள் அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளன. ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டதும் உரிய அரசு ஆணை பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும்.

55—

இலவச மருத்துவம் அளித்தல்.

வினா எண் 13068—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத் தொழிலால் ஏற்படும் விபத்துகளினால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் இலவச மருத்துவம் அளிக்கவும் மற்றும் இழப்பீடு வழங்கிடவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 265, வருவாய் [நி.சீ.1(2)] துறை, நாள் 10-9-2011 இன்படி "முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்" 10-9-2011 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், கீழ்க்கண்ட நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன:-

1) கல்வி உதவித் தொகை

2) உறுப்பினர் மற்றும் உறுப்பினரின் குழந்தைகளுக்கான திருமண உதவித் தொகை

3) முதியோர் ஓய்வூதியம்

4) தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கான உதவித் தொகை

5) விபத்து நிவாரணம்

6) இயற்கை மரண உதவித் தொகை

7) ஈமச் சடங்கு செலவு

விபத்து நிவாரணத்தினைப் பொறுத்தவரை, விபத்துக்கான நிவாரணம் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது:

a) இறப்பு ரூ.1,00,000/-

b) முடியாத அளவிற்கு இழப்பு

(i) இரண்டு கைகள் அல்லது

(ii) இரண்டு கால்கள் அல்லது

(iii) ஒரு கை மற்றும் ஒரு கால் அல்லது

(iv) மீட்க முடியாத அளவிற்கு கண்கள் இரண்டிலும் பார்வை இழத்தல். ரூ.1,00,000/-

2013 அக்டோபர் 28]

(c) முடியாத அளவிற்கு இழப்பு

(i) ஒரு கை அல்லது

(ii) ஒரு கால் அல்லது

(iii) பக்கவாதம் ரூ.50,000/-

(d) மேலே (b) மற்றும் (c) இனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்புகள் அல்லாமல் கடுமையான காயங்களின் காரணமாக கை கால்களை இழத்தல். ரூ.20,000/-

மேற்சொன்னவாறு விபத்துக்கான நிவாரணம் ரூ.20,000/- முதல் ரூ.1,00,000/- வரை வழங்கப்பட்டு வருவதுடன், இப்புதிய திட்டத்தின்கீழ், பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டவர்களும் இத்திட்டத்தில் புதியதாக சேர்க்கப்பட்டு ரூ.50,000/- வழங்கப்படுகிறது.

மேலும், இத்திட்டத்தின்கீழ் பண்பேறிய சிவப்பு (மரூண்) நிற அட்டை பெறத் தகுதியுடைய ஆதரவற்ற வேளாண் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.1000/- வழங்கப்படுகிறது. உறுப்பினர்களுக்கும், உறுப்பினரைச் சார்ந்தவர்களுக்கும் திருமண உதவித் தொகையாக ஆணுக்கு ரூ.8,000/-மும், பெண்ணுக்கு ரூ.10,000/-மும் வழங்கப்படுகிறது. ஈமச்சடங்கு செலவுக்காக ரூ.2,500/- வழங்கப்படுகிறது. உறுப்பினர்களின் இயற்கை மரணத்திற்கு ரூ.10,000/- வழங்கப்படுகிறது.

மேலும் அரசாணை (நிலை) எண்255, வருவாய் [நி.சீ.1(2)] துறை, நாள் 10-7-2012 இன்படி மூல உறுப்பினர் இறந்துவிட்டாலும், அவர்களைச் சார்ந்த சாம்பல் நிற அடையாள அட்டை பெற தகுதியுடைய உறுப்பினர்கள் இவர்களுக்கான உதவித்தொகைகளை தொடர்ந்து பெறலாம்.

மேலும் அரசாணை (நிலை) எண்285, வருவாய் [நி.சீ.1(2)] துறை, நாள். 6-8-2012 இன்படி மூல உறுப்பினர்கள் (farmer member) காசநோய், புற்றுநோய் மற்றும் பிறகொடிய நோய்களால் பாதிக்கப்பட்டு எந்த ஒரு பணியும் செய்ய இயலாத சூழ்நிலையில் இருந்தால் (Temporary incapacitation) நோய் குணமாகும்வரை உள்ள சிகிச்சை காலத்தில் மாதாந்திர ஓய்வூதியமாக ரூ.1,000/- வழங்கப்படுகிறது.

56—

ஒளிபரப்பு நிலையங்கள்

வினா எண் 13356—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் இயற்கைச் சீற்ற பாதிப்புகள் ஏற்படும் காலங்களில் உதவ மெட்ராஸ் அமெச்சூர் ரேடியோ சொசைட்டிக்கு போதிய ஒளிபரப்பு நிலையங்களை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இயற்கைச்சீற்றங்கள் மற்றும் பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளில் தற்போது கம்பியில்லா தொலைதொடர்பு (TNSWAN) கைபேசி, VHF/HF உபகரணங்கள் நிகரி மற்றும் மின்அஞ்சல் பயன்படுத்தப்படுகின்றன. அமெச்சூர் ரேடியோக்களை இயற்கைச் சீற்றங்கள் மற்றும் பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளில் தற்போது பயன்படுத்துவதில்லை. தமிழ்நாட்டில் இயற்கைச்சீற்றங்கள் ஏற்படும் காலங்களில் உதவ மெட்ராஸ் அமெச்சூர் ரேடியோ சொசைட்டிக்கு போதிய ஒளிபரப்பு நிலையங்களை அமைக்க அரசின் கொள்கை முடிவிற்கேற்ப பரிசீலனை செய்யப்படும். இது அரசின் கொள்கைக்கு உட்பட்டதாகும்.

57—

சொசைட்டி உறுப்பினர்கள்

வினா எண் 13358— திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

(அ) தமிழ்நாட்டில் இயற்கைச்சீற்ற பாதிப்புகள் ஏற்படும் காலங்களில் உதவ மெட்ராஸ் அமெச்சூர் ரேடியோ சொசைட்டி உறுப்பினர்களை அழைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இயற்கைச் சீற்றங்கள் மற்றும் பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளில் தற்போது கம்பியில்லா தொலைதொடர்பு (TNSWAN) கைபேசி, VHF/HF உபகரணங்கள் நிகரி மற்றும் மின்அஞ்சல் பயன்படுத்தப்படுகின்றன. அமெச்சூர் ரேடியோக்களை இயற்கை சீற்றங்கள் மற்றும் பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளில் தற்போது பயன்படுத்துவதில்லை. தமிழ்நாட்டில் இயற்கைச்சீற்றங்கள் ஏற்படும் காலங்களில் உதவ அமெச்சூர் ரேடியோ சொசைட்டி உறுப்பினர்களை அழைப்பது குறித்து அரசின் கொள்கை முடிவிற்கேற்ப பரிசீலனை செய்யப்படும். இது அரசின் கொள்கைக்கு உட்பட்டதாகும்.

58—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 13475—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், கல்லாபுரம் ஊராட்சி, பூளவாடி புதுநகர், புரட்சித்தால்புரம் பகுதிக்கு குடியிருப்பு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கல்லாபுரம் கிராமம், பூளவாடி புதுநகர் மற்றும்

[2013 அக்டோபர் 28

புரட்சித்தால்புரம் பகுதியைச் சேர்ந்த ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த மக்கள் கல்லாபுரம் கிராமம், க.ச.473/சி இல் சுமார் 1½ ஏக்கர் பரப்பிலும், க.ச. 474/பி2 இல் சுமார் 2 ஏக்கர் பரப்பிலும், வீடு கட்டி குடியிருந்து வருகின்றனர். மேற்படி க.ச.474/சி 2.91.50 விஸ்தீரண பூமியானது மாரியப்ப பண்ணாடி மற்றும் பழனி பண்ணாடி மகன் சுப்பிரமணியம் ஆகியோருக்கு கூட்டாகப் பாத்தியப்பட்டது. க.ச. 474/பி2, 2.74.50 விஸ்தீரண பூமியானது கணபதி சுப்பிரமணியம், பழனிச்சாமி மற்றும் முருகேஸ்வரி ஆகியோருக்கு கூட்டாகப் பாத்தியப்பட்டது. வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரும் இடமானது தனி நபருக்கு பாத்தியப்பட்ட பூமியாதலாலும், வீடுகட்டி குடியிருந்துவரும் சுமார் 150 நபர்கள் ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதாலும், ஆதி திராவிடர் நலத் துறைமூலம் நில எடுப்பு செய்து பின்னர் வீட்டுமனைப் பட்டா வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

59—

சொந்த நிலத்தை திருப்பிக் கொடுத்தல்

வினா எண் 12504—திரு. கு. நல்லதம்பி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எழும்பூர் தொகுதி, புதிய 61-வது வட்டம், நரியங்காடு வரதராஜபுரம் ச.எண்.1263-ல் ஆதி திராவிடர்களுக்குச் சொந்தமான நிலத்தை அவர்களுக்கே திருப்பிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

மயிலாப்பூர்-திருவல்லிக்கேணி வட்டம், சிந்தாதிரிப்பேட்டை கிராமம், நிரந்தர நிலப் பதிவேட்டின்படி, புல எண் 1283 நரியங்காடு கூட்டுறவுச் சங்கத்தின் பெயரில் பதியப்பட்டுள்ளது. பின்னர் மேற்படி சங்கத்தால் தனியாருக்கு விற்பனை செய்யப்பட்டு, பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இப்புல எண்ணில் பட்டா பெற்றவர்கள் வீடுகள் கட்டி வருகின்ற நிலையில், இந்நிலத்தை ஆதி திராவிட மக்களுக்கு திரும்ப வழங்க வழிவகை இல்லை.

2013 அக்டோபர் 28]

60—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 13480—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், கண்ணமநாயக்கனூர் கிராமம், க.ச.462/B மற்றும் 462/A-ல் பூமியில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், கண்ணமநாயக்கனூர் கிராமம், க.ச.462/பி மற்றும் 462/ஏ-ல் வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு புலங்கள் ஏதுமில்லை என்பதால் வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு வழிவகை இல்லை.

61—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 13516—திரு. சு. ரவி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், பள்ளூர் ஊராட்சி, ஆலப்பாக்கம் தோப்பில் வாழ்ந்து வரும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியத்திற்குட்பட்ட பள்ளூர், மதுரா ஆலப்பாக்கம் கிராமம், தோப்பு புறம்போக்கு ச.எண் 972 இல் சுமார் 100 குடும்பங்களுக்கு மேல் வீடுகள் கட்டி அனுபவித்து வருகின்றனர். இவர்கள் மேற்படி இடத்தில் 5 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்ததற்கான ஆதாரம் கோரப்பட்டுள்ளது. வரப்பெற்றதும் தகுதியுள்ளவர்களுக்கு பட்டா வழங்கப்படும்.

62—

ஆதரவற்ற விதவைச் சான்றிதழ்

வினா எண் 14719—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆதரவற்ற விதவைச் சான்றிதழை விண்ணப்பித்த தேதியிலிருந்து, இரு தினங்களுக்குள் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இச்சான்று கிராம நிருவாக அலுவலர், வருவாய் ஆய்வாளர், மண்டல துணை வட்டாட்சியர் ஆகியோர் ஸ்தல விசாரணை மேற்கொண்டு, அதன்பின் தொடர்புடைய வருவாய் கோட்டாட்சியரால் நேரடி விசாரணை மேற்கொண்ட பின் வழங்கப்படுகிறது. இவ்வாறு வெவ்வேறு நிலை அலுவலர்களின் நேரடி விசாரணைக்குப் பின் வழங்கப்படுவதால், இரண்டு தினங்களில் ஆதரவற்ற விதவைச் சான்றிதழ் வழங்குவது நடைமுறையில் சாத்தியமாகாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

2013 அக்டோபர் 28]

63—

சாதிச் சான்றிதழ்

வினா எண் 14721—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிமாநிலங்களில் வாழும் தமிழர்களுக்கு சாதிச் சான்றிதழ் வேண்டி தமிழக வட்டாட்சியர் அலுவலகங்களை அணுகும்போது, குடும்ப அட்டையை வலியுறுத்தாமலிருக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வெளிமாநிலங்களில் வாழும் தமிழர்கள் சாதிச் சான்றிதழ் கோரி வட்டாட்சியர் அலுவலகங்களை அணுகும் போது, தமது பூர்வீகம், தங்கள் சாதி, மதம், தமது முன்னோர்களின் சாதி, மதம், பூர்வீகம் ஆகியவற்றை நிரூபிக்கக்கூடிய ஆவணங்களை மனுதாரர் சமர்ப்பிக்கும் போது குடும்ப அட்டையினை கருத்தில் கொள்ளாமலேயே சாதிச் சான்றிதழ் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

64—

சாதிச் சான்றிதழ்

வினா எண் 17108—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டாட்சியர் அலுவலகத்தில் ஆண்டிப்பண்டாரம், புதிரை வண்ணான், காட்டு நாயக்கன் இன மக்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை வட்டத்தில் பிற்பட்ட வகுப்பினருக்கு சாதிச் சான்று மண்டல துணை வட்டாட்சியராலும், புதிரை வண்ணான் சாதிச் சான்று வட்டாட்சியராலும், காட்டுநாயக்கன் சாதிச் சான்று சிவகங்கை கோட்டாட்சியராலும் சரியான ஆதாரங்களுடன் விண்ணப்பிக்கும் நபர்களுக்கு உரிய விசாரணைக்குப்பின் அரசு விதி முறைகளின்படி வழங்கப்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

65—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 18017—திரு. க. ரவி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், ஆனைப்பாக்கம் ஊராட்சி, மிட்டாபாளையம் கிராமம், அருந்ததிபாளையம் கிராம நத்தத்தில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆனைப்பாக்கம் கிராம மதுரா மிட்டாபாளையம் அருந்ததிபாளையத்தில் கிராம நத்தம் ச.எண். 16 உட்பிரிவு செய்யப்பட்டு, ச.எண். 16/3, 16/4, 16/6, 16/7, மற்றும் 16/8 முறையே திரு. வெங்கிடசாமி, திரு. முனிரத்தினம், திரு. குப்பன், திரு. முனிசாமி மற்றும் திரு. ராகவன் ஆகியோர் வசித்து வருகிறார்கள். இவர்களுக்கு அரக்கோணம் வட்டாட்சியர் மூலம் 1994 ஆம் ஆண்டு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

2013 அக்டோபர் 28]

66—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 18234—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், புலவன்பாடி சீனிவாசபுரத்தில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், புலவன்பாடி மதுரா சீனிவாசபுரம் கிராமத்தில் இலவச வீட்டுமனைப் பட்டா கோரும் இடம் ஆட்சேபகரமான மந்தைவெளி புறம்போக்கு என்பதால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

67—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 18253—திரு. ஏ. லாசர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதி, பெரியகுளம் நகராட்சி, வாகம்புளி, சத்தியா நகர், பட்டாளம்மன் கோயில் பகுதி மற்றும் ஜி.கல்லுப்பட்டி, சங்கிலியார்புரம், தேவதானப்பட்டி பேரூராட்சி, காமாக்காப்பட்டி கோம்பை ரோடு, தாமரைக்குளம் பேரூராட்சி, தாசில்தார் நகர் ஆகிய இடங்களில் குடியிருந்து வரும் ஏழை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வாகம்புளி, பட்டாளம்மன் கோயில் தெரு, நகராட்சிக்குச் சொந்தமான இடம். நகராட்சி நிருவாக ஆணையர், சென்னை ஒப்புதல் வழங்கினால் மட்டுமே பட்டா தர இயலும்.

சத்யா நகரில் குடியிருந்து வருபவர்களுக்கு ஏப்ரல் முதல் வாரத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

ஜி.கல்லுப்பட்டி, சங்கிலியார்புரம்-ஓடை புறம்போக்கு நீர்நிலைப் புறம்போக்கு, கண்மாய் நீர்நிலைப் புறம்போக்கில் ஒப்படைப்பு செய்து தடை செய்யப்பட்டுள்ளதால் பட்டா வழங்க இயலாது.

தேவதானப்பட்டி பேரூராட்சி, காமாக்காப்பட்டி, கோம்பை ரோடு சாலை ஓரத்தில் குடியிருந்து வருவதால் குடிமனைப் பட்டா வழங்க இயலாது.

தாமரைக்குளம் பேரூராட்சி, தாகில்தார் நகர் தடையாணை புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டதால் பட்டா வழங்க இயலாது.

68—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 18296—திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓசூர் தொகுதி, ஓசூர் நகரம், பேரண்டப்பள்ளி பஞ்சாயத்து, பத்தனப்பள்ளி இஸ்லாமியர் காலனியில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், பத்தனப்பள்ளி இஸ்லாமியர் காலனி அமைந்துள்ள நிலம் மோர்ணப்பள்ளி கிராமம், புல எண் 285, 178.0 ஹெக்டர் பரப்பளவுடையதுமான நிலம் கிராமக் கணக்குகளில் அரசு வாரி புறம்போக்கு என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே புலம் ஆட்சேபகரமான நீர் நிலைப்

2013 அக்டோபர் 28]

புறம்போக்கு என்பதால் இந்நிலத்தில் அரசு விதிமுறைகளின்படி வீட்டுமனைப் பட்டா வழங்க வழிவகையில்லை.

69—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 18771—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஒன்றியம், பனிக்கம்பட்டி ஊராட்சி, சின்னியகவுண்டன்பாளையத்தில் கால்நடை துறைக்குச் சொந்தமான இடத்தில் வசித்து வரும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பல்லடம் வட்டம், பனிக்கம்பட்டி ஊராட்சி, சின்னியகவுண்டன்பாளையத்தில் கால்நடை துறைக்குச் சொந்தமான இடத்தில் வசித்து வரும் மக்களுக்கு இத்துறை வாயிலாக உடனடியாக வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு வழிவகைகள் இல்லை. எனினும், சம்பந்தப்பட்ட துறைகளின் தடையின்மைச் சான்று பெறப்பட்ட பின்னர் வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

70—

சுகாதார வளாகம்

வினா எண் 19479—திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, கிருஷ்ணன் கோவிலில் சுகாதார வளாகம் கட்ட இடம் தேர்வு செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், கிருஷ்ணன் கோவில் கிராமத்தில் சுகாதார வளாகம் கட்டுவதற்கு உரிய இடத்தினை தேர்வு செய்வது தொடர்பாக ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்ற உறுப்பினர், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாட்சியர், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலரோடு 30-5-2012 அன்று கூட்டுப் புலத்தணிக்கை செய்து, மதுரை தென்காசி தேசிய நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான புல எண் 1284-யை தேர்வுசெய்துள்ளனர். தேர்வு செய்யப்பட்ட இடம் தேசிய நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான நிலமாக இருப்பதால், சுகாதார வளாகம் கட்ட உத்தேசித்துள்ள இடம், தேவைப்படும் நிலத்தின் அளவு பற்றிய விவரங்களுடன் புதுடெல்லி மண்டல அலுவலர்களுக்கு (mort & H) அனுப்பி அனுமதி பெற்ற பின்னரே, மேற்கண்ட சுகாதார வளாகம் அமைக்க இயலும்.

71—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 19845—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் வட்டம், நாராணாபுரம் கிராமம், வெட்டுப்பட்டான் குட்டை மற்றும் மாணிக்காபுரம் கிராமம், இராசாக் கவுண்டன்பாளையம், வடுகபாளையம் கிராமம், வெங்கிட்டாபுரம் ஆரம்பப் பள்ளி அருகிலும், பல்லடம் நகராட்சி 7-வது வார்டு இராயர்பாளையத்தில் திருப்பூர்-பல்லடம் சாலையில் இருபுறமும் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பல்லடம் வட்டம், நாராணாபுரம் கிராமம், வெட்டுப்பட்டான் குட்டை மற்றும்

2013 அக்டோபர் 28]

மாணிக்காபுரம், இராசாக் கவுண்டன்பாளையம், வடுகபாளையம் கிராமம், வெங்கிட்டாபுரம் ஆரம்பப் பள்ளி அருகிலும், பல்லடம் நகராட்சி 7-வது வார்டு இராயர்பாளையத்தில் திருப்பூர்-பல்லடம் சாலையில் இருபுறமும் குடியிருப்பவர்களுக்கு நத்தம் புறம்போக்கு எனில் தகுதியின் அடிப்படையிலும், இதர புறம்போக்கு எனில் சம்பந்தப்பட்ட துறைகளின் தடையின்மைச் சான்று பெற்று அரசு ஆணை பெறப்பட்ட பின்பே பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

72—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 19493—திரு. எம்.கே. அசோக்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி தொகுதி, கிராம நத்தம் பகுதிகளில் குடியிருக்கும் மக்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) வேளச்சேரி சட்டமன்றத் தொகுதி, வேளச்சேரி கிராம நத்தம் மனைகளுக்கு பட்டா வழங்க அரசு ஆணை எண் 192, (Revenue S.S. II(1) Department) நாள்: 8-6-2012 இன்படி அரசு ஆணையிட்டுள்ளது. வேளச்சேரி கிராம நத்தம் புல எண்கள் நில அளவை செய்யப்பட்டு தற்போது விசாரணைப் பணி நடைபெற்று வருகிறது.

(ஆ) விசாரணைப் பணி நடைபெற்று முடிவுற்றவுடன் உரிய நடைமுறைகளைப் பின்பற்றி பட்டா வழங்கப்படும்.

73—

பழங்குடி சாதிச் சான்றிதழ்

வினா எண் 20786—திரு. கா. தமிழரசன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) மதுரை கிழக்கு தொகுதி, சக்கிமங்கலம் ஊராட்சியிலுள்ள நாடோடிகளுக்கு பழங்குடி சாதிச் சான்றிதழ் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை கிழக்கு தொகுதி, சக்கிமங்கலம் ஊராட்சியில் வசிக்கும் நாடோடிகள், சாதிச் சான்றிதழ் கோரி அளித்த மனுவுடன், சாதிச் சான்றிதழ் வழங்க போதிய ஆவணங்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படாததால், உரிய ஆவணங்களை தங்களது உறவினர்களிடமோ அல்லது ஏற்கெனவே சான்று பெற்றவர்களிடமோ, அவர்களின் உறவுமுறை மற்றும் கொடிவழி சொந்தம் உள்ள உறவினர்களிடம் பெற்று வருமாறு மனுதாரர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், போதிய ஆவணங்கள் சமர்ப்பிக்கும்பட்சத்தில் அவர்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

74—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 21178—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் வட்டம், கரைப்புதூர் கிராமம், சென்னிமலை பாளையம், நொச்சிபாளையம், அய்யம் பாளையம், காளிநாதன்பாளையத்தில் குடியிருந்து வருபவர்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பல்லடம் வட்டம், கரைப்புதூர் கிராமம், சென்னிமலை பாளையம், நொச்சி

2013 அக்டோபர் 28]

பாளையம், அய்யம் பாளையம், காளிநாதன்பாளையத்தில் குடியிருந்து வருபவர்களுக்கு நத்தம் புறம்போக்கு எனில் தகுதியின் அடிப்படையிலும், இதர புறம்போக்கு எனில் சம்பந்தப்பட்ட துறைகளின் தடையின்மைச் சான்று பெற்றும் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

75—

பட்டா வழங்கல்

வினா எண் 21330—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், இடும்பாவனம் ஊராட்சி, சர்வமானியம், வாடியக்காடு, ஜாம்பனோடை ஊராட்சி, வீரன்வயல் கிராமங்களுக்கும் மற்றும் கோவிலூர், மணல்மேடு தெருவிலுள்ளவர்களுக்கும் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

இடும்பாவனம் ஊராட்சியில் உள்ள, சர்வமானியம், வாடியக்காடு பகுதியில் வசிக்கும் மக்கள் அருள்மிகு சர்குணநாத சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களிலும், வீரன்வயல் பகுதியில் வசிக்கும் மக்கள் இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களிலும், வடகாடு கோவிலூர் கிராமத்தில், மணல்மேடு பகுதியில் வசிக்கும் மக்கள் அருள்மிகு மந்திரபரீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களிலும் குடியிருந்து வருகின்றனர். மேற்காணும் இடங்கள் இந்து சமய அறநிலைய துறைக்கு சொந்தமானது. எனவே, தற்போதைய நடைமுறை விதிகளின்படி, கோயிலுக்குச் சொந்தமான இடங்களில் குடியிருப்பவர்களுக்கு மனைப்பட்டா வழங்க இயலாது.

[2013 அக்டோபர் 28

76—

பட்டா வழங்கல்

வினா எண் 21334—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, குன்னலூர் ஊராட்சி, வினோபா, எக்கல், பன்னப்பொது தற்காசு கிராமங்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

குன்னலூர் ஊராட்சிக்குட்பட்ட 69 எக்கல் வருவாய் கிராமத்தில், வினோபா உட்கிராமத்தில் 80 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். மேற்படி இடம் கிராம தானமாக (சர்வோதயா சங்கம்) வழங்கப்பட்ட இடமாகும். இவ்விடம் தனியாருக்கே சொந்தமானது என்பதாலும், அப்பகுதியில் வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு, தகுதியான நத்தம் மற்றும் வேறு புறம்போக்கு நிலங்கள் ஏதும் இல்லை என்பதாலும், பட்டா வழங்கிட இயலாது. மற்றும் பன்னப்பொது பகுதியில் வசிக்கும், சுமார் 45 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா கோரப்பட்டுள்ளது. மேற்படி நபர்கள் குடியிருக்குமிடம், தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டி மகாத்மா காந்தி ஞாபகர்த்த காச நோய் மருத்துவமனைக்குச் சொந்தமானது என்பதால் இக்குடியிருப்புகளுக்கு பட்டா வழங்க இயலாது.

77—

பட்டா வழங்கல்

வினா எண் 21338—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, எடையூர் ஊராட்சி, குமாரபுரம், கர்னக்கொடை, ஆரியலூர் ஊராட்சி, சோத்திரியம் கற்பகநாதர் குளம் ஊராட்சி, காடுவெட்டி, தில்லைவளாகம் ஊராட்சி, துரைத்

2013 அக்டோபர் 28]

தோப்பு, கோவிலூர் கீழத்தெரு ஆகிய கிராமங்களில் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி வட்டம், எடையூர் கிராமம் குமாரபுரம், கர்னக்கொடை, சோத்திரியம் பகுதிகளில் குடியிருந்து வருபவர்கள், ஆட்சேபனைக்குரிய நெடுஞ்சாலை மற்றும் நீர்நிலை புறம்போக்கு வகைப்பாடுடைய அரசுக்குச் சொந்தமான இடங்களில் வசித்து வருவதால், அவ்விடங்களுக்கு பட்டா வழங்க இயலாது. ஆரியலூர் கிராமத்தில் தகுதியான இனங்களுக்கு ஏற்கெனவே வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுவிட்டது. மேலும், தில்லை வளாகம், துரைத்தோப்பு போன்ற பகுதிகளில் வசிக்கும் மக்கள் அருள்மிகு கற்பகநாதர் சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களிலும், வடகாடு கோவிலூர் கீழத்தெரு பகுதியில் வசிப்பவர்கள் அருள்மிகு மந்திரபுரிசுவர் சுவாமி கோயிலுக்குச் சொந்தமான நிலங்களில் குடியிருப்பதாலும் இக்குடியிருப்புகளுக்கு பட்டா வழங்க இயலாது.

78—

உழவர் அட்டை வழங்குதல்

வினா எண் 21687—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மைத் துறை மூலம் உழவர் அட்டை கிடைக்காதவர்களுக்கு மீண்டும் உழவர் அட்டை வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 265, வருவாய்த் துறை, நாள்: 10-9-2011-ன்படி, முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 2.50 ஏக்கருக்கு மேற்படாத நன்செய் நிலத்தை அல்லது 5.00

[2013 அக்டோபர் 28

ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலத்தை சொந்தமாக வைத்திருந்து மற்றும் அந்த நிலத்தில் நேரடியாக பயிர் செய்யும் 18 வயது முதல் 65 வயது வரை உள்ள அனைத்து குறு/சிறு விவசாயிகள் (நேரடி விவசாயம் செய்பவர்) மற்றும் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழிலில் ஊதியத்திற்காகவோ அல்லது குத்தகை அடிப்படையிலோ ஈடுபட்டுள்ள 18 வயது முதல் 65 வயது வரை உள்ள அனைத்து குத்தகைதாரர்கள் மற்றும் தொழிலாளர்கள் இந்தத் திட்டத்தின்கீழ் மூல உறுப்பினர்களாகப் பதிவுபெற தகுதி உள்ளவர்கள் ஆவார்கள்.

மேற்சொன்னவாறு தகுதியுடைய நபர்கள் இத்திட்டத்தின்கீழ் உறுப்பினர்களாகப் பதிவு செய்ய கிராம நிருவாக அலுவலர்கள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தப் பணிக்காக ஒரு தனிப் பதிவேடு கிராம நிருவாக அலுவலர்களுக்கு மாவட்ட நிருவாகத்தால் அச்சடித்து வழங்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தினைப் பொறுத்தவரை, 30,013 நபர்கள் மரூன் நிற அடையாள அட்டைக்காகவும், 80,187 நபர்கள் சாம்பல் நிற அடையாள அட்டைக்காகவும் ஏற்கெனவே கணக்கெடுக்கப்பட்டுள்ளனர். மேற்படி கணக்கெடுப்பின் அடிப்படையில் எல்காட் நிறுவனத்தால் அடையாள அட்டைகள் அச்சடித்து உறுப்பினர்களுக்கு வழங்கப்பட உள்ளன. தற்பொழுது அடையாள அட்டை அச்சடிப்பதற்காக புள்ளி விவரங்கள் பதிவு செய்யும் பணி (Data entry work) ஒரு சில மாவட்டங்களில் எல்காட் நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்சொன்னவாறு தகுதியுள்ளவர் விடுபட்டிருந்தால் கிராம நிருவாக அலுவலரால் பராமரிக்கப்படும் உறுப்பினர் சேர்க்கை பதிவேட்டில் (Enumeration Register) பதிந்து கொள்ளலாம் என்றும், அங்ஙனம் பதிவுபெற்ற நபர்களுக்கு எல்காட் நிறுவனத்தால் அடையாள அட்டை முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் அச்சடித்து வழங்கப்படும் என்றும் விடுபட்ட நபர்கள் யாரேனும் இருப்பின் அவர்களை இப்பொழுதும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளலாம். என்றும் உரிய அறிவுரைகள் இதுசம்பந்தமாக ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளன.

2013 அக்டோபர் 28]

79—

விவசாயிகளுக்கு ஓய்வூதியம்

வினா எண் 21894—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நலிந்த விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 265, வருவாய் (நி.சீ.1(2)) துறை, நாள்: 10-9-2011 இன்படி முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2.50 ஏக்கருக்கு மேற்படாத நன்செய் நிலத்தை அல்லது 5.00 ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலத்தை சொந்தமாக வைத்திருந்து மற்றும் அந்த நிலத்தில் நேரடியாக பயிர்செய்யும் 18 வயது முதல் 65 வயது வரை உள்ள அனைத்து சிறு/குறு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலில் கூலி அல்லது குத்தகை அடிப்படையில் ஈடுபட்டுள்ளவர்கள் அனைவரும் இத்திட்டத்தின்கீழ் மூல உறுப்பினராகவும், சார்ந்து வாழும் பொருள் ஈட்டாத இதர குடும்ப உறுப்பினர்களும் இத்திட்டத்தின் கீழ் உறுப்பினர்களாகவும் பதிவு செய்யப்படுவர்.

முதியோருக்கான ஓய்வூதியம்

1. இத்திட்டத்தின் கீழ் பண்பேறிய சிவப்பு (மரூன்) நிற அட்டை பெற தகுதியுடைய ஆதரவற்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.1,000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) வழங்கப்படும்.

ஆதரவற்றவர் என்பது கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்படுகிறது:

(1) 60 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்.

(2) முதுமை காரணமாக உடல் உழைப்புத் திறன் இல்லாதவராக இருத்தல் வேண்டும் மற்றும்

[2013 அக்டோபர் 28

(3) வேறு எந்த ஆதரவுமில்லாமல், அதாவது மகன்/மகள் இருந்தாலும், அவர்களால் ஆதரவு இல்லாமல் புறக்கணிக்கப்பட்டவராக இருக்க வேண்டும்.

(4) மேலும் மரூன் நிற அட்டை பெற தகுதியுள்ள உறுப்பினர் ஒருவர் விபத்துக்குள்ளாக நேரிடும்பொழுது கீழ்க்குறிப்பிட்டவாறு உதவித்தொகை வழங்கப்படுகிறது:

(a)	இறப்பு	ரூ.1,00,000/-
(b)	முடியாத அளவிற்கு இழப்பு	
	(i) இரண்டு கைகள் அல்லது	
	(ii) இரண்டு கால்கள் அல்லது	ரூ.1,00,000/-
	(iii) ஒரு கை மற்றும் ஒரு கால் அல்லது	
	(iv) மீட்க முடியாத அளவிற்கு கண்கள் இரண்டிலும் பார்வை இழத்தல்.	
(c)	முடியாத அளவிற்கு இழப்பு	
	(i) ஒரு கை அல்லது	ரூ.50,000/-
	(ii) ஒரு கால் அல்லது	
	(iii) பக்கவாதம்	
(d)	மேலே (b) மற்றும் (c) இனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்புகள் அல்லாமல் கடுமையான காயங்களின் காரணமாக கை கால்களை இழத்தல்	ரூ.20,000/-

(5) முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மருன் நிற அடையாள அட்டை பெற தகுதியுள்ள உறுப்பினர்களுக்கு திருமண உதவித் தொகையாக ஆணுக்கு ரூ.8,000/-மும், பெண்ணுக்கு ரூ.10,000/-மும் வழங்கப்படுகின்றன. ஈமச் சடங்கு செலவுக்காக ரூ.2,500/- வழங்கப்படுகிறது. உறுப்பினர்களின் இயற்கை மரணத்திற்கு ரூ.10,000/- வழங்கப்படுகிறது.

(6) இதுதவிர முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் சாம்பல் நிற அடையாள அட்டை பெற

2013 அக்டோபர் 28]

தகுதியுள்ள உறுப்பினர்களுக்கு பல்வேறு வகையான கல்வி உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. திருமண உதவித் தொகையாக ஆணுக்கு ரூ.8,000/-மும், பெண்ணுக்கு ரூ.10,000/-மும் வழங்கப்படுகின்றன.

மேலும் அரசாணை (நிலை) எண் 255, வருவாய் [நி.சீ.1(2)] துறை, நாள்: 10-7-2012-ன்படி, மூல உறுப்பினர் இறந்துவிட்டாலும், அவர்களைச் சார்ந்த சாம்பல் நிற அடையாள அட்டை பெற தகுதியுடைய உறுப்பினர்கள் இவர்களுக்கான உதவித் தொகைகளை தொடர்ந்து பெறலாம்.

மேலும், அரசாணை (நிலை) எண் 285, வருவாய் நி.சீ.1(2) துறை, நாள்: 6-8-2012-ன்படி, மூல உறுப்பினர்கள் (farmer member) காசநோய், புற்றுநோய் மற்றும் பிறகொடிய நோய்களால் பாதிக்கப்பட்டு, எந்த ஒரு பணியும் செய்ய இயலாத சூழ்நிலையில் இருந்தால் (Temporary incapacitation) நோய் குணமாகும்வரை உள்ள சிகிச்சை காலத்தில் மாதாந்திர ஓய்வூதியமாக ரூ.1,000/- வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

80—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 22004—திரு. டி. சுரேஷ்குமார்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, தண்டராம்பட்டு ஒன்றியம், மலை மஞ்சனூர் புதூர் கிராமத்தில் உள்ள இருளர் இனத்திற்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மலை மஞ்சனூர் புதூர் கிராமத்தில் இருளர் இனத்தைச் சேர்ந்த இருபது குடும்பங்கள் தீர்வை ஏற்படாத தரிசு சர்வே எண். 69/4 மற்றும் 69/2 இல் வீடு கட்டி வசித்து வருகின்றனர். இதில் எட்டு குடும்பத்தினருக்கு 2002 ஆம் ஆண்டு தீர்வை ஏற்படாத தரிசு சர்வே எண் 69/4 இல் உள்ள தீர்வை ஏற்படாத

தரிசு நிலத்தினை நத்தமாக வகை மாற்றம் செய்து எச்.எஸ். 88/1410, நாள் 20-11-2002 இன்படி இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. மேலும் மீதியுள்ள வீடுகட்டி குடியேறியுள்ள 12 இருளர் குடும்பங்களுக்கு மேற்படி கிராம சர்வே எண் 69/2 இல் தீர்வை ஏற்படாத தரிசு புறம்போக்கினை நத்தமாக வகை மாற்றம் செய்து இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

81—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 22256—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, அரூர் வட்டம், மொரப்பூர் ஒன்றியம், சாமண்டஅள்ளி ஊராட்சி, பெரியார் நகர் கிராமத்தில் வீடு கட்டி குடியிருக்கும் மக்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரூர் வட்டம், சாமண்டஅள்ளி கிராம புல எண் 82/2 கிராம நத்தம் விஸ்தீரணம் 2.43.5 ஹெக்டேர் நிலத்தில் வீடு கட்டி குடியிருந்து வரும் 39 அருந்ததியர் இன குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா தயார் செய்யப்பட்டு பயனாளிகளுக்கு வழங்க தயாராக உள்ளது.

82—

பட்டா வழங்கல்

வினா எண் 22257—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, தருமபுரி வட்டம், கொண்டகரள்ளி கிராமத்தை விரிவுபடுத்த, அருகில் உள்ள காடுகளை சமன் செய்து பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரூர் சட்டமன்ற உறுப்பினர் கோரியுள்ள பகுதி கனிம வளம் நிறைந்த பகுதியாகும். பட்டா வழங்க அரசு விதிகளில் இடமில்லை. ஆதலால், பட்டா வழங்க இயலாது.

83—

இலவச வீட்டுமனைப் பட்டா

வினா எண் 23125—திரு. ஆர். ராமமூர்த்தி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விக்கிரவாண்டி தொகுதி, கானை ஒன்றியம், மாம்பழப்பட்டு ஊராட்சியில் புல எண் 103, 105/2 இல் குடியிருக்கும் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விக்கிரவாண்டி தொகுதி, கானை ஒன்றியம், மாம்பழப்பட்டு கிராம புல எண் 103 மற்றும் 105/2 கிராமக் கணக்கில் அய்யனார் கோவில் என்று பதிவாகியுள்ளது. இவ்விடத்தில் கோயில், குளம் மற்றும் பள்ளி அமைந்துள்ளன. எனவே, கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் பட்டா வழங்க இயலாது.

84—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 25417—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2013 அக்டோபர் 28

(அ) மானாமதுரை தொகுதி–திருப்புவனம் பேரூராட்சி 1-வது வார்டு எம்.ஜி.ஆர். நகரில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்புவனம் வட்டம், நெல்முடிக்கரை குரூப் புல எண் 16/6, எம்.ஜி.ஆர். நகர் இடம் தொடர்பாக, சிவகங்கை தேவஸ்தான நிருவாகம் பல்வேறு நிலைகளில் நீதிமன்றத் தீர்ப்புகளைப் பெற்றதன்மூலம் தமக்கு பாத்தியப்பட்டது என சுட்டிக்காட்டி, தங்களுக்கு பட்டா கோரி வருகின்றனர். எம்.ஜி.ஆர். நகரில் வசித்துவரும் மக்கள், தேவஸ்தான நிருவாகத்திற்கு மனை வாடகை செலுத்தி வருகின்றனர். மேற்படி புலத்தில் தாவா இருந்து வருகிறது. ஆகவே, பட்டா வழங்க இயலாது.

85—

பட்டா வழங்கல்

வினா எண் 26807—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, 13-வது வார்டு, அருணகிரி சத்திரம், சபாஷ்கான் தெருவில் வசிப்பவர்களுக்கு பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி நகரம், அருணகிரி சத்திரம், சபாஷ்கான் தெரு, சர்வே எண்கள் எப்/5, பிளாக் ட்டி.எஸ். எண் 1/1, 1/2, ட்டி.எஸ்.எண் 2 இல் உள்ள நிலம் சாலைப் புறம்போக்கு நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமானது. சாலைப் புறம்போக்கில் உள்ள ஆக்கிரமணம் போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருப்பதாலும், இந்த ஆக்கிரமணம் ஆட்சேபணைக்குரியது என்பதாலும் பட்டா வழங்க இயலாது.

2013 அக்டோபர் 28]

86—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 25449—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் சொந்த வீட்டுமனை இல்லாத ஏழை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம், மானாமதுரை வட்டங்களில் வசிக்கும் மக்களுக்கு தகுதியின் அடிப்படையில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

87—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 27398—திரு. சு. ரவி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், தக்கோலம் பழண்டியம்மன் கோயில் தெரு, சர்வே எண் 940/1-ல் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் வட்டம், தக்கோலம் கிராமம், பழண்டியம்மன் கோயில் தெரு, ச.எண்940/1 இல் உள்ள நிலம் பாதை புறம்போக்கு என்பதாலும், இதில் வீட்டுமனைப் பட்டா வழங்க கிராம பொதுமக்கள் ஆட்சேபணை தெரிவித்துள்ளதாலும், ஊராட்சித் தலைவர் தீர்மானம் வழங்க இயலாது எனத் தெரிவித்துள்ளதாலும், மேற்படி சர்வே எண்ணில் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

88—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 27399—திரு. சு. ரவி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், அனந்தாபுரம் இருளர் காலனியில் வசித்து வரும் இருளர் மலைவாழ் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் வட்டம், அனந்தாபுரம் கிராமத்தில் சர்வே எண் 171/4 இல் உள்ள இருளர் மக்கள் கால்வாய் புறம்போக்கு நிலத்தில் குடிசை வீடு கட்டி வசித்து வருகின்றனர். இது நீர்நிலைப் புறம்போக்கு என்பதால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

89—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 27400—திரு. சு. ரவி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

(அ) அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், கைனூர் ஊராட்சி, கைனூர் இருளர் காலனியில் அரசு கல்லாங்குத்து புறம்போக்கு நிலத்தில் வீடு கட்டி வாழ்ந்து வரும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் வட்டம், காவேரிப்பாக்கம் ஒன்றியம், கைனூர் ஊராட்சிக்கு சம்பந்தப்பட்ட கல்லாங்குத்து புறம்போக்கில் வாழும் இருளர் இன மக்களுக்கு ஒருமுறை வீட்டுமனை வழங்கும் திட்டத்தின்மூலம் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

90—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 27401—திரு. சு. ரவி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 26-வது வார்டு பகுதியில் உள்ள ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் வட்டம், அம்மனூர் கிராமம், விண்டர்பேட்டை நகர ச. எண் 40, பிளாக் 6, வார்டு 26-ல் சுமார் 450 வீடுகள் கட்டி வசித்து வருகின்றனர். கிராமக் கணக்குகளில் மேற்படி இடம் இராணுவ நிலமாகப் பதியப்பட்டுள்ளது. எனவே, இது ஆட்சேபணைக்குரிய இடமாகும். இவ்விடத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு விதிமுறைகளில் வழிவகை இல்லை.

[2013 அக்டோபர் 28

91—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 28105—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதி, சவண்டப்பூர் கிராமம், ஆண்டிகாடு அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தில் வசிக்கும் பிற்படுத்தப்பட்ட மற்றும் ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

கோபிசெட்டிபாளையம் கிராமம், சவண்டப்பூர் கிராமம் "அ" கிராமம் நில அளவை எண் 414/1 விஸ்தீரணம் 3.44.5 ஹெக்டேர் ஆகும். இந்த நிலம் சவண்டப்பூர் "அ" கிராமம் பட்டா எண் 714 இன் கீழ் அருள்மிகு செல்லியாண்டியம்மன் திருக்கோயில் பெயரில் கிராமக் கணக்குகளில் தாக்கலாகியுள்ளது. இந்த நிலம் தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் நிருவாகத்திற்குச் சொந்தமானது. இந்த நிலத்தில் (பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த 42 நபர்களும், மிகவும் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த 50 நபர்களும், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த 108 நபர்களும்) சுமார் 200 நபர்கள் 35 ஆண்டுகளுக்கு மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து வருகின்றனர். மேற்படி இடத்தில் வசிப்பவர்கள் முன்னர் பவானி ஆற்றங்கரை ஓரத்தில் வசித்து வந்தவர்களாவர்கள் தமிழ்நாடு அரசு வருவாய்த் துறை சென்னை அவர்களது கடித (நிலை) எண் 712, நாள் 29-7-1997, அரசு ஆணை (நிலை) எண் 503, வருவாய் நி.மு. 4(1) துறை, நாள் 21-1-1999 மற்றும் அரசு ஆணை (நிலை) எண் 186, வருவாய் நி.மு. (2) துறை, நாள் 29-4-2003 ஆகியவற்றில் நீர் நிலைப் புறம்போக்குகளில் நீரைத் தேக்கி வைப்பதைத் தவிர்த்துப் பிற காரியங்களுக்கு அனுமதிக்கக் கூடாது எனவும், அவ்வகை நிலங்களை ஒப்படை, உரிமை மாற்றம், குத்தகை நில மாற்றம் ஆகியவற்றிற்கு பரிந்துரைக்கக் கூடாது எனவும், குளம், ஓடை புறம்போக்குகளில் ஆக்கிரமிப்புகள் ஏற்படாதவாறு

2013 அக்டோபர் 28]

பாதுகாக்கப்படவேண்டும் எனவும் அரசு அறிவுரை வழங்கியுள்ளது. இந்நிலையில், மேலே தெரிவிக்கப்பட்ட அரசு ஆணைகளுக்கு மாறாக இசைவினை வழங்க இயலாத நிலை உள்ளது. எனவே, ஓடை புறம்போக்கில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

92—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 28504—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தெரு, எ.கே. புத்தூர் கிராமம், புல எண் 1733/2பி, 179/2பி மற்றும் 181/2பி-ல் 5.8.00 ஏக்கர் பூமி நில எடுப்புச் சட்டத்தின்கீழ் எடுத்து ஆதி திராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், ஏ.கே. புத்தூர் கிராமத்தில் 2.45.5 எக்டேர் நிலம் ரீ.ச.எண். 173/2, 179/3பி, 181/2பி ஆகிய புலங்களில் நில எடுப்பு செய்யப்பட்டது. திரு. K.M.D. பன்னீர்செல்வம் மற்றும் சிலர் நில எடுப்பு செய்யப்பட்ட நிலத்தை மீளத் தருமாறு கோரி அரசுக்கு செய்த மனு அரசுக் கடிதம் எண் 13643/LA2(1)/09-13 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 18-8-2011 இல் தள்ளுபடி செய்யப்பட்டது. இதனை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் W.P. No.30337/2011-ல் திரு. K.M.D. பன்னீர்செல்வம் மற்றும் 5 பேர் வழக்கு தொடர்ந்துள்ளனர். எனவே, வழக்கு முடிவுற்றதும் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் மேல்நடவடிக்கை தொடரப்படும்.

(ஆ) சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் வழக்கு முடிந்ததும் தீர்ப்பின் அடிப்படையில் தகுதியான பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு பட்டா வழங்கப்படும்.

93—

அணுமின் உலைக் கழிவுகள்

வினா எண் 29005—திரு. சி.எச் சேகர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூடங்குளம் அணுமின் உலைகளின் கழிவுகளைக் கொட்டுவதற்கு அரசு இடம் வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் வட்டம், கூடங்குளம் கிராமத்தில், அணுமின்நிலையம் அமைத்திடும் திட்டத்திற்காக நில எடுப்பு செய்து வழங்கப்பட்டும், அதற்குட்பட்ட பகுதியில் வரும் அரசு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டும் வருகிறது. அணுமின் உலைகளின் கழிவுகளைக் கொட்டுவதற்கென தனியாக அரசு இடம் ஏதும் ஒதுக்கப்படவில்லை.

94—

சுற்றுச்சுவர் கட்டுதல்

வினா எண் 13271—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, வயலோகம் ஊராட்சி, மரிங்கிப்பட்டி தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, வயலோகம் ஊராட்சி, மரிங்கிப்பட்டி தொடக்கப் பள்ளிக்கு தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களின்படி இக்கல்வி ஆண்டில் சுற்றுச் சுவர் கட்ட இயலாது.

95—

சுற்றுச்சுவர் அமைத்தல்

வினா எண் 21640—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், பூதக்குடி ஊராட்சி, சாரணக்குடி தொடக்கப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், பூதக்குடி ஊராட்சி, சாரணக்குடி தொடக்கப் பள்ளிக்கு தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களின்படி இக்கல்வி ஆண்டில் சுற்றுச்சுவர் கட்ட இயலாது.

96—

மருத்துவமனை விரிவாக்கம்

வினா எண் 19975—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2013 அக்டோபர் 28

(அ) பத்மநாபபுரம் தொகுதி, குலசேகரம் அரசு மருத்துவமனையை விரிவாக்கம் செய்யும் பணியை விரைந்து தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, குலசேகரம் அரசு மருத்துவமனை, வட்டம் சாரா மருத்துவமனையாகும். இம்மருத்துவமனை 60 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகும். இவ்வளவு படுக்கை வசதிகள் இருந்தும் இம்மருத்துவமனையில் உள்நோயாளிகள் சராசரியாக தினமும் 35 பேரும், வெளிநோயாளிகள் சராசரியாக 350 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர். மாதந்தோறும் சராசரியாக 15 பெரிய அறுவை சிகிச்சைகளும், 10 பிரசவங்களும், 6 அறுவை சிகிச்சை பிரசவங்கள் மட்டுமே குறைந்த எண்ணிக்கையில் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனை வட்டம் சாரா மருத்துவமனையாக இருந்தாலும் இம்மருத்துவமனையில் வட்ட மருத்துமனைக்கு நிகராக 100 எம்.ஏ. நுண்கதிர் பிரிவு மற்றும் பல் மருத்துவப் பிரிவு, ஆய்வகம் மற்றும் ஸ்கேன் வசதி மற்றும் குடிநீர் சுத்திகரிக்கும் கருவி மின்னாக்கி போன்ற அனைத்து வசதிகளுடன் இயங்கி வருகிறது. குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கு, ஆயுர்வேதப் பிரிவு, நுண்கதிர் பிரிவு போன்ற நல்ல வசதியுடன் குலசேகரம் அரசு மருத்துவமனை இயங்கி வருகிறது. தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் ரூ.84.05 இலட்சம் செலவில் பிரதான கட்டடம், சமையலறை, ஜெனரேட்டர் அறை, அவசரகால ஊர்தி நிறுத்தும் அறை ஆகியவை கட்டப்பட்டு, மருத்துவமனை மேம்படுத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

மேலும், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் 10 படுக்கைகள் கொண்ட பிரிவு கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது. தற்போது உள்ள உள்நோயாளி, வெளிநோயாளிகளைக் கணக்கில் கொண்டு பார்க்கும்போது, தற்போது வட்டம் சாரா மருத்துவமனையான குலசேகரம் அரசு மருத்துவமனை போதுமான சகல வசதிகளுடன் இயங்கி வருகிறது. இருப்பினும், மருத்துவமனை பயன்பாடு அதிகரிக்கும்பட்சத்தில் இம்மருத்துவமனையை விரிவாக்கம் செய்வது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2013 அக்டோபர் 28]

97—

மருத்துவமனையை விரிவுபடுத்துதல்

வினா எண் 24652—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், பீர்க்கலைக்காட்டில் இயங்கிவரும் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் பீர்க்கலைக்காடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. பீர்க்கலைக்காடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 6 படுக்கைகள், தடுப்பூசி அறை, பணியாளர் குடியிருப்பு மற்றும் பிரசவ வார்டு (Labour Ward) ஆகிய வசதிகள் உள்ளன. 2011-2012 ஆம் நிதியாண்டில் தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் பிரசவ அறை விரிவாக்கம் செய்ய ரூ.9.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பொதுப் பணித் துறைமூலம் கட்டடப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

98—

மருத்துவர் நியமனம்

வினா எண் 24931—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், இராப்பூசல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவரை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை சுகாதாரப் பணிகள், விராலிமலை தொகுதி, இராப்பூசல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவ அலுவலர் பணியிட ஒப்பளிப்பு இரண்டு (2) ஆகும். அவற்றில் ஒரு மருத்துவ அலுவலர் பணிபுரிந்து வருகிறார். மற்றொரு மருத்துவ அலுவலர் பணியிடம் காலியாக உள்ளது. இப்பணியிடம் மருத்துவ அலுவலர் கலந்தாய்வின்போது தனியாரின் விருப்பத்தின் அடிப்படையில் நிரப்பப்படும்.

99—

புதிய குடிநீர் சுத்திகரிப்பு

வினா எண் 27168—திரு. சு. ரவி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் அரசு பொது மருத்துவமனைக்கு இரண்டு புதிய குடிநீர் சுத்திகரிப்பு பிளான்ட் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் அரசு பொது மருத்துவமனையில் குடிநீர் சுத்திகரிப்பு சாதன அமைப்பு வழங்குவது தொடர்பாக இணை இயக்குநர், மருத்துவ நலப் பணிகள் அவர்களிடமிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலின் அடிப்படையில் கட்டடப் பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டிலிருந்து இப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

2013 அக்டோபர் 28]

100—

செவிலியருக்கு ஓய்வு அறை

வினா எண் 27901—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு மருத்துவர்கள், பார்வையாளர்கள் மற்றும் செவிலியருக்கு ஓய்வு அறை கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

அந்தியூர் அரசு மருத்துவமனையில் பணி மருத்துவர்களுக்கும், செவிலியர்களுக்கும் தனித்தனியே ஓய்வறைகள் உள்ளன. மேலும், பார்வையாளர்களுக்கும் தனியே உணவு அருந்துமிடம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பட்டியல் 12

1—

அனல் மின் நிலையம்

வினா எண் 16082—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் நிலை 4-ஐ அமைக்கும் பணியின் தற்போதைய நிலையை அரசு தெரிவிக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

இத்திட்டத்தினை மாநில அரசுத் துறையே செயல்படுத்திட அரசு ஆணை (Government of Tamil Nadu Letter (M.) No. 92, dated 24-10-2011) வழங்கப்பட்டுள்ளது.

[2013 அக்டோபர் 28

கடலோரப் பகுதி ஒழுங்குமுறை ஆணைய விதிகளின்படி அனல் மின் திட்டப் பகுதி எல்லைகளை வரையறுக்க அண்ணா பல்கலைக்கழகத்துக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணி அண்ணா பல்கலைக்கழகத்தால் முடிக்கப்பட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு வேண்டிய செய்தக்கமை அறிக்கை (Feasibility Report) மற்றும் விரிவான திட்ட அறிக்கை ஆகியவை தயாரிக்க ஒப்பந்தம் டிராக்ட்பெல் என்ற நிறுவனத்திற்கு 5-1-2012 அன்று அளிக்கப்பட்டது. செய்தக்கமை அறிக்கை பெறப்பட்டுள்ளது.

குறிப்பு விதிமுறைகளை இறுதி செய்ய மைய சுற்றுச்சூழல் அமைச்சகத்துக்கு 3-5-2012 அன்று விண்ணப்பிக்கப்பட்டது. மத்திய அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் நிபுணர் குழுக் கூட்டம் 3-9-2012 அன்று புதுடில்லியில் நடைபெற்றது. கூட்டத்தில் நிபுணர் குழு, திட்ட இடம் மன்னார் கடல்வாழ் உயிரின பூங்காவில் இருந்து 10 கி.மீ. தொலைவுக்குள் உள்ளதால் சுற்றுச்சூழல் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு உத்தேசிக்கப்பட்டுள்ள மின் திட்டத்திற்கு அனுமதி அளிக்க மறுத்து, இதற்கு பதிலாக வேறோரு தகுந்த மாற்றிடம் தெரிவு செய்து புதிய மின் திட்டமாக செயல்படுத்த அறிவுறுத்தியது. இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2—

எண்ணூர் அனல் மின் நிலையம்

வினா எண் 16086—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அரசால் அனுமதிக்கப்பட்டு செயலாக்கத்திற்குக் கொண்டு வரப்படாத எண்ணூர் இணைப்பு மின் நிலையத்தின் தற்போதைய நிலையை அரசு தெரிவிக்குமா?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

IX660 MW திறன் கொண்ட மிக உய்ய எண்ணூர் அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டம் (Super critical ETPS expansion Project) எண்ணூர் அனல் மின் நிலைய வளாகத்தினுள் அமைப்பதற்கான ஒப்பந்த விவரக் குறியீடு ஒப்புதல் பெறப்பட்டது. இத்திட்டத்தின் பொறியியல் கொள்முதல் கட்டுமானப் பணிக்கான உலகளாவிய திறந்த ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான அறிவிக்கை *26-10-2012* அன்று வெளியிடப்பட்டது.

3—

பதவி உயர்வு

வினா எண் 20531—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் அனல் மின் நிலைய களப் பிரிவுப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு சம்பந்தமான குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

மேட்டூர் அனல் மின்நிலைய களப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்குவது குறித்து கடந்த *26-3-2012* அன்று நடைபெற்ற குழுவின் பரிந்துரையின்படி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக உத்தரவு Per (FB) TANGEDCO Proceedings No. 18, (Sectt. Branch) dated *18-4-2012*-ன்படி மேட்டூர் அனல் மின் நிலையத்தில் பணிபுரியும் *947* களப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுவிட்டது.

[2013 அக்டோபர் 28

4—

சொந்தக் கட்டடம்

வினா எண் 24335—திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் ஒன்றியம், உப்பிலியாபுரம், வைரசெட்டிப்பாளையம், வெங்கடாஜலபுரம், கோட்டப்பாளையம், சிக்கத்தம்பூர், செங்காட்டுப்பட்டி, கண்ணனூர், ஏரகுடியிலுள்ள மின் வாரிய அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது மேற்குறிப்பிட்டுள்ள ஊர்களில் தமிழ்நாடு மின் வாரியத்திற்குச் சொந்தமான கட்டடங்கள் மற்றும் காலியிடம் ஏதும் இல்லாததால் வாடகைக் கட்டடத்தில் நுகர்வோருக்கு எவ்வித இடையூறும் இன்றி மின் வாரிய அலுவலகம் இயங்கி வருகிறது.

இனிவரும் காலங்களில் நிலம்/இடம் கிடைத்து மற்றும் நிதி நிலைமை சீரடைந்தபின், சொந்தக் கட்டடம் கட்ட ஆவன செய்யப்படும்.

5—

இணையதளத்தில் மின் கட்டணம்

வினா எண் 26481—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

மின் கட்டணப் பட்டியல் வராத நிலையில் அஞ்சலகங்களில் மின் கட்டணம் செலுத்த இயலாத நிலை உள்ளதால் இணையதளத்தில் பயனீட்டாளரின் நிலுவையை அறிந்து மின் கட்டணம் செலுத்தும் வசதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

மின் நுகர்வோர் வீடுகளுக்குச் சென்று மின் பயனீட்டு அளவு எடுத்தபின், கணக்கீட்டாளர் அதன் விவரத்தினை நுகர்வோரின் வெள்ளை மின் அட்டையில் பதிவு செய்து, அதன் விவரத்தினை கையடக்கக் கருவியில் (Hand Held Device) பதிவுசெய்து, அதன் விவரத்தினை அன்றோ (அ) அடுத்த நாளோ கணினியில் பதிவிறக்கம் செய்யும்போது மின் கட்டண விவரத்தை இணையதளத்தில் பயனீட்டாளர் அறிந்து கொள்ளலாம். மின் கணக்கீட்டினை நுகர்வோர் அறிந்து கொள்ளும் வகையில் உடனுக்குடன் கணினியில் பதிவிறக்கம் செய்வதற்காக உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகிறது.

6—

சாலை அகலப்படுத்தும் பணி

வினா எண் 4994—திரு. பழ. கருப்பையா: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

துறைமுகம் தொகுதியில் உள்ள பிராட்வேயில் பிரகாசம் சாலையை அகலப்படுத்தும் பணி எந்த நிலையில் உள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

துறைமுகம் தொகுதியுள்ள பிராட்வேயில் பிரகாசம் சாலையை அகலப்படுத்தும் பணி எதுவும் தற்போது இல்லை.

[2013 அக்டோபர் 28

7—

தொகுப்பு வீடுகள் பராமரிப்பு

வினா எண் 11073—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அன்னவாசல் ஒன்றியம், குடுமியான்மலை ஊராட்சி விசலூர் ஆதி திராவிடர் குடியிருப்பு பழுதடைந்துள்ளதை பராமரிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டி நெறிமுறைகளில் அரசுத் திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாக கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

8—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 11959—திரு. சு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, பள்ளூர் கிராமத்திலுள்ள அம்பேத்கர் நகரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், பள்ளூர் ஊராட்சியிலுள்ள அம்பேத்கர் நகர், பள்ளூர் புதிய காலனி குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இக்குடியிருப்பில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம் பயனில் உள்ளது. இத்திட்டத்திலிருந்து குழாய் நீட்டிப்பு செய்து அம்பேத்கர் நகர் பகுதிக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், வாரிய விதிமுறைப்படி இக்குடியிருப்பில் உள்ள மக்கட் தொகைக்கேற்ப பயனில் உள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி போதுமானதாக உள்ளதால், அம்பேத்கர் நகர் பகுதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அவசியம் எழவில்லை.

9—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 12898—திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டம், மாதனூர் ஒன்றியம், தென்புதுப்பட்டு கிராமத்தில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், மாதனூர் ஒன்றியம், மேல்பள்ளிப்பட்டு ஊராட்சி, தென்புதுப்பட்டு குடியிருப்பிற்கு

30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம் பயனில் உள்ளது. வாரிய விதிமுறைகளின்படி இக்குடியிருப்பிலுள்ள மக்கட்தொகைக்கேற்ப பயனில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் கொள்ளளவு போதுமானதாக உள்ளதால் கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க தற்பொழுது அவசியம் எழவில்லை.

10—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 13311—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, கடத்தூர் ஊராட்சி, கடத்தூர்புதூர் பகுதிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் ஒன்றியம், கடத்தூர் ஊராட்சி, கடத்தூர்புதூரில் தற்சமயம் மக்கட்தொகைக்கேற்ப பயன்பாட்டிலுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி நல்ல முறையில் உள்ளதால் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அவசியம் எழவில்லை.

11—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 13615—திரு. சு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

(அ) அரக்கோணம் தொகுதி, சயனபுரம் ஊராட்சி, சயனபுரம் கிராமத்திற்கு கூடுதலாக 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், சயனபுரம் ஊராட்சியைச் சார்ந்த சயனபுரம் குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகை 2,510 ஆகும். இக்குடியிருப்பில் பயனில் உள்ள 1.00 இலட்சம் லிட்டர் மற்றும் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன்கூடிய இரண்டு தனி மின்விசைத் திட்டங்கள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. மேலும், இக்குடியிருப்பிலுள்ள தற்போதைய மக்கட்தொகைக்கேற்ப பயனிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் போதுமானதாக உள்ளதால், கூடுதலாக 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அவசியம் எழவில்லை.

12—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 13616—திரு. சு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, கீழ்வெங்கடாபுரம் ஊராட்சி, கீழ்வெங்கடாபுரம் கிராமத்திற்கு கூடுதலாக 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், கீழ்வெங்கடாபுரம் ஊராட்சி, கீழ்வெங்கடாபுரம் குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகை 2,219 ஆகும். இக்குடியிருப்பில் பயனில் உள்ள 1.00 இலட்சம் லிட்டர் மற்றும் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன் கூடிய இரண்டு தனி மின்விசைத் திட்டங்கள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. மேலும், தற்போதைய மக்கட்தொகைக்கேற்ப பயனிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் போதுமானதாக உள்ளதால், கூடுதலாக 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அவசியம் எழவில்லை.

13—

குடிநீர் வசதி

வினா எண் 13728—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம், சங்கரமாநல்லூர், குமரலிங்கம், கணியூர் பேரூராட்சிகள் மற்றும் 112 கிராம குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் தாந்தோணி ஊராட்சி, சேரன் நகர் மற்றும் மைவாடி கிராமம் ராஜாவூர் பகுதிக்கு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம், சங்கரமாநல்லூர், குமரலிங்கம், கணியூர்

2013 அக்டோபர் 28]

பேரூராட்சிகள் மற்றும் 112 கிராம குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் தாந்தோணி ஊராட்சி, சேரன் நகர் மற்றும் மைவாடி கிராமம் ராஜாவூர் (கொண்டவநாய்க்கண்பட்டி) ஆகிய கிராமங்கள் இணைக்கப்பட்டு தற்சமயம் சீரான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

14—

ஆழ்துளைக் கிணறு

வினா எண் 16973—திருமதி ர. சுபா: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, கெங்கவல்லி ஒன்றியம், ஐங்கமசமுத்திரம், கொங்கு நகரில் போர்வெல் ஆழ்துளைக் கிணற்றுடன் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கெங்கவல்லி ஒன்றியத்தில் உள்ள ஐங்கமசமுத்திரம் ஊராட்சியைச் சார்ந்த கவுண்டர் நகர் குடியிருப்பே கொங்குநகர் என்றழைக்கப்படுகிறது. மேற்படி கவுண்டர் நகர் குடியிருப்பின் மக்கட்தொகை 2006 ஆம் ஆண்டு மறு ஆய்வின்படி 185 ஆகும். தற்போது கவுண்டர் நகர் குடியிருப்புக்கு அருகில் உள்ள ஜெ.ஜெ. நகர் குடிநீர்த் திட்டத்திலிருந்து பகிர்மானக் குழாய்மூலம் வழங்கப்பட்டு வரும் குடிநீர் பற்றாக்குறையாக உள்ளது. மேலும் கவுண்டர் நகர் குடியிருப்புக்கு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்கும் வகையில் ஆத்தூர்-நரசிங்கபுரம் நகராட்சிகள் மற்றும்

1,345 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டு குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆகையால், தற்பொழுது கவுண்டர் நகர் குடியிருப்புக்கு மேலும் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அவசியம் எழவில்லை.

15—

ஆழ்துளைக் கிணறு

வினா எண் 20171—திருமதி ர. சுபா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கெங்கவல்லி தொகுதி, கெங்கவல்லி ஒன்றியம், நடுவலூர் ஊராட்சி, 4-வது வார்டில் ஆழ்துளைக் கிணறு மற்றும் குழாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கெங்கவல்லி ஒன்றியம், நடுவலூர் ஊராட்சியிலுள்ள நடுவலூர் 4-வது வார்டு பகுதி என்பது நடுவலூர் பிரதான குடியிருப்பினை உள்ளடக்கியதாகும். இங்கு ஆழ்துளைக் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், இப்பகுதியில் இரண்டு சிறு மின்விசைத் திட்டங்களும் பயனில் உள்ளன. எனவே, வாரிய விதிமுறைகளின்படி புதியதாக ஆழ்துளைக் கிணறு மற்றும் குழாய் அமைக்க அவசியம் எழவில்லை.

2013 அக்டோபர் 28]

16—

ஆழ்துளைக் கிணறு

வினா எண் 20246—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, சங்கரி புகைவண்டி நிலையம் 16-வது வார்டு, 17-வது வார்டு மற்றும் தபால் நிலையம் குடியிருப்பு மக்களுக்கு ஆழ்துளைக் கிணறு அமைத்து நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, புகைவண்டி நிலையம் அமைந்துள்ள 16-வது வார்டு பகுதிகளில் தலா 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து பகிர்மானக் குழாய்கள் வாயிலாக சங்கரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் காவேரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், 17-வது வார்டு சங்கரி தபால் நிலையம் குடியிருப்பு பகுதி 17-வது வார்டில் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து பகிர்மானக் குழாய்கள் வாயிலாக நான்கு ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து சிறு மின் விசைப்பம்புமூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இந்த வார்டில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் கூடுதலாக ஆழ்துளைக் கிணறு அமைத்து மேலும் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அவசியம் எழவில்லை.

[2013 அக்டோபர் 28

17—

மானியம் வழங்குதல்

வினா எண் 21274—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் செய்வோருக்கு தளவாடங்கள் வாங்குவதற்கு முழுமையாக மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

குமரி மாவட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்களுக்கு தகுதியின் அடிப்படையில், அந்நிறுவனங்கள் வாங்கிய இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களின் மதிப்பில் 15 விழுக்காடு, அதிகபட்சமாக ரூபாய் 30 இலட்சம் வரை, முதலீட்டு மானியம் அரசால் வழங்கப்படுகிறது.

18—

பின்தங்கிய பகுதிகளாக அறிவித்தல்

வினா எண் 21354—திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தூர் தொகுதி, இராஜபாளையம் ஒன்றியம், சத்திரப்பட்டி பகுதிகளை தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளாக அறிவித்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

விருதுநகர் மாவட்டத்தில் சாத்தூர் தொகுதி, தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது தவிர விருதுநகர் மாவட்டத்தில் உள்ள வெம்பக்கோட்டை,

2013 அக்டோபர் 28]

நரிக்குடி, திருச்சுழி, காரியாப்பட்டி மற்றும் வத்திராயிருப்பு ஆகிய வட்டாரங்களும் தொழிலில் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. இராஜபாளையம் ஒன்றியம், சத்திரப்பட்டி பகுதிகளை தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

19—

முதியோர் இல்லம்

வினா எண் 22836—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், சங்கராபுரம், வைரவபுரம் ஆகிய பகுதிகளில் முதியோர் இல்லம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு வட்டாரத்திலும் முதியோர் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைக்கும் திட்டத்தின்கீழ் சிவகங்கை வட்டாரத்தில், "இன்டகிரேட்டட் ரூரல் கம்யூனிட்டி டெவலப்மென்ட் சொசைட்டி" என்னும் தொண்டு நிறுவனமும், மானாமதுரை வட்டாரத்தில், "மாதா மெமோரியல் எஜுகேஷன் டிரஸ்ட்" என்னும் தன்னார்வத் தொண்டு நிறுவனமும் மாநில அரசின் நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த வளாகங்களை ஏற்படுத்தியுள்ளன. இந்த ஒருங்கிணைந்த வளாகங்களுக்கு தொடரா செலவினம் தலா ரூ.2,75,000/- மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள 64 ஒருங்கிணைந்த வளாகங்களுக்கு 2012-2013 ஆம் ஆண்டில் தொடர் செலவினம் ரூ.8.42 கோடி மானியமாக வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. முதியோர்

[2013 அக்டோபர் 28

இல்லங்களை நடத்தும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு ரூ.2 இலட்சம் மானியம் வழங்கும் மாநில அரசு திட்டத்தின்கீழ் சிவகங்கை மாவட்டத்தில், "திருப்பத்தூர் ரூரல் அப்லிப்ட் புராஜெக்ட் அசோசியேஷன்" என்னும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்திற்கு ரூ.2 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் மானியம் பெற்று சிவகங்கை மாவட்டத்தில் "சிங்கம்பட்டி கிராம முன்னேற்ற சங்கம்", "சொசைட்டி ஃபார் ரூரல் அன்ட் அர்பன் விமன் ரினய்சன்ஸ் ஆக்டிவிட்டிஸ்" மற்றும் "டெவலப்மெண்ட் ஃபார் ரூரல் அப்ரெஸ்டு பியூப்பிள் சர்வீஸ் சொசைட்டி" ஆகிய முதியோர் இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. என்வே, காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், சங்கராபுரம், வைரவபுரம் ஆகிய பகுதிகளில் முதியோர் இல்லம் தற்போது அமைக்கும் நிலை இல்லை.

20—

காலிப் பணியிடங்களை நிரப்புதல்

வினா எண் 7886—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2006 ஆம் ஆண்டுக்குப் பிறகு கலை, அறிவியல் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண். 79, உயர் கல்வித் (இ2) துறை, நாள் 28-5-2012 இல் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் / கல்வியியல் கல்லூரிகளில், 1-6-2008 முதல் 31-5-2011 வரை காலியாகவுள்ள 3,120 ஆசிரியர் பணியிடங்களை, தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்காற்று) விதிகள் 1976, விதி 11(1) மற்றும் பல்கலைக்கழக மானியக்

2013 அக்டோபர் 28]

குழு விதிகளின்படி, பரிசீலனை செய்தும் மற்றும் இனசுழற்சி முறையினை பின்பற்றியும், நிரப்புவதற்கு கல்லூரி நிருவாகத்திற்கு அனுமதி வழங்குவதற்கு கல்லூரி கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

21—

மானியத் தொகை

வினா எண் 17342—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு உழவர் மேம்பாடு மற்றும் நலத் திட்டத்தின் விவசாயி/குத்தகைதாரர் ஒரு கால் அல்லது ஒரு கை அல்லது ஒரு கண் மற்றும் இடுப்பு ஊனமுற்றால் வழங்கப்படும் மானியத் தொகையை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்யும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு உழவர் நல நிதித் திட்டம் 2-11-1995-ல் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. திட்ட ஆரம்பத்தில் ரூ.25,000/- உதவித் தொகையாக அறிவிக்கப்பட்டது. தற்போது இந்த உதவித் தொகை ரூ.1,00,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மூலமாக ஒரு வருடத்தில் ஒரு மெட்ரிக் டன் அல்லது அதற்குக் கூடுதலாக விற்பனை செய்யும் விவசாயிகள்/குத்தகைதாரர்கள் இத்திட்டத்தில் உறுப்பினராகச் சேர தகுதியுடையவர்கள்.

2. இத்திட்டத்தின்படி, ஒரு வருடத்திற்கு 1 மெட்ரிக் டன் அல்லது அதற்கு மேல் அளவுள்ள வேளாண் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மூலமாக விற்பனை செய்யும் விவசாயிகள்/குத்தகைதாரர்கள், விபத்தின் காரணமாக உயிரிழக்க நேரிட்டாலோ/நிரந்தர ஊனமுற்றாலோ அல்லது விஷப்

பாம்புக் கடியின் காரணமாக உயிரிழக்க நேரிட்டாலோ ரூ.1,00,000/- வரை உதவித் தொகை வழங்கப்படும். அதே போன்று விபத்தின் காரணமாக இரண்டு கைகள் அல்லது இரண்டு கால்கள் அல்லது இரண்டு கண்கள் இழக்க நேரிட்டால் ரூ.75,000/- மானியமும் மற்றும் விபத்தின் காரணமாக ஒரு கை அல்லது ஒரு கால் அல்லது ஒரு கண் இழக்க நேரிட்டால் மற்றும் இடுப்பு ஊனமுற்றால் ரூ.50,000/- மானியமும், தகுதியுடைய விவசாயிகள்/குத்தகைதாரர்களுக்கு வழங்கப்படும். இத்திட்டத்தில் விவசாயிகள் பயன்பெற பதிவுக் கட்டணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை. இத்திட்டத்தில் விவசாயி ஒருவருக்கு பங்குத் தொகையாக வருடத்திற்கு ரூ.10/-ஐ சம்பந்தப்பட்ட விற்பனைக் குழுவும், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியமும் சம பங்காக செலுத்துகின்றன.

3. இத்திட்டத்தின்கீழ் இதுவரை பாதிப்படைந்த 10 விவசாயக் குடும்பங்களுக்கு ரூ.3,10,000/- நிதி உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

4. இத்திட்டத்திற்கென தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் சந்தை மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.50,00,000/-ஐ வங்கியில் வைப்பு நிதியாக வைத்து, அதிலிருந்து பெறப்படும் வட்டித் தொகை மற்றும் உறுப்பினர்கள் சந்தாத் தொகை ஆகியவற்றின்மூலம் இத்திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், போதிய நிதி ஆதாரமில்லாததால், தற்போது இம்மானியத் தொகையினை உயர்த்திடுவதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை.

22—

பரிவர்த்தனைக் கூடம் பயன்பாடு

வினா எண் 17359—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தியாகதுருகம் மற்றும் சங்கராபுரம் ஆகிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலுள்ள பரிவர்த்தனைக் கூடத்தினை விரைந்து பயன்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

அரசாணை 2(டி) எண் 239, வேளாண்மை (வே.வி. 2) துறை, நாள் 2-12-2010-ன்படி விழுப்புரம் விற்பனைக் குழுவின்கீழ் செயல்பட்டுவரும் தியாகதுருகம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் பரிவர்த்தனைக் கூடம் அமைத்திடவும் மற்றும் அரசாணை 2(டி) எண் 236, வேளாண்மை (வே.வி. 2) துறை, நாள் 2-12-2010-ன்படி சங்கராபுரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் பரிவர்த்தனைக் கூடம் அமைத்திடவும் ஆணைகள் வெளியிடப்பட்டன. இதன் அடிப்படையில் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் பொறியியல் பிரிவுமூலம் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டது. விழுப்புரம் விற்பனைக் குழுவின்கீழ் செயல்படும் தியாகதுருகம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட பரிவர்த்தனைக்கூடம் 15-7-2011 அன்றும் மற்றும் சங்கராபுரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட பரிவர்த்தனைக் கூடம் 6-9-2011 அன்றும் ஒப்படைக்கப்பட்டு, இப்பரிவர்த்தனைக் கூடங்கள் தற்போது பயன்பாட்டில் உள்ளன.

23—

தேங்காய் மதிப்பு கூட்டுதல்

வினா எண் 17369—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், பொன்னவராயன் கோட்டை, உக்கடை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தென்னை வணிக வளாகத்தில் 2011-2012 ஆம் ஆண்டில் எவ்வளவு மதிப்புள்ள தேங்காய் மதிப்பு கூட்டப்பட்டது?

(ஆ) இதன்மூலம் எத்தனை சிறு, குறு விவசாயிகள் பயன் அடைந்தனர்?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) கடந்த 2011-2012 ஆம் வருடம் ஏப்ரல் 2011 முதல் டிசம்பர் 2011 வரை கொப்பரையில் அரசாங்க குறைந்தபட்ச ஆதார விலை (MSP) ரூ.44.70 மட்டுமே இருந்தது. வெளிச்சந்தையில் கொப்பரைத் தேங்காயின் விலை ரூ.49/- முதல் ரூ.57/- வரை இருந்து வந்ததால், தேசிய வேளாண்மை கூட்டுறவு விற்பனை இணையத்தால் (NAFED) விவசாயிகளிடமிருந்து கொப்பரை கொள்முதல் செய்யப்படவில்லை. மேலும், நேபட் நிறுவனம் பிப்ரவரி 2012 ஆம் மாதம் கொப்பரைத் தேங்காயின் விலையை ரூ.51/-க்கு உயர்த்தியது. வெளிச்சந்தையில் கொப்பரைத் தேங்காயின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளதனைத் தொடர்ந்து, பட்டுக்கோட்டை தென்னை வணிக வளாகத்தில் 2012 ஆம் ஆண்டு மார்ச் 19 முதல் கொப்பரை கொள்முதல் பணி துவங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த 2011-2012 ஆம் ஆண்டில் மார்ச் மாதம் மட்டுமே கொப்பரை கொள்முதல் பணி நடைபெற்றதால் ரூ.93,84,000/- மதிப்புள்ள தேங்காய் மதிப்பு கூட்டப்பட்டுள்ளது. மதிப்பு கூட்டுவதற்கு முன் தேங்காயின் மதிப்பு ரூ.42,22,800/- ஆகும்.

(ஆ) இதன்மூலம் 82 சிறு, குறு விவசாயிகள் பயனடைந்தனர்.

24—

தக்காளி சேமிப்பு

வினா எண் 17370—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரியில் கட்டப்பட்டுள்ள 100 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கில் 2011-2012 ஆம் ஆண்டில் எத்தனை டன் தக்காளி சேமிக்கப்பட்டுள்ளது?

(ஆ) இதற்காக விவசாயிகளிடம் வாடகை வசூலிக்கப்படுகிறதா?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேச்சேரியில் கட்டப்பட்டுள்ள 100 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கில் 2011-2012 ஆம் ஆண்டில் 53,021 கிலோ தக்காளி சேமிக்கப்பட்டுள்ளது. இதற்காக வாடகை ரூ.7,214 வசூலிக்கப்பட்டுள்ளது. 56 விவசாயிகள் இக்குளிர்பதனக் கிடங்கினை பயன்படுத்தினர்.

25—

வேளாண்மைக் கல்லூரி

வினா எண் 22914—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், கருங்கல் பகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அருகில் உள்ள தூத்துக்குடி மாவட்டம், கிள்ளிக்குளத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி இயங்கி வருகின்றது. கன்னியாகுமரி மாவட்ட மாணவர்கள் மேற்கண்ட கல்லூரியில் சேர்ந்து படிக்க ஏதுவாக உள்ளது. மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள திருப்பதிசாரத்தில் ஒரு வேளாண்மை ஆராய்ச்சி நிலையமும், தோவாளையில் ஒரு மலரியல் ஆராய்ச்சி நிலையமும், பேச்சிப்பாறையில் ஒரு தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையமும் மற்றும் வேளாண் அறிவியல் நிலையமும் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட ஆராய்ச்சி நிலையங்களும், வேளாண் அறிவியல் நிலையமும் கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகளின் தேவைகளை நிறைவேற்றி வருகின்றன.

புதிதாக ஒரு வேளாண் கல்லூரி தொடங்க ரூ.50 கோடி வரை நிதியும், குறைந்தது 100 ஏக்கர் விவசாய நிலமும் தேவைப்படுகிறது.

[2013 அக்டோபர் 28

எனவே, கன்னியாகுமரி மாவட்டம், கருங்கல் பகுதியில் ஒரு புதிய வேளாண்மைக் கல்லூரி அமைக்க வேண்டிய அவசியம் தற்போது இல்லை.

26—

விநியோக மையம்

வினா எண் 26724—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் தென்னை நாற்றுகள் உற்பத்தி மற்றும் விநியோக மையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியை உள்ளடக்கிய சிவகங்கை மாவட்டத்தில் எஸ்.வி. மங்கலம் என்ற இடத்தில் அரசு தென்னை நாற்றுப் பண்ணை இயங்கி வருகிறது. இப்பண்ணை வாயிலாக தரமான தென்னை நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு அம்மாவட்டத் தேவை பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. எனவே, மானாமதுரை தொகுதியில் புதியதாக தென்னை நாற்றுப் பண்ணை அமைக்க வேண்டிய அவசியம் ஏதும் எழவில்லை.

27—

பூச்சி நோய் கட்டுப்பாடு

வினா எண் 27134—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் நெற்பயிரில் சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். தமிழக அரசு வேளாண்மைத் துறை மூலம் பூச்சி நோய் தாக்குதலை கண்காணித்துக் கொண்டு வருகிறது. சாறு உறிஞ்சும் பூச்சிகள் மற்றும் இது போன்ற பூச்சிகள், நோய்கள் தாக்குதல் பொருளாதார சேதநிலையை கடக்கும்போது பல்வேறு மானிய திட்டங்களின்கீழ், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் 50% மானியத்தில் வழங்கி, பூச்சி நோய்களைக் கட்டுப்படுத்தி வருகிறது.

28—

கொப்பரை கொள்முதல்

வினா எண் 17217—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொப்பரை தேங்காய்க்கு ஒரு கிலோ ரூ.70 ஆக விலை நிர்ணயம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கொப்பரைக்கான ஆதரவு விலை ஒவ்வொரு வருடமும் மத்திய அரசினால் நிர்ணயம் செய்யப்படுகிறது. நடப்பு ஆண்டு 2012-க்கு மத்திய அரசு பந்து கொப்பரை கிலோ ஒன்றுக்கு ரூ.53.50/- என்றும் அரவை கொப்பரை கிலோ ஒன்றுக்கு ரூ.51/- என்றும் நிர்ணயம் செய்துள்ளது. கொப்பரைகளுக்கான விலை மத்திய அரசு அளவிலேயே நிர்ணயம் செய்யப்படுவதால், மாநில அரசால் கொப்பரைக்கான கொள்முதல் விலையை நிர்ணயம் செய்ய இயலாது.

29—

மிளகாய் கொள்முதல் விலை நிர்ணயம்

வினா எண் 17508—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) மிளகாய் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைக்குத் தேவையான மிளகாய், பிரதி மாதமும் கூட்டப்படும் கூட்டுறவு கொள்முதல் குழுவில் கலந்து கொள்ளும் வியாபாரிகளிடமிருந்து பெறப்படும் விலைப்புள்ளிப் பட்டியல் மற்றும் மாதிரி (Sample) ஆகியவற்றைப் பரிசீலித்து, பெறப்படும் விலைப்புள்ளிப் பட்டியலில் குறைவான விலையில் தரமான மிளகாய் வழங்க முன்வரும் வியாபாரி தேர்வு செய்யப்பட்டு விலை நிர்ணயம் செய்யப்பட்டு மொத்த கூட்டுறவு விற்பனை பண்டக சாலைகள் அவ்விலைக்கு கொள்முதல் செய்கின்றன. இந்நிலையில், மிளகாயின் கொள்முதல் விலை அரசு அளவில் நிர்ணயம் செய்யப்படுவதில்லை. மிகக் குறைந்த விலையில் (Distress Sale) விற்கப்படும் பொழுது அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மேலும், வெளிச்சந்தையில் மிளகாய் விலை உயர்வு ஏற்படும் நேர்வுகளில், அரசால் சந்தைத் தலையீடு (Market Intervation) மேற்கொள்ளப்படும் போது, அரசு வழிகாட்டுதலின்படி மிளகாய் கொள்முதல் செய்யப்பட்டு, அரசு நிர்ணயிக்கும் விலையில், பண்டக சாலைகள் மூலமாக நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படுகிறது.

30—

சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி

வினா எண் 17993—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவுத் துறையின் மூலமாக தருமபுரி மாவட்டத்தில் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் உதவி வழங்கப்பட்டதா?

(ஆ) 2011-2012 ஆம் ஆண்டில் எவ்வளவு கடன் தொகை வழங்கப்பட்டது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவுத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக தருமபுரி மாவட்டத்தில் சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் உதவி வழங்கப்பட்டு வருகிறது.

2011-2012 ஆம் ஆண்டு வரை தருமபுரி மாவட்டத்தில் கீழ்க்கண்டவாறு சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது:

வ. எண்	கூட்டுறவு நிறுவனம்	எண்ணிக்கை	2011-2012 ஆம் ஆண்டு குறியீடு	2011-12 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட கடன் (ரூ.இலட்சத்தில்)		
				குழுக்கள்	பயனாளிகள்	தொகை
1.	மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளைகள்	8	155.00	97	1663	211.40
2.	தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள்	107	1600.00	589	8835	1204.00
3.	நகரக் கூட்டுறவு வங்கி	1	20.00	4	0	4.40
	கூடுதல்	116	1775.00	690	10498	1419.80

2012-2013 ஆம் ஆண்டில் 30-9-2012 வரை தருமபுரி மாவட்டத்தில் கீழ்க்கண்டவாறு சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது:

வ. எண்	கூட்டுறவு நிறுவனம்	எண்ணிக்கை	2011-2012 ஆம் ஆண்டு குறியீடு	வழங்கப்பட்ட கடன் (ரூ.இலட்சத்தில்)		
				குழுக்கள்	பயனாளிகள்	தொகை
1.	மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளைகள்	10	170.00	103	1648	179.27
2.	தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்	54	1300.00	234	3627	382.49
3.	நகரக் கூட்டுறவு வங்கி	1	10.00	6	0	6.45
	கூடுதல்	65	1480	343	5275	568.21

31—

சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கும் திட்டம்

வினா எண் 19460—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவுத் துறையின் மூலமாக சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கும் திட்டத்தை அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவுத் துறையின்கீழ் வரும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் ஏற்கெனவே சுய உதவிக் குழுக்களுக்கு கடன்கள் வழங்கி இருக்கின்றன. 2011-2012 ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் வழங்க மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு ரூ.500/- கோடி அளவிற்குக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில், ரூ.482.70 கோடி அளவிற்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2012-2013 ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் வழங்க ரூ.520/- கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் 30-11-2012 வரை ரூ.329.93 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

32—

சொந்தக் கட்டடம்

வினா எண் 22178—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் •வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, கொத்தமங்கலம் ஊராட்சி, ராஜகொத்தமங்கலம் நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, கொத்தமங்கலம் ஊராட்சியில், ராஜகொத்தமங்கலத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை 400 குடும்ப அட்டைகளுடன், அப்பகுதி மக்களால் வழங்கப்பட்ட இலவச கட்டடத்தில் 2004 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. எனவே, ராஜகொத்தமங்கலம் நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்டும் அவசியம் எழவில்லை.

33—

சொந்தக் கட்டடம்

வினா எண் 22350—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், மத்திய கூட்டுறவு வங்கி கிளை அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் புதுவயல் கிளை, காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியத்தில் செயல்பட்டு வருகிறது. இக்கிளைக்குச் சொந்தமாக அடிமனை ஏதும் இல்லை. மேற்கண்ட கிளைக்குக் கட்டடம் கட்ட நிலம் அளிக்கக் கோரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில், நிலம் பெறப்பட்டவுடன் சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் புதுவயல் கிளைக்குக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

34—

கட்டட வசதி

வினா எண் 22416—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, அரசிராமணி பேரூராட்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதியில் அரசிராமணி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் என்ற பெயரில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் ஏதுமில்லை.

2013 அக்டோபர் 28]

அ.குள்ளம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் செயல் எல்லையில் உள்ள ஒரு கிராமம் அரசிராமணி ஆகும். அ.குள்ளம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு சேலம் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் (ICDP) கீழ் ரூ.15/- இலட்சம் திட்ட மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

35—

நியாய விலைக் கடை

வினா எண் 24803—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், பூதக்குடி ஊராட்சி, சாரணக்குடியில் நியாய விலைக் கடை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை தொகுதி, குன்னத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கக் கட்டுப்பாட்டின்கீழ் 471 குடும்ப அட்டைகளுடன் செயல்படும் HP125 பொருவாய் முழுநேர அங்காடியுடன், சாரணக்குடி பகுதியைச் சேர்ந்த 78 குடும்ப அட்டைகளும் இணைக்கப்பட்டுள்ளன. எனவே, சாரணக்குடி கிராமத்தில் 78 குடும்ப அட்டைகள் மட்டுமே இருப்பதால், அரசாணையில் வகுக்கப்பட்ட நெறிமுறைகள் பொருந்தாத நிலையில், இக்கிராமத்தில் புதிய பகுதிநேர அங்காடி அமைத்திட வாய்ப்புகள் இல்லை.

36—

வேலைவாய்ப்புகள்

வினா எண் 25202—திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாமணி உர ஆலையில் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி பாமணி உர ஆலை, தற்போது இரண்டு முறை பிரிவுகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும் 100 நபர்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்கிறது. மேலும், இவ்வாலை தற்போதுள்ள இரண்டு முறைப் பிரிவு உற்பத்தியினை, மூன்று முறையாக மேற்கொள்வது குறித்து எதிர்காலத்தில் வேளாண் பருவத்தின்போது ஆய்வு செய்யப்படும். இவ்வாலை பிரிவுகளில் உற்பத்தியினை மேற்கொள்ளும்போது புதிய வேலை வாய்ப்புகள் உருவாக வாய்ப்பு உள்ளது.

37—

பூச்சிமருந்து தொழிற்சாலை

வினா எண் 25203—திரு. டி.ஆர். பி. ராஜா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாமணி டான்செட் உர ஆலையுடன் கூடுதலாக பூச்சிமருந்து உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பூச்சிமருந்துகளை வாங்கி உரிய சங்கங்களின் மூலம் விற்பனை செய்வதே இலாபகரமாக இருக்கும் என்பதால், பாமணி உர ஆலை, மன்னார்குடி வளாகத்தில் கூடுதலாக பூச்சிமருந்து உற்பத்தி ஆலையினை நிறுவுவதற்கான வாய்ப்பு தற்போது இல்லை.

38—

அரசு நிலங்களை மீட்டல்

வினா எண் 22748—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் வனத் துறைக்குச் சொந்தமான நிலங்களை மீட்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி வனக் கோட்டத்தில் 553 வன நில ஆக்கிரமிப்புகள் 427.274 எக்டேர் (மொத்தமாக) பரப்பளவில் உள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் 49 வன நில ஆக்கிரமிப்புகள் பரப்பு (239.46 எக்டேர்) குறித்த வழக்குகள் பல்வேறு நீதிமன்றங்களில் நிலுவையாக உள்ளன. நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகள் முடிவடைந்த பின்னர், ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மற்ற ஆக்கிரமிப்பாளர்களுக்கு தமிழ்நாடு வனச் சட்டம், 1882 பிரிவு 68A-ன்கீழ் நோட்டீஸ் கொடுக்கப்பட்டு ஆக்கிரமிப்புகள் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2013 அக்டோபர் 28

39—

நியாய விலைக் கடைகள்

வினா எண் 3483—திரு. ஆர். சுந்தர்ராஜன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நியாய விலைக் கடைகளில் தேவையில்லாத பொருட்களையும் வாங்கினால்தான் பொருட்கள் வழங்கப்படும் என்பதைத் தவிர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

நியாய விலைக் கடைகளில் பொது விநியோகத் திட்ட பொருட்கள் அல்லாத பொருட்களை வாங்க வேண்டும் என்பது கட்டாயம் இல்லை. நியாய விலைக் கடைகளில் பொது விநியோகத் திட்ட பொருட்கள் அல்லாத பொருட்களை வாங்கினால்தான் அத்தியாவசியப் பொருட்களான அரிசி, கோதுமை, மண்ணெண்ணெய், சர்க்கரை போன்றவை வழங்க முடியும் என்று நியாய விலைக் கடைகளில் விற்பனையாளர்கள் பொதுமக்களை கட்டாயப்படுத்தக்கூடாது. இதுசம்பந்தமாக நியாய விலைக் கடைகளில் அறிவிப்புப் பலகை ஒன்றை வைக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பின்படி அனைத்து நியாய விலைக் கடைகளிலும், "அத்தியாவசியப் பொருட்கள் அல்லாத பொருட்கள் வாங்குவதற்கு கட்டாயம் ஏதுமில்லை" என அறிவிப்புப் பலகை எழுதி வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தேவையற்ற பொருட்களை வாங்க வேண்டிய கட்டாயம் ஏதுமில்லை. புகார்கள் ஏதும் பெறப்படின், உடனுக்குடன் ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பொது விநியோகத் திட்டப் பொருட்கள் அல்லாத பிற வெளிச்சந்தை பொருட்களை வாங்க எந்த அங்காடி விற்பனையாளர் வற்புறுத்தினாலும், பொதுமக்கள் புகார் தெரிவிக்கலாம். உடன் நடவடிக்கை எடுக்கப்படும், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலகத்தில் செயல்படும் நுகர்வோர் சேவை மையத்தில் கீழ்க்கண்ட தொலைபேசி மற்றும் செல்லிட தொலைபேசி எண்களிலும், www.consumer@tn.gov.in என்ற இணையதள

2013 அக்டோபர் 28]

வசதியிலும் ஆலோசனைகள்/குறைகள்/புகார்கள் தெரிவிக்கலாம். புகார்கள்/ஆலோசனைகள்மீது உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

044-28592828	72 9900 8002
72 999 8002	72 0004 8002
72 0001 8001	86 8002 8003
86 8001 8002	95 4546 4748

40—

பட்டியல் இயந்திரங்கள்

வினா எண் 18318—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் கையினால் இயக்கப்படும் பட்டியல் இயந்திரங்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் சென்னையில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் கையினால் இயக்கப்படும் பட்டியல் இயந்திரங்கள் வழங்கப்பட்டு, நடைமுறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் முன்னேற்றம் கண்டு இதர மாவட்டங்களில் உள்ள நியாய விலைக் கடைகளுக்கும் விரிவுபடுத்தப்படும். மேலும், உடற்கூறு முறையிலான மின்னணு குடும்ப அட்டை வழங்கும் முன்னோடி திட்டத்தினை புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படுத்தவும், இதேபோன்று பிற மாவட்டங்களிலும் விரைவில் உடற்கூறு முறையிலான பதிவுகளின் அடிப்படையில் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை அமல்படுத்தும்போது மின்னணு பட்டியல் இயந்திரங்களையும் அதற்கேற்றவாறு செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2013 அக்டோபர் 28

41—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 19184—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், வேங்காவயல் ஊராட்சி, வலையன்வயலில் பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியத்தில், சிவகங்கை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகச் சாலையின்கீழ் செயல்படும் புதுவயல் முழுநேர நியாய விலைக் கடை எண் 11-லிருந்து வேங்காவயல் பகுதிநேரக் கடை பிரிக்கப்பட்டு 2-7-2012 முதல் 151 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகின்றது, இப்பகுதிநேரக் கடையுடன் வலையன்வயல் கிராமத்தைச் சேர்ந்த 83 குடும்ப அட்டைதாரர்கள் தங்களுக்குத் தேவையான குடிமைப் பொருள்கள் பெற்று வருகின்றனர். வலையன்வயல் கிராமத்திற்கும், வேங்காவயல் பகுதிநேரக் கடைக்கும் 1/2 கி.மீ. தூரமே உள்ளதால் தற்போது நடைமுறையிலுள்ள அரசு நிபந்தனைகளின்படி வலையன்வயல் கிராமத்தில் புதிய பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

42—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 20278—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், புத்தூரணியில் பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, பூசலாக்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கக் கட்டுப்பாட்டின்கீழ் 397 குடும்ப அட்டைகளுடன் செயல்படும் களபங்குடி நியாய விலைக் கடையுடன் புத்தூரணி கிராமத்தைச் சேர்ந்த 57 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. தற்போது நடைமுறையில் உள்ள அரசு நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், புத்தூரணியில் புதிய பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

43—

மண்ணெண்ணெய் சேகரிப்பு நிலையம்

வினா எண் 21646—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, இலுப்பூர் பேரூராட்சி, வார்டு எண் 11-ல் கூட்டுறவுத் துறைமூலம் மண்ணெண்ணெய் சேகரிப்பு நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) விராலிமலை தொகுதி, இலுப்பூர் பேரூராட்சி, வார்டு எண் 11-ல் கூட்டுறவுத் துறைமூலம் மண்ணெண்ணெய் சேகரிப்பு நிலையம் அமைத்திடுவது குறித்த செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

[2013 அக்டோபர் 28

44—

தேங்காய்ப் கொள்முதல் நிலையம்

வினா எண் 25622—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் தேங்காய் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் நேபெட்டின் மாநில முகவராக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் செயல்பட்டு கொப்பரையை மட்டும் கொள்முதல் செய்கிறது. தேங்காயை உலர வைத்தல் மற்றும் சேமிப்புக்கான உட்கட்டமைப்பு வசதிகள் உள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாக மட்டுமே தேங்காய் கொள்முதல் செய்யப்பட வேண்டும். மானாமதுரை தொகுதியில் திருப்புவனத்தை உள்ளடக்கிய சிவகங்கை வேளாண்மைக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் மேற்படி வசதிகள் இல்லாத காரணத்தால், நேபெட் நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி, திருப்புவனத்தில் தேங்காய் கொள்முதல் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

45—

பால் பண்ணை தொழிற்சாலை

வினா எண் 15470—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், அம்மாபாளையம் கிராமத்தில் பால் பண்ணை மற்றும் பால் பவுடர் தயாரிப்புத் தொழிற்சாலை துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், அம்மாபாளையம் கிராமத்தில், நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறனுள்ள பால் பண்ணை மற்றும் நாளொன்றுக்கு 20 மெட்ரிக் டன் பால் பவுடர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை தேசிய பால் வள வாரியம் மூலமாக ரூ. 60.18 கோடி செலவில் நிறுவும் பணி நடைபெற்று வருகிறது. திட்ட மதிப்பீட்டில் 95 சதவீதமான ரூ.56.93 கோடி நபார்டு வங்கி கடனாகவும், மீதமுள்ள 5 சதவீதமான ரூ. 3.25 கோடி அரசு பங்காகவும் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை அரசால் வழங்கப்பட்ட ரூ. 45.74 கோடி தேசிய பால் வள வாரியத்திற்கு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் ஜூலை 2013-க்குள் நிறைவேற்றப்படும்.

46—

பால் பொருட்கள் தயாரிப்பு

வினா எண் 15479—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆவின் நிறுவனத்தின் நெய், வெண்ணெய், யு.ஹெச்.டி. தொழில்நுட்ப தயாரிப்பு பால் ஆகியவற்றை தட்டுப்பாடின்றி தேவையான அளவு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆவின் நிறுவனத்தின் நெய், வெண்ணெய், யு.ஹெச்.டி. தொழில்நுட்ப தயாரிப்பு பால் ஆகியவை

தற்போது தட்டுப்பாடின்றி தாராளமாக எல்லா ஆவின் பாலகங்களிலும் மற்றும் ஆவின் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட சில்லறை விற்பனை கடைகளிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

47—

புதிய கட்டடம்

வினா எண் 25554—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, புள்ளாக்கவுண்டம்பட்டி ஊராட்சி, புள்ளாக்கவுண்டம்பட்டி பால் கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, புள்ளாக்கவுண்டம்பட்டி ஊராட்சி, புள்ளாக்கவுண்டம்பட்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமாக காலி மனை இல்லை. மேற்படி சங்க கட்டட நிதியாக ரூ.15,500/- மட்டுமே உள்ளது. அதனால் சட்டமன்ற உறுப்பினர்/நாடாளுமன்ற உறுப்பினர் நல நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்படும்பட்சத்தில் மேற்படி சங்கத்திற்கு சொந்தமாகக் கட்டடம் கட்டுவதற்கு வாய்ப்புள்ளது.

48—

சொந்தக் கட்டடம்

வினா எண் 25555—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

(அ) சங்கரி தொகுதி, மோரூர் மேற்கு ஊராட்சி, கொழிஞ்சி பாளையம், எஸ்.எம்.டி. 858 மகளிர் பால் உற்பத்தியாளர் சங்கத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, மோரூர் மேற்கு ஊராட்சி, எஸ்.எம்.டி. 858 கொழிஞ்சி பாளையம், மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமாக 5 சென்ட் நிலம் உள்ளது. மேற்படி சங்க கணக்கில் கட்டட நிதியாக 2010-2011 ஆம் ஆண்டு இறுதி தணிக்கை அறிக்கையின்படி ரூ.12,180.30 மட்டுமே உள்ளது. எனவே, மேற்படி சங்கத்திற்கு சொந்தமாகக் கட்டடம் கட்டுவதற்கு போதிய நிதி இல்லாததால் சட்டமன்ற உறுப்பினர்/நாடாளுமன்ற உறுப்பினர் நல நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்படும்பட்சத்தில் மேற்படி சங்கத்திற்கு சொந்தமாகக் கட்டடம் கட்டுவதற்கு வாய்ப்புள்ளது.

49—

கழிவுநீர் பாதை

வினா எண் 23307—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, கல்லல் ஒன்றியம், கோவிலூர் தமிழ்நாடு கெமிக்கல் தொழிற்சாலையின் கழிவுநீர் தமிழ்நாடு வனப் பகுதி வழியாகச் செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, கல்லல் ஒன்றியம், கோவிலூர் தமிழ்நாடு கெமிக்கல் தொழிற்சாலையின் செய்முறையில்

உருவாகும் கழிவுநீரில் கரைந்திருக்கும் உப்பின் தன்மை அதிகமாக இருப்பதால் கழிவுநீர் சேமிக்கப்பட்டு சூரிய ஒளியால் ஆவியாகும் தொட்டிகள்மூலம் ஆவியாக்கப்படுகிறது. இத்தொழிற்சாலையைச் சுற்றி தமிழ்நாடு வனப் பகுதி ஏதும் இல்லாததால், தொழிற்சாலையின் கழிவுநீர் தமிழ்நாடு வனப் பகுதி வழியாக வெளியேற்ற திட்டம் எதுவும் இல்லை.

50—

புதிய ஏரி அமைக்கும் திட்டத்தின் நிலை

வினா எண் 9408—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், தொண்டமான்துறை கிராமம், விசுவக்குடி, கல்லார் ஓடையின் குறுக்கே புதிய ஏரி கட்டும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், தொண்டமான்துறை கிராமம், விசுவக்குடி, கல்லார் ஓடையின் குறுக்கே நபார்டு வங்கி நிதி உதவியுடன் ஒரு புதிய ஏரி அமைக்கும் திட்டத்திற்கு ரூ.19.00 கோடிக்கு நிருவாக ஒப்புதல் அரசாணை (நிலை) எண் 61, பொதுப் பணித் (டபிள்யூ.1) துறை, நாள் 1-3-2011-ல் வழங்கப்பட்டது. தற்போது ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு, பணி நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு, இத்திட்டம் 28-9-2012 அன்று துவங்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

51—

வெள்ளநீர்க் கால்வாய்

வினா எண் 19774—திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

கரூர் மாவட்டம், மாயனூர் தடுப்பணையிலிருந்து குண்டாறு திட்ட நதி இணைப்புப் பணிகள் எந்நிலையில் உள்ளன?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

காவேரி-மணிமுத்தாறு-வைகை-குண்டாறு இணைப்பு வெள்ள நீர்க் கால்வாய் அமைக்கும் திட்டத்திற்கான ரூ.5166 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கை மத்திய அரசின் வெள்ள மேலாண்மைத் திட்டத்தின்கீழ் நிதி உதவியை எதிர்நோக்கி மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

52—

மணல் எடுத்து வழங்குதல்

வினா எண் 21115—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை தாமிரபரணி ஆற்றுப்படுகையில் மணல் எடுத்து வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை தாமிரபரணி ஆற்றுப்படுகையில் ஏற்கெனவே மணல் குவாரி செயல்படுத்தப்பட்டதனால் ஆற்றின் அடி மட்டம் மிகவும் தாழ்ந்து உள்ளது. மேலும், தாமிரபரணி ஆற்றுப்படுகையில் தேவையான அளவு மணல் இல்லை. எனவே, கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை தாமிரபரணி ஆற்றுப்படுகையில் மணல் எடுத்து வழங்கிட திட்டம் ஏதும் இல்லை.

53—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 24748—திருமதி ம. சக்தி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோயில் கோவிலார் வாய்க்கால் அருகே தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வைத்தீஸ்வரன்கோயில் கோவிலார் வடிகால் என்பது கோவிந்தகாவிரி மற்றும் முடவன் வாய்க்கால்களில் வெள்ளக் காலங்களில் வரும் உபரி நீர் வடிவதற்கு ஏற்படுத்தப்பட்ட வடிகால் ஆகும். இது வைத்தீஸ்வரன் கிராமத்தினருகே துவங்கி காளிகாவல்புரம் கிராமத்தினருகே கூப்பிடுவான் உப்பனாற்றில் கலக்கிறது. இதன் நீளம் 5.50 கி.மீ. ஆகும். மேலும், வடிகாலில் மழைக் காலங்களில் வரும் நீர் மிகவும் குறைந்த அளவே உள்ளதாலும், வடிகாலின் அகலம் மற்றும் உயரம் மிகக் குறைந்த அளவே இருப்பதாலும் தடுப்பணை அமைக்கும் பணி அவசியம் இல்லை.

54—

இரத்த பகுப்பாய்வு உபகரணம்

வினா எண் 10464—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி, திண்டுக்கல், தருமபுரி, காஞ்சிபுரம், விருதுநகர் மற்றும் கடலூர் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளுக்கு தலா ஒரு இரத்தப் பகுப்பான் உபகரணப் பெட்டி வழங்க அரசிடம் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2010-2011 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின்கீழ், ஏற்கெனவே திருச்சி, திண்டுக்கல், தருமபுரி, காஞ்சிபுரம், விருதுநகர் மற்றும் கடலூர் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளுக்கு தலா ஒரு தானியங்கி இரத்த பகுப்பாய்வு உபகரணம் வழங்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது.

55—

சிறுநீர் பகுப்பான் உபகரணப் பெட்டி

வினா எண் 10465—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருச்சி, திண்டுக்கல், தருமபுரி, காஞ்சிபுரம், விருதுநகர் மற்றும் கடலூர் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளுக்கு சிறுநீர் பகுப்பான் உபகரணப் பெட்டி வழங்க அரசிடம் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே பகுதி-2 திட்டம் 2010-2011-ன்கீழ் திருச்சி, திண்டுக்கல், தருமபுரி, காஞ்சிபுரம், விருதுநகர் மற்றும் கடலூர் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளுக்கு தானியங்கி சிறுநீர் பகுப்பாய்வு உபகரணம் வழங்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது.

56—

முயல் வளர்ப்பு

வினா எண் 11964—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் முயல் வளர்ப்புத் தொழில் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதியில் முயல் வளர்ப்புத் தொழில் துவக்க தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழாது.

57—

நெசவாளர் சங்கத்தை மீண்டும் திறத்தல்

வினா எண் 17752—திரு. சு. ரவி: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், செம்பேடு ஊராட்சி, குருவராஜப்பேட்டை கிராமத்தில் உள்ள கிருபானந்தவாரியார் விசைத்தறி கூட்டுறவு நெசவாளர் சங்கத்தை மீண்டும் திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், செம்பேடு ஊராட்சி, குருவராஜப்பேட்டை கிராமத்தில் உள்ள கிருபானந்தவாரியார் விசைத்தறி கூட்டுறவு நெசவாளர் சங்கம் தொடர்ந்து செயல்படாமல் இருந்து வந்ததால் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983-ன் பிரிவுகளுக்குட்பட்டு கலைக்கப்பட்டுவிட்டது. இச்சங்கத்தின் உறுப்பினராகச் செயல்பட்டு வந்த தற்போது விசைத்தறிகள் வைத்துள்ள நெசவாளர்களில், குறைந்தபட்சம் 25 நெசவாளர்கள் கலைக்கப்பட்ட மேற்படி சங்கத்தை தொடர்ந்து செயல்படுத்திட முன்வந்து விண்ணப்பித்தால் அச்சங்கத்தை மீண்டும் செயல்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

58—

வழிகாட்டி மதிப்பு தயாரித்தல்

வினா எண் 9430—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் சொத்துகளின் வழிகாட்டி மதிப்பு தயாரிக்கும் பணி ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இப்பணி எப்போது முடிவடையும்?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நமது மாநிலத்தில் சொத்துகளின் வழிகாட்டி மதிப்பு தயாரிக்கும் பணி நிறைவு பெற்று, திருத்தியமைக்கப்பட்ட வழிகாட்டி மதிப்பு 1-4-2012 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது.

59—

நில உரிமைகள்

வினா எண் 19870—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பத்திரப் பதிவு மற்றும் பட்டா வழங்கிய நிலங்களின் நில உரிமைகளை தடை செய்வதை இரத்து செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949 பிரிவு 3(1)(a)-ன்படி மாவட்ட ஆட்சியர் வனக் குழுவின் தலைவர் என்ற நிலையில் தனியார் காடுகள் தொடர்பான ஆவணப் பதிவுக்கு மாவட்ட ஆட்சியரிடமிருந்து தடையின்மைச் சான்று (NOC) பெற்ற பின்னரே பதிவு செய்ய வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் பத்திரப் பதிவு மற்றும் பட்டா வழங்கிய நிலங்களின் நில உரிமைகளை தடை செய்வதை இரத்து செய்வது தொடர்பாக வேறு ஆணை மற்றும் உத்தரவுகள் ஏதும் இல்லை.

(ஆ) எழவில்லை.

60—

பத்திரப் பதிவு

வினா எண் 20098—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், கருப்பூர் பெண்கள் தொழிற்பேட்டையில் ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களுக்கு பத்திரப் பதிவு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) கருப்பூர் தொழிற்பேட்டை தொடர்பாக தொழில் மற்றும் வணிகத் துறையில் ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட தொழிற்கூடங்கள் ஒதுக்கீடு பெற்ற நபர்களுக்கு மாற்றம் செய்து ஆவணம் ஏதும் பதிவுக்கு வரவில்லை. எனவே ஒதுக்கீடு பெற்ற நபர்களுக்கு தொழில் மற்றும் வனத் துறையில் சொத்து மாற்ற ஆவணங்கள் எழுதி கொடுக்கப்பட்டு ஆவணங்கள் பதிவுக்கு தாக்கலானால் ஆவணங்கள் பதிவு செய்ய பதிவுச் சட்டத்தின் விதிகள்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) எழவில்லை.

61—

சார்-பதிவாளர் அலுவலகம்

வினா எண் 22465—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியம், கண்ணங்குடியில் சார்-பதிவாளர் அலுவலகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கண்ணங்குடி கிராமமானது காரைக்குடி பதிவு மாவட்டத்தில் உள்ள தேவகோட்டை சார்-பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்ட 56 கிராமங்களில் ஒன்றாகும். கண்ணங்குடி கிராமம், தேவகோட்டை சார்-பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்டுள்ளதாலும், கண்ணங்குடி கிராமத்தில் தனியே

[2013 அக்டோபர் 28

சார்-பதிவாளர் அலுவலகம் இல்லையென்பதாலும், அதற்கு அரசு அலுவலகம் கட்ட வேண்டிய சூழ்நிலை எழவில்லை. இருப்பினும், கண்ணங்குடி கிராமத்தினை உள்ளடக்கிய தேவகோட்டை சார்-பதிவாளர் அலுவலகக் கட்டடம் 100 ஆண்டுகளுக்கு மேல் பழமையான கட்டடம் என்பதால், அதற்கு புதிய அரசு கட்டடம் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண் 57, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள்: 12-4-2012-ல், ரூ. 50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு கட்டடம் கட்டப்பட்டு வருகின்றது.

62—

வாகனங்களுக்கு வரி விலக்கு

வினா எண் 22469—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சமூக நல சேவை புரியும் அரசு சாரா சமூக நல நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளின் பயன்பாட்டிற்கான அனைத்து விதமான வாகனங்களுக்கும் வரி விலக்கு மற்றும் சேவை கட்டணங்களிலிருந்து விலக்களித்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

சமூக நல சேவை புரியும் அரசு சாரா நிறுவனங்களின் அல்லது அமைப்புகளின் பயன்பாட்டிற்கான வாகனங்கள் கொள்முதல் செய்வதற்காக அவர்கள் சமர்ப்பிக்கும் வரி விலக்கு கோரும் கருத்துரு மற்றும் அவர்களது சேவை தொடர்பானவற்றை தனித் தனியாக கூர்ந்தாய்வு செய்து எடுக்கப்படும் முடிவுகளின் அடிப்படையில் வரி விலக்கு அளிக்கப்பட்டு வருகிறது. பொதுவான வரித் தொடர்பான வரி விலக்களிப்பது மத்திய அரசை சார்ந்தது.

2013 அக்டோபர் 28]

63—

வாகனங்களுக்கு வரி விலக்கு

வினா எண் 22470—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மருத்துவ சேவை புரியும் நிறுவனங்களின் பயன்பாட்டிற்கான அனைத்துவிதமான வாகனங்களுக்கும் வரி விலக்கு மற்றும் சேவை கட்டணங்களிலிருந்து விலக்களித்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

மருத்துவ சேவை புரியும் நிறுவனங்களின் பயன்பாட்டிற்கான அனைத்து வாகனங்களுக்கும் வரி விலக்கு அளிப்பது என்பது அவ்வாறு வரி விலக்குக் கோரும் நிறுவனங்களின் கருத்துரு மற்றும் அவர்களின் பணியின் தன்மையின் விவரங்கள் தனித் தனியாக கூர்ந்தாய்வுசெய்து அதனடிப்படையில் வரி விலக்கு அளிக்கப்படுகிறது. பொதுவான வரி விலக்கும் அளிக்க இயலாது. மேலும், சேவை வரி மத்திய அரசால் விதிக்கப்படுகிறது.

64—

மதிப்புக் கூட்டு வரி விலக்கு

வினா எண் 22471—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உணவுப் பொருட்கள் அனைத்திற்கும் வணிக வரி மற்றும் மதிப்புக் கூட்டு வரியிலிருந்து விலக்களித்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் கீழ், உணவுப் பொருட்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ள இனங்கள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு உள்ளன:

[2013 அக்டோபர் 28

- நெல், கம்பு, சோளம், கேழ்வரகு போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- தானிய வகைகள், பயறு மற்றும் துவரை, உளுந்து, மொச்சை பருப்பு வகைகள் போன்ற பொருட்களின்மீதான மொத்த ஆண்டு விற்பனைத் தொகை ரூபாய் 500 கோடி வரை இருப்பின், வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- மல்லி, மிளகாய், மஞ்சள், புளி, கடுகு, சோம்பு, வெந்தயம் மற்றும் மிளகு மீதான மொத்த ஆண்டு விற்பனைத் தொகை ரூபாய் 300 கோடி வரை இருப்பின் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- மேலும், மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006-ன்படி அட்டவணை 4, பிரிவு ஆ-ன்படி பொதுமக்களின் தேவை மற்றும் அத்தியாவசிய தன்மையினைக் கருத்தில் கொண்டு பல இனங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

65—

மதிப்புக் கூட்டு வரி விலக்கு

வினா எண் 22473—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் அதனைச் சார்ந்த அனைத்திற்கும் மதிப்புக் கூட்டு வரி மற்றும் வணிக வரியிலிருந்து விலக்களித்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் நான்காம் அட்டவணை, பகுதி 'B'- ன்படி கீழ்க்கண்ட நேர்வுகளின் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் அதனைச் சார்ந்தவற்றிற்கும் மதிப்புக் கூட்டு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது:

2013 அக்டோபர் 28]

(i) அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட மனித சக்தியால் அல்லது விலங்கு மூலமாகச் செயல்படும் அல்லது இயக்கப்படும் வேளாண்மைக் கருவிகள்

(ii) அரசினால் அறிவிக்கப்பட்டவாறு மேற்சொன்ன (i) எனும் இனத்தில் குறித்துரைக்கப்படாத வேளாண் உபகரணங்கள் மற்றும் டிராக்டர்கள் அல்லது பவர் டில்லர்களால் சக்தி அளிக்கப்படும் அல்லது இயக்கப்படும் வேளாண் உபகரணங்கள் மற்றும் அவற்றின் பாகங்களும் துணைக் கருவிகளும்.

(iii) திவலைப் பீற்றிகள், தெளிப்பான்கள் மற்றும் சொட்டுநீர்ப் பாசன சாதனங்கள், அவற்றின் பாகங்களும் துணைக் கருவிகளும்

(iv) இரசாயன உரங்கள்.

(v) புழுபூச்சிக் கொல்லிகள், பூச்சிக்கொல்லிகள், கொறி விலங்கு கொல்லிகள், நோய் நுண்மக் கொல்லிகள், களைக் கொல்லிகள், பூஞ்சனக் கொல்லிகள், மூலிகைக் கொல்லிகள் மற்றும் அவற்றின் கலவைகள், கணைத் தடுப்பான்கள், தாவர வளர்ச்சி சீராக்கிகள், தாவர ஊட்டச் சத்துகள், மைக்ரோ ஊட்டச்சத்துகள், தாவர உரங்கள், நோய் எதிர்ப்பான்கள் மற்றும் அனைத்து வகையான மற்றும் வடிவிலான ஜிப்சம்.

66—

மதிப்புக் கூட்டு வரி விலக்கு

வினா எண் 22474—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்துவிதமான உயிர்காக்கும் மருந்துகளுக்கு மதிப்புக் கூட்டு வரியிலிருந்து விலக்களித்திட அரசு ஆவன செய்யுமா?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள 39 உயிர்காக்கும் மருந்துகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

67—

மதிப்புக் கூட்டு வரி விலக்கு

வினா எண் 25444—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விவசாயம், வேளாண் சார்ந்த இயந்திரங்களுக்கும் மற்றும் உணவுப் பண்டங்களுக்கும் மதிப்புக் கூட்டு வரியிலிருந்து விலக்கு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2006 ஆம் ஆண்டைய தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்படி கீழ்க்காணும் விவசாயம் மற்றும் வேளாண் சார்ந்த பொருட்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

நெல், கம்பு, சோளம், கேழ்வரகு போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

தானிய வகைகள், பயறு மற்றும் துவரை, உளுந்து, மொச்சை பருப்பு வகைகள் போன்ற பொருட்களின் மீதான மொத்த ஆண்டு விற்பனைத் தொகை ரூபாய் 500 கோடி வரை இருப்பின், வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

2013 அக்டோபர் 28]

மல்லி, மிளகாய், மஞ்சள், புளி, கடுகு, சோம்பு, வெந்தயம் மற்றும் மிளகு மீதான ஆண்டு மொத்த விற்பனைத் தொகை ரூபாய் 300 கோடி வரை இருப்பின், வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

புழுபூச்சிக் கொல்லிகள், பூச்சிக்கொல்லிகள், கொறி விலங்கு கொல்லிகள், நோய் நுண்மக் கொல்லிகள், களைக் கொல்லிகள் பூஞ்சனக் கொல்லிகள், மூலிகைக் கொல்லிகள் மற்றும் அவற்றின் கலவைகள், கணைத் தடுப்பான்கள், தாவர வளர்ச்சி சீராக்கிகள், தாவர ஊட்டச்சத்துகள், மைக்ரோ ஊட்டச்சத்துகள், தாவர உரங்கள், நோய் எதிர்ப்பான்கள் மற்றும் அனைத்து வகையான மற்றும் வடிவிலான ஜிப்சம் போன்ற இரசாயன உரங்களுக்கும் 12-7-2011 முதல் விற்பனையில் இருந்து வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

அரசினால் அறிவிக்கப்பட்டவாறு வேளாண்மை உபகரணங்கள் மற்றும் டிராக்டர்கள் அல்லது பவர் டில்லர்களால் சக்தி அளிக்கப்படும் அல்லது இயக்கப்படும் வேளாண் உபகரணங்கள் மற்றும் அவற்றின் பாகங்களுக்கும், துணைக் கருவிகளுக்கும், தெளைப் பீற்றிகள், தெளிப்பான்கள் மற்றும் சொட்டு நீர்ப்பாசன சாதனங்கள், அவற்றின் பாகங்கள் மற்றும் துணைக் கருவிகளுக்கு 1-4-2012 முதல் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அன்றாடம் உபயோகப்படுத்தும் அப்பளம், பப்படம், வடாம் மற்றும் வற்றல் முதலியவற்றிற்கும், ரொட்டி, பன் மற்றும் ரஸ்க் (வணிகச் சின்னமிடப்பட்ட அல்லது பிறவாக) முதலியவற்றிற்கும், புதிய பால், கொதிக்க வைத்துக் குளிரப்படுத்தும் முறையில் கிருமி நீக்கப்பட்ட பால் மற்றும் நேரடியாக கலக்கப்பட்ட பால் முதலியவற்றிற்கும், தயிர், லஸ்ஸி, மோர், பிரித்தெடுக்கப்பட்ட பால் மற்றும் வணிகச் சின்னமிடப்படாத வெண்ணெய்ப் பொருட்களுக்கும், உருளைக் கிழங்குகள், மரவள்ளிகிழங்கு மற்றும் புதிய பழங்கள் உள்ளடங்கலான பச்சைக் காய்கறிகள், தானிய தயாரிப்புகள் (மாவு, உடைந்த சோளம் மற்றும் சோளத் தவுடு, கம்பு, கேழ்வரகு, தினை, வரகு, சாமை, குதிரை வாலி மற்றும் மைலோ ஆகியவற்றிற்கும்) சேமியா போன்ற உணவுப் பொருட்களுக்கும் முழு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், கோதுமை மற்றும் ஓட்ஸ்மீது

விதிக்கப்பட்டிருந்த முறையே 2 சதவீதம் மற்றும் 5 சதவீத மதிப்புக் கூட்டு வரி 1-4-2012 முதல் முற்றிலும் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், 2006 ஆம் ஆண்டைய தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்படி, அட்டவணை-4, பிரிவு B-ன்படி வேளாண்மை மற்றும் பொதுமக்களின் தேவை மற்றும் அத்தியாவசிய தன்மையினைக் கருத்தில் கொண்டு பல இனங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

68—

ஆதி திராவிடர் தொடக்கப் பள்ளி துவக்குதல்

வினா எண் 25670—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் ஆதி திராவிட தொடக்கப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்மூலம் ஏற்கெனவே செயல்பட்டுவரும் ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளிகள்/உயர்நிலைப் பள்ளிகள் முறையே உயர் நிலை/மேல்நிலைப் பள்ளிகளாக அடுத்த நிலைக்கு தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. இத்துறையின்மூலம் புதிதாக ஆரம்பப் பள்ளிகள் தற்போது துவக்கப்படுவதில்லை.

2. அனைவருக்கும் கல்வித் திட்டம், "சர்வ சிக்ஷா அபியான்" மூலம் ஆதி திராவிடர் நலக் குடியிருப்புகளுக்கு அருகில், முன்னுரிமையின் அடிப்படையில் ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் துவக்கப்பட்டு வருகின்றன. மானாமதுரை தொகுதியில் வசிக்கும் ஆதி திராவிடர் இன மக்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும், தேவையின் அடிப்படையிலும், சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்து, தேவையெனில், அனைவருக்கும் கல்வித்

2013 அக்டோபர் 28]

திட்டம் (SSA) மூலம் அங்கு ஆதி திராவிடர் நலப் பள்ளி துவக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

69—

மீன் உற்பத்தி பெருக்கம்

வினா எண் 17171—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டின மீன் வளர்ப்புத் திட்டத்தின் மூலம் மீன்களை பல மடங்கு பெருக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) கூட்டின மீன் வளர்ப்பு முறைதான் நடைமுறையில் உள்ளது.

கூட்டின மீன்வளர்ப்பு என்பது பல வகையான மீன்குஞ்சுகளை ஒரே மீன் வளர்ப்பு குளத்தில் இருப்பு செய்து வளர்ப்பதாகும். மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை (FFDA) மூலம் உள்நாட்டு மீன் வளர்ப்பினை ஊக்கப்படுத்திடவும், கூட்டின மீன் வளர்ப்பு முறையினைப் பின்பற்றி அதிக இலாபத்தினை மீன் வளர்ப்போர் ஈட்டிட ஏற்கெனவே மீன் வளத் துறையின்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பெருரக கெண்டை மீன்களான கட்லா, ரோகு, மிர்கால் மற்றும் சாதாகெண்டை, புல்கெண்டை போன்ற மீன் இனங்களை மீன்வளர்ப்பு குளத்தில் இருப்பு செய்து மீன் வளர்ப்போர் அதிக இலாபம் பெற மீன் துறையின் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைமூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீன் உற்பத்தியினை பல மடங்கு பெருக்க தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம், தேசிய மீன் வள மேம்பாட்டு வாரியத் திட்டங்கள், நீர்வள, நிலவளத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றின் மூலம் அரசு மீன்பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதியினை மேம்படுத்தி, அவற்றில் மீன்குஞ்சு வளர்ப்பினை அதிகரிக்க

[2013 அக்டோபர் 28

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தனியாரை மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் மீன்குஞ்சு வளர்ப்புப் பண்ணைகளை ஏற்படுத்த ஊக்குவிக்கும் பொருட்டு தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம் மற்றும் நீர்வளத் திட்டத்தின்கீழ் மானியம் வழங்கி மீன்குஞ்சு உற்பத்தி/வளர்ப்புப் பணிகளை மேற்கொள்ளவும், இதன்மூலம் வளர்க்கப்படும் மீன்குஞ்சுகளை பெருரக விரலிகளாக வளர்த்து நீர்த்தேக்கங்கள், பாசனக் குளங்கள், கண்மாய்கள் மற்றும் பண்ணைக் குட்டைகளில் இருப்புசெய்து மீன்வளத்தினைப் பெருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) வினா எழாது.

70—

ஆட்சி மொழித் திட்டப் பயிற்சிகள்

வினா எண் 15958—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2011-12 ஆம் ஆண்டில் சென்னை மாவட்டத்திலுள்ள அனைத்துத் துறைப் பணியாளர்களுக்கும் ஆட்சி மொழித் திட்டப் பயிற்சிகள் நடத்தப்பெற்றனவா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2005 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 32 ஆட்சி மொழித் திட்டப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. சுழற்சி முறையில் இதுவரை 209 துறைகளைச் சேர்ந்த 983 பணியாளர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு பயிற்சி வகுப்பும் இரண்டு நாட்கள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு பயிற்சிக்கும் துறை வாரியாக 50 பணியாளர்கள் பயிற்சிக்கு அழைக்கப்படுகின்றனர். சென்னையில் இலட்சக்கணக்கான அரசுப் பணியாளர்கள்

2013 அக்டோபர் 28]

உள்ளனர். தற்போதுள்ள திட்டப்படி ஆண்டுக்கு 5 பயிற்சி வகுப்புகள் வீதம் ஆண்டிற்கு சராசரியாக 200 பணியாளர்களுக்கு மட்டுமே பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. சென்னையிலுள்ள அரசுப் பணியாளர்கள் அனைவருக்கும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவில்லை. அதற்கான வாய்ப்பும் இல்லை. 2011-2012 ஆம் நிதியாண்டில் 7 துறைகளைச் சேர்ந்த 142 பணியாளர்களுக்கு ஆட்சி மொழிப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

71—

ஆராய்ச்சி நூல்கள் வெளியிடுதல்

வினா எண் 15975—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்மூலம் 2011-2012 ஆம் ஆண்டில் நூல்கள் வெளியிடப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், எப்போது? எத்தனை நூல்கள்?

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) ஆம். உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின்மூலம் 2011-2012 ஆம் ஆண்டில் நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் 2011-2012 ஆம் ஆண்டில் 21 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

72—

நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்களை இணையதளத்தில் வெளியிடுதல்

வினா எண் 15979—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

நாட்டுடைமையாக்கப்பட்ட தமிழ் அறிஞர்களின் நூல்களை கன்னிமாரா நூலகம் வாயிலாக இணையதளத்தில் வெளியிடும் பணியின் தற்போதைய நிலையை அரசு தெரிவிக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

இதுவரை 145 தமிழறிஞர்களின் சுமார் 5,249 நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன. நாட்டுடைமையாக்கப்பட்ட தமிழறிஞர்களின் 1,478 நூல்கள் கன்னிமாரா நூலகத்தால் உருப்படம் செய்யப்பட்டு தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் வாயிலாக இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

73—

கிராமியக் கலைகளைப் பாதுகாத்தல்

வினா எண் 16862—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நலிந்துவரும் கிராமியக் கலைகளைப் பாதுகாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நலிந்துவரும் கிராமியக் கலைகளைப் பாதுகாக்க அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது:-

நலிந்துவரும் கிராமியக் கலைகளைப் பாதுகாக்க 100 நாட்டுப்புறக் கலைகளில் இதுவரை 20 நாட்டுப்புறக் கலைகள் ஆவணமாக்கம் செய்யப்பட்டு, 2012-2013 ஆம் ஆண்டு மேலும்

2013 அக்டோபர் 28]

16 நாட்டுப்புறக் கலைகளை ஆவணமாக்குவதற்கு உரிய முன்மொழிவுகள் அரசுக்கு அனுப்பப்பட்டு அது தொடர்பாக மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. நலிந்துவரும் கிராமியக் கலைகளைப் பாதுகாக்கும் வகையில் கலை பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள மண்டல கலை பண்பாட்டு மையங்கள், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்மூலம் மாவட்டங்களில் உள்ளூர் விழாக் காலங்களில் மற்றும் கோயில் விழாக்களில் கிராமியக் கலைகளை வெளிப்படுத்தும் வகையில் கலை நிகழ்ச்சிகளுக்கு வாய்ப்பளித்து ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன.

3. வளர்ந்துவரும் இளைய தலைமுறையினர் இக்கலையை அறிந்துகொள்ளும் வகையில் கலை பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகளில் கிராமியக் கலை ஒரு பிரிவாக கல்லூரி மாணவர்களுக்கு கற்பிக்கப்படுகிறது.

4. கிராமியக் கலைகளை அயல் நாட்டினரும் அறிந்துகொள்ளும் வகையில் கலை பரிமாற்றம் என்கிற அடிப்படையில் கிராமியக் கலைகளை அயல் நாட்டினர் கண்டு அறிந்துகொள்ளும் வகையில் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.

5. கலை பண்பாட்டுத் துறையின்மூலம் கிராமியக் கலைகளை வெளிநாட்டினர் அறிந்துகொள்ளும் வகையில் வெளிநாடுகளுக்கு கிராமியக் கலைக் குழுக்களை அனுப்பி வைத்து நலிந்துவரும் நமது கிராமியக் கலைகளை வெளிநாட்டினர் கண்டு, அறிந்து கொள்ளும் வகையில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

6. நலிந்துவரும் கிராமியக் கலைகளைப் பாதுகாக்கும் வகையில் அக்கலை நிகழ்ச்சிகளை நடத்தும் கலைஞர்களுக்கு நலத் திட்ட உதவித் தொகை, இலவச இசைக் கருவிகள், மனைப் பட்டா போன்ற உதவிகள் அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள்வாயிலாக வழங்கப்பட்டு வருகின்றன.

7. கிராமியக் கலைகளை நடத்திடும்பொருட்டு வெளியூர்களுக்குச் சென்று வரும் கிராமியக் கலைக் குழுவினருக்கு,

தமிழக அரசுப் பேருந்துகளில் 50 விழுக்காடு சலுகைக் கட்டணத்தில் பயணமும், இருப்பூர்தியில் உள்ளூர் மற்றும் வெளியூர்களில் கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்த 75 விழுக்காடு பயண கட்டணச் சலுகையும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின்மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

74—

அருங்காட்சியகம் புனரமைப்பு

வினா எண் 17983—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை அருங்காட்சியக புனரமைப்புப் பணிகள் இன்னும் மேற்கொள்ளப்பட வேண்டியவை எவை?

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

சென்னை அருங்காட்சியகத்தின் விலங்கியல் பிரிவில் பாலூட்டிகள் கூடம் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. தாவரவியல் பிரிவில் மைய அரசு நிதி ஒதுக்கீட்டில் டயோரமோ காட்சிப் பெட்டிகள் அமைக்கப்படவுள்ளன. சிறுவர் அருங்காட்சியகத்தில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. சென்னை, அரசு அருங்காட்சியகத்திலுள்ள தேசிய கலைக் கூடம் பாரம்பரியமிக்க கட்டடங்களுள் ஒன்று. இக்கட்டடத்தில் காணப்பட்ட விரிசல்களை தென்பட்டதினை பொதுப் பணித் துறையினர் கண்டறிந்ததைத் தொடர்ந்து, இக்கட்டடம் பொதுமக்கள் பார்வையிடுவதைத் தவிர்க்க மூடப்பட்டது. இக்கட்டடத்தை புனரமைப்பதற்காக ரூ. 11.00 கோடி மதிப்பிலான விரிவான கருத்துரு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் இசைவு எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது இக்கட்டடத்தினை தற்காலிகமாக

2013 அக்டோபர் 28]

வலுவேற்றுவதற்கு ஏதுவாக முன்னுரிமை திட்டப் பணிகளில் ரூ.8.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்படவுள்ளன.

75—

சட்டக் கல்லூரி விடுதிக் கட்டட வசதி

வினா எண் 19105—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு விடுதிக் கட்டடம் கட்டும் பணி முடிவுற்றுவிட்டதா?

(ஆ) ஆம் எனில், எப்போது மாணவருக்கு அளிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு விடுதிக் கட்டடம் கட்டிட 2010-2011 ஆம் ஆண்டு பகுதி இரண்டாவது திட்டத்தின்கீழ் அரசாணை நிலை எண் 135, சட்டத் (சக) துறை, நாள் 27-5-2010 இல் அரசால் ரூ.1 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டு, கட்டடம் கட்டும் பணிகள் முடிவடைந்து இறுதி கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவ்விடுதியை மாணவர்களுக்குப் பதிலாக மாணவிகள் பயன்படுத்திட அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரி வளாகத்தில் கட்டப்பட்டு வரும் இவ்விடுதி முழுமையாக கட்டி முடிக்கப்பட்டு அக்கல்லூரி மாணவிகளின் பயன்பாட்டிற்காக கல்லூரி நிருவாகத்திடம் விரைவில் ஒப்படைக்கப்படும்.

[2013 அக்டோபர் 28

76—

சட்டக் கல்லூரி ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல்

வினா எண் 19109—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு சட்டக் கல்லூரிகளில் ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) அரசு சட்டக் கல்லூரிகளில் காலியாக இருந்த 45 முழுநேர ஆசிரியர் பணியிடங்களை, நேரடி நியமனம்மூலம் பூர்த்தி செய்திட, ஆசிரியர் தேர்வு வாரியத்தால் அறிவிக்கை வெளியிடப்பட்டு, தகுதிவாய்ந்த 13 நபர்கள் தேர்வு செய்யப்பட்டனர். அவர்கள் அரசாணை (நிலை) எண் 422, சட்ட (சக)த் துறை, நாள் 9-7-2012 இல் விரிவுரையாளர்களாகவும், (முதுநிலை), சட்ட முன் படிப்பு விரிவுரையாளர்களாகவும் (முதுநிலை) நியமனம் செய்யப்பட்டனர்.

(ஆ) அரசு சட்டக் கல்லூரிகளில் தற்போது காலியாக உள்ள இதர முழுநேர ஆசிரியர் பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக விரைவாகப் பூர்த்தி செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

77—

பள்ளிச் சீருடை வழங்குதல்

வினா எண் 19125—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம்,

2013 அக்டோபர் 28]

நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக பள்ளிகளில் சத்துணவு உண்ணாத பிள்ளைகளுக்குச் சீருடை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) அரசு / அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் சத்துணவு உண்ணும் மாணவ / மாணவியர்களுக்கு அரசின் விலையில்லா சீருடைகள் வழங்கும் திட்டத்தின்கீழ் ஆண்டொன்றுக்கு நான்கு சீருடைகள் வழங்கப்படுகின்றன. சத்துணவு உண்ணாத மாணவ / மாணவியர்களுக்கு சீருடைகள் வழங்குவது அரசின் கொள்கை முடிவாகும். அரசால் கொள்கை முடிவு மேற்கொண்ட பின்பு சத்துணவு உண்ணாத மாணவ / மாணவியர்களுக்கு விலையில்லா சீருடைகள் வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

(ஆ) வினா எழவில்லை.

78—

வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு

வினா எண் 20374—திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விதவையை மறுமணம் செய்பவருக்கு வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விதவையை மறுமணம் செய்பவருக்கு வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு வழங்குவது தொடர்பான பொருள் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

79—

பணியிடம் நிரப்புதல்

வினா எண் 22037—திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் கல்வி மாவட்டத்தில் உருது உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடம் நிரப்பும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) வேலூர் வருவாய் மாவட்டத்தில் ஓர் உருது உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடம் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டு உருது உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் அதில் பணிபுரிந்து வருகிறார். வேலூர் மாவட்டத்திற்குட்பட்ட திருப்பத்தூர் கல்வி மாவட்டத்திற்கென தனியே உருது உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடம் தோற்றுவிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

2013 அக்டோபர் 28]

80—

தமிழில் மொழியாக்கம்

வினா எண் 23960—திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிற மொழிகளில் தமிழறிஞர்கள் படைத்துள்ள படைப்புகளை தமிழில் மொழியாக்கம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

தமிழ் வளர்ச்சிக்கான நூல் வெளியிட நிதியுதவி வழங்கும் திட்ட விதிமுறை விதி எண் 1(ஆ)-இன்படி பிற மொழிகளில் உள்ள நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட அரசு அனுமதி அளித்துள்ளது.

81—

தேர்வாணையத் தேர்வு மையங்களில் "வெப்கேமரா" மூலம் கண்காணித்தல்

வினா எண் 27141—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தேர்வாணையக் குழுவின் அனைத்துத் தேர்வு மையங்களிலும் "வெப்கேமரா"மூலம் கண்காணிக்கும் பணி தொடங்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். ஏற்கெனவே தொடங்கப்பட்டு விட்டது. 5-5-2012 முதல் தேர்வாணையத் தேர்வுகளின் கூர் உணர்வு மையங்களில் (Sensitive Centres) *மட்டும் "வெப்கேமிரா" மூலம் கண்காணிக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இது மட்டுமின்றி 7-7-2012 முதல் தேர்வாணையத் தேர்வுகளின் அனைத்து மையங்களிலும் "வீடியோகேமிரா" மூலம், தேர்வு மையத்தில் வினாத்தாள் கட்டுகளைப் பெறுதல், விண்ணப்பதாரர் தேர்வு எழுதுதல், விடைத் தாள்கள் கட்டப்பட்டு முத்திரையிடப்படும் வரை அனைத்து நிகழ்வுகளையும் பதிவு செய்யும் நடைமுறை தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது.*

82—

உதவித்தொகை

வினா எண் 6369—திரு. பி. கே. வைரமுத்து: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவுசெய்து பத்து ஆண்டுகளாகியும் அரசு வேலை கிடைக்காதவர்களுக்கு மாதம் ரூ. 1,000/- உதவித்தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவுசெய்து 5 ஆண்டுகள் காத்திருக்கும் படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு அவர்களது கல்வித் தகுதிக்கேற்ப இதர நிபந்தனைகளுக்குட்பட்டு மூன்றாண்டு காலத்திற்கு (வேலைவாய்ப்பு கிடைக்கும் வரை) உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி,

1. *பள்ளியிறுதித் தேர்வில் தேர்ச்சி பெறாதவர்களுக்கு மாதம் ரூ. 100/-*

2013 அக்டோபர் 28]

2. பள்ளியிறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ. 150/-
3. மேனிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ. 200/-
4. பட்டம்/முதுநிலைப் பட்டம் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ. 300/-

இதேபோல, வேலைவாய்ப்பற்ற பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் மற்றும் அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கும் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஓராண்டு நிறைவு பெற்றிருந்தால் அவர்களது கல்வித் தகுதிக்கேற்ப இதர நிபந்தனைகளுக்குட்பட்டு பத்தாண்டு காலத்திற்கு (வேலைவாய்ப்பு கிடைக்கும் வரை) உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி,

1. பள்ளியிறுதித் தேர்ச்சி மற்றும் அதற்குக் கீழான தகுதி மாதம் ரூ. 300/-
2. மேனிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.375/-
3. பட்டம்/முதுநிலைப் பட்டம் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ450/-

இதுதவிர, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவுசெய்து 10 ஆண்டுகளாகியும் அரசு வேலை கிடைக்காதவர்களுக்கு மாதம் ரூ. 1000/- உதவித்தொகை வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

83—

தமிழில் பெயர் பலகை

வினா எண் 15686—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழில் பெயர்ப் பலகை வைக்காத வணிக நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகள் 1948 விதி 15 மற்றும் தமிழ்நாடு உணவு நிறுவனங்கள்

விதிகள், விதி எண் 42–பி ஆகியவற்றின்படி கடைகள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் உணவு நிறுவனங்களில் தமிழில் பெயர்ப் பலகை வைக்க வேண்டும். தொழிலாளர் துறை உதவி ஆய்வர்கள் ஆய்வு மேற்கொண்டு தமிழில் பெயர்ப் பலகை வைக்காத நிறுவனங்களுக்கெதிராக நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். 2011-2012ஆம் ஆண்டில் 2,64,658 நிறுவனங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தமிழில் பெயர்ப் பலகை வைக்காத 24,725 நிறுவனங்களுக்கெதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

84—

திரு.வி.க. இல்லத்தை சீரமைத்தல்

வினா எண் 19207—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, குற்றாலத்திலுள்ள திரு.வி.க. தொழிலாளர் ஓய்வு இல்லத்தைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின்மூலம் தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அத்திட்டங்களில் தொழிலாளர்கள் குடும்பத்துடன் குறைந்த வாடகையில் தங்குவதற்காக குற்றாலத்தில் செயல்பட்டுவரும் திரு.வி.க. ஓய்வு இல்லமும் அடங்கும். திரு.வி.க. ஓய்வு இல்லம் 1983 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இங்கு ஒரே நேரத்தில் 93 பேர் தங்க வசதி செய்யப்பட்டுள்ளது. இவ்வில்லத்தில் இறுதியாக கடந்த 2005 ஆம் ஆண்டில் ரூ.8.43 இலட்சம் செலவில் பொதுப் பணித் துறைமூலம் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், 2011 ஆம் ஆண்டில் ஓய்வில்லத்தில் தங்குவோருக்குப் (குரங்குகள் தொல்லையிலிருந்து) பாதுகாப்பு அளிக்கும்விதமாக அனைத்து அறைகளிலும் கம்பி

2013 அக்டோபர் 28]

வலை (Welded Mesh) அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி குற்றாலம், திரு.வி.க. இல்லத்தில் அவ்வப்போது பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஓய்வில்லம் சிறப்பான முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) எழாது.

85—

எடை தராசு முத்திரை வைக்கும் அலுவலகம்

வினா எண் 23095—திருமதி ம. சக்தி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் வியாபாரி, விவசாயிகள் பயன்படுத்தும் எடை தராசு முத்திரை வைக்கும் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி, தொழிலாளர் உதவி ஆய்வர் ஆட்சி எல்லையில் உள்ள வணிகர்கள் மற்றும் விவசாயிகள் பயன்படுத்தும் எடை தராசுகளுக்கு முத்திரையிட மயிலாடுதுறை முத்திரை ஆய்வர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், முத்திரை பணி மேற்கொள்ள சீர்காழியில் முகாம் உள்ளதாலும், மயிலாடுதுறை, முத்திரை ஆய்வர் பிரதி மாதம் மார்ச் மற்றும் மே மாதங்களில் சீர்காழியில் முகாமிட்டு முத்திரை ஆய்வர் பணி மேற்கொள்வதாலும், சீர்காழி, தொழிலாளர் உதவி ஆய்வர் ஆட்சி எல்லையில் 2,842 வணிகர்கள் மட்டுமே உள்ளதாலும் மற்றும் சீர்காழி, தொழிலாளர் உதவி ஆய்வர் அலுவலகத்திற்கும் மயிலாடுதுறை, முத்திரை ஆய்வர் அலுவலகத்திற்கும் இடையே 22 கிலோ மீட்டர் தூரம் உள்ளதாலும் சீர்காழி தொகுதியில் வணிகர்கள் மற்றும் விவசாயிகள் பயன்படுத்தும் எடை தராசுகளுக்கு முத்திரையிட முத்திரை ஆய்வர் அலுவலகம் அமைக்க அவசியம் இல்லை.

86—

டாம்ப்கால் நிறுவன மருந்துகள் விற்பனை அதிகரித்தல்

வினா எண் 6752—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டாம்ப்கால் நிறுவனத்தின் மருத்துவ பொருட்களின் விற்பனையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மருந்துக் கழகத்தின் மருந்துகளின் விற்பனையை அதிகரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

87—

மருத்துவர் பணி நியமனம்

வினா எண் 7927—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு துவக்கவும், மருத்துவரை பணிநியமனம் செய்யவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தற்போது புற்றுநோய் சிகிச்சைக்கான கதிர்வீச்சு மருத்துவப் பிரிவு மட்டும் (Radiation Oncology) உள்ளது.

2013 அக்டோபர் 28]

புற்றுநோய் மருத்துவ சிகிச்சை (Medical Oncology) புற்றுநோய் அறுவை சிகிச்சை (Surgical Oncology) ஆகியன இல்லை. எனவே, அவற்றை துவக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், 2012-2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கோவை மருத்துவக் கல்லூரியில் "மண்டல புற்றுநோய் மையம்" துவங்குவது பற்றி அறிவிப்பு வெளியிடப்பட்டு அதற்கான அரசாணை (டி) எண் 1206, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 19-11-2012-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

88—

அரசு சித்தா மருத்துவக் கல்லூரி

வினா எண் 15200—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாளையங்கோட்டை அரசு சித்தா மருத்துவக் கல்லூரியை இயங்கச் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

12-3-2012 நாளிட்ட சென்னை உயர் நீதிமன்ற ஆணையின்படி 12-3-2012 அன்று பிற்பகல் முதல் பாளையங்கோட்டை அரசு சித்தா மருத்துவக் கல்லூரியில் முதலாமாண்டு வகுப்புகள் துவங்கப்பட்டு, 55 முதலாமாண்டு பட்ட மேற்படிப்பு மாணவர்கள் மற்றும் 98 முதலாமாண்டு பட்டப் படிப்பு மாணவர்களுடன் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

89—

ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்துதல்

வினா எண் 18327—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், அரியக்குடி மற்றும் பெத்தானேந்தல், மித்திராவயல் ஆகிய கிராமங்களிலுள்ள துணை சுகாதார நிலையங்களை ஆரம்ப சுகாதார நிலையங்களாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும்பொழுது இரண்டு சுகாதார மையங்களுக்கு குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதி கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. ஆனால், சிவகங்கை மாவட்டம், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், அரியக்குடி கிராமத்திற்கு 5 கிலோ மீட்டர் தொலைவில் கோட்டையூர் ஆரம்ப சுகாதார நிலையமும், 2 கிலோ மீட்டர் தொலைவில் காரைக்குடி அரசு மருத்துவமனையும், பெத்தானேந்தல் கிராமத்திற்கு 5 கிலோ மீட்டர் தொலைவில், பிர்க்கலைக்காடு ஆரம்ப சுகாதார நிலையமும், 3 கிலோ மீட்டர் தொலைவில் காரைக்குடி அரசு மருத்துவமனையும், மித்திராவயல் கிராமத்திற்கு 7 கிலோ மீட்டர் தொலைவில் கண்ணங்குடி ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால் அரியக்குடி, பெத்தானேந்தல் மற்றும் மித்திராவயல் ஆகிய கிராமங்களில் உள்ள துணை சுகாதார நிலையங்களை ஆரம்ப சுகாதார நிலையங்களாக தரம் உயர்த்தும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

90—

புதிய ஆயுர்வேத மருத்துவமனை

வினா எண் 18333—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஆயுர்வேத மருத்துவமனையை செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது காரைக்குடி தொகுதி, தேவகோட்டை அரசினர் மருத்துவமனையில் முழுநேர சித்த மருத்துவப் பிரிவு செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் அங்கு புதிதாக மற்றொரு இந்தியமுறை மருத்துவப் பிரிவான ஆயுர்வேத மருத்துவப் பிரிவினைத் துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

91—

நடமாடும் மருத்துவமனை

வினா எண் 19183—திரு. து. முருகேசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மூலமாக நடமாடும் மருத்துவமனை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் நடமாடும் மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் மூலம்

செயல்படுத்தப்படுவதில்லை. இருப்பினும், செங்கல்பட்டு தொகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள சட்ராஸ், பவுஞ்சூர் மற்றும் காட்டான்குளத்தூர் ஆகிய வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குட்பட்ட கிராமங்களுக்கு, பொது சுகாதாரத் துறையின் நடமாடும் மருத்துவமனை ஊர்திகள் திட்டமிட்ட பயண அட்டவணைப்படி சென்று மருத்துவ சேவை செய்து வருகின்றன.

(ஆ) கேள்வி எழவில்லை.

92—

வரையறுக்கப்பட்ட கட்டணம்

வினா எண் 20270—திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் மருத்துவமனைகளில் வசூலிக்கப்படும் கட்டணத்தை வரையறை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தனியார் மருத்துவமனையில் வசூலிக்கப்படும் கட்டணத்தை வரையறை செய்ய இந்திய அரசால் இயற்றப்பட்ட "மருத்துவ அமைப்புகள் (பதிவு மற்றும் வரன்முறை) சட்டம் 2010" இம்மாநிலத்தில் நடைமுறைப்படுத்துவது குறித்து ஆய்வு செய்ய அரசாணை எண் 595, மக்கள் நல்வாழ்வுத் (இசட்.1) துறை, நாள் 3-7-2012-ன்படி வல்லுனர் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. அக்குழு அளிக்கும் பரிந்துரைகளை அரசு பரிசீலனைசெய்து தனியார் மருத்துவமனைகளை வரன்முறை செய்ய ஒரு புதிய சட்டம் இயற்றுவது கவனத்தில் கொள்ளப்படும்.

2013 அக்டோபர் 28]

93—

சித்த மருத்துவப் பிரிவை சீரமைத்தல்

வினா எண் 20710—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை அரசு மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசு நிதியுதவித் திட்டத்தின்கீழ் மானாமதுரை அரசினர் மருத்துவமனையில் செயல்பட்டுவரும் சித்த மருத்துவப் பிரிவிற்கு ரூ.3.00 இலட்சம் செலவில் தனியாக புது கட்டடம் 29-11-2007 அன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும், இதற்கு முன்னர் இராஷ்டிரிய சமாஜ் யோஜனா திட்டத்தின்கீழ் இச்சித்தா பிரிவிற்கு ஒரு கட்டடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மத்திய அரசு நிதியுதவித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கட்டடத்தில் சித்தா வெளிநோயாளிகள் பிரிவும் செயல்பட்டு வருகின்றது. இந்நிலையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள இக்கட்டடத்தினைச் சீரமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது இல்லை.

94—

புதிய ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 21534—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், புல்வயல் ஊராட்சி, புல்வயல் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், புல்வயல் கிராமம், வயலோகம் துணை சுகாதார நிலையத்தினையும், பரம்பூர் ஆரம்ப சுகாதார நிலையத்தினையும் சார்ந்தது. புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும்பொழுது இரண்டு சுகாதார மையங்களுக்கு குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதி கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. ஆனால், புல்வயல் கிராமத்திற்கு 8 கிலோ மீட்டர் தொலைவில் அன்னவாசல் அரசு மருத்துவமனை செயல்பட்டு வருவதால், புல்வயல் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

95—

சித்த மருத்துவப் பிரிவுக் கட்டடம் புதுப்பித்தல்

வினா எண் 21862—திரு. டி. சுரேஷ்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, செங்கம் அரசு பொது மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவுக் கட்டடத்தை புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசு நிதியுதவித் திட்டத்தின்கீழ் செங்கம் அரசினர் பொது மருத்துவமனையில் செயல்பட்டு வரும் சித்த மருத்துவப் பிரிவிற்கு ரூ.3.00 இலட்சம் செலவில் தனியாக புது கட்டடம் 28-11-2007 அன்று கட்டி முடிக்கப்பட்டது. இந்நிலையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள இக்கட்டடத்தினை புதுப்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

2013 அக்டோபர் 28]

96—

சித்த மருத்துவப் பிரிவிற்கு கட்டட வசதி

வினா எண் 21877—திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, கல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் செயல்பட்டுவரும் சித்த மருத்துவப் பிரிவிற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி தொகுதி, கல்லூர் அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள சித்த மருத்துவப் பிரிவிற்கு தனிக் கட்டடம் கட்ட கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

97—

புதிய ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 22940—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திங்கள் நகரில் அரசு ஆயுர்வேத மருத்துவமனையில் ஆரம்ப சுகாதார நிலையம் நிறுவ அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியம், திங்கள் நகர் கிராமத்தில் துணை சுகாதார நிலையம்

உள்ளது. புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படும் பொழுது இரண்டு சுகாதார மையங்களுக்கு குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், திங்கள் நகர் கிராமத்திற்கு 8 கிலோ மீட்டர் தொலைவில் முட்டம் ஆரம்ப சுகாதார நிலையமும், 7 கிலோ மீட்டர் தொலைவில் குளச்சல் அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதால், திங்கள் நகர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

98—

புதிய ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 25611—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, இடங்கணசாலை காடையாம்பட்டிக்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், இடங்கணசாலை கிராமத்தில் துணை சுகாதார நிலையம் உள்ளது. புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கும்பொழுது இரண்டு சுகாதார மையங்களுக்கு குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதி கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. ஆனால், இடங்கணசாலை கிராமத்திற்கு 1½ கிலோ மீட்டர் தொலைவில் இ.காட்டூர் ஆரம்ப சுகாதார நிலையமும், 3 கிலோ மீட்டர் தொலைவில் இளம்பிள்ளை

2013 அக்டோபர் 28]

ஆரம்ப சுகாதார நிலையமும், 6 கிலோ மீட்டர் தொலைவில் வேம்படிதாளம் அரசு மருத்துவமனைகளும் செயல்பட்டு வருகின்றன. எனவே, சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், இடங்கணசாலை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

99—

பொற்காலக் கடன் திட்டம்

வினா எண் 27880—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மகளிருக்கான புதிய பொற்காலக் கடன் திட்டத்தில் நபருக்கு ரூ.3,50,000/- வீதம் கடனாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) டாப்செட்கோ நிறுவனம் புதுடெல்லியிலுள்ள தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மாநில முகவராகச் செயல்படுகிறது. எனவே, தேசிய நிறுவனம் வரையறுக்கும் நெறிமுறைகளைப் பின்பற்றியே இக்கழகம் மூலம் கடன் உதவி வழங்கப்படுகிறது. தேசிய நிறுவனம் வகுத்துள்ள நெறிமுறையின்படி மகளிருக்கான புதிய பொற்காலக் கடன் திட்டத்தில் நபர் ஒருவருக்கு ரூ.1,00,000/- மட்டும் கடனாக வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இத்திட்டத்தின்கீழ் கடன் தொகையை உயர்த்தி வழங்க சாத்தியமில்லை.

100—

கறவை மாடு கடன்

வினா எண் 27889—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுச் கழகத்தின்கீழ் கறவை மாடு வழங்கும் திட்டத்தில் ஆண்டொன்றுக்கு குடும்ப வருமானம் ரூ.2 இலட்சம் உள்ளவர்களுக்கு மாடு ஒன்றிற்கு ரூ.35,000/- கடன் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) டாப்செட்கோ நிறுவனத்தால் செயல்படுத்தப்படும் கடன் திட்டங்களில் பொதுக் காலக் கடன் திட்டங்களின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ள தகுதிக்குட்பட்டு, தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் பரிந்துரையுடன் சம்பந்தப்பட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்மூலம் உறுப்பினர் ஒருவருக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட கடன் தொகை மாடு ஒன்றிற்கு ரூ.30,000/- வீதம் இரண்டு மாடுகள் வாங்குவதற்கு ரூ.60,000/- இக்கழகத்தால் கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது. இக்கழகம் தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம், புதுதில்லியின் மாநில முகவராக செயல்பட்டு வருவதால் தேசிய கழகத்தின் திட்டங்களுக்கு மத்திய அரசு 6-11-2012 முதல் நிர்ணயித்துள்ள ஆண்டு வருமான வரம்பின்படி கிராமப்புறமாக இருந்தால் ரூ.81,000/-க்கு மிகாமலும், நகர்ப்புறமாக இருப்பின் ரூ.1,03,000/-க்கு மிகாமலும் உள்ளவர்கட்கு மட்டுமே கடனுதவி வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2013 அக்டோபர் 28]

பட்டியல் 13

1—

மின்கம்பங்கள் அமைத்தல்

வினா எண் 17647—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் பழுதான மின் கம்பங்களை அகற்றி புதிய மின் கம்பங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதிக்குட்பட்ட சூரக்குளம் கேப்பர்பட்டணம், சோனையகோவில், தே. புதுக்கோட்டை, மேலநெட்டூர், ஆலங்குளம், எஸ். அதிகரை, வேதியனேந்தல், உடையார்பட்டி, வாகுடி, விளத்தூர், வ. புதுக்குளம், தச்சாநல்லூர், குறிச்சி, தாயமங்கலம், பிராமணக்குறிச்சி, நகரகுடி, குமாரக்குறிச்சி, புதூர், பொன்னியேந்தல், பள்ளிச்சந்தை, கீழடி, பாட்டம், சொட்டத்தட்டி, கழுவன்குளம், சாரிபுதுக்கோட்டை, கலியாந்தூர், வில்லியரேந்தல், வன்னிக்கோட்டை, தவத்தாரேந்தல், பறையன்குளம் மற்றும் அல்லிநகரம் ஆகிய இடங்களில் 20 பழுதடைந்த மின் கம்பங்கள் மாற்றப்பட்டுள்ளன. மேலும் பழுதான மின் கம்பங்கள் கண்டறியப்பட்டு விரைவில் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2—

ஏணி வழங்குதல்

வினா எண் 21721—திரு. அ. சவந்தராராசன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதியில் ஒவ்வொரு துணை மின் நிலையத்திற்கும் ஒரு ஏணி வழங்க அரசு ஆவன செய்யுமா?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

பெரம்பூர் தொகுதியில் உள்ள அனைத்து துணை மின் நிலையங்களிலும் தற்பொழுது ஏணி கையிருப்பில் உள்ளது.

3—

மின் விளக்கு அமைத்தல்

வினா எண் 27260—திரு. சு. ரவி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, அம்மனூர் மதுராரெட்டி கண்டிகை 1, 2, 3, 4-வது தெரு, சுந்தர வரதராஜலு நகர், பிள்ளையார் கோயில் தெரு, சீனிவாச நகர் முதல் தெரு, சீனிவாச நகர், தேவவெங்கடரத்தினம் நகர், கண்ணன் நகர், 1, 2-வது தெரு, வெங்கடேசபுரம் 2-வது தெரு ஆகிய தெருக்களில் புதிய மின்கம்பத்துடன் கூடிய மின்விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, அம்மனூர் மதுராரெட்டி கண்டிகை 1,2,3,4-வது தெரு, சுந்தர வரதராஜலு நகர், •பிள்ளையார் கோயில் தெரு, சீனிவாச நகர் முதல் தெரு, சீனிவாச நகர், தேவவெங்கடரத்தினம் நகர், கண்ணன் நகர், 1, 2-வது தெரு, வெங்கடேசபுரம் 2-வது தெரு ஆகிய தெருக்களில் மின்கம்பத்துடன் கூடிய மின்விளக்குகள் அமைக்கக் கோரி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

2013 அக்டோபர் 28]

4—

மின் விளக்கு வசதி

வினா எண் 27270—திரு. சு. ரவி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, அம்மனூர் அவ்வைநகர், பெரியராசு தெரு, காமராஜர் தெரு, நேரு தெரு ஆகிய தெருக்களில் புதிய மின்கம்பத்துடன்கூடிய மின்விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, அம்மனூர் அவ்வைநகர், பெரியராசு தெரு, காமராஜர் தெரு, நேரு தெரு ஆகிய தெருக்களில் புதிய மின்கம்பத்துடன்கூடிய மின்விளக்குகள் அமைக்கக் கோரி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

5—

சொந்தக் கட்டடம்

வினா எண் 28361—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையிலுள்ள மின்வாரிய அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உதவிப் பொறியாளர்/ நகர்/ மானாமதுரை மின் விநியோகப் பிரிவு அலுவலகம் தற்பொழுது பொதுமக்கள் நலன் கருதி மானாமதுரை நகரின் மையப் பகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

மின்வாரிய அலுவலகத்திற்குச் சொந்தமான மானாமதுரை 110 KVSS துணை மின் நிலையம் 5 கி.மீ. தூரத்தில் உள்ளதால் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளது. பேரூராட்சியில் மானாமதுரை எல்லைக்குட்பட்ட இடம் ஒதுக்கீடு கிடைக்கும்பட்சத்தில், உதவி மின் பொறியாளர்/நகர்/மானாமதுரை அலுவலகத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் அமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

6—

சொந்தக் கட்டடம்

வினா எண் 28845—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, கே. கிருஷ்ணாபுரம் ஊராட்சி, காமநாயக்கன்பாளையம் கிராமத்தில் உள்ள இளநிலை மின் பொறியாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காமநாயக்கன்பாளையம் கிராமத்தில் உள்ள இளநிலை மின் பொறியாளர் பிரிவு அலுவலகம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. தற்போது இயங்கி வரும் அலுவலகக் கட்டடம் பேருந்து நிலையத்திற்கு அருகில்

2013 அக்டோபர் 28]

பொதுமக்கள் வந்து செல்லும் வகையில் வசதியாக உள்ளது. எனவே, தற்போது அலுவலகக் கட்டடம் கட்ட திட்டம் ஏதும் இல்லை.

7—

பணியிடங்களை நிரப்புதல்

வினா எண் 29772—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, மேட்டூர் மின் பகிர்மான வட்டத்தில் போதிய மின் மாற்றிகள் அமைக்கவும், அனைத்து காலிப் பணி இடங்களை நிரப்பவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

மேட்டூர் தொகுதி, மேட்டூர் மின் பகிர்மான வட்டத்தில் போதுமான அளவு மின் மாற்றிகள் உள்ளன. அந்த மின்மாற்றிகளில் குறைந்த மின் அழுத்தமோ, அதிக மின் பளுவோ ஏதும் இல்லை. தேவை ஏற்படின் மின்மாற்றிகள் அமைக்கப்படும்.

மேட்டூர் தொகுதிக்குட்பட்ட பிரிவு அலுவலகங்களில் களப்பணியாளர்கள் பணியிடம் காலியில்லை. 9 வணிக உதவியாளர்கள் பணியிடம் காலியாக உள்ளது. ஆனால், அந்தப் பிரிவு அலுவலகங்களில் வணிக ஆய்வாளர்கள் உள்ளதால் வாரியப் பணிகள் தொய்வு ஏற்படாமல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

8—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 29785—திரு. ஆர். சீனிவாசன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆற்காடு தொகுதியிலுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் மின் மாற்றிகளை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

ஆற்காடு தொகுதிக்குட்பட்ட ஊராட்சிகளில் போதுமான மின்மாற்றிகள் நிறுவப்பட்டு மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கூடுதல் மின்பளு இருப்பதாகவோ, மின்னழுத்தம் குறைவாக இருப்பதாகவோ, இதுவரை புகார் ஏதும் பெறப்படவில்லை. இனிவரும் காலங்களில் தேவை ஏற்படின் கூடுதல் மின்மாற்றி அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

9—

மின்வாரிய அலுவலக மாற்றம்

வினா எண் 29786—திரு. ஆர். சீனிவாசன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆற்காடு நகர், அண்ணாசாலையில் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள மின் வாரிய அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்ற அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

ஆற்காடு நகர் அண்ணாசாலையில் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள மின் வாரிய அலுவலகத்தை மாற்றும் பொருட்டு தகுதியான இடம் தேர்வு செய்யும் பணி நடந்து வருகிறது. தகுதியான இடம் கிடைக்கப்பெற்றவுடன் மாறுதல் செய்யப்படும்.

10—

மின்மாற்றிகள் அமைத்தல்

வினா எண் 29810—திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், மாணிகஅள்ளி ஜருகு கிராமப் பகுதியில் கூடுதல் மின்னழுத்தமுள்ள மின் மாற்றிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், மாணிகஅள்ளி ஜருகு கிராமப் பகுதிகளுக்கு தற்சமயம் மாணிகஅள்ளி மின்மாற்றி எண் VI 100 கே.வி.ஏ. 11 கே.வி./433 வோல்ட் மூலமாக மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கூடுதலாக ஒரு 100 கே.வி. 11 கி.வோ./433 வோல்ட் மின்மாற்றி அமைக்க அனுமதி 04-03-2013 அன்று வழங்கப்பட்டுள்ளது.

மின்மாற்றி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் கூடுதல் மின்மாற்றி அமைக்க ஆவன செய்யப்படும்.

11—

கோழிக்கழிவுகள்

வினா எண் 9931—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை நகரில் கோழிக்கழிவுகளால் ஏற்படும் சுகாதாரக்கேட்டை தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை பேரூராட்சியில் கோழிக்கடை உரிமையாளர்களுக்குக் கோழிக்கழிவுகளை சுகாதாரத்துடன் அப்புறப்படுத்த அறிவுறுத்தப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, தற்போது பேரூராட்சிகளில் கோழிக்கழிவுகளால் சுகாதாரக்கேடு ஏதும் இல்லை.

[2013 அக்டோபர் 28

12—

கழிப்பிட வசதி

வினா எண் 10167—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கிரி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, 15-வது வார்டு, இராசிகவுண்டனூர் மற்றும் வழுக்கான்காட்டிற்கு கழிப்பிட வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், இடங்கணசாலை பேரூராட்சி, 15-வது வார்டு, இராசிகவுண்டனூர் பகுதியில் 2011-2012 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் கழிப்பிடம் கட்டி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. வழுக்கன்காடு பகுதியில் கழிப்பிடம் கட்ட போதிய இடவசதி இல்லை.

13—

தொகுப்பு வீடுகள் சீர்செய்தல்

வினா எண் 10643—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், இருந்திரப்பட்டி ஊராட்சி, மாரப்பட்டி ஆதி திராவிட காலனியில் வீடுகள் பழுதடைந்துள்ளதை சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

14—

குடியிருப்புப் பழுதுநீக்குதல்

வினா எண் 11072—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அன்னவாசல் ஒன்றியம், கதவம்பட்டி ஊராட்சி, கதவம்பட்டியில் ஆதி திராவிடர் குடியிருப்பு பழுதடைந்துள்ளதை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாககட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

15—

தார்ச்சாலையை புதுப்பித்தல்

வினா எண் 10173—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) சங்கரி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, 15-வது வார்டு, இராசிகவுண்டனூரிலுள்ள தார்ச்சாலையை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், இடங்கணசாலை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண் 15, இராசிகவுண்டனூரிலுள்ள தார்ச்சாலையை புதுப்பிக்க, 2011-2012 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தில் ரூ.16.25 இலட்சம் மதிப்பீட்டில் பணி செய்து முடிக்கப்பட்டு அத்தார்ச்சாலை பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

16—

வணிக வளாகங்களை சீரமைத்தல்

வினா எண் 10175—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, பேருந்து நிலையத்திலுள்ள வணிக வளாகங்களை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், இடங்கணசாலை பேரூராட்சி பேருந்து நிலையத்தில், 2003-2004-ம் ஆண்டு IDSMT திட்டத்தின்கீழ் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் 29 கடைகள் கட்டி முடிக்கப்பட்டு ஏலம் விடப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

2013 அக்டோபர் 28]

தற்போது வணிக வளாக கடைகள் நல்ல நிலையில் உள்ளதால் அக்கடைகளை சீரமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

17—

தொகுப்பு வீடுகள் சீர்செய்தல்

வினா எண் 10882—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஒன்றியம், குமாரமங்கலம் ஊராட்சி, தேவளி கிராம ஆதி திராவிடர் காலனி வீடுகள் பழுதடைந்துள்ளதை சீர் செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

18—

பராமரிப்புப் பணிகள்

வினா எண் 11116—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதியில் தொகுப்பு வீடுகள் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுமா?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

19—

தொகுப்பு வீடுகள் பராமரிப்பு

வினா எண் 14104 திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம் ஒன்றியம், ஜோத்தம்பட்டி ஊராட்சி, அரியநாச்சிபாளையம் கிராமத்தில் மைய அரசின் நிதி உதவித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு பழுதடைந்துள்ள 20 வீடுகளை பராமரிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2013 அக்டோபர் 28]

20—

தொகுப்பு வீடுகள் பழுது நீக்கம்

வினா எண் 14106—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், மாறுப்பட்டி ஊராட்சியில் பழுதடைந்துள்ள 20 தொகுப்பு வீடுகளை பழுது நீக்கம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

21—

தொகுப்பு வீடுகள் பழுது நீக்கம்

வினா எண் 14107—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், கொடுங்கியம் ஊராட்சி, கே. வல்லகொண்டபுரம் கிராமத்தில் பழுதடைந்துள்ள 20 தொகுப்பு வீடுகளை பழுது நீக்கம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

22—

தொகுப்பு வீடுகள் பழுது நீக்கம்

வினா எண் 14108—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், அந்தியூர் ஊராட்சியில் பழுதடைந்துள்ள 30 தொகுப்பு வீடுகளை பழுது நீக்கம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

23—

தொகுப்பு வீடுகளைப் பராமரித்தல்

வினா எண் 14109—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2013 அக்டோபர் 28]

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், கண்ணமநாய்க்கனூர் கிராமத்தில் பழுதடைந்துள்ள 25 தொகுப்பு வீடுகளைப் பராமரிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

24—

தொகுப்பு வீடுகளைப் பராமரித்தல்

வினா எண் 14110—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், உடுக்கம்பாளையம் ஊராட்சியில் பழுதடைந்துள்ள 22 தொகுப்பு வீடுகளைப் பராமரிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

[2013 அக்டோபர் 28

25—

தொகுப்பு வீடுகள் பழுது நீக்கம்

வினா எண் 14112—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, குருவப்பநாய்க்கனூர் ஊராட்சியில் பழுதடைந்துள்ள 20 தொகுப்பு வீடுகளை பழுது நீக்கம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

26—

தொகுப்பு வீடுகள் பழுது நீக்கம்

வினா எண் 14113—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், எலையமுத்தூர் கிராமத்தில் பழுதடைந்துள்ள 25 தொகுப்பு வீடுகளை பராமரிப்பு செய்வதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

27—

தொகுப்பு வீடுகள் பராமரித்தல்

வினா எண் 14114—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், ஜல்லிபட்டி ஊராட்சியில் பழுதடைந்துள்ள 30 தொகுப்பு வீடுகளைப் பராமரிப்பு செய்வதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

28—

தொகுப்பு வீடுகள் பராமரித்தல்

வினா எண் 14115—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2013 அக்டோபர் 28

மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், எரிசினம்பட்டி ஊராட்சியில் பழுதடைந்துள்ள 20 தொகுப்பு வீடுகளைப் பராமரிப்பு செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

29—

தொகுப்பு வீடுகளைப் பராமரித்தல்

வினா எண் 14116—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், தேவனூர்புதூர் ஊராட்சியில் 3 கிராமங்களில் பழுதடைந்துள்ள 50 தொகுப்பு வீடுகளைப் பராமரிப்பு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ. 25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2013 அக்டோபர் 28]

30—

தொகுப்பு வீடுகள் பராமரித்தல்

வினா எண் 14574—திரு. ஆர். சாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதியில் ஆதி திராவிட மக்கள் வசிக்கும் தொகுப்பு வீடுகளைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

31—

வணிக வளாகம்

வினா எண் 21838—திரு. வே. குணசீலன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, பெரணமல்லூர் பேரூராட்சியில் அரசு நிலத்தில் வணிக வளாகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி சட்டமன்றத் தொகுதி, பெரணமல்லூர் பேரூராட்சியில் தற்போது

[2013 அக்டோபர் 28

தர்மராஜா கோயில் தெரு, பஜார் வீதி மற்றும் பைபாஸ் ரோடு ஆகிய பகுதிகளில் பேரூராட்சிக்குச் சொந்தமான 26 வணிக வளாகக் கடைகள் பயன்பாட்டில் உள்ளன. பேரூராட்சிக்குச் சொந்தமான போதிய இடவசதியில்லையென்பதால் புதியதாக வணிக வளாகம் அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

32—

பயணியர் நிழற்குடை

வினா எண் 22945—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ரி தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சி, 8வது வார்டு, தேர்நிலையம் அருகே பயணியர் நிழற்குடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் பேரூராட்சியின் 8-வது வார்டு, தேர்நிலையம் அருகில் நான்கு சாலைகளின் சந்திப்பாக உள்ளதாலும், குறுகிய வளைவு இருப்பதாலும், மேலும் தேரோடும் ரதவீதியாக உள்ளதால் இடப் பற்றாக்குறை ஏற்பட்டு பேருந்து போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கும் என்பதாலும் தேர்நிலையம் அருகில் பயணிகள் நிழற்கூடம் அமைக்க இயலாது.

33—

மின் விளக்கு வசதி

வினா எண் 23200—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

சங்கரி தொகுதி, சங்கரி பேரூராட்சி, 3-வது வார்டு, உத்திரகாந்தமலை, சாமியார்காடு புதுவளவு, அருந்ததியர் தெரு, செக்கல்காடு புதுவளவு ஆகிய பகுதிகளுக்கு மின் விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

சங்கரி பேரூராட்சிக்குட்பட்ட 3-வது வார்டு பகுதிகளில் சுமார் 250 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இதில் உத்திரகாந்தமலை பகுதியில் 11 குழல் விளக்குகளும், 1 சோடியம் விளக்கும், புதுவளவு அருந்ததியர் தெரு மற்றும் செக்கல்காடு அருந்ததியர் தெருவில் 10 குழல் விளக்குகளும், 3 சோடியம் விளக்குகளும் ஏற்கெனவே அமைக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

34—

துப்புரவுத் தொழிலாளிகள்

வினா எண் 26372—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி நகராட்சியில் துப்புரவுத் தொழிலாளிகள் பற்றாக்குறையைப் போக்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) ஆரணி நகராட்சிக்கென்று அனுமதிக்கப்பட்ட மொத்த துப்புரவுப் பணியாளர் பணியிடங்களின் எண்ணிக்கை 143 ஆகும். தற்போது 118 துப்புரவுப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதியம் மற்றும் ஓய்வூதியச் செலவினம் 60% ஆக உள்ளது. மேலும், இத்துறையின்

[2013 அக்டோபர் 28

அரசாணை எண் 19, நாள் 18-1-2007-ன்படி, 49%-க்கு மேல் உள்ளதால், தற்போது காலியாக உள்ள 25 துப்புரவுப் பணியாளர் பணியிடங்களை நிரப்ப இயலாத நிலை உள்ளது.

(ஆ) கேள்வி எழவில்லை.

35—

பள்ளிச் சலுகைகள்

வினா எண் 29128—திரு. கு. நல்லதம்பி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் அரசு பள்ளிகளுக்கு வழங்கும் சலுகைகள், அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் பொருந்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் உள்ள தடை செய்யப்பட்டுள்ள பணிகளில், இன்னபிறவற்றுடன் அரசு உதவி பெறும் பள்ளிகள், சுயநிதிப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் எவ்விதப் பணிகளையும் மேற்கொள்ளுதல் கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், 100 சதவீதம் அரசு நிதி உதவி பெறும் மற்றும் 100 சதவீதம் தமிழ் வழிக் கல்வி பள்ளிகளில் பள்ளி வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் கழிப்பிடங்கள் கட்டும் பணிகளை எடுத்துச் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால், பகுதி சுய நிதி மற்றும் பகுதி நிதி உதவி பெறும் பள்ளி அல்லது பகுதி தமிழ்வழிக் கல்வி மற்றும் பகுதி ஆங்கிலவழிக் கல்வி பள்ளிகள் இத்திட்டத்தின்கீழ் அரசு நிதி உதவி பெறத் தகுதியில்லை.

2013 அக்டோபர் 28]

36—

அடுக்குமாடிக் குடியிருப்பு

வினா எண் 26741—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் எந்த இடத்தில் எப்போது கட்டப்படவுள்ளன?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின்மூலம் சென்னையில் கீழே கூறப்பட்டுள்ள இடங்களில் தற்போது அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன மற்றும் கட்ட திட்டமிடப்பட்டுள்ளன:

வ. எண்	திட்டப்பகுதியின் பெயர்	குடியிருப்புகள்	தற்போதைய நிலை
	(அ) அவசர சுனாமி மறுகுடியமர்வு திட்டம்		
1.	நொச்சி நகர்	628	முடிவுற்றுள்ளது
2.	ஒக்கியம் துரைப்பாக்கம்	2,048	முன்னேற்றத்தில் உள்ளது.
3.	அகில இந்திய வானொலி நிலைய நிலம்	3,616	முடிவுற்றுள்ளது
		6,292	
	(ஆ) ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம்		
4.	ஒக்கியம் துரைப்பாக்கம் (எழில் நகர்)	6,000	முன்னேற்றத்தில் உள்ளது.
5.	பெரும்பாக்கம் (எழில் நகர்)	3,936	முன்னேற்றத்தில் உள்ளது.
6.	பெரும்பாக்கம் பகுதி-I	10,452	முன்னேற்றத்தில் உள்ளது.

7.	பெரும்பாக்கம் பகுதி-II	5,988	முன்னேற்றத்தில் உள்ளது.
8.	நாவலூர்	2,048	தொடங்கப் படவுள்ளது.
9.	திருவொற்றியூர்-அகில இந்திய வானொலி நிலைய நிலம்	416	தொடங்கப் படவுள்ளது.
10.	கூடப்பாக்கம்	1,024	தொடங்கப் படவுள்ளது.
		29,864	
(இ)	**13-வது நிதிக் குழுத் திட்டம்**		
11.	வியாசர்பாடி-மூர்த்திங்கர் தெரு	960	தொடங்கப் படவுள்ளது.
12.	வியாசர்பாடி-கே.பி.பார்க் பகுதி-II (மறுகட்டுமானம்)	192	முன்னேற்றத்தில் உள்ளது.
13.	வியாசர்பாடி—கே.பி.பார்க் பகுதி-III (மறுகட்டுமானம்)	240	தொடங்கப் படவுள்ளது.
14.	காசிமேடு—பவர்குப்பம் பகுதி-I	256	தொடங்கப் படவுள்ளது.
		1,648	
(ஈ)	**மறுகட்டுமான திட்டம்**		
15.	காசிமேடு—பவர்குப்பம் பகுதி-II	304	தொடங்கப் படவுள்ளது.
(உ)	**இராஜீவ் வீட்டு வசதித் திட்டம்**		
16.	அத்திப்பட்டு-I	1,056	தொடங்கப் படவுள்ளது.
17.	அத்திப்பட்டு பகுதி-II	416	தொடங்கப் படவுள்ளது.
		1,472	
	மொத்த குடியிருப்புகள் (அ+ஆ+இ+ஈ+உ)	39,580	

2013 அக்டோபர் 28]

37—

அடுக்குமாடிக் குடியிருப்புகள்

வினா எண் 28324— திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி, 37-வது வட்டம், ஆர்.ஆர். நகரில் உள்ள ஆதி ஆந்திர மக்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள ராஜரத்தினம் நகர் திட்டப் பகுதி, நடைபாதைவாசிகள் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்ட மனைகளாக அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மனையும் 15′ x 18′ என்ற அளவில் அமைக்கப்பட்டுள்ளது. இம்மனைகளில் குடியிருப்புதாரர்கள் தங்களது சொந்த செலவில் அவர்களின் விருப்பத்திற்கேற்ப வீடுகள் அமைத்துக் கொண்டுள்ளனர்.

இப்பகுதிவாழ் மக்களின் விருப்பத்திற்கிணங்க கள மேம்பாட்டுப் பணிகள் மற்றும் வீட்டு வசதிப் பணிகள் இராஜீவ் வீட்டு வசதி திட்டத்தின்கீழ் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

38—

குழாய் உடைப்புகளைச் சீரமைத்தல்

வினா எண் 28329—திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி, 37 மற்றும் 46-வது வட்டங்களில் உள்ள குடிசை மாற்று வாரிய வீடுகளில் மேல்தளத்திலுள்ள கழிவுநீர்க் குழாய் உடைப்புகளைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

சென்னை மாநகராட்சி கோட்ட எண் 37 மற்றும் 46-ல் உதயசூரியன் நகர், வியாசர்பாடி பழைய குடியிருப்பு, மல்லிகைப்பூ காலனி, எம்.ஜி.ஆர் நகர் மற்றும் எம்.கே.பி. நகர் ஆகிய திட்டப் பகுதிகளில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டப் பகுதிகளில் கழிவுநீர்க் குழாய் உடைப்புகள் சரி செய்ய மதிப்பீடு தயார் செய்து பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகள் விரைவில் முடிவுறும்.

39—

கொலு பொம்மைகள் கொள்முதல்

வினா எண் 28216—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் தயாரிக்கப்படும் கொலு பொம்மைகளை அரசே கொள்முதல் செய்ய முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் தயாரிக்கப்படும் கொலு பொம்மைகளை தமிழகத்தில் உள்ள தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் 11 விற்பனை நிலையங்களில் நவராத்திரி விழாவின்போது கண்காட்சிகள் நடத்தப்பட்டு, மேற்படி கொலு பொம்மைகள் தயாரிக்கும் கைவினைஞர்களை நேரடியாக பங்குபெறச் செய்தும், விற்றபின் பணம் கொடுக்கும் முறையில் கொள்முதல் செய்தும் விற்பனை செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பூம்புகார் விற்பனை நிலையங்களில் கொலு கண்காட்சிகள் நடத்தும்போது மானாமதுரை கொலு பொம்மை தயாரிக்கும்

2013 அக்டோபர் 28]

கைவினைஞர்களுக்கு மேற்கூறப்பட்ட கண்காட்சிகளில் பங்கேற்க வாய்ப்பு அளிக்கப்படும்.

(ஆ) இவ்வினா எழவில்லை.

40—

வங்கிக் கடன்

வினா எண் 29692—திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் பகுதியில் பொம்மைத் தொழில் செய்யும் தொழில் முனைவோருக்கு வங்கிக் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) பூம்புகார் நிறுவனம், 'கைவினைஞர் தொழில் முனைவராகிறார்' என்ற திட்டத்தின்கீழ் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின்மூலம் கடன் பெற ஆவன செய்து வருகிறது. எனவே, விருத்தாசலம் பகுதியில் உள்ள கைவினைஞர்கள், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தை அணுகினால் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின்மூலம் கடன் வழங்க ஆவன செய்யப்படும்.

(ஆ) இவ்வினா எழவில்லை.

41—

தேசிய நல வாரியம்

வினா எண் 7214—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மூத்த குடிமக்கள் தேசிய நல வாரியம் அமைக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பெறும் 28 முதியோர் இல்லங்களுக்கு மாநில அரசு மானியமாக ஆண்டுதோறும் ஒரு இல்லத்திற்கு தலா ரூ.2.00 இலட்சம் வீதம் வழங்கி வருகிறது. 2011-2012 நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ளவாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் புதிய அறிவிப்பின்படி, அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அதன் அடிப்படையில் முதற்கட்டமாக 2011-2012 ஆம் ஆண்டு 64 ஊராட்சி ஒன்றியங்களில் முதியோர் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வளாகங்களுக்கு தொடரா செலவினமாக ஒரு வளாகத்திற்கு ரூ.2,75,000/- வீதம் ரூ.176,00,000/- மானியம் வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் 64 ஒருங்கிணைந்த வளாகங்களுக்கு 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.8.42 கோடி தொடர் செலவினம் அரசால் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

2. மேலும், முதியோருக்கான ஓய்வூதியத் தொகை ரூ.500/-லிருந்து ரூ.1000/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007-ன்கீழ் பெறப்படும் மனுக்கள்மீது மாவட்டங்களின் வருவாய்க் கோட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள 81 உட்கோட்ட தீர்ப்பாயங்கள் மற்றும் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள 32 மேல்முறையீட்டுத் தீர்ப்பாயங்கள் ஆகியவற்றின் மூலமாக துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால் மூத்த குடிமக்களின் குறைகள் தீர்க்கப்பட்டு பராமரிப்புத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

3. மூத்த குடிமக்கள் தேசிய நல வாரியம் அமைப்பது மத்திய அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டதால் மூத்த குடிமக்கள் தேசிய நல வாரியம் அமைக்க மத்திய அரசை வலியுறுத்தும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2013 அக்டோபர் 28]

42—

கல்விக் கட்டணச் சலுகை

வினா எண் 11425—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2011-2012 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பட்டதாரிகளில்லா குடும்பத்தைச் சேர்ந்த தொழிற் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்குக் கல்விக் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டது குறித்த விவரம் என்ன?

(ஆ) இலங்கை அகதி மாணவர்கள் எத்தனை பேர் பயன் பெற்றனர்?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) 2011-2012 ஆம் கல்வியாண்டில் இதுநாள் வரை தமிழ்நாட்டில் பட்டதாரிகளில்லா குடும்பத்தைச் சேர்ந்த பொறியியற் கல்லூரிகளில் முதலாமாண்டு மற்றும் நேரடி இரண்டாமாண்டு சேர்க்கை பெற்று கல்விக் கட்டணச் சலுகை பெற்றோர் மொத்த எண்ணிக்கை 74,472.

(ஆ) 2011-2012 ஆம் கல்வியாண்டில் பயன்பெற்ற இலங்கை அகதி மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 20.

43—

காய்கறி குளிர்பதனிடும் கிடங்கு

வினா எண் 22906—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, திங்கள் நகரில் காய்கறி குளிர்பதனிடும் கிடங்கு அமைக்கும் பணியை விரைந்து தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதி, திங்கள் சந்தையில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் 2.5 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு ரூ.31.80 இலட்சம் மதிப்பீட்டில் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (RIDF) திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டு வருகிறது. இதில் 95% (ரூ. 30.21 இலட்சம்) நபார்டு (NABARD) வங்கியின் நிதி உதவியுடனும், 5% (ரூ.1.59 இலட்சம்) சம்பந்தப்பட்ட விற்பனைக் குழு நிதியிலிருந்தும் அமைக்கப்பட்டு வருகிறது. கட்டுமானப் பணிகள் நிறைவுறாததால் விவசாயிகள் பயன்பாட்டிற்கு இன்னும் கொண்டுவரப்படவில்லை. கட்டுமானப் பணிகள் மற்றும் இதர பணிகள் நிறைவு பெற்றதும் விவசாயிகளின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

44—

உழவர் சந்தை

வினா எண் 29634—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, அரசிராமணி கிராமம், செட்டிப்பட்டி வாரச்சந்தை அருகே உழவர் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி வட்டாரத்தில் 2,136 ஏக்கர் பரப்பில் 20524 மெ.டன் காய்கறி மற்றும் பழங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவை எடப்பாடி உழவர் சந்தை, செட்டிப்பட்டி வாரச் சந்தை, தேவூர் வாரச் சந்தை மற்றும் கோனாரிப்பட்டி வாரச் சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேலும், சேலம் மாவட்டத்திலுள்ள 11 உழவர் சந்தைகளில் செட்டிப்பட்டி கிராமத்திற்கருகில் 8 கி.மீ. தொலைவில்

2013 அக்டோபர் 28]

எடப்பாடி உழவர் சந்தையும், 15 கி.மீ. தொலைவில் குமாரபாளையம் உழவர் சந்தையும் செயல்பட்டு வருகின்றன. எனவே, செட்டிப்பட்டி பகுதியில் உழவர் சந்தை அமைத்தால் நுகர்வோர் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருக்குமாதலால், இப்பகுதியில் உழவர் சந்தை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

45—

கூடுதல் கட்டடங்கள்

வினா எண் 22160—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, இராயநல்லூர் மற்றும் எழிலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு புதிய கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, இராயநல்லூர் மற்றும் எழிலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருவதாலும், அக்கட்டடங்கள் நல்ல நிலையில் உள்ளதாலும், புதிய கட்டடங்கள் கட்டும் நிலை எழவில்லை.

46—

வாக்களிக்கும் உரிமை

வினா எண் 27500—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுச் சங்கத்தில் புதிய உறுப்பினர்களுக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், பிரிவு 21(2) (i)-க்கு திருத்தம் செய்து வெளியிடப்பட்ட சட்டம்

[2013 அக்டோபர் 28

எண் 37/2012-ஐ (Act No. 37 of 2012) எதிர்த்து வழக்குகள் தொடரப்பட்டன. சென்னை உயர் நீதிமன்றம் தனது 29-1-2013 நாளிட்ட தீர்ப்பில் கூட்டுறவுச் சங்கங்களின் பொதுக் குழுவிற்கு உறுப்பினர்களைச் சேர்க்க அதிகாரம் அளித்து 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், பிரிவு 21 (2) (i)-க்கு வெளியிடப்பட்ட திருத்தம் நிலை நிறுத்தத்தக்கது என தீர்ப்பளித்துள்ளது. எனவே, கூட்டுறவுச் சங்கங்களின் புதிதாக சேர்க்கப்பட்ட உறுப்பினர்களுக்கு சட்டப்படியான அனைத்து உரிமைகளும் உள்ளன.

47—

பட்டா நிலம்

வினா எண் 8561—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் வட்டம், மசினகுடி ஊராட்சி, சோலூர் பேரூராட்சி மற்றும் 5 பழங்குடியினர் கிராமங்களில் விவசாயம் செய்யும் தரிசு நிலங்களில் யானை வழித்தடத்திற்கு வரையறுக்கப்பட்ட 583 ஏக்கர் பட்டா நிலத்தினை உறுதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

அரசாணை எண் 125, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வனம்.5) துறை, நாள் 31-8-2010-ல் யானை வழித்தடத்தினை முடிவு செய்து அறிவிப்பு வெளியிடப்பட்டது. யானை வழித்தடமானது 1626.28 ஹெக்டேர் பரப்பளவில் தனியார் நிலங்களும், 1730.58 ஹெக்டேர் பரப்பளவில் அரசு நிலங்களும் ஆக மொத்தம் 3356.86 ஹெக்டேர் பரப்பளவாகும். யானை வழித்தடத்தில் 264 தனியார் நில உரிமையாளர்கள் உள்ளனர். யானை வழித்தடமானது சுமார் 22.64 கி.மீ. நீளமும் சுமார் 1.5 கி.மீ. அகலமும் கொண்டது. இக்குறிப்பிட்ட இடத்திற்குள் நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் வட்டம், மசினகுடி ஊராட்சி, சோலூர் பேரூராட்சி மற்றும் 5 பழங்குடியினர் கிராமங்களில் 583 ஏக்கர் நிலம் விவசாயம் செய்யும் தரிசு நிலம் யானை வழித்தடத்திற்கு வரையறுக்கப்பட்ட இடத்தினுள் உள்ளது.

2013 அக்டோபர் 28]

யானை வழித்தடமாக அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட பகுதிகளில் வாழும் சுற்றுலா விடுதி உரிமையாளர்கள், தனியார் நில உரிமையாளர்கள் தங்கள்வசம் உள்ள நிலத்தை மூன்று மாதங்களுக்குள் (6-7-2011-க்குள்) நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் ஒப்படைக்கவும், வனப் பகுதிகளில் வாழும் மலைவாழ் மக்களை அப்புறப்படுத்தி அவர்களை மாற்று இடத்தில் குடியமர இடவசதியை அளிக்கவும், இடவசதியை ஏற்க மறுப்பவர்களுக்கு இழப்பீடு தொகையை வழங்கவும் உயர் நீதிமன்றத்தால் 7-4-2011 அன்று ஆணை வழங்கப்பட்டுள்ளது. உயர் நீதிமன்ற ஆணையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் 32 வழக்குகள் தொடுக்கப்பட்டு தற்போது உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

48—

பறவைகள் சரணாலயம்

வினா எண் 29511—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், கன்னங்குறிச்சி பகுதியில் உள்ள மூக்கனேரியில் பறவைகள் சரணாலயம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம், கன்னங்குறிச்சி பகுதியில் உள்ள மூக்கனேரியில் பறவைகள் சரணாலயம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

49—

நீர்நிலைகள் ஏற்படுத்துதல்

வினா எண் 29513—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) வனப் பகுதியிலேயே வன விலங்குகளுக்குப் பிடித்த உணவு வகைகளையும், நீர் நிலைகளையும் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். வனப் பகுதியிலேயே வன உயிரினங்களுக்குப் பிடித்த உணவு வகைகளையும், நீர்நிலைகளையும் ஏற்படுத்த, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2011-2012 முதல் 2015-2016 வரை உள்ள 5 ஆண்டுகளுக்கு 'வனப் பகுதியில் தீவன மரங்களை வளர்த்தல் மற்றும் வன விலங்கு உறைவிடங்களை மேம்படுத்துதல்' திட்டத்தினைச் செயல்படுத்த அரசாணை எண் 182, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வனம்.5) துறை, நாள் 14-12-2011-ல் ரூ.20.87 கோடி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 2011-2012-ம் ஆண்டில் ரூ. 3.46 கோடி விடுவிக்கப்பட்டதில் ரூ.3.24 கோடி செலவில் வன உயிரினங்கள் வனத்தினை விட்டு வெளியே வரா வண்ணம் அவை விரும்பி உண்ணும், குறுகிய காலத்தில் விரைவாக வளரக்கூடிய பசுந்தீவனப் பயிர்கள் மற்றும் பழ மரங்கள் வனத்தினுள் உற்பத்தி செய்வதும் மற்றும் தாவர உண்ணிகள் விரும்பி உண்ணக்கூடிய புற்களின் விதைகளை வனத்தினுள் களைச் செடிகள் நீக்கிய பகுதிகளில் ஆங்காங்கே தூவுவதனால் தாவர உண்ணிகளுக்குப் பிடித்த உணவும் வனத்தினுள் கிடைக்க ஏதுவாக இருக்கிறது. மித வேகத்தில் வளரக்கூடிய தாவர இனங்களைக் கொண்டு நிரந்தரமான பசுந்தீவன சேகரிப்பான்களை உருவாக்குதல், கசிவுநீர்க் குட்டை அமைத்தல், தடுப்பணைகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2012-2013 ஆம் ஆண்டில் ரூ.5.04 கோடி செலவிலும் மேற்காண் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், 2013-2014-ம் ஆண்டில் ரூ.5.46 கோடி செலவில் மேற்காண் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

2013 அக்டோபர் 28]

50—

இயற்கை வளங்களைப் பாதுகாத்தல்

வினா எண் 29558—திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மனிதர்களிடமிருந்து இயற்கை வளங்களையும், மிருகங்களையும் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். தமிழகத்தில், மனிதர்களிடமிருந்து இயற்கை வளங்களையும், வன உயிரினங்களையும் பாதுகாக்க 10 வன உயிரினச் சரணாலயங்கள், 5 தேசிய பூங்காக்கள், 14 பறவை சரணாலயங்கள், 4 புலிகள் காப்பகங்கள், 4 யானைகள் காப்பகங்கள் மற்றும் ஒரு பாதுகாக்கப்பட்ட ஓதுக்குப் பகுதியும் உள்ளன. மேலும், வன உயிரினங்களைப் பாதுகாப்பதற்காகவும், அவற்றைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மத்திய அரசு அங்கீகாரத்துடன் வனத் துறை சார்பில் 5 உயிரியல் பூங்காக்களும், மாநகராட்சி சார்பில் 2 உயிரியல் பூங்காக்களும் மற்றும் தனியார் சார்பில் 2 உயிரியல் பூங்காக்களும் தமிழகத்தில் உள்ளன.

வன உயிரினங்களைப் பாதுகாக்க வனச்சார்நிலைப் பணியாளர்கள் மற்றும் வேட்டைத் தடுப்புக் காவலர்களை பணி நியமனம் செய்து வன உயிரினங்களின் நடமாட்டம் கண்காணிக்கப்படுவதுடன், வேட்டைத் தடுப்புப் பணிகளும் செய்யப்பட்டு வருகின்றன. உதவி வனப் பாதுகாவலரின் தலைமையிலான வனப் பாதுகாப்புப் படையினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். வன உயிரினங்கள் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டு, வன உயிரினங்கள் வேட்டையாடுவது தண்டனைக்குரியது என அறிவுறுத்தப்படுகிறது. வன உயிரினங்களை வேட்டையாடும் குற்றவாளிகளைக் கண்டறிந்து வன உயிரின (பாதுகாப்பு) சட்டம் 1972-ன்படி வன உயிரின வழக்குப் பதிவு செய்து, நீதிமன்றத்தின் மூலமாக நடவடிக்கை எடுத்து தண்டனை வழங்கப்படுகிறது.

[2013 அக்டோபர் 28

வன உயிரினங்கள் வனத்திற்கு வெளியே வந்து அவ்வப்பொழுது மனித உயிர்களுக்கும், பயிர்களுக்கும், கால்நடைகளுக்கும் மற்றும் உடமைகளுக்கும் சேதங்கள் விளைவிப்பதைத் தவிர்க்க ஆசிய யானைகளால் ஏற்படும் இழப்புகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் திட்டத்தின்கீழ் 2011-2012-ம் ஆண்டில் கோயம்புத்தூர் வனமண்டலத்திற்கு ரூ.430.250 இலட்சமும், தருமபுரி, ஈரோடு, திண்டுக்கல், திருநெல்வேலி வன மண்டலங்களுக்கு ரூ.519.166 இலட்சம் மற்றும் ஆனைமலை புலிகள் காப்பகத்திற்குட்பட்ட வால்பாறை பகுதிக்கு ரூ.222.285 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.11.717 கோடி ஒப்பளிப்பு செய்து, தொகை விடுவிக்கப்பட்டு, அவற்றில் ரூ.11.37 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வன உயிரினங்கள் வனத்தை விட்டு வெளிவரும் பகுதிகளைக் கண்டறிந்து அவை வெளிவராதவாறு வன எல்லைப் பகுதியில் அகழிகள் வெட்டுதல், நீர்த்துளைகள் மற்றும் தொட்டிகள் அமைத்தல், யானைகளை காட்டிற்குள் திருப்பி அனுப்புதல், யானைகள் பயிர்களை அழிப்பதைத் தடுக்க காவலர்கள் நியமித்தல், பட்டாசுகள் வெடித்தல், விவசாயிகளுக்கு யானைகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள பாதுகாப்பு உபகரணங்கள் வழங்குதல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல், விளம்பரப் பலகைகள் அமைத்தல், சாவடிவாயல் பகுதியில் நிரந்தர கும்கி யானை முகாம் அமைத்தல் மற்றும் சூரிய மின்வேலி மற்றும் யானை புகா அகழிகளை செப்பனிடுதல், வால்பாறை பகுதியில் யானைகள் வருவதை முன்கூட்டியே அறிவிக்கும் உபகரணம் வாங்குதல் மற்றும் வனத்தைவிட்டு வெளியே வரும் வன உயிரினங்களைப் பிடித்து மீண்டும் வனத்திற்கு திருப்பி அனுப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், கோடைக்காலங்களில் நீர்நிலைகளில் நீரின் வரத்து குறைவதால் வன உயிரினங்களுக்குத் தேவையான குடிநீர் வசதியினைப் பெருக்கும்பொருட்டு நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்து, லாரிகள் மற்றும் டிராக்டர்கள்மூலம் தண்ணீரைக் கொண்டு வந்து ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள நீர்த்தேக்கத் தொட்டிகளில் நிரப்பப்பட்டு வருகிறது. வனத்தின் பல பகுதிகளில் வன உயிரினங்களின் பாதைக்கருகில் நீராதாரங்களை உருவாக்குவதன்மூலம் வன உயிரினங்கள் எளிதில் நீர் அருந்தி செல்கின்றன.

2013 அக்டோபர் 28]

51—

தார்ச்சாலையை செப்பனிடுதல்

வினா எண் 1810—திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி தொகுதி, விழுப்புரம் முதல் கோம்மேடு வரை செல்லும் தார்ச்சாலையை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

செஞ்சி தொகுதி, விழுப்புரம் முதல் கோம்மேடு வரை செல்லும் தார்ச்சாலையை பாரத் நிர்மான் திட்டம்-III-ன்கீழ் அபிவிருத்தி செய்ய ரூ.16.49 இலட்சத்திற்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, ஒப்பந்தம் அழைக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டதும் பணிகள் துவங்கப்படும்.

52—

தடுப்புச் சுவர்

வினா எண் 3747—திருமதி க. அழகுவேலு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சின்னசேலம் ஒன்றியம், பெத்தாசமுத்திரம் ஊராட்சியிலுள்ள பாலத்தின் அருகில் தடுப்புச் சுவர் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

சின்னசேலம்-கூகையூர் சாலை முதல் பெத்தாசமுத்திரம் (வழி) தோட்டப்பாடி சாலையில் கி.மீ. 3/4 புதியதாகக் கட்டப்பட்ட பாலத்தின் அருகில் தடுப்புச் சுவர் கட்ட நடப்பாண்டில் திட்டப் பணிகளின்கீழ் பரிசீலிக்கப்படும்.

[2013 அக்டோபர் 28

53—

சாலைகளை அகலப்படுத்துதல்

வினா எண் 3749—திருமதி க. அழகுவேலு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதியில் இந்திலி-நயினார்பாளையம், சின்னசேலம்-அம்மகனத்தூர் மற்றும் விருகாவூர்—அடரி ஆகிய சாலைகளை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

1. இந்திலி-செம்பாகுறிச்சி (வழி) புக்கிரவாரி சாலை கி.மீ. 0/0-27/510

2. சின்னசேலம்-பெரியசிறுவத்தூர் சாலை கி.மீ. 0/0-6/4.

3. பெத்தானூர்-அம்மகளத்தூர் சாலை கி.மீ. 0/0-9/0, ஆகிய மூன்று சாலைகளையும் அகலப்படுத்த 2013-2014 ஆம் ஆண்டின் ஒருங்கிணைந்த சாலை உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் எடுத்துச் செய்ய பரிசீலிக்கப்படும். தியாகதுருகம்-அடரி சாலை கி.மீ. 2/0-2012 (MD-811) வரை உள்ள ஒரு வழித்தடத்தை இடைவழித்தடமாக அகலப்படுத்த 2012-2013 ஆம் ஆண்டின் ஒருங்கிணைந்த சாலை உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.7.75 கோடி செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

54—

சாலை சீரமைத்தல்

வினா எண் 7789—திரு. சு. பவுன்ராஜ்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, மாணிக்கபங்கு ஊராட்சியிலுள்ள ஆணைக்கோவில் கிராமச் சாலையை சீரமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

பூம்புகார் தொகுதி, மாணிக்கபங்கு ஊராட்சியிலுள்ள ஆணைக்கோவில் கிராமச் சாலையில் அவ்வப்போது ஏற்படும் நொடிகள் சீர்செய்யப்பட்டு வருகின்றன. மேலும் இச்சாலையை 2013-2014 ஆம் ஆண்டின் ஒருங்கிணைந்த சாலை உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்ய பரிசீலிக்கப்படும்.

55—

சாலைப் பணி

வினா எண் 20498—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி-களப்பான்/பரவாக்கோட்டை சாலைப் பணியை முழுமையாக செய்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி-களப்பான்/பரவாக்கோட்டை சாலை கி.மீ. 0/0-33/2 வரை 33.20 கி.மீ நீளமுடைய மாவட்ட முக்கிய சாலையாகும். இதில் கி.மீ. 26/300-28/0 வரை 1.70 கி.மீ சாலைப் பணி 2012-2013 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.55.00 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு சாலைப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. கி.மீ. 7/8-15/0- மற்றும் 17/0—26/300 வரை 16.50 கி.மீ. நீளச் சாலையை நபார்டு வங்கி நிதி உதவியுடன் மேற்கொள்ள ரூ.437 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் உடனடியாகத் தொடங்கப்படும். மீதமுள்ள சாலைப் பகுதிகள் போக்குவரத்துக்கு ஏற்ற நிலையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

[2013 அக்டோபர் 28

56—

ஊராட்சி ஒன்றியச் சாலை

வினா எண் 20891—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், மாரங்குடி, திருநெல்லிக்காவல் ஊராட்சி ஒன்றியச் சாலையை நெடுஞ்சாலைத் துறையின்கீழ் கொண்டு வர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், மாரங்குடி, திருநெல்லிக்காவல் ஊராட்சி ஒன்றியச் சாலையை நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ள தற்போது சாத்தியக் கூறுகள் இல்லை.

57—

ஊராட்சி ஒன்றியச் சாலை

வினா எண் 20892—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், வேதபுரம்-கும்மட்டிதிடல் ஊராட்சி ஒன்றியச் சாலையை நெடுஞ்சாலைத் துறையின்கீழ் கொண்டு வர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், வேதபுரம்-கும்மட்டிதிடல் ஊராட்சி ஒன்றியச் சாலையை நெடுஞ்சாலைத் துறையின்கீழ் கொண்டு வர தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

2013 அக்டோபர் 28]

58—

இருவழிச்சாலை

வினா எண் 24833—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம்-கோயம்புத்தூர் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து காகாபாளையம், வேம்படிதாளம் வழியாக எளம்பிள்ளை செல்லும் சாலையை அகலப்படுத்தி இருவழிச்சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம்-கோயம்புத்தூர் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து காகாபாளையம், வேம்படிதாளம் வழியாக எளம்பிள்ளை செல்லும் சாலையானது 7.00 மீட்டர் அகலமுள்ள இருவழித்தடமாக போக்குவரத்திற்கு ஏற்றாற்போல் உள்ளது.

59—

சுற்றுச்சாலைப் பணிகள்

வினா எண் 25075—திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி சுற்றுச்சாலைப் பணிகளை விரைவில் முடிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி சுற்றுச்சாலைப் பணிக்கு நில எடுப்பு செய்ய ரூ.10.06 கோடிக்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டு

[2013 அக்டோபர் 28

நில எடுப்பு பிரேரணை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

60—

புறவழிச் சாலை

வினா எண் 26865—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் மற்றும் தாராபுரம் பகுதிகளில் புறவழிச் சாலை அமைக்கும் பணிகளை விரைந்து முடிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

பெரம்பலூர் மற்றும் தாராபுரம் பகுதிகளில் புறவழிச் சாலை அமைப்பதற்கான முதற்கட்டப் பணிகள் முடிக்கப்பட்டு போக்குவரத்து நடைபெற்று வருகிறது. இரண்டாம் கட்டப் பணிகள் விரைவில் முடிவடையும்.

61—

மாசு ஏற்படுதலைத் தடுத்தல்

வினா எண் 15263—திருமதி ம. சக்தி: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, நெப்பத்தூர் ஊராட்சியில் செங்கல் சூளையால் மாசு ஏற்படுவதைத் தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், நெப்பத்தூர் கிராமத்தில் அமைந்துள்ள திருவாளர்கள் ராதாகிருஷ்ணன் பிரிக் ஓர்க்ஸ் நிறுவனம் 12-12-2012 அன்று

2013 அக்டோபர் 28]

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் ஆய்வு செய்யப்பட்டது. இந்நிறுவனமானது தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணை வேண்டி விண்ணப்பிக்கவில்லை. மேலும் வாரியத்தின் காரணம் கேட்கும் குறிப்பாணைக்கு பதில் அளிக்காமையால் இந்நிறுவனத்திற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தால் வழங்கப்பட்டுள்ள மின் இணைப்பைத் துண்டிக்க வேண்டி மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

62—

மாத இதழ்கள்

வினா எண் 17598—திரு. ஏ. லாசர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் சட்டமன்ற அலுவலகத்திற்கு, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய நூலகத்திற்கு சுற்றுச்சூழல் குறித்து வரும் 16 மாத இதழ்களின் பிரதிகள் ஒவ்வொரு மாதமும் இலவசமாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் சுற்றுச்சூழல் குறித்து மாத இதழ்கள் எதுவும் வெளியிடுவது இல்லை. மேலும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய நூலகத்திற்கு சுற்றுச்சூழல் குறித்து பெறப்படும் இதழ்கள் ஒவ்வொரு மாதமும் கட்டணம் செலுத்தி வாங்கப்படுவதால் இவ்விதழ்களின் பிரதிகளை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்களுக்கு இலவசமாக வழங்குவதற்கு இயலாது.

63—

காலாண்டிதழ்கள் வழங்குதல்

வினா எண் 17599—திரு. ஏ. லாசர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் செயல்பாடு குறித்து காலாண்டு இதழ்களை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் செயல்பாடுகள் குறித்த காலாண்டு இதழ்களை வாரியம் தயாரிப்பதில்லை. எனினும், காலண்டிற்கு ஒரு முறை வெளியிடப்படும் செய்தி மடலினை பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினால் அனுப்பப்படுகிறது.

64—

சுற்றுச்சூழல் பொறியாளர்கள் நியமனம்

வினா எண் 27540—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து வட்டங்களிலும் மாநில மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின்மூலம் சுற்றுச்சூழல் பொறியாளர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொழிற்சாலைகளின் எண்ணிக்கைக்கேற்ப தமிழ்நாடு முழுவதும் 32 மாவட்ட சுற்றுச்சூழல் நலப் பொறியாளர் அலுவலகங்களை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஏற்படுத்தியுள்ளது. 32 மாவட்ட சுற்றுச்சூழல் நலப் பொறியாளர் அலுவலகத்தின் கீழ்வரும் அனைத்து வட்டங்களிலும் உள்ள தொழிற்சாலைகளை, அவ்வலுவலகத்தில் உள்ள சுற்றுச்சூழல்

2013 அக்டோபர் 28]

பொறியாளர்களே கண்காணித்து வருவதால், தற்சமயம் வட்ட அளவில் தனியாக சுற்றுச்சூழல் பொறியாளர்களை நியமிக்க அவசியம் ஏற்படவில்லையென தெரிவித்துக்கொள்ளப்படுகின்றது.

65—

இணைப்புத் திட்டம்

வினா எண் 9269—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பம்பா-அச்சன்கோயில்-வைப்பாறு இணைப்புத் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

தேசிய நீர் மேம்பாட்டு முகமை (NWDA) பம்பா-அச்சன் கோயில்-வைப்பாறு இணைப்புத் திட்ட சாத்தியக்கூறு அறிக்கையை ஜூன் 1995-ல் தயாரித்துள்ளது. இதன்மூலம் கேரளாவின் பம்பா—அச்சன்கோயில் ஆறுகளின் மிகை நீரிலிருந்து 22 டி.எம்.சி. அடி தமிழ்நாட்டிலுள்ள வைப்பாறு வடிநிலத்திற்கு திருப்புவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் தமிழ்நாட்டின் சங்கரன்கோயில், கோவில்பட்டி, சிவகிரி, ஸ்ரீவில்லிபுத்தூர், இராஜபாளையம், சாத்தூர் மற்றும் தென்காசி வட்டங்களில் சுமார் 91,400 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறவும், அதிகபட்சமாக 500 மெகா வாட் மின் உற்பத்தி செய்யவும் இத்திட்டம் வகை செய்கிறது. இந்த 22 டி.எம்.சி. அடி நீரானது பம்பா-அச்சன்கோயில் ஆறுகளில் கிடைக்கும் மிகை நீரில் சுமார் 20 விழுக்காடு மட்டுமே ஆகும். தமிழ்நாடு அரசு இத்திட்டத்திற்கு ஒப்புதலை வழங்கியுள்ளது. கேரள அரசு இத்திட்டத்திற்கு ஆதரவாக இல்லை என 2003-லிருந்து தெரிவித்து வருகிறது. எனினும், இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ஏதுவாக ஒருமித்த கருத்தை உருவாக்குவதற்கு மத்திய அரசும், தேசிய நீர் மேம்பாட்டு முகமையும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தமிழக அரசு பல்வேறு தருணங்களில் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

[2013 அக்டோபர் 28

66—

ஆய்வு மாளிகை

வினா எண் 9307—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், உத்தமபாளையம் ஆய்வு மாளிகையை மறு சீரமைக்கும் பணியின் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், உத்தமபாளையத்தில் உள்ள ஆய்வு மாளிகையினை மறுசீரமைக்கும் பணியில் மற்ற பணிகளுடன் வெள்ளை அடித்தல், வர்ணம் பூசுதல் மற்றும் மின் பணிகள் ஆகிய அனைத்துப் பணிகளும் முழுமையாக முடிக்கப்பட்டு, தற்போது ஆய்வு மாளிகை பயன்பாட்டில் உள்ளது.

67—

நீர்த்தேக்கப் பணிகள்

வினா எண் 12503—திரு. து. முருகேசன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு நகரத்தில் நிலத்தடி நீரைப் பெருக்க குண்டூர் ஏரியை ஆழப்படுத்துதல் மற்றும் மேலமையூர் நீர்த்தேக்கப் பணிகளை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், குண்டூர் மேலமையூர் ஏரியானது பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் உள்ள ஏரியாகும். குண்டூர் ஏரியின் கரைகளை பலப்படுத்த கடந்த நிதியாண்டில் ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் குண்டூர் ஏரியினை ஆழப்படுத்தவும், மேலமையூர் ஏரியின் நீர்த்தேக்கப் பணிகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

2013 அக்டோபர் 28]

68—

பெரிய கால்வாயை தூர்வாருதல்

வினா எண் 14800—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி நகராட்சி, 28-வது வட்டம், அனந்தபுரம் காவங்கறை தெருவில் உள்ள ஏரிக்குச் செல்லும் பெரிய கால்வாயை தூர்வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம் ஆரணி வட்டத்தில் உள்ள திருமலை சமுத்திரம் ஏரியின் வரத்துக் கால்வாயானது தற்பொழுது தூர்ந்து ஏரிக்கு வரும் நீர் தடைபட்டு வருகிறது. எனவே, இதனை வரும் நிதியாண்டில் புனரமைத்து முற்றிலும் தூர்வாரி சரிசெய்யப்படும்.

69—

குழுத் தலைவர் நியமனம்

வினா எண் 17958—திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, சிவகாசி ஊராட்சி ஒன்றியம், மங்கலம் ஊராட்சி, மங்கலம்-பெரியகுளம் கண்மாய் நீர்பாசனக் குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்களை புதிதாக நியமனம் செய்ய செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் தலைவர் மற்றும் ஆட்சிமன்றக் குழு உறுப்பினர் தேர்தல் 5

[2013 அக்டோபர் 28

ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும். தற்போது மங்கலம் கண்மாய்க்கு நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் தலைவர் மற்றும் ஆட்சிமன்றக் குழு உறுப்பினர் தேர்தல் நடத்தும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

70—

படித்துறைகளைப் பராமரித்தல்

வினா எண் 23797—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், தேராவூர், மேட்டுப்பட்டி ஊராட்சி, மாதிரிப்பட்டி குளம் படித்துறைகளைப் பராமரிப்பு செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை தொகுதி, மேட்டுப்பட்டி ஊராட்சி, மாதிரிப்பட்டி குளத்தில் கலிங்கல் மராமத்து செய்யும் பணி வரும் நிதியாண்டில் (2013-2014) முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தப்படும்.

71—

குழுமி பராமரிப்பு

வினா எண் 24983—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, ஈஸ்வரன்கோவில் ஊராட்சி, எருதுபட்டியில் பொதுப் பணித் துறை நெய்வாசல் குளத்தை குழுமி பராமரித்து கரையைப் பலப்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை தொகுதி, ஈஸ்வரன்கோவில், எருதுபட்டியில் உள்ள நெய்வாசல் குளம் நீர்வள ஆதாரத் துறையின் பராமரிப்பில் உள்ள குளமாகும். ஈஸ்வரன்கோவில் நவாக்குளம்—பொன்னனியாறு வடிநிலப் பகுதியில் வருவதால், நீர்வள, நிலவளத் திட்டம் தொகுப்பு 2-ன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. வரும் 2013-2014-ம் நிதியாண்டில் அதற்கான உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, நிதி ஒதுக்கம் செய்த பின்பு, அதன் குழுமி மற்றும் கரையைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

72—

பட்டு முத்திரை

வினா எண் 10206—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுத்த மற்றும் இயற்கை பட்டு இரகங்களின் தரத்தை உறுதி செய்யும் பட்டு முத்திரையை, தமிழக அனைத்துப் பட்டு உற்பத்தியாளர்களும் பயன்படுத்த இந்திய பட்டு முத்திரை அமைப்பில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) சுத்த மற்றும் இயற்கை பட்டு இரகங்களின் தரத்தை உறுதி செய்யும் பட்டு முத்திரையை தமிழக அனைத்துப் பட்டு உற்பத்தியாளர்களும் பயன்படுத்த இந்திய பட்டு முத்திரை அமைப்பில் சேர்க்க அரசு ஆவன செய்யும்.

[2013 அக்டோபர் 28

(ஆ) பட்டு ஜவுளிகளின் விற்பனையை உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் அதிகப்படுத்தும் நோக்கில், இந்திய அரசால் 'சில்க் மார்க்' 17-04-2004-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. சில்க் மார்க் (பட்டு முத்திரை), என்பது மல்பேரி, டசர், எரி அல்லது மூகா பட்டு போன்ற சுத்த மற்றும் இயற்கை பட்டு இரகங்களில் பதியப்பட்டு, இவற்றின் தரத்தினை உறுதி செய்ய உதவும் ஓர் அடையாளம் ஆகும். அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்கள் மட்டுமே மேற்படி முத்திரைகளைப் பயன்படுத்தமுடியும். கர்நாடகா சங்கங்களின் பதிவுச் சட்டம் 1960-ன்படி, பதிவு செய்யப்பட்ட அமைப்பான இந்திய அரசின் ஜவுளித் துறையின்கீழ் உள்ள மத்திய பட்டு வாரியத்தின் ஓர் அங்கமான இந்திய சில்க் நிறுவனம்மூலம் 'சில்க் மார்க்' திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

தனி நிறுவனம், மத்திய, மாநில அரசு நிறுவனம், தலைமைச் சங்கம், தனியார் மற்றும் கூட்டாண்மை நிறுவனம் ஆகியவை இந்திய பட்டு முத்திரை அமைப்பில் (Silk Mark Organisation of India) உறுப்பினராகலாம். இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட உறுப்பினராகச் சேர்ந்தபின் அவர்கள் 'சில்க் மார்க்' முத்திரையை அவர்களது பட்டு ஜவுளிகளில் பயன்படுத்தலாம்.

மாநிலத்திலுள்ள பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் இதுவரை 73 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இந்நிறுவனத்தில் சில்க் மார்க்கின் அங்கீகரிக்கப்பட்ட உபயோகிப்பாளராகப் பதிவு செய்து, பிப்ரவரி 2012 முடிய 6,77,948 பட்டு முத்திரை வில்லைகளை கொள்முதல் செய்து பயன்படுத்தி உள்ளனர்.

73—

பட்டுச் சேலைகளைப் பதிவு செய்தல்

வினா எண் 10227—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவிசார் குறியீடு 1999 ஆம் ஆண்டு சட்டத்தின்படி கைத்தறி மற்றும் துணிநூல் துறை, சேலம், பட்டுச் சேலைகளைப் பதிவு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) 1999 ஆம் ஆண்டு புவிசார் குறியீடு சட்டத்தின்கீழ் சேலம் வெண்பட்டு இரகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சேலம் பட்டுச் சேலை ரகங்கள், சுத்த ஜரிகை பயன்படுத்தாமல் மலிவு விலை கொண்ட பலதரப்பட்ட நிலைத்த தன்மையற்ற HF ஜரிகைகளை பல்வேறு காலகட்டங்களில் உபயோகப்படுத்தி, உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு, அவ்வப்போதைய சந்தை விலைக்கேற்ப விற்பனை செய்யப்பட்டு வருவதால், சேலம் சரகத்தில் புவிசார் குறியீடு 1999 ஆம் ஆண்டு சட்டத்தின்படி, சேலம் பட்டுச் சேலைகளைப் பதிவு செய்ய சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

74—

தறி மேம்படுத்த நிதி

வினா எண் 10254—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2011-2012 ஆம் ஆண்டு தறி மேம்படுத்த நிதி உதவி எத்தனை நபர்களுக்கு அளிக்கப்பட உள்ளது?

(ஆ) இத்திட்டம் எந்தெந்த மாவட்டங்களில் செயல்படுத்தப்பட உள்ளது?

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) 2011-2012 ஆம் ஆண்டின் தறி மேம்பாட்டு நிதி உதவி அளிக்க ஏதும் திட்டமிடவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

[2013 அக்டோபர் 28

75—

நெசவாளர்கள் விடுதி

வினா எண் 10259—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர் பயிற்சி மையத்தில் நெசவாளர்கள் தங்க விடுதி கட்டும் செயற்குறிப்பின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

கைத்தறி நெசவாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும்பொருட்டு, தமிழகத்தில் முதன்முறையாக ஈரோடு மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர் பயிற்சி மையம் ரூ.25.71 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இப்பயிற்சி மையம்மூலம், வகுப்பறைப் பயிற்சி மற்றும் செய்முறைப் பயிற்சி என இருவகைப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. வகுப்பறைப் பயிற்சியில், கைத்தறியின் வகைகள், நூல் வகைகள், நூல் தரம், துணி ரகம், துணி வடிவமைப்பு, நெசவுத் தொழில்நுட்பம் போன்றவை தொடர்பாகவும், செயல்முறைப் பயிற்சியில் தடிம ரக துணி நெசவுப் பயிற்சி, சன்ன ரக துணி நெசவுப் பயிற்சி, மேம்படுத்தப்பட்ட ஜக்காடு தறியில் நெசவுப் பயிற்சி போன்றவை அளிக்கப்படுகின்றன.

இப்பயிற்சி மையத்தின்மூலம் ஆண்டொன்றுக்கு சுமார் 600 கைத்தறி நெசவாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் வகையில் உட்கட்டமைப்பு வசதி செய்யப்பட்டு, 31-01-2012 வரையில் 533 நெசவாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2011-2012 ஆம் ஆண்டிற்கான பயிற்சி மைய தொடர் செலவினம் மேற்கொள்வதற்காக ரூ.9,00,000/- (ரூபாய் ஒன்பது இலட்சம்) விடுவிக்கப்பட்டு பயிற்சி துவக்கப்பட்டுள்ளது.

2013 அக்டோபர் 28]

மேலும் பயிற்சி பெறும் நெசவாளர்கள் தங்குவதற்காக தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து தங்குமிடம் மற்றும் உணவு விடுதி கட்டுவதற்கு ரூ. 14.30 இலட்சமும், கணினி வடிவமைப்பு மையம் அமைப்பதற்கு ரூ.3.00 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. பயிற்சி மையம் அமைந்துள்ள கட்டடத்தை ஒட்டி உள்ள ஈரோடு கூட்டுறவு தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டத்திற்குச் சொந்தமான காலிமனையில் பயிற்சியாளர் தங்குமிடம் மற்றும் உணவு விடுதி கட்டுமானப் பணிக்கான திட்ட மதிப்பீடு மற்றும் வரைபடம் பொதுப் பணித் துறையின் 2011-2012 ஆம் ஆண்டு வழிகாட்டு மதிப்பின்படி பெறப்பட்டுள்ளது. அதில் தரைதளத்தில் 749.25 சதுர அடி பரப்பில் உணவு விடுதியும், முதல் தளத்தில் 749.25 சதுர அடி பரப்பில் தங்குமிடமும், மொத்தம் ரூ.14.30 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒப்புதல் கோரப்படும் மதிப்பீட்டுடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் உள்ளாட்சி நிருவாக ஒப்புதல் பெற்று கட்டுமானப் பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளன. பயிற்சியாளர் தங்கும் விடுதி மற்றும் உணவு விடுதி கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்ற பின்னர், வெளிமாவட்டங்களைச் சார்ந்த நெசவாளர்களும் மேற்படி பயிற்சி மையத்தில் தங்கி பயிற்சி மேற்கொண்டு பயனடைவார்கள்.

76—

இலவச வேட்டி, சேலை திட்டம்

வினா எண் 18550—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு வழங்கி வரும் இலவச வேட்டி, சேலை திட்டத்தில் போர்வைகளையும் சேர்த்து வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) தமிழக அரசு, கைத்தறி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குவதற்காகவும், கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் ஏழை, எளிய மக்களுக்குத் தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையின்பொழுது

[2013 அக்டோபர் 28

விலையில்லா வேட்டி மற்றும் சேலைகளை வழங்குவதற்காகவும், விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தினை 1989-90 (பொங்கல் 1990) ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் (பொங்கல் 2002 மற்றும் பொங்கல் 2003 தவிர) தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது. இலவசமாக வழங்கும் இத்திட்டத்தின்கீழ் போர்வைகளையும் சேர்த்து வழங்குவதற்கான வழிவகைகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழுவதற்கான சாத்தியக்கூறு இல்லை.

77—

தங்கும் வசதி

வினா எண் 19589—திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, கூவாகம் அருள்மிகு கூத்தாண்டவர் திருக்கோயிலை சுற்றுலா தலமாக அறிவித்து தங்கும் வசதிகளை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

2012-2013 ஆம் நிதியாண்டில் மாநில அரசு நிதியுதவித் திட்டத்தின்கீழ், விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, அருள்மிகு கூத்தாண்டவர் திருக்கோயிலில் குடிநீர் வசதி மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பதற்கு ரூ.6.00 இலட்சம், ஓய்வறை கட்டுவதற்கு ரூ.15.16 இலட்சம், கழிவறை கட்டுவதற்கு (ஆண்/பெண்) ரூ.5.00 இலட்சம் திருநங்கைகளுக்கான கழிவறை கட்டுவதற்கு ரூ.4.00 இலட்சம், ஆக மொத்தம் ரூ.30.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரால் நிருவாக ஆணை வழங்கப்பட்டு, ஆரம்பக் கட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. விரைவில் பணிகள் முடிக்கப்படும்.

78—

விட்டுமனைப் பட்டா

வினா எண் 13726—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

(அ) மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம் வட்டம், குமரலிங்கம் மேற்கு கிராமம், பெருமாள்புதூர் 79/3 ந.நத்தம் ஒட்டியுள்ள காட்டுப்• புறம்போக்கில் குடியிருந்து வரும் 13 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், மேற்கு குமரலிங்கம் கிராமம், பெருமாள்புதூர் புல எண் 79/3பி-ல், 3.58 ஏக்கர் நிலம் ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைக்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டது. மேற்படி இடத்தில் 100 வீட்டுமனைகளாகப் பிரிக்கப்பட்டு, 29-07-2000-ல் 41 வீட்டுமனைப் பட்டாக்களும், 31-10-2007-ல் 55 வீட்டுமனைப் பட்டாக்களும் ஆக மொத்தம் இதுநாள் வரை 96 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வீட்டுமனைகளும் தற்போது குடிசையமைத்து குடியிருந்து வரும் நான்கு குடும்பங்களுக்கு தகுதியின் அடிப்படையில் விரைவில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

79—

மயானம் அமைத்தல்

வினா எண் 28834—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் நகராட்சி, வார்டு எண் 2-ல் உள்ள ஆதி திராவிடர் காலனியில் மயானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் தொகுதி, பல்லடம் நகராட்சி வார்டு எண் 2-ல் ஆதி திராவிடர் காலனியில் மயானம் அமைப்பதற்கான இட வசதி இல்லாததால், அப்பகுதியில் மயான வசதி ஏற்படுத்த வழிவகைகள் இல்லை.

80—

இயந்திரப் பகுதி அதிகப்படுத்துதல்

வினா எண் 9863—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் பேருந்துகளின் சராசரி பயன்பாட்டை முறையான இயந்திரப் பகுதி மற்றும் மேற்கூரைப் பகுதி பராமரிப்பின்மூலம் அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசுப் பேருந்துகளை நீண்ட காலம் பயன்படுத்தும் நோக்கோடு, தினசரிப் பராமரிப்பு, வாராந்திரப் பராமரிப்பு, காலாண்டுப் பராமரிப்பு ஆகிய காலமுறைப் பராமரிப்புகளின்மூலம் அவற்றின் பயன்பாட்டுக் காலத்தை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

81—

பேருந்து வசதி

வினா எண் 13033—திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

(அ) ஆம்பூர் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியம், தென்னம்பட்டு கிராமத்திற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது தென்னம்பட்டிற்கு ஆம்பூரிலிருந்து ஜி-18 மற்றும் ஏ-10 ஆகிய நகரப் பேருந்துகள்மூலம் தினசரி 3 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

82—

பேருந்து வசதி

வினா எண் 13035—திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆம்பூர் முதல் ஆசனாம்பட்டு வரை நேரடிப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆம்பூர் முதல் ஆசனாம்பட்டு வரையிலான தட நீளம் 50 கி.மீ. ஆகும். தற்போது உள்ள விதிமுறைகளின்படி, நகரப் பேருந்து இயக்க வழிவகை இல்லை. மேலும், புறநகர்ப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

83—

பேருந்து வசதி

வினா எண் 13207—திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) வேலூர் மாவட்டம், மாதனூர் ஒன்றியம், நாச்சியார்குப்பம் கிராமத்திற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், மாதனூர் ஒன்றியம், நாச்சியார்குப்பம் கிராமத்திற்கு பேருந்து இயக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

84—

பேருந்து வசதி

வினா எண் 21057—திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி 7G, 29G, 116L ஆகிய பேருந்துகளை பார்வதி நகர் வரை இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தடம் எண் 7 ஜி மற்றும் 116 எல் ஆகிய வழித்தடங்களில் கீழ்க்கண்டவாறு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

வ. எண்	தடம் எண்	புறப்படுமிடம்	சேருமிடம்	பேருந்து எண்ணிக்கை
1.	7ஜி	கவியரசு கண்ணதாசன் நகர்	பிராட்வே	12
2.	116எல்	கொடுங்கையூர்–பார்வதி நகர்	பிராட்வே	1

2013 அக்டோபர் 28]

தடம் எண் 7ஜி பேருந்துகளை பார்வதி நகர் வரை நீட்டித்து இயக்கினால், பயண நடைகள் குறைந்து ஏற்கெனவே அத்தடத்தினைப் பயன்படுத்தும் கவியரசு கண்ணதாசன் நகர்ப் பகுதி மக்கள் பாதிப்படைவர். தற்போது, பார்வதி நகர்ப் பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவைக்கேற்ப, தடம் எண் 116-ல் ஓர் பேருந்து 10 பயண நடைகளுடன் இயக்கப்படுகிறது.

85—

புதிய பேருந்து

வினா எண் 27511—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, கும்பகோணம்-வலங்கைமான்-விடையல் கருப்பூர்-குடவாசல் வழித்தடத்தில் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கும்பகோணம்-வலங்கைமான்-விடையல் கருப்பூர்-குடவாசல் வழித்தடத்தில் கீழ்க்கண்டவாறு பேருந்துகள் இயக்கப்படுகின்றன:

வ. எண்	வழித்தடம்	தடம் எண்	நடைகள்
1.	கும்பகோணம்-குடவாசல் (வழி) வலங்கைமான், விடையல், கருப்பூர்.	391	4
2.	கும்பகோணம்-பாபநாசம் கும்பகோணம்-குடவாசல்	A66	12 2
3.	பாபநாசம்-குடவாசல் குடவாசல்–வலங்கைமான்	418B	5 4

86—

புதிய பேருந்து

வினா எண் 27513—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

கும்பகோணம் தொகுதி, கும்பகோணம்-குடவாசல்-திருவிடச்சேரி-ஸ்ரீவாஞ்சியம்-நன்னிலம் வழித்தடத்தில் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கும்பகோணம்-குடவாசல்-திருவிடச்சேரி-ஸ்ரீவாஞ்சியம்-நன்னிலம் வழித்தடத்தில் தடம் எண் A50 என்ற நகரப் பேருந்து நாள் ஒன்றுக்கு 14 நடைகளும், 2 தனியார் பேருந்துகள் நாள் ஒன்றுக்கு 12 நடைகளும், ஆக மொத்தம் 26 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

87—

அச்சு இயந்திரம் வாங்குதல்

வினா எண் 15341—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் அரசு கிளை அச்சகத்திற்கு வெப் ஆப்செட் அச்சு இயந்திரம் வாங்க அரசு அனுமதித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வாங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். சேலம் அரசு கிளை அச்சகத்தில் 2Hi வெப் ஆப்செட் இயந்திரம் வாங்க அரசாணை (நிலை) எண் 167, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (எஅ2.1)த் துறை, நாள் 26-06-2012-ல் மறுநிதி ஒப்பளிப்பு ஆணை வழங்கப்பட்டதையடுத்து, திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளிமூலம் தெரிவு செய்யப்பட்ட L1 நிறுவனமான M/s. NBG Printographic Machinery Company Private Limited, New Delhi நிறுவனத்திற்கு 08-03-2013 அன்று வழங்காணை வழங்கப்பட்டுள்ளது.

2013 அக்டோபர் 28]

88—

காலிப் பணியிடங்களை நிரப்புதல்

வினா எண் 29435—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுவதும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப, வேலைவாய்ப்புத் துறையின் செயல்பாடுகளைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) தமிழகம் முழுவதும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப அரசளவில் அவ்வப்போது ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் செயல்பாடுகள் சீராக நடைபெறுகின்றன.

(ஆ) காலியாகவுள்ள பணியிடங்களை விரைவில் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

89—

நிவாரணம் மற்றும் விழிப்புணர்வு

வினா எண் 28283—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு என்ற பெயரில் ஏமாற்றப்பட்டு பாதிக்கப்படும் நபர்களுக்கு நிவாரணம் வழங்கவும் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள், வேலைவாய்ப்பு என்ற பெயரில் ஏமாற்றப்பட்டு பாதிக்கப்படும் நிகழ்வுகளைப் பொறுத்தவரை, தொடர்புடைய நாடுகளில் இயங்கிவரும் இந்திய தூதரகம் வாயிலாக உரிய நிவாரணம் பெற இத்துறையால் மத்திய அரசின்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மேலும், இம்மாதிரியான நிகழ்வுகள் தொடராமல் இருக்க அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்மூலமாக பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) கேள்வி எழாது.

90—

அன்னதானக் கூடங்கள்

வினா எண் 9142—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குற்றாலம் அருள்மிகு திருக்குற்றாலநாதசுவாமி திருக்கோயிலில் அன்னதானக் கூடங்கள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், குற்றாலம், அருள்மிகு திருக்குற்றாலநாதசுவாமி திருக்கோயிலில் பழுதடைந்த பழைய அன்னதானக் கூடத்தை அகற்றிவிட்டு, நவீன சமையலறை உள்ளிட்ட வசதிகளுடன் 4,429.57 சதுர அடி பரப்பளவில் கட்டடம் கட்டுவதற்கு ரூ.55,00,000/- மதிப்பீட்டில் திருக்கோயில் நிதிமூலம் கட்டுவதற்கு இந்து சமய அறநிலையங்கள் துறை ஆணையரால் நிருவாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

2013 அக்டோபர் 28]

91—

ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

வினா எண் 13289—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை அருள்மிகு சுப்பிரமணியர் வள்ளி தெய்வானை ஆலய வழிப்பாட்டிற்குரிய இடத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், விராலிமலை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான தேரோடும் வீதி மற்றும் தெப்பக்குளத்தில் உள்ள ஆக்கிரமிப்புகள் விழாவின்போது அவ்வப்போது அகற்றப்பட்டு வரப்படுகின்றன. மேற்படி திருக்கோயில் ஆக்கிரமிப்புகளை நிரந்தரமாக அகற்றிட நில அளவைப் பணி மேற்கொண்டு, எல்லை நிர்ணயம் செய்து தர இலுப்பூர் வட்டாட்சியருக்கு விண்ணப்பிக்கப்பட்டு, அளவீடு தொகை கடந்த 13-03-2012 மற்றும் 19-06-2012 இல் கீரனூர் சார்-நிலை கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி நில அளவை அளவீடு பணி மேற்கொள்ள தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அளவீடு பணி முடிவுற்றவுடன், திருக்கோயில் இடங்களைக் கண்டறிந்து ஆக்கிரமிப்புகளை நிரந்தரமாக அகற்றிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

92—

குடமுழுக்கு

வினா எண் 22842—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், மித்திராவயல், அருள்மிகு கருங்கமுடைய அய்யனார் கோயில், சோழன் அருள்மிகு மருதமுடைய அய்யனார் கோயில், பெரியகோட்டை அருள்மிகு தாமனிச் செல்லையனார் கோயில், அண்டக்குடி அருள்மிகு ஸ்ரீநல்லாண்ட அம்மன் கோயில், சிறுகப்பட்டி கழனி உடைய ஐயனார் கோயில் ஆகிய கோயில்களைப் புனரமைத்து, குடமுழுக்கு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ***1. மித்திராவயல், அருள்மிகு கருங்கமுடைய அய்யனார் திருக்கோயில்.***

காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், மித்திராவயல், அருள்மிகு கருங்கமுடைய அய்யனார் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இல்லாத திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் சுமார் 30 சென்ட்டில் அரசு புறம்போக்கு நிலத்தில் அமைந்துள்ளது. தினசரி ஒரு கால பூஜை கிராம பொது மக்களால் செய்யப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்கு திரு. சு. கருங்கப்பன் என்பவர் தலைமையில் 09-02-2012 அன்று பாலாலயம் செய்யப்பட்டு, திருப்பணி நடைபெற்று வருகிறது.

2. அருள்மிகு மருதமுடைய அய்யனார் திருக்கோயில், நாட்டுச்சேரி.

இத்திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பட்டியலில் சேராத திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் அரசின் ஒரு கால பூஜை நிதியுதவித் திட்டத்தில் உள்ள திருக்கோயிலாகும். திருக்கோயிலின் திருப்பணி கிராமத்தார்கள் நிதியுதவியுடன் நடத்தப்பட்டு பாதியில் நின்றுவிட்டது. பொது மக்கள் பங்களிப்புடன் அரசின் நிதியுதவி பெற்று, மேற்படி திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்யப்படும்.

2013 அக்டோபர் 28]

3. அருள்மிகு தாமனிச் செல்ல அய்யனார் திருக்கோயில், பெரியகோட்டை.

இத்திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள பட்டியலைச் சேராத திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணி செய்யப்பட்டுள்ளது. இராஜகோபுரம் சுற்றுச்சுவர் கட்டுமானம் முழுமையடையாமல் உள்ளது. மேற்படி திருப்பணிகளுக்கு பொது மக்கள் பங்களிப்பு கிடைக்கப்பெற்றால் மட்டுமே, அரசின் நிதியுதவியுடன் திருப்பணி நடத்த இயலும்.

4. அருள்மிகு நல்லாண்டம்மன் திருக்கோயில், அண்டக்குடி.

இத்திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள பட்டியலைச் சாராத அரசின் நிதியுதவித் திட்டத்தின்கீழ் ஒரு கால பூஜை நடத்தப்படும் திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் தற்கால நிருவாகி என்ற முறையில் திரு. உ.அ.அ. அனந்த பத்மநாபன் என்பவரால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. பொது மக்களின் பங்களிப்பு கிடைக்கப்பெற்றால் மட்டுமே, அரசின் நிதியுதவி பெற்று இத்திருக்கோயிலில் திருப்பணிகள் மேற்கொள்ள இயலும்.

5. அருள்மிகு கழனியுடைய அய்யனார் திருக்கோயில், சிறுகப்பட்டி.

இத்திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத வருமானம் இல்லாத திருக்கோயில் என்பதால், இத்திருக்கோயிலை இந்து சமய அறநிலையத் துறை சார்பில் புனரமைக்க இயலாது.

93—

பக்தர்களுக்குத் தங்குமிடம்

வினா எண் 25526—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு தங்குமிடம் மற்றும் அடிப்படை வசதிகள் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், தாயமங்கலம், அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் நிருவாகம் பரம்பரை அறங்காவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு மூன்று விடுதிகள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. பல்நோக்கு தங்கும் விடுதி ஒன்றும், பெண்கள் விரத மண்டபம் ஒன்றும் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. பக்தர்கள் ஓய்வு எடுப்பதற்கு 9 (ஒன்பது) ஓடு வேய்ந்த கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. திறவை மண்டபம் 2 (இரண்டு) உள்ளன. பக்தர்கள் பயன்பாட்டிற்காக 3 (மூன்று) கழிவறைகள் மற்றும் குளியலறைகள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இத்திருக்கோயிலில் இரண்டு ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு, இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் பக்தர்கள் குளிப்பதற்கும் மற்றும் பக்தர்கள் குடிநீர் அருந்தவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தரைமட்ட தண்ணீர்த் தொட்டி கட்டப்பட்டு அதில் 10 குழாய்கள் அமைத்து தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது. ரூ.20.40 இலட்சம் செலவில் 4 உயர்நிலை மின்கோபுர விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

94—

அங்காடியை புதுப்பித்தல்

வினா எண் 28351—திரு. கு. நல்லதம்பி: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எழும்பூர் தொகுதி, 58-வது வட்டம், பெரியமேடு எல்லம்மன் கோயிலின் கட்டுப்பாட்டிலுள்ள அறநிலையத் துறைக்குச் சொந்தமான அங்காடியைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, பெரியமேடு, அருள்மிகு எல்லம்மன் திருக்கோயில், சட்டப் பிரிவு 46(2)-ன்கீழ் வரையறை செய்யப்பட்ட பட்டியலைச் சேர்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு நிலை 3 செயல் அலுவலரால் நிருவாகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்கு பசலி 1421-க்கான உதவித் தொகை நிர்ணய வருமானம் ரூ.13,91,893/- ஆகும். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமாக 5 கட்டடங்கள் உள்ளன. அக்கட்டடங்களில் 12 குடியிருப்புகளும், 72 கடைகளும் உள்ளன. இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான சர்வே எண். 71-ல் சுமார் 3,000 சதுர அடி பரப்பளவில் உள்ள கட்டடத்தில் தினசரி மார்க்கெட், கடைகள் மற்றும் குடியிருப்புகள் உள்ளன. மேற்படி அங்காடியைப் புதுப்பிக்க பட்டயப் பொறியாளரைக் கொண்டு வரைபடத்துடன்கூடிய மதிப்பீடு தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.. விரைவில் பணிகள் தொடங்கிச் செய்து முடிக்கப்படும்.

95—

சீரமைப்புப் பணிகள்

வினா எண் 29204—திரு. கு. நல்லதம்பி: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எழும்பூர் தொகுதி, 58-வது வட்டம், பெரியமேடு எல்லம்மன் கோயில் சீரமைப்புப் பணிகளை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, பெரியமேடு, அருள்மிகு எல்லம்மன் திருக்கோயில், சட்டப் பிரிவு 46(2)-ன்கீழ் வரையறை செய்யப்பட்ட பட்டியலைச் சேர்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு

[2013 அக்டோபர் 28

நிலை 3 செயல் அலுவலரால் நிருவாகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்கு பசலி 1421-கான உதவித் தொகை நிர்ணய வருமானம் ரூ. 13,91,893/- ஆகும். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமாக 5 கட்டடங்கள் உள்ளன. மனைகள் ஏதும் இல்லை. பழமைவாய்ந்த இத்திருக்கோயிலுக்கு 4-3-1983-ல் குடமுழுக்கு நடைபெற்றதாக தெரிய வருகிறது. சென்னை இணை ஆணையர் ந.க. 1318/2009 ஆ1, நாள் 16-2-2009-ல் ரூ.3,52,000/-க்கு உபயத் திருப்பணிகள் மேற்கொள்ள நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. திருப்பணிகள் தற்போது 90 சதவீதம் முடிக்கப்பட்டு, திருக்குடமுழுக்கு செய்வதற்கு எதிர்வரும் 26-6-2013 அன்று உத்தேசமாக தேதி குறிக்கப்பட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

96—

கிராம நிருவாக அதிகாரி

வினா எண் 2774—திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டத்தில் காலியாக உள்ள கிராம நிருவாக அதிகாரி பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் ஏற்பளிக்கப்பட்ட, கிராம நிருவாக அலுவலர் மொத்தப் பணியிடங்கள் 416 ஆகும். தற்போது 318 கிராம நிருவாக அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். 2012-2013 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட கிராம நிருவாக அலுவலர்கள் 81 நபர்களில் பணி நியமனம் பெற்று, 67 நபர்கள் பணியில் சேர்ந்துள்ளனர். 14 நபர்கள் பணி ஏற்க வேண்டியுள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் தற்போது 98 கிராம நிருவாக அலுவலர் பணியிடங்கள் காலியாக உள்ளன.

2013 அக்டோபர் 28]

97—

புயல் பாதுகாப்பு இல்லங்கள்

வினா எண் 12383—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் புயல் பாதுகாப்பு இல்லங்கள் அமைக்கும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

இயற்கை; சீற்றங்களிலிருந்து மக்களைப் பாதுகாக்க தமிழ்நாட்டில் 124 புயல் பாதுகாப்பு இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் கூடுதலாக 121 பல்நோக்கு புயல் பாதுகாப்பு இல்லங்கள் கடலோர மக்களின் இடர் தணிப்புத் திட்டத்தின்கீழ் சுமார் ரூ.262.86 கோடி செலவில் கட்டப்படவுள்ளன.

98—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 15651—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, கல்லாபுரம் கிராமம், பூளவாடி புதுநகர் பகுதியில் நிலச் சீர்திருத்த பூமியில் குடியிருப்போருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கல்லாபுரம் கிராமம், பூளவாடி புதுநகர் பகுதியில் புல எண்474/B1A முதல் 474/B1K வரை உள்ள 13.56 ஏக்கர் உபரி

[2013 அக்டோபர் 28

நிலம் விவசாயத்திற்காக தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (மிகை நிலம் விநியோகம்) விதிகள் 1965-ன்படி, 11 நபர்களுக்கு 1996 ஆம் ஆண்டு ஒப்படை செய்யப்பட்டது. இதில், சுமார் 1.11 ஏக்கரில் 17 நபர்கள் மட்டுமே ஆங்காங்கே வீடு கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். இதர உபரி நிலங்கள் விவசாயத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. ஆதலால், இதில் உபரி நிலங்கள் ஆக்கிரமனம் செய்து வீடு கட்டியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

99—

தனிப் பட்டா

வினா எண் 18288—திரு. சு. ரவி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், பரித்திபுத்தூர் கிராமம், அருந்ததிபாளையம் அருந்ததி இனத்தவர்களுக்கு வழங்கியுள்ள கூட்டுப் பட்டாவைப் பிரித்து தனிப் பட்டாவாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் வட்டம், பரித்திபுத்தூர் கிராமத்தில் சரோஜம்மாள் என்பவர் பெயரில் 0.14.5 ஏர்ஸ் பட்டாவாகப் பதிவாகியுள்ளது. இது பூர்வீக சொத்தாகும், புல எண்.346/18-இல் 0.06.5 ஏர்ஸ், புல எண். 346/19-இல் 0.08.0 ஏர்ஸ், ஆக மொத்தம் 0.14.5 ஏர்ஸ் பதிவு செய்யாத ஆவணத்தின்மூலம் அருந்ததியர் இனத்தவர்களான திரு. ஜனார்த்தனன் மற்றும் 6 நபர்களுக்குக் கிரயம் செய்துள்ளதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது. சம்பந்தப்பட்ட நபர்கள் பதிவு செய்த ஆவணங்களுடன் தனித்தனியே மனு செய்து கொண்டபிறகு, கூட்டுப் பட்டாவிலிருந்து தனி பட்டாவாக வழங்கப்படும். சம்பந்தப்பட்ட நபர்கள் தனித்தனியே மனு கொடுத்தால் மட்டுமே கூட்டுப் பட்டாவிலிருந்து தனிப் பட்டாவாக வழங்கப்படும்.

2013 அக்டோபர் 28]

100—

நஷ்ட ஈடு வழங்குதல்

வினா எண் 28251—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் மழையால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள சேதாரத்திற்கு நஷ்ட ஈடு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

தமிழகத்தில் மழை, புயல், வெள்ளம் மற்றும் வறட்சியால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு மத்திய அரசின் மாநில பேரிடர் நிவாரண நிதிக்கான வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிட்டுள்ள நிவாரணத்தைக் காட்டிலும், உயர்த்தப்பட்ட நிவாரண நிதி அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

பட்டியல்–14

1—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 20341—திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, திருவில்லிபுத்தூர் திரு.வி.க. பள்ளி முன்புள்ள மின்மாற்றியை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) திருவில்லிபுத்தூர் தொகுதி, திருவில்லிபுத்தூர் திரு.வி.க. பள்ளி முன்புள்ள மின்மாற்றி பள்ளியின் சுற்றுச் சுவரிலிருந்து

[2013 அக்டோபர் 28

6 அடி தூரத்தில் உள்ளது. மின்மாற்றியைச் சுற்றி 6 அடி உயரத்திற்கு முள் கம்பி வேலி போடப்பட்டுள்ளது. இது போதுமான பாதுகாப்பாகவே உள்ளது. எனினும் மின்மாற்றியை வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்ய வேண்டுமானால், வாரிய விதிமுறைகளின்படி அதற்கான விண்ணப்பத்தை (நகராட்சியோ அல்லது மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரியோ) உதவி செயற்பொறியாளர் / நகர் / திருவில்லிபுத்தூர் அவர்களுக்கு விண்ணப்பித்து, பணப் பங்களிப்பு திட்டத்தின் (DCW) கீழ் மதிப்பீட்டுத் தொகையைச் செலுத்தினால், அம்மின்மாற்றியை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2—

மின்விளக்கு அமைத்தல்

வினா எண் 27225—திரு. சு. ரவி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், பெருமூச்சி ஊராட்சி, அகன்நகர் காலனி, பெருமாள் கோயில் தெரு, அம்மன் கோயில் தெரு, டேங்க் தெரு ஆகிய தெருக்களில் புதிய மின்கம்பத்துடன் மின்விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், பெருமூச்சி ஊராட்சி, அகன்நகர் காலனி, பெருமாள் கோயில் தெரு, அம்மன் கோயில் தெரு, டேங்க் தெரு ஆகிய தெருக்களில் புதிய மின்கம்பத்துடன் மின்விளக்கு அமைக்கக் கோரி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

2013 அக்டோபர் 28]

3—

மின்விளக்கு அமைத்தல்

வினா எண் 27228—திரு. சு. ரவி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், பெருமூச்சி ஊராட்சி, பெருமூச்சி காலனி முதல் தெரு, 2-வது புதிய தெரு, 3, 4, 5, 6, 7, 8-வது குறுக்குத் தெருக்கள், சி.எஸ்.ஐ பள்ளித் தெரு, பஜனைக் கோயில் தெரு ஆகிய தெருக்களில் மின்கம்பத்துடன் மின்விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், பெருமூச்சி ஊராட்சி, பெருமூச்சி காலனி முதல் தெரு, 2-வது புதிய தெரு, 3, 4, 5, 6, 7, 8-வது குறுக்குத் தெருக்கள், சி.எஸ்.ஐ பள்ளித் தெரு, பஜனைக் கோயில் தெரு ஆகிய தெருக்களில் மின்கம்பத்துடன் மின்விளக்குகள் அமைக்கக் கோரி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

4—

மின்விளக்கு அமைத்தல்

வினா எண் 27248—திரு. சு. ரவி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், காவனூர் ஊராட்சி, சில்வர்பேட்டை 2, 3, 4, 5, 6, 7, 8-வது தெருக்கள், ஷா நகர் ஆதி திராவிட காலனி, சர்ச் 1, 2-வது தெருக்கள், ஷா நகர்

[2013 அக்டோபர் 28

ஆதி திராவிட காலனி குறுக்குத் தெரு, வேர் அவுஸ் தெரு ஆகிய தெருக்களில் மின்கம்பத்துடன் மின்விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், காவனூர் ஊராட்சி, சில்வர்பேட்டை 2, 3, 4, 5. 6, 7, 8-வது தெருக்கள், ஷா நகர் ஆதி திராவிட காலனி, சர்ச் 1, 2-வது தெருக்கள், ஷா நகர் ஆதி திராவிட காலனி குறுக்குத் தெரு, வேர் அவுஸ் தெரு ஆகிய தெருக்களில் மின்கம்பத்துடன் மின்விளக்குகள் அமைக்கக் கோரி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

5—

மின்விளக்கு அமைத்தல்

வினா எண் 27253—திரு. சு. ரவி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், காவனூர் ஊராட்சி, காவனூர் காலனி, அம்பேத்கர் தெரு, காமராஜ் தெரு, மூப்பர் தெரு, சர்ச் தெரு, இருளர் காலனி தார்ச் சாலை, இருளர் காலனி 2-வது தெரு, நரசிங்கபுரம் கிராமம், தோப்புத் தெரு ஆகிய தெருக்களில் மின்கம்பத்துடன் மின்விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், காவனூர் ஊராட்சி, காவனூர் காலனி, அம்பேத்கர்

2013 அக்டோபர் 28]

தெரு, காமராஜ் தெரு, மூப்பர் தெரு, சர்ச் தெரு, இருளர் காலனி தார்ச் சாலை, இருளர் காலனி 2-வது தெரு, நரசிங்கபுரம் கிராமம், தோப்புத் தெரு ஆகிய தெருக்களில் மின்கம்பத்துடன் மின்விளக்கு அமைக்கக் கோரி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

6—

மின்விளக்கு அமைத்தல்

வினா எண் 27273—திரு. சு. ரவி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, ஆண்டரசன்பேட்டை மெயின் தெரு, லட்சுமியம்மன் கோயில் குறுக்குத் தெரு, கம்பன் தெரு, சி.எஸ்.ஐ. சர்ச் தெரு, ஓச்சேரி சாலை, சி.எஸ்.ஐ. சர்ச் மெயின் தெரு ஆகிய தெருக்களில் புதிய மின்கம்பத்துடன் மின்விளக்கு அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, ஆண்டரசன்பேட்டை மெயின் தெரு, லட்சுமியம்மன் கோயில் குறுக்குத் தெரு, கம்பன் தெரு, சி.எஸ்.ஐ. சர்ச் தெரு, ஓச்சேரி சாலை, சி.எஸ்.ஐ. சர்ச் மெயின் தெரு ஆகிய தெருக்களில் புதிய மின்கம்பத்துடன் மின்விளக்குகள் அமைக்கக் கோரி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

[2013 அக்டோபர் 28

7—

மின்கம்பிகள் மாற்றியமைத்தல்

வினா எண் 30024—திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, விஜயமாநகரம் மற்றும் அதைச் சுற்றி உள்ள கிராமங்களிலுள்ள மின்கம்பிகளை மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் தொகுதி, விஜயமாநகரத்தில் ஒரு கி.மீ. அளவிற்குப் பழுதான மின்கம்பிகள் 20-3-2013 அன்றும், மு.பரூரில் 1.5 கி.மீ. தூரத்திற்கு மின் கம்பிகள் 25-3-2013 அன்றும் மாற்றப்பட்டு சீரான மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், இப்பகுதிகளில் உள்ள நாள்பட்ட மின் கம்பிகளை 15.5 கி.மீ. அளவிற்கு ரூ.19.5 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மின் கம்பிகள் ஒதுக்கீடு பெற்று இப்பணிகள் ஒரு வருட காலத்திற்குள் முடிக்கப்படும்.

8—

மின்கட்டண வசூல் மையம்

வினா எண் 30025—திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, பெரியகண்கடியாங்குப்பம் துணை மின் நிலையத்தை விரிவுபடுத்தி மின்கட்டண வசூல் மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கண்டியாங்குப்பம் 33/11 கே.வி. துணை மின் நிலையத்தை விரிவுபடுத்தும் பணியாக கூடுதலாக 8 எம்.வி.ஏ. திறன் மின்மாற்றி 30-3-2013 அன்று இயக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டு, தற்போது 2 x 8 எம்.வி.ஏ. திறன் கொண்ட துணை மின் நிலையமாக இயங்கி வருகிறது.

கண்டியாங்குப்பம் துணை மின் நிலையத்திலேயே மின் கட்டண வசூல் மையம் உட்பட கண்டியாங்குப்பம் பிரிவு அலுவலகம் ரூ.8,92,100 மதிப்பீட்டுத் தொகையில் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டிற்குள் இந்த நிலையம் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

9—

திட்டக்குடியைத் தனியாகப் பிரித்தல்

வினா எண் 30026—திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் உப மின் கோட்டத்தில் திட்டகுடியை தனியாகப் பிரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் கோட்டத்தின்கீழ் பின்வரும் உப கோட்டங்கள் இயங்கி வருகின்றன:

(1) உதவி செயற்பொறியாளர்/நகரம்/விருத்தாசலம்.

(2) உதவி செயற்பொறியாளர்/ஊரகம்/விருத்தாசலம்.

(3) உதவி செயற்பொறியாளர்/இயக்குதலும், பராமரித்தலும்/கோ. பூவனூர்.

[2013 அக்டோபர் 28

(4) உதவி செயற்பொறியாளர்/இயக்குதலும், பராமரித்தலும்/ வேப்பூர்.

(5) உதவி செயற்பொறியாளர்/இயக்குதலும், பராமரித்தலும்/ பெண்ணாடம்.

(6) உதவி செயற்பொறியாளர்/இயக்குதலும், பராமரித்தலும்/ திட்டக்குடி.

(7) உதவி செயற்பொறியாளர்/கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை/விருத்தாசலம்.

எனவே, விருத்தாசலம் கோட்டத்தின்கீழ் விருத்தாசலம் உபகோட்ட அலுவலகமும், திட்டக்குடி உபகோட்ட அலுவலகமும் ஏற்கனவே இயங்கி வருவதால், திட்டக்குடி உபகோட்டத்தை தனியாகப் பிரிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

10—

குடிநீர்க் குழாய் இணைப்பு

வினா எண் 3192—திரு. கு. நல்லதம்பி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம் நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எழும்பூர் தொகுதி, 72-வது வட்டம், சாஸ்திரி நகரின் அனைத்துத் தெருக்களிலும் ஒரு தெருவிற்கு இரண்டு குடிநீர்க் குழாய் வீதம் இணைப்பு கொடுத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

எழும்பூர் தொகுதி, பழைய 72-வது வட்டம் (புதிய 104-வது வட்டம்) சாஸ்திரி நகரில் உள்ள 11 தெருக்களில் ஏற்கெனவே 11 குடிநீர் தெருக் குழாய்கள் இயங்கி வந்தன. சென்னை பெருநகர மேம்பாட்டுத் திட்ட நிதியில், வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும்

2013 அக்டோபர் 28]

மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யத் தேவையான பணியின்கீழ், மேலும் 11 பொதுக் குடிநீர்க் குழாய்கள் இப்பகுதியில் 2012-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அமைக்கப்பட்டு, மொத்தம் 22 பொதுக் குடிநீர்க் குழாய்கள் தற்பொழுது பயன்பாட்டில் உள்ளன.

11—

காவேரி குடிநீர் வசதி

வினா எண் 10135—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம் நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, சாமியம்பாளையம் கிராமம், சடையம்பாளையத்திற்கு காவேரி குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, சாமியம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட சடையம்பாளையம் (2011-ம் ஆண்டைய கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 468) குடியிருப்புக்கு சங்கரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து நாளொன்றுக்கு 18,720 லிட்டர் காவேரி குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டு, தற்போது சராசரியாக நாளொன்றுக்கு 18,500 லிட்டர் வீதம் காவேரி குடிநீர் சீராக வழங்கப்பட்டு வருகின்றது.

12—

தொகுப்பு வீடுகள் பராமரிப்பு

வினா எண் 10881—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம் நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியம், தென்னலூர் ஊராட்சி, ஆட்சநாயக்கன்பட்டியில் பழுதடைந்துள்ள ஆதி திராவிடர் காலனி வீடுகளைப் பராமரிப்பு செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசுத் திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ. 25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

13—

தொகுப்பு வீடுகள் பராமரிப்பு

வினா எண் 11067—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விராலிமலை ஒன்றியம், பாக்குடி ஊராட்சி, பாக்குடி ஆதி திராவிடர் காலனி வீடுகளை பராமரிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசுத் திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை

2013 அக்டோபர் 28]

வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ. 25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

14—

குடியிருப்புப் பராமரிப்பு

வினா எண் 11075—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை ஒன்றியம், வெம்மணி ஊராட்சி, வெம்மணியில் ஆதி திராவிடர் குடியிருப்பு பராமரிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசுத் திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ. 25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

15—

தொகுப்பு வீடுகள் மராமத்து

வினா எண் 11244—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அன்னவாசல் ஒன்றியம், குரும்பட்டி ஆதிதிராவிட பொது மக்களின் இலவசக் காலனி வீடுகளை மராமத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசுத் திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

16—

சிமென்ட் சிலாப் அமைத்தல்

வினா எண் 13551—திரு. சு. ரவி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 2-வது வார்டு, இராஜேந்திர கிரிசிங் தெரு, வடக்குப் பகுதியில் உள்ள கழிவு நீர், கால்வாய்க்கு அகலமான சிமென்ட் சிலாப் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் 2-வது வார்டு, இராஜேந்திர கிரிசிங் தெரு, வடக்குப் பகுதியில் உள்ள கழிவுநீர்க் கால்வாய்க்கு அகலமான சிமென்ட் சிலாப் அமைத்தால், அடைப்பு ஏற்பட்டு துப்புரவுப் பணியாளர்கள் உள்ளே சென்று சுத்தம் செய்வது மிகவும் கடினமாகும். எனவே, மேற்படி பகுதியில் அகலமான சிமென்ட் சிலாப் அமைக்க வேண்டியதில்லை.

2013 அக்டோபர் 28]

17—

சிமென்ட் சாலை

வினா எண் 13554—திரு. சு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம் நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 2-வது வார்டு, காந்தி சாலை முதல் ஆர்.டி.ஓ. அலுவலகம் வரை மற்றும் மாதவ நகர் 2-வது தெருவிற்கு சிமென்ட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 2-வது வார்டு, காந்தி சாலை முதல் R.T.O. அலுவலகம் வரை மற்றும் மாதவ நகர் 2-வது தெரு ஆகியவற்றில் நகராட்சி சாலை நல்ல நிலையில் உள்ளதால், அங்கு புதிதாக சிமென்ட் சாலை தற்போது அமைக்கத் தேவையில்லை.

18—

குடிநீர்க் குழாய்கள் அமைத்தல்

வினா எண் 13569—திரு. சு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 3-வது வார்டு, சாஸ்திரி நகரில் சிமென்ட் சாலை மற்றும் குடிநீர்க் குழாய்கள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் நகராட்சி, 3-வது வார்டு, சாஸ்திரி நகரில் சிமென்ட் சாலை மற்றும் குடிநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.

19—

சிமென்ட் சாலை அமைத்தல்

வினா எண் 14936—திரு. சு. ரவி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 31-வது வார்டு, லட்சுமி நகர் பகுதியிலுள்ள மூன்று தெருக்கள் மற்றும் பாலாஜி மகால் திருமண மண்டபம் பின்புறமுள்ள தெருவிற்கு கழிவுநீர்க் கால்வாய் மற்றும் சிமென்ட் சாலை அமைத்துத் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் வார்டு எண் 31-ல் உள்ள லட்சுமி நகர் பகுதியிலுள்ள மூன்று தெருக்கள் மற்றும் பாலாஜி மகால் திருமண மண்டபம் பின்புறமுள்ள தெரு ஆகியவை புதியதாக மனைப்பிரிவு செய்த இடம் ஆகும். ஆனால் மேற்படி இடங்களை நகராட்சிக்கு இதுவரை ஒப்படைப்பு செய்யவில்லை. அவ்விடங்களை நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்த பின்னரே, மேற்காண் தெருக்களுக்கு சிமென்ட் சாலை மற்றும் கழிவுநீர்க் கால்வாய் அமைப்பது குறித்து பரிசீலிக்க இயலும்.

2013 அக்டோபர் 28]

20—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 16971—திருமதி ர. சுபா: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, கெங்கவல்லி ஒன்றியம், ஜங்கம சமுத்திரம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளி அருகில் பொது மக்களுக்கு குடிநீர் வழங்க மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கெங்கவல்லி தொகுதி, கெங்கவல்லி ஒன்றியத்திற்குட்பட்ட ஜங்கம சமுத்திரம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளி அருகில் சுமார் 50 நபர்கள் மட்டுமே வசிக்கின்றனர். இப்பகுதி ஜங்கம சமுத்திரம் குடியிருப்புக்கு உட்பட்டதாகும். இப்பகுதிக்கு ஒரு சிறு மின்விசைத் திட்டம்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆகையால், மேற்படி ஜங்கம சமுத்திரம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளி அருகில் உள்ள மக்களுக்கு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அவசியம் எழவில்லை.

21—

குழு ஏற்படுத்துதல்

வினா எண் 19197—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) அனைத்துக் கட்டடங்களிலும் மழைநீர் சேகரிக்கும் வசதியை கட்டாயமாக்க எல்லா நகராட்சிகளிலும் குழு ஒன்றை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அனைத்துக் கட்டடங்களிலும் மழைநீர் சேகரிக்கும் வசதியைக் கட்டாயமாக்க கட்டட விதிகள் அனைத்திலும் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, எல்லா நகராட்சிகளிலும் குழு ஒன்று ஏற்படுத்துவதற்கு அவசியம் ஏதும் எழவில்லை.

22—

குடிநீர்க் குழாய் அமைத்தல்

வினா எண் 21694—திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெரம்பூர் தொகுதி, 37-வது வட்டம், கண்ணன் தெரு, பூண்டி மாதா கோயில் தெரு, லிங்கேசன் தெரு, அண்ணாசாலை 2-வது தெரு, ஆர்.ஆர். நகர் 1-வது பிளாக், ராமகிருஷ்ணன் தெரு, சர்வபள்ளி தெரு, அபிராமி நிழற்சாலை 4-வது தெரு மற்றும் 1-வது தெருவிலும் குடிநீர்க் குழாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

பெரம்பூர் தொகுதி, 37-வது வட்டம், கண்ணன் தெரு, பூண்டி மாதா கோயில் தெரு, லிங்கேசன் தெரு, அண்ணாசாலை 2-வது தெரு, ஆர்.ஆர். நகர் 1-வது பிளாக், ராமகிருஷ்ணன் தெரு,

2013 அக்டோபர் 28]

சர்வபள்ளி தெரு, அபிராமி நிழற்சாலை 4-வது தெரு மற்றும் 1-வது தெருக்களில் பொதுக் குழாய்கள் பதிப்பதற்கு, சென்னை மாநகர புனரமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டு விட்டன. சர்வபள்ளி சாலையில் 90 மீ. நீளத்திற்கு குடிநீர்க் குழாய் பதிக்கப்பட்டு விட்டது. மீதமுள்ள தெருக்களில் விரைவில் குழாய் பதிக்கும் பணி தொடங்கப்பட்டு முடிக்கப்படும்.

23—

நிரந்தரத் தீர்வு

வினா எண் 21709—திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி, 46-வது வட்டம், சி. கல்யாணபுரம், பொன்னப்பன் தெருக்களில் கழிவுநீர்க் கால்வாய் அடைப்பை போக்கி நிரந்தர தீர்வு காண அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

வியாசர்பாடி கழிவு நீரேற்று நிலையத்தில் ஆழமான கிணறு (deep suction well) அமைக்க ரூ.84.85 இலட்சத்தில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் துவங்கப்பட்டு, முடிக்கப்படும். இக்கிணறு அமைக்கப்படுவதன்மூலம் பெரம்பூர் தொகுதியிலுள்ள சி. கல்யாணபுரம் மற்றும் பொன்னப்பன் தெருக்களில் அடிக்கடி கழிவுநீர்க் கால்வாய் அடைப்பு ஏற்படுவது தவிர்க்கப்படும்.

24—

மின் மயானம் அமைத்தல்

வினா எண் 22621—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் மின் மயானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி நகராட்சியில் அனைத்து தரப்பு மக்களும் பயன்படுத்தும் வகையில் நவீன எரிவாயு தகனமேடை காரைக்குடி நகராட்சி பகுதி, வார்டு எண் 30, காளவாய் பொட்டலில் கட்டி முடிக்கப்பட்டு தற்போது "Karaikudi Modern Gasifier Crematorium Trust" மூலம் இயக்கி பராமரிக்கப்பட்டு வருகிறது. எனவே, அங்கு மின் மயானம் அமைப்பது குறித்த தேவை தற்போது எழவில்லை.

25—

கழிவு நீர்க் கால்வாய்

வினா எண் 25243—திரு. சு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 14-வது வார்டு, வெள்ளைக்குளம் 5-வது தெரு, அப்துல் மஜீத் தெரு, அதாவுல்லா சாயுபு தெரு, 9-வது வார்டு, ரங்கப்பன் நகரில் மூன்று தெருக்கள் மற்றும் 36-வது வார்டு, பஜனை கோவில் சந்து ஆகிய பகுதிகளுக்கு புதியதாக கழிவு நீர்க் கால்வாய் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் நகரம், 14-வது வார்டு, வெள்ளைக்குளம் 5-வது தெரு, அப்துல் மஜீத் தெரு, அதாவுல்லா

2013 அக்டோபர் 28]

சாயுபு தெரு, 36-வது வார்டு, பஜனை கோவில் சந்து ஆகிய பகுதிகளில் கால்வாய்கள் நல்ல நிலையில் உள்ளதால் அப்பகுதிகளில் புதியதாக கழிவு நீர்க் கால்வாய்கள் அமைக்க வேண்டிய அவசியமில்லை. மேலும், 9-வது வார்டு, ரங்கப்பன் நகரில் மூன்று தெருக்களுக்கு மட்டும் கால்வாய் கட்டினால் அதற்கான சேருமிடம் (Disposal Point) இல்லை என்பதாலும், பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த உள்ளதாலும் தற்போது ரங்கப்பன் நகரில் மூன்று தெருக்களுக்கு மட்டும் புதியதாக கால்வாய் அமைக்க இயலாது.

26—

பாலம் அமைத்தல்

வினா எண் 25248—திரு. கு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 13-வது வார்டு, மஸ்ஜித் தெருவிற்கும், வேதாசல முதலி தெருவிற்கும் இடையே உள்ள கழிவு நீர்க் கால்வாய்மேல், பாலம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் நகரம், 13வது வார்டு, மஸ்ஜித் தெருவிற்கும், வேதாசல முதலி தெருவிற்கும் இடையே உள்ள கழிவு நீர்க் கால்வாய்கள் நல்ல நிலையில் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன. எனவே, அதன்மேல் சிறுபாலம் அமைத்தால் மேற்படி கழிவு நீர்க் கால்வாயில் அடைப்பு உண்டாகி, பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படக்கூடும். ஆகவே, அங்கு பாலம் அமைக்க இயலாது.

[2013 அக்டோபர் 28

27—

மண் தூர்வாரி சீரமைத்தல்

வினா எண் 25480—திரு. சு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 11-வது வார்டு, போலாட்சியம்மன் சந்து தெரு மற்றும் மதுரைப் பிள்ளை தெருவின் இருபுறமும் உள்ள கழிவு நீர்க் கால்வாயை தூர்வாரி சீரமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 11-வது வார்டு, போலாட்சியம்மன் சந்து தெரு மற்றும் மதுரைப் பிள்ளை தெருவின் இருபுறமும் உள்ள கழிவு நீர்க் கால்வாய்கள் தற்போது தூர்வாரி சுத்தம் செய்யப்பட்டுள்ளன.

28—

சிறு பாலம் அமைத்தல்

வினா எண் 25495—திரு. சு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 26-வது வார்டு, டாக்டர் அம்பேத்கர் தெரு, மஸ்தி தெரு மற்றும் அன்னை தெரசா தெருக்களில் கல்வெர்ட் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் நகரம், 26-வது வார்டு, டாக்டர் அம்பேத்கர் தெரு, மசூதி தெரு மற்றும் அன்னை தெரசா தெருக்களில் சிறுபாலம் அமைக்க வேண்டிய அவசியம் ஏதும் இல்லை. மேலும், பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த உள்ளதால் தற்போது சிறு பாலம் அமைக்க இயலாது.

29—

தடுப்புச் சுவர்கள் கட்டுதல்

வினா எண் 25496—திரு. சு. ரவி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 6-வது வார்டு பகுதியில் புதியதாக பாலம் அமைத்து தடுப்புச் சுவர்கள் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் நகரம், 6-வது வார்டு பகுதியில் தற்போதுள்ள சிறுபாலம் நல்ல நிலையில் உள்ளதால் புதியதாக கட்டவேண்டிய அவசியம் இல்லை.

30—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 27322—திரு. சு. ரவி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2013 அக்டோபர் 28

(அ) அரக்கோணம் தொகுதி, வடமாம்பாக்கம் ஊராட்சி, மங்கம்மாபேட்டை குளக்கரை பகுதி மற்றும் பழைய ஆதி திராவிடர் காலனியில் புதியதாக 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, வடமாம்பாக்கம் ஊராட்சி, மங்கம்மாபேட்டை கிராமத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம் இயங்கி வருகிறது. மேலும், 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் முடிக்கப்பட்டு சோதனை ஓட்டத்தில் உள்ளது. மேற்கண்ட குடிநீர்த் திட்டங்களே மங்கம்மாபேட்டை மற்றும் குளக்கரை பகுதிக்கு போதுமானது. மங்கம்மாபேட்டை பழைய ஆதி திராவிடர் காலனியில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் நல்லமுறையில் பயனில் உள்ளது. இதுவே இக்குடியிருப்பிற்கு போதுமானது என்பதால், புதிய நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அவசியம் எழவில்லை.

31—

சிறு பாலம் அமைத்தல்

வினா எண் 27379—திரு. சு. ரவி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 24-வது வார்டு, ஏ.பி.எம். சர்ச் தெரு பின்புறம், 5-வது தெருவில் கழிவு நீர்க் கால்வாய் அமைக்கவும், ஒற்றைக்கண் வாராவதி அருகில் கல்வெர்ட் அமைக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 24-வது வார்டு, ஏ.பி.எம். சர்ச் தெரு பின்புறம், 5-வது தெரு ஆகிய பகுதிகளிலுள்ள கழிவு நீர்க் கால்வாய்கள் நல்ல நிலையில் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன. மேலும், பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த உள்ளதாலும் தற்போது கழிவு நீர்க் கால்வாய் மற்றும் ஒற்றைக்கண் வாராவதி அருகில் சிறு பாலம் அமைக்க இயலாது.

32—

சமுதாயக் கூடம்

வினா எண் 28668—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர் மாநகராட்சி, இடுவம்பாளையம், வார்டு எண் 59, குறிஞ்சி நகர் ஆதி திராவிடர் காலனி மற்றும் கண்டமேடு அம்பேத்கர் காலனியிலும் சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாநகராட்சி, வார்டு 59, குறிஞ்சி நகர் ஆதி திராவிடர் காலனி மற்றும் கண்டமேடு அம்பேத்கர் காலனியிலும் சமுதாயக் கூடம் கட்ட ஒவ்வொரு பகுதியிலும், குறைந்த அளவாக 15.24X18.29 மீட்டர் நீள அகலம் கொண்ட காலியிடம் தேவைப்படுகிறது.

மேற்காணும் பகுதியில் சமுதாயக் கூடம் அமைக்க போதிய அளவு இடம் இல்லாததால் தற்போது சமுதாயக் கூடம் கட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

[2013 அக்டோபர் 28

33—

பூங்கா அமைத்தல்

வினா எண் 29668—திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகரில் அரசு குடியிருப்பு அருகில் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உசிலம்பட்டி நகரில் உள்ள அரசு குடியிருப்பு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பராமரிப்பில் உள்ளது. இதன் அருகில் உள்ள காலியிடங்கள் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான கண்மாய் இடமாகும். எனவே, அரசு குடியிருப்புக்கு அருகில் நகராட்சிக்குச் சொந்தமான இடம் ஏதுமில்லை.

34—

கிரயப் பத்திரம் வழங்குதல்

வினா எண் 28326—திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி, 1-வது வட்டம், எம்.ஏ.எம். இராமசாமி குடியிருப்புப் பகுதியில் உள்ள குடிசை மாற்று வாரியம், 44-வது வட்டம், அண்ணா நகர் 1 முதல் 5-வது தெரு, 45-வது வட்டம், கலைஞர் கருணாநிதி நகர் ஆகிய பகுதிகளில் உள்ள குடிசை மாற்று வாரியத்தில் முழுப் பணம் செலுத்தியவர்களுக்கு கிரயப் பத்திரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

1-வது வட்டம், எம்.ஏ.எம். இராமசாமி குடியிருப்புப் பகுதி

எம்.ஏ.எம். இராமசாமி நகர் திட்டப்பகுதி தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட திட்டப் பகுதியாகும். இத்திட்டப் பகுதியில் வாரிய தீர்மான எண் 200, நாள் 27-8-1992-ன்படி திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி புல எண் 100/3பி1 பகுதி ஏரி வகைப்பாடு சார்ந்தது. இந்நிலத்தை வாரியத்தின் பெயரில் நிலமாற்றம் செய்ய அரசு மற்றும் நில நிருவாக ஆணையருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. வாரியத்தின் பெயரில் அரசு நில மாற்றம் செய்த பின்னர் கிரயப் பத்திரம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

44-வது வட்டம், அண்ணாநகர் 1 முதல் 5-வது தெரு

அண்ணாநகர் திட்டப் பகுதி வாரிய தீர்மான எண் 275, நாள் 7-8-1978-ன்படி சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்ட திட்டப் பகுதியாகும். இத்திட்டப் பகுதி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான பெரம்பூர் கிராமம், புல எண் 786/2 பகுதி மற்றும் 787-ல் அமைந்துள்ளது. இந்நிலத்தினை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு நிலக் கிரயம் செலுத்தி நில ஒப்படை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடமிருந்து நில ஒப்படை பெறப்பட்ட பின்னர் கிரயப் பத்திரம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கலைஞர் கருணாநிதி நகர்

கலைஞர் கருணாநிதி நகர் திட்டப் பகுதி, வாரிய தீர்மான எண் 108, நாள் 9-4-1991-ன்படி தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டப் பகுதியாகும். இத்திட்டப் பகுதிக்கான மனைப்பிரிவு வரைபடம் MMDA/TNUDP/SI/AW/A&D No. 14/91/PPD/LO No.47/91, நாள் 1-8-2012-ன்படி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. திருத்திய மனைப்பிரிவு வரைபடத்தின்படி தகுதிப் பட்டியல் தயார் செய்து, ஒதுக்கீடு வழங்கி, பின்னர் கிரயப் பத்திரம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

[2013 அக்டோபர் 28

35—

குடியிருப்புகள் சீரமைத்தல்

வினா எண் 28350—திரு. கு. நல்லதம்பி: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எழும்பூர் தொகுதி 104-வது வட்டம், ஆர்.கே.புரம் பகுதியிலுள்ள தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

இராதாகிருஷ்ணபுரம் (ஆர்.கே.புரம்) திட்டப் பகுதியில் குடிசை மாற்று வாரிய அடுக்குமாடிக் குடியிருப்புகளில் அவ்வப்போது பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்சமயம், இத்திட்டப் பகுதியில் ரூ.3.35 இலட்சம் செலவில் படிக்கட்டுகள், பூச்சுவேலை மற்றும் இதர பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளன. இப்பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

36—

சாலை ஓரங்களில் மரம் நடுதல்

வினா எண் 2312—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரில் சாலை ஓரங்களில் மரங்கள் நட செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?"

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகரில் சாலை ஓரங்களில் சுமார் 926 மரக்கன்றுகள் நட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2013 அக்டோபர் 28]

37—

நெடுஞ் சாலையாக மாற்றுதல்

வினா எண் 3737—திருமதி க. அழகுவேலு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதி, தியாக துருகம்-உதயமாம்பட்டு தென் சிறுவன்னூர்-கீழ்குப்பம் மற்றும் பொறச்சகுறிச்சி-மலைக்கோட்டாலம் ஆகிய ஊராட்சி ஒன்றிய சாலைகளை நெடுஞ்சாலைகளாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம்-உதயமாம்பட்டு தென் சிறுவன்னூர்-கீழ்குப்பம் மற்றும் பொறச்சகுறிச்சி-மலைக்கோட்டாலம் ஆகிய ஊராட்சி ஒன்றிய சாலைகளை நெடுஞ்சாலைகளாக மாற்ற சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

38—

தார்ச்சாலையாக மாற்றுதல்

வினா எண் 7786—திரு. சு. பவுன்ராஜ்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொறையார் முதல் பெரம்பூர் வரை உள்ள நெடுஞ்சாலையை தார்ச்சாலையாக மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

பொறையார்-பெரம்பூர் சாலை, நெடுஞ்சாலைத் துறை, நாகப்பட்டினம் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டத்தில் பராமரிக்கப்பட்டு வரும் மாவட்ட முக்கிய சாலையாகும். இச்சாலை இடைவழித்தடம் கொண்ட தார்சாலையாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

[2013 அக்டோபர் 28

39—

சாலை சீரமைத்தல்

வினா எண் 7788—திரு. கு. பவுன்ராஜ்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில், நல்லாடை சாலையில் பழுது ஏற்பட்டுள்ளதால் சாலையைச் சீரமைத்துத் தர அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில், நல்லாடை சாலை நாகப்பட்டினம் கோட்டத்தினால் பராமரிக்கப்பட்டு வரும் மாநில நெடுஞ்சாலை (எஸ்.எச்.149) கி.மீ.0/0-4/9 ஆகும். இவற்றில் கி.மீ.2/4-8/9 முடிய 6.5 கி.மீ. நீளம் பல கட்டங்களாக கீழ்க்கண்டவாறு பராமரிப்பு செய்யப்பட்டுள்ளது:

i) கி.மீ.4/6-6/4 மற்றும் கி.மீ.8/0-8/9 2010-2011 ஆம் ஆண்டின் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணி செய்யப்பட்டுள்ளது.

ii) கி.மீ.2/4-4/6 முடிய 'தானே' புயல் 2011-2012 ஆண்டு நிவாரணப் பணியில் ரூ.94 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணி செய்யப்பட்டுள்ளது.

iii) கி.மீ.6/4-8/0 வரை 2012-2013 திட்டம்சாரா பணிகளின் தலைப்பில் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் தனிச்சீர் வேலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய கி.மீ.5/4 நீளமுள்ள சாலை நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

2013 அக்டோபர் 28]

40—

சாலையைப் பராமரித்தல்

வினா எண் 11516—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி-சேதுபாவாசத்திரம் சாலையிலிருந்து பிரிந்து செல்லும் அன்னவாசல்-சித்தன்னவாசல் சாலையைப் பராமரிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முசிறி-சேதுபாவாசத்திரம் சாலையிலிருந்து பிரிந்து செல்லும் அன்னவாசல்-சித்தன்னவாசல் சாலை 2011-2012 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் (ODR-SCP) கீழ் ரூ.277.00 இலட்சம் மதிப்பில் மேம்பாட்டுப் பணிகள் முடிக்கப்பட்டு சாலை நல்ல நிலையில் பராமரிக்கப்படுகிறது.

41—

புறவழிச் சாலை

வினா எண் 20884—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி நகரில் திருவாரூர்-நாகப்பட்டினம் சாலையை இணைக்கும் புறவழிச் சாலைப் பணிகளைத் துவக்க அரசு முன்வருமா?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி நகரில் திருவாரூர்-நாகப்பட்டினம் சாலையை இணைக்கும் வகையில் 2.460 கி.மீ. நீளத்திற்கு கி.மீ.0/0-1/300 வரை புறவழிச் சாலை அமைக்க ரூ.385 இலட்சத்திற்கும் மற்றும் கீ.மீ.1/300-2/460 வரை புறவழிச் சாலை அமைக்க ரூ.365 இலட்சத்திற்கும் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. நில எடுப்பில் கோயில் நிலங்கள் உட்படுவதால், இந்து சமய அறநிலையங்கள் துறையின் அனுமதி கிடைக்கப் பெற்றதும் பணி விரைவில் தொடங்கப்படும்.

42—

சாலை பராமரிப்பு

வினா எண் 24993—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, முசிறி, சேதுபாவாசத்திரம் சாலை SH.71-ல் அன்னவாசல்-சித்தன்னவாசல் செல்லும் சாலையை பராமரிப்பு செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, முசிறி-சேதுபாவாசத்திரம் சாலை இரு சாலைகளை உள்ளடக்கியதாகும். முசிறி-குளித்தலை-புதுக்கோட்டை-ஆலங்குடி-பேராவூரணி-சேதுபாவாசத்திரம் சாலை கி.மீ.80/6-83/2 (அகலம் 7.00 மீ.) உள்ள மாநில நெடுஞ்சாலை எண் 71, 2011-2012 ஆம் ஆண்டின் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்

2013 அக்டோபர் 28]

கீழ் மேம்பாடு செய்யப்பட்டு நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஜெய்னர் குகை சாலை கி.மீ.0/0-1/6 (3.75மீ) வரையான மாவட்ட இதர சாலை 2010-2011 ஆம் ஆண்டின் தனிச்சீர் பணியின் கீழ் மேற்கொள்ளப்பட்டு நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

43—

புதிய பாலம் கட்டுதல்

வினா எண் 27486—திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, கொப்பம்பட்டி-கொத்தம்பட்டிக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் கொத்தம்பட்டிக்கு அருகில் சாலையின் குறுக்கே உள்ள குழாயை அகற்றி புதிய பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) துறையூர் தொகுதி, கொப்பம்பட்டி-கொத்தம்பட்டிக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் கொத்தம்பட்டிக்கு அருகில் சாலையின் குறுக்கே உள்ள குழாயை அகற்றி புதிய பாலம் கட்ட தற்போது அரசிடம் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை. ஆனால் வரும் நிதியாண்டுகளில் முன்னுரிமை அடிப்படையில் ஏதாவது திட்டப் பணிகளின்கீழ் இப்பணியை மேற்கொள்ள தக்கவாறு பரிசீலிக்கப்படும்.

44—

மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 29244—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) சேலம் 5 ரோடு மேம்பாலம், ஏ.வி.ஆர். ரவுண்டானா மேம்பாலம் மற்றும் குரங்குசாவடி மேம்பாலம் கட்டும் பணிகளைத் துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் 5 ரோடு மேம்பாலம், குரங்குசாவடி மேம்பாலம் கட்டும் பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. ஏ.வி.ஆர். ரவுண்டானா சாலைப் பகுதி, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் பராமரிப்பில் உள்ளதால் மாநில அரசால் மேம்பாலம் அமைக்க தற்போது இயலாது.

45—

துறைமுகம் அமைத்தல்

வினா எண் 30312—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் துறைமுகம் அமைக்க மத்திய அரசிடமிருந்து பரிந்துரை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் துறைமுகம் அமைப்பது தொடர்பாக மத்திய அரசிடமிருந்து பரிந்துரை ஏதும் அரசால் பெறப்படவில்லை.

2013 அக்டோபர் 28]

46—

நிலம் கையகப்படுத்துதல்

வினா எண் 9434—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழவேற்காடு ஏரி-புதுச்சேரி உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து அமையும் போது, கழிமுகப் பகுதிகளில் தூர்வாரவும் பாலங்கள் அமைத்து பட்டா நிலங்கள் கையகப்படுத்தப்படவும் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பக்கிங்காம் கால்வாய், பழவேற்காடு ஏரி முதல் மரக்காணம் (புதுச்சேரி) நீர்வழிப் போக்குவரத்து அமையும்போது கழிமுகப் பகுதிகளை முழுமையாக அகலப்படுத்தி, தூர்வாரி அனைத்து மேட்டுப்பகுதிகளையும் அப்புறப்படுத்தி, தேவைக்கேற்ப பாலங்கள் அமைக்கப்படும். பொதுப் பணித் துறைக்கு சொந்தமான இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் இருப்பின், மாற்று ஏற்பாடு வழங்கி அப்புறப்படுத்தி, கால்வாய்கள் முழுமையாக தூர்வாரப்படும். இத்திட்டத்தின்மூலம் பட்டா நிலங்கள் கையகப்படுத்தும் உத்தேசம் ஏதுமில்லை.

47—

குளம் தூர்வாருதல்

வினா எண் 11522—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ விராலிமலை தொகுதி, பாக்குடியில் பெரிய குளத்தை தூர்வாரி பராமரிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஒன்றியம், பாக்குடி ஊராட்சி, பாக்குடி பெரிய குளத்தை வரும் நிதியாண்டில் பராமரிப்புப் பணிகளுக்காக ஒதுக்கப்படும் நிதியில், முன்னுரிமை கொடுத்து மராமத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

48—

கலிங்கியைப் பராமரித்தல்

வினா எண் 11524—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ விராலிமலை தொகுதி, தோவூர்மேட்டுப்பட்டி ஊராட்சி, மாதிராப்பட்டியில் மாதிராக்குளம் கலிங்கியைப் பராமரிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை தொகுதி, மாதிராப்பட்டி மாதிராக்குளத்தின் பழுதடைந்துள்ள கலிங்கியை சரிசெய்ய ரூ.3.50 இலட்சத்திற்கு மதிப்பீடு

2013 அக்டோபர் 28]

தயாரிக்கப்பட்டுள்ளது. கலிங்கியை சரிசெய்ய வரும் நிதியாண்டில் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து முன்னுரிமை கொடுத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

49—

நீர் ஆதார அமைப்புகள்

வினா எண் 14014—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ திருநெல்வேலி மாவட்டம், ஹனுமா நதி/ நம்பியாறு நதியில் நீர் ஆதார அமைப்புகளை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஹனுமா நதியினைச் சீரமைக்க ரூ.533.26 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உலக வங்கி நிதியுதவியுடன் அனைத்துப் பணிகளும் முடிவுற்றுள்ளன. நம்பியாறு நதியில் நீர் ஆதார அமைப்புகளை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

50—

மணல் குவாரி

வினா எண் 21116—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ விளவங்கோடு தொகுதி, களியக்காவிளை, பளுகல், பனிச்சமூடு ஆகிய இடங்களில் மணல் (குவாரி) வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு தொகுதி, களியக்காவிளை, பளுகல், பனிச்சமூடு ஆகிய இடங்களில் மணல் குவாரி அமைக்க வாய்ப்பில்லை.

51—

மேல்மட்டக் கால்வாய் அமைத்தல்

வினா எண் 27147—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ இராமநதி நீர்த் தேக்கத்தின் உபரி நீரை நாராயணப்பேரி மேல்மட்டக் கால்வாய் அமைத்து ஐம்புநதி பகுதிகளுக்குக் கொண்டு செல்லும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், இராமநதி நீர்த்தேக்கத்தின் உபரி நீரை இராமநதி நீர்த்தேக்கத்திலிருந்து ஐம்புநதி பாசனப் பகுதிகளுக்குக் கொண்டு சென்று, பின் பத்மநாபபேரி குளத்திலிருந்து புங்கன்குளம் வரை புதிய கால்வாய் அமைக்கும் திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.887.00 இலட்சத்திற்கு (2011-2012 ஆம் ஆண்டு விலை விகிதப்படி) தயாரிக்கப்பட்டு துறையின் பரிசீலனையில் உள்ளது.

52—

பாசன நீர்

வினா எண் 29081—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2013 அக்டோபர் 28]

(அ) கன்னியாகுமரி மாவட்டம், நெய்யாறு இடதுகரைக் கால்வாயில் வேளாண்மைக்காக தண்ணீர் திறந்து விட கேரள அரசை வலியுறுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நெய்யாறு பாசனத் திட்டம், முதல் கட்டம் மற்றும் இரண்டாம் கட்டம் ஆகியவை கேரள அரசால் திட்டமிடப்பட்டு கட்டி முடிக்கப்பட்டது. 1956 ஆம் ஆண்டைய மாநிலங்களைத் திருத்தியமைக்கும் சட்டத்தின் (State Reorganisation Act, 1956) விளைவாக, விளவங்கோடு வட்டத்தில் உள்ள 9,200 ஏக்கர் பாசனப் பரப்பு, தமிழ்நாட்டின் கன்னியாகுமரி மாவட்டத்தில் இணைந்தது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்படி மத்திய அரசு மற்றும் கேரள அரசின் இசைவோடு, மேற்கூறிய விவசாய நிலங்களுக்கு, பாசன வசதிக்காக கால்வாய்ப் பணிகளை தமிழ்நாடு அரசு செய்தது. இத்திட்டம் 1965 ஆம் ஆண்டிலிருந்து செயல்பாட்டில் இருக்கிறது. தமிழ்நாட்டில் அமைந்துள்ள இப்பகுதிக்கு நெய்யாறு இடதுபுறக் கால்வாய்மூலம் கேரள அரசு முறையாக தண்ணீர் அளித்த போதிலும், அதனுடைய பாசனத் தேவையான 150 கன அடி நீரைவிட குறைவாகவே தந்தது. இருப்பினும், பிப்ரவரி 2004 முதல் தண்ணீர் அளிப்பதை கேரள அரசு அறவே நிறுத்தி விட்டது. இருப்பினும், தமிழ்நாடு நெய்யாறு அணையிலிருந்து நீர் பெற கேரள நீர்ப்பாசன மற்றும் நீர் பாதுகாப்புச் சட்டம், 2003-ன் பிரிவின்படி ஓர் ஒப்பந்தம் செய்ய வேண்டும் என்று கேரள அரசு வலியுறுத்துகிறது. நெய்யாறு ஒரு பன்மாநில நதி என தமிழ்நாடு கருதுவதால், தமிழ்நாடு அரசுக்கு இந்தச் சட்டத்தின்படி ஒப்பந்தம் செய்ய வேண்டும் என்பது ஏற்புடையதாக இல்லை. தமிழக அரசு, கேரள அரசுக்கு 20-4-2012 அன்று அனுப்பிய கடிதத்தில், கேரள அரசின் சட்டம், அதாவது "கேரள நீர்ப்பாசன மற்றும் நீர் பாதுகாப்புச் சட்டம், 2003"-ன் பிரிவு 30 இத்திட்டத்திற்குப் பொருந்தாது எனவும், 1956 ஆம் ஆண்டைய மாநிலங்களைத் திருத்தியமைக்கும் சட்டத்தின்படி,

[2013 அக்டோபர் 28

தமிழ்நாட்டுடன் சேர்க்கப்பட்டுள்ள விளவங்கோடு வட்டத்திலுள்ள 9,200 ஏக்கர் பாசன நிலத்திற்கு நெய்யாறு ஆற்றிலிருந்து தொடர்ந்து பாசன வசதி கிடைக்கப் பெறவேண்டும் என்று கோரியதுடன் ஒப்பந்தம் ஏற்படுவதற்காகக் காத்திராமல், தமிழ்நாட்டிற்கு நெய்யாறு ஆற்றிலிருந்து நீரை அளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. எவ்வித உடன்பாட்டிற்கும் கேரள அரசு உடன்படாததாலும், மத்திய அரசு இப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டி பலமுறை தொடர்பு கொள்ளப்பட்டும், சாதகமான பதில் வரப்பெறாத நிலையிலும், தமிழ்நாடு அரசு 30-5-2012 அன்று உச்ச நீதிமன்றத்தில், ஒரு சிவில் வழக்கு (Original Suit) தொடர்ந்து உள்ளது. இவ்வழக்கில், தாக்கல் செய்யப்பட்டுள்ள இடைக்கால மனுவில், சிவில் வழக்கு முடிவடைவதை எதிர்நோக்கி (Pending disposal of Suit), கேரள அரசு, நெய்யாறு அணையிலிருந்து தண்ணீரை தமிழ்நாட்டிற்கு அளிக்க உத்தரவிட வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றம் இவ்வழக்கை விரைவில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

53—

புதிய சி.சி. தளம் அமைத்தல்

வினா எண் 16975—திருமதி ர. சுபா: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஒன்றியம், கிழக்கு இராஜபாளையம், மாரியம்மன் கோயில் முன்பு சி.சி. தளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம், கிழக்கு இராஜபாளையம், அருள்மிகு திருமாலீஸ்வரர் வகையறா

2013 அக்டோபர் 28]

திருக்கோயில்களில் ஒன்றான அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை ஆளுகையின் கீழுள்ள பட்டியலைச் சாராத திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிருவாகம் வடசென்னிமலை அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில் செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலின் முன்புறமும் மற்றும் திருக்கோயிலைச் சுற்றிலும் தேவையான அளவு சி.சி. தளம் சுற்றிவர அமைக்கப்பட்டுள்ளது. திருக்கோயிலுக்கும் திருக்கோயில் நுழைவு வாயில் மதில்சுவருக்கும் இடையில் சிறிய மண்தரை உள்ளது. அதில் கி.சி. தளம் அமைக்க இயலாத நிலை உள்ளது. மேலும், திருக்கோயிலில் நிதி வசதி இல்லாததாலும், திருக்கோயிலுக்கு போதிய அளவில் பக்தர்கள் வருகை தராத நிலையிலும், திருக்கோயில் சிறிய கிராமப் பகுதியில் அமைந்துள்ளதாலும் தற்போது புதியதாக சி.சி. தளம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

54—

திருக்கோயில் நிலத்தினை மின் துறைக்கு வழங்குதல்

வினா எண் 28663—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், நல்லூர் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க நல்லூர் பவளக்கொடி அம்மன் திருக்கோயில் நிலத்தினை மின் துறைக்கு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், நல்லூர் கிராமம், அருள்மிகு பவளக்கொடி அம்மன் திருக்கோயில் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை உதவி ஆணையர்

[2013 அக்டோபர் 28

ஆளுகைக்குட்பட்ட பட்டியலில் சேராத திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு வால்பாறை நகர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் செயல் அலுவலர் தக்காராக உள்ளார். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமாக க.ச. எண்.330/1 மற்றும் 330/3 சாலைகளில் மொத்தம் 5.00 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் 2.60 ஏக்கர் நிலத்தினை மின்சார வாரியம் விற்பனைக்கு வழங்கக் கேட்டுள்ளது. இந்நில விற்பனை தொடர்பாக, கோயம்புத்தூர் மாவட்ட வருவாய் அலுவலரிடம் விவரம் கேட்கப்பட்டுள்ளது. மாவட்ட வருவாய் அலுவலரிடம் சந்தை மதிப்பு விவரம் பெறப்பட்டதும், சந்தை மதிப்பு மற்றும் 1-4-2012-க்குப் பின்பு உள்ள வழிகாட்டி மதிப்பு இவற்றில் எது கூடுதலாக உள்ளதோ, அம்மதிப்பீட்டுத் தொகையில் 150% தொகை நில விற்பனைத் தொகையாக நிர்ணயம் செய்யப்படும். இத்தொகைக்கு கேட்புத் துறை இசைவளிக்கும் பட்சத்தில் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப் பிரிவு 34-ன்கீழ் நடவடிக்கை எடுத்து அரசு அனுமதியுடன் நில விற்பனை பரிசீலிக்கப்படும்.

55—

சித்தருக்கு கோயில் கட்டுதல்

வினா எண் 29475—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, வேலம்மாவலசு, சூரியமலையிலுள்ள கொங்கணி சித்தருக்கு கோயில் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி-எடப்பாடி சாலையில் வேலம்மாவலசு கிராமத்தில் உள்ள சூரிய மலையில் கொங்கணி சித்தர் குகை உள்ளது. மலைக்குன்றின் மீது அமைந்துள்ள இக்குகையில் கொங்கணி சித்தர் வாழ்ந்ததாக

2013 அக்டோபர் 28]

நம்பப்படுவதால் இவ்விடத்தில் பொதுமக்கள் வழிபாடு செய்வது வழக்கமாக உள்ளது. கற்சிலைகள் மற்றும் உற்சவ மூர்த்திகள் ஏதுமில்லை. இத்திருக்கோயில் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயிலாகும். இக்குகையில் எவ்வித மாற்றமோ, கட்டுமானமோ மேற்கொள்ளக் கூடாதென தொல்லியல் துறையினரால் அறிவிப்புப் பலகை வைக்கப்பட்டுள்ளது. எனவே, கொங்கணி சித்தருக்கு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறைமூலம் கோயில் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

56—

சுகாதார சீர்கேட்டை அகற்றுதல்

வினா எண் 29516—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், கோட்டை மாரியம்மன் கோயிலின் உட்புறம் மற்றும் வெளிப்புற பகுதிகளிலுள்ள அனைத்து சுகாதார சீர்கேட்டை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சேலம் வட்டம் மற்றும் நகர், அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை கட்டுப்பாட்டின்கீழ் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் நிருவாகம் முதல் நிலை செயல் அலுவலராலும், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை, சேலம் உதவி ஆணையரால் தக்கார் நிலையிலும் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலின் உள்பிரகாரம், வெளிப்பிரகாரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் திருக்கோயில் பணியாளர்களைக் கொண்டு தூய்மை செய்யப்பட்டு வருகிறது. திருக்கோயிலின் வெளிப்புற பகுதிகளை சுத்தப்படுத்திட, அவ்வப்போது சேலம் மாநகராட்சிக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டு சுத்தப்படுத்தப்பட்டு வருகிறது.

[2013 அக்டோபர் 28

57—

போதிய நீர் நிரப்புதல்

வினா எண் 29545—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, அரசிராமணி கிராமம், வெள்ளூற்றுப் பெருமாள் கோயிலுக்கு கூடுதல் ஆழ்துளைக் கிணறு அமைத்து, குளத்தில் போதிய நீர் நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, அரசிராமணி கிராமம், வெள்ளூற்றுப் பெருமாள் திருக்கோயில் இந்து சமய அறநிலையங்கள் துறை ஆளுகையின்கீழ் உள்ள பட்டியலில் சேராத, உதவித் தொகை நிர்ணயம் செய்யப்படாத சிறிய திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயில் நிருவாகம் எடப்பாடி நகர், அருள்மிகு பிரசன்ன நஞ்சுண்டேஸ்வரர் திருக்கோயில் செயல் அலுவலரால் தக்கார் நிலையில் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்குச் சொந்தமாக 25X25 சதுர அடி அளவுள்ள குளம் உள்ளது. இக்குளத்திற்கு தேவண்ண கவுண்டனூர் பஞ்சாயத்துமூலம் சுமார் 8 ஆண்டுகளுக்கு முன் ஆழ்துளை குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு, நீர் செலுத்தப்பட்டு வருகிறது. தற்சமயம் இக்குளத்தில் நீர் குறைவாக உள்ளது. கோயில் அமைந்துள்ள அரசிராமணி பஞ்சாயத்து நிருவாகம்மூலம் புதியதாக ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைக்க, நீர்வளம் பரிசோதனை செய்யப்பட்டு பஞ்சாயத்து பொது நிதிமூலம் ஆழ்துளை குழாய்க் கிணறு அமைக்க மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, அரசிராமணி டவுன் பஞ்சாயத்து பொறியியல் பிரிவு பரிசீலனைக்கு பஞ்சாயத்து நிருவாகம்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே, இத்திருக்கோயிலுக்குக் கூடுதல் ஆழ்துளைக் கிணறு அமைப்பது தொடர்பாக இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறைமூலம் தற்போது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அவசியம் எழவில்லை.

2013 அக்டோபர் 28]

58—

கோபுரக் கலசங்கள் திருட்டு

வினா எண் 29555—திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயில்களில் கோபுரக் கலசங்களின் திருட்டைத் தடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை ஆளுகையின் கீழுள்ள திருக்கோயில்களில் விலை மதிப்பில்லாப் பொருட்களான சிலைகள், விக்கிரகங்கள், ஆபரணங்கள், உண்டியல் மற்றும் இதர இனங்களைப் பாதுகாக்க களவு எச்சரிக்கை மணி, கண்காணிப்புக் கேமரா, கோள் சொல்லிக் கடிகாரம் ஆகியவை பொருத்தியும், பகல் மற்றும் இரவுக் காவலர் நியமனம் செய்யப்பட்டும், அவ்வப்போது காவல் துறையுடன் பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டு அதன்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் வருகிறது. ஆள் அரவமற்ற பகுதிகளில் அமைந்துள்ள திருக்கோயில்கள் உள்ள இடங்களில் காவலர் ரோந்து, தெரு விளக்குகள் வைப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பாதுகாப்பு பலப்படுத்துவதற்கென துறைத் தலைவரால் சுற்றோட்டக் குறிப்புகள் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன. கள்வர் எச்சரிக்கை மணி பொருத்துவதற்கு வசதியில்லாத திருக்கோயில்களுக்கு நிதியுதவி வழங்குவதற்காக ரூ.5.00 கோடி வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டு, இதிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 87 திருக்கோயில்களுக்கு ரூ.12,70,664/- நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. திருக்கோயில்கள் பாதுகாப்பு குறித்துத் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2013 அக்டோபர் 28

59—

ஆக்கிரமிப்பு நிலத்தை மீட்டல்

வினா எண் 7979—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, புல்லுக்காட்டுவலசை கிராமச் சாலையில் ஆக்கிரமிப்பு நிலத்தை மீட்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேற்படி இடமானது நெடுஞ்சாலைத் துறை பராமரிப்பில் இருந்து வருவதால் தென்காசி கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) அறிவுறுத்தப்பட்டுள்ளார். மேலும் மாதம்தோறும் நடைபெறும் ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் தொடர்பான வழிகாட்டுதல் குழுக் கூட்டத்திலும் இந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது.

60—

வட்டாட்சியர் அலுவலகம்

வினா எண் 12236—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆம்பூரில் வட்டாட்சியர் அலுவலகம் கட்டும் பணியின் தற்போதைய நிலை என்ன?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், சோலூர் கிராமம், ச.எண்.17/3 கிராம நத்தம், புறம்போக்கு விஸ்தீரணம்

2013 அக்டோபர் 28]

3.16.0 ஹெக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டு மேற்படி ச.எண் கிராம நத்தமானது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலரால் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட நபர்கள் வீடு எதுவும் கட்டப்படாமல் இருந்ததால், அவ்விடத்தில் வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்து, பிரேரணை தயார் செய்யப்பட்டு, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகத்தில் உள்ளது. பிற்படுத்தப்பட்டோர் இன மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க ச.எண். 104/4-இல் 4.28.0 ஹெக்டேர் தீர்வை ஏற்படாத தரிசு இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

61—

குத்தகைத் தொகை உயர்த்துதல்

வினா எண் 12241—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உப்பள நிலங்களை குத்தகைக்கு விடும் தொகையை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எண்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உப்பள நிலங்களைக் குத்தகைக்கு விடும் தொகையை உயர்த்துவது தொடர்பாக அரசு பரிசீலனை செய்து வருகிறது.

62—

குறைபாடுகளை நிவர்த்தி செய்தல்

வினா எண் 12243—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு நிலங்களை வேளாண்மை அல்லாத பிற நோக்கங்களுக்காக பிற துறைகளுக்கு குத்தகைக்கு விடப்படும்

[2013 அக்டோபர் 28

நேர்வுகளில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குத்தகைக்கு விடப்படும் நேர்வுகளில் உள்ள குறிப்பான குறைபாடுகள் என்ன என்று தெரிவிக்கவில்லை. எனவே, குத்தகைக்கு விடப்படும் நேர்வுகளில் உள்ள குறைபாடுகள் என்ன என்பதை குறிப்பாகத் தெரிவிக்கும்பட்சத்தில் அதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

63—

ஆக்கிரமிப்புகள் அகற்றுதல்

வினா எண் 15169—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணிக்கு பெரிய நீர் ஆதாரமான பையூர் ஏரியின் ஆக்கிரமிப்புகளை அகற்றிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, பையூர் ஏரியில் சுமார் 300 குடும்பங்கள் வீடு கட்டி ஆக்கிரமிப்பு செய்து சுமார் 50 வருடங்களுக்கு மேலாக குடியிருந்து வருகின்றனர். ஆக்கிரமிப்புகளை அகற்ற பொதுப் பணித் துறையினர்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது

64—

நில ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

வினா எண் 15372—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

(அ) தென்காசியிலிருந்து மதுரை வரை செல்லும் மங்கம்மாள் சாலையில் தென்காசி நகரின் வடக்குப் பகுதி முதல் அகரக்கட்டு வரையுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சம்பந்தப்பட்ட இடம் நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் இருந்து வருவதால், ஆக்கிரமிப்புகளை அகற்ற தென்காசி கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைகள் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) அறிவுத்தப்பட்டுள்ளார். மேலும், மாதந்தோறும் நடைபெறும் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் தொடர்பான வழிகாட்டுதல் குழுக் கூட்டத்திலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

65—

ஆக்கிரமிப்புகள் அகற்றுதல்

வினா எண் 15373—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குற்றாலத்தில் உருவாகி தென்காசி வரை பாயும் சிற்றாறு நீரை சுற்றுலாப் பயணிகள், நகர மக்கள் பயன்படுத்தும் வகையில் யானைப்பாலம் முதல் அணைப்பகுதி வரையுள்ள ஆக்கிரமிப்பை அகற்றிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சம்பந்தப்பட்ட இடம் தென்காசி சிற்றாறு வடிநில கோட்ட (நீர்வள ஆதார அமைப்பு/பொதுப் பணித் துறை) செயற்பொறியாளர் பராமரிப்பில் வருவதால், மேற்படி துறையினரை ஆக்கிரமிப்புகளை அகற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், மாதந்தோறும் நடைபெறும் ஆக்கிரமிப்பு அகற்றுதல் தொடர்பான வழிகாட்டுதல் குழுக் கூட்டத்திலும் ஆக்கிரமிப்புகளை அகற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது.

[2013 அக்டோபர் 28

66—

ஆக்கிரமிப்புகள் அகற்றுதல்

வினா எண் 17114—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை வட்டம், செய்களத்தூரில் தனியார் ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை வட்டம், செய்களத்தூரில் தனியார் ஆக்கிரமிப்புகளை ஒருமாத காலத்திற்குள் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

67—

ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

வினா எண் 18105—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை வட்டாட்சியர் அலுவலகம் அருகில் உள்ள உடைகுளம் கண்மாயை ஆக்கிரமித்து வழங்கியுள்ள பட்டாக்களை இரத்து செய்து, ஆக்கிரமிப்புகளை அகற்றிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை, உடைகுளம் கண்மாய்க்கு மேற்குப் பகுதியில் செய்களத்தூர் குரூப்பில் சர்க்கார் புன்செய்யில் வீடு கட்டி செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. உடைகுளம் கண்மாயில் வீட்டுமனை பட்டாவோ அரசு நன்செய், புன்செய்

2013 அக்டோபர் 28]

புறம்போக்குகளில் பட்டாக்களோ ஏதும் வழங்கப்படவில்லை. உடைகுளம் கண்மாயில் வீடு கட்டி யாரும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை.

68—

நிலம் கையகப்படுத்துதல்

வினா எண் 18148—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சியில் தனியார் ஆக்கிரமிப்பு செய்துள்ளதைத் தடுத்து பேரூராட்சிக்குச் சொந்தமான இடத்தை மீண்டும் பேரூராட்சி வசம் கையகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை பேரூராட்சிக்கு சொந்தமான இடங்கள், சாலை மற்றும் தெருக்களில் நிரந்தர ஆக்கிரமிப்புகள் ஏதுமில்லை. மேற்படி இடங்களில் தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகள் பேரூராட்சி நில அளவையர் மூலம் அளவீடு செய்து முடிக்கப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைத் துறை மற்றும் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற சம்பந்தப்பட்ட துறைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

69—

ஆக்கிரமிப்புகள் அகற்றுதல்

வினா எண் 18150—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், கே.கே. பள்ளம், அரசு புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை சட்டமன்றத் தொகுதி, கே.கே. பள்ளம் குரூப் புல எண் 252/2, 256/2, 256/3, 256/7, 258/7 மற்றும் 252/1 ஆகிய புலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் தொடர்பாக சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் 1A.154/12 O.S.49/2012 வழக்குகள் தொடரப்பட்டு, நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ளன. நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் மேல்நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

70—

ஆக்கிரமிப்புகள் அகற்றுதல்

வினா எண் 18230—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி நகராட்சி, சூரியகுளம் மேற்குப் பகுதியில் ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி வட்டம், ஆரணி நகராட்சி, சூரிய குளம் மேற்குப் பகுதியில் சுமார் 45 குடும்பங்கள் வீடு கட்டி ஆக்கிரமிப்பு செய்து சுமார் 25 வருடங்களுக்கு மேலாக குடியிருந்து வருகின்றன. ஆரணி நகராட்சி மூலம் ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

71—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 18245—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதியில் கோயில் நிலம், மந்தை புறம்போக்கு, மேய்ச்சல் நிலம் ஆகிய இடங்களில் ஐந்து ஆண்டுகளாகக்

2013 அக்டோபர் 28]

குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் வட்டம், பல்லடம் தொகுதியில் ஐந்து ஆண்டுகளாகக் குடியிருப்பவர்கள் கோயில் நிலம், மந்தைப் புறம்போக்கு மற்றும் மேய்ச்சல் என வகைப்பாடு செய்யப்பட்ட நிலங்களில் குடியிருந்து வருவதால், நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி வீட்டுமனைப் பட்டா வழங்க வழிவகைகள் இல்லை.

72—

ஆக்கிரமிப்புகள் அகற்றுதல்

வினா எண் 18287—திரு. சு. ரவி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், மாங்காட்டுசேரி ஊராட்சி, மாங்காட்டுசேரி அருந்ததிபாளையம்-எடைகண்டிகை வரை சாலை ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் வட்டம், நெமிலி ஒன்றியம், மாங்காட்டுசேரி ஊராட்சி, அருந்ததிபாளையம்—எடைகண்டிகை வரை செல்லும் சாலையில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு தற்போது சாலை விரிவுபடுத்தும் பணி நடந்து கொண்டிருக்கிறது.

[2013 அக்டோபர் 28

73—

ஆக்கிரமிப்புகள் அகற்றுதல்

வினா எண் 18530—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விளவங்கோடு தொகுதி, உண்ணாமலைக்கடை முதல் என்.எச்.47-ல் களியக்காவிளை வரை ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு தொகுதி, உண்ணாமலைக்கடை பம்மம் முதல் களியக்காவிளை வரையுள்ள தேசிய நெடுஞ்சாலையின் ஓரத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை நெடுஞ்சாலைத் துறைமூலம் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

74—

ஆக்கிரமிப்புகள் அகற்றுதல்

வினா எண் 20258—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மகுடஞ்சாவடி ஒன்றியம், சங்ரி தொகுதி, கண்டர்குல மாணிக்கம் கிராமம் புறம்போக்கு சர்வே எண் 137/2-ல் உள்ள தனியார் ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்ரி வட்டம், கண்டர்குல மாணிக்கம் கிராமம் ச.எண்.137/2 விஸ்தீரணம் 0.75.5 ஹெக்டேர் ஏர்ஸ் நிலம்

2013 அக்டோபர் 28]

தீர்வை ஏற்படாத தரிசு குன்று என "அ" பதிவேட்டில் வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிலத்தில் தற்போது ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை.

75—

ஆக்கிரமிப்புகள் அகற்றுதல்

வினா எண் 20789—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் தொகுதி, திருப்புலானி ஒன்றியம், மேலமடையில் குழந்தைகள் விளையாட்டு மைதானத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் வட்டம், கீழக்கரை உள்வட்டம், வேளானூர் குரூப், மேலமடை கிராமத்தில் நத்தம் புல எண் 325/23-ல் 0.0701.0 ச.மீ. பரப்பளவில் மேலமடை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி உள்ளது. பள்ளிக்கு தனியாக விளையாட்டு மைதானம் இல்லை. மேலும், மேலமடை கிராமத்தின் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியின் எதிரில் கிழக்குப் பக்கமாக உள்ள மைதானத்தில் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை.

76—

ஆக்கிரமிப்புகள் அகற்றுதல்

வினா எண் 21961—திரு. பி.ஆர். மனோகர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோளிங்கர் தொகுதி, சோளிங்கர் பேரூராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சோளிங்கர் பேருந்து நிலையம், சோளிங்கர் பேரூராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளதால், பேரூராட்சியின் அனுமதி பெற்று அமைக்கப்பட்ட கடைகளில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற பேரூராட்சி செயல் அலுவலர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

77—

ஆக்கிரமிப்புகள் அகற்றுதல்

வினா எண் 22335—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, மார்த்தாண்டம் காந்தி மைதானம் சந்திப்பு முதல் புதிய பேருந்து நிலையம் வரையுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு தொகுதி, மார்த்தாண்டம் காந்தி மைதானம் சந்திப்பு முதல் புதிய பேருந்து நிலையம் வரையிலான ஆக்கிரமிப்புகள் நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் வருகின்றன. அத்துறையின் துணையுடன் மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

78—

ஆக்கிரமிப்புகள் அகற்றுதல்

வினா எண் 25752—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

(அ) மானாமதுரை தொகுதி, திருப்பாச்சேத்தி மயானத்தில் உளள தனியார் ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்புவனம் வட்டம், திருப்பாச்சேத்தி தெற்கு கிராமம் புல எண் 86-3 விஸ்தீரணம் 0.65.00 ஏர்ஸ் அரசு புறம்போக்கு மயானம், வினைதீர்க்கும் விநாயகர் கோயில் ஊரணி என கிராமிய கணக்கில் தாக்கலாகியுள்ளது. இப்புலத்தில் தற்போது எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லை.

79—

ஆக்கிரமிப்புகள் அகற்றுதல்

வினா எண் 26088—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை கண்மாய் மற்றும் வன்னான்குளம் கண்மாயில் உள்ள தனியார் ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை கண்மாய் மற்றும் வன்னான்குளம் கண்மாய் ஆகியவற்றிலுள்ள தனியார் ஆக்கிரமிப்புகளை பேரூராட்சியின் உதவியுடன் அகற்ற அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

[2013 அக்டோபர் 28

80—

நிலம் கையகப்படுத்துதல்

வினா எண் 26396—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம், இளையான்குடி மற்றும் மானாமதுரை பேரூராட்சியிலுள்ள தனியார் ஆக்கிரமிப்புகளை அகற்றி பேரூராட்சி இடங்களை கையகப்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை, இளையான்குடி, திருப்புவனம் பேரூராட்சிக்குச் சொந்தமான சாலை மற்றும் தெருக்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் பேரூராட்சி நில அளவையர்மூலம் அளவீடு செய்யப்பட்டு வருகிறது. நெடுஞ்சாலை, பொதுப் பணித் துறை போன்ற துறைகளுக்குச் சொந்தமான இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற சம்பந்தப்பட்ட துறைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

81—

ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

வினா எண் 26401—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சி நிருவாக அலுவலர் குடியிருப்பில் தனியார் ஆக்கிரமிப்பை கையகப்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், பேரூராட்சி செயல் அலுவலர் குடியிருப்புகள் என குடியிருப்புகள் ஏதுமில்லை. மேலும், பேரூராட்சி குடியிருப்பு பகுதிகளில் ஆக்கிரமிப்பு ஏதுமில்லை.

82—

ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

வினா எண் 26415—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, புல்லுக்காட்டுவலசைக்குச் செல்லும் பாதையில் மாறன் மின் பைபர் தொழிற்சாலை ஆக்கிரமித்துள்ள பகுதியை மீட்டுத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குணராமநல்லூர் ஊராட்சி, புல்லுக்காட்டுவலசைக்குச் செல்லும் பாதையில் குணராமநல்லூர் கிராமம் புல எண் 470-ல் பாதை புறம்போக்கில் மாறன் மின் பைபர் நிறுவனத்தின்மூலம் கம்பிவேலி அமைத்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது. கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி), துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சி) குணராமநல்லூர் ஊராட்சி மன்றத் தலைவர், குணராமநல்லூர் கிராம நிருவாக அலுவலர் மற்றும் திரு. ஜான்சன் ஜெபக்குமார் சமத்துவ மக்கள் கட்சி பொறுப்பாளர் ஆகியோர் முன்னிலையில் ஊராட்சி பணியாளர்கள் மூலமாக மேற்படி பாதை புறம்போக்கு ஆக்கிரமிப்பு வேலியானது 10-1-2013 அன்று காலை அகற்றப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து விடப்பட்டது.

[2013 அக்டோபர் 28

83—

ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

வினா எண் 26797—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, மேலப்பாவூர்-குறும்பலாபேரி இடையே உள்ள சாலையில் ஆக்கிரமிப்புகளை அகற்றிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, மேலப்பாவூர்-குறும்பலாபேரி இடையே உள்ள சாலையில் ஆக்கிரமிப்புகள் எதுவும் இல்லை. மேற்படி சாலையில் உள்ள பள்ளங்களை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

84—

ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

வினா எண் 27856—திரு. ஏ. லாசர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதி, தேனி ஒன்றியம், ஊஞ்சாம்பட்டி ஊராட்சி, அன்னஞ்சிவிலக்கிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரியகுளம் தொகுதி, தேனி ஒன்றியம், ஊஞ்சாம்பட்டி ஊராட்சி, அன்னஞ்சிவிலக்கில் உள்ள கிராம ஊராட்சிக்குச் சொந்தமான புல எண் 900 தேவகம்மமாள்

2013 அக்டோபர் 28]

ஊரணியில் கடந்த பிப்ரவரி மாதத்தில் 0.12.0 ஏக்கர் அளவில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுள்ளது. மற்ற ஆக்கிரமிப்புகள் தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு, சம்பந்தப்பட்டதால், சம்பந்தப்பட்ட துறையினருக்கு ஆக்கிரமிப்புகளை அகற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது.

85—

பட்டா வழங்குதல்

வினா எண் 28186—திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி, 37-வது வட்டம், தேபர் நகரிலுள்ள மீனவர்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

புரசைவாக்கம்-பெரம்பூர் வட்டம், பெரம்பூர் கிராமத்தில் அடங்கிய தேபர் நகர் வட்ட நிரந்தர நிலப் பதிவேட்டின்படி அரசினர் ஆதி திராவிடர் நலத் துறையின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்தப் புலம் மேற்படி ஆதி திராவிடர் நலத் துறைக்குச் சொந்தமானதாக உள்ளதால், மேற்படி நிலத்தில் எந்த தனி நபருக்கும் பட்டா வழங்க இயலாது.

86—

பட்டாவை சர்வே செய்தல்

வினா எண் 29741—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், உகாயலூர் கிராம ஊராட்சி, பல்லவராயன் பாளையத்தில் 30 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட பட்டாவை சர்வே செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், உகாயலூர் கிராம ஊராட்சி, பல்லவராயன் பாளையத்தில் 30 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்களுக்கான இடம் தற்போது ஆக்கிரமிப்பில் உள்ளதால், உரிய அறிவிப்பு வழங்கி காவல் துறை பாதுகாப்புடன், வட்டாட்சியர் மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர் முன்னிலையில் 15 தினங்களுக்குள் அளவைப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

87—

ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

வினா எண் 29819—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சி 7-வது வார்டு அழகர்கோயில் தேரோடும் வீதி மற்றும் கள்ளார் தெரு மயானப் பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சி 7-வது வார்டு தேரோடும் வீதி மற்றும் கள்ளார் தெரு மயானப் பாதையில் ஆக்கிரமிப்புகள் ஏதுமில்லை.

88—

பட்டா மாற்றம்

வினா எண் 30136—திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

(அ) மதுரை மாவட்டம், மதுரை நகர் அரசு அலுவலர் குடியிருப்பில் மசூதி உள்ள இடத்தை மசூதி பெயருக்கே பட்டா மாற்றம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை தெற்கு வட்டம், மதுரை கிழக்கு உள்வட்டம், வடக்கு மதுரை கிராமம், கிராமக் கணக்குகளின்படி மேற்படி நகரளவை எண் 2721/1-ல் அமைந்துள்ள பகுதி முன்பு துடரியனேந்தல் கண்மாய் என இருந்தது. மேற்படி புலம் POB-இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்புலம் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவு ந.க. எண் 16073/71, நாள் 25-3-71-ன்படி POB-இல் இருந்து நீக்கம் செய்யப்பட்டு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி புலத்தில் கீழ்க்கண்டவாறு மனைகள் எழுப்பப்பட்டு (டி.ஆர்.ஓ. காலனி) அரசு அலுவலர்களுக்கு மாத வாடகைக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

"ஏ வகை குடியிருப்பு"	-	96 வீடுகள்
"பி வகை குடியிருப்பு"	-	192 வீடுகள்
"சி வகை குடியிருப்பு"	-	150 வீடுகள்
"டி வகை குடியிருப்பு"	-	108 வீடுகள்
"இ வகை குடியிருப்பு"	-	60 வீடுகள்
மொத்தம்		606 வீடுகள்

இப்பகுதியில் சி, டி மற்றும் இ வகை குடியிருப்புகளுக்கு அருகில் வடக்குப் புறத்தில் எழுப்பப்பட்டுள்ள மசூதி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட புலத்தில் அமைந்துள்ளது.

[2013 அக்டோபர் 28

தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய செயற்பொறியாளர் மற்றும் நிருவாக அதிகாரியின் குறிப்பில் மேற்படி பள்ளிவாசல் கட்டப்பட்டு 20 வருடங்களாக தொழுகை நடத்தி வருவதாகவும் டி.ஆர்.ஓ. காலனியில் உள்ள நிலங்கள் அனைத்தும் அரசுக்கு சொந்தமானவை எனவும் இந்நிலத்தில் அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் 606 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு நிதியுதவி வழங்கப்பட்டு கட்டடங்கள் கட்டப்பட்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் பராமரிப்பு செய்யப்பட்டு வருகின்றன எனவும், இத்திட்டப் பகுதி முழுவதும் அரசு நிலம் ஆகையால் இத்திட்டப் பகுதியில் கட்டப்பட்டுள்ள பள்ளிவாசலுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் பட்டா ஏதும் வழங்க இயலாது எனவும், இப்பொருள் குறித்து அரசால் மட்டுமே நடவடிக்கை மேற்கொள்ள இயலும் எனவும், மதுரை செயற்பொறியாளர் மற்றும் நிருவாக அதிகாரி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் கட்டப்பட்டுள்ள மத வழிபாட்டுத் தலமான மசூதிக்கு பட்டா வழங்குவதற்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இசைவுக் கடிதம் அளிக்கும்பட்சத்தில் மட்டுமே வருவாய்த் துறையில் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ள இயலும்.

89—

ஆசிரியர் பயிற்சிப் பள்ளி

வினா எண் 3943—திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை மீண்டும் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

தென்மண்டல தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தால் 2011-2012 ஆம் கல்வியாண்டில் மாணவர் சேர்க்கை செய்ய

2013 அக்டோபர் 28]

மறுக்கப்பட்டுள்ளதாலும், தருமபுரி மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு நிரந்தரமான இடம் தெரிவு செய்யப்பட்டு அரசின் அனுமதி பெறாத நிலையிலும், மாணவர் சேர்க்கைக்கு தென்மண்டல தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்திலிருந்து அங்கீகாரம் பெற இயலாத நிலை உள்ளது. மாற்று இடம் தெரிவு செய்து அரசின் அனுமதி பெற்றவுடன், தருமபுரி மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் மாணவர் சேர்க்கைக்கு முறையாக தென்மண்டல தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்திடம் விண்ணப்பித்து அங்கீகாரம் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

90—

சுற்றுச்சுவர் கட்டுதல்

வினா எண் 13272—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலை ஊராட்சி, குடுமியான்மலை தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச்சுவர்கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களின் கீழ் புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலை ஊராட்சி, குடுமியான்மலை தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டுவதற்கான வாய்ப்பு இக்கல்வி ஆண்டில் இல்லை.

91—

குடிநீர் வசதி

வினா எண் 14373—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) ஆரணி தொகுதி, பலகண்டபுத்தூர் தொடக்கப் பள்ளிக்கு குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, செய்யாறு ஒன்றியம், பலகண்டபுத்தூர் தொடக்கப் பள்ளிக்கு 2003-ல் பஞ்சாயத்து மூலம் குடிநீர் வசதி ஏற்கெனவே செய்து தரப்பட்டுள்ளது. எனவே அப்பள்ளிக்கு குடிநீர்வசதி தற்போது ஏற்படுத்தித் தர தேவை எழவில்லை.

92—

குழுக்கள் அமைத்தல்

வினா எண் 1916—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ள மாவட்ட அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டுவிட்டனவா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அனைவருக்கும் கல்வி மற்றும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்தின்மூலம் பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் குறித்து விரிவாக ஆய்வு செய்ய மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் கல்விக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

2013 அக்டோபர் 28]

93—

சுற்றுச்சுவர் கட்டுதல்

வினா எண் 23596—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விளாத்துப்பட்டி ஊராட்சி, கலைக்குப்பட்டி தொடக்கப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, விளாத்துப்பட்டி ஊராட்சி, கலைக்குப்பட்டி தொடக்கப் பள்ளிக்கு தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களின்படி இக்கல்வியாண்டில் சுற்றுச் சுவர் கட்டித்தர இயலாது.

94—

சுற்றுச்சுவர் கட்டுதல்

வினா எண் 23609—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், ஆவூர் ஊராட்சி, தெ.புதுப்பட்டி அரசு தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், ஆவூர் ஊராட்சி, தெ.புதுப்பட்டி அரசு தொடக்கப் பள்ளிக்கு

[2013 அக்டோபர் 28

தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களின்படி இக்கல்வியாண்டில் சுற்றுச்சுவர் கட்ட இயலாது.

95—

தொடக்கப் பள்ளிக் கட்டடம்

வினா எண் 23611—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், ஆவூர் ஊராட்சி, செங்களாக்குடி அரசு தொடக்கப் பள்ளிக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்களாக்குடி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியானது 1957 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இப்பள்ளிக்கு DPEP – மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டம் (கரும்பலகைத் திட்டம் 2000-2001 ஆம் ஆண்டு) மூலம் ரூ. 3,15,000/- செலவில் ஒரு கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் ஒரு வகுப்பறை கொண்ட ஓட்டுக் கட்டடம் நல்ல நிலையில் உள்ளது. மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதிய வகுப்பறை உள்ளது. எனவே, புதிய வகுப்பறை கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

96—

சுற்றுச்சுவர் கட்டுதல்

வினா எண் 23612—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

(அ) விராலிமலை தொகுதி, ஈஸ்வரன்கோவில் ஊராட்சி, எருதுபட்டியிலுள்ள தொடக்கப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, ஈஸ்வரன்கோவில் ஊராட்சி, எருதுபட்டியிலுள்ள தொடக்கப் பள்ளிக்கு தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களின்படி இக்கல்வியாண்டில் சுற்றுச்சுவர் கட்ட இயலாது.

97—

சுற்றுச்சுவர் அமைத்தல்

வினா எண் 23613—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விராலிமலை தொகுதி, ஈஸ்வரன்கோவில் ஊராட்சி, கோவிந்தநாயக்கன்பட்டி நடுநிலைப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, ஈஸ்வரன்கோவில் ஊராட்சி, கோவிந்தநாயக்கன்பட்டி நடுநிலைப் பள்ளிக்கு தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களின்படி இக்கல்வி ஆண்டில் சுற்றுச்சுவர் கட்ட இயலாது.

[2013 அக்டோபர் 28

98—

கூடுதல் கட்டடம்

வினா எண் 21639—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், பாக்குடி ஊராட்சி, பையூர் துவக்கப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அனைவருக்கும் கல்வி இயக்கம் மூலமாக 2002 ஆம் ஆண்டில் இரண்டு வகுப்பறைக் கட்டடம் கட்டப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. பயிலும் குழந்தைகளுக்கேற்ப போதிய வகுப்பறைகள் உள்ளதால் இப்பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

99—

ஆசிரியர்கள் நியமனம்

வினா எண் 29208—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பட்டதாரி ஆசிரியர்களுக்கான தகுதித் தேர்வை இரத்து செய்து பணிமூப்பு அடிப்படையில் ஆசிரியர்களை நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 (Right of Children to Free and Compulsory Education Act, 2009)-ன்படியும், ஆசிரியர் கல்விக்கான தேசியக் குழுவால் உருவாக்கப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி,

2013 அக்டோபர் 28]

அரசாணை (நிலை) எண் 181, பள்ளிக் கல்வித் துறை, நாள் 15-11-2011-ல் ஆசிரியர் தேர்வு வாரியம், ஆசிரியர் தகுதித் தேர்வு நடத்தும் அமைப்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண் 90, பள்ளிக் கல்வித் துறை, நாள் 28-3-2012-ல், ஆசிரியர் நியமனங்கள், ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்வர்கள் பெறும் மதிப்பெண்கள், இனச்சுழற்சி மற்றும் சான்றிதழ்கள் சரிபார்ப்பு அடிப்படையில் மேற்கொள்ளவும், மேலும், அரசாணை (நிலை) எண் 252, பள்ளிக் கல்வித்துறை, நாள் 5-10-2012-ல், மேல்நிலை கல்வி, ஆசிரியர் கல்வி பட்டயச் சான்று பட்டம் மற்றும் ஆசிரியர் கல்வியியல் பட்டச் சான்று ஆகியவற்றில் தேர்வர்கள் பெற்றுள்ள மதிப்பெண் அடிப்படையில் மதிப்பெண் அளிக்கப்பட்டு (Weightage of Marks) ஆசிரியர் தகுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண்ணுடன் இணைத்து, பட்டதாரி ஆசிரியர்கள் தேர்வு செய்யும் முறையை நடைமுறைப்படுத்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. எனவே, பட்டதாரி ஆசிரியர்களுக்கான தகுதித் தேர்வை இரத்து செய்து பணி மூப்பு அடிப்படையில் ஆசிரியர்களை நியமனம் செய்ய இயலாது.

(ஆ) வினா எழாது.

100—

சிறுபான்மை மொழி பாடம்

வினா எண் 29507—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுவதும் சிறுபான்மைப் பள்ளிகளில் சிறுபான்மை மொழிப் பாடங்களை மூன்று பருவத்திற்கும் உடனடியாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) தமிழகம் முழுவதும் சிறுபான்மைப் பள்ளிகளில் சிறுபான்மை மொழிப் பாடங்கள் மூன்று பருவத்திற்கும் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) வினா எழாது.

[2013 அக்டோபர் 28

பட்டியல் 15

1—

சார்நிலைக் கருவூலக் கட்டடம்

வினா எண் 29712—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் புதிய வட்டத்தில் சார்நிலைக் கருவூல அலுவலகம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தில் புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 401, நிதி (க.க.3) துறை, நாள் 15-11-2012-ல் திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டத்தில் புதிய சார் கருவூலம் அமைக்க மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வழங்கப்பட்டது. திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டத்தில் புதிய சார் கருவூலம் அமைக்க தனியார் கட்டடம் கதவு எண் 148, வார்டு எண் 1, கல்லுக்கரை சாலை, மடத்துக்குளம் என்ற முகவரியில் தேர்வு செய்யப்பட்டு புதிய சார் கருவூலம் அமைக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2—

புனல் மின் நிலையத்தின் நிலை

வினா எண் 16093—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் சிறிய மற்றும் மிகச் சிறிய ஏழு புனல் மின் நிலையங்கள் அமைக்கும் பணியின் தற்போதைய நிலையை அரசு தெரிவிக்குமா?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

ஆம்.

பவானி கட்டளை கதவணை-3, புனல் மின் திட்டமானது சோழசிராமணி கிராமம், நாமக்கல் மாவட்டம் காவிரி ஆற்றின் குறுக்கே ரூ.490.80 கோடி திட்ட மதிப்பீட்டில் 2x15 மெகா வாட் மின் உற்பத்தித் திறன் கொண்டதாக நிறுவப்பட்டுக் கொண்டிருக்கிறது. திட்டப் பணிகள் 98 விழுக்காடு முடிவடைந்துள்ளன. தேவையான அளவு தண்ணீர் மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காக எதிர்வரும் ஜூன் 2013-ல் வெளியேற்றப்படும் போது அனைத்து செயல்திறன் ஓட்டம் மற்றும் செயல்பாட்டிற்கான உத்தரவாதம் உறுதிசெய்யும் சோதனை ஓட்டம் முதலானவை மேற்கொள்ளப்பட்டு, மின் உற்பத்தி எதிர்வரும் அக்டோபர் 2013-ல் துவங்க திட்டமிடப்பட்டுள்ளது.

2) பவானி குறுக்கணை-1 புனல் மின் திட்டமானது சமயபுரம் கிராமம், கோவை மாவட்டம் பவானி ஆற்றின் குறுக்கே ரூ.185.81 கோடி திட்ட மதிப்பீட்டில் 2x5 மெகா வாட் மின் உற்பத்தித் திறன் கொண்டதாக நிறுவப்பட்டுக் கொண்டிருக்கிறது. திட்டப் பணிகள் 69 விழுக்காடு முடிவடைந்துள்ளன. இத்திட்டம் எதிர்வரும் நவம்பர் 2013-ல் மின் உற்பத்தியைத் துவங்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

3) பவானி குறுக்கணை-2 புனல் மின் திட்டமானது உமயபாளையம் கிராமம், கோவை மாவட்டம் பவானி ஆற்றின் குறுக்கே ரூ.187.61 கோடி திட்ட மதிப்பீட்டில் 2x5 மெகா வாட் மின் உற்பத்தித் திறன் கொண்டதாக நிறுவப்பட்டுக் கொண்டிருக்கிறது. திட்டப் பணிகள் 98 விழுக்காடு முடிவடைந்துள்ளன. பில்லூர் நீர்த்தேக்கத்தில் இருந்து தேவையான அளவு நீர் வெளியேற்றப்படும் போது எதிர்வரும் ஜூன் 2013-ல் மின் உற்பத்தி துவக்க திட்டமிடப்பட்டுள்ளது.

4) பெரியார் வைகை-2 சிறுபுனல் மின் திட்டமானது கம்பம் கிராமம், தேனி மாவட்டம், பெரியார் ஆற்றின் குறுக்கே ரூ.47.96 கோடி திட்ட மதிப்பீட்டில் 2x1.25 மெகா வாட் மின் உற்பத்தித்

[2013 அக்டோபர் 28

திறன் கொண்டதாக நிறுவப்பட்டுக்கொண்டிருக்கிறது. திட்டப் பணிகள் 99 விழுக்காடு முடிவடைந்துள்ளன. இத்திட்டத்தின் அலகு 1 மற்றும் அலகு 2 சுழற்சி மின் உற்பத்திக்கான ஒருங்கிணைத்தல் ஓட்டம் 30-1-2012 அன்று முடிவுற்றது. பெரியார் ஆற்றில் தேவையான அளவு நீர் வெளியேற்றப்படும் போது எதிர்வரும் ஜூன் 2013-ல் மின் உற்பத்தி துவங்க திட்டமிடப்பட்டுள்ளது.

5) பெரியார் வைகை-3 சிறுபுனல் மின் திட்டமானது தாண்டுப்பாளையம் கிராமம், தேனி மாவட்டம், பெரியார் ஆற்றின் குறுக்கே ரூ.75.00 கோடி திட்ட மதிப்பீட்டில் 2X2 மெகா வாட் மின் உற்பத்தித் திறன் கொண்டதாக நிறுவப்பட்டுக் கொண்டிருக்கிறது. திட்டப் பணிகள் 85 விழுக்காடு முடிவடைந்துள்ளன. இத்திட்டம் எதிர்வரும் ஜூலை 2013-ல் மின் உற்பத்தியைத் துவக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

6) பெரியார் வைகை-4 சிறுபுனல் மின் திட்டமானது கம்பம் அணைக்கட்டு அருகில் தேனி மாவட்டம், பெரியார் ஆற்றின் குறுக்கே ரூ. 57.07 கோடி திட்ட மதிப்பீட்டில் 2X1.25 மெகா வாட் மின் உற்பத்தித் திறன் கொண்டதாக நிறுவப்பட்டுக் கொண்டிருக்கிறது. திட்டப் பணிகள் 99 விழுக்காடு முடிவடைந்துள்ளன. மதகின் முன்புறம் படிந்துள்ள வண்டல் மண்ணை அப்புறப்படுத்தும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது. இந்த வண்டல் மண் அப்புறப்படுத்தப்பட்ட பின்பு 72 மணி நேர செயல்திறன் ஓட்டம் மற்றும் செயல்பாட்டிற்கான உத்தரவாதம் உறுதிசெய்யும் சோதனை ஓட்டம் முதலானவை மேற்கொள்ளப்பட உள்ளன.

இத்திட்டத்தில் எதிர்வரும் ஜூன் 2013 இறுதிக்குள் மின் உற்பத்தியைத் துவக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

7) கொல்லிமலை புனல் மின் திட்டமானது புலியஞ்சோலை கிராமம், நாமக்கல் மாவட்டம், அய்யாறு ஆற்றின் குறுக்கே ரூ.257.66 கோடி திட்ட மதிப்பீட்டில் 1X20 மெகா வாட் மின் உற்பத்தித் திறன் கொண்டதாக நிறுவப்பட உள்ளது. திட்டப் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கடந்த 16-5-2012 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது. கடந்த

2013 அக்டோபர் 28]

23-6-2012 அன்று நடைபெற்ற தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் வாரியக் குழுவின் *26*-ம் கூட்டம், இத்திட்டத்தின் ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்பதற்கான முன் தகுதி தேவைகளை மாற்றி மீண்டும் வாரியக் குழுவிற்கு சமர்ப்பிக்கும்படி அறிவுறுத்தி உள்ளது. அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 16166—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து மின்சாரம் கொண்டு செல்ல ஐந்து *400* கி.வோ. துணை மின் நிலையங்களும், பத்தொன்பது *230* கி.வோ. துணை மின் நிலையங்களும் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம், காற்றாலை மின் நிலையங்களிலிருந்து உற்பத்தியாகும் மின்சாரத்தை வெளிக்கொணர கயத்தாறு *400* கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்துணை மின் நிலையம், *2014-2015* ஆம் நிதி ஆண்டில் இயக்கத்திற்கு கொண்டு வரப்படும். இத்துணை மின் நிலையத்திலிருந்து காரைக்குடி, புகழூர் மற்றும் சிங்காரப்பேட்டை வழியாக சென்னை வரை உயர்திறன் கொண்ட *400* கி.வோ. மின் தொடர் கட்டமைப்பு (இரட்டை வழி பாதை) அமைக்க அனுமதி பெறப்பட்டு அதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும், உடுமலைப்பேட்டை பகுதியில், காற்றாலை மின் நிலையங்களிலிருந்து உற்பத்தியாகும் மின்சாரத்தை வெளிக்கொணர தப்பக்குண்டு, ஆனைக்கடவு மற்றும் ராசிபாளையம் ஆகிய இடங்களில் *400* கி.வோ. புதிய துணை மின்

[2013 அக்டோபர் 28

நிலையங்களும், அதனோடு சேர்ந்த 336 மின் சுற்று கி.மீ. நீளத்திற்கு 400 கி.வோ. உயர் மின்னழுத்தப் பாதையும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் துணை மின் நிலையங்களை சேலத்தில் இந்திய மின் தொடரமைப்புக் கழகம் (PGCIL) மூலம் அமைக்கப்படவுள்ள 765 கி.வோ. துணை மின் நிலையத்துடன் இணைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

4—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 27526—திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, அதனக்கோட்டை துணை மின் நிலையத்தைப் பிரித்து, புதிய மின்மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். ஆதனக்கோட்டை துணை மின் நிலையத்திலிருந்து மின் பளுவைப் பிரித்து இச்சடி பகுதியில் ஒரு 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது. இதற்குத் தேவையான நிலம் கண்டறியப்பட்டு, நிலம் கையகப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நிலம் கையகப்படுத்தப்பட்ட உடன் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் துவங்கப்படும்.

5—

அடிப்படை வசதிகள் செய்தல்

வினா எண் 521—திரு. கே.பி. கந்தன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, பெருங்குடி பேரூராட்சி, கல்லுக்குட்டை பகுதியில் குடிநீர், சாலை, தெரு விளக்கு, பொதுக் கழிப்பிடம் ஆகிய வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சோழிங்கநல்லூர் தொகுதி, பெருங்குடி பேரூராட்சி, கல்லுக்குட்டை பகுதியில் பெருங்குடி கல்லுக்குட்டை ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடமாகும். இந்த இடம் தமிழ்நாடு தொழில்நுட்பக் கழகம், தமிழ்நாடு மருத்துவக் கழகம், அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான பகுதியாகும். சுமார் 300 ஏக்கர் பரப்பளவில் உள்ள இந்த இடம் தொடர்பான வழக்கு தற்பொழுது உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. மேலும், தமிழ்நாடு மின்சாரத் துறை மூலமாக தெருக்களில் சில இடங்களில் மின்சார வசதியும், சென்னை குடிநீர் வடிகால் மற்றும் கழிவுநீர் வாரியம் மூலமாக தெருக்களில் பல இடங்களில் சின்டக்ஸ் தொட்டிகள் மூலமாக குடிநீரும் வழங்கியும் வருகின்றனர். மேலும், இந்த இடம் சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் தற்பொழுது சென்னை மாநகராட்சியால் எந்தவிதமான சாலை வசதிகளும் செய்ய இயலாது.

6—

தொற்றுநோய் பாதிப்பைத் தடுத்தல்

வினா எண் 3971—திரு. ஏ.கே.டி. ராஜா: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) திருப்பரங்குன்றம், அவனியாபுரம் நகராட்சியிலுள்ள வெள்ளைக்கல்லில் மதுரை மாநகராட்சி குப்பைகளை எரிப்பதால் வரும் புகையினால், அவனியாபுரம், திருப்பரங்குன்றம் நகராட்சி பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் தொற்று நோயால் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாநகராட்சி, அவனியாபுரம், வெள்ளைக்கல் குப்பை மையத்தில் குப்பைகளை உரமாக்கும் திட்டம் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம், திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றது. 90 சதவீத பணிகள் முடிக்கப்பட்டு விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் நிலையில் உள்ளது. மேலும், அவ்வப்போது எரியும் குப்பைகள் உடனுக்குடன் மாநகராட்சி மூலம் அணைக்கப்பட்டு, தொற்றுநோய் பரவாமல் தடுக்கப்பட்டு வருகின்றது.

7—

புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

வினா எண் 13308—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, துங்காவி ஊராட்சி, குமாரமங்கலம் மற்றும் பெங்கலூர் கிராமங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் ஒன்றியம், துங்காவி ஊராட்சிக்குட்பட்ட குமாரமங்கலம் மற்றும் பெங்களூர் கிராமங்களில் தற்சமயம் திருமூர்த்தி அணையை நீராதாரமாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டுள்ள மடத்துக்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் போதிய குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், புதிய ஆழ்துளைக் கிணறு அமைக்க அவசியம் எழவில்லை.

8—

புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 13730—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, எலையமுத்தூர் ஊராட்சி, பார்த்தசாரதிபுரம் மற்றும் போடிபட்டி ஊராட்சி, காமராஜ் நகர் கிழக்குப் பகுதியில் குடிநீர் வடிகால் வாரியம்மூலம் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி, உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் எலையமுத்தூர் ஊராட்சியில் உள்ள பார்த்தசாரதிபுரத்தில் மக்கட் தொகைக்கேற்ப தற்சமயம் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், 5,000 லிட்டர் கொள்ளளவுள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியும் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. மேலும், போடிபட்டி

[2013 அக்டோபர் 28

ஊராட்சிக்குட்பட்ட காமராஜ் நகர் கிழக்குப் பகுதியில் தற்சமயம் மக்கட்தொகைக்கேற்ப 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலமாக குடிநீர் வழங்கப்பட்டு வருவதாலும், மேற்படி குடியிருப்புகளுக்கு புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அவசியம் எழவில்லை.

9—

சிமென்ட் சிலாப் கொண்டு மூடுதல்

வினா எண் 18735—திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை வடக்கு தொகுதி, காலங்கரை கால்வாயை சிமென்ட் சிலாப் போட்டுமூட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாநகராட்சி, மதுரை வடக்கு சட்டமன்றத் தொகுதி, காலங்கரை வாய்க்காலில் தடுப்புச் சுவர் மற்றும் தரைத் தளம் அமைக்கும் பணி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் தற்போது நடைபெற்று வருகிறது. மேலும், காலங்கரை கால்வாய், பிரதானக் கால்வாய் என்பதால் சிமென்ட் சிலாப் போட்டு மூடுவதற்கு மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படவில்லை.

10—

பழுதடைந்துள்ள குழாய்களை செப்பனிடுதல்

வினா எண் 18836—திரு. சு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 7-வது வார்டு தோல்ஷாப் பகுதியில் உள்ள குடிதண்ணீர் தேக்கத் தொட்டியை சுத்தப்படுத்தி, பழுதடைந்துள்ள குழாய்களை செப்பனிட்டுத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 7-வது வார்டில் உள்ள தோல்ஷாப் பகுதியிலுள்ள குடிதண்ணீர் தேக்கத் தொட்டி தற்போது சுத்தப்படுத்தப்பட்டு நல்ல நிலையில் பயன்பாட்டிலுள்ளது.

11—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 21750—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, சங்கரி ஒன்றியம், வடுகப்பட்டிக்கு காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, சங்கரி ஒன்றியம், வடுகப்பட்டி ஊராட்சியில் வடுகப்பட்டி கிராமத்தின் தற்போதைய மக்கட்தொகை 400 ஆகும். இக்குடியிருப்பிற்கு 60,000 லிட்டர்

[2013 அக்டோபர் 28

கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் இருந்து சங்கரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் காவேரி குடிநீர் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் 16,000 லிட்டர் குடிநீர் தற்போது சீராக வழங்கப்பட்டு வருகிறது.

12—

இரத்தப் பரிசோதனைக் கூடம்

வினா எண் 23020—திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி, 44-வது வட்டம், அண்ணாசாலையில் உள்ள நலவாழ்வு மையத்தில் இரத்தப் பரிசோதனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

1. மண்டலம்-6, கோட்டம்-70, பெரம்பூர்
2. மண்டலம்-6 கோட்டம்-75, செல்லப்ப முதலி தெரு
3. மண்டலம்-8, கோட்டம்-104, ஈ.வி.ஆர். சாலை
4. மண்டலம்-9, கோட்டம்-113, வள்ளுவர் கோட்டம்
5. மண்டலம்-10, கோட்டம்-141, கி.ஐ.டி. நகர்
6. மண்டலம்-13, கோட்டம்-182, திருவான்மியூர்

பெரம்பூரில் உள்ள இரத்தப் பரிசோதனைக் கூடம் 44-வது வட்டத்தின் அருகில் உள்ளது. எனவே, 44-வது வட்டத்தில் உள்ள பொதுமக்கள் பெரம்பூர் இரத்தப் பரிசோதனை மையத்தில் பரிசோதனை செய்து கொள்ளலாம்.

மேலும், 44-வது வட்டத்தில், பெரம்பூர் (கிழக்கு), நலவாழ்வு மையம், அண்ணா சாலையின் அருகில் எண் 100, 2-வது தெரு, காமராஜ் நகரில் இயங்கி வருகின்றது. திங்கள் மற்றும் வியாழக்

2013 அக்டோபர் 28]

கிழமைகளில் கர்ப்பிணி தாய்மார்களுக்குத் தேவையான அனைத்து இரத்தப் பரிசோதனைகளும் இங்கு செய்யப்படுகின்றன.

13—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 23175—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, அரசிராமணி பேரூராட்சி, மலங்காடு எம்.ஜி.ஆர். நகருக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, அரசிராமணி பேரூராட்சி, மலங்காடு பகுதியின் மக்கள் தொகை 200 ஆகும். இப்பகுதியில் ஆழ்துளைக் கிணற்றிலிருந்து 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியின் மூலமும், 2 கைப்பம்புகள் மற்றும் சிறுமின்விசைத் திட்டம் மூலமும் நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட வேண்டிய தேவை எழவில்லை.

14—

புதிய கட்டடம்

வினா எண் 23791—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சிக்கு புதியதாக கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நகராட்சி நூற்றாண்டு விழா நிதியின்கீழ் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் புதுக்கோட்டை நகராட்சிக்கு புதியதாக அலுவலகக் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்து நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அலுவலக கட்டடம் கட்ட திட்ட மதிப்பீடுகள் தயார் செய்து, ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, பணி துவங்க உள்ளது.

15—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 25283—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ரி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, வார்டு 18, வளையசெட்டிபட்டி மற்றும் கோனேரிபட்டி மேற்குப் பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்ரி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, 18-வது வார்டில் உள்ள வளையசெட்டிபட்டி மற்றும் கோனேரிபட்டி மேற்குப் பகுதிகளில் இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு

2013 அக்டோபர் 28]

கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்தும், இரு கையிறைப்பான் திட்டங்களின் மூலமும் போதுமான அளவு நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தற்போது இப்பகுதிக்கென புதியதாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

16—

தார்ச்சாலை வசதி

வினா எண் 25473—திரு. சு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 33-வது வார்டு, சோமசுந்தரம் நகர் 4-வது, 5-வது தெருக்களில் இருந்து மயானத்திற்குச் செல்லும் மண் சாலையை தார்ச் சாலையாக மாற்றிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் நகராட்சியில் தற்போது பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதால் புதிதாக தார்ச் சாலை தற்போது அமைக்க இயலாது.

17—

திடக்கழிவுகள் அகற்றுதல்

வினா எண் 28187—திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

பெரம்பூர் தொகுதி, 37-வது வட்டம், தேபர் நகர் மழைநீர் கால்வாயில் உள்ள திடக்கழிவுகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

சென்னை மாநகராட்சி, 4-வது மண்டலம், கோட்டம் 37-ஐச் சார்ந்த பகுதியில் உள்ள அனைத்து மழைநீர் வடிகால் கால்வாய்களில் திடக்கழிவுகளை அகற்றி, தூர்வாரி, முடிக்கப்பட்டுள்ளது.

18—

வணிக வளாகம் கட்டுதல்

வினா எண் 29432—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், செவ்வாய்பேட்டையில் புதிய நவீன அடுக்குமாடி வணிக வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி, செவ்வாய்பேட்டை பகுதியில் புதிய நவீன அடுக்குமாடி வணிக வளாகம் கட்ட தற்பொழுது எந்தவிதமான திட்டமும் இல்லை.

19—

கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

வினா எண் 29609—திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

தருமபுரி நகராட்சி, 13-வது வார்டில் கழிவுநீர்க் கால்வாய் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

2012-2013-ம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தருமபுரி நகராட்சிக்கு சொந்தமான 13-வது வார்டில் தற்போது கழிவுநீர்க் கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது.

20—

அங்காடி இடமாற்றம்

வினா எண் 29760—திரு. ஆர். சுந்தர்ராஜன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை தெற்கு வாசல் பகுதியில் உள்ள அங்காடியை வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாநகராட்சி, தெற்கு வாசல் தினசரி மார்க்கெட் தெற்கு மாரட் வீதியில் செயல்படுவதை ஆட்சேபித்து (WP (MD) No. 589/2012) வழக்கு நிலுவையில் உள்ளது. மேற்படி தினசரி மார்கெட் இயங்கி வருகின்ற சாலை அருகே உள்ள பிள்ளையார்பாளையம் ரோடு (வில்லாபுரம் மேம்பாலத்திற்குக் கீழ்) எப்.எப். ரோடு மற்றும் கிருதுமால் நதி ரோடு பகுதிகளுக்கு மார்க்கெட்டை மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது கிருதுமால் நதி வாய்க்கால் சீரமைப்புப் பணி நடைபெற்று

[2013 அக்டோபர் 28

வருவதால், பணி முடிவடைந்த உடன் மீண்டும் ஆய்வுசெய்து மார்கெட்டை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

21—

முழுமைத் திட்டம்

வினா எண் 16020—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2011-2012 ஆம் ஆண்டில் தஞ்சாவூர், தூத்துக்குடி, காரைக்குடி, சித்தோடு, திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் முழுமைத்திட்டம் தயாரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வெளியிடப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1. தஞ்சாவூர் முழுமைத் திட்டத்திற்கு அரசு ஆணை எண் 928, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 6-6-1979-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு, பின்னர் மறு ஆய்வு அரசு ஆணை எண் 292, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 12-7-2004-ல் இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

2. தூத்துக்குடி முழுமைத் திட்டம், நகரப்பகுதிக்கு அரசு ஆணை எண் 54, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள் 11-1-1994-லும் கிராமப் பகுதிக்கு அரசாணை எண் 71, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 10-2-2000-லும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

3. காரைக்குடி மறு ஆய்வு முழுமைத் திட்டத்திற்கு அரசு ஆணை எண் 247, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 10-10-2002-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

2013 அக்டோபர் 28]

4. சித்தோடு முழுமைத் திட்டத்திற்கு அரசு ஆணை எண் 33, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 25-1-1998-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு பின்னர் மறு ஆய்வு செய்யப்பட்டு, அரசு ஆணை எண் 177, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 14-7-2006-ல் இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

5. திருநெல்வேலி முழுமைத் திட்டத்திற்கு, அரசு ஆணை எண் 224, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 13-10-2010-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

22—

நகர்ப்புற வளர்ச்சிப் பரப்பை முறைப்படுத்துதல்

வினா எண் 16032—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நகர் ஊரமைப்பு இயக்கத்தின்மூலம் கட்டுப்பாடற்ற நகர்ப்புற வளர்ச்சிப் பரப்பை முறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 12-ன் கீழ் சம்பந்தப்பட்ட மண்டல திட்டக் குழுமம், உள்ளூர் திட்டக் குழுமம் மற்றும் புதுநகர் வளர்ச்சிக் குழுமங்கள் கட்டுப்பாடற்ற நகர்ப்புற வளர்ச்சி பரப்பை முறைப்படுத்த நகராட்சி, மாநகராட்சி, உள்ளூர் திட்டக் குழுமப் பகுதிகளில் நில உபயோக அளவை மேற்கொண்டு, நிலையில் உள்ள நில உபயோகங்களை நிலைநிறுத்தி இதர பகுதிகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிக்கு ஏற்ப, உத்தேச நில உபயோகங்களை வரையறை செய்து நில உபயோக வரைபடம் தயாரித்து அரசின் இணக்கத்திற்கு சமர்ப்பித்து அரசின் இணக்கம், ஒப்புதல், மறு

[2013 அக்டோபர் 28

ஆய்வு இணக்கம், மறு ஆய்வு ஒப்புதல் பெற்ற கட்டுப்பாடான வளர்ச்சியை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், முழுமைத் திட்டப் பகுதிக்கு உட்படாத இதர பகுதிகளுக்கு ஊராட்சி கட்டட விதி, நகராட்சி கட்டட விதி, பொதுக் கட்டட விதி, நிறுவன விதி என்ற விதிகளை கடைபிடித்து சம்பந்தப்பட்ட திட்ட அதிகாரியால் கட்டுமான அனுமதிகள் வழங்கப்படுகின்றன. மேலும், அனுமதி பெறாமல் கட்டப்படும் அனைத்து கட்டுமானங்கள் மீதும் நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56&57-ன் கீழ் சம்பந்தப்பட்ட திட்ட அதிகாரியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

23—

பூங்காக்களை மேம்படுத்துதல்

வினா எண் 16033—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகர் ஊரமைப்பு இயக்கத்தின்மூலம் 2011-2012 ஆம் ஆண்டில் பூங்காக்களை மேம்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டில் 8 பூங்காக்கள் மேம்படுத்த மானியம் வழங்கப்பட்டுள்ளது. அரசாணை எண் 71, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 21-3-2012-ல் பூங்காக்கள் மேம்படுத்த ரூ.2.25 இலட்சம் மானியத்திலிருந்து ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் 90% மானியம் உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி உத்தேசங்கள் உள்ளாட்சிகளிடமிருந்து பெறப்பட்டு 2011-2012 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட உள்ளாட்சிகளுக்கு நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

1. சூலூர்
2. திருவாரூர்

2013 அக்டோபர் 28]

3. பிள்ளாநல்லூர்

4. வடவள்ளி

5. சாத்தூர்

6. தாராபுரம்

7. சரவணம்பட்டி

8. லால்குடி

மேற்படி 8 உள்ளாட்சிகளுக்கு நிதி விடுவிக்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

24—

அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல்

வினா எண் 16037—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் அடுக்குமாடி குடியிருப்புகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) போதிய நிதி ஆதாரம் இல்லாததன் காரணமாக முன்மொழிவுகள் ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

25—

குழந்தை நலக் குழுக்கள்

வினா எண் 31323—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) தமிழகத்தில் குழந்தைகள் நல இல்லத்திலுள்ள குழந்தைகள் குழந்தை நல குழுக்கள் முன் ஆஜர்படுத்தப்படுகிறார்களா?

(ஆ) ஆம் எனில், 3 மாதங்களுக்கு ஒருமுறை ஆஜர்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் உள்ள குழந்தைகள் இல்லத்துடன் இணைந்த வரவேற்பு பிரிவில் இருத்தி வைக்கப்படும் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் ஆதரவற்ற, புறக்கணிக்கப்பட்ட குழந்தைகள் வரவேற்பு பிரிவில் அனுமதிக்கப்பட்டவுடன், குழந்தைகள் நலக் குழுவின் முன் ஆஜர்படுத்தப்படுகிறார்கள். மேலும், அக்குழந்தைகள் விசாரணை செய்யப்பட்டு இறுதி ஆணை வழங்கப்படும் வரை 15 நாட்களுக்கு ஒரு முறை குழந்தைகள் நலக் குழுவின் முன்னர் ஆஜர்படுத்தப்படுகின்றனர்.

26—

நிலைப்பெட்டிகள் வழங்குதல்

வினா எண் 11422—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாடு ஆவணக் காப்பக நுண்படச் சுருள்களை பாதுகாக்க நிலைப்பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பின் நிலை குறித்து தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

தமிழ்நாடு ஆவணக் காப்பக பாதுகாப்பில் உள்ள நுண்படச் சுருள்களை பாதுகாக்க நிலைப்பெட்டிகள் வாங்குவதற்கு பகுதி-II திட்டம் 2011-2012 ஆம் நிதியாண்டில் அரசாணை (நிலை)

2013 அக்டோபர் 28]

எண் 229, உயர் கல்வி (டி.2)த் துறை, நாள் 24-10-2011-ல் ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.4,99,950/- செலவில் நிலைப்பெட்டிகள் தமிழ்நாடு காதி கிராமத் தொழில் வாரியம் மூலமாக வாங்கப்பட்டுவிட்டது.

27—

கல்விக் கடன் வழங்குதல்

வினா எண் 15808—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிருவாக ஒதுக்கீட்டில் சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கு, வங்கியில் கல்விக் கடன் வழங்க இயலாது என மறுக்கப்படும் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மாணவர்களுக்கு கல்விக் கடன் வழங்கும் திட்டம் மத்திய அரசால், இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் அதன் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் வங்கிகளால் மேற்கொள்ளப்படுகிறது. பொறியியல் கல்வி பயிலும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு முழு கல்விக் கட்டணமும் அரசே வழங்குகிறது. மேலும், பொறியியல் கல்லூரிகளில் முதலாண்டு மாணவர் சேர்க்கை கலந்தாய்வு நடைபெறும்போது, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அனைத்து வங்கிகளும் கல்விக் கடன் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்கின்றன. நிருவாக ஒதுக்கீட்டில் சேர்க்கை என்பது சுயநிதி பொறியியல் கல்லூரிகளின்மூலம் நடைபெறுகிறது. இருப்பினும் கல்விக் கடன் வழங்க இயலாது என மறுக்கப்படும் பிரச்சினைகள் அரசின் கவனத்திற்கு வரும்பட்சத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஆ) எழவில்லை.

[2013 அக்டோபர் 28

28—

இந்திய வனப் பணி பயிற்சி மையம்

வினா எண் 16547—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் இந்தியக் காவல் பணி மற்றும் இந்திய வனப் பணி பயிற்சி மையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி, அழகப்பா பல்கலைக்கழகத்தில் இந்தியக் காவல் பணி மற்றும் இந்திய வனப் பணி பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டம் பல்கலைக்கழகத்தின் வரம்புக்குள் வராது.

29—

அரசின் சலுகைகள் வழங்குதல்

வினா எண் 21567—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் மனோ கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியருக்கு அரசின் சலுகைகள் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் மனோ கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியருக்கு அரசின் சலுகைகளான பேருந்து கட்டணச் சலுகை மற்றும் கல்வி உதவித் தொகை ஆகியவை வழங்கப்பட்டு வருகிறது. இதர சலுகைகளையும்

2013 அக்டோபர் 28]

இம்மாணாக்கர்களுக்கு பெற்றுத் தருவதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது.

30—

துணை முதல்வர் பணியிடம்

வினா எண் 29027—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மனோ கல்லூரிகளில் துணை முதல்வர் பணியிடம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

இல்லை.

31—

இலவச மண் பரிசோதனை

வினா எண் 29370—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, அரசிராமணி கிராமம், தேவூர், மகுடஞ்சாவடி, சங்கரி, மோரூர் மற்றும் தாரமங்கலம் பகுதிகளில் ஆண்டுக்கு ஒரு முறை இலவச மண் பரிசோதனை செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, அரசிராமணி கிராமம், தேவூர், மகுடஞ்சாவடி, சங்கரி, மோரூர் மற்றும் தாரமங்கலம் பகுதிகளில் ஆண்டுக்கு ஒரு முறை இலவச மண் பரிசோதனை செய்து கொடுக்க அரசிடம் தற்போது திட்டம் ஏதும் இல்லை.

32—

விவசாயிகளை ஊக்குவித்தல்

வினா எண் 30317—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில், கருணைக்கிழங்கு பயிரிடும் விவசாயிகளை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் தற்போது கருணைக்கிழங்கு சாகுபடி ஏதும் நடைபெறவில்லை. எனினும், விவசாயிகள் கருணைக்கிழங்கு சாகுபடி செய்ய முன் வரும் நிலையில் 2013-2014 ஆம் ஆண்டின் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு நடவுப் பொருட்கள் 50 சதவிகித மானியத்தில் வழங்கிடவும், தொழில்நுட்பப் பயிற்சி அளித்திடவும் தோட்டக்கலைத் துறைமூலம் ஆவன செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

33—

பழச்செடிகள் வழங்குதல்

வினா எண் 30858—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தோட்டக்கலைத் துறைமூலம் மானிய விலையில் வீரிய ஒட்டு மற்றும் உயர் விளைச்சல் இரக காய்கறி விதைகள், பழச்செடிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வீரிய ஒட்டு மற்றும் உயர் விளைச்சல் இரக காய்கறி விதைகள், பழச்செடிகள் ஆகியவற்றை மானிய விலையில்

2013 அக்டோபர் 28]

விவசாயிகளுக்கு வழங்கும் விதத்தில் கீழ்க்கண்ட திட்டங்கள் தோட்டக்கலைத் துறைமூலம் 2013-2014 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படுகின்றன:

1. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் உயர் விளைச்சல்/வீரிய ஒட்டு இரக காய்கறி விதைகள் மற்றும் தரமான பழச்செடிகள் 50 சதவிகித மானியத்தில் ஒரு பயனாளிக்கு 0.50 எக்டர் என்ற அளவிலும், பழச்செடிகள் ஒரு பயனாளிக்கு 1.0 எக்டர் என்ற அளவிலும் வழங்கப்படும். இத்திட்டம் சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.

2. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

நீலகிரி மாவட்டத்தில் மட்டும் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின்கீழ் உயர் விளைச்சல்/வீரிய ஒட்டு இரக காய்கறி விதைகள் 50 சதவிகித மானியத்தில் சிறு/குறு விவசாயிகள் மற்றும் ஆதி திராவிட மற்றும் பழங்குடி இன விவசாயிகளுக்கு மட்டும் வழங்கப்படுகின்றன.

3. தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் துல்லிய பண்ணையத் திட்டத்தின்கீழ் காய்கறி பயிரில் துல்லிய பண்ணையம் அமைக்கும் விவசாயிகளுக்கு எக்டர் ஒன்றுக்கு ரூ. 5,000/- பெறுமானமுள்ள உயர் விளைச்சல்/வீரிய ஒட்டு இரக காய்கறி விதைகள் வழங்கப்படுகின்றன. ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக ஒரு எக்டருக்கு மானியம் வழங்கப்படும். இத்திட்டம் கன்னியாகுமரி, சென்னை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. அனைத்து இன விவசாயிகளும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறலாம்.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் உயர் தொழில்நுட்ப உற்பத்தி பெருக்கத் திட்டத்தின்கீழ் உயர் விளைச்சல்/வீரிய ஒட்டு இரக காய்கறி விதைகள் மற்றும் பழச்செடிகள் 50 சதவிகித மானியத்தில் வழங்கப்படுகின்றன. பயனாளி ஒருவருக்கு அதிகபட்சமாக 4 எக்டர் பரப்பிற்கு மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டம் திருவள்ளூர்,

[2013 அக்டோபர் 28

காஞ்சிபுரம், விருதுநகர், கரூர், நாமக்கல், நாகப்பட்டினம், திருவாரூர், திருவண்ணாமலை மற்றும் தூத்துக்குடி ஆகிய ஒன்பது மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

4. தேசிய தோட்டக்கலை இயக்கம்

இத்திட்டத்தின்கீழ் தோட்டக்கலை பயிர் பரப்பு விரிவாக்கம் என்ற இனத்தின்கீழ் தரமான பழச்செடிகள் 75 சதவிகித மானியத்தில் வழங்கப்படுகின்றன. இத்திட்டம் அரியலூர், கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், நீலகிரி, தருமபுரி, கிருஷ்ணகிரி, கடலூர், மதுரை, தேனி, திண்டுக்கல், திருச்சி, சிவகங்கை, திருநெல்வேலி, இராமநாதபுரம், விழுப்புரம், பெரம்பலூர், கன்னியாகுமரி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, வேலூர் மற்றும் திருப்பூர் ஆகிய 22 மாவட்டங்களில் அனைத்து இன விவசாயிகளுக்கு 0.4 முதல் 4 எக்டர் வரை பயனடையும்படி செயல்படுத்தப்படுகிறது.

5. நீங்களே செய்து பாருங்கள்-காய்கறி சிறுதளை

சென்னை மற்றும் கோவை மாநகரங்களில் புத்தம் புதிய நச்சுத்தன்மையற்ற சத்தான காய்கறிகளை அவரவர் வீட்டு மாடியில் உற்பத்தி செய்வதற்கேற்ற உயர் விளைச்சல்/வீரிய ஒட்டு இரக காய்கறி சிறுதளைகள் 50 சதவிகித மானியத்தில் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

34—

குளிர்பதனக் கிடங்கைப் பராமரித்தல்

வினா எண் 29111—திரு. கு. நல்லதம்பி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எழும்பூர் தொகுதி, புளியந்தோப்பு பகுதியிலுள்ள கூட்டுறவு குளிர்பதனக் கிடங்கைப் பராமரித்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் மூலம், பேசின் பிரிட்ஜ் என்ற இடத்தில் 750 மெட்ரிக் டன்

2013 அக்டோபர் 28]

கொள்ளளவுடன்கூடிய குளிர்பதனக் கிடங்கு 1973-ல் கட்டப்பட்டு நாளது தேதி வரை இயங்கி வருகிறது. மேற்படி குளிர்பதனக் கிடங்கின் அறை எண் 2 மிகவும் பழுதடைந்து, பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே, குளிர்பதனக் கிடங்கின் அறை எண் 2-ஐ, இடித்துவிட்டு அந்த இடத்தில் 960 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள, நவீன வசதிகளுடன்கூடிய ஒரு குளிர்பதனக் கிடங்கு ரூ.249/- இலட்சம் மதிப்பில் அமைக்க நபார்டு நிறுவனத்திடம் நிதி உதவி கோரி பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நபார்டு நிறுவனத்தின் நிதி உதவி கிடைக்கப் பெற்றவுடன், பேசின் பிரிட்ஜ் என்ற இடத்தில், 960 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள நவீன வசதிகளுடன்கூடிய குளிர்பதனக் கிடங்கு அமைக்க பணிகள் துவங்கப்படும்.

35—

மரம் வளர்ப்பிற்கு முக்கியத்துவம்

வினா எண் 3115—திரு. வி.சி. சந்திரகுமார்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்வேறு காரணங்களால் தமிழ்நாடு முழுவதும் மரங்கள் வெட்டப்படுவதைத் தடுத்து, மரம் வளர்ப்பிற்கு முக்கியத்துவம் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் வனத் துறையின் மூலமாக ஊராட்சி கண்மாய் பகுதிகளில் அதாவது பொதுப் பணித் துறை சார்ந்த கண்மாய் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய கண்மாய் பகுதிகளில் 2011-2012 முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரையிலான ஐந்தாண்டுகளில், 1 இலட்சம் எக்டர் கண்மாய் பகுதிகளில் கருவேல் தோட்டங்கள் உற்பத்தி செய்ய வேண்டி அரசாணை (டி) எண் 25, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 20-3-2012-ல் வெளியிடப்பட்ட ஆணையின்படி 20-11-2012 ஆம் ஆண்டில் 4,000 எக்டர் நிலப்பரப்பில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியம் சார்ந்த

[2013 அக்டோபர் 28

கண்மாய்களில் மட்டும் கருவேல் மரங்கள் வளர்ப்பதற்கு ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், பொதுப் பணித் துறை சார்ந்த கண்மாய்களில் கருவேல் மரங்களை வளர்க்க தடை செய்யப்பட்டுள்ளது. அத்தடைகளை நீக்கியபின் 2011-2012 முதல் 2015-2016 வரை ஐந்தாண்டுகளில் மீதமுள்ள 96,000 எக்டர் பரப்பில் கருவேல் மரங்கள் நடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளையொட்டி, 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.29.44 கோடி செலவில் 32 மாவட்டங்களில் 64 இலட்சம் மரக்கன்றுகள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு, நிழல் தரும் மர இனங்களை சாலையோரங்கள், நிறுவனங்கள் மற்றும் அரசு நிலங்களில் காலியாகவுள்ள இடங்களில் நடவும், இத்திட்டத்தின்கீழ் வறண்ட காலத்தில் மர நாற்றுகளுக்கு நீர் ஊற்றுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. வனக் கழகங்கள், உள்ளாட்சி அமைப்புகள், தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றின் நிதியுதவியுடன் சாலையோரங்களில் நடப்பட்டுள்ள மரங்களைப் பாதுகாக்கும் பொருட்டு இரும்புக் கூண்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. 39.33 இலட்சம் மரக்கன்றுகள் ரூ.13.77 கோடி செலவில் மாநிலம் முழுவதும் பரவலாக நடப்பட்டு திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் நடவுப் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருட்டு மரவெட்டுக் குற்றங்கள் நடக்காமல் கண்காணிக்கவும், அவற்றைத் தடுக்கவும் வனக் காவலர்கள், வனக் காப்பாளர்கள், வனவர்கள், வனச் சரகர்கள், மாவட்ட வன அலுவலர் மற்றும் மண்டல வனப் பாதுகாவலர் ஆகியோர்களால் மரக் கடத்தலைத் தடுத்து வனப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு, திருட்டு வெட்டுகள் நிகழாவண்ணம் குற்றம் புரிபவர்கள்மீது நடைமுறையில் உள்ள சட்ட விதிகளின்படி, வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, இணக்கக் கட்டணம் வசூலித்தும், நீதிமன்றத்தில் வழக்குகள் தொடுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு வனத் துறையில் 'தனியார் நிலங்களில் மரங்கள் வளர்த்தல்' (Tree cultivation in private lands) என்னும் திட்டம் கடந்த 4 ஆண்டுகளாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. 2012-2013 ஆம்

2013 அக்டோபர் 28]

ஆண்டிலிருந்து இத்திட்டம் ஜப்பான் நிதி இணையத்தின் மூலமும் நிதிபெற்று விரிவாக்கம் செய்யப்பட்டு, நகர்ப்புற பசுமையாக்கும் திட்டத்தின் கீழும் மதுரை, சென்னை போன்ற பெருநகர்ப் பகுதிகளில் உயரமான கன்றுகள் நடும் திட்டம் கடந்த 5 ஆண்டுகளாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முழுவதும் மரங்கள் வெட்டப்படுவதை முறைப்படுத்தவும், மரம் வளர்ப்பிற்கு ஊக்கமளித்து முக்கியத்துவம் தரவும் அரசால் சீரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

36—

சாலை அமைத்தல்

வினா எண் 15288—திரு. ஆர். சாமி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, பொட்டப்பட்டி ஊராட்சியில் வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் சாலை அமைக்க அனுமதி வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி, பொட்டப்பட்டி ஊராட்சி, கருமலை காப்புக்காட்டில் புதிதாக சாலையமைக்க அனுமதி கோரப்பட்டுள்ளது. வனப் பகுதியில் புதியதாக சாலை அமைக்கப்பட வேண்டுமாயின் வனப் (பாதுகாப்புச்) சட்டம், 1980-ன்கீழ் மத்திய அரசின் முன் அனுமதி பெற வேண்டும். எனவே வனப் (பாதுகாப்புச்) சட்டம் 1980-ன்படி உரிய கருத்துரு அனுப்பக் கோரி பொட்டப்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர், மாவட்ட வன அலுவலர், மதுரை அவர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அவரிடமிருந்து முழுமையான கருத்துரு பெறப்பட்டவுடன் மேற்காணும் சாலை அமைப்பது குறித்து மத்திய அரசின் முன் அனுமதி பெற தக்க மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2013 அக்டோபர் 28

37—

சந்தன மரங்கள் வளர்க்க அனுமதி

வினா எண் 17656—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் தனது சொந்த நிலங்களில் சந்தன மரங்கள் வளர்க்க அனுமதி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

(அ) தனியார் தமது சொந்த நிலங்களில் சந்தன மரங்கள் வளர்க்க அரசின் அனுமதி ஏதும் பெறத் தேவையில்லை. தமிழ்நாட்டில் பட்டா நிலங்களில் சந்தன மரங்களை வளர்த்திட ஊக்குவிக்கும் இந்நோக்கத்துடன் தமிழ்நாடு வனச் சட்டம் 1882-ல் 36-எப் என ஒரு புதிய துணைப் பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது. இந்த துணைப் பிரிவு தமிழ்நாடு சட்டம் எண்.33/2002-ன்கீழ் இயற்றப்பட்டு தமிழக அரசு இதழில் 3-9-2002-ல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் 27-11-2008 முதல் நடைமுறைக்குக் கொணரப்பட்டுள்ளது. இவ்விதிகளின்படி தனியார் தமது சொந்த நிலங்களில் சந்தன மரங்களை வளர்ப்பதற்கு ஊக்குவிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) 2008 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பட்டா நிலங்களில் சந்தன மரங்கள் விதிகள் நடைமுறைக்கு வந்த 27-11-2008 ஆம் நாளிலிருந்து தனியார் தமது சொந்த நிலங்களில் வளர்க்கும் சந்தன மரங்களை வெட்டுதல்/விற்பனை செய்வது முறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்தச் சட்டம் மற்றும் விதிமுறைகளின் முக்கியக் கூறுகள் பின்வருமாறு:-

1. சந்தன மரங்களை வளர்ப்பவர்கள் அந்த சந்தன மரத்தின் உரிமையாளர்கள் ஆவார்.

2013 அக்டோபர் 28]

2. சந்தன மரத்தினை அரசுக்கு மட்டுமே விற்பனை செய்ய வேண்டும்.

3. விற்பனை செய்யப்படும் சந்தன மரங்களுக்கு விற்பனை விலையில் 80% விலை சந்தன மரத்தின் உரிமையாளருக்கு வழங்கப்படும்.

4. சந்தன மரம் வெட்டப்பட்டு 30 நாட்களுக்குள் மொத்த விற்பனை விலையில் 20%-மும் மீதி விற்பனை தொகையினை 90 நாட்களுக்குள்ளும் உரிமையாளருக்கு வழங்கப்பட வேண்டும். சந்தன மரங்களை பட்டா நிலங்களில் வளர்ப்பதற்கு இவ்வாறு ஊக்கம் அளிக்கப்பட்டும், மரங்களுக்கான விலையினை தனியார் மேற்படி குறிப்பிட்ட நாட்களுக்குள் பெற்றுக் கொள்ளவும், மேலும் அரசின் சந்தன மரங்களைப் பாதுகாக்கவும் மேற்படி சட்டம் மற்றும் விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

38—

உணவு, குடிநீர் வசதிகள் செய்தல்

வினா எண் 29512—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் செட்டிசாவடி பகுதியிலுள்ள உயிரியல் பூங்கா செல்லும் சாலையைச் சீரமைக்கவும், வன உயிரினங்களுக்கு போதுமான உணவு, குடிநீர் வசதிகள் செய்யவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். சேலம் நகரிலிருந்து சேர்வராயன் மலையடிவாரத்தில் குரும்பப்பட்டி காப்புக்காட்டில் அமைக்கப்பட்டுள்ள குரும்பப்பட்டி உயிரியல் பூங்காவிற்கான சாலை வசதியானது கோரிமேடு, வினாயகம்பட்டி, செட்டிச்சாவடி வழியாக அமைக்கப்பட்டுள்ள தார்ச்சாலை ஆகும். இது நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இச்சாலை

[2013 அக்டோபர் 28

தற்போது மோசமான நிலையில் குண்டும் குழியுமாக உள்ளதால் சாலையைச் சீரமைக்க சேலம், கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அவர்கள் மாவட்ட வன அலுவலர், சேலம் அவர்களிடம் கோரப்பட்டுள்ளது. வனத் துறையின்மூலம் ஏற்காடு அடிவாரம் முதல் காடையாம்பட்டி வரை உள்ள வனச் சாலை கப்பிச் சாலையாக அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இச்சாலை குரும்பப்பட்டி உயிரியல் பூங்கா, குரும்பப்பட்டி கிராமம் வழியாக குரும்பப்பட்டி பன்னிக்கரடு மற்றும் காஞ்சேரி காப்புக்காடுகளினூடே செல்லும் வனச் சாலையாகும். இச்சாலையின் மேம்பாட்டுப் பணி 13-வது நிதிக் குழு உதவியுடன்கூடிய திட்டத்தில் ஏற்காடு அடிவாரம் முதல் 2.00 கி.மீ. தூரத்திற்கு 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.48.53 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குரும்பப்பட்டி உயிரியல் பூங்கா வழியாக குரும்பப்பட்டி கிராமம் வரை 2.00 கி.மீ. தூரத்திற்கு தார்ச் சாலை அமைத்தல் பணி திருச்சி வனப் பொறியியல் கோட்டம் மூலம் ரூ.55.00 இலட்சம் மதிப்பீட்டில் 2012-2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இச்சாலை அமைப்புப் பணி முடிவு பெற்றால் குரும்பப்பட்டி உயிரியல் பூங்காவிற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளுக்கு மேம்பட்ட சாலையாக அமையும்.

குரும்பப்பட்டி உயிரியல் பூங்காவில் ஆண்டுதோறும் சராசரியாக ரூ.18.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வன உயிரினங்களின் தேவைக்கேற்றவாறு உணவு மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உயிரியல் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு ஆழ்துளைக் கிணறு மற்றும் திறந்தவெளிக் கிணறுமூலம் வன உயிரினங்களுக்குத் தேவையான குடிநீர் வசதிகள் பற்றாக்குறை ஏதுமின்றி செய்து தரப்பட்டு வருகின்றன.

39—

புதிய கோட்டப் பொறியாளர் அலுவலகம்

வினா எண் 3904—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

(அ) திருவண்ணாமலை நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் எல்லையைப் பிரித்து ஆரணியை தலைமையிடமாகக் கொண்டு புதிய கோட்டப் பொறியாளர் அலுவலகம் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் எல்லையைப் பிரித்து ஆரணியை தலைமையிடமாகக் கொண்டு புதிய கோட்டப் பொறியாளர் அலுவலகம் ஏற்படுத்துவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

40—

மழைநீர் வடிகால்வாய் கட்டுதல்

வினா எண் 6456—திரு. பா. கணேசன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் தொகுதி, களியாம்பூண்டி ஏரியின்கீழ் செல்லும் நெடுஞ்சாலைத் துறை சாலையின் இடதுபுறம் மழைநீர் வடிகால்வாய் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

உத்திரமேரூர் தொகுதி, களியாம்பூண்டி ஏரியின்கீழ் செல்லும் நெடுஞ்சாலைத் துறையின் களியாம்பூண்டி சாலை கி.மீ. 0/0-2/4 மாவட்ட இதர சாலையாகும். இச்சாலையின் ஏரிக்கரைப்

[2013 அக்டோபர் 28

பகுதியில் கி.மீ.0/8-1/8 வரையுள்ள பகுதியில், சாலையின் இடதுபுறம் 0.75மீ. ஆழத்திற்கு வாய்க்கால் (Earthen Drain) அமைக்கப்பட்டு சாலை மீது தண்ணீர் வராமல் தடை செய்யப்பட்டுள்ளது. அப்பகுதியில் கான்கிரீட் வாய்க்கால் அமைக்க வரும் நிதியாண்டில் அரசின் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் எடுத்துச் செய்ய பரிசீலிக்கப்படும்.

41—

மண்ணெண்ணெய் வழங்குதல்

வினா எண் 2570—திரு. கு. நல்லதம்பி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடும்ப அட்டைகளுக்கு சீராக மண்ணெண்ணெய் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் இரண்டு வகையான குடும்ப அட்டைகள் நடைமுறையில் உள்ளன. அவை 2004 ஆம் ஆண்டுக்கு முன்பாக நடைமுறையிலிருந்து வரும் புதுப்பிக்கப்பட்ட குடும்ப அட்டைகள் மற்றும் ஏற்கெனவே குடும்ப அட்டை இல்லாதவர்களுக்கு 2004 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வரும் புதிய குடும்ப அட்டைகள் ஆகும். 2004-க்கு முன்னர் நடைமுறையிலிருந்து புதுப்பிக்கப்பட்ட குடும்ப அட்டைகளுக்கு (Regular Family Cards) ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த மண்ணெண்ணெய் அளவான சென்னை மற்றும் மாவட்டத் தலைநகரங்கள்-10 லிட்டர், இதர நகராட்சிப் பகுதிகள்-6 லிட்டர், நகரியம் மற்றும் நகரப் பஞ்சாயத்து-5 லிட்டர், கிராமப் பகுதிகள்-3 லிட்டர் என்ற அளவில் சீரான முறையில் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது.

குடும்ப அட்டை இல்லாதவர்களுக்கு 2004 ஆம் ஆண்டு முதல் விண்ணப்பம் பெறப்பட்டு, வழங்கப்பட்டு வரும் புதிய குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கிட மத்திய அரசின்

2013 அக்டோபர் 28]

ஒதுக்கீடு போதுமானதாக இல்லை. எனவே, குடும்ப அட்டைகளில் எரிவாயு இணைப்புகள் பற்றிய விவரங்களை முத்திரையிடுதல், கைவண்டிதாரர்களுக்கு வழங்கி வந்த மண்ணெண்ணெய் நிறுத்தம் மற்றும் போலி குடும்ப அட்டைகளைக் களைதல் ஆகியவற்றின் வாயிலாகக் கிடைக்கப் பெற்ற மண்ணெண்ணெய் சேமிப்பினைக் கொண்டு தகுதியுள்ள புதிய குடும்ப அட்டைதாரர்களுக்கு (Left out Family cards) தலா 3 லிட்டர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு ஏப்ரல் 2011-ல் ஒதுக்கீடு செய்து வந்த 52,806 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் என்ற அளவினை படிப்படியாகக் குறைத்து ஏப்ரல் 2012 முதல் 39,430 கிலோ லிட்டராக ஒதுக்கீடு செய்தது. அதனை மேலும் 1-4-2013 முதல் 29,060 கிலோ லிட்டர் என வெகுவாகக் குறைத்து ஒதுக்கீடு செய்துள்ளது.

இம்மாநிலத்தின் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் ஒரே வழங்கல் அளவில் மண்ணெண்ணெய் வழங்குவதற்கு, 100 விழுக்காடு மண்ணெண்ணெய்யின் தேவை 65,140 கிலோ லிட்டர் ஆகும். தற்போதைய மத்திய அரசின் ஒதுக்கீடான 29,060 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் இம்மாநிலத் தேவையில் 44% மட்டுமே ஆகும். மண்ணெண்ணெய் பெறத் தகுதியான புதிய குடும்ப அட்டைதாரர்களுக்கு (New Family Cards) தலா 3 லிட்டர் வீதம் வழங்குவதற்கும், புதுப்பிக்கப்பட்ட குடும்ப அட்டைகளுக்கு (Regular Family Cards) வழக்கமான வழங்கல் அளவிற்கும் மொத்த மண்ணெண்ணெய்யின் தேவை 55,465 கி.லி. ஆகும்.

தமிழகத்திலுள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் சீரான அளவில் மண்ணெண்ணெய் வழங்க வேண்டும் என்ற நோக்கில், மாநிலத்தின் முழுத் தேவையான 65,140 கி.லி. மண்ணெண்ணெய் அல்லது குறைந்தபட்சம் மே 2011-ல் வழங்கப்பட்ட 52,806 கி.லி. என்ற அளவில் ஒதுக்கீட்டினை உயர்த்தி வழங்க கோரி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 1-6-2011, 25-5-2012, 10-6-2012 மற்றும் 9-4-2013 ஆகிய தேதிகளில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டன. மத்திய அரசினால் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு அளவு இது வரை உயர்த்தி வழங்கப்படவில்லை. இந்நிலையில்

[2013 அக்டோபர் 28

மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் மண்ணெண்ணெய்யினைக் கொண்டு தகுதியுள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் சீரான முறையில் மண்ணெண்ணெய் பகிர்ந்து அளிக்கப்படுகிறது. மத்திய அரசு மாநிலத்திற்கான மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டினை உயர்த்தி வழங்கும் பட்சத்தில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் சீரான அளவில் மண்ணெண்ணெய் வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

42—

மண்ணெண்ணெய் வழங்குதல்

வினா எண் 15955—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதியில் நியாய விலைக் கடைகளில் மண்ணெண்ணெய் முறையாக வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

மாநிலங்களுக்கான பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் ஒதுக்கீடு மத்திய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்களின் வாயிலாக வழங்கப்பட்டு வருகிறது. தமிழகத்தின் தற்போதைய பொது விநியோகத் திட்ட 100% மண்ணெண்ணெய் தேவை மாதமொன்றிற்கு 65,140 கிலோ லிட்டர் ஆகும். ஆனால், மத்திய அரசு நடப்பு ஏப்ரல்-ஜூன் 2013 காலாண்டில் இம்மாநிலத்திற்கு 29,060 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் மட்டுமே மாதாந்திர ஒதுக்கீடாக வழங்கியுள்ளது. இவ்வொதுக்கீட்டினைக் கொண்டு மண்ணெண்ணெய் பெறத் தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களின் தேவையினை குறைந்த அளவில் மட்டுமே பூர்த்தி செய்ய இயலுகிறது. எனினும், மத்திய அரசினால் வெகுவாகக் குறைத்து வழங்கப்பட்டுள்ள மண்ணெண்ணெய்யினைக் கொண்டு, மண்ணெண்ணெய் பெறத் தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் புகாருக்கு இடமின்றி மண்ணெண்ணெய் விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2013 அக்டோபர் 28]

43—

கூட்டுறவு அங்கன்வாடியை விரிவுபடுத்துதல்

வினா எண் 17223—திருமதி ர. சுபா: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியம், பச்சமலை பெரியமங்களம் பகுதி நல்லமாத்தியில் கூட்டுறவு அங்கன்வாடியை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ)ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கெங்கவல்லி தொகுதி, கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியம், பச்சமலை பெரியமங்களம் பகுதி நல்லமாத்தியில் கூட்டுறவு அங்கன்வாடி என்பதை அங்காடி என்று பொருள் கொண்டு கீழ்க்கண்ட பதில் அளிக்கப்படுகிறது:

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம், கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியம், பச்சமலைப் பகுதியில் எஸ்.1389 பச்சமலை மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தால் டி.இ. 007 நல்லமாத்தி முழுநேர நியாய விலைக் கடை 242 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது.

பெரியமங்களம் பகுதி நல்லமாத்தியில் அமைந்துள்ள நல்லமாத்தி நியாய விலைக் கடைக்கும், ஒடைக்காட்டுபுதூர் பகுதியில் அமைந்துள்ள டி.இ. 004 ஒடைக்காட்டுபுதூர் நியாய விலைக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 3 முதல் 7 கிலோ மீட்டர் உள்ளதாலும், நல்லமாத்தி கிராமத்திற்குரிய குடும்ப அட்டைகள் வேறு நியாய விலைக் கடையுடன் இணைக்கப்படாததாலும், நல்லமாத்தி நியாய விலைக் கடையுடன் அருகில் உள்ள கிராமப் பகுதிகளில் உள்ள குடும்ப அட்டைகளை இணைப்பதற்கு இடைப்பட்ட தூரம் அதிகமாக உள்ளதாலும், கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியம், பச்சமலை பெரியமங்களம் பகுதி நல்லமாத்தியில் உள்ள டி.இ. 007 நல்லமாத்தி கூட்டுறவு அங்காடியை விரிவுபடுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

[2013 அக்டோபர் 28

44—

நியாய விலைக் கடைகள்

வினா எண் 22891—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், வீரை ஊராட்சி, பெரியவீரை, கைக்குடி, வேலாயுதப்பட்டினம் ஆகிய இடங்களில் நியாய விலைக் கடைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியத்தில் எழுவன் கோட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தால் நெடுங்குளம் நியாய விலைக் கடை 460 குடும்ப அட்டைகளைக் கொண்டு வேலாயுதப்பட்டினம் என்ற இடத்தில் முழுநேர நியாய விலைக் கடையாக செயல்பட்டு வருகிறது. எனவே, வேலாயுதப்பட்டினத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய கேள்வி எழவில்லை.

மேலும், நெடுங்குளம் நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ள பெரியவீரை கிராமத்தில் 60 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதால், புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க குறைந்தது 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாததால் பெரியவீரை கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை துவங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

எழுவன் கோட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் நடத்தும் வெற்றி ஆலங்குளம் நியாய விலைக் கடை 281 குடும்ப அட்டைகளுடன் முழுநேர நியாய விலைக் கடையாக செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடையுடன் கைக்குடி கிராமத்தைச் சேர்ந்த 85 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. புதிய பகுதிநேரக் கடை துவக்க 150

2013 அக்டோபர் 28]

குடும்ப அட்டைகள் இல்லாததால், கைக்குடி கிராமத்தில், பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க இயலாது.

கைக்குடி கிராமம் தாய்க்கடையிலிருந்து 3 கி.மீ. தூரத்தில் இருப்பினும் புதிய பகுதிநேரக் கடை துவக்க 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் பகுதிநேரக் கடைக்கான குடும்ப அட்டைகளைப் பிரித்த பிறகு, தாய்க்கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசின் இரு நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்படாத நிலையில், கைக்குடி கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

45—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 24764—திருமதி ம. சக்தி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், திருநகரி ஊராட்சி, வேதராஜபுரம் அருகே உள்ள பகுதிநேர நியாய விலைக் கடையை விரைவில் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், நெப்பத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் இணைந்த திருநகரி முழுநேர கூட்டுறவு நியாய விலைக் கடை அங்காடி 1,123 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதனுடன் வேதராஜபுரம் பகுதியைச் சார்ந்த 293 குடும்ப அட்டைகளும் இணைந்துள்ளன. வேதராஜபுரம், திருநகரியிலிருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ளது. வேதராஜபுரம் பகுதியில் ஊரக வளர்ச்சித் துறை மூலமாக ஜவஹர் வேலைவாய்ப்புத் (JVVT) திட்டத்தில் கட்டப்பட்டுள்ள கட்டடத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க, நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரால் அனுமதி அளிக்கப்பட்டு, 31-3-2013 அன்று மாலை கடை திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

[2013 அக்டோபர் 28

46—

முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றம்

வினா எண் 24786—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரி தொகுதி, வளையச் செட்டிபாளையம் கூட்டுறவு நியாய விலைக் கடையை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சங்கரி தொகுதியில் எஸ். 1276 டி. வளையச் செட்டிபாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் வளையச் செட்டிபாளையம் பகுதிநேர நியாய விலைக் கடை 248 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. அரசு வகுத்துள்ள நெறிமுறைகளின்படி, கிராமப் பகுதிகளில் முழுநேர நியாய விலைக் கடை அமைக்க 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். மேற்கண்ட நிபந்தனை பூர்த்தியாகாததால், சங்கரி தொகுதி, வளையச் செட்டிபாளையம் பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்ற சாத்தியக்கூறுகள் இல்லை.

47—

முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றம்

வினா எண் 24787—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரி தொகுதி, ஆவரங்கம்பாளையம் பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சங்கரி தொகுதியில் எஸ். 1276 டி. வளையச் செட்டிபாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தால் ஆவரங்கம்பாளையம் பகுதிநேர நியாய விலைக் கடை 212 குடும்ப அட்டைகளுடன் ஆவரங்கம்பாளையம் பகுதியில் செயல்பட்டு வருகிறது,

இந்நேர்வில் ஆவரங்கம்பாளையம் கடையில் 212 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. அரசால் வகுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி மேற்படி கடையில் 500 குடும்ப அட்டைகள் இருந்தால் மட்டுமே முழுநேர நியாய விலைக் கடையாக மாற்ற இயலும். எனவே, மேற்படி நிபந்தனை பூர்த்தியாகாததால், ஆவரங்கம்பாளையம் பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்ற சாத்தியமில்லை.

48—

நியாய விலைக் கடை

வினா எண் 24784—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரி தொகுதி, சங்கரி பிரிவு சாலையிலுள்ள நியாய விலைக் கடை எண் 2-ஐப் பிரித்து பச்சக்காட்டுக்கு தனியாக நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

சங்கரி தொகுதி, சங்கரி பகுதியில் எஸ் 1471 சங்கரி கூட்டுறவு பண்டகசாலையால் ஜி.கி. 003 பவானி பிரிவு ரோடு 3 என்ற முழுநேர நியாய விலைக் கடை 902 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இக்கடையுடன் 1.5 கி.மீ. தூரம் உள்ள பச்சக்காடு பகுதியைச் சார்ந்த 15 குடும்ப அட்டைகளும் இணைக்கப்பட்டுள்ளது. இந்நேர்வில் பச்சக்காடு பகுதியில்

[2013 அக்டோபர் 28

15 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. புதிய பகுதிநேரக் கடை திறக்க 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், பச்சக்காடு பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

49—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 24938—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், மேட்டுப்பட்டியில் பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை சட்டப் பேரவை தொகுதிக்குட்பட்ட இலுப்பூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்க கட்டுப்பாட்டில் செயல்படும் HP 103 பரம்பூர் முழுநேர அங்காடி, தற்போது 1,083 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. அரசு நெறிமுறைகளின்படி புதிய பகுதிநேர அங்காடி அமைப்பதற்கு, உத்தேச பகுதிநேர அங்காடியில் குறைந்தது 150 குடும்ப அட்டைகளும், தாய் அங்காடி செயல்படும் இடத்திலிருந்து 15 கி.மீ. தூரத்திற்கு அதிகமாகவும் பிரிக்கப்பட்ட பின்பு தாய் அங்காடியில் குறைந்தது 500 குடும்ப அட்டைகளும் இருக்க வேண்டும். எனவே, மேட்டுப்பட்டி கிராமத்தில் 75 குடும்ப அட்டைகள் உள்ள நிலையில், இப்பகுதியில் புதிய பகுதிநேர அங்காடி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2013 அக்டோபர் 28]

50—

பகுதிநேர அங்காடி

வினா எண் 24960—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், நீர்பழனி ஊராட்சி, அவ்வையார்பட்டியில் பகுதிநேர அங்காடி அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை தொகுதியில், நீர்பழனி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தால் நீர்பழனி முழுநேர நியாய விலைக் கடை 682 குடும்ப அட்டைகளுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடையுடன் அவ்வையார்பட்டி பகுதியைச் சேர்ந்த 160 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. அவ்வையார்பட்டி பகுதிக்கும், தாய்க்கடைக்கும் இடையே 1.1 கி.மீ. தூரம் மட்டுமே உள்ளது. அரசின் வழிகாட்டி நெறிகளின்படி புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க தாய்க்கடைக்கும், புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கக் கோரும் பகுதிக்கும் இடையே குறைந்தது 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில் அவ்வையார்பட்டி கிராமத்தில் புதிய பகுதிநேரக் கடை துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

51—

மண்ணெண்ணெய் வழங்குதல்

வினா எண் 30257—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) மடத்துக்குளம் தொகுதி, ஈசல் திட்டு மலைவாழ் செட்டில்மெண்ட் பகுதி குடும்ப அட்டைக்கு மாதம் தலா 10 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாநிலங்களுக்கான பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் ஒதுக்கீடு, மத்திய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்களின் வாயிலாக வழங்கப்பட்டு வருகிறது. தமிழகத்தின் தற்போதைய பொது விநியோகத் திட்ட 100% மண்ணெண்ணெய் தேவை மாதமொன்றிற்கு 65.140 கிலோ லிட்டர் ஆகும். ஆனால், மத்திய அரசு நடப்பு ஏப்ரல்—ஜூன் 2013 ஆம் காலாண்டில் இம்மாநிலத்திற்கு 29,060 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் மட்டுமே மாதாந்திர ஒதுக்கீடாக வழங்கியுள்ளது. இவ்வொதுக்கீட்டினைக் கொண்டு மண்ணெண்ணெய் பெறத் தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களில் குறைந்த அளவுத் தேவையினை மட்டுமே பூர்த்தி செய்ய இயலுகிறது. இந்நிலையில் மடத்துக்குளம் தொகுதி, ஈசல் திட்டு மலைவாழ் செட்டில்மெண்ட் பகுதி குடும்ப அட்டைகளுக்கு மாதம் தலா 10 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்க வழிவகை இல்லை.

52—

விபத்துகளைத் தடுத்தல்

வினா எண் 29765—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் அனல்மின் நிலையத்திற்கு செல்லும் சாம்பல் லாரிகளால் ஏற்படும் சுகாதார சீர்கேடு மற்றும் விபத்துகளைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

மேட்டூர் அனல்மின் நிலையத்தில் இருந்து சாம்பல் எடுக்கும் லாரிகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகளைத் தடுக்க கீழ்க்காணும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1) லாரிகளில் நிர்ணயிக்கப்பட்ட அளவிற்கு மட்டுமே சாம்பல் ஏற்றப்படுகிறது.

2) சாம்பல் ஏற்றிய பிறகு தார்பாலின் கவர் கொண்டு சாம்பல் மூடப்படுகிறது. பிறகு லாரியில் படிந்துள்ள சாம்பல் பணியாட்களால் சுத்தம் செய்யப்படுகிறது.

3) சாம்பல் லோடு ஏற்றி தார்பாலின் கொண்டு மூடிய பிறகு, பிரத்யேகமாக நிறுவப்பட்ட தண்ணீர் தெளிப்பான்கள் உள்ள அறையில் லாரி நிறுத்தப்பட்டு, லாரியின் அனைத்துப் பகுதிகளிலும் தண்ணீர் தெளிப்பான்கள்மூலம் நீர் வேகமாக பீய்ச்சி அடிக்கப்பட்டு லாரி சுத்தம் செய்யப்படுகிறது.

4) சுத்தம் செய்யப்பட்ட பின்னர் லாரி வெளியே செல்ல அனுமதிக்கப்படுகிறது.

மேற்கண்ட முறைகளை கடைப்பிடிப்பதன்மூலம், லாரியில் இருந்து வெளியாகும் சாம்பல் கட்டுப்படுத்தப்படுகிறது. இதனால் விபத்து மற்றும் சுகாதார சீர்கேடு தடுக்கப்படுகிறது.

53—

சுற்றுச்சூழல் பாதிப்பைத் தடுத்தல்

வினா எண் 29766—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, மேட்டூரில் கெம்பிளாஸ்ட் மற்றும் மால்கோ மின் உற்பத்தி நிலைய இரயில்வே யார்டில் நிலக்கரி சாம்பலால் வரும் சுற்றுச்சூழல் பாதிப்பைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், மேட்டூரில் இயங்கி வரும் தி/ள். கெம்பிளாஸ்ட் சன்மார் லிட் மற்றும் தி/ள். மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி லிட் (மால்கோ) ஆகியவற்றின் மின் உற்பத்தி நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரி, இரயில்மூலம் மேட்டூர் இரயில் நிலையம் அருகே இறக்கப்படுகிறது. அவ்வாறு இறக்கப்பட்ட நிலக்கரியை லாரிகள்மூலம், மேற்கண்ட நிறுவனங்கள் தங்களுடைய பவர் பிளாண்ட் நிறுவனங்களுக்கு மூடப்பட்ட கன்வேயர்மூலம் எடுத்துச் செல்கின்றன. நிலக்கரியை இரயிலில் இருந்து இறக்கும்பொழுதும், பிறகு அவை லாரிகளில் ஏற்றும் பொழுதும் வெளியாகும் நிலக்கரி துகள்களைக் கட்டுப்படுத்த கீழ்க்காணும் ஏற்பாடுகள் மேற்கண்ட நிறுவனங்களால் செய்யப்படுகின்றன:

I. தி/ள். கெம்பிளாஸ்ட் சன்மார் லிமிடெட்-(கோல் யார்டு)

1) நான்கு மீட்டர் உயரத்திற்கு மின் மூலாம் பூசப்பட்ட தகரத்திலான (GI) காற்று தடுப்பான் எல்லைப் பகுதியில் தூசுகள் வெளியேறுவதைத் தடுக்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

2) 18 தானியங்கி நீர் தெளிப்பான்கள் பொருத்தப்பட்டு நிலக்கரி மீது தண்ணீர் தெளிக்கப்படுகிறது.

3) நிலக்கரி ஏற்றிக்கொண்டு வெளியே செல்லும் லாரிகள் தார்பாலின் கொண்டு மூடப்பட்டு தண்ணீர் தெளிப்பான்கள்மூலம் கழுவப்பட்டு வெளியேறுகிறது.

II. தி/ள். மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி லிமிடெட்-(கோல் யார்டு)

1) மூன்று மீட்டர் உயரத்திற்கு மின் மூலாம் பூசப்பட்ட தகரத்திலான (GI) காற்று தடுப்பான் எல்லைப் பகுதியில் தூசுகள் வெளியேறுவதைத் தடுக்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

2) 16 தானியங்கி நீர் தெளிப்பான்கள் பொருத்தப்பட்டு நிலக்கரி மீது தண்ணீர் தெளிக்கப்படுகிறது.

2013 அக்டோபர் 28]

54—

பாலங்கள் கட்டும் பணி

வினா எண் 14732—திரு. ஜே.ஜி. பிரின்ஸ் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, களிமார் முதல் சைமன் காலனி வரையுள்ள பாம்பூரி வாய்க்காலில் தடுப்புச் சுவரும், பாலங்களும் கட்டும் பணிகளை உடனடியாகத் தொடர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

குளச்சல் தொகுதி, களிமார் முதல் சைமன் காலனி வரையுள்ள பாம்பூரி வாய்க்காலில் தடுப்புச் சுவரும், பாலமும் கட்டும் பணி தற்போது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பணியை விரைவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

55—

வாய்க்கால் அமைத்தல்

வினா எண் 19964—திரு. வீ.பி. நாகைமாலி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்வேளூர் தொகுதி, திருப்பூண்டி, விழுந்தமாவடி இறைவைமனை வாய்க்காலைச் சீரமைக்கவும், வெள்ளையாறு வடிகாலிலிருந்து தனியாக பாசனத்திற்கு வாயக்கால் அமைத்துத் தரவும் அரசு முன்வருமா?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தொகுதி, திருப்பூண்டி, விழுந்தமாவடி இறைவைமனை வாய்க்காலை சீரமைத்தல் மற்றும் வெள்ளையாற்றிலிருந்து புதிய வாய்க்கால் அமைத்து அதன்மூலம் விழுந்தமாவடி இறைவைமனைக்கு தண்ணீர் கொண்டு செல்ல தனியாக பாசன வாய்க்கால் அமைத்துத் தர கோரும் கருத்துரு ஆய்வில் உள்ளது.

56—

பருத்தி ஆடை உற்பத்தியாளர்களை ஊக்குவித்தல்

வினா எண் 31305—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நலிந்துவரும் பருத்தி ஆடை உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் நலிந்துவரும் பருத்தி ஆடை உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் விதமாக அரசு பல்வேறு வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்களை ஏற்கெனவே பின்வருமாறு நடைமுறைப்படுத்தி வருகிறது:

(i) தமிழகத்தில் 31-3-2013-இல் 1,164 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 1,077 பருத்தி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், எஞ்சிய 87 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில், 2.67 இலட்சம் நெசவாளர்கள் தொழில்புரிந்து வருகின்றனர்.

2013 அக்டோபர் 28]

(ii) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 1,164 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள கைத்தறி நெசவாளர்களை ஊக்குவிக்கும் விதமாக 1-5-2013 முதல் அனைத்து நெசவாளர்களுக்கும், நடப்பாண்டில் அடிப்படைக்கூலியில் 10 விழுக்காடு உயர்த்தி வழங்க அறிவுரை வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(iii) மேலும், 1/2 குதிரை திறன் கொண்ட மோட்டார் பொருத்தப்பட்ட 6,000 பெடல் தறிகளை அரசு மானியத்துடன் வழங்குதல், ஒரு நெசவாளருக்கு ரூ.1,500/- வீதம் 25,000 நெசவாளர்களுக்கு மின் மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரம் வழங்குதல் மற்றும்

(iv) 10,000 நெசவாளர்களுக்கு பசுமை வீடுகள் கட்டித் தருதல் போன்ற பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

57—

ஒருங்கிணைந்த பதிவுத் துறை கட்டடம்

வினா எண் 19464—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர், மதுரை, கடலூர் ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக கட்டடம் கட்டும் பணி முடிவுற்று திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 128, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 25-8-2009-ன்படி, மதுரை மாவட்டம், இராசகம்பீரம் கிராமம், ஒத்தக்கடையில் ரூ.1 கோடியே 91 இலட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக வளாகமும், கடலூர் மாவட்டம், திருப்பாதிரிபுலியூரில் ரூ.1 கோடியே

[2013 அக்டோபர் 28

32 இலட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக வளாகமும், அரசாணை (நிலை) எண் 43, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 7-4-2010-ன் படி, வேலூர் மாவட்டம், ஆரணி சாலையில் ரூ.1 கோடியே 28 இலட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக வளாகமும் கட்ட நிதி ஒதுக்கீடும் நிருவாக அனுமதியும் வழங்கப்பட்டு, கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு 22-11-2012 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் காணொளிக் காட்சிமூலம் திறக்கப்பட்டு, மேற்படி அலுவலகங்கள் தற்போது புதிய கட்டடங்களில் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன.

58—

சொந்தக் கட்டடம்

வினா எண் 25418—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடியில் உள்ள சார் பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். பதிவுத் துறையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் அனைத்துச் சார் பதிவாளர் அலுவலகங்களுக்கும் 5 ஆண்டுகளுக்குள் சொந்தக் கட்டடம் கட்டுவதென அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, 2012-2013 ஆம் நிதியாண்டிற்கு அரசாணை (நிலை) எண் 144, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 20-11-2012-ல், 29 சார் பதிவாளர் அலுவலகங்களுடன்கூடிய 17 ஒருங்கிணைந்த பதிவுத் துறை வளாகங்கள் மற்றும் இளையான்குடி சார் பதிவாளர் அலுவலகம் உள்ளிட்ட தனித் தனியே 48 சார் பதிவாளர் அலுவலகங்கள் கட்டுவதற்கு நிருவாக அனுமதி மற்றும் ரூ.48.90 கோடி நிதி

2013 அக்டோபர் 28]

ஒதுக்கீடும் செய்து ஆணை வெளியிடப்பட்டது. அதன்படி, இளையான்குடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு ரூ.55.00 இலட்சம் மதிப்பீட்டில் சொந்தக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

59—

வழிகாட்டி மதிப்பினைக் குறைத்தல்

வினா எண் 29433—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுவதும் வழிகாட்டி மதிப்பு 100-300 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளதால் பத்திரப் பதிவுகள் பெரிதளவில் சரிந்துள்ளதால் வழிகாட்டி மதிப்பினை குறைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நமது மாநிலத்தில், தற்போதைய சந்தை மதிப்பிற்கேற்ப சொத்துகளின் வழிகாட்டி மதிப்பு தயாரிக்கப்பட்டு, 1-4-2012 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. வழிகாட்டி மதிப்பினைக் குறைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

60—

உயர்நிலைப் பள்ளிகள் அமைத்தல்

வினா எண் 21556—திரு. வே. குணசீலன்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதியில் ஆதி திராவிடர் உயர்நிலைப் பள்ளி மற்றும் ஆதி திராவிடர் மகளிர் உயர்நிலைப் பள்ளிகள் புதியதாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் 1,095 ஆதி திராவிடர் நலப் பள்ளிகளும் 299 உண்டி உறைவிடப் பள்ளிகளும் 2 ஏகலைவா மாதிரி பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக செயல்பட்டு வருகின்றன.

2. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் புதிதாக ஆரம்பப் பள்ளிகள் நேரடியாக துவக்கப்படுவது தற்போது நடைமுறையில் இல்லை. எனினும், ஆதி திராவிடர்/பழங்குடியின மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகள் கண்டறியப்பட்டு அப்பகுதிகளில் "அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்" (SSA)கீழ் ஆதி திராவிடர் நலத் துவக்கப் பள்ளிகள் பள்ளிக் கல்வித் துறையால் துவக்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று உயர்நிலைப் பள்ளிகள்/மேல்நிலைப் பள்ளிகள் நேரடியாக தொடங்கப்படுவதும் நடைமுறையில் இல்லை. எனினும், ஆதி திராவிடர்/பழங்குடியின மாணவர்களின் இடைநிற்றலைக் குறைக்கவும், உயர்கல்வி பெறவும் நிதிநிலை மற்றும் தேவைக்கேற்ப ஆண்டுதோறும் ஆதி திராவிடர்/பழங்குடியின நல நடுநிலை/உயர்நிலை பள்ளிகள் அடுத்த நிலைக்கு தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன.

3. எனவே, வந்தவாசி தொகுதியில் ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளி மற்றும் ஆதி திராவிடர் நல மகளிர் உயர்நிலைப் பள்ளிகள் புதியதாக துவக்க வழிவகை இல்லை.

61—

கோழிப் பண்ணைகள் அமைக்க கடனுதவி

வினா எண் 28650—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆதி திராவிடர்களுக்கு நாட்டுக் கோழிப் பண்ணைகள் அமைக்க தாட்கோமூலம் கடனுதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாட்டுக் கோழிப் பண்ணைகள் அமைப்பது தொடர்பாக கால்நடை பராமரிப்புத் துறை பரிந்துரையுடன், பண்ணைகள் அமைக்கக்கூடிய இடம் தட்ப வெப்ப நிலைக்கு ஏதுவாக இருக்குமானால் கோழிப் பண்ணை அமைப்பதற்கு தாட்கோமூலம் கடனுதவி வழங்க பரிசீலனை செய்யப்படும்.

62—

காலிப் பணியிடங்கள் நிரப்புதல்

வினா எண் 29268—திரு. கு. ரவி: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஆதி திராவிடர் நல ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் முதுகலை கணிதம், இயற்பியல் மற்றும் இளங்கலை கணிதம், தமிழ் ஆகிய பாடப் பிரிவுகளில் உள்ள ஆசிரியர் காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் அரசு ஆதி திராவிடர் நல ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் முதுகலை கணிதம், இயற்பியல் பாடப் பிரிவுகளில் காலியாக இருந்த ஆசிரியர் பணியிடங்கள், ஆசிரியர் தேர்வு வாரியத்தின்மூலம் இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆசிரியர்களைக் கொண்டு 20-2-2013 அன்று நடைபெற்ற கலந்தாய்வின்மூலம் நிரப்பப்பட்டுள்ளன. மேலும், இளங்கலை கணிதம் மற்றும் தமிழ் பாடங்களுக்கான காலிப் பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்படும் ஆசிரியர்களைக் கொண்டு விரைவில் நிரப்பப்படும்.

63—

நினைவு மண்டபத்தை சீரமைத்தல்

வினா எண் 16539—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், காளையார்கோவிலிலுள்ள மன்னர் முத்துவடுகநாதர் நினைவு மண்டபத்தை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காளையார்கோவிலில் மன்னர் முத்துவடுகநாத தேவருக்கு நினைவு மண்டபம் ஏதும் கட்டப்படவில்லை. எனினும், சிவகங்கை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள மன்னர் முத்துவடுகநாதர் சமாதி அரசால் நிறுவப்படாமலும், தனியாரால் பராமரிக்கப்பட்டு வரும் நிலையில், இச்சமாதியை சீரமைத்தல் தொடர்பான கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

64—

திருமண மண்டபம் கட்டுதல்

வினா எண் 29358—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, அரசிராமணி கிராம பேரூராட்சி, வெள்ளூற்றுப்பெருமாள் கோயிலில் திருமண மண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, அரசிராமணி கிராமம், அருள்மிகு வெள்ளூற்றுப்பெருமாள் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள பட்டியலைச் சாராத திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் எடப்பாடி நகர், அருள்மிகு பிரசன்ன நஞ்சண்டேஸ்வரர் திருக்கோயில் செயல் அலுவலரால் தக்கார் நிலையில் நிருவகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்கு வலது புறத்தில் சுமார் 25 அடி அகலம் 80 அடி நீளத்தில் 15 ஆண்டுகளுக்கு முன்பு உபயதாரர்களால் கட்டப்பட்ட ஆர்.சி.சி. மண்டபம் ஒன்று உள்ளது. இத்திருக்கோயிலில் திருமணம் செய்பவர்கள் மேற்படி மண்டபத்தில் உணவருந்தி செல்ல அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. மேற்படி திருமண மண்டபம் தற்போது நல்ல நிலையில் உள்ளதால், இந்து சமய அறநிலையத் துறைமூலம் புதியதாக திருமண மண்டபம் கட்டும் திட்டம் ஏதுமில்லை.

65—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 5995—திரு. இரா. மணிமாறன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூவிருந்தவல்லி தொகுதி, காக்களூர், நத்தம்மேடு ஆகிய கிராமங்களில் பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

திருவள்ளூர் வட்டம், காக்களூர் மற்றும் நத்தம்மேடு கிராமங்களில் வீடுமூலம் ஆக்கிரமணம் செய்துள்ள இடம் நீர்நிலை புறம்போக்கு என்பதாலும், உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின்படி

[2013 அக்டோபர் 28

நீர்நிலைப் புறம்போக்கு இடங்களில் வீட்டுமனை ஒதுக்கீடு செய்ய தடையாணை அமலில் இருப்பதாலும் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

66—

நிலம் கையகப்படுத்தி பள்ளிக்கு ஒப்படைத்தல்

வினா எண் 18149—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், மாங்குளம் ஊராட்சி, மூங்கில் ஊரணி பள்ளிக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் வழங்கப்பட்டுள்ள பட்டாக்களை இரத்து செய்து அந்த நிலத்தை கையகப்படுத்தி பள்ளிக்கு மீண்டும் ஒப்படைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மாங்குளம் குரூப் மூங்கில் ஊரணி பள்ளிக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் வழங்கப்பட்டுள்ள பட்டாக்கள் இரத்து செய்யப்பட்டு, மீண்டும் மேற்படி பள்ளிக்கு ஒதுக்கப்பட்டு, பள்ளிக்கூடம் இயங்கி வருகிறது. மேற்கண்ட இடங்களில் ஆக்கிரமிப்பு ஏதுமில்லை.

67—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 18220—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

(அ) ஆரணி தொகுதி, கொங்கராம்பட்டில் வசிக்கும் நரிக்குறவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கொங்கராம்பட்டு கிராமத்தில் கடந்த 1997 ஆம் ஆண்டில் நரிக்குறவர்களுக்கு ச.எண் 85/1A1, எக்டேர் 1.02.5 புஞ்சை நிலம் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்காக போளூர் ஆதி திராவிட நலத் தனி வட்டாட்சியரால் கையகப்படுத்தப்பட்டு, 48 நரிக்குறவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு விட்டது. பொதுவுக்கு என விடப்பட்ட இடத்தில் 9 மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனை வழங்கியதில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து நிலுவையில் உள்ளது. எனவே, நீதிமன்றத் தீர்ப்பிற்குப் பின் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

68—

ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

வினா எண் 21732—திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி, 37-வது வட்டம், கிருஷ்ணமூர்த்தி நகர், கணபதி தெரு, ராமகிருஷ்ணா தெரு, டி.வி.கே. இணைப்புச் சாலை, பாலாஜி தெருவில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

கோட்டை-தண்டையார்பேட்டை வட்டம், பெரம்பூர் தொகுதி, 37-வது வட்டம், கிருஷ்ணமூர்த்தி நகர், கணபதி தெரு, ராமகிருஷ்ணா தெரு, பாலாஜி தெரு ஆகிய மூன்றிலும் ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை. இப்பகுதியாவும் பட்டா நிலம். மேலும், டி.வி.கே. இணைப்புச் சாலையை ஒட்டியுள்ள கூவம் நதியின் வடபுறத்தில் அன்னை சத்யாநகர் என உள்ள ஆக்கிரமிப்பு பகுதிகள் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டு, அவ்விடத்தில் குடியிருப்போருக்கு குடிநீர் இணைப்பு, கழிவுநீர் இணைப்பு, மின் இணைப்பு ஆகியவற்றினை பெறுவதற்கு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் தடையில்லாச் சான்று வழங்கப்பட்டுள்ளது. இதனை தற்போது ஆக்கிரமிப்பு பகுதியாகக் கருத இயலாது என்பதால், ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் தொடர்பான வினா எழாது.

69—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 26606—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) இராதாபுரம் தொகுதி, பணகுடி பேரூராட்சி, பணகுடி கிராமம், புல எண்கள் 1375, 1376இல் வசித்து வரும் மக்களுக்கு பட்டா வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், பணகுடி பகுதி-I கிராமம், புல எண் 1375இல் 0.35.0 எக்டேர்

2013 அக்டோபர் 28]

நிலமும், புல எண் 1376இல் 0.67.0 எக்டேர் நிலமும், பட்டா எண்1இன்படி அருள்மிகு சிவகாமி அம்மன் சுவாமி திருக்கோயில் பெயரில் "அ" பதிவேட்டில் உள்ளது. புல எண் 1375 நத்தம் நிலவரி திட்டத்தில் 1375/1 முதல் 1376/27 வரை உட்பிரிவாகி "சிவகாமி அம்மன் கோயில்" நத்தம் பட்டா எண் 470, நத்தம் நிலவரி திட்டத்தில் புல எண் 1376/1 முதல் 1376/72 வரை உட்பிரிவாகி, நத்தம் எண் 470 "சிவகாமி அம்மன் கோயில் நிருவாக அதிகாரி" என பட்டாவாக உள்ளது. புல எண் 1375, 1376-இல் 1.02.0 எக்டேர் நிலத்தில் தற்போது வீடு கட்டி சுமார் 50 வருடங்களாக வசித்து வருகின்றனர். குடியிருப்பு நிலம், இந்து அறநிலையத் துறைக்கு உட்பட்ட கோயிலுக்குரிய பட்டா நிலம் என்பதால் இந்து சமய அறநிலையத் துறை அனுமதி வழங்கும் பட்சத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

70—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 26799—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி நகராட்சி, வாலியன் பொத்தை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி வட்டம் மற்றும் கிராமம், பொத்தை பிளாக் 2, வார்டு-பி, நகர அளவை 143 குலமும், வாரியும் என்ற வகைப்பாட்டில் மொத்த விஸ்தீரணம் 1,09,850 சதுர மீட்டரில், 18,145 ச.மீ. பரப்பு கிராம நத்தமாக மாற்றம் செய்யப்பட்டு, 5,990 ச.மீ. அளவில் 101 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா

[2013 அக்டோபர் 28

வழங்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள இடங்களில் தகுதியுள்ள சுமார் 60 பயனாளிகளைத் தேர்வுசெய்து இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு தகுதியான நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

71—

ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

வினா எண் 28094—திரு. சு. ரவி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், பெருமாள்ராஜபேட்டை ஊராட்சி, பெருமாள்ராஜபேட்டை இருளர் காலனியில் 1 கிலோ மீட்டர் பொது வழிப்பாதை ஆக்கிரமிப்பை அகற்றி சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருமாள்ராஜபேட்டை கிராமம் ச.எண் 15-ல் சுமார் 50 இருளர் இனமக்கள் வீடுகட்டி வசிக்கின்றனர். மேற்படி குடியிருப்புப் பகுதிகளுக்கு ச.எண் 38/1 வண்டிப் பாதை ச.எண் 12/7, வண்டிப் பாதை மற்றும் புல எண் 1/1 வண்டிப் பாதை ஆகிய புலங்களில் வழியே போக, வர பாதை செல்கிறது. தற்போது மேற்படி பாதையில் எவ்வித ஆக்கிரமிப்புகளும் இல்லை.

72—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 28128—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, கரைப்புதூர் கிராம ஊராட்சி, அவரப்பாளையம் கிராமம், க.ச. எண் 444, பாச்சாங்காட்டுபாளையம், க.ச.எண் 157, உப்பிலிபாளையம் கிராமம்,

2013 அக்டோபர் 28]

க.எண் 93/1B மற்றும் அய்யம்பாளையம் கிராமம் க.எ. எண் 435இல் உள்ள நத்தம் புறம்போக்கில் வீடு கட்டி வசித்து வரும் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் வட்டம், கரைப்புதூர் கிராமம், க.எ. 157, 435/2, 444 ஆகிய நத்தம் புறம்போக்கில் வீடுகட்டி குடியிருப்பவர்களுக்கு நத்தம் நிலவரித் திட்டத்தில் மனைவரி பட்டா வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் விடுபட்டுள்ளவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கரைப்புதூர் கிராமம் க.எ.93/1B மந்தைப் புறம்போக்கில் பட்டா வழங்க கால்நடைத் துறையின் தடையில்லாச் சான்றுக்கு மூன்மொழிவுகள் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

73—

குட்டை புறம்போக்கை நத்தமாக மாற்றுதல்

வினா எண் 28689—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, கே. கிருஷ்ணாபுரம் ஊராட்சி, கிருஷ்ணாபுரம் பிரிவில் உள்ள குட்டை புறம்போக்கை நத்தமாக மாற்றிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் வட்டம், கே. கிருஷ்ணாபுரம் பிரிவில் உள்ள குட்டை புறம்போக்கு (நீர்நிலைப் புறம்போக்கு) என்பதால் நீதிமன்ற உத்தரவின்படி நத்தமாக மாற்றி பட்டா வழங்க இயலாது.

[2013 அக்டோபர் 28

74—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 28734—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஒன்றியம், வேலம்பாளையம் கிராம ஊராட்சி, வி.ஆர்.பி. காலனி ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட தனியார் நிலத்தில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் வட்டம், வேலம்பாளையம் கிராமம், வி.ஆர்.பி. காலனியில் தனியார் நிலத்தில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

75—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 29479—திரு. சு. ரவி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், மிட்டப்பேட்டை ஊராட்சி, மிட்டப்பேட்டை கிராமத்திலுள்ள இருளர் இன மக்கள் அனைவருக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் வட்டம், மிட்டப்பேட்டை கிராமம், புல எண் 299, கல்லாங்குத்து பொம்மிவாரி குளம்,

2013 அக்டோபர் 28]

புறம்போக்கில் இருளர் இன மக்கள் வீடுகட்டி வசித்து வருகின்றனர். மேற்படி புல எண் 299, கிராம கணக்குகளில் பொம்மிவாரி குளம் என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இவை நீர்நிலைப் புறம்போக்கு என்பதால் வீட்டுமனை ஒப்படை செய்ய உச்ச நீதிமன்றத்தின் தடை உள்ளதால் பட்டா வழங்க இயலாது.

76—

புறம்போக்கு நிலத்தினை மீட்டல்

வினா எண் 29647—திரு. ஏ. லாசர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதி, ஜி. கல்லுப்பட்டி ஊராட்சியில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள புறம்போக்கு நிலத்தினை மீட்க அரசு ஆவன செய்யுமா?.

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரியகுளம் தொகுதி, கெங்குவார்பட்டி கிராமம், ஜி. கல்லுப்பட்டி ஊராட்சியில் மேல்நிலைப் பள்ளியிலிருந்து கிராம எல்லை வரை ஆக்கிரமிப்பு உள்ளது. மேலும், பஸ் நிலையத்திலிருந்து பஞ்சாயத்து ஆபிஸ் வரையிலுள்ள பஞ்சாயத்து யூனியன் ரோட்டில் ஆக்கிரமிப்புகள் உள்ளது. மேற்படி ஆக்கிரமிப்புகளை நெடுஞ்சாலைத் துறைமூலம் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மெயின்ரோடு அரச மரத்திலிருந்து கிளை நூலகம் வரை உள்ள ஆக்கிரமிப்புகளை பஞ்சாயத்துமூலம் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மங்கம்மாள் சாலையில் ஆக்கிரமிப்புகளாக உள்ள புளிய மரங்கள் ஏற்கெனவே கிராம பஞ்சாயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

77—

கிராம நிருவாக அலுவலகம்

வினா எண் 30174—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் அருகில் உள்ள பேய்க்குளம் கிராம நிருவாக அலுவலகத்தினை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், பேய்க்குளம் கிராமத்தில் உள்ள கிராம நிருவாக அலுவலகம் மிகவும் இடிந்த நிலையில் உள்ளதால் அதனை இடித்துவிட்டு புதிதாக கட்டடம் கட்டுவதற்கு பொதுப் பணித் துறை செயற் பொறியாளரிடம் மதிப்பீடுகள் பெற்று கட்டடம் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

78—

நிலத்தை அளத்தல்

வினா எண் 32263—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம் கிராமம், தெற்கு கண்ணாடிபுத்தூர் கிராமத்தில் பட்டா வழங்கியும் நிலத்தை அளந்து விடாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மடத்துக்குளம் வட்டம், சர்க்கார் கண்ணாடிபுத்தூர் கிராமம் புல எண் 608/1, 5-ல் 96 நபர்களுக்கு 2004-ல் பட்டா வழங்கப்பட்டு இடம் அளந்து காண்பிக்கப்பட்டது. இது நாள் வரை ஒப்படை பெற்ற நபர்கள் ஒருவரும் குடியேறாததால் மேற்படி பட்டாக்களை இரத்து செய்ய வருவாய் கோட்டாட்சியருக்கு முன் மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. தகுதியான புதிய பயனாளிகளை

2013 அக்டோபர் 28]

தேர்வு செய்து பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) பட்டா வழங்கிய பின்பு பயனாளிகளுக்கு அளந்து காண்பிக்கப்படும்.

79—

பனைவெல்ல கூட்டுறவுச் சங்கத்தினை விரிவுபடுத்துதல்

வினா எண் 30360—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட பனைவெல்ல கூட்டுறவுச் சங்கத்தினை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. தோ.பெ. பூனாட்சி, கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்:

விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட பனைவெல்ல கூட்டுறவுச் சங்கம் 10-7-1990 அன்று கலைக்கப்பட்டது. மேலும், இப்பகுதியில் உள்ள பனைத் தொழிலாளர்கள் இத்தொழில் புரிய முன்வராத நிலையில் இச்சங்கத்தினை மேம்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், இதுகுறித்து செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

80—

ஆசிரியர் பணியிடங்கள்

வினா எண் 13344—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தும்பலப்பள்ளி கிராம ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் கூடுதலாக இரண்டு இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தும்பலப்பள்ளி கிராம ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 114 மாணவர்கள் பயில்கின்றனர். இப்பள்ளியில் 1 தலைமையாசிரியர் மற்றும் 4 இடைநிலை ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரப்படி கூடுதலாக ஆசிரியர் பணியிடம் அனுமதிப்பது குறித்து அவசியம் எழவில்லை.

81—

பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்குதல்

வினா எண் 15970—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) 2011-2012 ஆம் ஆண்டில் தமிழ் மொழியிலேயே நடவடிக்கை மேற்கொள்ளும் மாவட்ட நிலை அலுவலகங்களுள் சிறந்த ஒன்றிற்கு பாராட்டுச் சான்றிதழும், கேடயமும் வழங்கப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், எத்தனை மாவட்டங்களில் வழங்கப்பட்டன?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டில் தமிழ் மொழியிலேயே நடவடிக்கை மேற்கொள்ளும் மாவட்ட நிலை அலுவலகங்களுள் சிறந்த அலுவலகம் தேர்வு செய்யப்பட்டு, பாராட்டுச் சான்றிதழும், கேடயமும் வழங்கப்பட்டன. 32 மாவட்டங்களில் உள்ள சிறந்த அலுவலகத்திற்கு பாராட்டுச் சான்றிதழும், கேடயமும் வழங்கப்பெற்றுள்ளன.

2013 அக்டோபர் 28]

82—

சுற்றுச்சுவர் கட்டுதல்

வினா எண் 22808—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, இருந்திரப்பட்டி ஊராட்சி, திம்மயம்பட்டி, குரும்பட்டி மற்றும் மாரப்பட்டி ஆகிய பகுதிகளில் உள்ள தொடக்கப் பள்ளிகளுக்குச் சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, இருந்திரப்பட்டி ஊராட்சி, திம்மயம்பட்டி, குரும்பட்டி மற்றும் மாரப்பட்டி ஆகிய பகுதிகளில் உள்ள தொடக்கப் பள்ளிகளுக்கு தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களின்படி இக்கல்வியாண்டில் சுற்றுச்சுவர் கட்ட இயலாது.

83—

ஆசிரியர் பணியிடம்

வினா எண் 22889—திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், வாணியம்பாடி முஸ்லிம்பூர் நியூடவுன் ஊராட்சி, உருது நடுநிலைப் பள்ளிகளில் கணக்கு (உருதுவழி) ஆசிரியர் பணியிடங்களை நிரப்பும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிறுபான்மை மொழி உருது வழி கணக்கு பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கு ஆசிரியர் தேர்வு வாரியத்திடம் பணிநாடுநர்களின் பட்டியல் கோரப்பட்டுள்ளது. அப்பட்டியல் பெறப்பட்டதும் வேலூர் மாவட்டம், வாணியம்பாடி முஸ்லிம்பூர் நியூடவுன் நகராட்சி, உருது நடுநிலைப் பள்ளிக்கு தகுதியின் அடிப்படையில் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும்.

84—

தலைமையாசிரியர் நியமனம்

வினா எண் 27522—திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆம்பூர் தொகுதி, மின்னூர் ஊராட்சியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கு தலைமையாசிரியரை நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம்பூர் தொகுதி, மின்னூர் அரசு உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடத்தில் இராமநாதபுரம் வட்டார வள மைய மேற்பார்வையாளராகப் பணிபுரிந்த திரு. ஆர் முத்துநாகலிங்கம் என்பவரை பணி மாறுதல்மூலம் நியமனம் செய்து பள்ளிக் கல்வி இயக்குநரால் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

2013 அக்டோபர் 28]

85—

ஆசிரியர் பணியிடங்கள் நிரப்புதல்

வினா எண் 27931—திரு. சு. ரவி: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, கிருஷ்ணாபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் காலியாக உள்ள இரண்டு ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் ஒன்றியம், கிருஷ்ணாபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 65 மாணவர்கள் பயின்று வருகின்றனர். மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப 1 தலைமையாசிரியர் மற்றும் 2 இடைநிலை ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இப்பள்ளிக்கு ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரப்படி ஆசிரியர் பணியிடம் அனுமதிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். காலிப் பணியிடம் ஏதுமில்லை.

86—

வகுப்பறைகள் கட்டுதல்

வினா எண் 29183—திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு வகுப்பறைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகளில் கட்டடங்கள் கட்டுவது, உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது, கட்டடங்களை சீரமைப்பது ஆகிய பணிகள் அரசால் மேற்கொள்ளப்படுவதில்லை. அந்தந்தப் பள்ளி நிருவாகங்களே இப்பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

(ஆ) வினா எழவில்லை.

87—

நோட்டுப் புத்தகங்களின் விலை குறைப்பு

வினா எண் 31331—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் நோட்டுப் புத்தகங்களின் விலையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு அரசால் நோட்டுப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. வெளிச்சந்தையில் விற்கப்படும் நோட்டுப் புத்தகங்களின் விலையைக் குறைக்க வேண்டிய கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

88—

மருத்துவர்கள் நியமனம்

வினா எண் 1970—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2013 அக்டோபர் 28]

சேலம் வடக்கு தொகுதியிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார மருத்துவமனைகளில் போதிய மருத்துவர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் வடக்கு தொகுதியில் உள்ள கன்னங்குறிச்சி சுகாதார நிலையத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட மூன்று மருத்துவ அலுவலர் பணியிடங்களில் மூன்று மருத்துவ அலுவலர்களும், நடமாடும் மருத்துவக் குழுவிற்கு ஒப்பளிக்கப்பட்ட ஒரு மருத்துவ அலுவலர் பணியிடத்தில் ஒரு மருத்துவ அலுவலரும் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், கன்னங்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டதையடுத்து, இரண்டு மருத்துவ அலுவலர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, அப்பணியிடங்களில் இரண்டு மருத்துவ அலுவலர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேற்படி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள 6 பணியிடங்களிலும், ஆறு மருத்துவ அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

89—

கருவுற்ற தாய்மார்களுக்கு உதவித்தொகை

வினா எண் 4393—திரு. கு. நல்லதம்பி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மகப்பேறு காலங்களில் தாய்மார்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை காலதாமதமாக வழங்காமல் விரைவாக வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின்கீழ் கருவுற்ற தாய்மார்களுக்கு 7-வது மாதத்தில் முதல்

[2013 அக்டோபர் 28

தவணை ரூ.4,000/-மும், குழந்தை பிறந்தவுடன் இரண்டாவது தவணை ரூ. 4,000/-மும், குழந்தைக்கு அனைத்து தடுப்பூசிகள் போட்டவுடன் மூன்றாவது தவணை ரூ.4,000/-மும் அரசால் வழங்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு காலதாமதமின்றி வழங்கப்பட்டு வருகிறது.

90—

பணியிடங்கள் நிரப்புதல்

வினா எண் 14399—திருமதி ம. சக்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி மருத்துவமனையில் மருத்துவர் மற்றும் உதவியாளர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி அரசு மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட 12 உதவி மருத்துவர் பணியிடங்களில் 12 உதவி மருத்துவர்கள் பணிபுரிகின்றனர். மேலும், ஒப்பளிக்கப்பட்ட 3 முதன்மை குடிமை மருத்துவர்களில் 2 முதன்மை குடிமை மருத்துவர்கள் பணிபுரிகின்றனர். காலியாகவுள்ள ஒரு முதன்மை குடிமை மருத்துவர் பணியிடமும், 4 முதுநிலை குடிமை மருத்துவர் பணியிடங்களும் கலந்தாய்வின் மூலமும், பதவி உயர்வின் மூலமும் நிரப்பப்படவுள்ளன.

91—

மருத்துவர்கள் நியமனம்

வினா எண் 15549—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை மற்றும் பூவந்தி அரசு மருத்துவமனையில் போதுமான மருத்துவர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில் உள்ள மானாமதுரை அரசு மருத்துவமனை 68 படுக்கை வசதிகள் கொண்டதுடன், அங்கு நாளொன்றுக்கு சராசரியாக 310 வெளி நோயாளிகள் மற்றும் 25 உள் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், இம்மருத்துவமனையில் சராசரியாக 10 பெரிய மற்றும் 20 சிறிய வகை அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டு வருகின்றன.

2. மேற்கண்ட மருத்துவமனையின் செயல்பாட்டினைக் கருத்தில் கொண்டும், மருத்துவர் மறுசீரமைப்பின்படியும், தற்போது மானாமதுரை அரசு மருத்துவமனையில் மருத்துவர் பணியிடங்கள் கீழ்க்கண்டவாறு சீரமைக்கப்பட்டு போதிய அளவு மருத்துவர்கள் பணியில் உள்ளனர்:

முதன்மை குடிமை மருத்துவர்	..	1
பல் மருத்துவம்	..	1
பொது மருத்துவம்	..	3
அறுவை சிகிச்சை நிபுணர்	..	2
மகப்பேறு மருத்துவம்	..	3
குழந்தைகள் நலம்	..	2
எலும்பு முறிவு	..	1
மயக்கவியல்	..	2

3. மேலும், பூவந்தி வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 2 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் ஒப்பளிப்பு உள்ளன. அதில், 2 மருத்துவ அலுவலர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

92—

மரணமுற்றவர்கள் எண்ணிக்கை

வினா எண் 19730—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை வட்டத்திலிருந்து பொள்ளாச்சிக்கு மகப்பேறு மருத்துவ சிகிச்சைக்காகச் சென்று மரணமுற்றவர்கள் எத்தனை பேர்?

(ஆ) இது போன்ற மரணங்களைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை வட்டத்திலிருந்து பொள்ளாச்சிக்கு மகப்பேறு மருத்துவ சிகிச்சைக்காகச் சென்று மரணமடைந்தவர்கள் எவரும் இல்லை.

(ஆ) பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவ அலுவலர்கள் 6 (ஆறு) பேர் நியமனம் செய்யப்பட்டு பணியில் உள்ளார்கள். எனவே, மகப்பேறு சிகிச்சைக்கு வருபவர்களுக்கு உரிய சிகிச்சை சிறப்பாக அளிக்கப்பட்டு வருகிறது.

93—

உள்நோயாளிகளுக்கு உணவுப் பொருட்கள் வழங்குதல்

வினா எண் 19737—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆனைமலை வட்டாரத்தில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலைய உள் நோயாளிகளுக்கு பழங்கள் மற்றும் முட்டை, பால், ரொட்டி வழங்க அரசு முன்வருமா?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஆனைமலை உள்பட தமிழ் நாட்டில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் சிகிச்சை பெறவரும் உள் நோயாளிகள் மற்றும் பிரசவத்திற்கு தங்கி சிகிச்சை பெறும் கர்ப்பிணி தாய்மார்களுக்கும் மாவட்ட சுகாதார குழுமத்தின்மூலம் காலை உணவாக – பால், முட்டை மற்றும் ரொட்டி அல்லது பொங்கல் அல்லது இட்லி, சாம்பார் அல்லது கிச்சடி, சட்னி மற்றும் சாம்பார் ஆகியனவும், மதிய உணவாக – சாதம், சாம்பார், கூட்டு, ரசம் மற்றும் மோர், முட்டை ஆகியனவும், இரவு உணவாக – பால் மற்றும் ரொட்டி அல்லது இட்லி, சாம்பார் மற்றும் பால் ஆகியனவும் வழங்கப்பட்டு வருகின்றன.

94—

உடற்கூறு அலுவலர் நியமனம்

வினா எண் 20274—திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி அரசு மருத்துவமனைக்கு உடற்கூறு அலுவலரை விரைவில் நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செஞ்சி அரசு மருத்துவமனைக்கு முதன்மை குடிமை மருத்துவர் பணியிடம் உள்ளிட்ட ஒப்பளிக்கப்பட்ட 16 மருத்துவப் பணியிடங்களில் முதன்மை குடிமை மருத்துவர் பணியிடம் மற்றும் முதுநிலை குடிமை மருத்துவர் பணியிடம் தவிர ஏனைய மருத்துவர் பணியிடங்களில் மருத்துவர்கள் பணிபுரிந்து

வருகின்றனர். ஆனால், உடற்கூறு அலுவலர் என்று தனியாகப் பணியிடம் எதுவும் இல்லை. பணியிலிருக்கும் மருத்துவர்களின் தேவைக்கேற்ப கால நேரத்திற்கேற்றவாறு உடற்கூறு செய்யும் பணியையும் கவனித்து வருகின்றனர். எனவே, செஞ்சி அரசு மருத்துவமனைக்கு உடற்கூறு அலுவலரை நியமிக்க வேண்டியதன் அவசியம் எழவில்லை.

95—

மருத்துவர் நியமனம்

வினா எண் 21086—திரு. ஆர். அருள்செல்வன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை மாவட்டம், மயிலாடுதுறை ஒன்றியம், சித்தமல்லி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவரை நியமனம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை ஒன்றியம், சித்தமல்லியில் உள்ள சுகாதார நிலையம் துணை சுகாதார நிலையமாகும். அரசு விதிகளின்படி, அதற்கு மருத்துவ அலுவலர் பணியிட ஒப்பளிப்பு ஏதுமில்லை. மேலும், எலந்தோப்பு ஆரம்ப சுகாதார நிலையம் 4 கி.மீ. தொலைவில் சித்தமல்லி உள்ளதால், பொதுமக்கள் அனைவரும் எலந்தோப்பு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். எலந்தோப்பு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 2 மருத்துவ அலுவலர்கள் பணியிடம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அதில் ஒரு மருத்துவ அலுவலர் பணிபுரிந்து வருகின்றார். காலியாக உள்ள ஒரு மருத்துவ அலுவலர் பணியிடம் மருத்துவப் பணிகள் தேர்வு வாரியம்மூலம் நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2013 அக்டோபர் 28]

96—

மருத்துவர்கள் நியமனம்

வினா எண் 21857—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில் மருத்துவர்களை நியமிக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு 38 மருத்துவர்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் காலியாக உள்ள மூதன்மை குடிமை மருத்துவர் மற்றும் முதுநிலை குடிமை மருத்துவர் உள்ளிட்ட 8 பணியிடங்கள் தவிர, 30 மருத்துவர் பணியிடங்கள் நிரப்பப்பட்டு மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இந்த 30 மருத்துவர்களைக் கொண்டு, தலைமை மருத்துவ அலுவலரால் அவசர சிகிச்சைப் பிரிவில் சுழற்சி முறையில் மருத்துவர்கள் பணியமர்த்தப்பட்டு அப்பிரிவில் தொடர்ந்து மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். எனவே, கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் உள்ள அவசர சிகிச்சைப் பிரிவில், அவசர சிகிச்சைக்காக வரும் நோயாளிகள் மற்றும் விபத்தினால் பாதிக்கப்பட்டு வருபவர்களுக்கு தொடர்ந்து உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதால் அப்பிரிவில் தனியாக மருத்துவர் நியமிக்கப்பட வேண்டியதன் அவசியம் எழவில்லை.

97—

இரத்தசோகை நோய்

வினா எண் 22422—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

தமிழ்நாட்டில் இரத்தசோகை நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தேசிய குடும்ப நல ஆய்வு 3-ன்படி தமிழகத்தில் 6 மாதம் முதல் 59 மாதம் வரை உள்ள குழந்தைகள் 64 விழுக்காடும், 15 வயது முதல் 49 வயது வரை உள்ள கர்ப்பிணி தாய்மார்கள் 57.8 விழுக்காடும் இரத்தசோகை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கூடுதல் விவரங்கள்:-

1. இரத்தசோகையினைத் தடுக்க 1 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு இரும்புச் சத்து திரவம் கொடுக்கப்பட்டு வருகிறது.

2. 10 வயது முதல் 19 வயது வரை உள்ள வளர் இளம் பெண்களுக்கு வாரம் ஒருமுறை இரும்புச் சத்து மாத்திரை (பெரியது) கொடுக்கப்பட்டு வருகிறது.

3. கர்ப்பிணி தாய்மார்களுக்கு இரத்தசோகை நோயினைத் தடுக்க இரும்புச் சத்து மாத்திரை-100 கொடுக்கப்பட்டு வருகிறது.

4. கர்ப்பிணி தாய்மார்களுக்கு இரத்தசோகை நோயினைத் தடுக்க இரும்புச் சத்து மாத்திரை-200 மற்றும் 'அயன் சுக்ரோஸ்' (Iron Sucrose) ஊசி போடப்பட்டு வருகிறது.

5. குடல் புழுக்களினால் உண்டாகும் இரத்தசோகை நோயினைத் தடுப்பதற்கு 1 வயது முதல் 19 வயது வரை உள்ளவர்களுக்கு ஆல்பெண்டசோல் மாத்திரை ஆறு மாதங்களுக்கு ஒருமுறை வழங்கப்படுகிறது.

6. குடல் புழுக்களினால் உண்டாகும் இரத்தசோகை நோயினைத் தடுப்பதற்கு கர்ப்பிணி தாய்மார்களுக்கும் ஆல்பெண்டசோல் மாத்திரை வழங்கப்பட்டு வருகிறது.

2013 அக்டோபர் 28]

98—

காப்பீட்டு சிகிச்சைக்குப் பரிந்துரை

வினா எண் 22942—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட தலைமை மருத்துவமனையில் ஒரு பார்வை மையத்தை அமைத்து தனியார் மருத்துவமனைகளுக்கு காப்பீட்டு சிகிச்சை பெற பரிந்துரை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து மருத்துவமனைகளிலும் (தனியார் மருத்துவமனைகள், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகள்) தொடர்பு அலுவலர்களுடன்கூடிய தனிப் பிரிவு இத்திட்டத்தின்கீழ் பயனாளிகள் சிகிச்சை பெற தக்க உதவிகள் மற்றும் வழிகாட்டுதல்கள் அளிக்க அமைக்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் உள்ள முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் தொடர்பு அலுவலரை அணுகி இத்திட்டத்தின்கீழ் சிகிச்சை பெற தேவையான உதவிகளை பெற்றுக் கொள்ளலாம். மேலும் தொடர்பு அலுவலர்களின் கைப்பேசி எண்கள் www.cmchistn.com என்ற வலை தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. பொதுமக்கள் மேற்படி வலை தளத்தை பார்த்தும் விவரங்களை அறிந்து பயன் அடையலாம்.

99—

கருவுற்ற தாய்மார்களுக்கு உதவித்தொகை

வினா எண் 24934—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) விராலிமலை தொகுதி, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் கருவுற்ற தாய்மார்களுக்கு உதவித்தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் வாழும் (விராலிமலை தொகுதியில் வாழும் கருவுற்ற தாய்மார்கள் உட்பட) அனைத்து கருவுற்ற ஏழை, எளிய தாய்மார்களுக்கும் ரூ.12,000/- நிதி உதவி மூன்று தவணைகளில் ரூ.4,000/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

100—

கட்டட வசதி

வினா எண் 25046—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், ஓ. சிறுவயலிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் ஓ. சிறுவயல் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. பிற்படுத்தப்பட்டோருக்கான பகுதி மேம்பாட்டு நிதியின் மூலமாக 6 படுக்கைகள் கொண்ட பிரசவ அறை கட்டப்பட்டுள்ளது. மேலும், ஆய்வுக்கூட அரங்கம்,

2013 அக்டோபர் 28]

ஸ்கேன் அறை மற்றும் பிரசவ பின் கவனிப்பு அறை போன்ற கட்டடங்கள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. 2010-2011 நிதியாண்டில் தேசிய ஊரக நலத் திட்டத்தின்மூலம் (NRHM) 1.623 இலட்சம் நிதி உதவி அளிக்கப்பட்டு தடுப்பூசி அறை கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. போதுமான கட்டடங்களுடன் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுவதால் தற்போது கூடுதல் கட்டடம் ஏதும் கட்ட முன்மொழிவுகள் இல்லை.

பட்டியல் 16

1—

மின் உற்பத்தி நிலையம்

வினா எண் 16102—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காரே பெல்மா செக்டர்-II நிலக்கரி பகுதியில் 2,000 மெகா வாட் மின் உற்பத்தி நிலையத்தை சுரங்க வளாகத்தில் அமைக்கும் பணியின் தற்போதைய நிலையை அரசு தெரிவிக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

தன்னக நிலக்கரி சுரங்கமான காரே பெல்மா செக்டர்-II நிலக்கரி பகுதிக்கான விரிவான புத்தாய்வு (Detailed Exploration) மற்றும் சுரங்க திட்டம் தயார் செய்வதற்காக மகாதமிழ் காலரிஸ் லிமிடெட் மினரல் எக்ஸ்புலோரேஷன் கார்ப்பரேஷன் லிமிடெட் (MECL) என்ற இந்திய அரசின் பொதுத் துறை நிறுவனத்திற்கு பணிக்கான ஆணையை அளித்தது. அதற்கான பணியினை மினரல் எக்ஸ்புலோரேஷன் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனம் (MECL) 27-4-2010 அன்று தொடங்கி பிப்ரவரி 2012-ல் முடிக்கப்பட்டது. காரே பெல்மா செக்டர்-II நிலக்கரி பகுதிக்கான புவியியல் அறிக்கை 16-8-2012 அன்று கிடைக்கப்பெற்றது. இதன்படி, காரே பெல்மா செக்டர்-II நிலக்கரி பகுதியின் இருப்பு கொள்திறன் 1007

[2013 அக்டோபர் 28

மில்லியன் டன்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது. (திறந்தவெளி சுரங்கம் (Open cast) 683 மில்லியன் டன்கள் + பூமிக்கடியில் (Underground) 324 மில்லியன் டன்கள்) சுரங்க குத்தகைக்கான விண்ணப்பம் 15-5-2012 சட்டீஸ்கர் மாநில அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் தற்போது நடந்து கொண்டிருக்கின்றன. சுரங்கத் திட்டத்திற்கான வேலைகள் முடிவு செய்யப்பட்டு அதற்கான ஒப்புதல் மத்திய நிலக்கரி அமைச்சகத்திற்கு 10-1-2013 அன்று அனுப்பப்பட்டுள்ளது.

2—

மின் கட்டண வசூல் மையம்

வினா எண் 29540—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, அரசிராமணி கிராமம், குள்ளம்பட்டியில் மின் கட்டண வசூல் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1. சேலம் மாவட்டம், சங்ககிரி தொகுதி, அரசிராமணி கிராமம், குள்ளம்பட்டி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுமார் 1,200 மின் நுகர்வோர்கள் உள்ளனர்.

2. தேவூர் எடப்பாடி பிரதான சாலையில் தேவூரில் இருந்து 5 கி.மீ. தூரத்தில் குள்ளம்பட்டி அமைந்துள்ளது. அப்பகுதிகளில் சாலை வசதியும், பேருந்து வசதியும் உள்ளது.

3. குள்ளம்பட்டி பகுதியில் இருந்து தெற்கே 5 கி.மீ. தூரத்தில் தேவூர் பிரிவு அலுவலகமும், மேற்கே 6 கி.மீ. தூரத்தில் கோனேரிப்பட்டி பிரிவு அலுவலகமும் அமைந்துள்ளது.

4. தற்போது மின் கட்டணம் வசூல் செய்வது கணினி மயமாக்கப்பட்டுள்ளதால் நுகர்வோர் எந்தப் பிரிவு அலுவலகத்தில்

2013 அக்டோபர் 28]

வேண்டுமானாலும் மின் கட்டணத்தைச் செலுத்தும் வசதி உள்ளது. எனவே, குள்ளம்பட்டி பகுதியில் மின் கட்டணம் வசூல் மையம் அமைக்கத் தேவை எழவில்லை.

3—

காலிப் பணியிடங்கள் நிரப்புதல்

வினா எண் 29560—திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் வாரியத்தில் ஊழியர்களுக்கான காலிப் பணியிடங்களை முழுமையாக நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரம்ப நிலை பணிகளில் காலியாக உள்ள பதவிகளை நிரப்பிட தற்போது 1,000 தொழில்நுட்ப உதவியாளர்கள், 1,500 கணக்கீட்டாளர்கள் மற்றும் 4,000 களப் பணியாளர்கள் நேரடி நியமனம்மூலம் நிரப்புவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் மேற்கண்ட காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும்.

4—

மின் விளக்குகள் அமைத்தல்

வினா எண் 31228—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், வண்ணாங்குளம், காவாங்கரை தெரு மற்றும் ஈஸ்வரன் கோயில் தெரு ஆகிய தெருக்களில் புதிய மின் கம்பத்துடன்கூடிய மின் விளக்குகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், வண்ணாங்குளம் ஊராட்சி, காவாங்கரை தெருவில் 5 கையடக்க குழல் விளக்குகளும், ஈஸ்வரன்கோயில் தெருவில் 19 கையடக்க குழல் விளக்குகளும் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5—

மின் விளக்குகள் அமைத்தல்

வினா எண் 31230—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், முள்ளிப்பட்டு தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய குடியிருப்பில் உள்ள 4 மற்றும் 8-வது பிரதான சாலையில் புதிய மின் கம்பத்துடன் கூடிய மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், முள்ளிப்பட்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் உள்ள 4 மற்றும் 8-வது பிரதான சாலையில் ஏற்கெனவே 4 கையடக்க குழல் விளக்குகள் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2013 அக்டோபர் 28]

6—

மின் விளக்குகள் அமைத்தல்

வினா எண் 31232—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி மேற்கு ஒன்றியம், வண்ணாங்குளம் ஆதி திராவிடர் காலனியில் உள்ள மேட்டுத் தெரு, பள்ளித் தெரு மற்றும் கோயில் தெரு ஆகிய தெருக்களில் புதிய மின் கம்பங்களுடன்கூடிய மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி மேற்கு ஒன்றியம், வண்ணாங்குளம் ஊராட்சி, ஆதி திராவிடர் காலனியில் உள்ள மேட்டுத் தெரு, பள்ளித் தெரு மற்றும் கோயில் தெருவில் 17 கையடக்க குழல் விளக்குகளும், 1 மெர்க்குரி விளக்கும் மற்றும் 1 குழல் விளக்கும் உள்ளன. இப்பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க, விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

7—

மின் விளக்குகள் அமைத்தல்

வினா எண் 31255—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், ஆரியப்பாடி பள்ளத் தெரு, சக்தி நகர் மேட்டுத் தெரு, மதுராசோமந்தாங்கல் மேற்கு தெரு, கந்தசாமிபேட்டை, கதம்ப நகர் மற்றும் வேலூர் ரோடு ஆகிய பகுதிகளில் புதிய மின் கம்பங்களுடன்கூடிய மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், ஆரியப்பாடி பள்ளத் தெரு, சக்தி நகர் மேட்டுத் தெரு, மதுராசோமந்தாங்கல் மேற்கு தெரு, கந்தசாமிபேட்டை, கதம்ப நகர் மற்றும் வேலூர் ரோடு ஆகிய பகுதிகளில் ஏற்கெனவே 37 குழல் விளக்குகள், 39 கையடக்க குழல் விளக்குகள் மற்றும் 2 சோடியம் மின் விளக்குகள் பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

8—

மழைநீர்க் கால்வாய்ப் பணி

வினா எண் 12930—திரு. கு. நல்லதம்பி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எழும்பூர் தொகுதி, புதிய 107-வது வட்டம், குருசாமி சாலையில் மழைநீர்க் கால்வாய்ப் பணியினை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம், மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

எழும்பூர் தொகுதி, புதிய 107-வது வட்டம், குருசாமி சாலையில் மழைநீர்க் கால்வாய்ப் பணிகள் முடிக்கப்பட்டு விட்டன.

9—

பூங்கா அமைக்கும் பணி

வினா எண் 21362—திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

பெரம்பூர் தொகுதி, 36-வது வட்டம், 7-வது தெரு, புதுநகர் 8-வது தெருவில் பூங்கா அமைக்கும் பணியை விரைந்து முடிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

பெரம்பூர் தொகுதி, 36-வது வட்டம், 7-வது தெரு, புதுநகர் 8-வது தெருவில் பூங்கா அமைக்க போதுமான இட வசதி இல்லாத காரணத்தால் பூங்கா அமைக்க இயலாது.

10—

கைப்பிடிச் சுவர் அமைத்தல்

வினா எண் 21725—திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி, 45-வது வட்டம், பி.வி. காலனி, 30-வது பிரதான சாலையில் உள்ள பாலத்திற்கு கைப்பிடிச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

சென்னை மாநகராட்சி, மண்டலம்-4, கோட்டம்-45-ஐ சேர்ந்த பி.வி. காலனி, 30-வது பிரதான சாலையில் உள்ள பாலத்திற்கு கைப்பிடிச் சுவர் கட்டப்பட்டு கடந்த அக்டோபர் 2012-ல் பணி முடிக்கப்பட்டுள்ளது.

[2013 அக்டோபர் 28

11—

மரங்களை ஊராட்சி கணக்கில் சேர்த்தல்

வினா எண் 24125—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், விருதாப்பட்டி ஊராட்சி, பட்டியான்குளத்தில் உள்ள மரங்களை ஊராட்சி கணக்கில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம், மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், விருதாப்பட்டி ஊராட்சியில் அடங்கிய பட்டியான்குளத்தில் உள்ள தோட்டமானது ஊராட்சிக்குச் சொந்தமானதால், அதில் உள்ள மரங்கள் ஊராட்சி கணக்கில்தான் உள்ளன.

12—

குப்பைகள் அகற்றுதல்

வினா எண் 28156—திரு. கு. நல்லதம்பி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எழும்பூர் தொகுதி, 77-வது வட்டம், விளையாட்டு மைதானம் 2-வது தெரு, •பழைய ஆட்டுதொட்டி தெரு ஆகிய தெருக்களில் தினமும் குப்பைகள் அகற்றிட அரசு ஆவன செய்யுமா?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

சென்னை மாநகராட்சி, 77-வது வட்டம், விளையாட்டு மைதானம் 2-வது தெருவில் தினமும் காலை 6-00 மணிக்கு துப்புரவுப் பணியாளர்கள் மிதிவண்டி மூலமாக நேரடியாக வீட்டிற்குச் சென்று குப்பைகளை சேகரித்து மிதி வண்டியில் கொட்டப்பட்டு ஆட்டுதொட்டி தெருவில் வைக்கப்பட்டுள்ள குப்பை சேகரிக்கும் 3 பின்களில் கொட்டப்பட்டு தினமும் வரும் (Compactor Lorry) தானியங்கி கனரக வாகனம்மூலம் குப்பைகளை ஏற்றி ஓட்டேரி குப்பை மாற்றும் நிலையத்தில் கொட்டப்பட்டு வருகிறது. மேலும், ஆட்டுதொட்டி தெரு, விளையாட்டு மைதானம் 2-வது தெருவில் தினமும் துப்புரவுப் பணியாளர்கள் தெருக்களைச் சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

13—

படித்துறை அமைத்தல்

வினா எண் 28169—திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி, 34-வது வட்டம், எவரெடி காலனியில் உள்ள குளத்தை ஆழப்படுத்தி, படித்துறை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

சென்னை மாநகராட்சி, 4-வது மண்டலம், கோட்டம்-34 உட்பட்ட பகுதியில் எவரெடி காலனியில் உள்ள குளத்தினை சீர்செய்து படித்துறை அமைக்கும் பணியை இந்த நிதியாண்டில்

[2013 அக்டோபர் 28

மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இம்மதிப்பீடு ஒப்புதல் பெற்றவுடன் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் தொடரப்படும்.

14—

பூங்கா மற்றும் சிறுவர் விளையாட்டுத் திடல்

வினா எண் 28177—திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி, 35-வது வட்டம், கண்ணதாசன் நகரில் 1-5 பிளாக்குகளில் பூங்கா மற்றும் சிறுவர் விளையாட்டுத் திடல் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

பெரம்பூர் தொகுதி, 35-வது வட்டம், சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கவிஞர் கண்ணதாசன் நகர், 4-வது பிளாக்கில் உள்ள இடத்தினை தற்பொழுது சென்னை மாநகராட்சி மின் துறையினால் (தெரு விளக்கு) கிடங்காக உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இங்குள்ள மின் உபகரணங்கள் மிக விரைவில் மாற்றப்படவுள்ளன. இப்பொருள்கள் மாற்றப்பட்டதும் இவ்விடத்தில் சிறுவர் விளையாட்டுப் பூங்கா அமைக்க மதிப்பீடு ஒப்புதல் பெற்று பணி மேற்கொள்ளப்படும்.

15—

சாலை வசதி

வினா எண் 28188—திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

பெரம்பூர் தொகுதி, 37-வது வட்டம், அன்னை சந்தியா நகர் மேற்குப் பகுதியில் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

சென்னை மாநகராட்சி, 4-வது மண்டலம், கோட்டம் 37-ல் அன்னை சந்தியா நகர் மேற்குப் பகுதியில் உள்ள சாலையை சிமெண்ட் கான்கிரீட் சாலையாக அமைக்க முன்னுரிமை பட்டியலில் முதலாவதாக சேர்க்கப்பட்டுள்ளது.

16—

மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித்தொகை

வினா எண் 31585—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் இருந்து மாற்றுத் திறனாளிகள் நலனுக்கு எடுக்கும் ரூ.5 இலட்சத்தை சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரைக்கும் பயனாளிகளுக்கு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து மாற்றுத் திறனாளிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் தொகையான ரூ.5.00 இலட்சத்திற்கான பயனாளிகளை சிறப்பு துணை ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட துணைக் குழு தேர்வு செய்து, அதனை மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட செயல்பாட்டுக் குழுவின் முன்னர் வைத்து, தகுதியின், அடிப்படையில் பயனாளிகளின் பட்டியல் தயார் செய்யப்படுகிறது.

[2013 அக்டோபர் 28

மேலும், பயனாளிகளைக் கண்டறிவதற்கான முகாம்கள் வட்ட வாரியாக நடத்தப்படுகின்றன. மேலும், மாவட்ட ஆட்சியரின் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டங்களின் மூலமாகப் பெறப்படும் விண்ணப்பங்களும், தகுதியின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும். சட்டமன்ற உறுப்பினரும் மாற்றுத் திறனாளிகளின் பட்டியலை மாவட்ட ஆட்சியர்/சிறப்பு துணை ஆட்சியர், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் மற்றும் திட்ட இயக்குநர் ஆகியோருக்கு பரிந்துரை செய்யலாம். இப்பட்டியல், தகுதியின் அடிப்படையில் சிறப்பு துணைக் குழு மற்றும் மாவட்ட செயல்பாட்டுக் குழுவில் தேர்வு செய்யப்பட்டு, மாற்றுத் திறனாளிகளுக்குத் தேவைப்படும் உபகரணங்கள் வாங்கி வழங்கப்பட்டு வருகின்றன.

(ஆ) இவ்வினா எழாது.

17—

சிறைத் துறை காவலர் குடியிருப்புகள்

வினா எண் 3598—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மாவட்டம் மற்றும் வட்ட கிளை சிறைகளில் பணியாற்றும் சிறைத் துறை காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேபி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் சென்னை, வேலூர், திருச்சி, கடலூர், சேலம், கோவை, மதுரை, பாளையங்கோட்டை ஆகிய மாவட்டங்களில் மத்திய சிறைகளும், புதுக்கோட்டையில் சிறார்களுக்கான சீர்திருத்தப் பள்ளியும், 114 வட்டங்களில் கிளைச்

2013 அக்டோபர் 28]

சிறைச்சாலைகள்/தனிக் கிளைச் சிறைகள்/திறந்த வெளிச் சிறைகள் அமைந்துள்ளன. மாவட்டங்களில் அமைந்துள்ள மத்திய சிறைகளுக்கு அருகில் அத்தியாவசியப் பணிகளை எந்நேரமும் வந்து செய்யத்தக்க வகையில் காவலர்கள் குடியிருப்புகள் கட்டித் தரப்பட்டுள்ளன. அரசாணை எண் 1320, உள்(சிறை-4) துறை, நாள் 22-9-1998 இல் ஒவ்வொரு வருடமும் 100 குடியிருப்புகள் சிறைப் பணியாளர்களுக்கு கட்டித் தரப்படும் என கொள்கை அளவில் முடிவெடுத்து, அதன்படி கீழ்க்கண்ட அரசாணைகளின்படி 300 குடியிருப்புகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் கட்டித் தரப்பட்டுள்ளன:-

1.	1998-1999-100 குடியிருப்புகள்	அரசாணை எண் 31, உள் துறை, நாள் 11-1-1999
2.	1999-2000-100 குடியிருப்புகள்	அரசாணை எண் 562, உள் துறை, நாள் 28-4-1999
3.	2000-2001-100 குடியிருப்புகள்	அரசாணை எண் 719, உள் துறை, நாள் 6-7-2000

இதைத்தவிர இந்த அரசால் சிறை நிருவாகத்தை நவீனப்படுத்துதல் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மானிய உதவியுடன் 1,001 குடியிருப்புகள் சிறைப் பணியாளர்களுக்கு 2002-2007 வரை உள்ள 5 ஆண்டுகளில் கட்டித் தரப்பட்டுள்ளன. இது மட்டுமல்லாமல், தமிழக அரசு அரசாணை எண் 90, உள் (சிறை-4) துறை, நாள் 20-1-2012 இல் திருச்சி, சேலம், மதுரை, கடலூர் மத்திய சிறைப் பணியாளர்களுக்கு தலா 25 குடியிருப்புகள் வீதம் 100 குடியிருப்புகள் கட்டித் தர ஆணையிடப்பட்டு தமிழ்நாடு வீட்டு வசதிக் கழகத்தால் கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 19-12-2012 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை அலுவலர்களுக்கான கூட்டத்தில் ரூ.18 கோடி செலவில் சிறைப் பணியாளர்களுக்கான 918 பணியாளர் குடியிருப்புகள் பழுதுநீக்கம்செய்து தரப்படும் என மாண்புமிகு முதலமைச்சரால் அறிவிப்பு செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. மேலும், 2013 ஆம் ஆண்டு சட்டமன்றக் கூட்டத் தொடரில், சிறைப் பணியாளர்களுக்கான குடியிருப்புகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கத்தில், மாண்புமிகு முதலமைச்சரின் ஆணைப்படி, ரூ.23.97 கோடி செலவில், 200

[2013 அக்டோபர் 28

பணியாளர் குடியிருப்புக்களுக்கான குடியிருப்புகள், மத்திய சிறை-I, புழல், வேலூர், கடலூர், திருச்சி, கோவை மற்றும் பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் கட்டித் தரப்படும் என நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களால் அறிவிப்பு செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. எனவே, மாவட்ட அளவில் காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டித் தர அரசால் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, குடியிருப்புகள் கட்டித் தரப்படுகின்றன. வட்ட அளவில் அமைந்துள்ள கிளைச் சிறைக் காவலர்களுக்கு குடியிருப்பு கட்டித் தர தக்க நிலம் தேர்வு செய்ய சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களிடம் தொடர்பு கொள்ளப்பட்டு வருகின்றது.

18—

தொகுப்பு வீடுகளைச் செப்பனிடுதல்

வினா எண் 32328—திரு. க. தினகரன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் தொகுதி, சூலூர் ஒன்றியம், பதுவம்பள்ளி, செலம்பராயம்பாளைத்தில் உள்ள அரசு தொகுப்பு வீடுகளைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டி நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2013 அக்டோபர் 28]

19—

தொகுப்பு வீடுகளைச் செப்பனிடுதல்

வினா எண் 32826—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் பழுதடைந்துள்ள பழைய தொகுப்பு வீடுகளைச் செப்பனிட நிதி ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டி நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

20—

தொகுப்பு வீடுகளைப் பராமரித்தல்

வினா எண் 33489—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட வீடுகளைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டி நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

21—

தொகுப்பு வீடுகளைப் புதுப்பித்தல்

வினா எண் 36473—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், ஆவூர் ஊராட்சி, செங்களாக்குடியில் ஆதி திராவிடர் காலனியில் உள்ள வீடுகளைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டி நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2013 அக்டோபர் 28]

22—

தொகுப்பு வீடுகளைப் புதுப்பித்தல்

வினா எண் 37018—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் அருகில் குண்டு உப்பலவாடி கிராமத்தில் பழுதடைந்துள்ள இந்திரா நினைவு குடியிருப்பு வீடுகளைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டி நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

23—

காலனி வீடுகளைச் சீரமைத்தல்

வினா எண் 37052—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், வீரசேகரபுரம் ஊராட்சி, சாக்கவயலில் சேதமடைந்துள்ள காலனி வீடுகளைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டி நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

24—

வாடகைக் குடியிருப்பு கட்டுதல்

வினா எண் 15265—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதியில் அரசு அலுவலர்களுக்கு வீட்டு வசதித் துறைமூலம் வாடகைக் குடியிருப்பு கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி, வட்டாட்சியர் அவர்களின் தலைமை இடமாக அமைந்துள்ளது. வட்டாட்சியர் தலைமையிடத்திற்கு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்பு திட்டம் செயல்படுத்தப்படுவதில்லை. எனவே, எப்போது என்ற கேள்வி எழாது.

25—

அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல்

வினா எண் 15996—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2013 அக்டோபர் 28]

(அ) தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்மூலம் ஜவஹர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத் திட்டத்தின்கீழ் காஞ்சிபுரம் மாவட்டம், ஒக்கியம் துரைப்பாக்கம், கோயம்புத்தூர், மதுரை, சென்னை குடிசைப் பகுதிகளில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி முடிவடையும்?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) பணிகள் டிசம்பர் 2014-ல் முடிவுறும்.

வ. எண்	திட்டப் பகுதியின் பெயர்	குடியிருப்புகள்	தற்போதைய நிலை
(அ) ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் (காஞ்சிபுரம் மாவட்டம்)			
1.	ஒக்கியம் துரைப்பாக்கம்	2000	முன்னேற்றத்தில் உள்ளது. ஆகஸ்டு 2013-ல் முடிவுறும்.
2.	பெரும்பாக்கம் (எழில் நகர்)	3936	முன்னேற்றத்தில் உள்ளது. ஆகஸ்டு 2013-ல் முடிவுறும்.
3.	பெரும்பாக்கம் பகுதி-I	10452	2064 குடியிருப்புகள் முன்னேற்றத்தில் உள்ளது. ஆகஸ்டு 2013-ல் முடிவுறும். 8388 குடியிருப்புகள் முன்னேற்றத்தில் உள்ளது. டிசம்பர் 2014-ல் முடிவுறும்.
4.	பெரும்பாக்கம் பகுதி-II	5988	குடியிருப்புகள் முன்னேற்றத்தில் உள்ளது. டிசம்பர் 2014-ல் முடிவுறும்.

வ. எண்	திட்டப் பகுதியின் பெயர்	குடியிருப் புகள்	தற்போதைய நிலை
5.	நாவலூர்	2048	தொடங்கப்பட வுள்ளது. (டிசம்பர் 2015-ல் முடிவுறும்)
	மொத்தம்	28424	
	கோயம்புத்தூர்		
6.	அம்மன்குளம் உள்ளது.	792	முன்னேற்றத்தில் ஆகஸ்டு 2013-ல் முடிவுறும்.
7.	உக்கடம் உள்ளது.	1840	முன்னேற்றத்தில் டிசம்பர் 2013-ல் முடிவுறும்.
	மதுரை		
8.	இராஜாக்கூர் பெரியார் நகர்	1566	பணிகள் முடிவுற்றன.
	மொத்தம்	**32622**	

26—

குடியிருப்புகள் கட்டுதல்

வினா எண் 16002—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 2011-2016 ஆம் ஆண்டுகளில் 1.58 இலட்சம் குடியிருப்புகள் கட்டப்பட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ)ஆம் எனில், 2011-2012 ஆம் ஆண்டில் எத்தனை வீடுகள் கட்டப்பட உள்ளன?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) 2011-2012 ஆம் ஆண்டில் 21,200 வீடுகள் கட்டப்பட்டுள்ளது.

27—

அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல்

வினா எண் 16005—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், பெரும்பாக்கம் பகுதி-1, எழில் நகர் பகுதி, கோயம்புத்தூர் மாவட்டம், உக்கடம் பகுதி 1,3 அம்மன்குளம் பகுதி மற்றும் மதுரை மாவட்டம், பெரியார் நகர் ராஜாக்கூர் பகுதியில் குடிசை மாற்று வாரியம்மூலம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றனவா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது முடிவடையும்?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் 44,870 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.2431.16 கோடி செலவில் சென்னை, மதுரை, கோவை நகரங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:

வ. எண்	திட்டப்பகுதி பெயர்	குடியிருப்புகள் (ரூ.கோடி) நிலை	திட்ட செல வினம்	தற்போதைய நிலை	முடிவடையும் காலம்
1.	எழில் நகர்-ஒக்கியம் துரைப்பாக்கம்	6000	228.60	முன்னேற்றத்தில் உள்ளது.	06/2013
2.	எழில் நகர்-பெரும்பாக்கம்	3936	175.35	முன்னேற்றத்தில் உள்ளது.	06/2013
3.	பெரும்பாக்கம் பகுதி-1	10452	686.62	முன்னேற்றத்தில் உள்ளது.	2064-06/2013 8388-06/2014
4.	பெரும்பாக்கம் பகுதி-2	9476	685.62	முன்னேற்றத்தில் உள்ளது.	12/2014
5.	உக்கடம் பகுதி-1	2232	118.48	முன்னேற்றத்தில் உள்ளது.	1392-10/2013 840-06/2014
6.	உக்கடம் பகுதி-2	816	30.45	முன்னேற்றத்தில் உள்ளது.	448-10/2013 368-06/2014
7.	உக்கடம் பகுதி-3	9600	435.43	முன்னேற்றத்தில் உள்ளது; 6440-நிலம் கண்டறியும் நிலையில் உள்ளது.	3160-09/2013
8.	அம்மன்குளம்	792	23.44	முன்னேற்றத்தில் உள்ளது.	06/2014
9.	இராஜாக்கூர் பெரியார் நகர்	1566	47.76	முடிவுற்றது	
	மொத்தம்	***44870***	***2431.16***		

28—

புராதன நகர் மேம்பாட்டுத் திட்டம்

வினா எண் 16026—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

(அ) நகர் ஊரமைப்பு இயக்கத்தின்மூலம் 2011-2012 ஆம் ஆண்டில் 5 புராதன நகரங்களில் புராதன நகர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் நிதி ஆண்டில் புராதன நகரங்கள் மேம்பாட்டிற்காக வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையிலிருந்து திட்டங்கள் ஏதும் செயல்படுத்தப்படவில்லை.

29—

புதிய வீடுகள் அமைத்தல்

வினா எண் 16038—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் ஒருங்கிணைந்த மெரினா மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பழுதடைந்த அடுக்குமாடி குடியிருப்புகளை இடித்து புதிய வீடுகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) மெரினா மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் முதற்கட்டமாக நொச்சி நகர் திட்டப் பகுதியில் 628 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள குடியிருப்புகளில் உள்ள பயனாளிகள், குடியிருப்புகளை விட்டு வெளியேற மறுப்பு தெரிவித்ததன் காரணமாக மறுகட்டுமானப் பணிகள் தொடங்க இயலவில்லை.

[2013 அக்டோபர் 28

30—

அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல்

வினா எண் 16058—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜீவ்காந்தி மறு குடியமர்வு திட்டத்தின்கீழ் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அகில இந்திய வானொலி நிலைய நிலம், நொச்சிக்குப்பம், ஒக்கியம்-துரைப்பாக்கம் ஆகிய இடங்களில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி முடிவடையும்?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அவசர சுனாமி மறுகுடியமர்வு திட்டத்தின்கீழ் சென்னையில் உள்ள கீழே கூறப்பட்டுள்ள இடங்களில் 6,292 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.291.01 கோடி செலவில் அமைக்க திட்டமிடப்பட்டு பணிகள் முடிவுறும்/முன்னேற்ற நிலைகளில் உள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

வ. எண்	திட்டத்தின் பெயர்	குடியிருப்புகள்	திட்ட செலவினம் (ரூ. கோடியில்)	தற்போதைய நிலை
1.	அகில இந்திய வானொலி நிலைய நிலம் (AIR Land) திருவொற்றியூர்	3616	139.51	முடிவுற்றது
2.	ஒக்கியம் துரைப்பாக்கம்	2048	106.11	பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. ஜூன் 2013 இல் முடிவுறும்.
3.	மெரினா நொச்சி நகர்	628	45.39	முடிவுறும் நிலையில் உள்ளது
	மொத்தம்	6292	291.01	

2013 அக்டோபர் 28]

31—

குடியிருப்புகளைச் சீரமைத்தல்

வினா எண் 19938—திரு. எம்.கே. அசோக்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி தொகுதி, திருவான்மியூர், பெரியார் நகர் மற்றும் பெசன்ட் நகர், கக்கன் காலனி குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) வேளச்சேரி சட்டமன்றத் தொகுதியிலுள்ள ருக்மணி நகர், கக்கன் காலனி மற்றும் பெரியார் நகர் திட்டப் பகுதிகளுக்கு ரூ.22.00 இலட்சம் செலவில் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் மூன்று மாதங்களுக்குள் மேற்கொள்ளப்படும்.

32—

நிலவகை மாற்றம் செய்தல்

வினா எண் 20753—திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடிசை மாற்று வாரிய நிலத்திற்கான தொகை கட்டிய பிறகு உடனடியாக நிலவகை மாற்றம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

அரசு மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் குடிசை மாற்று வாரிய நிலத்திற்கு சில இனங்களில் நிலமாற்றம் செய்யப்பட்டும், சில இனங்களில் நிலமாற்றம் செய்யப்படாமலும் ஒப்படைக்கப்படுகிறது. அரசிடமிருந்து வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட இனங்களில் முழுக் கிரயத் தொகை செலுத்திய பின் கிரயப் பத்திரம் வழங்கப்படுகிறது. வாரியத்தின் பெயரில் நில உரிமை மாற்றம் செய்யப்படாத இனங்களில் ஒதுக்கீடுதாரர்கள் முழுக் கிரயத் தொகை செலுத்திய பின்பும் அரசு நில உரிமை மாற்றம் செய்த பின்னர்தான் கிரயப் பத்திரம் வழங்க இயலும்.

33—

தண்ட வட்டியை இரத்து செய்தல்

வினா எண் 20754—திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர், 46-வது வட்டம் குடிசை மாற்று வாரிய வீடுகளில் வசூலிக்கப்படும் தண்ட வட்டியை இரத்து செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு (வீடுகளுக்கு) தண்ட வட்டி வசூலிப்பது இல்லை. மாறாக குடியிருப்புகளுக்கான மாதத் தவணைத் தொகையினை பிரதி மாதம் 10 ஆம் தேதிக்குள் செலுத்தத் தவறும் ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து கிரயப் பத்திரம் வழங்கும் நிலையில், மாதமொன்றுக்கு ரூ.3/- (ரூபாய் மூன்று வீதம்) அபராத கட்டணம்

2013 அக்டோபர் 28]

வசூலிக்கப்பட்டு பின்னர் அவர்களுக்கு கிரயப் பத்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே, குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளில் வசூலிக்கப்படும் தண்ட வட்டியினை இரத்து செய்யும் வினா எழவில்லையென்ற விவரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

34—

புதிய குடியிருப்புகள் கட்டுதல்

வினா எண் 22830—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை பூங்கா நகரிலுள்ள வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் பழுதடைந்துள்ளதால் புதிய குடியிருப்புகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை பூங்கா நகரில் உள்ள அரசு குடியிருப்புகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் உள்ள தொழில்நுட்ப வல்லுநர் குழு ஆய்வு செய்து மேல் தளங்கள் (Top Floors) மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் மேல் தளங்களை மட்டும் இடிக்க பரிந்துரை செய்தது. ஆனால், மேல் தளங்களை மட்டும் இடிக்கும்பொழுது மற்ற தளங்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்ற காரணத்தால், மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் தொழில் நுட்ப வல்லுநர் குழுவை அமைக்க ஆணை வேண்டி, கடிதம் பெறப்பட்டு அதில் வாரியத்திடம் சில கூடுதல் விவரங்கள் கோரப்பட்டு பரிசீலனையில் உள்ளது. தொழில்நுட்ப வல்லுநர் குழு அமைக்கப்பட்டு குழுவின் பரிந்துரை பெறப்பட்ட பின்னர் பரிந்துரையின் அடிப்படையில் தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

[2013 அக்டோபர் 28

35—

பட்டா வழங்குதல்

வினா எண் 27711—திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், காங்கேயம்பாளையம் புதூர், அண்ணாநகர் பகுதி வீட்டு வசதி வாரிய இடத்திற்கு முழுத் தொகையும் செலுத்தியவர்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் திருப்பூர் பகுதியில் 15 வேலம்பாளையம் (பெரியார் காலனி), புதுநகர் காலனி, முதலிபாளையம் மற்றும் அண்ணா காலனி ஆகிய திட்டப் பகுதிகளில் ஒதுக்கீடு பெற்ற ஒதுக்கீடுதாரர்களுக்கு கிரயப் பத்திரம் வழங்கப்பட்டு வருகிறது. கிரயப் பத்திரம் பெற்ற ஒதுக்கீடுதாரர்கள் முறையாக அந்தந்த பகுதி வட்டாட்சியர்மூலம் பட்டா பெயர் மாறுதல் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

(ஆ) காங்கேயம்பாளையம், புதூர் பகுதியில் கோவை வீட்டு வசதி பிரிவுமூலம் திட்டங்கள் எதுவும் செயல்படுத்தப்படவில்லை.

36—

அபராத வட்டியை இரத்து செய்தல்

வினா எண் 28331—திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடிசை மாற்று வாரிய வீடுகளுக்கு விதிக்கப்பட்டுள்ள அபராத வட்டியை இரத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தில் குடியிருப்புகளை தவணை முறையில் ஒதுக்கீடு செய்யும்போது பொதுவாக அபராத வட்டி விதித்து ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை. சட்டமன்ற உறுப்பினரின் கருத்தின்படி வாரியத்திலுள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் (தவணை முறை திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டவை) அபராத தொகையினை இரத்து செய்யும் நிலையில் ஒதுக்கீடுதாரர்களுக்கு மாதத் தவணைத் தொகையினை குறிப்பிட்ட தேதிக்குள் செலுத்த வேண்டும் என்ற எண்ணம் மாறி காலதாமதமாகச் செலுத்தி கொள்ளலாம் என்ற மனப்பான்மை ஏற்பட்டு விடும். இதனால் வாரியத்திற்கு உரிய காலத்தில் வசூலிக்கப்பட வேண்டிய வருவாய் வசூலிக்க இயலாத நிலை ஏற்படும். மேலும், வாரியம் சென்னை மற்றும் தமிழகத்தின் பிற பகுதிகளிலுள்ள குடியிருப்புகளைப் பராமரிப்பதற்கு ஆகும் செலவினை மேற்கொள்ள இம்மாதிரியான அபராத தொகை போன்ற ஒரு சில பல்வகை இனங்களையே நம்பியிருப்பதால் அனைத்து குடியிருப்புகளுக்கும் அபராத வட்டியை இரத்து செய்வது என்பது வாரியத்திற்கு வருவாய் இழப்பு ஏற்படுத்துவதாக அமையும்.

37—

வீட்டு மனையாக மாற்றுதல்

வினா எண் 29021—திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, கம்பன் நகர் வீட்டு வசதி வாரிய விருந்தினர் மாளிகை எதிரில் உள்ள இடத்தை வீட்டு மனையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை புறநகர் திட்டத்தில் வீட்டு வசதி வாரிய விருந்தினர் மாளிகைக்கு எதிரில் உள்ள 26,549 சதுர அடி பரப்பு உள்ள இடம் மழலையர் பள்ளிக்கென (Nursery School Site) ஒதுக்கப்பட்ட விற்பனைக்கு உள்ள மனையாகும். இத்திட்டப் பகுதியில் உள்ள இதர வணிகப் பயன்பாட்டுக்குள்ள மனைகளுடன் மேற்கண்ட மனையினையும் ஏலத்தில் விற்பனை செய்ய முதலில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 2004 ஆம் ஆண்டில் ஏலம் நடத்தப்பட்டது.

இதற்கிடையில், அரசின் உத்தரவின்படி, சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிப்பதற்கு நியமிக்கப்பட்ட சிறப்பு அதிரடிப்படையில் பணிபுரிந்த காவல் துறை அலுவலர்களுக்காக மேற்கண்ட திட்டத்தில் வணிகப் பயன்பாட்டில் இருந்த மனைகள் வீட்டு மனைகளாக நில பிரிவு மாற்றம் செய்யப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதுதொடர்பாக, 2004 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஏலத்தில் கலந்து கொண்ட ஏலதாரர்கள், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். 2010 ஆம் ஆண்டில் சென்னை உயர் நீதிமன்ற தீர்ப்பின்படி வணிக மனைகளை, சந்தை விலையில் அதிகபட்ச ஏலத் தொகை கேட்ட ஏலதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்சொன்ன நிலையில், மேற்கண்ட இடத்தை வீட்டு மனையாக மாற்றும் சாத்தியக்கூறுகள் இல்லை.

38—

வலைக்கம்பிகள் பொருத்துதல்

வினா எண் 29200—திரு. கு. நல்லதம்பி: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எழும்பூர் தொகுதி, 77-வது வட்டம், கேபி.பார்க் பகுதியில் பழுதடைந்த நிலையிலுள்ள வீட்டு வசதி வாரிய குடியிருப்புகளில்

2013 அக்டோபர் 28]

வசிப்பவர்களுக்கு புதிய குடியிருப்புகள் கட்டி முடிக்கும் வரை மாற்று இடம் ஒதுக்கவும், புதிய வீட்டு வசதி வாரிய குடியிருப்பின் பின்புற ஜன்னல்களில் வலைக்கம்பிகள் பொருத்தவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அண்ணா நகர் கோட்ட பராமரிப்பின்கீழ் வரும் அனைத்து அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகளை பெரும்பாலும் இடித்துவிட்டு புதிய குடியிருப்புகள் கட்டப்பட உள்ளதால் மாற்று இடம் ஒதுக்கீடு செய்ய இயலாது. மேலும், புதிய வீட்டு வசதி வாரிய குடியிருப்புகளின் பின்புற ஜன்னல்களில் வலைக்கம்பிகள் பொருத்துவது கட்டட வடிவமைப்பைப் பொறுத்து முடிவு செய்யப்படும்.

39—

வீடுகள் கட்டித் தருதல்

வினா எண் 29290—திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, 1-வது வார்டு, நரிமேடு பகுதியில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மற்றும் அதன் சுற்றுப் பகுதியில் வீடுகள் கட்டுவதற்குத் தேவையான நிலம் எதுவும்

[2013 அக்டோபர் 28

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கைவசம் இல்லாததால் புதுக்கோட்டை தொகுதி, 1-வது வார்டு, நரிமேடு பகுதியில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வீடுகள் கட்டும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. இருப்பினும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் நிலம் பெறப்படும் பட்சத்தில் இத்திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

40—

தென்னை சார்ந்த தொழிற்சாலை அமைத்தல்

வினா எண் 4763—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் தென்னை சார்ந்த தொழிற்சாலை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்னை சார்ந்த தொழில்களான கயிறு தொழில்கள் அமைக்க தேவையான கட்டமைப்பு வசதி இல்லாத காரணத்தினாலும், போதிய அனுபவம் மிக்க கயிறு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினாலும், அரசு சார்பில் இங்கு கயிறு திரிக்கும் தொழில்கள் ஆரம்பிக்க சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், இப்பகுதிகளில் தேங்காய் எண்ணெய் தயாரிக்க தேவையான கொப்பரை வகை தேங்காய்கள் விளைவிக்கப்படுவதில்லை. ஆதலால், தேங்காய் எண்ணெய் தயார் செய்யும் தொழிலகம் அமைக்கவும் இப்பகுதியில் சாத்தியக்கூறுகள் இல்லை.

எனவே, சிவகங்கை மாவட்டத்தில், குறிப்பாக மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் தென்னை சார்ந்த தொழிற்சாலை அரசு சார்பில் ஆரம்பிக்க புதிய திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், சொந்தமாக தென்னை சார்ந்த கயிறு தொழில்கள் துவங்க ஆர்வமுடைய தொழில் முனைவோர் முன்வந்தால் அவர்களுக்கு கயிறு வாரியத்தின்மூலம் REMOTE

2013 அக்டோபர் 28]

திட்டத்தின்கீழ் 40% கடனுதவியும், தமிழக அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கையில் அறிவிக்கப்பட்டுள்ள மானிய சலுகைகளும் தகுதியின் அடிப்படையில் மாவட்டத் தொழில் மையம்மூலம் பெற்றுக் கொள்ளலாம். மேலும், வேலையற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) (ம) புதிய தொழில் முனைவோர்-தொழில் நிறுவனங்கள் வளர்ச்சித் திட்டம் (NEEDS)-ன்கீழ் தென்னை சார்ந்த தொழில்கள் அமைக்க மானியத்துடன்கூடிய கடன் வழங்க அம்மாவட்டத் தொழில் மையம்மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

41—

மரவள்ளிக் கிழங்கு ஆலை அமைத்தல்

வினா எண் 21693—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்தில் கூட்டுறவுத் துறை மூலமாக மரவள்ளிக் கிழங்கு ஆலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் சுமார் 19,000 ஹெக்டேர் பரப்பளவில் மரவள்ளிக் கிழங்கு சாகுபடி செய்யப்பட்டு வருடத்திற்கு 2,30,000 மெட்ரிக் டன் கிடைத்து வருகிறது. இம்மாவட்டத்தில் சுமார் 35 சேகோ தொழிற்சாலைகள் மரவள்ளிக் கிழங்கை மூலப்பொருளாகக் கொண்டு ஸ்டார்ச்சு உற்பத்தி செய்து வந்தன. மேற்படி நிறுவனங்களுக்கு அதன் அரவைத்திறன் அடிப்படையில் தேவைப்படும் மரவள்ளிக் கிழங்கின் அளவு சுமார் 42,000 மெட்ரிக் டன் ஆகும். பற்றாக்குறையின் காரணமாக சுமார் 5 மாத காலம் மட்டுமே உற்பத்தி தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. இதனால், இம்மாவட்டத்தில் தற்போது சுமார் எட்டு நிறுவனங்கள் மூடப்பட்டு விட்டன. மேலும், சேலம் மாவட்டத்தில் ஓமலூர்

[2013 அக்டோபர் 28

வட்டத்தில் ஒரு சேகோ உற்பத்தித் தொழில் கூட்டுறவுச் சங்கம் தொழில் வணிகத் துறையின்கீழ் ஆரம்பிக்கப்பட்டு, மூலப்பொருள் பற்றாக்குறையின் காரணமாக செயலிழந்து, பெருத்த நட்டம் ஏற்பட்டு, சங்கம் கலைக்கப்பட்டு விட்டது.

மேலும், சேகோ தொழிற்சாலை அதிகப்படியான மாசு ஏற்படுத்தும் தொழிலின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்நிலையில் அதிக முதலீடு, வேலையாட்கள் பற்றாக்குறை மற்றும் குறைந்தபட்சம் 10 ஏக்கர் நிலம் தேவைப்படுவதால் தருமபுரி மாவட்டத்தில் அரசின் சார்பில் கூட்டுறவு சேகோ ஆலை அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை என்றாலும், சொந்தமாக தொழில் துவங்குவோர்களுக்கு மானில அரசின் முதலீட்டு மானியம், மின்னாக்கி மானியம், மின் மானியம், மதிப்புக் கூட்டு வரி மானியம் உள்ளிட்ட சலுகைகளும், பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) மற்றும் புதிய தொழில் முனைவோர்-தொழில் நிறுவனங்கள் வளர்ச்சித் திட்டம் (NEEDS) போன்றவற்றின் கீழ் தொழில் துவங்க வங்கிகளின்மூலம் கடன்வசதியும் பெற சம்பந்தப்பட்ட மாவட்ட தொழில் மையம் ஆவன செய்யும்.

42—

சிறு தொழிற்சாலை அமைத்தல்

வினா எண் 21810—திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக்கோட்டை பகுதியில் காகித டம்ளர்கள், தட்டுகள் உற்பத்தி செய்யும் சிறு தொழிற்சாலை ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக்கோட்டை பகுதியில் காகித டம்ளர்கள், தட்டுகள் பயன்பாடு மிகவும் குறைவாக உள்ளதாலும், இத்தொழிலை பெரிய அளவில் துவக்கி நடத்திட போதிய சந்தை வாய்ப்பு இல்லாததாலும், இப்பகுதியில்

2013 அக்டோபர் 28]

இத்தொழிலை அரசு சார்பில் ஆரம்பிக்கும் சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை. எனினும், ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக்கோட்டை பகுதியில் காகித டம்ளர்கள், தட்டுகள் உற்பத்தி செய்யும் சிறு தொழில் நிறுவனம் தொடங்க முன்வந்தால், அவர்கள் தகுதியின் அடிப்படையில் முதலீட்டு மானியம், வேலைவாய்ப்பு பெருக்க மானியம், கூடுதல் முதலீட்டு மானியம், குறைந்த அழுத்த மின் மானியம், மின்னாக்கி மானியம் மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம் போன்ற மானியங்கள் பெற்று பயன்பெறலாம்.

மேலும், படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில்முனைவோர்களாக உருவாக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ள "புதிய தொழில் முனைவோர்-தொழில் நிறுவன வளர்ச்சித் திட்டத்தின்கீழ்" திட்ட மதிப்பீட்டில் ரூ.25.00 இலட்சத்திற்கு மிகாமல் 25 விழுக்காடு அரசு மானியத்துடன் 3 விழுக்காடு மின்முனை வட்டி மானியத்துடன் வங்கிகள் / தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடமிருந்து கடன் பெற்று, தொழில் முனைவோர்கள் பயன்பெறலாம். இத்திட்டத்தில் மகளிருக்கு 50 விழுக்காடு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

இவையல்லாது, தொழில் முனைவோர்கள் மைய அரசின் 'பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்' மற்றும் மாநில அரசின் 'வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழும், வங்கி கடன் மற்றும் மானிய உதவி பெற்றும் பயனடையலாம். மேற்காணும் திட்டங்கள் ஏதேனும் ஒன்றின்கீழ் தொழில் தொடங்க விரும்பும் ஆர்வமுள்ள தொழில் முனைவோர், தஞ்சாவூர் மாவட்டத் தொழில் மையத்தில் விண்ணப்பித்து, மானியங்களுடன் வழிகாட்டுதல்களையும் பெறலாம்.

43—

சுண்ணாம்பு தொழிற்சாலை அமைத்தல்

வினா எண் 25406—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் சுண்ணாம்பு தொழிற்சாலை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் சுண்ணாம்பு தொழிற்சாலை அமைப்பதற்குரிய மண்வகை இல்லாத காரணத்தால், இங்கு அரசு சார்பில் சுண்ணாம்பு தொழிற்சாலை துவக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும், ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் மானாமதுரை தொகுதியில், சுண்ணாம்பு தொழில் நிறுவனம் தொடங்க முன்வந்தால், அவர்கள் தகுதியின் அடிப்படையில் முதலீட்டு மானியம், வேலைவாய்ப்பு பெருக்க மானியம், கூடுதல் முதலீட்டு மானியம், குறைந்த அழுத்த மின் மானியம், மின்னாக்கி மானியம், மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம் போன்ற மானியங்கள் பெற்று பயன்பெறலாம்.

2. மேலும், தொழில் முனைவோர்கள் மைய அரசின் 'பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்' மற்றும் மாநில அரசின் 'வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழும்' வங்கி கடன் மற்றும் மானிய உதவி பெற்று பயனடையலாம். மேற்காணும் திட்டங்கள் ஏதேனும் ஒன்றின்கீழ் தொழில் தொடங்க விரும்பும் ஆர்வமுள்ள தொழில் முனைவோர், சிவகங்கை மாவட்டத் தொழில் மையத்தில் விண்ணப்பித்து, மானியங்களுடன் வழிகாட்டுதல்களையும் பெறலாம்.

44—

முதியோர் உதவித்தொகை

வினா எண் 1234—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், கோத்திராப்பட்டியில் முதியோருக்கு உதவித்தொகை வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் பயனாளிகள் விரைந்து எளிதில் பயனடையும் வகையில் நடைமுறைகள் வகுத்து அரசு ஆணை (நிலை) எண் 56, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள்: 16-08-2011-ல் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மனுதாரர்கள் ஒவ்வொரு திங்கட்கிழமையும் கிராமத்திலேயே கிராம நிருவாக அலுவலரிடம் மனுவைக் கொடுக்கலாம். ஒவ்வொரு வட்டத்திலும் சமூகப் பாதுகாப்புத் திட்ட தனி வட்டாட்சியர், மண்டல துணை வட்டாட்சியர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோர் ஒரு குழுவாகச் செயல்பட்டு மாதாந்திர ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் பெறப்படும் அனைத்து விண்ணப்பங்களையும் உடனுக்குடன் ஆய்வு செய்து 30 தினங்களுக்குள் நடைமுறையில் உள்ள அரசு விதிகளின்படி ஓய்வூதிய ஆணைகளை விரைந்து வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், கோத்திராப்பட்டியில் மைய அரசின் மூன்று திட்டங்கள் மற்றும் மாநில அரசின் ஐந்து திட்டங்கள் மூலமாக சென்ற ஆண்டில் இதர வகுப்பைச் சேர்ந்த 52 நபர்களுக்கும், ஆதி திராவிடர் இனத்தைச் சார்ந்த 23 நபர்களுக்கும் ஆக மொத்தம் 75 நபர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றது.

45—

வயதுவரம்பைக் குறைத்தல்

வினா எண் 15825—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விதவைப் பெண்கள் ஓய்வூதியம் பெற வயதுவரம்பைக் குறைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மைய அரசு திட்டமான இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டத்தின்கீழ் முதலில் 40 வயது முதல் 64 வயது என நிர்ணயம் செய்யப்பட்டது. அதன்பின்னர் 40 வயது முதல் 79 வயது வரை நீட்டிக்கப்பட்டது. ஆனால் மாநில அரசின் திட்டமான ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டத்தில் குறைந்தபட்ச வயது வரம்பு ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. எனவே, பெண்களுக்கு திருமண வயது 18 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் விதவைகள் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஆதரவற்ற விதவைப் பெண்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

46—

கலப்புத் திருமண சலுகைகள்

வினா எண் 22687—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள் எண்ணிக்கை சேகரிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் குறித்து தெரிவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக கலப்புத் திருமண நிதியுதவி வேண்டி விண்ணப்பித்தவர்களின் பெயர்

2013 அக்டோபர் 28]

மற்றும் முகவரிகள் பட்டியல் சமூக நலத் துறையின்கீழ் இயங்கும் மாவட்ட சமூக நல அலுவலகங்களில் பராமரிக்கப்பட்டு வருகிறது. கலப்புத் திருமணம் செய்து கொண்டதன் அடிப்படையில் விண்ணப்பித்துள்ள தம்பதிகளுக்கு சமூக நலத் துறையின்மூலம் திருமண நிதியுதவியாக பத்தாம் வகுப்பு படித்தவர்களுக்கு ரூ.25,000/-த்துடன் திருமாங்கல்யம் செய்வதற்கு 4 கிராம் (22 காரட்) தங்க நாணயமும், பட்டம்/பட்டயப் படிப்பு படித்தவர்களுக்கு ரூ.50,000/-த்துடன் திருமாங்கல்யம் செய்வதற்கு 4 கிராம் (22 காரட்) தங்க நாணயமும் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதியர்களுக்கு சமூக நலத் துறையால் வழங்கப்படும் சலுகைகள் குறித்து, தினசரி நாளிதழ்கள், தொலைக்காட்சி மற்றும் தொடர் சாதனங்கள், முனைப்பு கல்வி இயக்ககத்தின் மூலமாகவும் மற்றும் விளம்பரப் பலகைகள் மூலமாகவும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

47—

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் பராமரிப்பு

வினா எண் 15557—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் சீரமைக்கப்பட்டு விவசாயிகள் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கிடங்கினை பராமரித்திட தேவையான பராமரிப்புப் பணி நடப்பு நிதியாண்டிலேயே மேற்கொள்ளப்படும்.

[2013 அக்டோபர் 28

48—

வெங்காயம் மதிப்புக் கூட்டுதல்

வினா எண் 17372—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பொங்கலூரில் அமைக்கப்பட்டுள்ள வெங்காய வணிக வளாகத்தில் 2011-2012 ஆம் ஆண்டில் எவ்வளவு மதிப்புள்ள வெங்காயம் மதிப்புக் கூட்டப்பட்டது?

(ஆ) இதன்மூலம் எத்தனை சிறு, குறு விவசாயிகள் பயன் அடைந்தனர்?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பொங்கலூரில் அமைக்கப்பட்டுள்ள வெங்காய வணிக வளாகத்தில் 2011-2012 ஆம் ஆண்டில் 23 மெட்ன் வெங்காயம் மதிப்புக் கூட்டப்பட்டது.

(ஆ) மேற்காணும் வெங்காய வணிக வளாகம்மூலம் 2011-2012 ஆம் ஆண்டில் 135 விவசாயிகள் பயனடைந்தனர்.

49—

திராட்சை மதிப்புக் கூட்டுதல்

வினா எண் 17373—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டம், ஓடைப்பட்டியில் அமைக்கப்பட்டுள்ள திராட்சை வணிக வளாகத்தில் 2011-2012 ஆம் ஆண்டில் எவ்வளவு மதிப்புள்ள திராட்சை மதிப்புக் கூட்டப்பட்டன?

(ஆ) இதன்மூலம் எத்தனை சிறு, குறு விவசாயிகள் பயன் பெற்றனர்?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) தேனி மாவட்டம், ஓடைப்பட்டி வெள்ளையம்மாள் புரத்தில் 50 மெடன் கொள்ளளவுள்ள திராட்சைக்கான குளிர்பதன வசதியுடன்கூடிய வணிக வளாகம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தற்போது, புதிதாக மின்மாற்றி அமைப்பதற்கான உரிய மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு கண்காணிப்புப் பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான வட்டம், தேனி அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. புதிதாக மின் மாற்றி அமைக்கப்பட்டு, திராட்சை வணிக வளாகம் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும். எனவே, 2011-2012 ஆம் ஆண்டின் திராட்சை மதிப்புக் கூட்டப்படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

50—

நெற்களங்கள் அமைத்தல்

வினா எண் 19776—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, கரிப்பூர் ஊராட்சி, சென்னாநந்தல் கிராமம், வடபுந்த ஏரி கீழ்ப்பகுதி மற்றும் அயல் ஏரி முருகன்கோயில் அருகில் இரண்டு நெற்களங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, கரிப்பூர் ஊராட்சி, கரிப்பூர் மற்றும் நாச்சாபுரம் கிராமங்களில் "ஊராட்சி உட்கட்டமைப்பு திட்டத்தின்கீழ்" 2008-2009 மற்றும் 2009-2010 ஆகிய நிதி ஆண்டுகளில் தலா ரூ.1 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்கெனவே 2 உலர்களங்கள் அமைக்கப்பட்டு அவை முறையே 18-02-2009 மற்றும் 18-02-2010 முதல் விவசாயிகளின் பயன்பாட்டில் உள்ளன. இதுபோன்றே சென்னாநந்தல் கிராமத்தில் 2007-2008 ஆம் நிதியாண்டில் மாநில நிதிக் குழு மானிய (மாவட்ட ஊராட்சி)

[2013 அக்டோபர் 28

நிதியிலிருந்து ரூ.1 இலட்சம் மதிப்பீட்டில் ஓர் உலர்களமும், ஊரக பொது நிதியின்கீழ் ரூ.70 ஆயிரம் மதிப்பீட்டில் ஓர் உலர்களமும் கட்டப்பட்டு அவை முறையே 19-09-2007 மற்றும் 11-12-2007 முதல் விவசாயிகளின் பயன்பாட்டில் உள்ளன. ஆக, இக்கிராமங்களில் ஏற்கெனவே 4 உலர்களங்கள் பயன்பாட்டில் உள்ளதால், அக்கிராமங்களுக்கு அருகிலுள்ள வடுபுந்த ஏரி கீழ்ப்பகுதி மற்றும் அயல் ஏரி முருகன்கோயில் பகுதிகளில் மேலும் உலர்களங்கள் அமைத்திடுவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

51—

நெற்களம் அமைத்தல்

வினா எண் 22413—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி ஒன்றியம், அரசிராமணி பேரூராட்சி, செங்காளி தோட்டம் மற்றும் குள்ளம்பட்டி பகுதியில் நெற்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி ஒன்றியம், அரசிராமணி பேரூராட்சி, செங்காளி தோட்டம் மற்றும் குள்ளம்பட்டி பகுதியில் நெற்களம் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை. மேலும், சங்கரி ஒன்றியம், திருவாண்டிப்பட்டி, மோரூர், கஸ்தூரிப்பட்டி, அரசிராமணி ஆகிய கிராமங்களில் 1999-2000ஆம் ஆண்டில் உலர்களங்கள் கட்டப்பட்டு, விவசாயிகள் பயன்பாட்டில் உள்ளன.

52—

காய்கறி கொள்முதல் நிலையம் அமைத்தல்

வினா எண் 24575—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் காய்கறிகளுக்கான கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் (மானாமதுரை தொகுதி உட்பட) காய்கறிகளுக்கான கொள்முதல் நிலையம் அமைக்கப்படவில்லை. எனவே, மானாமதுரையில் காய்கறிகளுக்கான கொள்முதல் நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

53—

நெற்களம் அமைத்தல்

வினா எண் 24629—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், கட்டக்குடி ஊராட்சி, ஆச்சநாயக்கன்பட்டியில் நெற்களம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், கட்டக்குடி ஊராட்சி, ஆச்சநாயக்கன்பட்டியில் நெற்களம் அமைக்க இடம் தேர்வுசெய்யப்பட்டு, முன்நுழைவு அனுமதி ஆணை வழங்கிட வேண்டி புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. முன்நுழைவு அனுமதி பெறப்பட்டதும் நெற்களம் அமைக்கப்படும்.

[2013 அக்டோபர் 28

54—

நெற்களம் அமைத்தல்

வினா எண் 24633—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், ஆவூர், இலுப்பூர் பேரூராட்சி, பாப்பான்குடியில் நெற்களம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், இலுப்பூர் பேரூராட்சி, பாப்பான்குடியில் நெற்களம் அமைக்க இடம் தேர்வுசெய்யப்பட்டு, முன்நுழைவு அனுமதி ஆணை வழங்கிட வேண்டி புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. முன் நுழைவு அனுமதி பெறப்பட்டதும் நெற்களம் கட்டித்தரப்படும்.

55—

நெற்களம் அமைத்தல்

வினா எண் 24966—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், விருதாப்பட்டி ஊராட்சி, விருதாப்பட்டியில் நெற்களம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், விருதாப்பட்டி ஊராட்சி, விருதாப்பட்டியில் நெற்களம் அமைத்திட இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், களர் புறம்போக்கு, நத்தம் புறம்போக்கு போன்ற வகைப்பாடுகள் கொண்ட இடங்களிலும் மற்றும் தான நிலங்களிலும் மட்டுமே நெற்களம் அமைத்திட முடியும். எனவே, மேற்காணும் கிராமத்தில் பொருத்தமான வகைப்பாடு கொண்ட நிலம் தெரிவு செய்யப்பட்டவுடன் முன்னுரிமைப்படி நெற்களம் கட்டித்தரப்படும்.

56—

சிமெண்ட் களம் அமைத்தல்

வினா எண் 24971—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், ஆவூர் ஊராட்சி, உரண்டக்குடியில் சிமெண்ட் களம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், ஆவூர் ஊராட்சி, உரண்டக்குடியில் சிமெண்ட் களம் அமைப்பதற்கு இடம் தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் களர் புறம்போக்கு, நத்தம் புறம்போக்கு போன்ற வகைப்பாடுகள் கொண்ட இடங்களிலும் மற்றும் தான நிலங்களிலும் மட்டுமே சிமெண்ட் களம் அமைத்திட இயலும். எனவே, மேற்காணும் கிராமத்தில் பொருத்தமான வகைப்பாடு கொண்ட நிலம் தெரிவு செய்யப்பட்டவுடன் முன்னுரிமைப்படி சிமெண்ட் களம் அமைத்துத் தரப்படும்.

[2013 அக்டோபர் 28

57—

மரம் மற்றும் பழக்கன்றுகளின் விவரம்

வினா எண் 34876—திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, மேலத்தொட்டியப்பட்டி, அரசு பெரும்பழப்பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் மரக்கன்றுகள் மற்றும் பழக்கன்றுகள் மற்றும் உற்பத்தி செய்யப்படவுள்ள புதிய வகை கன்றுகளின் விவரம் குறித்து தெரிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, மேலத்தொட்டியப்பட்டி, அரசு பெரும்பழப்பண்ணையில் 2012-2013 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் 2013-2014 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்படும் மரக்கன்றுகள் மற்றும் பழக்கன்றுகள் விவரம் கீழக்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது:-

வ. எண்	பழக்கன்றுகள் விவரம்	2012-2013-ல் உற்பத்தி செய்யப் பட்ட கன்றுகள் (எண்கள்)	2013-2014-ல் உற்பத்தி செய்யப் படவுள்ள கன்றுகள் (எண்கள்)
1.	மா நெருக்கு ஒட்டு	55873	26000
2.	மா-மென் தண்டு ஒட்டு	0	102700
3.	நெல்லி ஒட்டு	1500	5000
4.	கொய்யா பதியன்	24500	32500
5.	எலுமிச்சை நாற்று	34500	8000
6.	கருவேப்பிலை நாற்று	13000	8000

2013 அக்டோபர் 28]

வ. எண்	பழக்கன்றுகள் விவரம்	2012-2013-ல் உற்பத்தி செய்யப் பட்ட கன்றுகள் (எண்கள்)	2013-2014-ல் உற்பத்தி செய்யப் படவுள்ள கன்றுகள் (எண்கள்)
7.	மல்லிகைச் செடி	147625	164400
8.	மா வேர் செடிகள்	30000	71000
	மொத்தம்	306998	417600

இப்பண்ணையில் நிலவும் தட்பவெப்ப நிலையில், நன்கு உற்பத்தி செய்யப்படக்கூடிய மற்றும் விருதுநகர் மாவட்ட தோட்டக்கலை விவசாயிகளுக்குத் தேவைப்படும் நடவுப் பொருட்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றன.

புதிதாக மெண் தண்டு ஒட்டு முறையில் ஒட்டுக் கன்றுகள் நடப்பு ஆண்டு 2013-2014 முதல் உற்பத்தி செய்யப்படவுள்ளன. இந்த ஆண்டு 1,02,700 மா ஒட்டுக் கன்றுகள் உற்பத்தி செய்யப்படவுள்ளன.

58—

வருங்கால வைப்பு நிதி வழங்குதல்

வினா எண் 32850—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

10 நபர்களுக்கு மேல் வேலை பார்க்கும் தனியார் ஊழியர்களுக்கு வருங்கால வைப்பு நிதி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

மீன் வலை கம்பெனி, தனியார் மருத்துவமனை, தனியார் கடை, உணவகம், முந்திரி பருப்பு கம்பெனி, ஐஸ் கம்பெனி போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களில் 20

[2013 அக்டோபர் 28

தொழிலாளர்களுக்கு மேலாக பணியில் அமர்த்தியிருந்தால், அந்த நிறுவனங்கள், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை வழிவகைகள் சட்டம், 1952-ன்கீழ் கொண்டுவரப்படக்கூடியவை. இச்சட்டத்தின்கீழ், மேற்கூறிய நிறுவனங்களில் 20 தொழிலாளர்களுக்கு மேலாகப் பணிபுரிந்தால், அங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வருங்கால வைப்பு நிதி, ஓய்வூதியம் மற்றும் வைப்பு நிதியுடன் இணைந்த காப்பீடு போன்ற பயன்கள் வழங்கப்படும்.

59—

வருங்கால வைப்பு நிதி பிடித்தம்

வினா எண் 32860—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தனியார் மருத்துவமனை, மீன் வலை தயாரிக்கும் தொழிற்கூடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வருங்கால வைப்பு நிதி பிடித்தம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தனியார் மருத்துவமனை, மீன் வலை தயாரிக்கும் தொழிற்கூடங்கள் போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களில் 20 தொழிலாளர்களுக்கு மேலாகப் பணியில் அமர்த்தியிருந்தால், அந்த நிறுவனங்கள், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை வழிவகைகள் சட்டம் (Miscellaneous Act) 1952-ன்கீழ் கொண்டுவரப்படக்கூடியது. இச்சட்டத்தின்கீழ், மேற்கூறிய நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வருங்கால வைப்பு நிதி, ஓய்வூதியம் மற்றும் வைப்பு நிதியுடன் இணைந்த காப்பீடு போன்ற பயன்கள் வழங்கப்படும்.

2013 அக்டோபர் 28]

60—

விபத்துக் கால மரண இழப்புத் தொகை

வினா எண் 34240—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கும் விபத்துக் கால மரண இழப்புத் தொகையை ரூ.5,00,000/- ஆக உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கும் விபத்துக் கால மரண இழப்புத் தொகையை ரூ.5,00,000/- ஆக உயர்த்தி வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

61—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 11328—திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் ஒன்றியம், மதிப்பனூர் கிராம நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து சடையப்பக்கவுண்டன்பட்டி கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடையினை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் ஒன்றியம், திருமங்கலம் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கட்டுப்பாட்டில்

[2013 அக்டோபர் 28

மதிப்பனூர் நியாய விலைக் கடை 496 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகின்றது. இக்கடையுடன் 66 குடும்பங்களையுடைய சடையப்பக் கவுண்டன்பட்டி கிராமமும் இணைக்கப்பட்டுள்ளது. தாய் கடைக்கும், பகுதிநேரக் கடை கோரும் இடத்திற்கும் இடையே 2 கி.மீ. தூரம் உள்ளது. இத்தாய்க் கடையிலிருந்து 66 குடும்ப அட்டைகளைப் பிரித்தால் 430 குடும்ப அட்டைகள் மட்டுமே எஞ்சியிருக்கும். உத்தேச பகுதிநேரக் கடை துவக்க குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். உத்தேச பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் இடத்திலுள்ள குடும்ப அட்டைகளைப் பிரித்தபின் தாய்க் கடையில் குறைந்தது 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசு நிபந்தனை பூர்த்தியாகாததால் சடையப்பக் கவுண்டன்பட்டி கிராமத்தில் புதிய பகுதிநேரக் கடை திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

62—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 22115—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி வட்டம், பழைய குடியிருப்பு, அவ்வைநகர் நியாய விலைக் கடையைப் பிரித்து புதிய பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அவ்வைநகர் நியாய விலைக் கடையானது 1,380 குடும்ப அட்டைகளுடன் கீழக்கண்ட கிராமங்களின் குடும்ப அட்டைகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது:-

1.	தோக்கம்பட்டி	30
2.	மேட்டுக்கொட்டாய்	125
3.	தடங்கம், கக்கன்ஜிபுரம்	150

2013 அக்டோபர் 28]

4.	பெருமாள் கோயில் தெரு	100
5.	சத்யா நகர், ஜீவா நகர்	200
6.	அதியமான் நகர்	25
7.	நேரு நகர்	200
8.	சவுளுப்பட்டி கொட்டாவூர்	270
9.	சித்தேஸ்வரா நகர்	100
10.	பழைய குவார்ட்டர்ஸ்	180

அவ்வை நகர் நியாய விலைக் கடையில் இணைக்கப்பட்டுள்ள 1,380 குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், அவ்வைநகர் நியாய விலைக் கடையானது, வாரத்தில் ஆறு நாட்களும் முழு நேரக் கடையாகச் செயல்பட்டு வருவதால், குடும்ப அட்டைதாரர்கள் எவ்வித சிரமமுமின்றி அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். எனவே, தருமபுரி வட்டம், பழைய குடியிருப்பு, அவ்வைநகர் அமுதம் நியாய விலைக் கடையினை, பிரித்து பகுதிநேரக் கடை துவக்க தற்போது அவசியம் ஏதும் எழவில்லை.

63—

பால் கொள்முதல் அதிகப்படுத்துதல்

வினா எண் 15512—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை, திருநெல்வேலி, விருதுநகர், சிவகங்கை, கன்னியாகுமரி, திண்டுக்கல், தஞ்சாவூர், நீலகிரி, தருமபுரி, காஞ்சிபுரம்-திருவள்ளூர் ஆகிய இடங்களிலுள்ள மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களின் பால் கொள்முதலை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை, திருநெல்வேலி, விருதுநகர், சிவகங்கை, கன்னியாகுமரி, திண்டுக்கல், தஞ்சாவூர், நீலகிரி, தருமபுரி, காஞ்சிபுரம்-திருவள்ளூர் ஆகிய 10 மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களில் இவ்வாண்டு பிப்ரவரி மாதத்தின் தற்போதைய பால் கொள்முதல், கடந்த ஆண்டு பிப்ரவரி மாத சராசரி பால் கொள்முதலைவிட 85,743 லிட்டர் (நாளொன்றுக்கு) அதிகரித்துள்ளது. எனினும் திண்டுக்கல், கன்னியாகுமரி மற்றும் நீலகிரி ஒன்றியங்களில் மட்டும் பால் கொள்முதல் குறைந்துள்ளதால் அந்த ஒன்றியங்களில் பால் கொள்முதலை அதிகரிக்க பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

- *முதலமைச்சரின் சிறப்புத் திட்டமான விலையில்லாக் கறவை மாடுகள் பெற்ற பயனாளிகளுக்காக தனியே பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு பால் கொள்முதல் செய்யப்படுகிறது.*
- *கிராம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத கிராமங்களில் புதிதாக கிராம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்படுகின்றன.*
- *செயலிழந்த சங்கங்கள் புதுப்பிக்கப்படுகின்றன.*
- *பால் உற்பத்தியாளர்களுக்கு தொடர்ந்து கால்நடைத் தீவனம் வழங்கப்படுகின்றன.*
- *பால் உற்பத்தியைப் பெருக்க மேற்கண்ட நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதன் பயனாக, பால் உற்பத்தி உயர்ந்துள்ளது.*

64—

பால் விற்பனை அதிகரித்தல்

வினா எண் 15522—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2013 அக்டோபர் 28]

(அ) விருதுநகர், சிவகங்கை, புதுக்கோட்டை, திண்டுக்கல், தஞ்சாவூர், நீலகிரி, தருமபுரி, வேலூர், விழுப்புரம், காஞ்சிபுரம், திருவள்ளூர், ஈரோடு, கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களின் பால் விற்பனையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர், சிவகங்கை, புதுக்கோட்டை, திண்டுக்கல், தஞ்சாவூர், நீலகிரி, தருமபுரி, வேலூர், விழுப்புரம், காஞ்சிபுரம், திருவள்ளூர், ஈரோடு, கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய ஒன்றியங்களில் பால் விற்பனையை அதிகரிக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

- முகவர்கள் மூலமும், புதிய பால் விநியோக வழித்தடங்களை உருவாக்கியும் விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

- அரசு நிறுவனங்கள், மாவட்ட ஆட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்கள், வணிக வளாகங்கள், நீதிமன்றம், கல்லூரி, பேருந்து நிலைய வளாகங்கள் ஆகியவற்றில் புதிய பாலகங்கள் அமைத்தல் மூலம் பால் விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

- திருமண மண்டபங்கள்மூலம் தேவைப்பட்டியல் பெற்று, சுப வைபவங்களுக்கு பால் வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- சுய உதவிக் குழுக்கள்மூலம் ஆவின் பாலகங்கள் அமைத்து பால் விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2013 அக்டோபர் 28

65—

அரசு பால் பண்ணைகள்

வினா எண் 20302—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு பால் பண்ணைகளை இலாபகரமாக இயக்க புதிய திட்டங்கள் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் இலாபத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த பால் பண்ணையில்கீழ் குறிப்பிட்டுள்ள திட்டங்கள்மூலம் தொடர்ந்து இலாபகரமாக செயல்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

(1) இந்த நிதி ஆண்டில், வங்கி நிதி உதவியுடன் 680 கறவை மாடுகள் பால் உற்பத்தியாளர்களுக்குக் கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(2) பால் உற்பத்தியாளர்களை கூட்டுறவு அமைப்புகளுக்குள்ளேயே செயல்பட ஏதுவாக, சேலம் ஒன்றியத்தின் உபரி வருவாயில் 2009-2010 ஆம் ஆண்டிற்கு ரூ.7.96 கோடியும், 2010-2011 ஆம் ஆண்டிற்கு ரூ.7.27 கோடியும் பால் உற்பத்தியாளர்களுக்கு கூடுதல் ஊக்கத் தொகையாக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

(3) பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில், சேலம் ஒன்றியத்தில் 20 பால் பரிசோதனைக் கருவிகள் 100 சதவீத மானியத்தில் வழங்கவும், மேலும் பால் பரிசோதனைக் கருவிகள் சங்கங்களின் வருவாயிலிருந்து வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2013 அக்டோபர் 28]

(4) சேலம் பால் பண்ணையில் பால் பதப்படுத்தும் மற்றும் கையாளும் திறனை நாளொன்றுக்கு 3 இலட்சம் லிட்டரிலிருந்து 5 இலட்சம் லிட்டராக உயர்த்த ரூ. 3 கோடி செலவில் விரிவாக்கக் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

66—

ஆவின் கூட்டுறவுச் சங்கம்

வினா எண் 20332—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, மாணிக்காபுரம் கிராமம், இராசாக்கவுண்டம்பாளையத்தில் ஆவின் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதிக்குட்பட்ட 93 சங்கங்களில் திருப்பூர் பால் குளிரூட்டும் நிலையத்திற்கு உட்பட்ட 55 சங்கங்கள் மூலமாக தற்போது நாளொன்றுக்கு சராசரியாக 17,168 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. மாணிக்காபுரம் கிராமத்தில் ஏற்கெனவே சிபிடி 537 மாணிக்காபுரம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் இயங்கி வருகிறது. இச்சங்கத்தில் 89 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் 10 உறுப்பினர்களும், 4 உறுப்பினர் அல்லாதவர்களும் சேர்ந்து, மொத்தம் தினசரி சராசரியாக 150 லிட்டர் பால் ஊற்றி வருகின்றனர். இவர்களுக்கு சொந்தமாக 35 கறவை மாடுகள் உள்ளன. இச்சங்கமானது தினசரி 20 லிட்டர் உள்ளூரில் பால் விற்பனை செய்தும், 130 லிட்டர் பாலை திருப்பூர் பால் குளிரூட்டும் நிலையத்திற்கு அனுப்பியும் வருகிறது.

சிபிடி 537 மாணிக்காபுரம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து சுமார் 1 கி.மீ. தொலைவில்

[2013 அக்டோபர் 28

இராசாக்கவுண்டம்பாளையம் கிராமம் உள்ளது. இராசாக்கவுண்டம்பாளையத்தில் இதுவரை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்படவில்லை. இக்கிராமத்தில் 100 மாடுகள் உள்ளன. 35 கறவை மாடுகள் மூலமாக நாளொன்றுக்கு 120 லிட்டர் பால் உற்பத்தியாகி வருகிறது. உற்பத்தியாகும் பாலினை ஆவின் நிறுவனம் பலமுறை கோரியும், தனியாருக்கு வழங்கி வருகின்றனர். ஆர்வமுள்ள இப்பகுதியைச் சேர்ந்த பால் உற்பத்தியாளர்களை அணுகி, அவர்களின் விருப்பத்தின் பேரில் இராசாக்கவுண்டம்பாளையத்தில் புதிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

67—

மாட்டுத் தீவனம் வழங்குதல்

வினா எண் 21583—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் உறுப்பினர்களுக்கு மானிய விலையில் மாட்டுத் தீவனம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உறுப்பினர்களுக்கு மானிய விலையில் மாட்டுத் தீவனம் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. மேலும், ஈரோடு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய எல்லையில் செயல்படும், ஈரோடு மாவட்ட கால்நடைத் தீவன தொழிற்சாலையில் உற்பத்தியாகும் தீவனம், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குத் தேவையான தீவனம் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் இலாப நோக்கின்றி வழங்கப்பட்டு வருகிறது.

2013 அக்டோபர் 28]

68—

ஆறுகள் இணைப்புத் திட்டம்

வினா எண் 9263—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னடியன் கால்வாயிலிருந்து ஒரு புதிய வெள்ள நீர்க்கால்வாய் அமைத்து தாமிரபரணி ஆற்றினை கருமேனியாறு மற்றும் நம்பியாற்றுடன் இணைக்கும் திட்டத்தினை துரிதப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

தாமிரபரணி ஆற்றினை கருமேனியாறு மற்றும் நம்பியாற்றுடன் இணைக்கும் திட்டத்தின் முதல் நிலைப் பணிகள் முடிக்கப்பட்டு உள்ளன; மற்றும் இரண்டாம் நிலைப் பணிகள் தொடங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன. மூன்றாம் மற்றும் நான்காம் நிலைப் பணிகளை மேற்கொள்வது குறித்த நடவடிக்கைகள் பரிசீலனையில் உள்ளன.

69—

கால்நடை கிளை நிலையங்கள் ஏற்படுத்துதல்

வினா எண் 3052—முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கால்நடைகளை அடைப்பதற்கான பட்டிகள் இருந்த இடத்தில் கால்நடை சிகிச்சைக்கான கிளை நிலையங்கள் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பாராமரிப்புத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் கால்நடைகளை அடைப்பதற்கான பட்டிகள் இருந்த இடத்தில் கால்நடை சிகிச்சைக்கான கிளை நிலையங்கள் ஏற்படுத்த இயலாது. ஏனெனில், அரசு விதிமுறைகளின்படி ஒரு

[2013 அக்டோபர் 28

கால்நடை கிளை நிலையம் அமைக்க, அக்கிராமம் மற்றும் அக்கிராமங்களைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 3,000-க்குமேல் இருக்க வேண்டும். அக்கிராமங்களுக்கு இடைப்பட்ட தூரம் 3 கி.மீ.க்கு மேல் இருக்க வேண்டும். எனவே, பட்டிகள் இருந்த இடத்தில் கால்நடை சிகிச்சைக்கான கிளை நிலையங்கள் ஏற்படுத்த சாத்தியக்கூறு இல்லை.

70—

கணிப்பொறிகள் வழங்கும் திட்டம்

வினா எண் 10466—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடை நிலையங்கள், கால்நடை பெரு மருத்துவமனைகள் மற்றும் இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம் ஆகியவற்றுக்கு கணிப்பொறிகள் வழங்கும் திட்டத்தின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) கணினி இல்லாத 16 கால்நடை பெரு மருத்துவமனைகள், 68 கால்நடை மருந்தகங்கள், ஒவ்வொன்றுக்கும் ஒரு கணினி மற்றும் துணைப்பாகங்களும், இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்திற்கு 3 கணினிகள் மற்றும் துணைப்பாகங்களும் பகுதி-2 திட்டம் 2010-2011-ன்கீழ் ரூ.38.45 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுவிட்டன.

71—

பன்றிப் பண்ணை அமைத்தல்

வினா எண் 10478—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

திருநெல்வேலி மாவட்டம், அபிசேகப்பட்டி கால்நடைப் பண்ணையில் தேசிய புரதசத்து பெருக்க இயக்கத்தின்கீழ் முதன்மை பன்றிப் பண்ணை நிறுவும் திட்டத்தின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்கத் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

பன்றிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும்வண்ணம் ரூ.300.00 இலட்சம் செலவில் இனப்பெருக்கப் பண்ணைகள்மூலம் பன்றி வளர்ப்பை விருத்தி செய்வது தொடர்பாக ரூ.252.23 இலட்சம் செலவில் முதன்மை இனப்பெருக்குப் பண்ணை நிறுவிட தற்பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

72—

பசுந்தீவன சாகுபடி

வினா எண் 20301—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு பசுந்தீவனம் வளர்க்க மானியம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு பசுந்தீவனம் சாகுபடி செய்ய, மாநில தீவன அபிவிருத்தித் திட்டம் மற்றும் மத்திய தீவன அபிவிருத்தி விரைவுபடுத்தும் திட்டம்மூலம் இறவையில் 0.25 ஏக்கர் பரப்பில் பசுந்தீவனம் சாகுபடி செய்ய ரூ.2,590/- 100 சதவிகிதம் மானியமாக வழங்கி திட்டம் செயல்படுத்தப்பட்டது. மேலும் மானாவாரியில் 0.25 ஏக்கர் பரப்பில் பசுந்தீவனம் வளர்க்க சிறு/குறு மற்றும் இதர

[2013 அக்டோபர் 28

விவசாயிகளுக்கு ரூ.1,350/- 100 சதவிகிதம் மானியத்தில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இவ்வாண்டு (2012-2013) மாநில தீவன அபிவிருத்தித் திட்டம்மூலம் பசுந்தீவனம் சாகுபடி செய்ய சிறு/குறு விவசாயிகளுக்கு ரூ.3,000/- 0.25 ஏக்கர் 100 சதவிகிதம் மானியமாக வழங்கி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

73—

தேசிய வன் பதிவு மையம் அமைத்தல்

வினா எண் 20636—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டங்களிலும் மத்திய கோழிப்பண்ணை அபிவிருத்தி அமைப்பு மற்றும் சோதனை மையம், கோழிகள் உற்பத்தி மாதிரி சோதனை மையம், மத்திய ஆடுகள் வளர்ப்புப் பண்ணை, மத்திய பசுவினம் வளர்ப்புப் பண்ணை, நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்கள், மத்திய கன்றுகள் சோதனை பசுந்தீவன பயிர்த் திட்டம், மத்திய பசுந்தீவன பயிர் சாகுபடி பண்ணை, தேசிய வன் பதிவு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டங்களிலும் மத்திய கோழிப்பண்ணை அபிவிருத்தி அமைப்பு மற்றும் சோதனை மையம், கோழிகள் உற்பத்தி மாதிரி சோதனை மையம், மத்திய ஆடுகள் வளர்ப்புப் பண்ணை, மத்திய பசுவினம் வளர்ப்புப் பண்ணை, நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்கள், மத்திய கன்றுகள் சோதனை பசுந்தீவன பயிர்த் திட்டம், மத்திய பசுந்தீவன பயிர் சாகுபடி பண்ணை, தேசிய வன் பதிவு மையம் அமைக்க கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

2013 அக்டோபர் 28]

74—

விலையில்லா ஆடுகள் வழங்குதல்

வினா எண் 29182—திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் சாதி மோதல்களின்போது இழந்த விலையில்லா ஆடுகளை மீண்டும் மக்களுக்கு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) நவம்பர் 7, 2012 ஆம் தேதி அன்று நடந்த சாதி மோதல்களின்போது அண்ணாநகர் மற்றும் கொண்டம்பட்டி காலனி பகுதிகளைச் சேர்ந்த விலையில்லா ஆடுகள் வழங்கப்பட்ட 24 பயனாளிகள் தங்கள் ஆடுகளை இழந்துவிட்டதாக கோரிக்கை விடுத்து அதற்கு மாவட்ட நிருவாகம் சார்பில் 24 பயனாளிகளுக்கும் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) கேள்வி எழாது.

75—

விலையில்லா தீவனங்கள் வழங்குதல்

வினா எண் 30021—திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு வழங்கும் விலையில்லா ஆடு, மாடுகளை வளர்க்கத் தேவையான தீவனங்களை விலையில்லாமல் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) இலவச வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தில் வெள்ளாடு / செம்மறி ஆடு ஒன்றுக்கு ஆட்டுப்பட்டி அமைப்பதற்கும் / ஊட்டச்சத்துள்ள உணவு வகைகளை வாங்குவதற்கும் ரூ.500/- வீதம் நான்கு ஆடுகளுக்கு மொத்தம் ரூ.2,000/- ஒரு பயனாளிக்கு வழங்கப்படுகிறது.

இலவச கறவை பசுக்கள் வழங்கும் திட்டத்தில் கறவை பசு வாங்க ரூ.30,000/- அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் குறைவாக வாங்கினால் மீதித் தொகைக்கு தீவனம், தாதுச் சத்துள்ள உணவுப் பொருட்கள் மற்றும் ஏனைய ஊட்டச்சத்துள்ள பொருட்கள் வாங்கிக் கொள்ளலாம். மேலும், பயனாளிகளுக்கு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து அவர்களுக்கு வழங்கப்படும் தொகையில் 50% ரொக்கமும், 50% அடர் தீவனமும் வழங்கப்படுகின்றன.

எனவே, இலவச வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் மற்றும் கறவை பசுக்கள் வழங்கும் திட்டங்களில் வழங்கப்படும் கால்நடைகளை வளர்க்கத் தேவையான தீவனங்களை விலையில்லாமல் வழங்குவது குறித்து, தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

76—

இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி

வினா எண் 11353—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டுதோறும் சென்னை தீவுத்திடலில் நடைபெறும் இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை நிரந்தரமாக ஆண்டு முழுவதும் நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆண்டுதோறும், சென்னை தீவுத்திடலில் டிசம்பர் மாத இறுதியிலிருந்து மார்ச் மாதம் வரை, இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சிறப்புடன் நடத்தி வருகிறது. இதனைத் தொடர்ந்து ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதங்களில் கோடைத் திருவிழாவும், உணவுத் திருவிழாவும் தனியார்மூலம் நடைபெறுகிறது. ஜூலை முதல் அக்டோபர் வரை தனியார் நிறுவனங்களுக்கு வாடகை அடிப்படையில் தீவுத்திடலில் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, நுகர்வோர் கண்காட்சி (Consumer Exhibition), வீட்டுத் தேவைகள் கண்காட்சி (Home Exhibition) போன்ற பொருட்காட்சிகள் நடைபெறுகின்றன. சென்னை தீவுத்திடலில் ஆண்டு முழுவதும் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

77—

ஆடு அலகுகள் மற்றும் கோழிகள் வழங்குதல்

வினா எண் 27594—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் ஆடு அலகு ஒன்றிற்கு ரூ.50,000/- வழங்கவும், 10 கோழிகள் வீதம் வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அழிவின் விளிம்பு நிலையில் உள்ள பழங்குடியினருக்கு 2012-2013 ஆம் நிதியாண்டில் அரசாணை (ப) எண் 57, ஆதி(ம)பந(பமே1(2)) துறை, நாள் 19-3-2013-ன்படி கீழ்க்காணும் மாவட்டங்களில் ஆடு அலகுகள் வழங்க ரூ.30,000/- வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

[2013 அக்டோபர் 28

வ. எண்	மாவட்டத்தின் பெயர்	ஆடு அலகுகள் எண்ணிக்கை	தொகை (ரூ. இலட்சத்தில்)
1.	காஞ்சிபுரம்	100	30.00
2.	வேலூர்	100	30.00
3.	திருவள்ளூர்	100	30.00
4.	கோயம்புத்தூர்	25	7.50
5.	தருமபுரி	25	7.50
6.	திருவண்ணாமலை	25	7.50
7.	விழுப்புரம்	25	7.50
8.	அரியலூர்	25	7.50
9.	கடலூர்	50	15.00

இதேபோன்று கீழ்க்காணும் மாவட்டங்களில் அழிவின் விளிம்பு நிலையில் உள்ள பழங்குடியினர் ஒருவருக்கு ரூ.2,000/- வீதம் கோழிகள் வழங்கிட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

வ. எண்	மாவட்டத்தின் பெயர்	கோழி அலகுகள்	தொகை (ரூ. இலட்சத்தில்)
1.	காஞ்சிபுரம்	50	1.00
2.	வேலூர்	50	1.00
3.	திருவள்ளூர்	50	1.00
4.	கோயம்புத்தூர்	50	1.00
5.	தருமபுரி	50	1.00
6.	திருவண்ணாமலை	50	1.00
7.	விழுப்புரம்	50	1.00
8.	அரியலூர்	50	1.00
9.	கடலூர்	50	1.00
10.	நீலகிரி	501	10.02

2013 அக்டோபர் 28]

இதேபோன்று, இதர மாவட்டங்களில் உள்ள அனைத்து பழங்குடியிருக்கும், பெறப்படும் கோரிக்கைகளுக்கேற்ப ஆடு அலகுகள் மற்றும் கோழிகள் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தற்போது, இந்தத் திட்டங்கள் நடைமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

78—

எண்மியப்படுத்தப்பட்ட அச்சகங்கள் உருவாக்குதல்

வினா எண் 32419—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மின்னணு முறையில் எண்மியப்படுத்தப்பட்ட அச்சகங்கள் உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

அரசு மைய அச்சகத்தில் ஏற்கெனவே டிஜிட்டல் பிரிண்டர் நிறுவப்பட்டு அதன்மூலம் அச்சுப் பணிகள் செயலாக்கப்பட்டு வருகின்றன. தற்போது, கணினிமூலம் அச்சுத்தகடு தயாரிக்கும் இயந்திரம் (Computer to Plate) மற்றும் தனித்தாள் வண்ண அச்சு இயந்திரம் (4 Colour Sheetfed with CPC Control) ஆகிய இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இவற்றை நிறுவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்மூலம், அரசு மைய அச்சகம் எண்மியப்படுத்தப்பட்ட அச்சகமாக செயல்படவுள்ளது. மேலும், கிளை அச்சகங்களில் தற்போது மின்னணு முறையில் எண்மியப்படுத்தப்பட்ட இயந்திரங்கள் நிறுவப்பட வேண்டிய அவசியம் எழவில்லை.

79—

எழுதுபொருட்கள் பற்றாக்குறை

வினா எண் 32420—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

அரசு அலுவலகங்களில் எழுதுபொருட்கள் பற்றாக்குறையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் கட்டுப்பாட்டில் சென்னை, இராஜாஜி சாலை இலக்கம் 36-ல் இயங்கிவரும் அரசு எழுதுபொருள் அலுவலகம்மூலம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் எழுதுபொருட்கள், தட்டச்சு இயந்திரங்கள், படிப்பெருக்கி இயந்திரங்கள், கரகிதங்கள் மற்றும் அட்டைகள் ஆகியவை விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. தற்போது, அரசு எழுதுபொருள் அலுவலகம்மூலம், தமிழகத்திலுள்ள 3,666 அரசு அலுவலகங்களுள், எழுதுபொருள்கள் தேவை கோரிக்கை அளிக்கும் 3,623 அலுவலகங்களுக்கு விலையேதுமின்றியும், 43 அலுவலகங்களுக்கு முன்கூட்டியே தொகை செலுத்தும் முறையிலும் குறித்த வரையறைகளுடன் ஆண்டுதோறும் எழுதுபொருட்கள் வழங்கப்பட்டு வருவதால், அரசு அலுவலகங்களில் எழுதுபொருட்கள் பற்றாக்குறை ஏற்படுவது தவிர்க்கப்பட்டு வருகிறது.

80—

பணிப் பதிவேடு விற்பனை

வினா எண் 32421—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பணிப் பதிவேடு தனியார் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்வதைத் தடை விதிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் கட்டுப்பாட்டில் சென்னை, அண்ணாசாலை இலக்கம் 110-ல் இயங்கிவரும்

2013 அக்டோபர் 28]

அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் மற்றும் சென்னை, உயர் நீதிமன்ற வளாகத்தில் இயங்கிவரும் அரசு கிளை அச்சகத்தில் உள்ள துணை விற்பனை நிலையம் ஆகியவற்றின் மூலமாக அரசு ஊழியர்கள் பயன்படுத்தும் பணிப் பதிவேடு (Service Book) நேரடியாக விற்பனை செய்யப்பட்டு வருவதுடன், மாவட்டந்தோறும் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மூலமாகவும் மற்றும் தென் மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில் திருச்சி மற்றும் மதுரை மாவட்ட அரசு கிளை அச்சகங்களில் துவங்கப்பட்டுள்ள அரசு வெளியீடுகள் துணை விற்பனை நிலையங்களிலும் பணிப் பதிவேடுகள் தங்கு தடையின்றி விற்பனை செய்யப்பட்டு வருவதன்மூலம் பணிப் பதிவேடுகள் தனியார் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படுவது தடை செய்யப்பட்டு வருகிறது.

81—

தடையில்லாச் சான்று வழங்குதல்

வினா எண் 15286—திரு. ஆர். சாமி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, நரசிங்கம்பட்டி ஊராட்சி, மலைநகரில் வனத் துறைக்குச் சொந்தமான இடத்திற்கு அருகில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க, வனத் துறையின்மூலம் தடையில்லாச் சான்று வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி, மேலூர் யூனியன், பெருமாள் காப்புக் காட்டிற்கு அருகிலுள்ள நரசிங்கம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட மலைநகரில் சுமார் 100 குடும்பங்கள் வசித்து வருகின்றன. அங்கு மின் வசதி, சாலை வசதி மற்றும் அத்தியாவசிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேற்கண்ட குடும்பங்கள் வசிக்கும் வீடுகள் பெருமாள் மலை காப்புக் காட்டிலிருந்து 40 மீட்டர்-60 மீட்டர் உட்பட்ட இடைதாங்கு தூரத்திற்கு எந்தவிதமான நில ஒப்படைப்போ/நில மாற்றமோ/நில உரிமையோ செய்யக்கூடாது என வருவாய் வாரிய நிலை சட்டம் (Board of Revenue Standing Order)

[2013 அக்டோபர் 28

உள்ளதாலும் மேற்கண்ட வீடுகள் காப்புக் காட்டின் எல்லையிலிருந்து இடைதாங்கு பகுதியில் அமைந்துள்ளதாலும், வனத் துறையால் பட்டா வழங்க தடையில்லாச் சான்று வழங்க இயலாது.

82—

அடிப்படை வசதிகள் செய்தல்

வினா எண் 22652—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளவங்கோடு வட்டம், வலியாற்றிலுள்ள மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

வலிய ஏலா பகுதி, கிளாமலை காப்புக் காடு கன்னியாகுமரி வன உயிரின சரணாலயத்திற்கு உட்பட்டதாகும். இப்பகுதியில் மேற்கொள்ளும் வனம் சாரா பணிகளுக்கு மத்திய அரசிடமிருந்தும், தேசிய வன உயிரின குழுமத்திடமிருந்தும் அனுமதி பெறவேண்டும். மேலும், இப்பகுதி வனப் பகுதியின் மத்தியில் அமைந்துள்ளதால், குடியிருப்பவர்கள் வனநில ஆக்கிரமிப்பாளர்களும் ஆவார்கள். இவர்களுக்கு அடிப்படை வசதிகள் வழங்குவது என்பது ஆக்கிரமிப்பாளர்களை ஊக்குவிக்கும் செயலாவதுடன், பின்னர் ஆக்கிரமிப்பை அகற்றும் பணி மிகவும் கடுமையானதாக மாறிவிடும். எனவே, இப்பகுதியில் அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பது தொடர்பாக எந்தத் திட்டமும் அரசிடம் இல்லை.

83—

வனக் காப்பாளர்கள் நியமனம்

வினா எண் 31982—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக வனத் துறையில் தேவையான வனக் காப்பாளர்களை நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை எண் 157, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வ-2) துறை, நாள் 29-6-2012-ன்படி வனத் துறையில் காலியாக உள்ள வனக் காப்பாளர் பணியிடங்களை நேரடி நியமனம்மூலம் "தமிழ்நாடு வனச் சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்" (Tamil Nadu Forest Uniformed Services Recruitment Committee) வாயிலாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து தமிழ்நாடு வனச் சார்நிலைப் பணி விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வனக் காப்பாளர் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

84—

வன விலங்குகளுக்கு குடிநீர் வழங்குதல்

வினா எண் 33877—திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் வன விலங்குகளுக்கு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

வறட்சிக் காலங்களில் காப்புக் காடுகளில் வசித்து வரும் வன உயிரினங்களின் குடிநீர்த் தேவையைக் கருத்தில் கொண்டு, வறட்சிக்கு இலக்காகியுள்ள வனப் பகுதிகளில் இதர பணிகளுடன் சேர்த்து மழைநீர் சேகரிப்புக்காக சிறு தடுப்பணைகள், கசிவுநீர்க் குட்டைகள் மற்றும் தண்ணீர்த் தொட்டிகள் கட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் இவ்வாண்டு, இயற்கைக்கு மாறான வறட்சி ஏற்பட்டுள்ளதால், வன உயிரினங்களின் உணவு மற்றும் குடிநீர்த் தேவைகளுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, வன உயிரினங்களுக்குப் போதுமான தீவனம் மற்றும் குடிநீர் ஆகியன பிப்ரவரி 2013 முதல் தருமபுரி மண்டலத்தைச் சேர்ந்த அனைத்து கோட்டங்களிலும் வழங்கப்பட்டு வருகிறது. கடுமையான வறட்சி நிலவிய போதிலும்,

[2013 அக்டோபர் 28

யானைகள் மற்றும் இதர வன உயிரினங்களுக்குத் தேவையான உணவு மற்றும் குடிநீர் காப்புக் காட்டின் உள்ளே கிடைக்கப் பெற்றுள்ளது. தருமபுரி வனக் கோட்டத்தில் ஒகேனக்கல் வனச்சரகத்தில் நான்கு இடங்களிலும், பாலக்காடு வனச் சரகத்தில் மூன்று இடங்களிலும் யானைகளின் நடமாட்டத்தைக் கண்டறிந்து அங்கு யானைகளுக்குத் தேவையான தீவனமான கரும்பு, வாழை, தென்னைமட்டைகள் முதலியனவற்றை அளிக்கும் விதமாகவும் மற்றும் யானைகளின் குடிநீர்த் தேவைகளின் பொருட்டும் நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்தும் ரூ.27.92 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

85—

விட்டுமனைப் பட்டா

வினா எண் 33809—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் நிலம் மற்றும் வீட்டுமனைகள் வாங்கும்போது பதிவு செய்த விவரம் பத்திரப்பதிவு அலுவலகத்திலிருந்து சம்பந்தப்பட்ட வட்ட அலுவலகத்திற்கு கணினிமூலம் மாற்றம் செய்து சம்பந்தப்பட்டவருக்கு பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

பத்திரப்பதிவுத் துறையில் நிலம் மற்றும் வீட்டுமனைகள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற பரிவர்த்தனைகளினால் பத்திரப்பதிவுகளில் அன்றாடம் ஏற்படும் மாற்றங்களை உடனுக்குடன் வருவாய் நில ஆவணங்களில் சம்பந்தப்பட்ட பதிவுகளில் மாறுதல் செய்து பட்டா வழங்குவதற்கு இணைய வழியில் நில ஆவணங்களைப் பராமரிப்பதற்குரிய ஒரு மென்பொருளை (software) தேசிய தகவல் தொழில்நுட்பத் துறையின் உதவியுடன் உருவாக்குவதற்கும், இதற்காக வட்டங்களிலும் மற்றும் மாநில அளவில் தேவைப்படும் கணினிகள் மற்றும் இதர உபகரணங்களைப் பெறுவதற்கும், மென்பொருள் (software) உருவாக்குவதற்கு தேசிய தகவல் தொழில் நுட்பத் துறையால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன..

2013 அக்டோபர் 28]

86—

தமிழ் மற்றும் உருது மொழிகளில் தேர்வு எழுதுதல்

வினா எண் 14676—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓரியண்டல் அரபிப் பள்ளிக்கூடங்களில் பத்தாம் வகுப்பில் விருப்ப மொழிப் பாடமாக தமிழ், உருது ஆகியவற்றில் தேர்வு எழுதவும், மதிப்பெண் சான்றிதழில் அதை இடம் பெறச் செய்யவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

தமிழ் அல்லது ஆங்கிலத்தை தாய்மொழியாகக் கொண்டிராத மாணவர்கள் அவர்தம் தாய் மொழியை ஒரு விருப்பப் பாடமாகக் கற்கலாம் எனவும், மேலும் கீழ்க்காணும் ஆணைகளும் வெளியிடப்பட்டுள்ளன:

(i) சிறுபான்மை மொழிப் பாடம் கற்பிக்க வாரத்தில் 4 பாட வேளைகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

(ii) சிறுபான்மை மொழிப் பாடங்கள் மற்றும் சிறுபான்மை மொழிவழியில் கற்பிக்கப்படும் பாடங்களுக்கான பாடநூல்கள் தயாரிக்கப்படும்.

(iii) அனைத்து வகுப்புகளுக்கும் சிறுபான்மை மொழிப் பாடங்களுக்கான தேர்வுகள் நடத்தப்படும்.

(iv) தற்போது கீழ்த்திசை இடைநிலைக் கல்வி மதிப்பெண் சான்றிதழில் உள்ளவாறு பகுதி-4ன்கீழ் மாணவர்கள் பயிலும் சிறுபான்மை மொழித் தேர்வில் அவர்கள் பெறும் மதிப்பெண் விவரம் குறிப்பிடப்படும். பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு தேர்ச்சியினைப் பொறுத்தவரை பகுதி 1, பகுதி 2 மற்றும் பகுதி 3-ன்கீழ் உள்ள பாடங்கள் மட்டுமே கணக்கில் கொள்ளப்படும் என சான்றிதழ்களில் குறிப்பிடப்படும்.

87—

பள்ளிக்கு கழிப்பறை வசதி

வினா எண் 31507—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், உன்னங்குளம் ஊராட்சி, செவன்குளத்திலுள்ள திருநெல்வேலி டிசோசியன் டிரஸ்ட் அசோசியேசன் (TDTA) பள்ளிக்கு கழிப்பறை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகளில் கட்டடங்கள் கட்டுவது, உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது, கட்டடங்களை சீரமைப்பது ஆகிய பணிகள் அரசால் மேற்கொள்ளப்படுவதில்லை. எனவே, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி ஒன்றியம், உன்னங்குளம் ஊராட்சி, செவன்குளத்திலுள்ள டிசோசியன் டிரஸ்ட் அசோசியேசன் (TDTA) பள்ளிக்கு கழிப்பறை வசதிகளை டிரஸ்ட் மூலமே செய்ய வேண்டும்.

(ஆ) வினா எழவில்லை.

88—

மருந்தாளுநர் பணியிடம்

வினா எண் 3477—திரு. ஆர். சுந்தர்ராஜன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருந்தாளுநர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

2013 அக்டோபர் 28]

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

அரசாணை நிலை எண் 1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 2-1-2012-ன்படி மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இத்தேர்வு வாரியம்மூலம் அரசு மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் காலியாக உள்ள மருந்தாளுநர் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தகுதியானோரின் சான்றிதழ்களை சரிபார்க்கும் பணி நடந்துவரும் வேளையில் திரு. பி.எஸ். கணேசன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு எண் 23109/2012-ல் வழக்குத் தொடர்ந்து தடையாணை பெற்றுள்ளார். தடையாணையினை விலக்கிக் கொள்ள எதிர் ஆணையுறுதி பத்திரம் (Counter Affidavit) உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நீதிப்பேராணை மனுவில் தீர்ப்பு வழங்கப்பட்டு தடையாணை விலக்கிக் கொள்ளப்பட்டவுடன், அரசு மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் காலியாக உள்ள மருந்தாளுநர் பணியிடங்களை நிரப்ப அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளும்.

89—

ஊடுகதிர் பணியாளர் நியமனம்

வினா எண் 3555—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி அரசு மருத்துவமனையில் முழுநேர ஊடுகதிர் பணியாளர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஆரணி அரசு மருத்துவமனையில் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்ட ஒரு முழுநேர ஊடுகதிர் பணியாளர் பணியிடம் நிரப்பப்பட்டு ஒருவர் பணிபுரிந்து வருகிறார்.

[2013 அக்டோபர் 28

90—

பிசியோதெரபிக்கு தனித் துறை

வினா எண் 4474—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பிசியோதெரபியை தனித் துறையாக அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது பிசியோதெரபிக்கென்று தனித் துறை அமைத்திட வேண்டிய தேவை எழுவில்லை. பெரும்பாலான அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பிசியோதெரபி பிரிவு செம்மையாக இயங்கி வருகிறது எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

91—

செவிலியருக்கு குடியிருப்பு மனை வழங்குதல்

வினா எண் 16341—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், நீர்பழனி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் செவிலியருக்கு குடியிருப்பு மனை வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றியத்தில் நீர்பழனி கூடுதல் ஆரம்ப சுகாதார

2013 அக்டோபர் 28]

நிலையம் செயல்படுகிறது. நீர்பழனி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் செவிலியர் குடியிருப்பு கட்ட தற்போது நிதி ஒதுக்கீடு இல்லை. ஆதலால், நீர்பழனி ஆரம்ப சுகாதார நிலையத்தில் செவிலியர் குடியிருப்பு கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

92—

மருத்துவமனைக்கு புதிய கட்டடம்

வினா எண் 17220—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் தொகுதி, மண்டபம் ஒன்றியம், இரட்டையூரணி ஊராட்சிக்குட்பட்ட இரட்டையூரணி கிராமத்தில் பழுதடைந்த மருத்துவமனை கட்டடத்தை புதிதாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியத்தில் தாமரக்குளம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் இரட்டையூரணி துணை சுகாதார நிலையம் செயல்படுகிறது. இரட்டையூரணி துணை சுகாதார நிலைய கட்டடத்தை பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு செய்தால் போதுமானதாகும். எனவே, இரட்டையூரணி துணை சுகாதார நிலையத்துக்கு புதியதாக கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

93—

கட்டட வசதி

வினா எண் 19719—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர் வட்டம், மங்கலம் ஊராட்சிக்குட்பட்ட அக்ரகாரபுத்தூரில் இயங்கிவரும் துணை சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டி, தரம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் தொகுதிக்குட்பட்ட மங்கலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்த அக்ரகாரபுத்தூர் துணை சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு தற்போது நிதி உதவி ஏதும் கிடைக்கப் பெறாததால் அக்ரகாரபுத்தூர் துணை சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

94—

ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம்

வினா எண் 21654—திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், ஜருகு பகுதியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தருமபுரி சுகாதாரப் பகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் தோப்பூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் ஜருகு என்ற துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. ஜருகு துணை சுகாதார நிலையம் அரசு கட்டடத்தில் சுமார் 15 வருடங்களாக நல்ல நிலையில் இயங்கி வருவதாலும், கிராம சுகாதார செவிலியர் இந்த மைய கட்டடத்தில் தங்கி பணிபுரிந்து

2013 அக்டோபர் 28]

வருவதாலும், தோப்பூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து ஐருகு துணை சுகாதார நிலையம் 15 கி.மீ. தொலைவில் உள்ளதாலும் ஐருகு பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையத்துக்கான கட்டடம் கட்டுவதற்கு அவசியம் எழவில்லை.

95—

சுற்றுச்சுவர் அமைத்தல்

வினா எண் 24732—திருமதி ர. சுபா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஊராட்சி ஒன்றியம், சாத்தப்பாடி ஊராட்சியிலுள்ள சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தலைவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் சாத்தப்பாடி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. நிதி ஒதுக்கீடு இல்லாததால் சாத்தப்பாடி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

96—

சுற்றுச்சுவர் அமைத்தல்

வினா எண் 25047—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியம், அரசு மருத்துவமனைக்கு சுற்றுச்சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியத்தில் கண்ணங்குடி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது. கண்ணங்குடி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்ட தற்போது நிதி ஒதுக்கீடு இல்லையாதலால் அச்சுகாதார நிலையத்துக்கு சுற்றுச்சுவர் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

97—

சுற்றுச்சுவர் அமைத்தல்

வினா எண் 26682—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி ஒன்றியம், நெசல் ஆரம்ப சுகாதார நிலைய மகப்பேறு மையத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்துத் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு சுகாதாரப் பகுதி, ஆரணி கிழக்கு ஊராட்சி ஒன்றியத்தில் நெசல் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது. நெசல் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுற்றுச்சுவர் கட்ட நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லையாதலால் தற்போது சுற்றுச்சுவர் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

98—

ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

வினா எண் 26706—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 28]

(அ) மடத்துக்குளம் வட்டம், கணியூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஓர் ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத்தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், கணியூர் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க 2012-2013 நிதியாண்டில் பழுதுபார்ப்பு பராமரிப்புக்காக அளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் ஆழ்குழாய்க் கிணறு அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

99—

மகப்பேறு மருத்துவர் நியமனம்

வினா எண் 2881ϐ—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை இராணியார் அரசு மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவரை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை இராணியார் அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட உதவி மருத்துவர் /

[2013 அக்டோபர் 28

குடிமை மருத்துவர்/ முதுநிலை உதவி மருத்துவர் உள்ளிட்ட பணியிடங்கள் மொத்தம் 27 ஆகும். அதில், மகப்பேறு மருத்துவத்திற்கான 5 •பணியிடங்களிலும் மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

100—

சமையல் எரிவாயு இணைப்பு

வினா எண் 34067—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் அகதிகள் முகாமில் உள்ள இலங்கைத் தமிழ் அகதி குடும்பங்களுக்கு சமையல் எரிவாயு இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழ் குடும்பங்களுக்கு ஏற்கெனவே சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அத்தியாவசியப் பொருட்களான சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. மண்டபம் அகதிகள் முகாமில் உள்ள இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு சமையல் எரிவாயு இணைப்பு வழங்கினால், மாநிலத்தின் பிற மாவட்டங்களில் உள்ள அகதிகள் குடும்பத்திற்கும் இதனை விரிவுபடுத்த வேண்டும். மேலும், இதுபோன்ற திட்டங்களைச் செயல்படுத்தும்போது மத்திய அரசின் முன் அனுமதியினையும் பெறவேண்டும். எனவே, தற்போதுள்ள சூழலில், மண்டபம் அகதிகள் முகாமில் உள்ள இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு சமையல் எரிவாயு இணைப்பு உடனடியாக வழங்குவது இயலாது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2013 அக்டோபர் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

அரசு சிற்றுந்துகளில் வரையப்பட்டுள்ள படம் குறித்து

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு மாதங்களாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முனைவர் செ.கு. தமிழரசன் என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் என்னுடைய ஆய்வில் உள்ளது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் முதலில் கேட்டிருக்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடு) அவையெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. உட்காருங்கள். (குறுக்கீடு)

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசுகிறார். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். அவர் பேசட்டும். நீங்கள் உட்காருங்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு ஒரு முக்கிய பிரச்சினையை இந்த அவையின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கடந்த வாரம், இந்தக் கூட்டத் தொடரிலே, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், இந்தக் கூட்டத் தொடரின் தொடக்க நாளிலே, போற்றுதலுக்குரிய மாண்புமிகு

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2013 அக்டோபர் 28 தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் சென்னை மாநகரிலே சிற்றுந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சிற்றுந்துகளிலே வரையப்பட்டுள்ள ஓர் இயற்கைக் காட்சி இரட்டை இலை போலத் தெரிகிறது, இது என்ன அரசுப் பேருந்தா அல்லது அ.தி.மு.க. பேருந்தா என்று இந்த அவையிலே குரல் எழுப்பியதையும், அதற்குப் பின்னால் பல ஊடகங்களும், பல செய்தித் தாள்களும்கூட இந்தச் செய்திகளை வெளியிட்டிருந்ததையும், உங்களுடைய அனுமதி இல்லாமலேயே இந்த அவையிலே அந்தப் படத்தைத் தூக்கிக் காட்டியதையும்... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். அவர் பேசுகிறார். உட்காருங்கள். திரு. அன்பழகன் அவரைப் பேச அனுமதித்திருக்கிறேன். அவர் பேசுகிறார். நீங்கள் உட்காருங்கள். நான் உங்களை அனுமதிக்கவில்லை. (குறுக்கீடு) முனைவர் செ.கு. தமிழரசன், பேசுங்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: ஆக, இந்த அவையிலே அந்தப் படத்தைத் தூக்கிக் காட்டியதையும் நாமெல்லாம் பார்த்தோம். அதிலே நான்கு இலை இருந்ததை நான்கூட பிறகு செய்தித் தாளிலே பார்த்தேன். அது ஓர் இயற்கைக் காட்சி. இலைகள் என்பது ஒரு தேர்தல் சின்னம் மட்டுமல்ல. தேர்தல் சின்னம் என்று கருத்தில் கொண்டால் பஸ்கூட தேர்தல் சின்னம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் ஓர் அரசியல் கட்சியினுடைய சின்னம். (மேசையைத் தட்டும் ஒலி) சைக்கிள்கூட தேர்தல் சின்னம்தான். அதுகூட ஓர் அரசியல் கட்சியினுடைய சின்னம். பழம்கூட-மாம்பழம்கூட ஓர் அரசியல் கட்சியின் சின்னமாக இருக்கிறது. குடை இருக்கிறது. கைச் சின்னம் இருக்கிறது. அது ஓர் உடல் உறுப்பு. இப்படி எத்தனையோ சின்னங்கள் இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சின்னங்களெல்லாம் ஏதோ ஒரு மாநிலத்திலே அரசியல் கட்சிகளின் சின்னமாக இருக்கின்றன. நான்கு இலைகள், அந்த நான்கு இலைகள் இரட்டை இலை அல்ல, நான்கு இலைகள்தான் நான் பார்த்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) பொதுவாகவே தமிழகம் இலைக்கு மிகவும் புகழ்பெற்ற, பாரம்பரியமிக்க ஒரு மாநிலம். நம்முடைய சித்தர்கள் கண்ட பச்சிலை இருக்கிறதே அது உயிர்காக்கும் உன்னத மருந்து. (மேசையைத் தட்டும் ஒலி)

2013 அக்டோபர் 28] [முனைவர் செ.கு. தமிழரசன்]

இந்தப் பச்சிலைகளுக்குச் சமீபகாலத்திலே வட இந்தியாவிலெல்லாம் வரவேற்பு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) டில்லி தலைநகரமே எதிர்நோக்கி இருக்கிறது. டில்லி தலைநகரத்திலே டெங்கு காய்ச்சல் வந்தபோது பச்சிலைதான் மருந்தாய்ப் போய் நின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அன்பழகன், நான் உங்களை அனுமதிக்கவில்லை. நீங்கள் இந்தமாதிரிப் பேசுவது முறையல்ல. நான் அவரை அனுமதித்திருக்கிறேன். அவர் பேசிக் கொண்டிருக்கிறார். நீங்கள் உட்காருங்கள். அன்றைக்கே என்னுடைய அனுமதி இல்லாமல் படத்தையெல்லாம் கொண்டு வந்து காட்டினீர்கள். நான் அதை உரிமைக் குழுவுக்கு அனுப்பி இருக்க வேண்டும். நான் இவ்வளவுதூரம் கேட்டுக்கொண்டதற்குப் பிறகும் இந்தமாதிரிப் பேசுவது முறையல்ல. முனைவர் செ.கு. தமிழரசன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மீறிப் பேசினால் நடவடிக்கை எடுப்பேன். முனைவர் செ.கு. தமிழரசன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர் இரட்டை இலையைப் பற்றிப் பேசுகிறார். யார் எ.வ. வேலு? நாட்டிற்கு இரட்டை இலையால் அடையாளம் காட்டப்பட்டவர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் அடையாளம் காட்டப்பட்டவர் எ.வ. வேலு. (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் அனாதையாய், எங்கேயோ போய் தஞ்சம் அடைந்துகொண்டு இன்றைக்கு வாழ்வளித்தவரையே திரும்பிப் பேசக்கூடிய கேவலமான ஓர் அரசியல்வாதியாய் இருக்கிறாரே. (குறுக்கீடு) நீங்கள் பேசலாம். ஆனால், அவர் பேசக்கூடாது. திரு. செங்குட்டுவன், (குறுக்கீடு)

முற்பகல் 11-25

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: நீங்கள் பேசலாம், ஆனால் அவர் பேசக்கூடாது. (குறுக்கீடு) நீங்கள் பேசலாம், அவர் பேசக்கூடாது.

[2013 அக்டோபர் 28

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதுபோல இவரும் பேசக்கூடாது. இவருக்கும் அந்தத் தகுதி இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன், நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) பேச வந்த சப்ஜெக்டைப் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகப் பெரிய அளவில் மக்கள் செல்வாக்கைப் பெற்ற தமிழகத்தின் தலைவரான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய சமாதியிலே (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கின்ற ஓர் அடையாளம் இரட்டை இலையைப்போல இருக்கிறதென்று சமீபத்திலே நீதிமன்றத்திற்கே போனார்கள். நீதிமன்றம் என்ன தீர்ப்பளித்தது? அதிலே வரையப்பட்டிருக்கின்ற ஓர் ஓவியம். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள் (குறுக்கீடு) உட்காருங்கள். அவரை நான் பேசச் சொல்லியிருக்கிறேன். அவர் பேசி முடிக்கும் வரையிலும் உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதி இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பதில் இருக்கின்றதா என்று நான் கேட்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இந்த சப்ஜெக்ட் முடியட்டும், இருங்கள். முனைவர் செ.கு. தமிழரசன் அவர்களைப் பேச அனுமதித்திருக்கிறேன். முனைவர் செ.கு. தமிழரசன் பேசுகிறார். இடையில் பேசியதற்கெல்லாம் பிறகு பதில் சொல்லலாம். (குறுக்கீடு) இடையிலே பேசியதற்கெல்லாம் பிறகு பதில் சொல்லலாம். (குறுக்கீடு)

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பேச அனுமதியுங்கள். (குறுக்கீடு) அவர்களுக்கு நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதியில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

2013 அக்டோபர் 28]

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் பதில் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அநாகரிகமான, அவைக்கு ஒவ்வாத சொல் எதையும் அவர் பயன்படுத்தவில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. நீங்கள் உட்காருங்கள். நான், பேரவைத் தலைவர் எழுந்து நிற்கிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பேசிய கருத்துகளை வாபஸ் வாங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். அவரை நான் பேசுவதற்கு அனுமதித்திருக்கிறேன். அவர் அவைக்கு ஒவ்வாத வார்த்தை எதையும் பேசவில்லை. (குறுக்கீடு) நீங்கள் பேசுவதாக இருந்தால், தேவை இருந்தால், பிறகு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) தேவை இருந்தால், வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) இல்லை. இப்போது அவர் பேசி முடிக்கட்டும். நீங்கள் அவையை நடத்தவிடுங்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பேச அனுமதிக்க வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 'அவர் பேசிய கருத்துகளை வாபஸ் வாங்க வேண்டும்' என்று சொன்னார். மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் original ஆக திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்திருந்தால், (குறுக்கீடுகள்) பேச விடுங்கள். (குறுக்கீடுகள்) பேச விடுங்கள். பேரவைத் தலைவர் அவர்களே, இவர்களைவிட எங்களுக்கு சப்தம் போடத் தெரியும், இவர்களைவிட விவாதம் பண்ணத் தெரியும். இவர்களைவிட ஆழமான கருத்துகளை உள்ளடக்கிப் பேசக்கூடிய தொண்டன்தான் அண்ணா தி.மு.க. தொண்டன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

[2013 அக்டோபர் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போது நீங்கள் இந்தமாதிரிப் பேசுவது முறையல்ல. நான் நடவடிக்கை எடுக்க வேண்டியதிருக்கும். (குறுக்கீடுகள்) வேறு யாரும் பேச வேண்டாம். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு உறுப்பினர் திருவாளர் ஸ்டாலின் அவர்களைப் பற்றி இதுபோன்ற கருத்தைச் சொன்னால், நான் வாபஸ் வாங்கிக்கொள்கிறேன்.—எ.வ. வேலுவைப்பற்றி—எ.வ. வேலு இந்த உலகத்திற்கே (குறுக்கீடுகள்) கொஞ்சம் அமைதியாக இருக்க வேண்டும். நான் பேசும்போது அமைதியாக இருக்க வேண்டும். நான் ஒன்றும் ஆதாரமில்லாமல் பேசிக்கொண்டிருக்கவில்லை. (குறுக்கீடுகள்) அரசியல் ஆதாயத்திற்காகப் போகிறவர்கள் அண்ணா தி.மு.க. தொண்டர்கள் அல்ல. (குறுக்கீடுகள்) அரசியல் ஆதாயத்திற்காக, பதவிக்காகப் போகிறவர்கள் அண்ணா தி.மு.க. தொண்டர்கள் அல்ல. எங்களுக்கு ஒரே தலைவி, இங்கே வீற்றிருக்கிறார்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தவிர எங்களுக்கு வேறு தலைமை இல்லை அய்யா! (குறுக்கீடுகள்) (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அவைக்கு ஒவ்வாத வார்த்தை எதையும் சொல்லவில்லையே? (குறுக்கீடுகள்) அவைக்கு ஒவ்வாத வார்த்தைகள் எதையும் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: இது தற்கொலைப் படை. (குறுக்கீடு) அண்ணா தி.மு.க. தொண்டர் தற்கொலைப் படை. எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்காக தற்கொலை செய்துகொள்ளும் படை. (மேசையைத் தட்டும் ஒலி) காசுக்காக, பதவிக்காக சோரம் போகக்கூடிய படை அல்ல. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைக்கு ஒவ்வாத வார்த்தைகள் சொல்லவில்லை. ஆகையினால் நீங்கள் பேசுவதற்கு அனுமதிக்க முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. உட்காருங்கள். நீங்கள் பேச முடியாது. (குறுக்கீடுகள்) இல்லை. நீங்கள் பேச முடியாது, உட்காருங்கள். நீங்கள் அவையை நடத்துவதற்கு ஒத்துழையுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. அவையை நடத்துவதற்கு எனக்கு ஒத்துழையுங்கள். (குறுக்கீடுகள்) இந்தமாதிரிப் பேசினால்,

2013 அக்டோபர் 28] [பேரவைத் தலைவர்]

எப்படி அவையை நடத்துவது? நான் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்களைப் பேசச் சொல்லியிருக்கிறேன். அவர் பேசிக்கொண்டிருக்கிறார். பாதிதான் பேசியிருக்கிறார். பேசி முடிப்பதற்குள் நீங்கள் எழுந்திருந்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) இல்லை, இது முறையல்ல. (குறுக்கீடுகள்) இது முறையல்ல. நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். நீங்கள் என்னை அவையை நடத்தவிடவில்லை என்றால், நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) நீங்கள் உங்களுடைய இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்களுடைய இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-30

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய கருத்தைக் கேட்டுவிட்டு பிறகு பதில் சொல்லட்டும். நான் அவரை மதிக்கிறேன். என்னுடைய கருத்தைக் கேட்கட்டும். என்னுடைய கருத்து நியாயமாக இருக்கும்பட்சத்தில் அவர் அமைதியாக இருக்கட்டும். என்னுடைய கருத்தில் உடன்பாடு இல்லாவிட்டால், அவர் எழுந்து பதில் சொல்லட்டும். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களுடைய கருத்தை நான் பிறகு கேட்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உங்கள் கருத்தைப் பிறகு கேட்கிறேன்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வார்த்தையை வாபஸ் வாங்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின் கேட்டிருக்கிறார். என்னுடைய கருத்தினுடைய விளக்கத்தைத் தெரிந்துகொள்ளட்டும். அதற்குப் பின்பு, அவர் தொடர்ந்து விவாதம் செய்யலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களுடைய கருத்தை நீங்கள் சொல்லலாமேயொழிய, மாண்புமிகு அமைச்சருடைய வாதத்தை, நான் நீக்க முடியாது. (குறுக்கீடுகள்) நான் நீக்க முடியாது. அதில்* unparliamentary word *எதுவும் இல்லை. (குறுக்கீடுகள்) அதில்* unparliamentary word *எதுவும் கிடையாது. (குறுக்கீடுகள்) உங்கள் கருத்து இருந்தால், பிறகு சொல்லுங்கள். நீங்கள் உட்காருங்கள்.*

[பேரவைத் தலைவர்] [2013 அக்டோபர் 28

அதில் unparliamentary word எதுவும் இல்லை. அவை மரபுக்கு உரிய வார்த்தைகளைத்தான் அவர் பேசினார். உங்களுடைய கருத்து இருந்தால், இறுதியாகச் சொல்லலாம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள் பேசிய பிறகு, உங்களுக்கு அனுமதி தருகிறேன். உங்கள் கருத்து இருந்தால், பிறகு சொல்லலாம். (குறுக்கீடுகள்) இதுபோன்று நீங்கள் அவைக்கு ஒத்துழைக்கவில்லை என்றால் எப்படி? நான் அவையை நடத்த முடியாது. (குறுக்கீடுகள்)

நீங்கள் இந்த மாதிரி பேரவைத் தலைவரை நிர்ப்பந்தப்படுத்த முடியாது. (குறுக்கீடு) Unparliamentary word இருந்தால், பதில் சொல்லலாம். (குறுக்கீடு) முதலில் நீங்கள் உங்கள் இடத்தில் போய் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் முதலில் உங்கள் இடத்திற்குப் போய் உட்காருங்கள். (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் நிற்கிறேன். (குறுக்கீடு) பேரவைத் தலைவர் நிற்கும்போது, நீங்கள் எல்லோரும் உட்கார வேண்டும் என்று உங்களுக்குத் தெரியாதா? நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் ஒரு மூத்த உறுப்பினர், நான் நிற்கும்போது, நீங்களும் நின்று கொண்டு பேசிக் கொண்டிருக்கிறீர்களே. (குறுக்கீடுகள்)

என்ன பேசுவதாக இருந்தாலும், யாராவது ஒருவர்தான் பேச வேண்டும். அத்தனை பேரும் எழுந்து நின்றால் எப்படிப் பேச முடியும்? (குறுக்கீடு) நீங்கள் மாண்புமிகு அமைச்சரைப் பேசவிட்டால்தானே, பிறகு உங்களை அனுமதிக்க முடியும்? நீங்கள் அனைவரும் அன்றைக்கே என்னுடைய அனுமதி இல்லாமல் புகைப்படத்தைக் கொண்டுவந்து காண்பித்தீர்கள். அதுவே அவை உரிமையை மீறிய செயல். அந்தச் செயல்மீது அன்றைக்கே நான் கடுமையாக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். (குறுக்கீடு) இல்லை, இல்லை. இது நியாயம் இல்லை. (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடு) நீங்கள் பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன் உட்பட திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேசியவை அனைத்தும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) இவற்றையெல்லாம் இங்கு பேச முடியாது. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழகத்தில், சென்னை மாநகரத்தில், நம்முடைய போற்றுதலுக்குரிய, (குறுக்கீடுகள்) அசைக்க முடியாத

2013 அக்டோபர் 28] [முனைவர் செ.கு. தமிழரசன்]
மக்கள் தலைவராக விளங்கிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய சமாதியிலே இப்படிப்பட்ட ஒரு காட்சி இருந்தபோது. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் அவரவருடைய இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்)

முனைவர் செ.கு. தமிழரசன்: இது இரட்டை இலை போல் காட்சி அளிக்கிறது என்று நீதிமன்றத்திற்குப் போய், நீதிமன்றமே அப்படி அதனை கருத்திலே கொள்ளக்கூடாது என்ற தீர்ப்பினை வழங்கியிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் பேசுகிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்களைப் பேச அழைத்து, அவர் பேசிக் கொண்டிருக்கிறார். மற்ற உறுப்பினர்கள் யாராவது தங்களுடைய கருத்தைப் பேச விரும்பினால், மாண்புமிகு பேரவைத் தலைவருடைய அனுமதியைப் பெற்றுத்தான் பேச வேண்டும். (குறுக்கீடு) ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. அவர் பேசுவதில் ஏதாவது ஆட்சேபணைக்குரிய கருத்து இருந்தால், பேரவைத் தலைவருடைய அனுமதியைப் பெற்றுத்தான் பேச வேண்டும். அனுமதியில்லாமல் மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு பேசிக்கொண்டிருந்தார். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்கார்ந்து கொண்டு பேசுவதற்கெல்லாம் பதில் சொல்ல முடியாது. நீங்கள் உட்கார்ந்து கொண்டு என்னுடைய அனுமதியில்லாமல் பேசுவதற்கு எல்லாம் பதில் சொல்ல முடியாது.

முற்பகல் 11-35

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: உட்காருங்கள், முதலில் என்னைப் பேசவிடுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசட்டும். உட்காருங்கள்.

[2013 அக்டோபர் 28

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: அனுமதி பெறாமல், குறுக்கிட்டு திரு. எ.வ. வேலு அவர்கள் பேசிக்கொண்டிருந்தார். இந்தப் பிரச்சினையில் திரு. எ.வ. வேலு அவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறதென்றுதான் அவர் கேட்டார். (குறுக்கீடுகள்) அதாவது இந்தப் பிரச்சினையில், தகுதியிருந்தால். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்களைப் பேசவிடுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: சொல்லிவிடுகிறேன், கேளுங்கள். திரு. எ.வ. வேலு அவர்கள் பல்வேறு பணிகளிலிருந்து அரசியலுக்கு வந்து, தேர்தலில் நின்று, இரட்டை இலை சின்னத்தைத் தூக்கிக் காண்பித்துத்தான் அவர் வெற்றி பெற்று, சட்டமன்ற உறுப்பினரானார் என்பது அனைவருக்குமே தெரியும். அதைத்தான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு, இந்தப் பிரச்சினையிலே உங்களுக்கு என்ன தகுதி இருக்கிறதென்று, (குறுக்கீடுகள்) அதைத்தான் அவர் கேட்டார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அவர் முதலில் பேசட்டும். பேசி முடிக்கட்டும். பொறுமையாகக் கேளுங்கள். அவர் என்னென்ன பேசுகிறார் என்று பொறுமையாகக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) கேட்டதற்குப் பின்னால் நீங்கள் என்ன கேள்வி கேட்கிறீர்களோ, அதற்கு ஒரு மடங்குக்கு நூறு மடங்கு பதில் எங்களிடம் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பொறுமையாக இருந்து கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன், நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) நீங்கள் அவையை நடத்தவிடாமல், குந்தகம் விளைவிப்பது நியாயமல்ல. (குறுக்கீடுகள்)

முனைவர் செ.கு. தமிழரசன்: எனது உரிமையிலே தலையிடுகிற வகையிலே மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து என்னுடைய பேச்சைத் தடை செய்துகொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

2013 அக்டோபர் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது முறையல்ல. இதற்கு மேலே உங்கள்மீது நான் நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கை பார்க்க முடியாது.

முனைவர் செ.கு. தமிழரசன்: எனது உரிமையிலே தலையிடுகிற வகையிலே சட்டமன்ற மரபுகளுக்கு மாறாக திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து என்னுடைய பேச்சைத் தடை செய்துகொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) அவர் பாதி உரையை முடித்துவிட்டார். அவர் முழுவதும் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்)

முனைவர் செ.கு. தமிழரசன்: என்னுடைய பேச்சு சட்டமன்ற மரபுகளுக்கு மாறாக இருந்தால், நான் பேசி முடித்தவுடன், அவர்கள் விளக்கம் கேட்கட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) நீங்கள் இடையிலே பேசுவதற்கு அனுமதி இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, மாண்புமிகு அமைச்சர்கள் குறுக்கிட்டுப் பேசலாம். நீங்கள் எல்லாம் குறுக்கிட்டுப் பேச முடியாது. ஓர் உறுப்பினர் பேசி முடித்த பின்னர், நான் அழைத்தால்தான் அடுத்த உறுப்பினர் எழுந்து பேச முடியும். (குறுக்கீடுகள்) இல்லை. நீங்கள் உட்கார்ந்து கொண்டே பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உங்கள் இடத்திற்குப் போங்கள். உங்கள் இடத்திற்குப் போய் பேசுங்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எ.வ. வேலு அவர்கள் சொன்ன கருத்திற்கு நான் பதில் சொன்னேன். இரட்டை இலையைப் பற்றிப் பேசுவதற்கு அவருக்கு எந்தவித முகாந்திரமும் இல்லையென்று சொன்னேன். (குறுக்கீடுகள்) அமைதி. நான் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) நான் பேசிமுடிக்கும் வரை

[திரு. கே.பி. முனுசாமி] [2013 அக்டோபர் 28 பொறுங்கள். (குறுக்கீடுகள்) தகுதியில்லை என்றுதான் சொன்னேன். (குறுக்கீடு) தகுதியில்லை என்றுதான் சொன்னேன். நான் மறைக்கவில்லை. அவைக் குறிப்பில் இருக்கிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பேசவிடுங்கள். (குறுக்கீடுகள்) யாரையும் பேசவிட மாட்டேன் என்கிறீர்களே!

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: அவைக் குறிப்பில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) தகுதியில்லை என்றுதான் சொன்னேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: அதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின் அவர்கள். . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் மாண்புமிகு அமைச்சர் கூறுவதை முழுவதுமாகக் கேட்க மாட்டேன் என்கிறீர்களே!

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: என்னுடைய பதிலைக் கேட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் முழுவதுமாக அவருடைய விளக்கத்தைக் கேட்டுவிட்டு, உங்களுடைய கருத்தைச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: என்னுடைய பதிலைக் கேட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் நியாயத்தைப் பற்றிப் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் என்ன சொல்கிறார் என்பதைக் கேட்டுவிட்டு, உங்கள் விளக்கத்தைக் கேளுங்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் நியாயத்தைப் பற்றியெல்லாம் பேசக்கூடாது. இந்தச் சட்டமன்றத்திலேயே என்னுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை எந்த அளவிற்கு திரு. துரைமுருகன் கேவலப்படுத்தினார் என்பதை மறந்துவிடக் கூடாது. இவர் இதைப் பற்றிப் பேசக்கூடாது. மேலும்,

2013 அக்டோபர் 28] [திரு. கே.பி. முனுசாமி]

வரலாறுகளை நாங்கள் எடுக்க ஆரம்பித்தால் அக்கு வேறு, ஆணி வேறாக நாங்கள் பிட்டு, பிட்டு வைத்துவிடுவோம். (குறுக்கீடுகள்) தயவுசெய்து அனைவரும் அமைதியாக உட்கார வேண்டும். திரு. ஸ்டாலின் சொன்னதற்கு நான் பதில் சொல்கிறேன். திரு. ஸ்டாலின் கேட்ட கேள்விக்கு நான் பதில் சொல்கிறேன். அதைக் கேட்டுவிட்டு, எந்த உறுப்பினர் வேண்டுமானாலும் பதில் சொல்லட்டும், அமைதியாக உட்காரட்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடுகள்) கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஸ்டாலின் கேட்டதற்குத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: வரலாறுகள் எப்போதும் மாறப்போவதில்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்களுக்குத் தகுதியில்லை என்று சொன்னேன். காரணம், திரு. எ.வ. வேலு அவர்கள் ஒரு Bus Conductor. ஒரு சாதாரண ஆள். இன்றைக்கு சமூகத்திலே அவர் தெரிகிறார் என்றால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொண்டனாக இருந்து, (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைத் தலைவராக ஏற்றுக்கொண்டு, புரட்சித் தலைவர் அவர்களின் உத்தரவின்பேரில் ஒரு தொகுதியிலே நின்றார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெரிந்துகொள்ள வேண்டும். இவர் வேட்பாளராக நின்றபோது, இன்றைக்கு இருக்கிற தி.மு.க.-வின் தொண்டர்கள் எத்தனைபேர் அ.தி.மு.க. தொண்டர்களை அடித்திருப்பார்கள்? எத்தனை தொண்டர்கள் பாதிக்கப்பட்டிருப்பார்கள்? யாருக்காக? இந்த எ.வ. வேலுவுக்காக. இந்த எ.வ. வேலு சட்டமன்ற உறுப்பினராவதற்காகவே அனைத்திந்திய அண்ணா தி.மு.க. தொண்டர்கள் தங்களுடைய இரத்தத்தைச் சிந்தினார்கள்; வியர்வையைச் சிந்தினார்கள். சமூகத்திலே ஓர் உயர்வான இடத்திற்குப் புரட்சித் தலைவர் அவர்களால் வந்தவர் நீங்கள். அரசியல் ஆதாயத்திற்காக, பதவி

[திரு. கே.பி. முனுசாமி] [2013 அக்டோபர் 28 ஆசைக்காக, நீங்கள் எங்கோ ஓடிக் கொண்டிருக்கிறீர்கள். ஓடுங்கள்; வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால், உங்களை உருவாக்கிய இயக்கத்தினால், உண்மையான உறவுள்ள எம்.ஜி.ஆர். அவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட இரட்டை இலைச் சின்னத்தினால்தான் இந்தச் சமூகத்திற்கு நீங்கள் அடையாளம் காண்பிக்கப்பட்டீர்கள். இதுபோன்று கட்சி மாறி எத்தனையோ பேர், நிறைய பேர் போயிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

இன்னொன்று; அந்தக் கட்சியில், ஒரிஜினல் கட்சியே இப்போது போய்விட்டது. (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதெல்லாம் கூடாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் விளக்கம்தான் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்) நீங்கள் கேட்டதற்கு அவர் விளக்கம் சொல்லிவிட்டார். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் கேட்டதற்கு விளக்கம் சொல்லிவிட்டார். (குறுக்கீடுகள்) நீங்கள் கேட்டதற்குத்தான் விளக்கம் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்) நீங்கள் கேட்டதற்குப் பதில் சொல்லிவிட்டார். (குறுக்கீடுகள்) இதில் மேற்கொண்டு பேசுவதற்கு ஒன்றுமில்லை. (குறுக்கீடுகள்) இதில் மேற்கொண்டு பேசுவதற்கு ஒன்றுமில்லை. நீங்கள் கேட்டதற்கு அவர் விளக்கம் சொல்லிவிட்டார். (குறுக்கீடுகள்) அவர் விளக்கம் சொல்லிவிட்டார். (குறுக்கீடுகள்) இல்லை, அவர் விளக்கம் சொல்லிவிட்டார். (குறுக்கீடுகள்) இல்லை. அவர் பேசியதற்கு மாண்புமிகு அமைச்சர் விளக்கம் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். முனைவர் செ.கு. தமிழரசன், நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் என்னை அவையை நடத்த விடமாட்டீர்கள். (குறுக்கீடுகள்) என்னை அவையை நடத்த விடமாட்டீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் இதை வேண்டுமென்றே செய்கிறீர்கள். (குறுக்கீடுகள்) திட்டமிட்டு வந்து, நீங்கள் சபையை நடத்த விடாமல் செய்கிறீர்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) சட்டமன்ற மரபுகளுக்கு உட்பட்டு, பாராளுமன்ற நெறிமுறைகளுக்கு உட்பட்டு நான் என்னுடைய கருத்துகளை இங்கே எடுத்துச்சொல்லும்போது, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கூச்சலிட்டு, தடை செய்து கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

2013 அக்டோபர் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைவரும் அவரவரது இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் அவரவரது இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உங்களுடைய இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் உங்களுடைய இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) அதாவது ஓர் உறுப்பினர் பேசுகிறபோது, அவர் பேசியது Parliamentary word-ஆ, Unparliamentary word-ஆ என்பதை முடிவு செய்ய வேண்டியது பேரவைத் தலைவர்தான். நான் கேட்டவரையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதில் unparliamentary word எதுவுமில்லை. நீங்கள் கேட்டதற்கு அவர் பதில் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் கேட்டதற்கு அவர் பதில் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) நீங்கள் கேட்பதற்கும், இனிமேல் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் திரு. எஸ்.எஸ். சிவசங்கர், திரு. அ. சௌந்தரபாண்டியன், திரு. மு. திராவிடமணி ஆகியோர் மாண்புமிகு பேரவைத் தலைவரின் இருக்கைக்கு முன்புறம் வந்து தரையில் அமர்ந்தனர்.)

திரு. எஸ்.எஸ். சிவசங்கர், உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள்; இதெல்லாம் முறையல்ல. (குறுக்கீடுகள்) இதெல்லாம் முறையல்ல. (குறுக்கீடுகள்) இதெல்லாம் முறையல்ல. (குறுக்கீடுகள்) இதுபோன்று பேசுவதற்கு நான் அனுமதிக்கமாட்டேன். (குறுக்கீடுகள்) இப்படியெல்லாம் பேரவைத் தலைவரை மிரட்டக்கூடாது. (குறுக்கீடுகள்) இப்படியெல்லாம் பேரவைத் தலைவரை நீங்கள் மிரட்டக்கூடாது. (குறுக்கீடுகள்) நீங்கள் உங்களுடைய இடத்திற்குப் போகவில்லையென்றால், நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) உங்கள்மீது நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்களை அவையிலிருந்து வெளியேற்றும்படி பேரவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) அவர்களை வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவரை நோக்கி கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

[பேரவைத் தலைவர்] [2013 அக்டோபர் 28

அவைக் காவலர்களையே எதிர்ப்பது முறையற்றது. இதெல்லாம் முறையல்ல. (குறுக்கீடுகள்) இதெல்லாம் முறையல்ல. (குறுக்கீடுகள்) இது முறையல்ல; நீங்கள் வெளியேறுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் வெளியேறுங்கள். (குறுக்கீடுகள்) அவைக் காவலர்கள் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை அவையிலிருந்து வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அனைத்து உறுப்பினர்களையும் வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அனைத்து உறுப்பினர்களையும் வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) அவர்கள் பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) அவைக் காவலர்கள் அவர்களை வெளியேற்றவும்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

முனைவர் செ.கு. தமிழரசன், நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்)

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை வளாகத்திற்குள்ளேயிருந்து யாரும் கோஷமிடக் கூடாது. அவைக் காவலர்கள் அவர்களை வெளியேற்றவும். (குறுக்கீடுகள்) அவர்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. முனைவர் செ.கு. தமிழரசன், நீங்கள் பேசுங்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே நடந்த ஒரு நிகழ்வு குறித்து தங்கள்வாயிலாக போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் ஒரு விளக்கம் பெறலாம் என்பதற்காக, சட்டமன்ற மரபுகளுக்குட்பட்டு, அந்த நெறிமுறைகளுக்கு உட்பட்டு, என்னுடைய கருத்துகளை நான் சொல்லிக்கொண்டிருந்தேன். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக மூத்த உறுப்பினர்கள் என்னுடைய கருத்துகளை இடைமறித்து, தொடர்ந்து சர்ச்சையிலே ஈடுபட்டு, வழக்கம்போல வெளியேறியிருக்கிறார்கள். நான் உங்கள் அனுமதியோடு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்குப்

2013 அக்டோபர் 28] [முனைவர் செ.கு. தமிழரசன்]

பதில் சொல்வதற்காக ஒரு சின்ன கதையை, இந்த அவையிலே நிகழ்ந்த கதையை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 1970 ஆம் ஆண்டின் தொடக்கத்திலே நிகழ்ந்த கதை இது. (குறுக்கீடு)

(லாபியிலே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக்கொண்டே சென்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *லாபியில் உறுப்பினர்கள் கோஷமிடக் கூடாது. காவலர்கள் அவர்களை அமைதியாக வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) முனைவர் செ.கு. தமிழரசன், சீக்கிரம் பேசி முடியுங்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது எல்லோருக்கும் தெரிந்த கதைதான். ஓர் ஆசிரியர் ஒரு பள்ளிக்கூடத்தில் வகுப்பு எடுத்துக் கொண்டிருக்கிறார். எல்லா மாணவர்களும் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு மாணவன் மட்டும் முகட்டையே பார்த்துக்கொண்டிருக்கிறான். அங்கே ஓர் எலி பொந்திலே நுழைவதற்கு முயற்சித்துக்கொண்டிருக்கிறது. வால் மட்டும் நீட்டிக்கொண்டிருக்கிறது. வகுப்பு முடியும் தருவாயில் ஆசிரியர், நான் சொன்னதெல்லாம் உங்கள் காதிலே விழுந்ததா? புரிந்ததா? நுழைந்ததா என்று கேட்கிறார். அந்த மாணவன் திடீரென ஆசிரியரைப் பார்த்து; வால் மட்டும் நுழையவில்லையா என்று சொன்னான். என்ன வால் மட்டும் நுழையவில்லையா என்று கேட்டதற்கு, அந்த முகட்டிலே எலியின் வால் மட்டும் நுழையவில்லை என்று சொன்னான். எதற்காக இந்தக் கதையைச் சொல்கிறேன் என்றால், 1970 ஆம் ஆண்டு தொடக்கத்திலே, நீதியரசர் எஸ்.பி. ராஜமன்னார் அவர்கள் தலைமையில், மத்திய, மாநில உரிமைகள் குறித்த ஓர் ஆணையத்தின் அறிக்கை, அன்றைய முதலமைச்சர், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. கருணாநிதி அவர்களுடைய படத்துடன் இந்த அவையில் வைக்கப்பட்டது. எப்படி இப்படியொரு படம் போட்டு வைக்கலாம் என்று அன்றைய சுதந்திரா கட்சி உறுப்பினர் டாக்டர் ஹெச்.வி. ஹண்டே அவர்கள் கேள்வி கேட்டதற்கு, இந்தக் கதையை திராவிட முன்னேற்றக் கழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் இந்த அவையிலே சொன்னார். வாலையே பார்த்துக் கொண்டிருந்தால் உனக்கு அந்த வால்தான் தெரியும் என்று சொன்னார். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் ஏன்*

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2013 அக்டோபர் 28 இந்தப் பேருந்திலே வாலையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. படம் போடுகின்ற கலாச்சாரத்தைத் தொடங்கி வைத்து, திராவிட முன்னேற்றக் கழக முன்னாள் முதலமைச்சர் இந்த அவையிலே சொன்ன கதை இது. ஏன் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாடத்தைக் கவனிக்காமல் வாலையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்? இந்தப் பேருந்திலே தரம் குறைந்திருக்கிறதா? வசதி குறைந்திருக்கிறதா, ஆபத்து ஏதேனும் இருக்கிறதா? அது பலனளிக்கக் கூடாததா? பயணிகளுக்கு உகந்ததா? என்பதைப் பார்க்காமல், அந்தக் காட்சிகளெல்லாம் இரட்டை இலை போலவே தெரிகிறது என்று சொன்னால், இரட்டை இலையையே நினைத்துக் கொண்டிருக்கின்ற, சர்வசதாகாலமும் இரட்டை இலையைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கின்ற, மேசையைத் தட்டும் ஒலி) அதன் வெற்றியையே நினைத்துக் கொண்டிருக்கின்ற, அதன் சக்தியையே நினைத்துக் கொண்டிருக்கின்ற, அதன் அசைக்க முடியாத மாபெரும் மக்கள் தலைவரான புரட்சித் தலைவி அம்மா அவர்களையே நினைத்துக் கொண்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய வரலாற்றில், தமிழகத்தில் இழந்த அந்தச் சின்னத்தை மீண்டும் பெற்றுத் தந்த ஒரு மாபெரும் மக்கள் தலைவரையே (மேசையைத் தட்டும் ஒலி) நினைத்துக் கொண்டிருப்பதைத் தவிர வேறென்ன? வாலையே நினைத்துக் கொண்டிருக்கின்ற அந்தக் கதையை யாருக்காக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி இந்த மன்றத்திலே சொல்லியிருக்கின்றார்? ஆகவே, அந்தப் படத்தைப் பொறுத்தவரையில், அதில் நான்கு இலைகள் இருக்கின்றன. ஏற்கெனவே சொன்னதைப்போல், பல பகுதிகளிலே இன்றைக்கு வழக்கத்தில் இருப்பதைத்தான் நாம் நடைமுறையிலே சொல்ல வைத்திருக்கிறோம். உதயசூரியன் சின்னம்கூட 1952 ஆம் ஆண்டுக்கு முன்னால் வேறு ஒரு கட்சிக்கு இருந்தது. ஆக, அந்தச் சின்னங்கள் எத்தனையோ அரசியல் கட்சிகளுக்கு மாறி, மாறி, அதைப்போல தோற்றம் இருக்கிறது. ஆகவே, அதைப் பெரிதாக்குகின்ற, திராவிட முன்னேற்றக் கழகம் மக்கள் மத்தியில் குழப்பம் விளைவிக்க முயற்சிக்கிறது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் தரவேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

2013 அக்டோபர் 28]

***மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு இன்னொன்றையும் ஞாபகப்படுத்த நினைக்கின்றேன். முதலமைச்சருடைய பெயர், அவருடைய அம்மா பெயரை வைக்கின்ற கலாச்சாரத்தை உருவாக்கியவரே திரு. கருணாநிதி அவர்கள்தான். அவர் பெயரை 'கருணா' என்று நெல்லுக்கு வைத்தார். முதன்முதலில் இப்படி மோசமான ஒரு கலாச்சாரத்தைத் தமிழ்நாட்டிலே கொண்டு வந்தவர் கருணாநிதி. 'அஞ்சுகம்' என்று பயிருக்குப் பெயர் வைத்தார். அவர்கள் இங்கே வாய் கிழியப் பேசிவிட்டுச் செல்கிறார்கள். தமிழ்நாட்டில் ஓர் அநாகரிக அரசியலுக்கு வித்திட்டவர் கருணாநிதி என்பதை இந்த அவையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். உங்களிடம் பதில் இருந்தால், சொல்லுங்கள்.

முற்பகல் 11-50

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 23-10-2013 அன்று 50 புதிய சிற்றுந்துகளையும் (small buses), 610 புதிய பேருந்துகளையும் துவக்கி வைத்தார்கள். இந்த ஐம்பது சிற்றுந்துகளில், நான்கு நாட்களில் மட்டும் 1,13,149 பயணிகள் பயணம் செய்துள்ளனர். மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு மக்கள் மத்தியில் கிடைத்துள்ள அமோக வரவேற்பை, தி.மு.க. தலைவர் கருணாநிதியால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. எனவே, சிற்றுந்துகளில் அ.தி.மு.க.-வின் சின்னம் வரையப்பட்டுள்ளது என்று ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தை தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள்மூலம் கொடுக்க வைத்துள்ளார் கருணாநிதி. சிற்றுந்துகளில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சின்னமான இரட்டை இலை பொறிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, புகைப்படங்களுடன் 25-10-2013 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தி.மு.க. உறுப்பினர்கள் கோஷங்களை எழுப்பினார்கள்.

சோதனைகளை வென்று, வேதனைகளைத் தீர்த்து, சாதனைகளைக் கண்டு, தினம், தினம் சரித்திரம் படைத்து வரும்

[திரு. வி. செந்தில்பாலாஜி] [2013 அக்டோபர் 28 மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) அனுமதியோடு சில விவரங்களை இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன். இதுகுறித்து அவைக்கு வெளியே சென்று பத்திரிகைக்காரர்களிடம் பேட்டி அளித்த மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் கருணாநிதி முதல்வராக இருந்தபோது, எதிர்வரிசையில் இருந்த ஹண்டே எழுந்து, அரசின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள டைரியில் முதலமைச்சரின் படத்தினை எப்படி வெளியிடலாம் என பிரச்சினையைக் கிளப்பினார் என்றும், அதற்குப் பதில் அளித்த அப்போதைய முதல்வர் கருணாநிதி எனது படத்தை அரசு டைரியில் வெளியிட்டு, விளம்பரப்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியம் எங்களுக்கில்லை. எனது கவனத்திற்கு அது தெரியாமல் வந்து இருக்கலாம். அப்படியிருந்தால் அது உடனே கிழிக்கப்படும் என்று கூறியதாகவும் தெரிவித்துள்ளார். இந்த நிகழ்வு எப்போது நடந்தது என்பதை துரைமுருகன் சட்டமன்றக் குறிப்புகளிலிருந்து மேற்கோள்காட்டி தெரிவித்தால், இது போன்றதொரு விவாதம் உண்மையிலேயே சட்டமன்றப் பேரவையில் நடைபெற்றதா அல்லது மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகனின் கற்பனையில் உதித்ததா என்பது நாட்டு மக்களுக்குத் தெரியவரும். அவ்வாறு மேற்கோள் காட்டப்படவில்லையெனில் "மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் நடிகர் மட்டுமல்ல, சிறந்த வசனகர்த்தா" என்பதை நாட்டு மக்கள் நன்கு புரிந்துகொள்வார்கள்.

இந்தத் தருணத்தில் 25-6-1971 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற ஒரு விவாதத்தினை எடுத்துக்கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். 1971 மற்றும் 1972 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின்மீது நடைபெற்ற பொது விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்கள் "Here is a book on Centre State Relations. This has been prepared with the sole idea of educating the people properly as to what should be the relationship between the State and the Centre. In the first page itself reference has been made to the Hon. Chief Minister and that shows that personality cult is being developed. The personality cult is going deep into the roots of the democracy. This report has been prepared by distinguished experts but still in the first page such a reference has been made" என்று கூறியிருக்கிறார்.

2013 அக்டோபர் 28] [திரு. வி. செந்தில்பாலாஜி]

திரு. ஹண்டே அவர்களின் கேள்விக்குப் பதில் அளித்து, 29-6-1971 அன்று பேசிய அப்போதைய முதலமைச்சர் கருணாநிதி, ஹண்டே அவர்களுக்கு ராஜ மன்னார் அறிக்கையை இங்கு எடுத்துக்கொடுத்தவர் பொன்னப்ப நாடார். பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்துக் கொடுத்து உதவி புரிந்தார். ராஜ மன்னார் குழு அறிக்கையின்மீது பின்னால் பேசுகிறேன் என்று பீடிகை போட்டார். இன்று பிரமாதமான விமர்சனம் கேட்கலாம் என்று நினைத்து வந்த எனக்கு ஒரு கதைதான் ஞாபகத்திற்கு வந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய கதை, முழுமையாக அன்று சபையில் என்ன நடந்தது என்பதை ஆதாரத்தோடு, அவைக் குறிப்பில் இருக்கின்ற முழு ஆதாரத்தோடு அன்றைய நிகழ்வுகளை இங்கு சுட்டிக்காட்டுகின்றேன். ஒரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் பாடம் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்தார். "ஒரு மாணவன் பாடத்தைக் கவனிக்காமல் சுவற்றைப் பார்த்துக்கொண்டிருந்தான். சுவற்றில் ஒரு துளை, அதில் ஒரு எலி நுழைந்து கொண்டிருந்தது. ஆசிரியர், நான் குறிப்பிட்டதெல்லாம் நுழைந்ததா என்று கேட்டார். வால் மாத்திரம் பாக்கி என்று அவன் சொன்னான்." அதைப்போல் ராஜ மன்னார் அறிக்கையிலே, அவர்கள் எல்லாவற்றையும் விட்டு விட்டு முதல் பக்கத்திலே வெளியிடப்பட்டுள்ள முதலமைச்சருடைய படத்தை மாத்திரம் காட்டி "இது தேவைதானா? personality cult வளருகிறது" என்று குற்றம் சாட்டி, இது ஏதோ ஆளும்கட்சியில் உள்ளவர்கள்கூட அந்த உணர்ச்சியில் இருக்கிறார்கள் என்பதைப்போல இங்கேயும் ஏதாவது நடத்திப் பார்க்கலாம் என்ற எண்ணத்தோடு அவர்கள் பேசினார்கள் என்று கூறியிருக்கிறார். இந்தக் கதை இப்போது கருணாநிதிக்கோ, துரைமுருகனுக்கோ நினைவிற்கு வரவில்லைபோலும்.

போக்குவரத்து இணைப்பு இல்லாத பகுதிகளிலிருந்து, அருகில் உள்ள பேருந்து நிலையம் மற்றும் இரயில் நிலையத்தை இணைக்கும் வகையில், அகிலம் புகழும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் சென்னை மாநகரில் துவக்கி வைக்கப்பட்ட புதிய சிற்றுந்துகள் மக்களுக்கு நன்மை பயக்கிறதா, மக்கள் பயன் அடைகிறார்களா என்று பார்க்காமல், அந்தச் சிற்றுந்துகளில் வரையப்பட்டுள்ள பசுமையான சூழலையும், இலையையும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றிச் சின்னமான, இரட்டை இலை

[திரு. வி. செந்தில்பாலாஜி] [2013 அக்டோபர் 28 சின்னத்தோடு இணைத்துப் பேசுவது, குற்றம் சாட்டுவது தேவைதானா என்பதை தி.மு.க. உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வல்லரசு தேடி வந்து பாராட்டிய நல்லரசு மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி பற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) வல்லரசு தேடி வந்து பாராட்டிய நல்லரசு மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியைப் பற்றி குறை சொல்ல ஒன்றுமில்லை என்ற காரணத்தினால், இங்கே ஏதாவது நடத்திப் பார்க்கலாம் என்ற எண்ணத்தோடு தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் வந்திருக்கிறார்களோ என்ற ஐயம் தான் எங்களுக்கு எழுகிறது. தனக்கு ஒரு நியாயம், பிறருக்கு ஒரு நியாயம் என்று பேசுவதை தி.மு.க. தலைவர் கருணாநிதியும், தி.மு.க. உறுப்பினர்களும் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். மக்களைப் பற்றியே நொடிப்பொழுதும் எண்ணுகின்ற மாசற்ற மக்கள் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஒரே நோக்கம், எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்பதுதான். இந்த இலட்சியத்தின் அடிப்படையில் இன்று மாற்றமும், ஏற்றமும் பெற்று போக்குவரத்துத் துறை எல்லா வகைகளிலும் மின்னி மிளிர்கிறது.

முற்பகல் 11-55

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் போக்குவரத்துத் துறையின் சாதனை போக்குவரத்துத் துறையின் எல்லா சொத்துகளும் வங்கியில் அடமானம் வைக்கப்பட்டன. திவாலாகிப் போனது போக்குவரத்துத் துறை என்பதை நாடு அறியும். நாட்டு மக்கள் அறிவார்கள். தொழிலாளர்கள் அறிவார்கள். தன்னை மெய் வருத்தி, பசி நோக்காது, கண்துஞ்சாது கடமையாற்றி அம்மாவின் நேர்மிகு பார்வையில் தமிழகப் போக்குவரத்துத் துறை இன்று வளர்ச்சிப் பாதையை நோக்கி பீடுநடை போடுகிறது. கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஒரு கிலோ மீட்டர் இயக்க வருவாய் ரூபாய் 17. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் இன்று ஒரு கிலோ மீட்டர் இயக்க வருவாய் ரூபாய் 26.39 காசு. (மேசையைத் தட்டும் ஒலி) இயக்கப் பேருந்துகளின் எண்ணிக்கை கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 19,110. இன்று மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் 20,584.

2013 அக்டோபர் 28] [திரு. வி. செந்தில்பாலாஜி]

(மேசையைத் தட்டும் ஒலி) கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் சராசரி ஆண்டு விபத்துகளின் எண்ணிக்கை 8,232. இன்று மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய நடவடிக்கையால் ஆண்டுக்கு 6,263 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், ஆண்டு இயக்கத்தின்போது பழுதுபடும் பேருந்துகளின் எண்ணிக்கை 12,726. இன்று மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் 2,302 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு 442 கோடி ரூபாய் நிதி. கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் துவங்கப்பட்ட புதிய பணிமனைகள் 10. இன்று மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் 68 புதிய பணிமனைகள். (மேசையைத் தட்டும் ஒலி) ஓட்டுநர், நடத்துநர்களுக்கு ரூபாய் 1.53 கோடியில் மேம்படுத்தப்பட்ட ஓய்வறைகள், ரூபாய் 9.13 கோடியில் மேம்படுத்தப்பட்ட பணிமனைகள், மாற்றுத் திறனாளிகளுக்குச் சிறப்புப் பேருந்து, 40 வயதிற்கு மேற்பட்ட அனைத்துத் தொழிலாளர்களுக்கும் முழு உடல் பரிசோதனைத் திட்டம். மாணவ, மாணவிகளுக்கு கையடக்க பயணப் பேருந்து அட்டை, உணவு வசதியுடன்கூடிய கிளாசிக் பேருந்து எனத் தொடர்ச்சியாக வளர்ச்சித் திட்டங்கள். ஒரு இலட்சத்து 43 ஆயிரம் கோடி ரூபாய்க்கு நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்யும் மத்திய அரசின் இரயில்வே துறை, இரயில் பயணிகளுக்கு 15 ரூபாயில் குடிநீர் வழங்குகிறது. ஆனால், மத்திய அரசால் சாதிக்க முடியாததை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பேருந்துப் பயணிகளுக்கு 10 ரூபாயில் குடிநீர் வழங்குகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். இவை ஒரு சில எடுத்துக்காட்டுகள் மட்டுமே.

இன்று டீசல் மானியமாக ரூபாய் 700 கோடி வழங்கி மக்களின் பாரத்தை தன் பாரமாக சுமப்பது மாண்புமிகு அம்மா அவர்கள். அம்மாவின் ஏற்றமிகு எண்ணத்தால் புதுவாழ்வு பெற்றுள்ள போக்குவரத்துத் துறை தொழிலாளர்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்மீது அளவு கடந்த பற்று வைத்திருக்கிறார்கள் என்பதை உலகிற்கு உணர்த்தும்விதமாக தாயின் பிறந்த நாளில் 18,873 நபர்கள் ஒரே நாளில் இரத்த தானம் செய்து இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்துள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்

[திரு. வி. செந்தில்பாலாஜி] [2013 அக்டோபர் 28

புகழ் வாய்ந்த தலைவரின் கரங்களால் தொடங்கப்பட்ட பேருந்துகளில் இடம் பெற்றுள்ள வண்ணப் படங்கள் தமிழர்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்த பல்வேறு இலைகளின் அடையாளமாகும். அது கட்சி சின்னத்தைக் குறிப்பது அல்ல. வீட்டிற்கு விருந்தாளி வந்தால் உணவு தர படைப்பது வாழை இலை. உணவில் வாசத்தை ஏற்படுத்துவது கறிவேப்பிலை. உணவாகவே சமைக்கப்படுவது கீரை இலை. சாப்பிட்ட பிறகு போடுவது வெற்றிலை. வீட்டு வாசலில் அலங்கரிப்பது மா இலை. மனிதனின் நோய் போக்குவது துளசி இலை. இப்படி நம் வாழ்வில் இரண்டறக் கலந்தது இலை. செடியில் இலை, கொடியில் இலை. மரத்தில் இலை, (மேசையைத் தட்டும் ஒலி) என எங்கும் இலை. எதிலும் இலை, (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி மக்களின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கும் இலையைப் பற்றி ஆதாரமில்லாமல் உண்மைக்கு மாறாக திரித்துச் சொல்லும் தி.மு.க.வினருக்கு சிலவற்றை நினைவுபடுத்த விரும்புகின்றேன். அரசு சிமெண்ட் பைகளில் உதயசூரியன் படம். கலைஞர் வீடு வழங்கும் திட்டம் (K.V.V.T.), மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்கு கலைஞர் காப்பீட்டுத் திட்டம் என்று பெயர் சூட்டிக் கொண்டவர்களுக்குச் சொல்ல வேண்டியது அவசியமாகும். சித்திரையே தமிழ்நாட்டின் சிறந்த தொடக்கம் என்று முத்திரை பதித்து முறைமை செய்தவர் எங்கள் அம்மா, மற்றதெல்லாம் இங்கே சும்மா, (மேசையைத் தட்டும் ஒலி) அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய், மஞ்சள் காமாலை கண்ணுக்குப் பார்ப்பதெல்லாம் மஞ்சள். கேட்டவற்றை, சிந்திப்பதைத் தெளிவுற விசாரித்து, பகுத்து ஆராய்வது ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க வேண்டிய பண்பு. மாண்புமிகு அம்மா அவர்கள் சென்னை மாநகரில் துவக்கி வைத்த சிற்றுந்துகளின் எண்ணிக்கை 50. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், 25-10-2013 அன்று அவைக்கு வெளியே ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில் அரசுப் பேருந்துகளில் அ.தி.மு.க. சின்னத்தைப் போட்டு 500 பேருந்துகளை நேற்று முன்தினம் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள். அதில் 50 பேருந்துகள் சென்னையிலே விடப்பட்டிருக்கின்றன. அனைத்துப் பேருந்துகளிலும் அ.தி.மு.க. சின்னத்தைப் பதித்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். கற்பனையாக, கதை வசனமாக, முன்னுக்குப்

2013 அக்டோபர் 28] [திரு. வி. செந்தில்பாலாஜி]

பின் முரணாக, தவறான தகவல்களை இந்தச் சபைக்கும், ஊடகத்தைச் சார்ந்த செய்தியாளர்களுக்கும் தந்துகொண்டிருக்கிறார்கள் தி.மு.க. வினர்.

நண்பகல் 12-00

இந்த மண்ணின் மரமார்ந்த விஷயம் இலை. மண்ணையும், மலையையும் காப்பது மரம். மரத்தின் அங்கமாகத் திகழ்வது இலை. மரமும், இலையும் இல்லையென்றால், காற்று இல்லை. காற்று இல்லையென்றால், பசுமை இல்லை. மண்ணின் பெருமையை, தமிழரின் மரபை, மங்கள அடையாளத்தை, பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் இலைகளின் சிறப்பை நல்ல நோக்கில் தமிழகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் செல்லும் சிற்றுந்துகளில் இலைகளின் கலைநயத்தோடு கூடிய 4 இலைகள், சென்னை மாநகரில் இயங்கக்கூடிய சிற்றுந்துகளில் இலைகளின் கலைநயத்தோடு கூடிய 4,4 இலைகள் ஓவியமாக இடம்பெற்றிருப்பது பசுமைக்கு வித்திடும் செடிகளின், இலைகளின் அடையாளமான ஓவியமே தவிர, கட்சிச் சின்னம் அல்ல. மக்களின் கண்களுக்குக் குளிர்ச்சியாகவும், மனங்களுக்கு இதமாகவும் சிற்றுந்துகள் விளங்க வேண்டும் என்பதற்காக, பசுமையின் விளக்கமாக சிற்றுந்துகளில் இலைகள் வரையப்பட்டுள்ளனவே தவிர, அதில் உள்ளவை கழகத்தின் வெற்றிச் சின்னமாம் இரட்டை இலை இல்லை என்பதைத் தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கும், தி.மு.க. உறுப்பினர்களுக்கும் தங்கள் வாயிலாக, தெள்ளத் தெளிவாக உறுதியாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். புரட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். கண்ட வெற்றிச் சின்னமாம் இரட்டை இலை, 1972 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து மக்கள் மனங்களில் ரீங்காரம் இட்டுக்கொண்டிருக்கிறது. எனவே, இரட்டை இலைச் சின்னத்தை சிற்றுந்துகளில் வரைந்து விளம்பரம் தேட வேண்டிய அவசியம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கிடையாது என்பதையும், ஜனநாயகத்திற்கு எப்போதும் மதிப்பளித்துவரும் அரசு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு என்பதையும் இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு, அரசு சார்பில் சிற்றுந்துகளை இயக்க ஆணையிட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு மீது உண்மைக்கு மாறான குற்றச்சாட்டுகளைச் சுமத்துவது ஐந்து முறை

[திரு. வி. செந்தில்பாலாஜி] [2013 அக்டோபர் 28 முதலமைச்சராக இருந்ததாகச் சொல்கின்ற தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு அழகில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

தாயின்றித் தவிக்கும் பாரதமே, விரைவில் உன் கவலை ஒழிந்து போகும். வீரச் சரித்திரம் படைப்பதற்குப் புரட்சித் தலைவியின் பாதம் பட்டு, நாளை செங்கோட்டையிலும் எங்கள் அம்மா அவர்களின் வெற்றிச் சரித்திரம் எழுதப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திட்டத்திற்கு மக்களிடையே கிடைத்த வரவேற்பினைக் கண்டு பொறுத்துக்கொள்ள முடியாமல் தி.மு.க.வினர் இதுபோன்ற அற்பக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகின்றனர் என்பதை அறிவார்ந்த தமிழக மக்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள். உண்மைக்கு மாறான இதுபோன்ற குற்றச்சாட்டுகளால் தமிழக மக்களை தி.மு.க. ஏமாற்ற இயலாது என்பதையும் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை மற்றும் பணப் பயன்கள் தங்கு தடையின்றிக் கிடைக்கச் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. ஏ. லாசர், திரு. இரா. அண்ணாதுரை, திரு. க. பீம்ராவ், திரு. எம். ஆறுமுகம், திரு. பி.எல். சுந்தரம் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்கள்மூலம் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடையாள அட்டை மற்றும் பணப் பயன்கள் தங்குதடையின்றிக் கிடைக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதன்

2013 அக்டோபர் 28] [திரு. அ. சவுந்தரராசன்]

அவசியம்" குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

உடலுழைப்புத் தொழிலாளர்களின் பணிநிலைமைகளை முறைப்படுத்தவும், சமூகப் பாதுகாப்பு அளிக்கவும் 1982 ஆம் ஆண்டில் தமிழக அரசால் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்திலுள்ள அட்டவணையில் 69 வகையான தொழிலினங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட சட்டத்தின்படி, 1994 ஆம் ஆண்டு கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலனுக்காக தமிழக அரசால் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் ஏற்படுத்தப்பட்டது. இந்நலத் திட்டத்தில் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள 38 தொழில் இனங்கள் அடங்கும்.

மேலும், 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் ஏற்படுத்தப்பட்டது. பின்னர், உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்குவதற்கு ஏதுவாக 2001-ல் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தை அரசு உருவாக்கியது.

அரசு, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம், 2001-ஐ மாற்றியமைத்து, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம், 2006-ஐ உருவாக்கியது.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் பின்வரும் 17 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்கள் செயல்பட்டு வருகின்றன:

[திரு. கே.டி. பச்சைமால்] [2013 அக்டோபர் 28

வ.எண்	வாரியங்களின் பெயர்
1.	தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம்
2.	தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம்
3.	தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம்
4.	தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியம்
5.	தமிழ்நாடு முடி திருத்துவோர் நல வாரியம்
6.	தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரியம்
7.	தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியம்
8.	தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியம்
9.	தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர் நல வாரியம்
10.	தமிழ்நாடு காலணி மற்றும் தோல்பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழிலாளர் நல வாரியம்
11.	தமிழ்நாடு ஓவியர் நல வாரியம்
12.	தமிழ்நாடு பொற்கொல்லர் நல வாரியம்
13.	தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியம்
14.	தமிழ்நாடு வீட்டுப் பணியாளர் நல வாரியம்
15.	தமிழ்நாடு விசைத்தறி நெசவாளர் நல வாரியம்
16.	தமிழ்நாடு பாதையோர வணிகர்கள் மற்றும் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் நல வாரியம்
17.	தமிழ்நாடு சமையல் தொழிலாளர் நல வாரியம் (24–2–2011)

2013 அக்டோபர் 28] [திரு. கே.டி. பச்சைமால்]

அனைத்து நல வாரியங்களிலும் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு ஒரே மாதிரியான நலத் திட்டங்கள் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு வருகின்றன:

வ. எண்	திட்டம்		உதவித் தொகை (ரூ.)
1.		தனி நபர் விபத்துத் திட்டம்	
	அ)	விபத்து இறப்பு	1,00,000
	ஆ)	விபத்து ஊனம் (ஊனத்தின் தன்மைக்கேற்ப)	1,00,000 வரை
2.		இயற்கை மரண உதவித் தொகை	15,000/–
3.		ஈமச் சடங்கு உதவித் தொகை	2,000/–
4.	அ)	கல்வி உதவித் தொகை 10 ஆம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்)	1,000/–
	ஆ)	10 ஆம் வகுப்பு தேர்ச்சி	1,000/–
	இ)	11 ஆம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்)	1,000/–
	ஈ)	12 ஆம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்)	1,500/–
	உ)	12 ஆம் வகுப்பு தேர்ச்சி	1,500/–
	ஊ)	முறையான பட்டப்படிப்பு விடுதியில் தங்கிப் படித்தால்	1,500/– 1,750/–
	எ)	முறையான பட்ட மேற்படிப்பு விடுதியில் தங்கிப் படித்தால்	4,000/– 5,000/–
	ஏ)	தொழில்நுட்பப் பட்டப்படிப்பு விடுதியில் தங்கிப் படித்தால்	4,000/– 6,000/–
	ஐ)	தொழில்நுட்பப் பட்ட மேற்படிப்பு விடுதியில் தங்கிப் படித்தால்	6,000/– 8,000/–
	ஒ)	ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு விடுதியில் தங்கிப் படித்தால்	1,000/– 1,200/–
5.	திருமண உதவித் தொகை (தொழிலாளி அல்லது மகன்/மகள்– குடும்பத்திற்கு இரண்டு முறை மட்டும்)		ஆண்–3,000/– பெண்–5,000/–

[திரு. கே.டி. பச்சைமால்] [2013 அக்டோபர் 28

வ. எண்	திட்டம்	உதவித் தொகை (ரூ.)
6.	மகப்பேறு உதவித் தொகை (பெண் தொழிலாளர்களுக்கு மட்டும்) கருக்கலைப்பு /கருச் சிதைவு	6,000/– 3,000/–
7.	கண் கண்ணாடி வாங்கிட உதவித் தொகை	500/–க்கு மிகாமல்
8.	ஓய்வூதியம்	1000/– பிரதி மாதம்
9.	குடும்ப ஓய்வூதியம் (கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்திற்கு மட்டும்)	400/– பிரதி மாதம்

18 வயது நிரம்பிய அல்லது 60 வயதுக்கு மேற்படாத அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலினங்களில் ஈடுபட்டுள்ள எந்த ஓர் உடலுழைப்புத் தொழிலாளியும் வாரியத்தில் பதிவு செய்து திட்டத்தின் பயன்களைப் பெறலாம். பதிவு பெற்ற தொழிலாளி இரண்டு வருடத்திற்கு தனது பதிவினைப் புதுப்பிக்க வேண்டும். பதிவு மற்றும் புதுப்பித்தலுக்குக் கட்டணம் ஏதுமில்லை.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்களில் வாரியம் துவங்கப்பட்ட நாள் முதல் 30-9-2013 வரை பதிவு பெற்ற அமைப்புசாராத் தொழிலாளர்கள், பயனடைந்தவர்கள் மற்றும் வழங்கப்பட்ட உதவித்தொகைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

வாரியங்கள்	பதிவு	பயனாளிகள்	உதவித்தொகை ரூ.
தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம்	23,22,743	7,41,416	217,32,34,838
தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்கள்	35,90,798	17,42,237	398,12,90,474
மொத்தம்	59,13,541	24,83,653	615,45,25,312

2013 அக்டோபர் 28] [திரு. கே.டி. பச்சைமால்]

மேற்படி நல வாரியங்களில் இவ்வரசு பொறுப்பேற்ற நாளான 16-5-2011 முதல் 30-9-2013 வரையிலான காலத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட உதவித்தொகை மற்றும் பயனாளிகளின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளன:-

வாரியங்கள்	பதிவு	பயனாளிகள்	உதவித்தொகை ரூ.
தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம்	2,22,767	3,25,011	91,73,90,404
தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்கள்	5,26,155	7,68,586	166,10,65,590
மொத்தம்	7,48,922	10,93,597	257,84,55,994

கவன ஈர்ப்பு அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள இனங்கள் குறித்த குறிப்புரை:-

பதிவின்போது தொழிலாளர்கள் நேரில் வர வேண்டும்

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலத் திட்டம் 1994-ன் திட்டக் கூறு 5 மற்றும் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நலத் திட்டம் 2006-ன் திட்டக் கூறு 9-ன்படி அமைப்பு சாராத் தொழிலாளர்கள் உரிய பதிவு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து வாரியத்தின் உறுப்பினராக வழிவகை செய்யப்பட்டுள்ளது. பதிவு விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள பணிச் சான்றிதழில் சான்றளிக்கும் அதிகாரம், வேலையளிப்போர், பதிவு பெற்ற ஒப்பந்ததாரர், அரசுத் தரப்பினர், கிராம நிருவாக அலுவலர்/வருவாய் ஆய்வாளர் மற்றும் பதிவு பெற்ற தொழிற்சங்கத்தினர் ஆகியோருக்கு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், தொழிலாளர்களின் பதிவு விண்ணப்பத்தினைத் தொழிற்சங்கங்கள் வழியாக சமர்ப்பிக்க நலத் திட்ட விதிகளில் வழிவகை செய்யப்படவில்லை.

[திரு. கே.டி. பச்சைமால்] [2013 அக்டோபர் 28

மேலும், இப்பொருள் தொடர்பான வழக்கு எண் W.P. No.21783 of 2012 இன் மீது 30-08-2012 அன்று சென்னை, உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் நல வாரியங்களில் பதிவு செய்ய, தொழிலாளர்களின் பதிவு விண்ணப்பங்களைத் தொழிற்சங்கங்கள் சமர்ப்பிக்க, நலத் திட்டக் கூறுகளில் வழிவகை செய்யப்படவில்லை என்பதனை உறுதி செய்துள்ளது.

மாவட்ட தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) அலுவலகங்களில் தணிக்கை மேற்கொண்ட மாநில கணக்காயர் அலுவலக (Accountant General Office) தணிக்கைக் குழு மற்றும் உள்ளக தணிக்கைக் குழு (Chief Internal Audit & Statutory Boards) ஆகிய நிறுவனங்கள் மேற்கொண்ட தணிக்கையின் போது, தொழிற்சங்கங்கள் மூலமாக சமர்ப்பிக்கப்பட்ட பதிவு மற்றும் கேட்பு மனுக்களுடன் போலி ஆவணங்கள் இணைக்கப்பட்டிருந்தது கண்டறியப்பட்டது. அவ்வாறு தவறான நோக்குடன் பெறப்பட்ட கேட்பு மனுக்களில் சம்பந்தப்பட்டவர்கள் மீது தற்போது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை போலி ஆவணங்களைச் சமர்ப்பித்த 153 தொழிற்சங்கங்கள் திட்டச் செயல்பாடுகளிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

எனவே, முறையான அமைப்புசாராத் தொழிலாளர்களை நல வாரியங்களில் பதிவு செய்வதற்கும், போலியான பதிவுகளைத் தவிர்ப்பதற்கும், சரியான பயனாளிகளுக்கு உதவித் தொகை சென்று சேர்வதை உறுதி செய்யவும், தொழிலாளர்கள் மற்றும் பயனாளிகள் நல வாரியங்களின் மாவட்ட அலுவலகங்களுக்கு நேரில் வருவது அத்தியாவசியமாகிறது. இதனை மாநில கணக்காயர் அலுவலக தணிக்கைக் குழுவினரும் வலியுறுத்தியுள்ளனர்.

கிராம நிருவாக அலுவலர் விசாரணை

அமைப்புசாரா நல வாரியங்களில் பதிவு செய்ய தொழிலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளரது பெயர், முகவரி, வயது, குடும்ப உறுப்பினர்கள் விவரம், ஈடுபட்டுள்ள தொழில் மற்றும் இவற்றிற்குச் சான்றாக தொழிலாளரால் இணைக்கப்பட்டுள்ள சான்றிதழ்களின் உண்மைத்தன்மை ஆகிய விவரங்கள் கிராம நிருவாக அலுவலரால் சரிபார்க்கப்பட்டு அளிக்கப்படும் சான்றின்

2013 அக்டோபர் 28] [திரு. கே.டி. பச்சைமால்]

அடிப்படையில், பதிவு மேற்கொள்ளப்படுகிறது. மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் கிராம நிருவாக அலுவலரால் மட்டுமே பராமரிக்கப்படுகின்றன.

தொழிலாளர் துறையில் இயங்கி வரும் 17 அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்கள் தவிர மேலும் 17 நல வாரியங்கள் பிற துறைகளின்கீழ் செயல்பட்டு வருகின்றன. அமைப்புசாரா நல வாரியங்களில் பதிவு செய்து கொண்டவர்களில் சிலர் ஏற்கெனவே விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு பெற்றவர்களாக இருந்ததும் கண்டறியப்பட்டது. மேலும், ஒரே நபர் ஒன்றுக்கும் மேற்பட்ட அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்து கொண்டதும் அறியப்பட்டது. இதுபோன்ற தவறுகளைத் தவிர்க்கும் பொருட்டும் கிராம நிருவாக அலுவலர் மூலம் விண்ணப்பங்களில் அளிக்கப்பட்டுள்ள விவரங்களைச் சரிபார்ப்பது அவசியமாகிறது. இந்நடைமுறையினால் வாரியத்தில் போலியான பதிவுகள் ஏற்பட வாய்ப்பில்லை.

வங்கிக் கணக்கு துவங்குதல்

இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நலத் திட்ட உதவிகளைப் பயனாளிகளுக்கு உரிய நேரத்தில் வெளிப்படையாக வழங்குவதை உறுதி செய்யும் வகையில், முன்னோடித் திட்டமாக, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், தூத்துக்குடி, கன்னியாகுமரி, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய 6 மாவட்டங்களில் நலத் திட்ட உதவிகளுக்கான பணப் பயன்களை மின்னணு பரிமாற்றம் முறையில் பதிவு பெற்ற தொழிலாளியின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்த அரசாணை (நிலை) எண் 102, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஐ1) துறை, நாள் 8-11-2011-ன்படி ஆணையிடப்பட்டு செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் தற்பொழுது அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அமைப்புசாராத் தொழிலாளர்களால் வங்கிக் கணக்குகள் துவங்குவதில் ஆரம்ப காலத்தில் இருந்த இடர்ப்பாடுகளைத் தொழிற்சங்கங்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்ததைத் தொடர்ந்து, பல்வேறு வங்கிகளுடன் தொடர்பு கொண்டு குறைபாடுகளைக் களைய தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[திரு. கே.டி. பச்சைமால்] [2013 அக்டோபர் 28

கேட்பு மனு குறித்த விண்ணப்பங்களை பிற துறைகளில் சரிபார்த்தல்

ஒரு பயனாளி ஒரே நிகழ்வுக்காக அரசின் வெவ்வேறு நலத் திட்டங்களின்கீழ் பயன்களைப் பெறுவது தவிர்க்கப்பட வேண்டும் என்று நலத் திட்டங்களில் வரையறுக்கப்பட்டுள்ளது. மேலும், இக்கருத்து பல்வேறு அரசாணைகளின் வாயிலாகவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும், தணிக்கைத் துறையினரால் ஒரு பயனாளி ஒரே நிகழ்வுக்காக வெவ்வேறு நல வாரியங்களிலும் மற்றும் பிற துறைகளிலும் உதவித்தொகை பெற்றது கண்டறியப்பட்டு இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, திருமணம், மகப்பேறு மற்றும் ஓய்வூதியம் தொடர்பான கேட்புமனுக்கள் முறையே தொடர்புடைய துறைகளான சமூக நலத் துறை, சுகாதாரத் துறை மற்றும் வருவாய்த் துறை ஆகிய துறைகளில் சரிபார்க்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த பயனாளிகளின் சாதி விவரம் கோருதல்

வரவு-செலவுத் திட்டத்தில், பொது நிதி ஒதுக்கீடு தவிர ஆதி திராவிடர் துணைத் திட்டத்தின்கீழும் (Special Component Plan for Scheduled Castes-SCSP), பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழும் (Tribal Area Sub-Plan-TSP) அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்களுக்கு அரசு மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை முழுமையாக அவ்வின மக்களுக்கே செலவிடப்பட வேண்டும். தமிழக அரசு இவ்விரு திட்டங்களின்கீழ் கடந்த மூன்று நிதியாண்டுகளில், ஒவ்வொரு நிதியாண்டிலும் ரூபாய் 28.875 கோடி உடலுழைப்பு மற்றும் 13 அமைப்புசாரா நல வாரியங்களில் பதிவு பெற்றுள்ள தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த பயனாளிகளுக்கு உதவித்தொகை வழங்கும் பொருட்டு ஒதுக்கீடு செய்துள்ளது.

இதனடிப்படையில் மேற்படி இனத்தைச் சார்ந்த பயனாளிகளுக்கு முன்னுரிமை அளித்து பணப் பயன் வழங்கிட ஏதுவாக பயனாளிகளின் சாதி விவரங்கள் சேகரிப்பது அத்தியாவசியமாகிறது.

சட்டமன்றத்தில் எழுப்பப்பட்டுள்ள கவன ஈர்ப்பு அறிவிப்பு எண் 16-ல் குறிப்பிடப்பட்டுள்ள அவசரப் பொது முக்கியத்துவம்

2013 அக்டோபர் 28] [திரு. கே.டி. பச்சைமால்]

வாய்ந்த நிகழ்வு குறித்து இந்த அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்கள், நலத் திட்டங்களின் கூறுகளின்படியும், அரசாணைகளின்படியும் முறைசாரா தொழிலாளர்களுக்கு அடையாள அட்டைகள் மற்றும் பணப் பயன்கள் தங்குதடையின்றிக் கிடைக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறைசாரா தொழிலாளர் நல வாரியங்கள் தொழிலாளர்களுக்குப் பெரும் துணையாக உள்ளன. உறுப்பினர்களிடம் முதலில் ஒரு சிறு தொகை பெறப்பட்டது. பிறகு அது கைவிடப்பட்டது. நல வாரிய உறுப்பினர் சேர்ப்பிற்குப் பரிந்துரைக்கும் உரிமை, பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களுக்குச் சட்டப்படியே வழங்கப்பட்டது. இப்போது அது பல இடங்களிலே மறுக்கப்படுகிறது. தொழிலாளர் பதிவு விண்ணப்பங்களைத் தொழிற்சங்கங்கள் சமர்ப்பிக்க நலத் திட்டக் கூறுகளில் வழிவகை செய்யப்படவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். ஆனால், இது ஏற்கெனவே செயலில் இருந்தது. எனவே, நலத் திட்டக் கூறுகளில் மாற்றம் செய்து, அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்கள் பதிவு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க அனுமதி அளிக்கவேண்டுமெனக் கோருகிறேன். நல வாரிய உறுப்பினர்கள் கிராம நிருவாக அலுவலர்களின் சான்று பெறவேண்டுமென்ற நிபந்தனை தி.மு.க. ஆட்சியிலே விதிக்கப்பட்டது. இவையெல்லாம் தொழிலாளர்களை நல வாரிய உறுப்பினர் ஆகாமல் வடிகட்டவே பயன்பட்டன. எனவே, இதைக் கைவிட வேண்டும். அட்டை பெறுவதற்கு தொழிலாளி நேரில் வரவேண்டுமென்ற 'ஒரு முறை வருகை' மட்டும் வலியுறுத்தப்பட வேண்டும். முறைசாரா தொழிலாளர்கள் ஒரு நாள் வேலை இழந்து, கூலி இழந்து, வழிச் செலவு செய்து, 70, 80 கிலோ மீட்டர் பயணம் செய்து விண்ணப்பம் பெற ஒரு முறை, அட்டை பெற ஒரு முறை, ஆய்விற்கு ஒரு முறை, பயன்பெறுகின்ற படிவம் பெற ஒரு முறை, பணம் பெற ஒரு முறை என பல முறைகள் வரவழைக்கப்படக் கூடாது. இதுவும் தொழிலாளர்களை வடிகட்டவே பயன்படும். பதிவிற்கும், புதுப்பித்தலுக்கும் வங்கிக் கணக்கை நிபந்தனையாக்கக்கூடாது

[திரு. அ. சவுந்தரராசன்] [2013 அக்டோபர் 28

என்று வலியுறுத்துகிறேன். பணப் பயன் பெறுவோருக்கு ரூபாய் ஐந்தாயிரத்திற்கும் மேல் உள்ளவர்களுக்கு மட்டும் வங்கிக் கணக்கு வழியாக காசோலை தரலாம். எல்லோருக்கும் வங்கிக் கணக்கு என்பதை நிபந்தனையாக்காமல் படிப்படியாக அமல்படுத்தலாம்.

பிற்பகல் 12-05

முறைசாரா நல வாரிய முத்தரப்புக் குழுக்கள் கடந்த இரண்டரை ஆண்டுகளாக அமைக்கப்படவில்லை. இது சட்டத்திற்கு முரணானதாகும். இதனால் தொழிற்சங்கங்கள் கருத்து கூறமுடியவில்லை. அதிகாரிகள் தன்னிச்சையாக முடிவுகளை மேற்கொள்கின்றனர். இப்போதைய நடைமுறைகளினால் தொழிலாளர் பதிவும், பயன்பெறுதலும் பாதிக்கப்படுகிறது. அதிகாரிகள் ஆங்காங்கே தனித்தனியாக நடைமுறைகளைப் பின்பற்றுகின்றனர். நல வாரியம் என்ற நல்லதோர் வீணை செய்துள்ளோம். அதை நலன்கெட புழுதியில் எறிகிற நிலையை அதிகாரிகளால் ஏற்படாதவண்ணம் அரசு திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், அரசையும் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொண்டு அமர்கின்றேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்ட விவர அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கக்கூடிய பல்வேறு அம்சங்களில், இன்றையதினம் அமைப்புசாராத் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய பணப் பயன்கள், தொழிற்சங்கங்களுக்கு, தொழிற்சங்க ரீதியாக, சட்டரீதியாக வழங்கப்பட்டிருக்கின்ற உரிமைகள் எல்லாம் மறுக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் 32 நல வாரியங்கள் அமைக்கப்பட்டும் தொழில்ரீதியான அணுகுமுறை, நிதியாதாரங்கள் மற்றும் சுதந்திரமான தொழிற்சங்கங்களின் பங்கேற்பு உறுதி செய்யப்படவில்லை. பல ஆண்டுகளாக பணப் பயன்கள் பலருக்குக் கிடைக்காமலும், இ.எஸ்.ஐ., வீட்டு வசதி, பணி ஊதியம் முறைப்படுத்தல் ஆகியவை அமல்படுத்தப்படாமலும், அதனால் வாழ்வுரிமை பாதிக்கப்படுகின்ற நிலைமை இருந்து வருகின்றது. அரசாணை எண்கள் 122, 123, 124 ஆகியவற்றை இரத்து செய்து, வருவாய்த் துறை குறுக்கீடில்லாமல் நல வாரியங்களைச்

2013 அக்டோபர் 28] [திரு. எம். ஆறுமுகம்]

சீர்படுத்துதல், பணப் பயன்களை அதிகரித்தல், இ.எஸ்.ஐ., வீட்டு வசதி, வாழ்வுரிமை, அடங்கிய முழுமையான பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய வகையில் அரசாணை மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். நல வாரியங்களிலே உறுப்பினர்களாகச் சேருவதற்கு விண்ணப்பங்கள், தொழிற்சங்கங்களின் மூலமாக வழங்கப்பட்டு உறுப்பினர்கள் சேர்க்கை அனுமதிக்கப்படவேண்டும். மாவட்டம் முழுவதும் உள்ளவர்கள் ஒரே இடத்திற்கு வரவேண்டுமென்ற நடைமுறை சரியானதாக இல்லை. பணப் பயன்களுக்கான விண்ணப்பங்கள் கொடுத்தும் பணம் கிடைக்கப்பெறவில்லை என்ற நிலையுள்ளது. இதைத் தவிர்க்க உடன் நடவடிக்கை எடுக்கப்படுமா; இ.எஸ்.ஐ. போன்ற வசதிகள் வழங்கப்படுமா; ஓய்வுபெற்றவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கக்கூடிய வசதிகள் முறைப்படுத்தப்படுமா போன்ற கோரிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய திரு. அ. சவுந்தரராசன் அவர்களும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்களும் நல வாரியத்தில் சில திருத்தங்களைக் கொண்டு வரவேண்டுமென்று கோரிக்கைகள் வைத்துள்ளார்கள். தொழிலாளர்களுடைய பதிவு விண்ணப்பத்தினை, தொழிற்சங்கங்கள் வழியாகத்தான் சமர்ப்பிக்க வேண்டுமென்ற கோரிக்கையினை வைத்துள்ளார்கள். இதுசம்பந்தமாக 2012-லே ஒரு வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்திலே தொடரப்பட்டு, அந்தத் தீர்ப்பிலே நல வாரியங்களில் பதிவு செய்ய தொழிலாளர்களுடைய பதிவு விண்ணப்பங்களைத் தொழிற்சங்கங்கள் சமர்ப்பிக்க நலத் திட்டக் கூறுகளில் வழிவகை செய்யப்படவில்லை என்று உறுதிசெய்துள்ளது. மேலும், இன்றைக்கு பல்வேறு குற்றவியல் நடவடிக்கைகள் சம்பந்தமாக போலி ஆவணங்களைச் சமர்ப்பித்த சுமார் 153 தொழிற்சங்கங்கள் திட்ட செயல்பாடுகளிலிருந்து இப்போது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது

[திரு. கே.டி. பச்சைமால்] [2013 அக்டோபர் 28

முறையாக ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்த பிறகு இன்றைக்கு சுமார் 10,93,597 பயனாளிகளுக்குச் சுமார் 257,95,30,669 ரூபாய் நிதி வழங்கியிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-10

இந்த வாரியம் ஆரம்பிக்கப்பட்ட 14 ஆண்டுகளில், 24 இலட்சத்து 83 ஆயிரத்து 653 பேர்கள் பயனடைந்திருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய இந்த இரண்டு ஆண்டு கால ஆட்சியில் மட்டும் 10 இலட்சத்து 93 ஆயிரத்து 597 நபர்களுக்கு பணப் பயன்கள் எல்லாம் அளிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கருத்துகளை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச்சென்று, தொழிலாளர் நலத் துறை கனிவோடு பரிசீலிக்கும் என்பதையும் கூறி, அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் E.S.I.-மருத்துவத் திட்டத்தைச் சேர்க்க வேண்டும் என்று கூறினார்கள். E.S.I.-யைப் பொறுத்தவரை அது மத்திய அரசினுடைய திட்டம். அதனால், இதுசம்பந்தமாக மத்திய அரசுதான் முடிவெடுக்க வேண்டும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

4. அறிக்கைகள் அளித்தல்

சட்டவிதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. செந்தமிழன், சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர் அவர்கள்.

***திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும், வறியவர்தம் வாழ்வு வளம்பெற, தன்னை அர்ப்பணித்து உழைத்து, வளமான தமிழகத்தை உருவாக்கிட தமிழக மக்களின் வாழ்வாதார நிலையை உயர்த்தியதோடு மட்டுமல்லாமல், 'எங்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளை, நாங்கள் படுகின்ற துன்பங்களை, துயரங்களைக் கேட்க ஆள் இல்லையா, நாதி இல்லையா' என்று இலங்கைவாழ் தமிழர்கள் ஏங்குகின்ற காலத்தில் அவர்களின் உரிமையை

2013 அக்டோபர் 28] [திரு. ஞா. செந்தமிழன்]

நிலைநாட்ட, பேரவையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானங்களை முன்மொழிந்தும், நிறைவேற்றியும், மத்திய அரசு மாற்றந்தாய் மனப்பான்மையோடு நடந்து கொண்டாலும், மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, வளமான தமிழகத்தை உருவாக்கியதுபோல, இலங்கைவாழ் தமிழர்களின் இன்னல்களைக் களையவும், உலகவாழ் தமிழர்களைக் காத்திடவும், நாளைய பாரதத்திற்குத் தலைமையேற்றிடவும், வாழுகின்ற வரலாறாய், வற்றாத வள்ளல் தன்மையாய் (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்தும் சரித்திர சகாப்தமாய், தொலைநோக்குப் பார்வையாய், தீர்க்கதரிசன சிந்தனையாய், தெய்வீக ஆற்றலாய் விளங்கிவரும் என் அன்னையாய், ஆசானாய், தெய்வமாய் உள்ள இதய தெயவம், கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை நன்றியோடு வணங்கி, 2013-2014 ஆம் ஆண்டிற்கான சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் 7-வது மற்றும் 8-வது அறிக்கையினைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2013 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2013 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2013 அக்டோபர் 28

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2013 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2013 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

2013 அக்டோபர் 28] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(இ) தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்*"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. அறிவிப்பு

கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2013–2014, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2013-2014 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றள்ளது:

"In pursuance of Article 205, read with clause (3) of Article 203, of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby give my recommendation for moving in the Tamil Nadu Legislative Assembly the demands for further grants for the year 2013-2014".

7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2013-2014 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீதான விவாதம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2013-2014 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 25-10-2013 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2013-2014 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 12-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 733, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அமைச்சர்கள் அரசு நிகழ்ச்சிகளில் கலந்து

2013 அக்டோபர் 28] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

கொள்ளும்போது மாணவ, மாணவிகளை வரிசையாக நிறுத்தி வரவேற்பதை தவிர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,40,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 142, திரு. வி. முத்துக்குமார் இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 826, திரு. சி.எச். சேகர், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண்.66, திரு. க. பீம்ராவ்.

திரு. க. பீம்ராவ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரவாயல் தொகுதிக்குட்பட்ட வளசரவாக்கத்தில் உள்ள ஆதி திராவிடர் ஆரம்பப் பள்ளிக்கு கட்டடம் கட்டுவதற்கு கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.570,62,83,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண்.149, டாக்டர் க. கிருஷ்ணசாமி.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தனியார் கல்லூரிகளில் பயிலும் பட்டியலின மற்றும் பழங்குடி மாணவர்களுக்கான உயர் கல்விக்கான உதவித் தொகையை நேரடியாக மாணவர்களின் வங்கிக் கணக்குகளில் அரசே துறையின் வாயிலாகச் செலுத்த வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழக்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.570,62,83,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

[2013 அக்டோபர் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 111, திரு. ர.ம. பாபு முருகவேல், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 146, டாக்டர் க. கிருஷ்ணசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 151, திரு. அ. அஸ்லம் பாஷா.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்வி உதவித் தொகை பெறுவதில் உள்ள சிரமங்களை நீக்க வேண்டியதன் அவசியம் குறித்தும், வெளிநாடுகளுக்குச் சென்று உயர் கல்வி கற்க விரும்பும் மாணவர்களுக்கு எளிதில் அரசின் உதவி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் விவாதிக்க', நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.570,62,83,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 302, திரு. ஏ. லாசர்.

திரு. ஏ. லாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பெரியகுளம் தொகுதி, வடபுதுப்பட்டியில் உள்ள ஆதி திராவிட மக்களுக்கு 25 ஆண்டுகளுக்கு முன் கட்டிக் கொடுக்கப்பட்ட காலனி வீடுகளைச் சீரமைப்பதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.570,62,83,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 547, திரு. எம். ஆறுமுகம்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பழங்குடி மக்களுக்கு குடியிருக்க வீட்டுமனை, பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர், சாலை வசதி, மின்சார வசதி

2013 அக்டோபர் 28] [திரு. எம். ஆறுமுகம்]

போன்றவற்றையும், அவர்களுக்கு விவசாயம் செய்து வாழ நிலம் ஒதுக்கியும் தர வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க', நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.570,62,83,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 550, திரு. கே. உலகநாதன்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருத்துறைப்பூண்டி, அபிஷேகக் கட்டளை ஆதி திராவிடர் மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க', நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.570,62,83,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 631, திரு. சு. குணசேகரன்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிவகங்கை தொகுதி, மல்லல், ஆதி திராவிடர் நலத் துறை மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டடங்கள், விளையாட்டு மைதானம் உள்ளிட்ட கட்டமைப்புகளை உருவாக்க நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க', நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.570,62,83,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 689, திரு. ப. டில்லி பாபு.

[2013 அக்டோபர் 28

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தருமபுரி மாவட்டம், அரூர் கலைக் கல்லூரி, பாப்பிரெட்டிப்பட்டி கலைக் கல்லூரிகளில் பயின்று வரும் மாணவ, மாணவிகளுக்கு ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் கல்லூரி மாணவிகள் விடுதி கட்ட நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க', நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.570,62,83,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 850, முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இராமநாதபுரம் தொகுதி, நல்லிருக்கை ஊராட்சியில் உள்ள ஆதி திராவிடர் காலனி குடியிருப்புப் பகுதியில் மழைக் காலங்களிலும், கண்மாயில் தண்ணீர் திறந்து விடும் நேரத்திலும் கண்மாய் நீர் உட்புகுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க', நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.570,62,83,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 200, திருமதி எஸ். விஜயதரணி.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கன்னியாகுமரி மாவட்டம், நெய்யூர், தக்கலை, பூதப்பாண்டி, பத்மநாபபுரம் ஆகிய பகுதிகளில் பயிரிடப்பட்டுவரும் மருத்துவ குணம் கொண்ட மட்டி வாழை மரங்களில் ஏற்பட்டுள்ள குருத்தழுகல் நோய், குந்தன் தள்ளுதல் ஆகியவற்றினால் ஏற்படும் மகசூல் குறைவைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க', நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[2013 அக்டோபர் 28] [திருமதி எஸ். விஜயதரணி]

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,87,34,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டு தீர்மானம் எண் 705, திரு. கு. நல்லதம்பி.

திரு. கு. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எழும்பூர்" தொகுதி, பெரம்பூர் பேரக்ஸ் ரோட்டில் இயங்கிவரும் அரசு பதிவுத் துறை, தனியார் கட்டடத்தில் இயங்கி வருவதால் அரசு கட்டடத்தில் இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டு தீர்மானம் எண் 3, திரு. அ. பாஸ்கர்.

திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி ஒன்றியம் இலக்கியம்பட்டி, கோவிந்தன் நகர், ஜெட்டிஹள்ளியில் முழுநேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"உணவு மற்றம் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,29,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டு தீர்மானம் எண் 139, திரு. வெ. பொன்னுப்பாண்டி.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "திருவில்லிப்புத்தூர் தாலுகாவில் வீட்டு வசதித் துறை மூலம் அடுக்குமாடி வீடுகள் கட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழக்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

[திரு. வெ. பொன்னுப்பாண்டி.] [2013 அக்டோபர் 28

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- ரூ.1/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2013-2014 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானமும், மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. இப்போது மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு தே.மு.தி.க. உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

திரு. எல். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற, மானம், மாண்ட வழிச்செவு, தோற்றம் என நான்கும் ஏமம் படைக்கு. வீரம், மான உணர்வு, முன்னோர் சென்ற வழி நடத்தல், தலைவனின் நம்பிக்கையைப் பெறுதல் ஆகிய நான்கும் இருக்கின்ற தலைவர் கேப்டன் தலைமையிலான தேசிய முற்போக்கு திராவிட கழகத்திலேயிருந்து வள்ளுவனின் குறளுக்கேற்ப இந்த மாமன்றத்தில் தே.மு.தி.க. சார்பில் எங்களையெல்லாம் வெற்றிபெற வைத்து அனுப்பிவைத்திருக்கின்ற எங்கள் வாழ்வோடும், வளத்தோடும், உயிரோடும், உயிர் மூச்சோடும் ஒன்றறக் கலந்துவிட்ட தே.மு.தி.க. தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் கேப்டன் அவர்களுக்கு கட்சிக்கு நன்றியுள்ள தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியைக் காணிக்கையாக்கி எனது கருத்தைப் பதிவு செய்ய விழைகின்றேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த அவையில் தாக்கல் செய்துள்ள முதல் துணை மதிப்பீடுகளுக்கான தொகை ரூபாய் 5898.19 கோடியில், 4829.67 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், 1068.52 கோடி ரூபாய் மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும் எனத் தெரிவித்துள்ளார்கள். இம்மதிப்பீடுகளில் உள்ள கூடுதல் செலவினங்களை வரி வருவாயின் வளர்ச்சியின் மூலமாகவும், செலவினங்களைக் கட்டுப்படுத்துவதன் மூலமாகவும் ஈடுசெய்யப்படும் என்று தெரிவித்துள்ளார்கள். இது எப்படி சாத்தியமாகும் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. தற்போதுள்ள பொருளாதார உற்பத்தி வளர்ச்சி விகிதம் 4.5 சதவிகிதம் மட்டுமே இருக்கும் என உலக வங்கியும், பொருளாதார நிபுணர்களும்

2013 அக்டோபர் 28] [திரு. எல். வெங்கடேசன்]

தெரிவித்திருக்கின்றார்கள். நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களே மார்ச் 21-ல் நிதிநிலை அறிக்கையை இந்த அவையில் தாக்கல் செய்து, பொருளாதார உற்பத்தி வளர்ச்சி விகிதம் 4.61 சதவிகிதம் மட்டுமே இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்கள். வரியில்லாத நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்வதாகவும் சொன்னார்கள். மேலும், தற்போது மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற எந்தப் பொருளும் எதிர்பார்த்த அளவுக்கு விற்பனை ஆகவில்லை. காரணம், மக்களுக்கு வாங்கும் சக்தி குறைந்துள்ளது. அதேபோல், விலைவாசி உயர்வும் மிக முக்கிய காரணியாகும். இன்றுகூட 'பிசினஸ் லைன்' என்ற ஆங்கிலப் பத்திரிகையிலே மக்கள் பயன்படுத்துகின்ற அத்தியாவசியப் பொருட்களின் விலை 18.4 சதவிகிதம் உயர்ந்துள்ளதாக செய்தி வந்துள்ளது. உற்பத்தித் திறன் அதிகரித்து விற்பனையும் அதிகரிக்கின்ற சூழ்நிலையில் வரி வருவாய். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன் அவர்கள் விவாதத்தைத் தொடங்கி வைத்துப் பேசுகின்றபோது உலகளவில் பொருளாதாரத்தில் மந்த சூழ்நிலை நிலவி வருகிறது, கூடுதல் நிதி ஒதுக்குவதற்கு எவ்வாறு முடியும் என்ற வினாவினை எழுப்பியிருக்கிறார்கள். ஏற்கெனவே, நான் இந்த துணை மதிப்பீடுகளை இந்த அவையில் சமர்ப்பிக்கின்றபோதே, ஒரு கருத்தினை இங்கே பதிய வைத்திருக்கின்றேன், மாநிலத்தினுடைய சொந்த வரி வருவாய் வளர்ச்சியின் மூலமாகவும், செலவினங்களைக் கண்காணித்து கட்டுப்படுத்துவதன் மூலமாகவும் இது ஈடுசெய்யப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்திருக்கிறேன். ஏற்கெனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில், கடந்த இரண்டு ஆண்டுகளில், இதுமாதிரியான துணை கூடுதல் மதிப்பீடுகளை இங்கே தாக்கல் செய்து, அதை ஈடுசெய்கின்ற அளவிற்கு மாநிலத்தினுடைய சொந்த வரி வருவாயைப் பெருக்குவதிலும், செலவினங்களைக் கட்டுப்படுத்துவதிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் வெற்றிகரமாகத் தன்னுடைய நல்லாட்சியை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை நான் இங்கே நினைவுகூர்ந்து, அந்தக் கவலை மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன் அவர்களுக்கு வரத் தேவையில்லை. வராதவாறு மாண்புமிகு அம்மா அவர்கள்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2013 அக்டோபர் 28

உறுதியாக நல்லாட்சியைத் தருவார்கள், தருவார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

பிற்பகல் 12-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

திரு. எல். வெங்கடேசன்: 2013-2014 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் வணிக வரி வருவாயின்மூலம் பெறப்படும் வரவுகள் ரூபாய் 56 ஆயிரத்து 25.24 கோடியாக இருக்கும் என மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தெரிவித்திருந்தார்கள். இது, கடந்த ஆண்டைவிட 17.62 சதவிகிதம் வளர்ச்சி கொண்டதாக இருக்கும் எனவும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். வணிக வரி வருவாய் வளர்ச்சி என்பது, உற்பத்தியோ அல்லது விற்பனையோ அதிகரித்து, அதனால் வரக்கூடிய வருவாய் என்றால் நிச்சயமாக இருக்க முடியாது. காரணம், இந்த முதல் துணை மதிப்பீடுகளுக்கான நூலிலேயே பக்கம் 3 இல், பத்தி 5 இல், பொங்கல் திருநாளில் விலையில்லா வேட்டி, சேலை வழங்க 2013-2014 நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்ட நிதி ரூபாய் 350 கோடி. தற்போது நூல் விலை உயர்வின் காரணமாக அந்தத் தொகை போதவில்லை என கூடுதலாக 136.36 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதும், பக்கம் 4 இல், பத்தி 7 இல் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இணை உணவளிக்கும் செலவுக்காக ரூபாய் 190 கோடிக்குமேல் 228.36 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதும் இதற்கு சிறந்த உதாரணமாகும். இலவச வேட்டி, சேலை வாங்குவோரின் எண்ணிக்கையும் பெரிய அளவில் உயர்ந்துவிடவில்லை. அதேபோல், 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிகள், பால் ஊட்டும் தாய்மார்கள், வளரிளம் பெண்கள் என அங்கன்வாடி மையங்களால் வழங்கப்படும் இணை உணவால் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையும் தற்போது ஒதுக்கப்பட்ட 228.36 கோடி ரூபாய் அளவிற்குக் கூடிவிடப் போவதில்லை. எனவே, தற்போதுள்ள சூழ்நிலையில் விலைவாசி உயர்வால்தான் வரி வருவாய் உயர வாய்ப்பிருக்கிறதே தவிர, வேறு வழியில்லை. இந்த ஆட்சியில் பணப் புழக்கம் வெகுவாகக் குறைந்துள்ளது.

அதேபோன்று, வாகனங்கள் உற்பத்தி செய்யும் அளவிற்கு விற்பனை இல்லை. ஆனால், பதிவுக் கட்டணம் அதிகம். பத்திரப் பதிவுக் கட்டணத்தைக் குறைத்த இந்த அரசு, மக்கள் விழி

2013 அக்டோபர் 28] [திரு. எல். வெங்கடேசன்]

பிதுங்கும் அளவிற்கு வழிகாட்டி மதிப்பை பல மடங்கு உயர்த்தி, மக்களைச் சிரமத்திற்கு உள்ளாக்கியுள்ளது. கடந்த ஆண்டுக்கு முன்பு இரண்டாண்டுகளில் நடைபெற்ற பத்திரப் பதிவுக்கும், நடப்பாண்டிலான பத்திரப் பதிவுக்கும் மலைக்கும், மடுவிற்குமான வித்தியாசம் உள்ளதாகத் தெரிகின்றது. ஆனால், பத்திரப் பதிவின்மூலமாக வருமானம் அதிகரித்துள்ளது என்று மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கூறக்கூடும். பத்திரப் பதிவுமூலம் வருமானம் அதிகரிப்பதற்கான வாய்ப்பு இருக்கத்தான் செய்யும். ஏனென்றால், ஒரு சதுர அடி மனை 40 ரூபாயிலிருந்து தற்போது 200 ரூபாய் அளவிற்கு நான்கு மடங்கு வழிகாட்டி மதிப்பீடு உயர்த்தப்பட்டு இருக்கிறது. எனவேதான், பத்திரப் பதிவுமூலமாக வருமானம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவு வழிகாட்டி மதிப்பைப் பொறுத்தவரையில், அதில் ஏதாவது வேறுபாடுகள் இருப்பின், அதைக் களைவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அந்தந்தப் பகுதிகளில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதிலே வேறுபாடுகள் இருப்பின் அந்தக் குழுவிடம் மனுக்களைச் சமர்ப்பித்து அந்த வேறுபாடுகள் உடனுக்குடன் களையப்படுகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

திரு. எல். வெங்கடேசன்: நான் இந்த மாமன்றத்திலே சொல்ல விழைவது, பத்திரப் பதிவின் எண்ணிக்கை நடப்பாண்டு வெகுவாகக் குறைந்திருக்கிறது. அதற்குக் காரணம், இந்த அரசு வழிகாட்டி மதிப்பை பல மடங்கு உயர்த்தியதுதான் எனக் கூற விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மூன்றாண்டுக்கும் ஒருமுறை

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2013 அக்டோபர் 28

வழிகாட்டி மதிப்பினை மறுமதிப்பீடு செய்வது அரசினுடைய அன்றாடப் பணி. அந்தப் பணியின் காரணமாகத்தான், மாவட்ட அளவில், மாநில அளவில் வழிகாட்டி மதிப்பு எவ்வளவு இருக்கிறது, மார்க்கெட்-சந்தை மதிப்பு எவ்வளவு இருக்கிறது என்கிற வித்தியாசங்கள், வேறுபாடுகளையெல்லாம் கூர்ந்து கவனித்து, அதற்காக உள்ள குழு பரிந்துரைத்ததன் அடிப்படையில்தான் வழிகாட்டி மதிப்பு கூட்டப்பட்டிருக்கிறது. அதுவும், வரைவு அறிக்கைக்கு உட்பட்டுத்தான் இருக்கிறது என்பதனை நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

பிற்பகல் 12-25

திரு. எல். வெங்கடேசன்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கிட 1004.86 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதாக முதல் துணை மதிப்பீடுகளிலே தெரிவித்திருக்கிறார்கள். 19-4-2013 அன்று இந்த மாமன்றத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 17.54 கோடியே 86 இலட்சம் ரூபாய்க்கான நிவாரண உதவிகளை விதி 110-ன்கீழ் அறிவித்தார்கள். சென்னை நீங்கலாக தமிழகத்தின் 31 மாவட்டங்களுக்கும் வறட்சி நிவாரணம் வழங்கப்படப் போவதாக அறிவித்தார்கள். ஆனால், எங்கள் விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு விவசாயிக்குக்கூட இதுவரையிலே வறட்சி நிவாரணம் வழங்கப்படவில்லை. விழுப்புரம் மாவட்டத்திற்கு மட்டும்தான் வறட்சி நிவாரணம் வழங்கப்படவில்லையா அல்லது வேறு எந்தெந்த மாவட்டங்களுக்கு வழங்கப்படவில்லை என்பது தெரியவில்லை. இதுபோன்ற நிலையில், இந்தத் துணை மதிப்பீடுகளில் மேலும் 1,004.86 கோடி ரூபாயை ஒதுக்குவது ஏன் எனப் புரியவும் இல்லை. மேலும், மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் டெல்டா பாசனப் பகுதியில் 181 கோடி ரூபாய் செலவில் 15,000 பண்ணைக் குட்டைகளும், டெல்டா அல்லாத பிற மாவட்டங்களில் அதே ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை வாயிலாக 750 கோடி ரூபாய் செலவில் 50,000 பண்ணைக் குட்டைகளும் அமைக்கப்படும் என இந்த அரசு அறிவித்தது. நீர் ஆதாரத்தைப் பெருக்கவும்,

2013 அக்டோபர் 28] [திரு. எல். வெங்கடேசன்]

விவசாயிகளுடைய வாழ்வாதாரத்தைப் பெருக்கவும் கொண்டுவரப்பட்ட இந்த உன்னதமானத் திட்டத்தின் இன்றைய நிலை பரிதாபகரமாக உள்ளது. ஏனென்றால், மனித சக்தியைக் கொண்டு நிறைவேற்ற வேண்டிய இந்தத் திட்டம், தனது இலக்கில் இன்னும் 15 சதவிகிதத்தைக்கூட எட்டவில்லை என்ற நிலைதான் உள்ளது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் இந்த அவையிலே கொண்டுவரப்பட உள்ளது. அப்போது விளக்கமாகக் கூறுகின்றேன். ஏற்கெனவே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் டெல்டா பகுதியில் 15,000 பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்ததன் அடிப்படையில், இப்போது 9,000 பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணி முடிவுபெற்றிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

திரு. எல். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30X30 மீட்டர் அகலமும், 5 அடி ஆழமும் கொண்ட பண்ணைக் குட்டைகளை. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வறட்சி நிவாரணத்தைப் பற்றிப் பேசுகின்றபோது சில ஐயப்பாடுகளை எழுப்பினார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் கடந்த வருடம் வடகிழக்குப் பருவ மழை, தென்மேற்குப் பருவமழை பொய்த்துவிட்ட காரணத்தினாலே இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழகத்திலே கடுமையான

[திரு. என்.டி. வெங்கடாச்சலம்] [2013 அக்டோபர் 28

வறட்சியைச் சந்திக்கக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தைப் பொறுத்தவரையிலே டெல்டா மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயப் பெருமக்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 15,000 ரூபாயை வறட்சி நிவாரணமாக அறிவித்தார்கள். அன்றைக்கு சட்டமன்றப் பேரவைக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்திலும்கூட ஓர் உயர்மட்டக் குழு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டு, சென்னை நீங்கலாக, தமிழகம் எங்கும் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் அந்த உயர்மட்டக் குழுவை அனுப்பி, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்து, அந்த அடிப்படையிலே, அந்த உயர்மட்டக் குழுவால் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்தில் அளிக்கப்பட்ட அறிக்கையினுடைய அடிப்படையில், மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் அம்மா அவர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரணத் தொகையினை அறிவித்தார்கள்.

இந்தியாவிலே பல்வேறு மாநிலங்கள் இருந்தாலும்கூட, இதுவரை இயற்கைச்சீற்றங்கள் வந்தால் நிவாரணம் அளிப்பார்கள். புயல், வெள்ளம் வந்தால் நிவாரணம் அளிப்பார்கள். ஆனால், இந்தியாவிலேயே வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, விவசாயிகளுக்கு நிவாரணத்தை வழங்கிய ஒரே முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம். வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயப் பெருமக்களுக்கு முழுமையாக நிலவரியைத் தள்ளுபடி செய்து அறிவிப்பை வெளியிட்டவர் ஒப்பற்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, பல்வேறு காரணங்களால் உயிரிழந்த விவசாயிகளின் குடும்பங்களுக்குப் பல்வேறு உறுப்பினர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, ஓர் உறுப்பினருடைய குடும்பத்திற்கு மூன்று இலட்சம் ரூபாய் நிதியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு அறிவித்தார்கள். அதுமட்டுமல்ல. விவசாயக் கூலித் தொழிலாளர்களுடைய வாழ்வில் வளம் ஏற்ற வேண்டும் என்கிற அடிப்படையிலே, 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தை 150 நாட்களாக அதிகரித்து விவசாயக் கூலித் தொழிலாளர்களுடைய வயிற்றில் பால் வார்த்தவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி

2013 அக்டோபர் 28] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

அம்மா அவர்கள் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

18 மாவட்டங்களில் களப் பணிகளை மேற்கொண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் டெல்டா மாவட்ட விவசாயப் பெருமக்களுக்கு ஒரு ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாயை நிவாரணமாக அறிவித்தார்கள். டெல்டா மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே 3 இலட்சத்து 61 ஆயிரம் ஏக்கர் நெற் பயிர் பாதிக்கப்பட்ட விவசாயப் பகுதிகளுக்கு, 3 இலட்சத்து 52 ஆயிரத்து 613 விவசாயப் பெருமக்களுக்கு 542 கோடி ரூபாயை வறட்சி நிவாரணமாக அறிவித்த முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன். அதுமட்டுமல்ல, டெல்டா அல்லாத பிற மாவட்ட விவசாயப் பெருமக்களுக்கு 835 கோடி ரூபாயை வறட்சி நிவாரணமாக வழங்கிய ஒரே முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், விரைவில் உரையை முடியுங்கள்.

திரு. எல். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த நீண்ட விளக்கத்திலே எங்களுடைய விழுப்புரம் மாவட்டமே வரவில்லை. நான் விழுப்புரம் மாவட்டத்திற்கு நிவாரணம் வரவில்லை என்று சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் டெல்டா மாவட்டத்தைப் பற்றிச் சொல்கிறார்கள். நான் அதையெல்லாம் மறுக்கவில்லை. இந்த அவையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 14 ஆம் தேதி விதி 110-ன்கீழ் டெல்டா பாசன விவசாயிகளுக்கு, சென்னை நீங்கலாக, 31 மாவட்ட விவசாயிகளுக்கு 1,754 கோடியே 86 இலட்சம் ரூபாயை ஒதுக்கினார்கள் என்று எங்களுக்கும் தெரியும். இந்த மாமன்றத்திலே நாங்களும் இருந்தோம். எங்களுடைய மாவட்டம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று வேறு மாவட்டங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றனவா என்பதுதான் என்னுடைய

[திரு. எல். வெங்கடேசன்] [2013 அக்டோபர் 28

ஐயப்பாடு. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை ஆய்வு செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, பருவ மழை வரவிருக்கின்ற இந்த காலச் சூழ்நிலையிலே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: வறட்சி நிவாரணத்தைப் பொறுத்தவரையிலே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 50 சதவீதத்திற்கு மேலே பாதிக்கப்பட்ட விவசாயப் பெருமக்களுக்கு வறட்சி நிவாரணத்தை வழங்கியிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய கருத்துருக்களைப் பெற்று, விழுப்புரம் மாவட்டத்திலே வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது. தகுதியுள்ள விவசாயப் பெருமக்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டு, அதற்குண்டான விவரங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக கருத்துரு வழங்கி, நிலுவையிலே இருந்தால் அதைப் பற்றி அரசு ஆய்வு செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். நீங்கள் பேச ஆரம்பித்து 20 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. (குறுக்கீடு) மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விழுப்புரம் மாவட்டத்திற்கு வறட்சி நிவாரணமே தரப்படவில்லை என்ற ஒரு கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆனால், அது முழுமையாக உண்மையில்லை என்பதனை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். விழுப்புரம் மாவட்டத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, தோட்டக் கலைத் துறை மூலமாக பல உதவிகளைச் செய்திருக்கிறது. அதேபோன்று, வேளாண்மைத் துறையின் மூலமாக பல உதவிகள் அங்கே செய்யப்பட்டிருக்கின்றன என்பதை நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

2013 அக்டோபர் 28]

திரு. எல். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடிக்கிறேன். எனக்கு 10 நிமிடங்கள் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. நீங்கள் பேச ஆரம்பித்து 20 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டது.

திரு. எல். வெங்கடேசன்: ஒன்றும் இல்லை. நான் இருக்கிற கருத்தைச் சொல்லிவிடுகிறேன். இந்தப் பொருளை விட்டு நான் வெளியே செல்லவில்லை. தயவு செய்து எனக்கு ஒரு வாய்ப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொரு முறையும் இதுமாதிரி நேரத்தைக் கூடுதலாக எடுத்துக்கொள்ளக்கூடாது. சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. எல். வெங்கடேசன்: பண்ணைக் குட்டைகள் அமைப்பது பற்றி இப்போது நான் பேச வரவில்லை. எங்கள் மாவட்ட அமைச்சர் அவர்கள்கூடச் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50 சதவீதத்திற்கு மேல் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தமிழ்நாடு முழுவதும் நிவாரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. விழுப்புரத்திலே 50 சதவீதத்திற்கு மேல் பாதிக்கப்படவில்லை. குறைந்த அளவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

திரு. எல். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்ட விவசாயிகள் மிகவும் குழப்பத்தில் இருந்தார்கள். மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தின் வாயிலாக அவர்கள் தெளிவடைந்துவிடுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 அக்டோபர் 28

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயப் பயிர்கள் பயிரிடப்பட்டிருந்தால், பயிரிடப்பட்டிருந்தும் 50 சதவீதத்திற்கு மேலாக பாதிக்கப்பட்டிருந்தால், அந்த விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும் என்று மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலேயும் விவசாயப் பெருமக்களுக்கு வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது. விவசாயப் பயிர்கள் பயிரிடப்பட்டிருக்க வேண்டும். அப்படி பயிரிடப்பட்டு, அது 50 சதவீதத்திற்கு மேலே பாதிக்கப்பட்டு இருந்தால், அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு அரசு நிவாரணத்தை வழங்கிக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே தமிழகத்திலே இருக்கக்கூடிய அனைத்து விவசாயப் பெருமக்களும் இன்றைக்கு அந்த நிவாரணத்தைப் பெற்று மிக்க மகிழ்ச்சியோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், உரையை நிறைவு செய்யுங்கள்.

திரு. எல். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ணைக் குட்டைகள் அமைக்கும் விஷயத்தைப் பொறுத்தவரையில், தற்போது பருவமழை தொடங்கிவிட்டது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களே 9,000 பண்ணைக் குட்டைகள்தான் தமிழகம் முழுவதும் அமைக்கப்பட்டு இருப்பதாகச் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைக் கொடுக்கக்கூடாது. நீங்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். அந்தக் கருத்திற்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். '9,000 பண்ணைக் குட்டைகள்தான் அமைத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்' என்று சொல்லக்கூடாது. அடுத்தபடியாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி

2013 அக்டோபர் 28] [திரு. கே.பி. முனுசாமி]

அம்மா அவர்கள் டெல்டா மாவட்டத்தைத் தவிர 50,000 பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்து அது நடைமுறையில் இருக்கிறது. அதற்கு நாளை முழுமையாகப் பதில் சொல்கிறேன். ஏனென்று சொன்னால், ஆதாரத்தோடு சொல்ல வேண்டும். ஏற்கெனவே நீங்கள் ஆரம்பிக்கின்றபோதே பல்வேறு கருத்துகளைச் சொல்லி, இதற்கெல்லாம் நாங்கள்தான் உரியவர்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதனால் உங்களுக்கு, சரியாக, ஆதாரத்தோடு நாளை பதில் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு 'தானே' புயல் அடித்தபோது, அதிகப்படியாக பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் விழுப்புரம் மாவட்டமும், கடலூர் மாவட்டமும் ஆகும். அப்போது இந்த இரண்டு மாவட்டங்களுக்காக பிரத்யேகமாக ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் செலவில் நிவாரணத் திட்டத்தை இந்த அவையிலேயே நான் அறிவித்து செயல்படுத்தினேன். (மேசையைத் தட்டும் ஒலி) வீடுகளை இழந்தவர்களுக்கெல்லாம் ஒரு இலட்சம் வீடுகள் கட்டும் திட்டத்தையும் நான் அறிவித்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, எந்தக் கால கட்டத்திலும் விழுப்புரம் மாவட்டம் புறக்கணிக்கப்பட்டது, அதுவும் இந்த அரசால் புறக்கணிக்கப்பட்டது என்று சொல்கின்ற கூற்று சரியான கூற்றாக இருக்க முடியாது. மற்றபடி இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த குற்றச்சாட்டுக்குத் தகுந்த புள்ளிவிவரங்களுடன் பதில் சொல்ல வேண்டும் என்பதற்காக நான் விவரங்களைக் கேட்டிருக்கிறேன். விவரங்கள் வந்தவுடன் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், ஒரு நிமிடத்தில் உரையை நிறைவு செய்யுங்கள்.

திரு. எல். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். அதுபோன்று விவசாயிகளுக்கு சூரிய சக்தியின்மூலம் இயங்கும் பம்புசெட்டுகள் அமைக்க ரூ.68 கோடி இந்த முதல் துணை மதிப்பீடுகளிலே சேர்க்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்

[திரு. எல். வெங்கடேசன்][2013 அக்டோபர் 28

தெரிவித்திருக்கிறார்கள். இத்திட்டத்தின்கீழ் 80 சதவிகிதம் அரசு மானியம் என்றும், 20 சதவிகிதம் விவசாயிகள் செலுத்த வேண்டுமெனவும் நான் அறிகிறேன். தமிழகம் முழுக்க இத்திட்டத்தைப் பற்றி முழுமையாக விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படவில்லை. அதேபோன்று இத்திட்டத்தை அமல்படுத்த எந்த நிறுவனத்துடன் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது? பொறியாளர்களை வைத்து ஆய்வு நடத்தப்பட்டதா? சூரிய சக்தியால் இயங்கும் ஒரு பம்புசெட்டுக்கான மதிப்பீடு எவ்வளவு? பேனல் மற்றும் பேட்டரியை மட்டும் அரசு வழங்குமா? அல்லது பம்புசெட்டையும் சேர்த்து அரசு வழங்கப்போகின்றதா என்கிற ஐயங்கள் விவசாயிகள் மத்தியிலே இருக்கின்றன. இவையெல்லாம் இன்னும் தெரியாத நிலையில், விண்ணப்பித்த விவசாயிகளிடமிருந்து அரசு தலா ரூ.10,000/-க்கான காசோலையைப் பெற்றுள்ளது என்ற தகவலும். .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் விதி 110-ன்கீழ் சட்டமன்றப் பேரவையிலே அறிவிக்கப்பட்ட ஒரு நல்ல திட்டமாகும். 2013-2014 ஆம் நிதியாண்டிலே விவசாயிகளுக்கு குழாய்க் கிணறு, ஆழ்குழாய்க் கிணறு, திறந்தவெளிக் கிணறு மற்றும் தரைமட்ட நீர்த்தொட்டிகளிலிருந்து நீரை இறைக்க 5 குதிரைத் திறன்கொண்ட 2,000 எண்கள் சூரிய சக்தியால் இயங்கக்கூடிய ஏ.சி. பம்புசெட்டு அமைப்புகளை 4,800 வாட்ஸ் பவர்கொண்ட, 80 சதவிகிதம் மானியத்தோடு நுண்ணீர் பாசன அமைப்புகளை நடைமுறையிலுள்ள நெறிமுறைகளின்படி மற்றும் பயிர்களுக்கு ஏற்ற முதன்மைத் தொழில்நுட்பங்களையும் ஒருங்கிணைத்து வழங்கவும் 28-6-2013 ஆம் நாளிட்ட அரசாணை நிலை எண் 136, வேளாண்மைத் துறையின்கீழ் ரூ.80 கோடி ஒப்பளிப்பு ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின்கீழ் ஓர் அமைப்புக்கு செலவு சுமார் ரூ.5 இலட்சம் ஆகும். இதில் அரசு மானியம் 80 சதவிகிதம், அதாவது, ரூ.4 இலட்சம், விவசாயிகளின் பங்களிப்பு 20 சதவிகிதம், அதாவது, ரூ.1 இலட்சம் ஆகும். விவசாயிகளின் பங்களிப்பான 20 சதவிகிதத் தொகையை விவசாயிகள் நிறுவனத்திற்குச் செலுத்துவதற்கு ஏதுவாக, தேவைப்படும் விவசாயிகளுக்கு அவர்கள் தகுதி மற்றும் நடைமுறையிலுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு கூட்டுறவுக் கடன் வசதி பெற ஏற்பாடு செய்து தரவுள்ளோம்.

2013 அக்டோபர் 28] [திரு. செ. தாமோதரன்]

சூரிய சக்தியால் இயங்கும் பம்புகள் அமைத்துக்கொடுக்கும் திட்டம், நுண்ணீர் பாசனத் திட்டத்தோடு சொட்டுநீர் சிறிய மற்றும் மிகச் சிறிய தெளிப்பான்கொண்ட தெளிப்புநீர் இணைத்து செயல்படுத்தப்பட வேண்டும். நுண்ணீர் பாசனத் திட்டமானது மாநிலத்தில் தற்போது செயல்படுத்தப்படும் தேசிய நுண்ணீர் பாசன இயக்ககத்தின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி செயல்படுத்தப்படும் திட்டத்தின்கீழ் இந்தத் திட்டம் செயலாக்கப்படும். ஏற்கெனவே நடைமுறையிலுள்ள விதிமுறையின்படி சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவிகிதம் மானியமும் இதில் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் வேளாண் பொறியியல் துறைமூலமாக அமைத்துக் கொடுக்கப்படும். மேலும், சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் வழங்கும் திட்டத்துக்காக நிறுவனங்கள் தேர்வு செய்ய வேளாண் பொறியியல் துறையின்மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரவும், முடிவு செய்யவும் அரசு உத்தரவிட்டிருக்கிறது. இத்திட்டத்திற்காக சூரிய சக்தியால் இயங்கும் 5 குதிரைத் திறன் கொண்ட இரண்டாயிரம் ஏ.சி. பம்புசெட்டுகள், அமைப்புகள் ஒவ்வொன்றுக்கும் 4,800 வாட் பவர் திறனுடையதும், சூரிய ஒளிக்கேற்ற தானாகவே சாய்மானத்தைச் சரிசெய்துகொள்ளும் வசதியுடையதுமான சூரியத் தகடுகளைக் கொண்ட அமைப்புகளை விநியோகிக்கவும், நிறுவவும் மற்றும் ஐந்தாண்டுகாலம் முழுமையாகப் பராமரித்திடவும் நடைமுறையில் உள்ள தமிழ்நாடு அரசின் வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புச் சட்டம், 1998 மற்றும் ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000 ஆகியவற்றிற்கும் உட்பட்டு, திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி 11-9-2013 இல் வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாகக் கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கும் முன் நடத்தப்படும் கூட்டம் 30-9-2013 இல் நடத்தப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி 17-10-2013 இல் திறக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டம் ஒரு சிறப்பான திட்டம். சிறப்பாக நடைபெறும் என்ற உறுதியினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

[2013 அக்டோபர் 28

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி நிவாரணம் வழங்குவதில் விழுப்புரம் மாவட்டம் புறக்கணிக்கப்பட்டது என்ற மாண்புமிகு உறுப்பினரின் குற்றச்சாட்டுக்கு நான் பதில் தெரிவிக்க விரும்புகிறேன். 50 விழுக்காட்டிற்குமேல் பயிர் சேதம் உள்ள விவசாயிகளுக்கு மட்டுமே நிவாரணம் வழங்கப்பட்டது. விழுப்புரம் மாவட்டத்தில் 50 விழுக்காட்டிற்குமேல் பாதிப்பு இல்லாததால் வறட்சி நிவாரணம் வழங்கப்படவில்லை. டெல்டா மாவட்டங்களுக்கு 524 கோடி ரூபாயும், டெல்டா அல்லாத மாவட்டங்களுக்கு 804 கோடி ரூபாயும் வறட்சி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வெங்கடேசன், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. எல். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி சம்பந்தமானவை. முக்கியப் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவற்றையெல்லாம் எழுதிக் கொடுத்துவிடுங்கள். பிறகு பேசிக்கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள். (குறுக்கீடு)

திரு. எல். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவற்றையெல்லாம் எழுதிக் கொடுத்துவிடுங்கள். இல்லை, இல்லை. அப்புறம் பார்த்துக்கொள்ளலாம். அவற்றையெல்லாம் தொடர்புடைய அமைச்சர்களுக்கு அனுப்பிவிடலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், நீங்கள் பேசுங்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முதல் துணை மதிப்பீட்டில் பேச வாய்ப்பளித்தமைக்கு. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வெங்கடேசன், நீங்கள் அதிக நேரம் பேசிவிட்டீர்கள். ஆகையால், நேரம் இல்லை. நிறைய பேர் பேச வேண்டும். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள். (குறுக்கீடு) எழுதிக் கொடுத்துவிடுங்கள். நான் பதிவு செய்யச் சொல்கிறேன்.

2013 அக்டோபர் 28]

திரு. எல். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிப் பிரச்சினைகளை எழுதிக் கொடுத்துவிடுகிறேன்.

தொகுதிப் பிரச்சினைகள்: நான் இந்தச் சட்டமன்றத்திற்கு வந்து, 8-6-2011 அன்று எனது கன்னிப் பேச்சிலேயே என் தொகுதி சம்பந்தமாக சில முக்கிய கோரிக்கைகளை வைத்தேன். அதில் முதலாவதும் மிக, மிக முக்கியமானதும் திருக்கோயிலூர் பேருந்து நிலையப் பிரச்சினையாகும். திருக்கோயிலூருக்குப் புதிய பேருந்து நிலையம் வேண்டும் என்பது இலட்சக்கணக்கான மக்களின் எதிர்பார்ப்பு. தற்போது பேருந்து நிலையம் வெறும் 42 சென்ட் இடத்திலே, தினசரி மக்கள், போக்குவரத்து நெரிசலிலே அல்லல்படுகின்ற நிலையிலே உள்ள சூழ்நிலையை அரசு கருத்தில் கொண்டு பேருந்து நிலைய விரிவாக்கப் பணியை உடனே மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட மணலூர்பேட்டையில் தென்பெண்ணையாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் வேண்டும் என்பது அந்தப் பகுதி மக்களின் நீண்ட, நெடுங்கால கோரிக்கையாகும். அதிகாரிகளால் முன்மொழிவும் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. எனவே, வருகின்ற நிதியாண்டிலாவது தென் பெண்ணையாற்றின் குறுக்கே மணலூர்பேட்டையில் ஓர் உயர்மட்டப் பாலம் அமைக்க நெடுஞ்சாலைத் துறை முன்வர வேண்டும். அதேபோன்று, முஸ்குந்தா ஆற்றின் குறுக்கே வடபொன்பரப்பி-அருளம்பாடி இடையில் ஒரு பாலம் அமைக்க வேண்டும்.

வாணாபுரத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது திருக்கோயிலூர் தொகுதிக்குட்பட்ட திருவெண்ணெய்நல்லூர்-திருக்கோயிலூர் சாலை, அரகண்டநல்லூர்-ஆற்காடு-ஆயந்தூர் சாலை, திருக்கோயிலூர்-தேவனூர்-வீரபாண்டி-வேட்டவலம் சாலை, வீரபாண்டி-ஓட்டம்பட்டு-கண்டாச்சிபுரம் சாலை, திருக்கோயிலூரிலிருந்து-பில்ராம்பட்டு வழியாக கண்டாச்சிபுரம் செல்லும் சாலை என

[திரு. எல். வெங்கடேசன்] [2013 அக்டோபர் 28

பல முக்கியச் சாலைகளில் ஏற்பட்டுள்ள பழுதால் மக்கள் பயணம் செய்ய மிகவும் சிரமப்படுகின்றார்கள். அரசு இதில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவெண்ணைநல்லூரில் 1993 ஆம் ஆண்டு கட்டிய நூலகம் மிகவும் பழுதடைந்து, வாசகர்கள் பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. 3,000 வாசகர்களுக்கும்மேல் உள்ள இந்த நூலகத்திற்கும், திருக்கோயிலூர் மற்றும் மணலூர்பேட்டையிலும் இதேபோன்று உள்ள பெரிய நூலகங்களுக்கும் கட்டட வசதி தேவைப்படுகின்றது. அதையும் அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனது தொகுதியிலிருந்து செஞ்சி-அனந்தபுரம், சின்னசேலம்-ரிஷிவந்தியம், கள்ளக்குறிச்சி, வேட்டவலம்-கீழ்பெண்ணாத்தூர் போன்ற கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் அமல்படுத்தப்பட்டாலும், திருக்கோயிலூர், ரிஷிவந்தியம் மற்றும் முகையூர் ஒன்றியத்தின் மேற்குப் பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ளது. எனவே, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை விரிவாக்கம் செய்து அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர் கிடைப்பதை அரசு உறுதி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மிகவும் பழமை வாய்ந்த திருக்கோயிலூரை புராதன நகரமாகவும், சுற்றுலா நகரமாகவும் தமிழக அரசு அறிவித்துள்ளது மகிழ்ச்சியளிக்கக் கூடியதாகும். அதே வேளையில் நகரின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், நகரை அழகுபடுத்தவும் நிதி வேண்டுமென மதிப்பீடு செய்யப்பட்டு முன்மொழிவு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதை அரசு பரிசீலிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

விழுப்புரத்தில் கடந்த 22-10-2013 அன்று வியாபாரிகள் ஒருங்கிணைந்து முழு கடையடைப்பை வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்கின்றார்கள். இதன் பின்னணியில் உள்ள விஷயம் என்னவென்றால், சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கும், வியாபாரிகளுக்கும் ஏற்பட்ட வாய்த் தகராறு கைகலப்பாக மாறி முழு கடையடைப்பு வரை சென்றுவிட்டது. இதுபோன்று சிறு, சிறு பிரச்சினைகள் இவர்களுக்குள் அவ்வப்போது வந்தாலும் நடுவில் இருப்பவர்கள் பேசி சமாதானம் செய்து வைப்பது உண்டு. ஆனால், தற்போதைய சம்பவத்தால் தீபாவளித் திருநாளின்போது கடைகள் திறந்திருக்குமா, இல்லையா என்ற அச்சம் மக்களுக்கு உள்ளது. இவ்வளவு பெரிய பிரச்சினையில் மாவட்ட ஆட்சி

2013 அக்டோபர் 28] [திரு. எல். வெங்கடேசன்]

நிருவாகமும், மாவட்ட காவல் துறையும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, அரசு இந்தப் பிரச்சினையில் தலையிட்டு சுமுகத் தீர்வை ஏற்படுத்த வேண்டும். வியாபாரிகள், அரசு வருமானம் ஈட்டுகின்ற வரியைச் செலுத்துவர்கள், சுமை தூக்கும் தொழிலாளர்கள் வியாபாரிகளுக்குத் துணையாக நிற்க வேண்டியவர்கள், ஒரு சிலர் உணர்ச்சிவசப்பட்டதால் ஏற்பட்ட இந்த நிலையைச் சரிசெய்து சுமுகத் தீர்வு ஏற்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

விழுப்புரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து கள்ளக்குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013-2014 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீட்டில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, தமிழகத்தைக் கடந்த ஆண்டு இயற்கை மழை பொய்த்ததால், தஞ்சை மாவட்டம் மட்டுமல்லாது அனைத்து மாவட்டங்களுக்கும் வறட்சி நிவாரணம் கொடுத்து, விவசாயிகளுக்குப் பெருமை சேர்த்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், தஞ்சை மாவட்டத்தில் மட்டும்தான் பாதிப்புள்ளது என்று இருந்தார்கள். ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும், பாதிப்படைந்த அனைத்து விவசாயிகளுக்குமே உதவியிருக்கிறார்கள் என்பது பாராட்டுதலுக்குரியது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுடைய கல்வித் தரத்தை மேம்படுத்துகின்ற வகையிலே, தனியார் கல்லூரியில் படிக்கின்றவர்களுக்கும் உதவித் தொகையை விரிவுபடுத்தி, ரூபாய் 549.11 கோடியை ஒதுக்கியதற்கும், பள்ளி மாணவர்களுக்குத் தடையில்லா கல்வி கிடைக்க வேண்டுமென்பதற்காக, ரூபாய் 21.11 கோடியை ஒதுக்கியதற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

[திரு. பி.வி. கதிரவன்] [2013 அக்டோபர் 28

அதுமட்டுமல்ல, நமது மாமன்ற உறுப்பினர் நெசவாளர்களுக்கு சூரிய சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டதற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவர்களுக்கும் 260 கோடி ரூபாயை பசுமை வீடுகள் கட்டித்தருவதற்கு ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடுமட்டுமல்ல, காவல் துறை, தீயணைப்புத் துறையிலே பணிபுரிவோர் அரசு கட்டடங்களிலே குடியிருந்துவிட்டு திருப்பி அவர்கள் காலி செய்ய வேண்டுமென்ற நிலையை மாற்றி, 'உங்கள் சொந்த இல்லம்' என்ற ஒரு புதிய திட்டத்தை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டுவந்து, அதன்மூலம் அவர்கள் வசிக்கும் வீட்டை அவர்களுக்கே உரிமையாக்குகின்ற ஒரு திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். அதற்கும் 284.20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது பாராட்டக்கூடியது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

விவசாயிகளுக்கு சூரிய சக்திமூலம் இயங்கும் பம்ப்செட் வழங்கும் திட்டம். உண்மையிலேயே மின்வெட்டுக் காலத்திலே விவசாயிகள் மிகவும் பாதிப்புக்குள்ளானார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் திட்டத்தை உருவாக்கி, அதற்கு 68 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது உண்மையிலேயே பெருமைப்படக்கூடிய ஒன்று என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, இலங்கையிலே காமன்வெல்த் மாநாடு நடைபெற இருக்கிறது என்பதால் 'இந்தியப் பேரரசின் சார்பில் யாரும் கலந்து கொள்ளக்கூடாது, புறக்கணிக்க வேண்டும்' என்று தமிழர்களின் சார்பில், இந்தச் சட்டமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைத்தவுடனேயே (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசு 'வெளியுறவுத் துறை அமைச்சர் கலந்து கொள்வார்' என்று சொல்கிறது. மத்திய மந்திரி அவர்கள் அதற்கு உறுதுணையாகப் பேசிவருவது உண்மையிலேயே கண்டிக்கத்தக்கது. தமிழக மக்களுடைய உணர்வைப் புரிந்துகொள்ளாமல், எட்டு கோடி தமிழர்களுடைய உணர்வைப் புரிந்து கொள்ளாமல்,

2013 அக்டோபர் 28] [திரு. பி.வி. கதிரவன்]

இலங்கையில் வாழ்கின்ற இரண்டு கோடி மக்களுடைய உணர்வை மட்டும் மதிக்கின்ற காங்கிரஸ் அரசை, இவ்வளவுதூரம் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியும்கூட சரியாக நடந்துகொள்ளாததற்கு பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள், தமிழக அரசுக்கு தகுந்த பதிலை அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, இந்திய கம்யூனிஸ்டு கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியும் தமிழகத்தில் இருக்கின்ற சிறு, குறு விவசாயிகள் மின்வெட்டால் பாதிக்கப்படுகிறார்கள். அதை முழுமையாக நீக்க வேண்டுமென்று இந்த அவையிலே கோரிக்கை வைத்தபோது, அதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஒவ்வொரு முறையும், ஒவ்வொரு காலகட்டத்திலும், தமிழகத்தில் நடைமுறையில் இருக்கின்ற மின்வெட்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எப்படி இருந்தது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னால், எப்படி படிப்படியாக மின்வெட்டு குறைந்து இருக்கிறது, அதற்கு என்னென்ன திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று தெள்ளத் தெளிவாக, அதாவது statistical முறைப்படி அறிவித்திருக்கிறார்கள். ஆனால், பத்திரிகையில் பார்த்தால், அதையெல்லாம் அப்படியே மாற்றி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்ன கருத்துக்கு எதிராக கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு நமது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள் இங்கே ஒரு கேள்வியை எழுப்பினார்கள். கடந்த 25 ஆம் தேதி இதே அவையில் தோழமைக் கட்சிகளான கம்யூனிஸ்டு கட்சிகள் கொண்டு வந்த சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது பேசுகிறபோது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இதுவரையில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்ற வகையில், தடையில்லா, மின்வெட்டே இல்லாத மாநிலமாக உருவாக்கிக் காட்டுவேன் என்று சூளுரை ஏற்று, மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக கடந்த இரண்டரை ஆண்டுகாலமாக புரட்சித்

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2013 அக்டோபர் 28

தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுத்த நடவடிக்கைகளையெல்லாம் இங்கே புள்ளிவிவர ஆதாரங்களுடன், விளக்கமாகவும், விரிவாகவும், சிறப்பாகவும், நாட்டு மக்கள் அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக அம்மா அவர்கள் சிறப்பான ஒரு பதிலுரையை வழங்கினார்கள். இதைப் பொறுக்க முடியாத முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் உடனே ஆற்றாமையினால் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கையைப் படித்துப் பார்த்தால், அவர் பாணியிலேயே பதில் சொல்வதாக இருந்தால் "பார்த்தேன், படித்தேன், ரசித்தேன்" என்றுதான் சொல்ல முடியும். ஏனென்றால், அதில் எந்த விஷயமும் இல்லை. கற்பனையாக, அவருக்கே அவர் சொல்லுகின்ற பதிலைப் போல, அவராகவே கற்பனை செய்து, அந்த அறிக்கையைகூட அவர் தயாரித்திருப்பார் என்று நான் நம்பவில்லை. யாரோ எழுதிக் கொடுத்ததை, அப்படியே அவர் பெயரிலே அறிக்கையாக வெளியிட்டிருக்கிறார் என்றுதான் நான் கருதுகிறேன். ஏனென்றால், அதில் துளிகூட உண்மை இல்லை. அந்த அறிக்கையில், அவர், ஏறத்தாழ 10, 15 வினாக்களைத் தொடுத்திருக்கிறார். அந்த வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் இந்த நேரத்தில் பதில் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். எனவே, அதற்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், 10 நிமிடங்கள் அல்லது 15 நிமிடங்கள் ஒதுக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொண்டு வந்தால், அதற்கு அந்தத் துறையினுடைய அமைச்சர்தான் பதில் சொல்ல வேண்டும் என்று அவர் மேதாவித்தனமாக முதல் குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்.

இன்றைக்கு மின்சாரம் என்பது மக்களுடைய வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்துவிட்ட, மிக அத்தியாவசியமான தேவை. கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினால் உற்பத்திக்கும், தேவைக்கும் இடையே ஏற்பட்டுவிட்ட மிகப் பெரிய இடைவெளியின் காரணமாக, மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு பொறுப்பேற்றதற்குப் பின்பு, கடுமையான மின்வெட்டுப் பிரச்சினையைச் சந்திக்க வேண்டிய ஒரு துரதிருஷ்டமான சூழ்நிலை ஏற்பட்டது. இது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின்மீது தி.மு.க.-வினால் திணிக்கப்பட்டது. அந்தச்

2013 அக்டோபர் 28] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

சூழ்நிலையை எதிர்கொண்டு, இன்றைக்கு வெற்றிகரமாக மின்வெட்டுப் பிரச்சினையைத் தீர்க்கின்ற நிலையிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இருக்கின்றது. மாண்புமிகு அம்மா அவர்கள், இந்த நிதியாண்டிற்குள், மின்வெட்டே இல்லாத மாநிலமாக தமிழகத்தை உருவாக்குவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம் என்பதை இங்கே தெளிவாகக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் குறிப்பிட்ட இந்தச் செய்தி மிக முக்கியமான செய்தி. மின்சாரப் பிரச்சினை என்பதாலும், மக்களுடைய அத்தியாவசியத் தேவை என்பதாலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகளைப் பற்றி மக்கள் முழுமையாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற காரணத்திற்காகவும்தான் மாண்புமிகு அம்மா அவர்களே இங்கே பதிலுரையைக் கொடுத்தார்கள். ஏனெனில், அம்மா அவர்கள் சொன்னால்தான், 100 சதவிகிதம் மக்களிடம் போய்ச் சேரும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மக்களிடம் போய்ச் சேர வேண்டும் என்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் பதில் சொன்னார்கள். இது இத்துறைக்குக் கிடைத்த மரியாதை; மக்களுக்குக் கிடைத்திருக்கின்ற மிகப் பெரிய பயன். இதைப் பாராட்டுவதற்கு மனம் இல்லாமல், குறை சொல்கிறார்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தளவிலே, மின்சாரத் துறை என்றல்ல, தமிழ்நாடு அரசிலே இயங்கிக் கொண்டிருக்கின்ற அத்தனைத் துறைகளினுடைய விவரங்களையும் தன்னுடைய விரல் நுனியில் வைத்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) எந்த நேரத்திலும், எந்தத் துறையைப் பற்றி என்ன கேள்வி கேட்டாலும் மாண்புமிகு அம்மா அவர்களால் முழுமையாக, விளக்கமாகப் பதில் சொல்ல முடியும். அந்த அளவிற்கு எல்லா விவரங்களையும் விரல் நுனியில் வைத்திருக்கிறார் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்ற முறை முதலமைச்சராக இருந்தபோது, இங்கே இருந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்களே, "அம்மா அவர்களைப் பொறுத்தளவிலே, முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தளவிலே, எல்லா விவரங்களையும் தன்னுடைய விரல் நுனியில் வைத்திருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) அதில், எங்களுக்கு எந்தவொரு மாற்றுக் கருத்தும் இல்லை" என்று இங்கே ஒப்புதல் வாக்குமூலமே கொடுத்திருக்கிறார். அவர், இப்பொழுது இங்கே இருந்தால் நன்றாக இருந்திருக்கும். நான் பேசுவதற்கு முன்னால்—

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2013 அக்டோபர் 28

ஏதாவது காரணத்தைச் சொல்லி, வெளிநடப்பு செய்வதற்கு அவர்கள் திட்டமிட்டு வந்திருந்தாலும்கூட, அதை ஒத்தி வைத்துவிட்டு, நான் பேசுவதை சிறிது நேரம் இருந்து கேளுங்கள் என்று சொல்லலாம் என்று நினைத்தேன். ஆனால், அவர், நான் பேசுவதற்கு முன்னாலே அவையைவிட்டுச் சென்றுவிட்டார். மாண்புமிகு அம்மா அவர்கள் எல்லா விவரங்களையும் விரல் நுனியில் வைத்திருப்பதால், அவர்களால் எல்லாவற்றுக்கும் பதிலைச் சொல்ல முடிகிறது; எல்லாத் துறைகளைப் பற்றியும் வினா எழுப்பினால் அவர்களால் பதில் சொல்ல முடிகிறது. ஆனால், முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்களுக்கு, அவருடைய துறையிலே என்ன நடந்தது என்பது தெரியவில்லை. மற்ற துறைகளைப் பற்றி அவருக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்? இன்னும் சொல்லப்போனால், அவருடைய வீட்டிலே என்ன நடக்கிறது என்பது அவருக்குத் தெரியுமா, தெரியாதா என்பது தெரியவில்லை. அது அவருடைய சொந்த விஷயம். கட்சியிலே என்ன நடக்கிறது என்பது அவருக்குத் தெரியுமா, தெரியாதா என்பது தெரியவில்லை. அது அவருடைய சொந்த விஷயம். ஆனால், ஆட்சியிலே என்ன நடந்தது என்று அவருக்குத் தெரியுமா என்பது சந்தேகம்தான். ஏனென்று சொன்னால், ஐந்தாண்டு காலம் வீணாகப் பொழுதைக் கழித்துவிட்டு, வெட்டிக் குற்றச்சாட்டுகளை இன்றைக்கு வெளியிட்டிருக்கிறார்.

அடுத்தபடியாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஏழு திட்டங்களும் தி.மு.க. ஆட்சியிலே தொடங்கப்பட்டவை என்று ஒரு தவறான தகவலைத் தெரிவித்திருக்கிறார். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு நிறைவேற்றியிருக்கின்ற 7 திட்டங்களின் மூலமாக கிடைக்கின்ற மின்சாரம் பற்றி விவரமாகக் குறிப்பிட்டுச் சொன்னார். அதே விவரங்களை மீண்டும் சொல்வதற்கு நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. அந்த 7 திட்டங்களிலே ஒன்றைக் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அது அலகு-1, அலகு-2 மற்றும் அலகு-3 ஒவ்வொன்றும் 500 மெகா வாட் திறன் கொண்ட வல்லூர் கூட்டு மின் திட்டம். இத்திட்டத்திற்காக தேசிய அனல் மின் நிலையம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் இடையே கூட்டு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. முதன் முதலாக அந்தத் திட்டம் கடந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் உருவாக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) வல்லூர் கூட்டு

2013 அக்டோபர் 28] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

மின் திட்டத்திற்காக 12-7-2002 இல் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டது. 12-7-2002 இல் நடைபெற்றது யார் ஆட்சி? மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி. அம்மா அவர்களுடைய ஆட்சியில் போடப்பட்ட அந்தத் திட்டங்களை, அவர்கள் எங்களுடைய ஆட்சிக் காலத்திலே போடப்பட்ட திட்டங்கள் என்று தவறான தகவலைச் சொல்லி மக்களைக் குழப்பப் பார்க்கிறார்கள்.

பிற்பகல் 12-55

அடுத்தபடியாக, தூத்துக்குடி. என்.எல்.சி. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனமும், தமிழ்நாடு மின்சார வாரியமும் இணைந்து ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். அந்தத் திட்டமும் நாங்கள் கொண்டுவந்தது என்று முன்னாள் முதலமைச்சர் ஒரு தவறான உண்மைக்கு மாறான செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வார்த்தையை சரியாகச் சொல்ல முடியாத காரணத்தினால், அதைத் தவறாக குறிப்பிட்டிருக்கிறார். தூத்துக்குடி கூட்டு மின் திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் 9-6-2003 இல் போடப்பட்டது. இது யார் ஆட்சிக் காலம்? அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலம். இந்தத் திட்டங்கள் அத்தனையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் உருவாக்கப்பட்டவை. அதற்குப் பின்பு ஆட்சி மாற்றம் ஏற்பட்டு அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்பு, அதே திட்டங்களைத் தொடர்ந்து நடத்தினார்கள். இல்லையென்று சொல்லவில்லை. இருந்தாலும்கூட, இந்தத் திட்டங்களின்மூலம் அவருடைய ஆட்சிக் காலத்திலேயே மின்சார உற்பத்தியைத் தொடங்கியிருக்க வேண்டும். 2011-லேயே வல்லூரில் மின் உற்பத்தியைத் தொடங்கியிருக்க வேண்டும். ஆனால், மின் உற்பத்தி தொடங்கப்பட்டதா? அதைத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் குறிப்பிட்டார்கள். நாங்கள் தொடங்கிய திட்டங்கள். நீங்கள் அவற்றை எடுத்துச் செய்தீர்கள். ஆனால், அதையும் உங்களுடைய ஆட்சிக் காலத்திலே முடிக்க முடியவில்லை. நாங்கள் தொடங்கிய திட்டங்களை, நானே மீண்டும் முதலமைச்சராக வந்து, இப்பொழுது (மேசையைத் தட்டும் ஒலி) நிறைவேற்றியிருக்கிறேன் என்றுதான் எடுத்துச் சொன்னார்கள். இதை குறை கூறுகிறார்கள்.

அதற்கடுத்தபடியாக, தன்னுடைய அறியாமையை வெளிப்படுத்திக்கொள்ளும்விதமாக நிருவாக நடைமுறையே தனக்குத் தெரியவில்லையே என்பதைப் பட்டவர்த்தனமாக

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2013 அக்டோபர் 28

ஒப்புக்கொள்கிற வகையிலே அடுத்த ஒரு வினாவைத் தொடுத்திருக்கிறார். இந்த அரசு நீண்ட கால மின் கொள்முதலிலேதான் கவனம் செலுத்துகிறது என்ற குற்றச்சாட்டைச் சுமத்துகிறார். இவர் கேட்கிறார், நீண்டகால மின் கொள்முதல் செய்தால் இங்கே மின் வழித்தடம் இல்லையென்று நீங்கள் தானே சொன்னீர்கள்; அப்படி சொல்கின்றபொழுது இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற புதிய வழித்தடங்கள் 2014-லேதான் முடிவுபெறுமென்று சொல்கிறீர்கள்; அப்படியானால், 2014-ல் முடிவு பெறுகிற திட்டத்திற்கு இப்போது ஏன் கொள்முதல் செய்தீர்கள்? மிகப் பெரிய புத்திசாலித்தனமான கேள்வி. இதைப் பற்றி ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டமன்றத்திலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு மின் தடத்திற்கு விண்ணப்பிக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு கொள்முதல் ஒப்பந்தத்தோடு விண்ணப்பித்தால்தான் மின் வழித்தடத்தையே பெற முடியும். ஆகவேதான், வழித்தடம் பெற வேண்டுமென்று சொன்னால், வெளி மாநிலங்களில் இருந்து கொள்முதல் செய்து கொண்டுவர வேண்டுமென்று சொன்னால், அந்த ஒப்பந்தங்களை-PPA கொள்முதல் ஒப்பந்தங்களோடு விண்ணப்பித்தால்தான் அவர்களுக்கு வழித்தடம் கிடைக்கும். இந்த நடைமுறைகூட ஐந்து முறை முதலமைச்சராக இருந்த கருணாநிதி அவர்களுக்குத் தெரியவில்லை. அதற்காகத்தான் இப்பொழுது கொள்முதல் செய்து, ஒப்பந்தம் இறுதியாக்கப்பட்டு அவர்களுக்கு வழித்தடங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு வேண்டிய அனைத்து-letter of indent-ஒப்புதல் இசைவுக் கடிதங்களெல்லாம் கொடுத்து, அவர்கள் விண்ணப்பித்திருக்கிறார்கள். ஒப்பந்தத்தோடு போனால்தான் வழித்தடம் பெற முடியும் என்பதால் இன்றைக்கு செய்து முடித்திருக்கிறோம். 2014-ல், புதிய வழித்தடங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் மின்சாரம் முழுவதும் நமக்குக் கிடைக்கவிருக்கிறது.

மற்றொன்று, 15 ஆண்டு காலத்திற்கு மின்சாரம் கொள்முதல் செய்வதால் விலை குறைவாகக் கிடைக்கும். கடந்த தி.மு.க. ஆட்சியிலேகூட, நீண்ட காலக் கொள்முதல் செய்யாததன் விளைவாகத்தான் கொள்முதலிலே மிகப் பெரிய அளவில் நமக்குக் கூடுதல் செலவினம் ஏற்பட்டு, மின்சார வாரியத்திற்கு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் இழப்பை ஏற்படுத்திவிட்டு, மின்சார வாரியத்தையே நிதிநிலையிலே பாழடையச் செய்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். அதற்குக் காரணம் அன்றைக்கு நீண்டகால

2013 அக்டோபர் 28] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

கொள்முதல் செய்யக்கூடிய, case-1 bidding என்று சொல்லக்கூடிய கொள்முதலைச் செய்யத் தவறினார்கள். அன்றைக்கு அவர்கள் செய்யத் தவறியதை, அவர்கள் செய்யத் தவறியதால் ஏற்பட்ட பல்லாயிரம் கோடி ரூபாய் நஷ்டத்தை, இன்றைக்கு ஈடுகட்டுகின்ற வகையிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தீர்க்கதரிசனத்தோடு, வருங்காலத் தேவையை உணர்ந்து, இன்றைக்கு 15 ஆண்டுக் காலத்திற்குத் தேவையான மின்சாரத்தைக் கொள்முதல் செய்திருக்கிறார்கள். அந்த வகையில் ஏறத்தாழ 3,200 மெகா வாட் அளவிற்கு மேல் மின்சாரம் இன்றைக்குக் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக 15 ஆண்டுக் காலத்திற்குப் பிரச்சினை இருக்காது.

பிற்பகல் 1-00

ஆகவே, நீண்ட காலக் கொள்முதல் என்று வருகின்றபோது, நமக்கு அடக்க விலையும் மிகக் குறைவாகக் கிடைக்கும். ஆக, அந்த வகையில், கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அவர்கள் அன்றைக்குக் கொள்முதலுக்காக சராசரியாக ஒரு யூனிட்டிற்காக செலவு செய்த தொகை 5 ரூபாய் 65 பைசா. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இப்போது ஒரு யூனிட்டிற்காக செலவிடப்படும் தொகை 5 ரூபாய் 35 காசு. இப்படிப்பட்ட நிலையில், அவர்கள் 5 வருடத்திற்கு முன்பாக அதற்காகக் கூடுதலாகச் செலவு செய்தார்கள். ஆனால், 5 ஆண்டுகளுக்குப் பிறகு அதே ஒரு யூனிட் மின்சாரத்தைக் கொள்முதல் செய்வதற்காக நாங்கள் குறைவாகச் செலவு செய்கிறோம். இதற்கிடையே inflation ஏற்பட்டிருக்கின்றது. அந்தப் பணவீக்கத்திற்கிடையில், இன்றைக்கு இந்த 5 ஆண்டுக் காலத்திலே ஏற்பட்டிருக்கிற ரூபாயின் மதிப்பைப் பார்க்கின்றபோது, பாதிக்கும் மேல், 50 சதவிகிதத்திற்கும் மேல், அவர்கள் கொள்முதலுக்காகச் செலவு செய்திருக்கிறார்கள்; கூடுதல் விலை கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட தவறுகளை மாண்புமிகு அம்மா அவர்கள் களைந்திருக்கிறார்கள். அதைப் பாராட்டுவதற்கு மனமில்லாமல், நீண்ட கால அடிப்படையில் மின்சாரத்தைக் கொள்முதல் செய்வதிலே அவர் குறை கண்டிருக்கிறார்.

இன்னொன்று; ஒரு பொறுப்பு வாய்ந்த முதலமைச்சராக இருந்திருந்தால், இந்தியாவிலே எந்தவொரு முதலமைச்சராக இருந்தாலும், மின்சாரத்தை நீண்ட கால அடிப்படையில்

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2013 அக்டோபர் 28

கொள்முதல் செய்ய வாய்ப்புக் கிடைத்தால், அதைத் தவற விடமாட்டார்கள் கருணாநிதியைத் தவிர. ஏனென்றால், அவருக்கு அந்தப் பிரச்சினை பற்றியே தெரியாது. இன்றைக்குக் கொள்முதல் செய்வதிலே மாநிலத்திற்கு மாநிலம் போட்டி நிலவுகிறது. யார் வழித்தடத்தைப் பெறுவதிலே முந்துகிறார்களோ, அவர்களுக்குத்தான் அது கிடைக்கும். ஆகவே, தி.மு.க. தவறவிட்ட அந்த வாய்ப்பை, நாம் முந்தி நின்று சரிசெய்ய வேண்டுமென்பதற்காக, மாண்புமிகு அம்மா அவர்கள் தீர்க்கதரிசனத்தோடு அடிக்கடி ஆய்வுகளை நடத்தினார்கள். அவர்கள் கொடுத்த ஆலோசனையின்பேரில், உத்தரவின்பேரில், இன்றைக்கு அந்தக் கொள்முதல் ஒப்பந்தம் வெற்றிகரமாக முடிக்கப்பட்டு, தமிழகத்திற்கு ஒரு பாதுகாப்பான நிலை இன்றைக்கு மின் கொள்முதலில் உருவாக்கப்பட்டு, அதன்மூலம் மின்சாரப் பிரச்சினையே இல்லாத ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறார்கள். அதைக் குறை சொல்கிறார். காரணம், நம்முடைய ஆட்சியில் இதையெல்லாம் அதிகாரிகள் சொல்லாமல் விட்டுவிட்டார்களே; இப்படிப்பட்ட ஆலோசனைகளெல்லாம் நமக்குக் கிடைக்காமல் போய்விட்டதே என்கின்ற ஆதங்கம்.

அடுத்தபடியாக, "நிர்வாகத் திறமையற்ற ஓர் அரசு, தி.மு.க. அரசு என்று நாங்கள் சொன்னதற்கு" எங்களைக் குற்றம் சாட்டியிருக்கிறார். "யார் நிருவாகத் திறமையற்றவர்? நாங்களா? அவரா?" என்று கேட்டு, சில காரணங்களை மேற்கோள் காட்டியிருக்கிறார். அதிலே மேதாவித்தனமாக ஒன்றைச் சொல்கிறார். இப்போது இருக்கின்ற அதிகாரிகள்தான், அன்றைக்கு எங்களிடம் அதிகாரிகளாக இருந்தார்கள் என்று சொல்லி, அதிகாரிகள்மீது பழியைத் தூக்கிப் போட்டு தப்பிக்கப் பார்க்கிறார். இதற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அரசு அதிகாரிகள் எல்லா ஆட்சியிலுமே இருப்பார்கள்; எல்லா ஆட்சிக்கும் அவர்கள் பொதுவானவர்கள்தான். ஆனால், அந்த அதிகாரிகளை எப்படி இயக்குகிறார்கள் என்பதைப் பொறுத்துத்தான் ஓர் அரசினுடைய வெற்றி, தோல்வி அமையும். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களை யார் இயக்குகிறார்கள்? அந்த ஆட்சிக்குத் தலைமையேற்கின்ற முதலமைச்சர் அவர்கள், எப்படி அந்த அதிகாரிகளைப் பயன்படுத்துகிறார்களோ, அதைப் பொறுத்துத்தான், அந்த ஆட்சி சிறப்பாக அமையும். அந்த வகையிலே, அன்றைக்கிருந்த முதலமைச்சர், எவ்வளவு திறமையான அதிகாரிகள் இருந்தாலும்,

2013 அக்டோபர் 28] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

அந்த அதிகாரிகளை முழுமையாக, சுதந்திரமாகச் செயல்பட விடாமல், அவர்கள் இஷ்டத்திற்கு அதிகாரிகளை வளைத்துவிட்டதுதான் இந்த நிலைமைக்குக் காரணம். இதற்கு அதிகாரிகளைக் குறை சொல்ல முடியாது. அந்த ஆட்சியைத் தலைமையேற்று, ஆட்சிச் சக்கரத்தை நடத்திச் செல்பவருடைய குறைபாடுதான் இது. ஒரு டிரைவர் இருக்கிறார், அவர் வண்டி ஓட்டிச் செல்கிறார் என்றால், அவர் எங்கே வேண்டுமானாலும் ஓட்டுவார். டிரைவர் எப்போதுமே இருப்பார். ஆனால், அதிலே உட்கார்ந்திருக்கிற ஓனர், எந்த திசையில் போக வேண்டுமென்று சொல்கிறாரோ, அந்தத் திசையில் அவர் ஓட்டுவார். எந்தப் பக்கத்திற்குப் போக வேண்டுமென்று அந்த முதலாளி சொல்கிறாரோ, அதற்கேற்ப அந்தத் திசையை நோக்கி அவர் வண்டியை ஓட்டிச் செல்வார். அதைப்போல, இன்றைக்கும் அதே ஓட்டுநர்தான் இருக்கிறார். எப்படி அந்த முதலாளி சொல்வதைக் கேட்டு ஓட்டுநர் வண்டியை ஓட்டினாரோ, அதைப்போல, இந்த ஆட்சியினுடைய தலைமை சொல்வதைக் கேட்டு வண்டியை ஓட்டுகிறார். இந்த அரசு, அந்த அதிகாரிகளை வைத்துக்கொண்டு, அவர்களுடைய திறமைகளை முழுமையாகப் பயன்படுத்துகிறது. அதனால் நல்ல விளைவுகள் ஏற்பட்டு, நல்ல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. திறமையான அதிகாரிகளாக இருந்தாலும், அவர்களைத் தவறாகப் பயன்படுத்தினால், எந்த அரசும் வெற்றி பெறமுடியாது. ஆகவே, அதிகாரிகளைச் சொல்லித் தப்பித்துக்கொள்வது சிறந்ததொரு நடைமுறை அல்ல. அது ஒரு முன்னாள் முதலமைச்சருக்கு அழகும் அல்ல என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, JICA திட்டத்தை அறிவித்தார்கள். அதாவது, Japan International Co-operation Agency. அந்தத் திட்டத்தின்மூலமாக, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவனத்தின் முகமையினுடைய நிதியாதாரத்தோடு, 5 ஆயிரம் கோடி ரூபாயில் திட்டத்தை அறிவித்தார்கள். ஆனால், அதைப் பற்றி ஒன்றும் இன்றுவரை நடைபெறவில்லை என்று அடுத்த ஒரு உண்மைக்கு மாறான தகவலைச் சொல்கிறார். ஐந்தாயிரம் கோடிக்கான இந்தத் திட்டத்தில், ஏறத்தாழ, 5 துணை மின் நிலையங்கள் இப்பொழுது இறுதி செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகளெல்லாம் கோரப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு, அவற்றில் உற்பத்தி தொடங்கவிருக்கின்றன. இதைப்போல, 400

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2013 அக்டோபர் 28

மெகா வாட் திறன் கொண்ட 2 துணை மின் நிலையங்கள் ஏற்படுத்தும் பணிகளும் முடிவடைந்துவிட்டன. 230 மெகா வாட் திறன் கொண்ட 5 துணை மின் நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள துணை மின் நிலையங்களை அமைப்பதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, ஆய்வில் உள்ளன. ஆகவே, 5,000 கோடி ரூபாயில், ஏறத்தாழ 3,572 கோடி ரூபாய்க்கான திட்டங்கள் அனைத்தும் இப்போது முடிவுறும் நிலையில் இருக்கின்றன என்பதையும், முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-05

JICA திட்டத்தைப் பற்றிச் சொல்லவேண்டுமென்று சொன்னால், நிதியுதவி வழங்குகின்ற ஜப்பான் நாட்டு கூட்டுறவு நிறுவன அதிகாரிகளே, தமிழ்நாட்டில்தான் இந்தத் திட்டங்கள் மிகச் சிறப்பாகவும், மிக விரைவாகவும் செயல்படுகின்றன என்று பாராட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மற்றொன்று, இந்த JICA திட்டத்தை அவர்கள் ஒப்பந்தம் போடுகின்றபோது 2017 ஆம் ஆண்டுக்குள் முடித்தால் போதும் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அதுவரைகூட காத்திராமல், அவ்வளவு வேகமாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செயல்பட்டு, அந்தத் திட்டத்தை நிறைவேற்றிவருகிறது. ஆகவே, இதிலும் இவர் சொன்ன குற்றச்சாட்டுகள் உண்மையல்ல என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சூரிய சக்தி மின் கொள்கையைப் பற்றி ஒரு குறை சொல்லியிருக்கிறார். 'சூரிய சக்தி மின் கொள்கை 2012'-ஐ அறிவித்தார்கள். அது அறிவிப்போடு நின்றுவிட்டது, ஒன்றும் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் சூரிய சக்திக்காக 3,000 மெகா வாட் மின் உற்பத்தி செய்யப்படும் என்று சொல்லி, ஆண்டுக்கு 1,000 மெகா வாட் வீதம் மின் உற்பத்தி செய்யப்படும் என்று அம்மா அவர்கள் அறிவித்தார்கள். அதில், முதல் பகுதியாக 1,000 மெகா வாட் உற்பத்திக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. 698 மெகா வாட் மின் உற்பத்திக்கான டெண்டர்கள் வரப்பெற்றன. அத்தனையும் அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டு, 698 மெகா வாட் மின் உற்பத்திக்கான இசைவுக் கடிதம், ஒப்பந்தப்புள்ளிகளுக்கான விலை நிர்ணயப்

2013 அக்டோபர் 28] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

பட்டியல் முடிக்கப்பெற்று, 6 ரூபாய் 48 பைசா வீதம், போட்டி ஒப்பந்தப்புள்ளியில், இந்தியா முழுவதிலுமிருந்து enrolment பிரகாரம் வந்து கலந்துகொண்டு, 698 மெகா வாட் மின்சாரம் ஆண்டுக்கு 5 சதவீத வளர்ச்சி (Escalation) என்ற வீதத்தில் கொள்முதல் செய்யப்பட்டு, அதற்கான-Letter of Indent—இசைவுக் கடிதமும் வழங்கப்பட்டு, அதற்குப் பிறகு, ஒப்பந்தப்புள்ளியிலே வெற்றி பெற்றவர்கள் நிலங்களை கொள்முதல் செய்து, அந்த நிலங்களைப் பற்றிய விவரங்களையும் மின்சார வாரியத்திற்குத் தாக்கல் செய்து, மின் உற்பத்தி செய்யத் தயார் நிலையில் இருக்கிறார்கள்.

ஆனால், இதற்கிடையில் சிலர் நீதிமன்றத்திற்குச் சென்று, Solar Energy Policy 2012, சூரிய மின்சக்தி கொள்கை 2012-ல், உயர் அழுத்த மின்சார வசதி பெறுகின்ற வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகள், இந்த ஆண்டு 3 சதவீதமும், அடுத்த ஆண்டு 3 சதவீதமும், ஆகமொத்தம், மொத்தப் பயன்பாட்டில் 6 சதவீதம் சூரிய ஒளி மின்சாரத்தை அவர்கள் உற்பத்தி செய்ய வேண்டும். அவ்வாறு உற்பத்தி செய்ய முடியவில்லையென்றால், அந்த 6 சதவீதத்திற்கான மின் கட்டணத்தை, (Solar Energy) சூரிய ஒளி மின் சக்திக்குரிய கட்டணத்தை அவர்கள் செலுத்திவிட வேண்டும் என்று வழக்குத் தொடுத்துள்ளார்கள். அவர்களுக்கு இப்பொழுது நாம் 698 மெகா வாட் மின் உற்பத்திக்கு ஒப்புதல் வழங்கி, எல்லா ஆணைகளும் வழங்கப்பட்டும், அது நீதிமன்ற தடையாணை காரணமாக தடைபட்டிருக்கிறது. அந்தத் தடையை நீக்குவதற்கு இப்பொழுது விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்தத் தடை விரைவில் நீங்கும் நிலையில் இருக்கிறது. நீதிமன்றத் தடை நீக்கப்பட்ட பின்பு மிக விரைவில் மின் உற்பத்தி செய்யப்படும். சொன்னதைச் சொன்னபடி செய்யும் ஆற்றல் படைத்தவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சூரிய ஒளி மின் சக்தியை அறிவித்துவிட்டு ஒன்றுமே செய்யவில்லை என்று கதை விட்டுவிட்டுப் போகின்றவர்கள் சொல்கின்ற மாதிரி இது கதைவிடும் செயல் அல்ல; முன்னாள் முதலமைச்சர் கருணாநிதிக்கு வேண்டுமானால் இது கைவந்த கலை. ஒன்றைச் சொல்லிவிட்டு, வேறு ஏதாவது ஒன்றைச் சொல்லி சமாளித்துவிடுவார். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் அப்படியல்ல. சொன்னால் சொன்னதுதான். சொன்னதை எந்த விதத்திலும் செய்யாமல் விடவே மாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றைச் சொல்வதற்கு முன்பு, ஒரு முறைக்குப் பல முறை யோசிப்பார்கள்.

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2013 அக்டோபர் 28

யோசித்துச் சொல்லிவிட்டார்கள் என்றால், பின்னால் அதிலிருந்து பின்வாங்கவே மாட்டார்கள்.

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு"

என்ற வள்ளுவனின் குறளுக்கேற்ப, உறுதியாக நிற்பவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான்.

பிற்பகல் 1-10

முன்னாள் முதல்வர் சம்பந்தமே இல்லாமல் ஏதாவது சொல்வார். காற்றாலை மின் உற்பத்தியைப் பற்றி ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். அந்த அறிக்கையைப் படித்துப் பார்த்தால், அவருக்கு ஒன்றுமே தெரியவில்லை என்பது தெரிகிறது. ஒரு விஷயமும் தெரியாமல் எப்படித்தான் ஐந்தாண்டுக் காலம் முதலமைச்சராக இருந்தார் என்று சந்தேகப்படுகின்ற நிலைதான் ஏற்படுகிறது. ஐந்து முறை முதலமைச்சராக இருந்தவருக்கு நிருவாக நடைமுறைகள் அல்லது அந்தத் துறையில் என்ன நடக்கிறது, என்ன சட்ட விதிகள் இருக்கின்றன என்பதைப் பற்றியெல்லாம் தெரிய வேண்டாமா? அவருக்கு, மின்சாரத் துறையைப் பற்றி, அதிலுள்ள சட்ட விதிகள் பற்றி தெரியவில்லை. வழித்தடம் இல்லாமலே மின்சாரத்தைக் கொள்முதல் செய்கிறீர்களே என்று கேட்கிறார். வழித்தடம் இல்லாமல் கொள்முதல் பெற முடியாது என்ற விவரமே தெரியாமல் ஐந்தாண்டுக் காலம் முதலமைச்சராக இருந்திருக்கிறார். அப்படியிருக்கும்போது, அவர் எப்படி மின்சாரப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்?

காற்றாலையைப் பொறுத்தவரையில், இப்போது புதிதாக ஒரு கதையைச் சொல்கிறார். காற்றாலை மின்சாரத்தை நீங்கள் முழுவதுமாகப் பயன்படுத்துவதில்லை என்கிறார். காற்றாலையிலிருந்து வரும் மின்சாரத்தை உபயோகப்படுத்தாமல், தனியாரிடம் ஏன் மின்சாரத்தை வாங்குகிறீர்கள்? குறைந்த விலையில் காற்றாலை மின்சாரம் கிடைக்குமே என்கிறார். தொழில்நுட்ப விவரங்களை அறியாமல் பேசுகிறார். தொழில்நுட்ப விவரங்கள் அறியாத வெளி நபர்கள், சங்கம் நடத்துபவர்கள் தங்கள் சங்கத்தில் உள்ள உறுப்பினர்களைக் கவருவதற்காக, மேலெழுந்தவாரியாக வேண்டுமானால் விவரம் தெரியாமல் அவ்வாறு பேசலாம். ஆனால், ஐந்து முறை முதலமைச்சராக இருந்தவர், விவரம் தெரியாமல் இதைப் எப்படிப் பேசலாம்?

2013 அக்டோபர் 28] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

விவரம் தெரியவில்லை என்பதற்கு ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கின்ற வகையிலே இதை எப்படிச் சொல்கிறார் என்றுதான் தெரியவில்லை.

காற்றாலை மின்சாரத்தைப் பொறுத்தவரையில், ஆண்டுக்கு நான்கு மாதங்களுக்குத்தான் காற்றாலை மின்சார உற்பத்தி முழுமையாகக் கிடைக்கும், மீதி எட்டு மாதங்களுக்கு காற்றாலைமூலம் மின்சாரம் கிடைக்கவே கிடைக்காது. உற்பத்தி செய்யப்படுகின்ற காற்றாலை மின்சாரம் காலையில் 500 மெகா வாட் கிடைக்கும், மதியம் ஆயிரம் மெகா வாட் கிடைக்கும், மாலையில் 3,000 மெகா வாட் கிடைக்கும். அதுவும் நிரந்தரமாக இருக்காது. அதில் மிகப் பெரிய ஏற்ற இறக்கம் இருக்கும். சீரான மின்சாரம் கிடைக்காது. சீரான மின்சாரம் கிடைக்கவில்லையென்று சொன்னாலும், இதில் தொழில்நுட்ப சம்பந்தமான பல்வேறு பிரச்சினைகளும் ஏற்படும். குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், ஒவ்வொரு மின்சார உற்பத்தியிலும் மிகப் பெரிய தொழில்நுட்ப விஷயம் உள்ளது. தொழில்நுட்ப விஷயம் என்னவென்று சொன்னால், மின் கட்டமைப்புகளை அப்படியே பராமரிக்க வேண்டும். மத்திய மின் துறை ஆணையத்தினுடைய உத்தரவின்படி, 49.57 Hertz முதல் 50.2 Hertz என்ற அளவில் மின்சார அதிர்வுகள், frequency இருக்க வேண்டும். மின்சாரத்தைப் பொறுத்தவரையில் 49.57 Hertz frequency-க்குக் கீழே குறையக்கூடாது. 50.2 Hertz frequency-க்கு மேல் அதிகமாகக்கூடாது. இதில் ஏதாவது மாற்றம் வந்தால் மின் கட்டமைப்பு அத்தனையும் ஒட்டுமொத்தமாக பாதிப்புக்குள்ளாகி விடும். இதில் மிகப் பெரிய ஆபத்துகள் நிறைந்திருப்பதால்தான் இந்த frequency-ஐ கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும். ஆக, தொழில்நுட்ப ரீதியில் சில இடையூறுகள் இருப்பதினால், உற்பத்தி கூடும்போது சில நேரங்களில் தவிர்க்க முடியாமல் frequency-ஐ கடைப்பிடிக்க முடியாமல், அது அதிகமாகி விடும். ஆனால், தற்போது 49.57-க்கே பிரச்சினையாகி உள்ளது.

மத்திய அரசு தற்போது புதிய உத்தரவினைப் பிறப்பித்துள்ளது. 49.57 Hertz என்பதை 49.95 Hertz என்ற அளவில் மாற்றியிருப்பதினால், மிகப் பெரும் பிரச்சினை காற்றாலை மின் உற்பத்தியில் ஏற்படும். இதையும் நாம் வெற்றிகரமாகச் சமாளிக்க வேண்டும். இந்த முடிவை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கடுமையாக எதிர்க்கிறது. இந்த முடிவை அமல்படுத்தினால்,

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2013 அக்டோபர் 28

தமிழகம் போன்ற கட்டமைப்பு வசதிகள் உள்ள மின்சார வாரியங்கள் பாதிக்கப்படும் என்று தனது எதிர்ப்பைத் தெரிவித்ததற்கு மீறியும் இதை அமல்படுத்தியிருக்கிறார்கள். நாம் நீதிமன்றத்திற்குச் சென்றுள்ளோம். நீதிமன்றத்திலும் அதை உறுதிப்படுத்தியுள்ளார்கள். ஆகவே, அதனைச் செயல்படுத்தும்போது, இதுபோன்ற பிரச்சினைகள் ஏற்படும். நான்கு மாதங்களுக்கு காற்றாலைமூலம் மின்சாரம் கிடைக்கும், மீதி எட்டு மாதங்களுக்குக் கிடைக்காது. இந்த விஷயம்கூட முன்னாள் முதலமைச்சருக்குத் தெரியவில்லை. நான்கு மாதங்களுக்கு தமிழகத்திற்கு மின்சாரத்தைக் கொடுத்துவிட்டு, மீதி எட்டு மாதங்களுக்கு தமிழகத்தை இருளில் வைக்க முடியுமா? இதற்கு நிரந்தரத் தீர்வு என்னவென்றால், நமது அனல் மின் நிலையங்களில் கிடைக்கின்ற மின்சாரமும், தொடர் மின் நிலையங்களிலே கிடைக்கின்ற இதர வகை மின்சாரமும், வாயு வழியிலே கிடைக்கின்ற மின்சாரமும்தான். காற்றாலை மின்சாரம் நிரந்தரமாகக் கிடைக்காது. இந்த உண்மைகூட, இந்த வித்தியாசம்கூட பொதுமக்களுக்கும் தெரியாது. மற்றவர்களுக்கும் தெரியாது. ஆனால், முதலமைச்சராக இருந்து, நிருவாகத்திலே இருந்தவருக்கு இந்த விஷயங்கள் தெரிந்திருக்க வேண்டுமா, இல்லையா? எதையும் தெரிந்துகொள்ளாமல் காற்றாலை மின் உற்பத்தியை அவர்கள் கொள்முதல் செய்யவில்லை என்று அபாண்டமாக, தேவையில்லாத குற்றச்சாட்டை இங்கே முன்வைத்திருக்கிறார்.

பிற்பகல் 1-15

12 மாதங்களுக்கும், சீரான மின்சாரம் அந்த அதிர்வெண்ணுக்குள்ளாகவே வழங்க வேண்டும். இன்றைக்கு அத்தனையையும் சரிப்படுத்தி அனைவருக்கும் மின்சாரம் வழங்க வேண்டுமென்று சொன்னால், அனல் மின் நிலையங்கள் மற்றும் இதர வகைகளிலே இருக்கின்ற கொள்முதல்தான் நிரந்தரமானது என்றும், காற்றாலை கொள்முதல் மீதி 8 மாதங்களுக்குப் பயன் தராது என்பதால் அதை மட்டுமே முழுமையாக நம்பி இருக்க முடியாது என்பதற்காக இதர வகையில் கொள்முதல் செய்கிறார்கள். இதைக் குற்றம் சொல்கிறார். அறியாமையினுடைய விளைவாகத்தான் இப்படிச் சொல்கிறார். இப்படி எல்லா வகைகளிலும், அனைத்துத் திட்டங்களையும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே அறிவித்த திட்டங்கள்

2013 அக்டோபர் 28] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

குறித்து அவர் சொன்ன அத்தனை குறைபாடுகளும், குற்றச்சாட்டுகளும் அபத்தமானவை, அறியாமையின் வெளிப்பாடு. ஐந்தாண்டுக் காலம் முதலமைச்சராக இருந்தவருக்கு நிருவாக நடைமுறைகள் தெரியாது என்பதற்கு அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலம்தான் அந்த அறிக்கை. வேறு ஒன்றும் சொல்ல முடியாது. அதேபோல, இவ்வளவு குற்றச்சாட்டுகளையும் வசதியாகச் சொன்னார் அல்லவா, நிதிநிலை பற்றி ஏன் சொல்லவில்லை? காற்றாலையைப் பற்றி மட்டும் வசதியாகக் குற்றம் சொல்லிவிட்டார்கள். இவருக்கு காற்றாலை பற்றிய முழு விவரமும் தெரியாது. நான் கேட்கிறேன். இவ்வளவு விவரமும் சொன்னார் அல்லவா, இந்த நிதிநிலை பற்றி மட்டும் அம்மா அவர்கள் சொன்னதை ஏன் சொல்லாமல் விட்டு விட்டார். குற்ற உணர்வு, வேறு ஒன்றும் இல்லை. 40 ஆயிரத்து 325 கோடி அளவுக்கு கடந்த தி.மு.க. ஆட்சியிலே நிதிநிலைமையைச் சீரழித்துவிட்டார்கள். திவாலாகப் போகிற நிலை வந்துவிட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் மின்சார நிதிநிலையில் மறு சீரமைப்பு ஏற்படுத்தி, இன்றைக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலையைக் காப்பாற்றி இருக்கிறாரே, அதைப் பற்றி அவர் ஒரு வார்த்தை சொன்னாரா? ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை. அந்த அளவிற்கு இழப்பை ஏற்படுத்திவிட்ட முதல் குற்றவாளி கடந்த தி.மு.க. ஆட்சிதான். அதற்கு முழு முதற்காரணம் கடந்த தி.மு.க. ஆட்சிதான். ஆகவேதான் நிதிநிலைமையைச் சீரமைத்த அந்தச் சாதனையை அவர் மூடி மறைத்துவிட்டார். இன்னும் சொல்லப்போனால் இப்படிப்பட்ட, தெளிவற்ற, யாரோ எழுதிக் கொடுத்த அறிக்கையை அவர் பெயரிலே வெளியிட்டு மக்களைக் குழப்பி, உண்மைக்குப் புறம்பான செய்தியைச் சொன்ன முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்களின் கூற்று அத்தனையும் 100 சதவிகிதம் தவறானவை, தவறானவை, தவறானவை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எனது விளக்கத்தைச் சொல்லி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய நீண்ட பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். கடந்த ஆண்டில்

[திரு. பி.வி. கதிரவன்] [2013 அக்டோபர் 28

தேவர் ஜெயந்தி விழாவன்று 3 சம்பவங்களிலே 10 பேர் இறந்திருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பத்தினருக்கு தமிழக அரசு, 5 இலட்சம் ரூபாயும், வாரிசுதாரர்களுக்கு வேலையும் வழங்கியிருக்கிறது. பெட்ரோல் குண்டு வீச்சில் காயமடைந்தவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நாங்கள் கோரிக்கை வைத்தோம். தீக்காயம் அடைந்தவர்கள் எந்த வேலையையும் செய்ய முடியாத நிலையில் இருப்பதால், அவர்களுக்கு வேலை கொடுக்கப்பட வேண்டுமென்றும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கோரிக்கை வைத்தோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவர்களுக்கும் வேலை கொடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்வு அளித்திருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசியல் தலைவர்களுக்கு குரு பூஜையை அந்தந்தக் கட்சித் தலைவர்கள் நடத்தி வருகிறார்கள். கடந்த ஆண்டு நடந்த ஒரு கசப்பான நிகழ்வால், இந்த ஆண்டு இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கை மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம் போன்ற பகுதிகளிலே ஏற்கெனவே குற்றவியல் நடைமுறைச் சட்டம் 144-ன்கீழ் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் எந்த அசம்பாவிதமும் நடந்துவிடக்கூடாது என்பதில் கண்ணுங்கருத்துமாக இருக்கிறோம். ஆனால், தலைவர்கள் குரு பூஜை நடத்துவது அவசியமான ஒன்றாகும். ஆனால், காவல் துறை அதிகாரிகள் ஒருசிலர், அந்த மாவட்டங்களில் flex board வைக்கக் கூடாது, poster ஒட்டக்கூடாது என்ற நிபந்தனைகளை விதிக்கிறார்கள். அதனால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அதைக் கருணை கூர்ந்து பார்த்து, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-20

தமிழக அரசு, விளையாட்டுத் துறைக்கு நிறைய சலுகைகள் அளித்து வருகிறது. அதன் அடிப்படையில், வருகின்ற 2014 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெறவிருக்கும் உலக அளவிலான கபடி விளையாட்டுப் போட்டியை தமிழகத்திலே நடத்துவதற்கு, கபடிக் குழுவிற்கு அனுமதி அளித்திருக்கின்றது. இது மூன்றாவது உலகக் கோப்பை போட்டியாகும். இலங்கையைத் தவிர, 22 உலக நாடுகள் அதிலே கலந்துகொள்கின்றன. 22 நாடுகளைச் சார்ந்த பெண்களும், ஆண்களும் இதில் கலந்துகொள்கிறார்கள்.

2013 அக்டோபர் 28] [திரு. பி.வி. கதிரவன்]

கிட்டத்தட்ட 496 விளையாட்டு வீரர்கள் இதிலே கலந்துகொள்ள இருக்கிறார்கள். அதைச் சிறப்பாக நடத்துவதற்கு 11 கோடி ரூபாய் வரை தேவைப்படுகிறது. வருகிற பிப்ரவரி மாதம் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களது பிறந்த தினத்தன்று இதனை நடத்த வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறோம்; அதிலும் சென்னையிலுள்ள நேரு விளையாட்டு அரங்கிலிருக்கும் உள் விளையாட்டரங்கிலே அதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. அதற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி உரையை நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை மட்டும் பதிவு செய்ய விரும்புகிறேன். முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில், அவர்கள் வைத்துவிட்ட பாக்கி ரூ.558 கோடியையும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் வழங்கினார்கள் என்பதையும், இதுவரை காற்றாலை மின்சார உற்பத்திக்கான செலவு ரூ.5,011 கோடி உடனுக்குடன் வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வுலகிலுள்ள உயிர் குலமெல்லாம் உச்சரிக்கும் "அம்மா" என்ற மூன்றெழுத்து மந்திரச்சொல் துவங்குவது அகரத்தில். அதனை நாளும் தவறாமல் உச்சரிப்பவர் எந்நாளும் இருப்பார் சிகரத்தில்.

தாய்த் திருநாட்டில் பகுத்தறிவு நெறியைப் பரவச் செய்திட்ட வெண்தாடி வேந்தர் தந்தை பெரியார் வழியில் ஜனநாயக நெறி காத்து, அரசியல் பண்பு வளர்த்திட்ட பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் அடிச்சுவட்டில் மனிதப் பண்பு வளர, மக்களுக்கு வாரி வழங்கிய புரட்சித் தலைவரின் புனித வழியில் கழகத்தை வழி நடத்தி, கழகப் பொதுச் செயலாளராக 25 ஆண்டுகளை நிறைவு செய்து, வெள்ளி விழா காண்கின்ற

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2013 அக்டோபர் 28

கழகத்தின் காவல் தெய்வமே, (மேசையைத் தட்டும் ஒலி) ஏவுகணைகளாக எதிரிகள் ஏவுகின்ற எண்ணிலடங்கா துன்பங்களையும், துயரங்களையும், சோதனைகளையும், வேதனைகளையும், தனி ஒருவராய்த் தாங்கிக் கொண்டு தமிழகத்தைத் தாய்த் திருநாட்டின் தலைநாடாய் உயர்த்துவதற்குத் தனி மனித இராணுவமாய் உழைத்து வருகின்ற தாயுருவ தெய்வமே, (மேசையைத் தட்டும் ஒலி) அன்பும், அறிவும், ஆற்றலும், செறிவும், செயல்திறனும் தன்னகத்தே கொண்டு தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி, ஆங்கிலம் என்னும் பன்மொழிகள் கற்றறிந்த பன்முகத் திறமையின் இருப்பிடமே, ஊற்றெடுக்கும் மனித நேயத்தோடும், தன்னலம் கருதாத தனிப்பெரும் தியாகத்தோடும் இப்பூமியிலே அவதரித்திட்ட புதுமையின் பிறப்பிடமே, புரட்சியின் வடிவமே, முத்தமிழர் நலன் காத்திட முக்காலமும் உழைக்கின்ற முழுமதியே, இனி எந்நாளும் வளமான வாழ்வை இந்நாட்டு மக்களுக்குக் குறைவின்றி வாரி வழங்குவதற்காக "தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம், 2023"-ஐப் படைத்திட்ட பொருளாதார ஞானியே, வாள் சுழற்றும் களம் யாவும் வாகை சூடும் புறநானூற்றுத் தாயே, அம்மா, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையிலே 2013-2014 ஆம் ஆண்டிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கையினை வரவேற்றுப் பேசுகின்ற வரலாற்று வாய்ப்பினை வழங்கி இருக்கின்ற, அகநானூறும் காட்டிடாத நேசத்தையும், புறநானூறும் கண்டிடாத வீரத்தையும் தன் அடையாளமாகக் கொண்டு மூன்றாம் முறையாக தமிழகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கும் சங்கத் தமிழ் போற்றும் முத்தமிழ்த் தாயே, அம்மா, தங்களின் பொற்பாதங்களைப் பணிந்து, கோடானு கோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி வணங்குகின்றேன்.

எல்லாம் வல்ல ஆண்டவன் இப்பூமியை படைத்தபோது இப்பூமி கொஞ்சம் அதிர்ந்து கொண்டே இருந்ததாம். இதனால் உயிர்க்குலம் அனைத்தும் அச்சத்திலே அமைதியை இழந்தனவாம். தான் படைத்த பூமி அதிர்வதைப் பார்த்த இறைவன் அதிர்வை நிறுத்த பூமியிலே மிகப் பிரம்மாண்டமான மலைகளைப் படைத்தார். அதன் பின்னர், பூமி அதிர்வது முழுமையாக நின்றுபோனதாம். பூமியின் அதிர்வை நிறுத்திய மலைகளின் வலிமையைக் கண்ட வானவர்கள், இவ்வுலகிலே மலைகள்தான் வலிமை வாய்ந்தவையா என்று கேட்டபோது, ஏன்? அந்த மலைகளையும் உடைத்துத் தகர்க்கும் கடினமான இரும்பையும் நான் படைத்து இருக்கிறேன் என்று இறைவன் கூறினார்.

2013 அக்டோபர் 28] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

அப்படியானால் இவ்வுலகிலே இரும்புதான் வலிமை வாய்ந்ததா? என்று கேட்டபோது, ஏன்? அந்த இரும்பையும் உருக்கும் நெருப்பையும் நான் படைத்திருக்கிறேன் என்று இறைவன் கூறினார். அப்படியானால் இவ்வுலகிலே நெருப்புதான் வலிமை வாய்ந்ததா? என்று கேட்டபோது, ஏன்? அந்த நெருப்பையும் அணைக்கும் நீரை நான் படைத்திருக்கிறேன் என்று இறைவன் கூறினார். அப்படியானால் இவ்வுலகிலே நீர்தான் வலிமை வாய்ந்ததா? என்று கேட்டபோது, ஏன்? அந்த நீரையும் கிளர்ந்தெழச் செய்கின்ற காற்றையும் நான் படைத்து இருக்கின்றேன் என்று இறைவன் கூறினார். இறைவா! உமது படைப்பில் உருவான எதுதான் இவ்வுலகில் வலிமை வாய்ந்தது என வானவர்கள் மீண்டும் கேட்க, வானவர்களே, "இவ்வுலகில் பிறர் துன்பத்தினைத் தன் துன்பம் எனக் கருதி, ஏழைகளின் துயர் துடைக்கப் பாடுபடுகின்ற கருணை மனம் உள்ள மனிதன்தான் என் படைப்பில் எல்லாவற்றிலும் வலிமை வாய்ந்தவர்" என்று இறைவன் கூறினார். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-25

இன்றைக்கு இவ்வுலகில் பிறர் துன்பத்தினைத் தன் துன்பமெனக் கருதி, ஏழைகளின் துயர் துடைக்கும் வகையில் எண்ணிலடங்கா திட்டங்களான தொட்டில் குழந்தைத் திட்டம், மழைநீர் சேகரிப்புத் திட்டம், பள்ளிகளிலே மாணவ, மாணவியர்க்கு சத்தான சத்துணவுத் திட்டம், பகவான் உறையும் ஆலயங்களில் அன்னதானம் வழங்கும் திட்டம், வீடுகள் தோறும் விலையில்லா 20 கிலோ அரிசி வழங்கும் திட்டம், பசுமை வீடுகள் வழங்கும் திட்டம், வறுமைப் பிடியிலிருந்து நலிந்த மக்களைக் காப்பாற்ற கறவை மாடுகளும், ஆடுகளும் வழங்கும் திட்டம், உழைத்துப் பிழைக்கும் பாட்டாளி வர்க்கத்தின் பசிப்பிணி போக்க மலிவு விலையிலே உணவு வழங்கும் "அம்மா உணவகங்கள்". (குறுக்கீடு) அம்மி-குழவிக் கல்லுகளோடு மல்லுக்கட்டிக் கிடந்த இல்லத்துப் பெண்களை விஞ்ஞான யுகத்திற்கு அழைத்து வரும் வேட்கையோடு தாய் வீட்டுச் சீதனமாக விலையில்லா Mixi, Grinder, Fan வழங்கும் திட்டம். ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கம் மற்றும் ரூபாய் 50,000/- வழங்குகின்ற திருமண நிதியுதவித் திட்டம். ஆதரவற்ற முதியோர்களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் மாதந்தோறும் ரூபாய் 1,000 உதவித் தொகை வழங்குகின்ற திட்டம்.

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2013 அக்டோபர் 28

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

'பயிற்று பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்' என்ற பாரதியின் பாடல் வரிகளுக்கு ஏற்ப, பள்ளி செல்லும் மாணவ, மாணவியருக்கெல்லாம் காலணி முதல் கணினி வரை வழங்கி கல்விப் புரட்சியை நிகழ்த்தி வருகின்ற மகத்தான திட்டங்கள். அரசு அதிகாரிகளைத் தேடி மக்கள் அலைந்த நிலையை மாற்றி, மக்களைத் தேடி வரும் அரசு அதிகாரிகள் என்னும் மகத்தான "அம்மா திட்டம்", தவித்த வாய்க்கு உடனே தண்ணீர் கொடுக்க, குறைந்த விலையிலே "அம்மா மினரல் வாட்டர் திட்டம்". நாட்டிலே முதன்முறையாக விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண உதவி வழங்கிய வரலாற்றுப் புரட்சி. இப்படி எல்லோரும் போற்றுகின்ற மனித நேயமிக்க எண்ணிலடங்கா ஆயிரமாயிரம் திட்டங்களைத் தொடர்ந்து வழங்கி, வலிமையின் வடிவமாக இந்நாட்டு மக்களின் இதயங்களிலே குடி கொண்டிருக்கின்ற கருணைத் தெய்வமே, அம்மா, தங்களின் புனிதத் தலைமையை ஏற்று வல்லரசாய் வரலாறு படைத்திட தவமாய்த் தவமிருந்து வருகின்றது இந்தியத் திருநாடு.

போர்க்களத்திலே முன் வைத்த காலை பின் வைக்காமல் நின்று, சண்டை செய்வதோ, வெற்றி பெறுவதோ அல்லது உயிர் விடுவதோ மாத்திரம் தமிழர் வீரம் அன்று. தான் ஆராய்ந்து எடுத்துக்கொண்ட கொள்கையை விட்டுக்கொடுக்காமல் நிறைவேற்றுவது, தான் ஆராய்ந்து எடுத்துக்கொண்ட கடமையை விட்டுக்கொடுக்காமல் முடித்துக்காட்டுவது, தன் மனதில் உதிக்கின்ற எண்ணங்களை எச்சமயத்திலும், யாருக்கும், அஞ்சாமல் எடுத்து வைப்பது, தன் செயல்களைத் தன் கொள்கைக்கு மாறுபடாமல் நடத்திக் காட்டுவது. சுருக்கமாகக் கூற வேண்டுமானால், உறுதியான எண்ணங்கள், உறுதியான கொள்கைகள், உறுதியான சொற்கள், உறுதியான நடவடிக்கைகள் இவைதான் தமிழர் வீரம் என்று தமிழ்ச் சான்றோர் கூறுகின்றார்கள். உறுதியான எண்ணங்கள், உறுதியான கொள்கைகள், உறுதியான சொற்கள், உறுதியான நடவடிக்கைகள் என இந்திய அரசியல் களத்திலே தமிழர் வீரத்தின் முழு அடையாளமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற வீரத்தின் விளை நிலமே, தமிழ்த்தாயே, அம்மா, தங்களின் புனிதத் தலைமையேற்று உலகத்தின் தலை நாடாய் வரலாறு படைப்பதற்கு தவமாய்த் தவமிருந்து வருகின்றது இந்தியத் திருநாடு. (மேசையைத் தட்டும் ஒலி)

2013 அக்டோபர் 28] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

காதுகேளாதோர் மாநாட்டில் நடத்திய இசைக் கச்சேரியைப் போல, பார்வையற்றோர் மாநாட்டில் நடத்திய ஓவியக் கண்காட்சியைப் போல, திருதராஷ்டிரன் சபையில் எதிர்பார்த்த நியாயத்தைப் போல, கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியாளர்களிடம் இலங்கைத் தமிழர் பிரச்சினைகளை எடுத்து வைத்து, வாதாடியபோதெல்லாம், போராடியபோதெல்லாம், ஏன் கண்ணீர்விட்டு அழுதபோதெல்லாம், தன் சுயநலத்திற்காக, கிணற்றில் போட்ட கல்லாக இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு எந்தத் தீர்வும் காணாமல் கருணாநிதி தமிழினத்திற்குச் செய்துவந்த தொடர் துரோகத்தால் கொத்துக் கொத்தாக ஈழத்தமிழர்களின் உயிர் பறித்த கொடுமைகள் தொடர்ந்து நடந்துகொண்டே இருந்ததை உலகத் தமிழினம் நன்கு அறியும்.

பிற்பகல் 1-30

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலே இன்றைக்கு நடைபெற்று வருகின்ற புனித ஆட்சியிலே, நாடு போற்றும் நல்லாட்சியிலே, இலங்கைமீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டுமென்றும், இனப் படுகொலையில் ஈடுபட்டவர்களைப் போர்க் குற்றவாளிகளாக அறிவிக்க வேண்டுமென்றும் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானத்தினை இம்மாமன்றத்தில் நிறைவேற்றியதோடு, ஈழத் தமிழர்களின் நலனை முன்னிறுத்தி தமிழின உணர்வோடு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதோடு இன்றைக்கு தமிழ் மக்களின் ஒருமித்த கருத்துக்கும், உணர்வுகளுக்கும் மதிப்பளித்து ஈழத் தமிழர்களின் வாழ்வில் நம்பிக்கை ஒளி ஏற்படுத்தும் வகையில் இலங்கையில் நடைபெற இருக்கும் காமன்வெல்த் மாநாட்டினை இந்தியா முற்றிலுமாகப் புறக்கணிக்க வேண்டும். பெயரளவிற்குக்கூட இந்தியப் பிரதிநிதிகள் யாரும் பங்கேற்கக்கூடாது என வலியுறுத்தும் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானத்தினை நிறைவேற்றி உலகத் தமிழர்களின் ஒரே பாதுகாவலராக விளங்குகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களை ஒட்டுமொத்தத் தமிழினம் வாழ்த்தி வணங்குகிறது.

தாய்த் தமிழ்நாட்டில் தடையில்லா மின்சாரத்தை இனிமேல் யாராலும் தர முடியாது என்று தமிழ்நாட்டு மக்களை இருட்டிலே தவிக்கவிட்டுச் சென்ற கடந்த கால மைனாரிட்டி தி.மு.க.

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2013 அக்டோபர் 28

ஆட்சியின் நிருவாகச் சீர்கேட்டால் போண்டியாகி, ஆண்டிக் கோலத்தில் கடன் எனும் கடலில் மூழ்கிக் கொண்டிருந்த தமிழ்நாடு மின்சார வாரியத்தை மீட்டெடுத்து, உயிர்கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 24 மணி நேர அயராத உழைப்பால், சீரான சீர்மிகு நிருவாகத்தால் இன்றைக்கு 24 மணி நேரமும் தடையில்லா மின்சாரத்தை மகிழ்வோடு பெற்று, வளமோடு வாழ்ந்து வருகின்றார்கள் அன்னை தமிழக மக்கள் என்பதுதான் இன்றைக்கு தலைப்புச் செய்தியாக அனைத்துச் செய்தித் தாள்களிலும் வந்துகொண்டு இருக்கிறது அம்மா.

தாயே! தமிழக வரலாற்றில் முதல் முறையாகத் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக ரூபாய் ஒரு இலட்சம் கோடிகளைத் தாண்டி வரவு-செலவுத் திட்டம் தந்து புதிய சாதனை வரலாறு படைத்திட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு தந்து இருக்கின்ற 2013-2014 ஆம் ஆண்டிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கையின் மதிப்பீடு வெறும் ரூ.100 கோடி, ரூ.200 கோடி அல்ல. எல்லோரும் வியந்து போற்றிப் பாராட்டுகின்ற வகையிலே ரூ.5,898.19 கோடி ஆகும். மக்கள் நலன் காக்கும் திட்டங்களையெல்லாம் வெற்றிகரமாக நிறைவேற்றுகின்ற வகையிலே அட்சயப் பாத்திரமாக மலர்ந்து இருக்கின்ற முதல் துணை நிதிநிலை அறிக்கையிலே, இளைய சமுதாயத்தின் வாழ்வில் ஒளியேற்றுகின்ற திட்டங்களுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடுகள், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கிட ஒதுக்கீடுகள், விலையில்லா வேட்டி, சேலைகள் வழங்குவதற்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடுகள், விவசாயிகளுக்கு சூரிய சக்திமூலம் இயங்கும் பம்பு செட்டுகள் அமைத்துக் கொடுக்க நிதி ஒதுக்கீடுகள், கடல் நீரை குடிநீராக்கும் நிலையம் அமைப்பதற்கு ஒதுக்கீடுகள், வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு சமுதாய முதலீட்டு நிதிக்கான ஒதுக்கீடுகள், கண்ணியமிக்க காவல் துறையினருக்கு 'உங்கள் சொந்த இல்லம்' திட்டத்திற்கான ஒதுக்கீடுகள், நூற்றாண்டு விழா காணுகின்ற கலைத் துறைக்கும் நிதி ஒதுக்கீடுகள், வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளுக்கு நிதி ஒதுக்கீடுகள், வரலாறு வாழ்த்துகின்ற வகையிலே மக்கள் நலத் திட்டங்களை, வளர்ச்சித் திட்டங்களை, தொலைநோக்குத் திட்டங்களை, முன்னோடித் திட்டங்களை நிறைவேற்றிடத் தேவையான நிதி ஒதுக்கீடுகளும், கூடுதல் நிதி ஒதுக்கீடுகளும் இடம்பெற்றிருக்கின்ற

2013 அக்டோபர் 28] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

இந்த 2013-2014 ஆம் ஆண்டிற்கான வரலாற்றுச் சிறப்பு மிக்க முதல் துணை நிதிநிலை அறிக்கையினை அன்போடு மகிழ்ந்து வரவேற்கின்ற 8 கோடி தமிழ் மக்களோடு சேர்ந்து நானும் வணங்கி வரவேற்கின்றேன்.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் இந்நாட்டு மக்களிடத்திலே மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் வைத்த அன்பான வேண்டுகோளை ஏற்று, ஐந்தாறு ஹிட்லர்களும், ஐம்பத்தாறு முசோலினிகளும், ஐந்தாயிரம் இடி அமீன்களும் ஒன்றாக உருவெடுத்து நடத்தி வந்த சர்வாதிகார ஆட்சியினை மக்கள் தூக்கியெறிந்ததோடு மட்டுமல்லாமல், இனி எதிர்க்கட்சி வரிசையிலேகூட சுயநலவாதிகளான உங்களுக்கு இருக்கைகள் இல்லை என்ற வரலாற்றுத் தீர்ப்பை வழங்கினார்கள் தாய்த் தமிழ் நாட்டு மக்கள்.

தாய்த் தமிழ்நாட்டு மக்களால் தூக்கியெறியப்பட்டு, புறக்கணிக்கப்பட்டிருக்கிற கட்சியைச் சேர்ந்த சிலபேர் இங்கு வந்து கூச்சல் போடுவதையும், கூப்பாடு போடுவதையும், கலகம் விளைவிப்பதையும் கடமையாகக் கொண்டு இருக்கின்றார்கள். நேற்று முன்தினம் அவர்கள் நடத்திய அந்தக் கலகத்திற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் மிக நீண்ட விளக்கத்தை, கருணாநிதியினுடைய இரட்டை வேடத்தை, முழுவதுமாகத் தோலுரித்துக் காட்டுகின்ற வகையிலே பதிலுரை அளித்திருக்கின்றார்கள். கடைக்கோடித் தொண்டன் என்ற முறையிலே நானும் என் பதிலைப் பதிவுசெய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காமாலை நோய் கண்டவனுக்கு பார்க்கும் இடமெல்லாம் மஞ்சள் நிறமாகத் தெரிவதைப் போல, இன்றைக்கு எங்கே பச்சை இலையைப் பார்த்தாலும் அது இரட்டை இலைதான் என்று கூப்பாடு போடுகின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் மக்கள் நலன் காக்க வெற்றிகரமாக நிறைவேற்றி வருகின்ற புரட்சிகரமானத் திட்டங்களில் எள்முனையளவுகூட குறைவொன்றும் இல்லையே என்ற பொறாமைத் தீயினால் வெந்து, நொந்து, இனி நம் அரசியல் எதிர்காலம் என்னவாகுமோ என்ற வேதனையில் ஒப்பாரி வைப்பவர்களுக்கு இங்கே ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

1970 ஆம் ஆண்டு விருதுநகர் மாவட்டத்திற்குட்பட்ட ஆலங்குளத்தில் அமைந்துள்ள அரசு சிமென்ட் ஆலையை

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2013 அக்டோபர் 28

கருணாநிதி துவக்கி வைத்தபோது, அரசு சிமென்ட் பையில் உதயசூரியன் சின்னத்தை அரசு செலவிலே அச்சடித்து அழகு பார்த்தவர்தான் என்பதும், மீண்டும் 2000 ஆம் ஆண்டிலே அரசு சிமென்ட் ஆலையின் மூலமாக தனியார் விற்பனைக்கென்று சூப்பர் ஸ்டார் சிமென்ட் அறிமுகப்படுத்தியபோதுகூட அந்த சிமென்ட் பையிலும் கருணாநிதிக்குப் பிடித்த மஞ்சள் கலரிலே உதயசூரியன் சின்னத்தை அச்சடித்து, அதுவும் அரசு செலவில் அச்சடித்து அழகு பார்த்தவர்தான் என்பதும் இந்த நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். ஆகவே, சாத்தான் வேதம் ஓதுவதைப் போல, வேதம் ஓதுகின்ற கருணாநிதி கட்சிக்காரர்களைப் பார்த்து இந்த நாட்டு மக்கள் கேட்கின்றார்கள், பார்க்கின்ற பச்சை இலைகளையெல்லாம் இரட்டை இலைதான் என்று கூறுவதற்கு உங்களுக்கு என்ன தகுதி இருக்கின்றது என்று. செக்கு எது, சிவலிங்கம் எது என்று வேறுபாடு தெரியாதவர்கள்தானே இவர்கள். உப்பு பொம்மை ஒன்று கடலின் ஆழத்தை அளந்து அதை எல்லோருக்கும் சொல்ல ஆசைப்பட்டு கடலிலே இறங்கியபோது, அந்த உப்பு பொம்மை கடல் நீரிலே கரைந்து காணாமல் போய்விட்டதாம். அதுபோல, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நாடு போற்றும் நல்லாட்சியிலே வெற்றிகரமாக நிறைவேற்றி வருகின்ற மக்கள் நலத் திட்டங்களின் செல்வாக்கைப் பரிசோதித்துப் பார்க்க நினைத்தவர்கள் எல்லாம் கடலிலே கரைந்து, காணாமல் போன அந்த உப்பு பொம்மைபோல மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் மக்கள் செல்வாக்கு என்னும் கடலிலே கரைந்து காணாமல் போனார்கள் என்பதுதான் கடந்தகால வரலாறு.

பிற்பகல் 1-35

வரலாற்றிலே பார் போற்றிடும் ஆப்ரகாம் லிங்கனின் கெட்டிஸ்பார்க் சொற்பொழிவில் மக்களுக்காக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, மக்கள் அரசு ஒரு போதும் அழியாது என்று உரைத்த ஆப்ரகாம் லிங்கனின் கூற்றுப்படி தமிழகமே என் வீடு, தமிழக மக்களே என் பிள்ளைகள், தமிழக மக்களின் நலனே என் நலன் என்று வாழ்ந்து வருகின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலே மக்களுக்காக, மக்களால் தேந்தெடுக்கப்பட்ட, மக்கள் அரசு, இந்த வையகம் உள்ளவரை, இந்த வான் உள்ளவரை வாழும், வளரும், வரலாறு படைக்கும் என்பதை 8 கோடி தமிழ் மக்களின் சார்பிலே நானும் இங்கே தெரிவித்து, இன்றைக்கு ஊர் ஊராகச் சுற்றித் திரிகின்ற

2013 அக்டோபர் 28] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

செல்லாக்காசு தலைவனின் கையாலாகாத வாரிசு, மீண்டும் நாம் கோட்டைக்கு வருவோம் என்று, கரைந்து கொண்டு இருக்கின்ற கழகத் தொண்டர்களின் எண்ணிக்கையைத் தக்க வைத்துக்கொள்வதற்காக உளறிக் கொட்டுகின்ற ஆசை வார்த்தைக்கு, கடல் வற்றி கருவாடு தின்னலாம் என்று காத்திருந்த கொக்கு குடல் வற்றி இறந்துபோன கதையை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

சாது ஒருவர் நதிக் கரையிலே நீராடச் சென்றார். அங்கே தேள் ஒன்று தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்தது. நதிக்கு மேலே நீண்டு இருந்த மரத்தின் இலையிலிருந்து அது நழுவி விழுந்து இருந்தது. எப்படியும் இன்னும் சற்று நேரத்திலே அதற்கு மரணம் ஏற்பட்டுப் போவது உறுதி என்ற நேரத்திலேகூட அந்தத் தேளின் உயிரைக் காப்பாற்ற வேண்டுமென்று அந்தச் சாது தண்ணீரில் கைவிட்டு அந்தத் தேளை வெளியே எடுத்தார். எடுத்தகணமே அந்தத் தேள் அவர் கையில் கொட்டியது. தேள் கொட்டியவுடன் அவர் கையை உதறினார். அதனால் மீண்டும் அந்தத் தேள் தண்ணீரில் விழுந்து தத்தளித்தது. சாது மறுபடியும் தேளை மேலே தூக்கினார். தேள் மறுபடியும் கொட்டியது. சாது மறுபடியும் கையை உதறினார். மீண்டும் அந்தத் தேள் தண்ணீரிலே விழுந்து தத்தளித்தது. மீண்டும், மீண்டும் அந்தத் தேள் கொட்டுவதும், சாது அந்தத் தேளை மீண்டும், மீண்டும் காப்பாற்றத் தொடர்ந்து முயற்சிப்பதையும் கரையிலே நின்று பார்த்துக் கொண்டிருந்தவர்கள் சாதுவை பார்த்து, 'ஐயா, இந்தத் தேள்தான் மீண்டும் மீண்டும் உங்களைக் கொட்டுகின்றதே! ஏன் அந்தத் தேளைக் காப்பாற்ற முயற்சிக்கிறீர்கள்' என்று கேட்டபோது, சாது அமைதியாகச் சொன்னார், கொட்டுவதுதான் தேளின் சுபாவம், அதற்கு அது மட்டும்தான் தெரியும். ஆனால், என்னைக் கொட்டினாலும் அதைக் காப்பாற்றுவதுதான் என் சுபாவம். எனக்கு அது மட்டும்தான் தெரியும் என்று சொல்லி சாது அதைக் காப்பாற்றினார். இதைப்போல, இன்றைக்கு எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் தேள் கொட்டுவதைப்போல விமர்சனங்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) அவதூறுகளையும் பழி சொல்லையும், இழிச் சொல்லையும் வாரி, வாரிக் கொட்டினாலும் அது மட்டும்தான் அவர்களுக்குத் தெரியும். ஆனால், அவர்களுக்கு எதிர்க்கட்சி அந்தஸ்தைப் பெற்றுத் தந்தவரே, அவர்களுடைய கட்சிக்கு உயிர் கொடுத்தவரே இதய தெய்வம் அம்மா அவர்கள்தான் என்பதை எதிர்க்கட்சிக்காரர்கள் மறந்தாலும்

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2013 அக்டோபர் 28

இந்நாட்டு மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

Napalm குண்டுகளால் 'வியட்நாம்' நலிவடைந்ததைவிட. 'நாஜி படையால் இஸ்ரேல் நாசமானதைவிட'. அமெரிக்க அணு குண்டுகளால் ஹிரோஷிமா, நாகசாகி அழிந்ததைவிட இப்போது இந்தியத் திருநாடு நலிவடைந்து அழிந்து கொண்டிருக்கின்றது. இந்த இந்தியத் திருநாட்டை மீட்டெடுக்க, உலகத்தை வழிநடத்தும் வலிமை வாய்ந்த மாபெரும் மக்கள் தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களிடத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய தேசத்தை வழிநடத்தும் வாய்ப்பைத் தாருங்கள் என்று இந்த தேசத்து மக்களுக்கு குறிப்பால் உணர்த்திவிட்டுச் சென்றிருக்கின்ற அமெரிக்காவின் அன்றைய வெளி விவகாரத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டனின் நம்பிக்கையை மெய்யாக்கிடவும், 125 கோடி மக்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்திடவும், 8 கோடி மக்களின் கொள்கைக் கனவை நினைவாக்கிடவும், ஒன்றரைக் கோடித் தொண்டர்களின் இலட்சியத்தை அடைந்திடவும் நாளெல்லாம் உழைத்திடுவோம். 40 நாடாளுமன்றத் தொகுதிகளின் வெற்றிக் கனியைப் பறிப்பதோடு, ஏற்காடு சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலிலும் வெற்றிக் கனியைப் பறித்து நற்றமிழ்த் தாயின் பொற்பாதங்களில் சமர்ப்பித்திட வீர சபதம் ஏற்போம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 66 சுதந்திர தினங்களைக் கொண்டாடி வந்திருக்கின்ற நாம், வருகின்ற 67-வது சுதந்திர தினத்திலே டெல்லி செங்கோட்டையிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் தேசியக் கொடி ஏற்றி வைக்கின்ற அந்தச் சுதந்திர தினம்தான் நம்முடைய முதல் சுதந்திர தினமாகக் கொண்டாடுவோம் எனச் சூளுரைத்து களம் செல்வோம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-40

அறிவுக்கு எப்போதும் உலகம் தலை வணங்கும், ஆற்றலுக்கு எப்போதும் உலகம் ஆதரவு அளிக்கும், தூய உள்ளத்தை எப்போதும் உலகம் வரவேற்கும் என்ற இங்கர்சாலின் வாய்மொழிக்கு இலக்கணமாய், அறிவும், ஆற்றலும், தூய உள்ளமும் கொண்டு வெற்றிச் சரித்திரம் படைத்து வருகின்ற நாளைய

2013 அக்டோபர் 28] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

இந்தியத் திருநாட்டின் புதிய விடியல், புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களை இந்த உலகம் தலை வணங்கி ஆதரித்து வரவேற்கின்ற காலம் வெகுவிரைவிலே மலரும், மலரும் என்று கூறி, அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதாவது, உலக அளவிலான கபடி விளையாட்டுப் போட்டி சென்னையில் நேரு உள்விளையாட்டரங்கில் நடைபெற இருக்கிறது; அந்த விளையாட்டுப் போட்டிக்கு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் உறுதுணையாக இருக்க வேண்டுமென்கிற ஒரு கருத்தைச் சொன்னார்கள். விளையாட்டுத் துறையைப் பொறுத்தவரையில், அதற்குத் தலைவராக இருந்து, தாயாக இருந்து இந்தியாவிலேயே விளையாட்டுத் துறைக்கு ஒரு நல்ல வழிகாட்டக்கூடிய தலைவியாக மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் விளங்கிக்கொண்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இதைச் சொல்வதற்குக் காரணம் என்னவென்றால், இந்தியாவில் உலக அளவிலான சதுரங்கப் போட்டி இதுவரையில் நடைபெற்ற வரலாறே கிடையாது. உலக அளவிலான சதுரங்கப் போட்டி, இந்தியாவில் நம்முடைய தமிழ்நாட்டில் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் ஆசியோடு வருகிற நவம்பர் மாதம் நடைபெற இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உலக அளவிலான இந்தச் சதுரங்கப் போட்டிக்காக மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் 29 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த விளையாட்டுப் போட்டியில் உலக அளவில் சேம்பியனாக இருக்கக்கூடிய திரு. விசுவநாதன் ஆனந்த் அவர்களும், உலகத் தர வரிசைப் பட்டியலில் ஒன்றாம் இடத்தில் இருக்கக்கூடிய நார்வே நாட்டைச் சார்ந்த மெக்னஸ் கார்ல்சன் என்பவரும் கலந்துகொண்டு விளையாடும் வகையில் தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்க்கும் விதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் நடத்தவிருக்கிறார்கள்.

[திரு. பி. பழனியப்பன்] [2013 அக்டோபர் 28

பொதுவாக, விளையாட்டு என்று சொன்னால் இரண்டு வகைகளில் நாம் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். ஒன்று உடல் திறனைச் சோதித்துப் பார்க்கக்கூடிய விளையாட்டு, மற்றொன்று அறிவுத் திறனைச் சோதித்துப் பார்க்கக்கூடிய விளையாட்டு. இந்தச் சதுரங்கப் போட்டி அறிவுத் திறனை சோதித்துப் பார்க்கின்ற விளையாட்டு. இந்த விளையாட்டை நடத்துவதற்கு மற்றொரு காரணம் என்னவென்று சொன்னால், இன்றைக்கு பள்ளிக்கூடத்திலே படிக்கின்ற மாணவர்கள் எல்லாம் புத்திக் கூர்மையோடு, அறிவோடு இருக்க வேண்டுமென்கிற நோக்கோடுதான் இந்த விளையாட்டை அறிமுகப்படுத்தினார்கள். நம்முடைய தமிழ்நாட்டில், மாணவர்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டு, மாணவர்கள் தவறான பாதைகளுக்குச் செல்லாமல், புத்திக் கூர்மையுடன்கூடிய இதுபோன்ற விளையாட்டை நடத்தி மாணவர்கள் விழிப்போடு இருக்க வேண்டுமென்கிற நோக்கத்தோடுதான் இந்த விளையாட்டை அறிமுகப்படுத்தியிருக்கின்றார்கள். அதற்காக, பள்ளியிலுள்ள 7 வயது முதற்கொண்டு 17 வயதுடைய மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று, மாவட்ட அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று, மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று, நவம்பர் மாதம் நடைபெறுகிற உலக அளவிலான விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் எல்லாம் இங்கே மாநில அளவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு, ஒரு விழாவாக, ஒரு தேர்த் திருவிழாவாக, அது சதுரங்க விழாவாக பள்ளி மாணவர்கள் நலன் கருதி இதுபோன்ற திட்டத்தை இந்தியாவிலேயே முதன்முறையாக அறிமுகப்படுத்தி, தமிழ்நாட்டில் இதுபோன்ற விளையாட்டிற்கு உறுதுணையாக இருக்கின்ற தலைவி மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள்தான் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விரிவான பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

2013 அக்டோபர் 28]

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கடந்த நிதிநிலை அறிக்கையில் தாக்கல் செய்து, அதற்குமேலே, மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்பட்டிருக்கிற கூடுதல் செலவினங்களுக்கான முதல் துணை மானியக் கோரிக்கையை இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள். மக்கள் நலன் சார்ந்திருக்கின்ற அந்தச் செலவினங்களை ஈடுசெய்கின்ற முதல் துணை மானியக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே எங்களுடைய ஆதரவை நாங்கள் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த நேரத்திலே நாம் பல மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றுகின்றபோது நம்முடைய மத்திய அரசு அந்த மக்கள் நலத் திட்டங்களையெல்லாம் நாசப்படுத்தக்கூடிய வகையிலே பல திட்டங்களையும், சட்டங்களையும் நிறைவேற்றி வருகிறது. கடந்த பாராளுமன்றக் கூட்டத்தில், உணவுக்கான பாதுகாப்பு மசோதா என்கிற சட்டத்தை நிறைவேற்றி, இருக்கின்ற உணவுப் பாதுகாப்பையே பறிக்கிற சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வு பெற்றபின் பெறுகிற பென்சனை பங்கு மார்க்கெட்டிலே போடுகிற அந்தப் பென்சன் மசோதாவை சட்டமாக நிறைவேற்றியிருக்கின்றார்கள். அனைத்திற்கும் மேலாக, மத்திய அரசும், மாநில அரசும் நிதிப் பங்கீடுகளைச் செய்வதற்காக 14-வது நிதிக் குழு அமைக்கப்பட்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், முழுவதும் சட்ட விரோதமாக நம்முடைய ரிசர்வ் வங்கியின் கவர்னர் திரு. ரகுராம் ராஜன் அவர்களுடைய தலைமையில் ஒரு குழுவை அமைத்து மாநிலங்களுக்கான, அதிலும் குறிப்பாக, தமிழ்நாட்டிற்குக் கொடுக்க வேண்டிய நிதியை வெட்டிக் குறைப்பதற்கான அந்தச் சதித் திட்டத்திலே மத்திய அரசு ஈடுபட்டு வருகிறது. இப்படிப்பட்ட மத்திய அரசாங்கத்தினுடைய சதித் திட்டங்களை எதிர்த்து நாடாளுமன்றத்திலேயும், நாடு முழுவதும் இடதுசாரிக் கட்சிகள் போராடிக் கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், அத்தகைய போராட்டங்களுக்கு வலு சேர்க்கின்ற வகையிலே, நாடாளுமன்றத்தில் அவற்றை எதிர்த்து வாக்களித்தது மட்டுமல்லாமல், அனுதினமும் அந்தத் திட்டங்களை எதிர்த்து குரல் கொடுக்கின்ற நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே எங்களுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2013 அக்டோபர் 28

பிற்பகல் 1-45

நெய்வேலி அனல்மின் நிலையப் பங்குகளைத் தனியாருக்கு தாரை வார்க்க மத்திய அரசு முயற்சித்தபோது, அதைத் தனியாருக்கு தாரை வார்க்க நாங்கள் அனுமதிக்கமாட்டோம், அதை நாங்களே வாங்குகிறோம் என்று சொல்கின்ற அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) அறிவித்ததற்கு பாராட்டுகளை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இப்போதுகூட நம்முடைய சென்னை விமான நிலையத்தை தனியாருக்கு குத்தகைக்கு விடுவதற்கு மத்திய அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. அதை எதிர்த்து அங்கே இருக்கின்ற ஊழியர்கள் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். இதைவிட மோசம் என்னவென்று சொன்னால், கிராமப்புறங்களில் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்ற பச்சிளம் குழந்தைகள், பாலூட்டுகின்ற தாய்மார்கள், கர்ப்பிணிப் பெண்களுக்காக உருவாக்கி செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற அங்கன்வாடிகளில், 10 சதவிகித அங்கன்வாடிகளைத் தனியாருக்கு தாரை வார்க்கின்ற திட்டத்தை இன்றைக்கு மத்திய அரசு நிறைவேற்றிக்கொண்டிருக்கின்றது. எனவே, மத்திய அரசு மக்கள் நலனைப் பற்றியே கவலைப்படாமல், செயல்படுகின்ற இந்தச் சூழ்நிலையில், மத்திய அரசாங்கத்தை எதிர்த்து ஒன்றுபட்டு எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டிய கட்டாயம் நமக்கு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இங்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற முதல் துணை மானியக் கோரிக்கையின்மீது சில கருத்துகளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

கடந்த ஆண்டு ஏற்பட்ட வரலாறு காணாத வறட்சிக்கு, நிவாரணத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதுமட்டுமல்லாமல், அந்த வறட்சியினால் பாதிக்கப்பட்டிருக்கின்ற விவசாயிகளின் அனைத்து நிலங்களையும் காப்பீடு செய்வதற்கான பிரிமியம் தொகையை தமிழக அரசே செலுத்தி, அந்த விவசாயிகளுக்கு, இன்சூரன்ஸ் தொகையைப் பெறுகின்ற வாய்ப்பையும் நம்முடைய அரசு ஏற்படுத்தித் தந்தது. ஆனால், அப்படி இன்சூரன்ஸ் செய்யப்பட்ட நிலங்களுக்கு

2013 அக்டோபர் 28] [திரு. க. பாலகிருஷ்ணன்]

ஓராண்டு முடிவு பெறுகின்ற இந்தச் சூழ்நிலையிலும்கூட இன்னும் காப்பீட்டுத் தொகை வழங்கப்படாமல் இருக்கின்றது. எனவே, மத்திய அரசு சம பங்கும், மாநில அரசு சம பங்கும் செலுத்தி, அந்தக் காப்பீட்டுத் தொகையை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். அதேபோன்று கடந்த சட்டமன்ற. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012-2013 ஆம் ஆண்டு டெல்டா மாவட்டங்களில் ஏற்பட்ட வறட்சியின்போது விவசாயிகளைக் காக்கும் நோக்கத்தோடு விவசாயிகளின் விடிவெள்ளி, மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சம்பா தாளடி பருவ நெற்பயிர்களுக்கு முழுமையான பயிர் காப்பீடு செய்ய, காப்பீட்டுக் கட்டணத்தில் விவசாயிகளின் பங்குத் தொகையையும் சேர்த்து அரசே செலுத்தும் என்று அறிவித்தார்கள். அதன்படி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்திற்கு காப்பீட்டுக் கட்டணத்திற்காக மாநில அளவில் வழங்கப்பட்ட 30 கோடி ரூபாயுடன் கூடுதலாக 15 கோடி ரூபாய் நிதியையும் ஒதுக்க ஆணையிட்டார்கள். டெல்டா மாவட்டங்களுக்காக, வேளாண் காப்பீட்டுக் கழகத்திற்கு முன்பணமாக 27.67 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பயிர் இழப்பீட்டை, பயிர் அறுவடை பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் கணக்கிட்டு, காப்பீட்டுக் கழகத்தின்மூலம் இழப்பீட்டுத் தொகை வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதை அறிந்த நம்முடைய தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் டெல்டா விவசாயிகளுக்கு உதவிடும் வகையிலே உடனடியாக நிவாரணம் வழங்க ஆணையிட்டார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் 8-2-2013 அன்று ஆணையிட்டதன் அடிப்படையிலே ஒரு ஏக்கருக்கு காப்பீட்டுத் தொகை ரூ.8,692/-ஐ முழுவதுமாகவும், ரூ.5,000/-ஐ மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்தும், சிறப்பு நிவாரணமாக ரூ.1,308/-ஐயும் சேர்த்து ஒட்டுமொத்தமாக ரூ.15,000/-ஐ உடனடியாக 524.25 கோடி நிதி ஒதுக்கீட்டில் 3,52,613 டெல்டா விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. தமிழகத்தில் பல்வேறு

[திரு. செ. தாமோதரன்] [2013 அக்டோபர் 28

மாவட்டங்களில் வறட்சியினால் ஏற்பட்ட பயிர் பாதிப்பின் அடிப்படையில் வேளாண் காப்பீட்டுக் கழகத்தின் சென்னை மண்டல அலுவலகம் 19-09-2013 அன்றுதான் மாநில அரசின் பங்குத் தொகைக்கான மானியக் கோரிக்கையினை சில குறைபாடுகளுடன் தயாரித்து அளித்தது. எனவே, இதில் காணப்பட்ட குறைபாடுகள் நம் துறையினால் சுட்டிக்காட்டப்பட்டவுடன், அதனடிப்படையிலே சரி செய்யப்பட்டு, முதல் மானியக் கோரிக்கை நிதி 17-10-2013 மற்றும் 22-10-2013 அன்றுதான் துறைக்கு கிடைக்கப்பெற்றது. ஆக, காப்பீட்டுத் தொகையினை வேளாண் காப்பீட்டுக் கழகம் மற்றும் மத்திய அரசின் ஒப்புதல் பெற்ற பின்பே விடுவிக்க இயலும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதன்மீது தனிக் கவனம் செலுத்தி, காப்பீட்டுத் தொகையினை விடுவிக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டதன் அடிப்படையிலே, 2012-2013 ஆம் ஆண்டிற்கு டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் நெல், சம்பா மற்றும் தாளடிப் பயிர்களுக்காக கணக்கிடப்பட்ட இழப்பீட்டுத் தொகையாக 740.805 கோடிக்கும், மாற்றி அமைக்கப்பட்ட வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கடலூர், நாமக்கல், சிவகங்கை மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு ரூ.49.39 கோடிக்கும், தேசிய வேளாண் காப்பீட்டுக் கழகத் திட்டத்தின்கீழ் 22-10-2013 அன்று மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளதாக வேளாண் காப்பீட்டுக் கழகம், சென்னை மண்டலம் அறிவித்துள்ளதாகத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, இழப்பீட்டு காப்பீட்டுத் தொகையை மாநில அரசு மட்டுமே வழங்குவதாக இருந்தால் அதனை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு உடனே வழங்கியிருக்கும். ஆனால், இழப்பீட்டுத் தொகையினை மதிப்பீடு செய்து விடுவிக்க, வேளாண் காப்பீட்டுக் கழகமும், மத்திய அரசும் இணைந்து அனுமதி வழங்கினால் மட்டுமே, மாநில அரசுகள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையினை வழங்க முடியும் என்ற நிலை இருந்து வருகிறது. இதை கவன ஈர்ப்புத் தீர்மானமாகக்கூட கொண்டு வந்திருக்கிறார்கள். உறுப்பினர்கள் அனைவரும் இதைப் பற்றி நன்கு அறிந்திருப்பார்கள் என்றும் நினைக்கின்றேன். இருப்பினும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்துவரும் தொடர் முயற்சிகளால் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய பயிர்க் காப்பீட்டு நிலுவைத் தொகை விரைவில் வழங்கப்படும் என்று இந்த மாமன்றத்தில், மாமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 அக்டோபர் 28]

பிற்பகல் 1-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அடுத்து, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போது, தமிழனுடைய பெருமையை உலகத்திற்கு எடுத்துக்காட்டுகிறவகையில், மதுரையிலே 100 கோடி ரூபாய் செலவிலே தமிழ்த் தாய்க்கு சிலை அமைக்கப்படும் என்கிற அறிவிப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். தமிழ் மொழியினுடைய பெருமையை உலகத்திற்கு எடுத்துக்காட்டுகிற இத்தகைய காரியத்தை நாம் செய்து கொண்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில், இன்றைக்கு தமிழ்நாட்டிலே ஆங்கிலத்திற்கான மோகம் அதிகரித்து வருவது மிகவும் கவலையளிப்பதாக இருக்கிறது. அதிலேயும் குறிப்பாக, தொடக்கப் பள்ளியிலேயே இன்றைக்கு அரசின் சார்பில் ஆங்கில பயிற்று மொழிப் பாட வகுப்புகள் துவங்கியிருக்கிற இந்தச் சூழ்நிலையில், கிராமப்புறப் பள்ளிகளிலே இருக்கிற மாணவர்கள்கூட தமிழ்ப் பாடப் பிரிவினை விட்டு விட்டு, இன்றைக்கு ஆங்கிலப் பிரிவிலே சேர்வதிலே அதிக அக்கறை செலுத்துவதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலைமை நீடிக்கும் என்று சொன்னால், நம்முடைய வீட்டுப் பிள்ளைகள், தமிழ் நாட்டுப் பிள்ளைகள் அரசுப் பள்ளிகளிலேகூட தமிழ் படிக்கின்ற வாய்ப்பு இல்லாமல் போய், எதிர்காலத்திலே தமிழ்மொழியே ஒரு கேள்விக்குறியாக ஆகிற ஆபத்து ஏற்படும் என்கின்ற காரணத்தினால் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நாங்கள் வற்புறுத்த விரும்புவது, அனைத்து தொடக்கப் பள்ளிகளிலும் தமிழ் மட்டும்தான் பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்கிற அந்த நிலையினை கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும், இல்லாவிடில், தமிழ் மிகப் பெரிய ஆபத்துக்கு உள்ளாகும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தொடக்கக்

[திரு. பி. பழனியப்பன்] [2013 அக்டோபர் 28

கல்வியில் ஆங்கிலக் கல்வி போதிக்கப்படுகிறது, அதனால் தமிழ் பாதிக்கப்படும் என்ற ஒரு கருத்தை இங்கே வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். தொடக்கக் கல்வியைப் பொறுத்தவரையில், இப்பொழுது புதிதாகப் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கின்ற காலகட்டத்தில் அதிகமானவர்கள் தனியார் பள்ளிகளுக்குப் போய்ச் சேரக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. பொதுவாக ஒரு மனிதனுக்கு ஆங்கில வழிக் கல்வி என்பது ஒரு தொடர்பு மொழியாக உள்ளது. பன்னாட்டு நிறுவனங்களுக்கு வேலைக்குச் செல்லக்கூடிய காலத்தில், தனியார் பள்ளிகளிலே படிப்பவர்களுக்கு ஆங்கில அறிவுத் திறன் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அவர்களுக்கு வேலைவாய்ப்புகள் சர்வ சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. சில நேரங்களில் தனியார் பள்ளிகளில் படிக்கும்போது, அந்த மாணவர்களுக்குக் கட்டணம் ஒரு சுமையாக இருக்கின்றது. சில நேரங்களில் பெற்றோர்கள் வறுமையால் பாதிக்கப்பட்டாலும்கூட, பல வகைகளில் போராடி எப்படியாவது அந்தக் கட்டணத்தைக் கட்டி, ஆங்கில வழிப் படிப்பை கற்றுக் கொடுக்கவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அது தொடக்கக் கல்வியாக இருந்தாலும் சரி, பள்ளிக் கல்வியாக இருந்தாலும் சரி அல்லது கல்லூரிக் கல்வியாக இருந்தாலும் சரி, தமிழ் மொழியில் கற்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தமிழ்மொழி பாதுகாக்கப்படுகிறது. இப்பேர்பட்ட சூழ்நிலையில், புதிதாக ஆங்கிலவழிக் கல்வி ஏற்படுத்தப்பட்டதன் காரணமாக மாணவர்களின் சேர்க்கை விகிதம் உயர்ந்திருக்கிறது. பொதுவாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பள்ளிக் கல்வித் துறைக்கு 14 வகையான விலையில்லா திட்டங்களை வழங்கியிருக்கிறார்கள். அதோடுமட்டுமல்லாமல், இன்றைக்கு இந்தக் கல்வித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் காரணத்தினால், கிட்டத்தட்ட ஒரு இலட்சம் மாணவர்கள் கூடுதலாக அரசுப் பள்ளிகளில் சேர்ந்து படிக்கக்கூடிய ஒரு வாய்ப்பு உருவாகி இருக்கிறது. தனியார் ஆங்கிலப் பள்ளிகளுக்குச் சென்று சேருகின்ற காலம் மாறி, தற்போது அரசுப் பள்ளிகளிலே சேருகின்ற ஒரு காலமாக மாறியிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தமிழ் எந்த வகையிலும் பாதிக்கப்படவில்லை, அதுவும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 அக்டோபர் 28]

பிற்பகல் 1-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், நீங்கள்தான் அடுத்ததாகப் பேசப்போகிறீர்களே? அப்போது பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கவலையெல்லாம் தமிழ்நாட்டிலே தமிழ் மொழியை அதற்குரிய அந்தஸ்தோடு மக்களுக்குப் போதிக்கப்படுவதில் எந்த ஆபத்தும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதுதான்.

அதுபோல, இன்றைக்கு கிராமங்களிலே அமலாக்கப்பட்டு வருகிற மகாத்மா காந்தி கிராமப்புற வேலை உறுதித் திட்டம் தமிழகத்திலும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏறக்குறைய 2,000 கோடி ரூபாய்க்குமேலே அதில் பணம் செலவழிக்கப்படுகிறது. கடந்த கூட்டத்தொடரில் வறட்சி நிவாரணத்தை அறிவிக்கிறபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 100 நாட்கள் வேலை திட்டம் என்பதற்குப் பதிலாக, 150 நாட்களாக அதிகரிக்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால், இன்னமும் கிராமப்புறங்களிலே அது 100 நாட்கள் என்கிற அளவோடு மட்டும்தான் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதை 150 நாட்களாக உயர்த்துவதோடு, அந்த வேலைத் திட்டத்திலே இன்றைக்கு வைத்திருக்கிற நேர அளவு என்பது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான கருத்தைக் கூறுகிறார்கள். டெல்டா மாவட்டங்களில் ஏற்கெனவே 100 நாட்கள் வேலை செய்த நபர்களுக்குக் கூடுதலாக, 150 நாட்கள் வேலை கொடுக்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டதன் அடிப்படையிலே, அவர்கள் தொடர்ந்து அந்த வேலைக்கு வந்துகொண்டு இருந்தார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 அக்டோபர் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோல, அந்தத் திட்டத்திற்குத் தமிழகத்திலே வைத்திருக்கிற வேலைக்கான நேர அளவு, அண்டை மாநிலங்களோடு ஒப்புநோக்குகிறபோது, மிகவும் கூடுதலாக இருக்கிறது. ஆகவே, அந்த வேலை நேரத்தைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்;

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இப்போதே சொல்லிவிட்டால் அது சிறப்பாக இருக்காது. நாளை கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்கிறபோது இந்தத் திட்டத்தில் எந்த அளவிற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழையெளிய மக்களுக்கு உதவும் கரங்களாக இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். நேரம் 1-58 ஆகிவிட்டது.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்ததாக, கடந்த சில வாரங்களுக்கு முன்னால் வந்த ஒரு செய்தி நம் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்குகிற செய்தியாக இருக்கிறது. மதுரை மாநகராட்சியில், நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செல்லூர் கா. ராஜு அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்களுக்கும் இறப்புச் சான்றிதழ் வழங்கியிருக்கிற ஒரு சம்பவம் தமிழகத்திலே மிகப் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் எவ்வளவு மோசமான காரியத்திலே ஈடுபடுவார்கள் என்பதற்கு ஒரு நல்ல உதாரணமாகத்தான் அதைப் பார்க்க முடிந்தது. இருந்தாலும், அவர்கள்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம், வழக்கு பதிவு

2013 அக்டோபர் 28] [திரு. க. பாலகிருஷ்ணன்]

செய்திருக்கிறோம் என்பதெல்லாம் ஒரு பக்கம் இருந்தாலும், இப்படிப்பட்ட நிலைமைக்கு நிருவாக முறைகேடுகள் காரணமாகும். அதை ஒழுங்குபடுத்துவதற்கு நம்முடைய அரசு உரிய கண்காணிப்பினைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல, வீட்டுமனைப் பட்டா வழங்குகிற திட்டம் தமிழகத்திலே செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதற்கான அரசாணை செப்டம்பர் 30 ஆம் தேதியோடு முடிவடைந்திருக்கிறது. அதை ஆறு மாதத்திற்கு ஒரு முறை நீட்டிப்பதற்குப் பதிலாக, நிரந்தரமான ஆணையாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நத்தம் புறம்போக்கில் குடியிருப்பவர்களுக்கு மட்டும் நாம் பட்டா வழங்குகிறோமே தவிர, ஆட்சேபணையற்ற புறம்போக்குகளில் குடியிருப்பவர்களுக்கும் அதை வகை மாற்றம் செய்து பட்டா வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, ஏற்கெனவே மதுரை மாவட்டத்திலே நடந்த கிரானைட் கொள்ளையில் ரூ.16,000 கோடிக்கு இழப்பை ஏற்படுத்தியவர்கள்மீது நம்முடைய அரசு உறுதியாக நடவடிக்கை எடுத்து, இதில் சம்பந்தப்பட்ட அத்துணை பேரும் கைது செய்யப்பட்டது, அவர்களுடைய நிறுவனங்களுக்கு 'சீல்' வைக்கப்பட்டது போன்ற கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இப்பொழுது தாது மணல் கொள்ளை புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டு, அதன்மீது நம்முடைய வருவாய்த் துறை மூலமாக விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அவ்வாறு விசாரணை நடத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்று சொன்னாலும், கிரானைட் கொள்ளையிலே எவ்வாறு தீவிரமான நடவடிக்கை எடுத்து, வழக்கு பதிவு செய்து, சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டார்களோ, அதுபோல, தாது மணல் கொள்ளையில் சம்பந்தப்பட்டவர்கள் அத்துணை பேரும் கைது செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. க. பாலகிருஷ்ணன், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 அக்டோபர் 28

***மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, தாது மணல் கொள்ளையில் ஈடுபட்டவர்களைக் கைது செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். இப்பொழுது மாண்புமிகு அம்மா அவர்கள்தான் கனிம வளங்களைப் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பது இந்த நாட்டிற்கே நன்றாகத் தெரியும். அதிலே தவறு நடந்ததென்று தகவல் வந்தவுடன், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தாது மணலைப் பொறுத்தவரை, மத்திய அரசுக்குத்தான் அதற்கான உரிமத்தை இரத்து செய்கின்ற உரிமை இருக்கின்றது, மாநில அரசுக்கு இல்லை. இருந்தாலும், அதற்கு டிரான்ஸ்போர்ட் பெர்மிட் கொடுக்கக்கூடாது என்று மாண்புமிகு அம்மா அவர்கள் நிறுத்தி, இப்பொழுது ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அந்த வழக்கு கோர்ட்டிலும் இருக்கின்றது. தயவு செய்து கைது நடவடிக்கை பற்றிப் பேச வேண்டாம். மாண்புமிகு அம்மா அவர்களைப் பொறுத்தவரை, யாராக இருந்தாலும், அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பார்கள். எல்லாக் கனிம வளங்களும் பாதுகாக்கப்படும் என்பதை இந்த அவையில் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. பாலகிருஷ்ணன், உரையை சீக்கிரம் முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது. நேரம் இல்லை. இன்னும் மூன்று, நான்கு பேர் பேச வேண்டும்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கனிம வள வியாபாரத்தை ஒட்டுமொத்தமாக தனியார் கையில் விடுவதற்கு மாறாக, அதை அரசே மொத்தமாகக் கையகப்படுத்தி நடத்துவதன்மூலம், அரசுக்கு நல்ல வருவாய் கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதை இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன்.

அதேபோல, இன்றைக்கு, விவசாய விளைபொருள்களுக்கு, குறிப்பாக, கரும்புக்கு இன்னும் விலை அறிவிக்கப்படவில்லை. அதற்கு டன்னுக்கு ரூ.4,000/- அறிவிக்கப்பட வேண்டும்.

அதேபோல, 25 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் தமிழகத்திலே இருக்கின்றார்கள். எருமைப் பாலுக்கு ஒரு லிட்டருக்கு ரூ.8/-ம், பசும் பாலுக்கு ரூ.5/-ம் உயர்த்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

2013 அக்டோபர் 28] [திரு. க. பாலகிருஷ்ணன்]

அடுத்ததாக, இங்கே சட்டம்-ஒழுங்கு சம்பந்தப்பட்ட ஒன்றை கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். குறிப்பாக, தருமபுரியிலே சில விரும்பத்தகாத சம்பவங்கள் நடைபெற்று, அங்கே 144 தடை உத்தரவு அப்போது பிறப்பிக்கப்பட்டது. அந்த நேரத்திலே, அது தேவை என்பதிலே இரு வேறு கருத்துக்கு இடம் இருக்க முடியாது. ஆனால், 144 தடை உத்தரவை நிரந்தரமான உத்தரவாக அங்கே அமலாகிக் கொண்டிருப்பது ஜனநாயக உரிமைகளுக்கு ஆபத்தை ஏற்படுத்துகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பாலகிருஷ்ணன், உரையை முடியுங்கள், ஒத்துழையுங்கள். இரண்டு மணியாகிவிட்டது. இன்னும் நான்கு பேர் பேச வேண்டும்.

திரு. க. பாலகிருஷ்ணன்: அதை இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, காவல் நிலையங்களிலே நடைபெறுகின்ற சாவுகள் தொடர்கதையாக வந்திருப்பதன்மீது உறுதியான நடவடிக்கை எடுத்து, காவல் நிலையங்கள் மக்களுக்குப் பாதுகாப்பு நிலையங்களாகச் செயல்படுகின்ற நிலைமையை உருவாக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காவல் பணியில் இருக்கிறபோது மரணமடைந்த. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் உரையை முடியுங்கள். திரு. பாலகிருஷ்ணன், கொஞ்சம் ஒத்துழையுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். காவல் பணியில் இருக்கிறபோது மரணமடைந்த 2,178 காவலர் குடும்பங்களுக்கு, கருணை அடிப்படையிலே பணி வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கோயில் நிலங்களிலே குடியிருக்கிறவர்கள் மிகவும் ஆபத்தான நிலைமையிலே இருக்கின்றார்கள். கோயில் நிலங்களிலே சாகுபடி செய்யக்கூடிய குத்தகை விவசாயிகள், இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்ட காலங்களுக்கு வழங்கப்படும் குத்தகை பாக்கி சம்பந்தமான, 20,000 வழக்குகளிலே அலைக்கழிக்கப்படுகிறார்கள். அங்கே குடியிருக்கிறவர்கள் வீட்டை, ஆக்கிரமிப்பாளர்கள் என்று சொல்லி இடித்து காலி செய்கிறார்கள். எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், கோயில் நிலங்களிலே குடியிருக்கிற, சாகுபடி செய்கிறவர்களுடைய பிரச்சினைகள் சம்பந்தமாக

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2013 அக்டோபர் 28

ஓர் உயர்மட்டக் குழு அமைத்து, அவர்களுடைய பிரச்சினைகளையெல்லாம் ஆய்வு செய்து, அவற்றுக்குத் தீர்வு காணுகிற முறையிலே அந்தக் குழுவினுடைய சிபாரிசைப் பெற்று, அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை சீக்கிரம் முடியுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: கடைசியாக, 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்று பாடிய நம்முடைய மனிதநேய பண்பாளர், 'வள்ளலார்' அவர்களுக்கு, சென்னையிலே அவர் சிறு வயதிலே வாழ்ந்த அந்த இடத்தை, அரசு விலைக்கு வாங்கி, அதை அவருடைய நினைவகமாக மாற்றித் தருவதற்கு முன்வர வேண்டுமெனக் கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் பேசுகின்றபோது, காவல் துறையைப் பற்றி சில கருத்துகளை இங்கே பதிய வைத்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, காவல் துறை மிகச் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். காவல் துறை அதிகாரிகள் யாருக்கும் பாரபட்சமில்லாமல், சம நிலையோடு, தங்களுடைய கடமையை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதனையும் நான் இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

பிற்பகல் 2-05

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குளிர்காலக் கூட்டத்தொடர் தொடங்கிய மறுநாள், 24 ஆம் தேதி வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையில் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், 'காமன்வெல்த் மாநாட்டில்' இந்தியா கலந்துகொள்ளக்கூடாது என்றும், இலங்கையில் ஈழத் தமிழ் மக்களை இனப் படுகொலை செய்வதை

2013 அக்டோபர் 28] [திரு. சு. குணசேகரன்]

நிறுத்தும்வரை, இலங்கையை காமன்வெல்த் கூட்டமைப்பிலிருந்து தள்ளி வைக்க வேண்டுமென்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை இங்கே நிறைவேற்றியிருக்கிறார்கள். அதை மீண்டும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நான் வரவேற்கிறேன். இலங்கையில் இனப் படுகொலைக்கும், இனத் துவேஷத்திற்கும் ஆளாக்கப்பட்டுள்ள ஈழத் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் புதிய பரிமாணத்தை, நம்பிக்கையை ஏற்படுத்துகிற விதமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தை வரவேற்கிறேன். ஜனநாயகம், மனித உரிமை, அனைத்து தேசிய இனங்களுக்கான சமமான அரசியல், பொருளாதார, சமூக உரிமைகளை இலங்கை தொடர்ந்து தமிழ் மக்களுக்குத் தர மறுத்தும், இராணுவ பலத்தின்மூலம் அதிகாரத்தை நிலைநிறுத்தியும் இலங்கை அதிபர் ராஜபக்சே நடவடிக்கைகளை மேற்கொள்கிற இந்த நிலையில், பல தேசிய இனங்களை உள்ளடக்கி, ஒன்றுபட்ட இந்தியாவாகப் பரிணமித்து நிற்கும் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்திய நாட்டை ஆளும் காங்கிரஸ் அரசு, தனது முந்தைய வெளியுறவுக் கொள்கைகளைக் கைவிட்டு, இனப் படுகொலை செய்திடும் ராஜபக்சேவிற்கு தொடர்ந்து நேரடி, மறைமுக ஆதரவைத் தந்துகொண்டிருக்கும் இந்த நேரத்தில், தமிழ் மக்கள் மட்டுமல்ல, உலகமே இந்தியாவைத் திரும்பிப் பார்க்க வைக்கும் வகையில், இந்தியாவின் உன்னத, ஜனநாயகத் தலைவர்களான காந்தி, நேரு போன்றோரின் ஆன்மாவைத் தலைநிமிரச் செய்ய, இலங்கைவாழ் தமிழ் மக்களின் நலனுக்காக அரசினர் தீர்மானங்களை இந்த அவையில் தொடர்ந்து நிறைவேற்றி, உலகம் முழுவதுமுள்ள ஜனநாயக சக்திகளுக்கு நம்பிக்கையை நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஊட்டியுள்ளார்கள்.

இலங்கை செய்யும் தவறுகளைச் சுட்டிக் காட்டினால், இலங்கை, சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளோடு நட்பை ஏற்படுத்தி, இந்தியாவின் பாதுகாப்பிற்கு ஆபத்தை ஏற்படுத்தும். எனவே, இந்தியா ராஜதந்திர உணர்வோடு, இனப் படுகொலை செய்யும் ராஜபக்சேவை அரவணைத்துச் செல்கிறது என்று மிக மோசமான, அபத்தமான கருத்துகளை காங்கிரஸ் கட்சியும், தமிழ்நாட்டிலிருந்து சென்ற காங்கிரஸ் கட்சியின் மத்திய அமைச்சர்களும் முன்வைக்கிறார்கள். இந்தியாவின் பாதுகாப்பும், பலமும் ராஜபக்சேவின் கையில் இருப்பதாகக் கூறுவது இந்தியாவிற்கு அவமானம். இந்தியாவின் பாதுகாப்பு, இந்திய மக்களின்

[திரு. சு. குணசேகரன்] [2013 அக்டோபர் 28

ஒற்றுமையில் இருக்கிறது. பல மொழி, பண்பாடு, கலாச்சார உணர்வுகளை உள்ளடக்கிய நூற்றுக்கணக்கான இனங்களைக் கொண்டது இந்திய தேசம். இங்குள்ள ஒவ்வொரு தேசிய இனமும் தங்கள் அடையாளங்களை, பண்பாடுகளை, மொழியை அடையாளப்படுத்துவதோடு, இந்தியர்கள் என்ற மகத்தான உணர்வோடு ஒன்றுபட்டுள்ளார்கள். இந்த ஒற்றுமையே இந்தியாவின் பலம், பாதுகாப்பு.

எனவே, தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை மத்தியில் ஆளும் காங்கிரஸ் அரசு கவனத்தில் கொண்டு செயல்படுத்த வேண்டும். எந்த அரசியல் உள்நோக்கமோ, தன் சொந்த அரசியல் நலனோ இல்லாது, ஈழத் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகத் தமிழ்நாடு சட்டமன்றத்திலே தமிழகத்தின் வலிமை மிகுந்த தலைவராகத் திகழும் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தொடர்ந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை மைய அரசு ஏற்று செயல்படுத்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இன்றைக்கு ரூ.6,000 கோடி அளவிலே வைக்கப்பட்ட இந்தத் துணை மானியக் கோரிக்கையில், கிட்டத்தட்ட ரூ.3,000 கோடி அளவிற்கு தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய நலிந்த பகுதி மக்களுடைய நல்வாழ்விற்காகப் பல திட்டங்களைத் தொடர்ந்து தீட்டிக் கொண்டிருக்கிற இந்தத் துணை மானியக் கோரிக்கையையும் நான் வரவேற்கிறேன்.

கடந்த கூட்டத் தொடரின்போது வறட்சி நிவாரணமாக 50 விழுக்காடு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 5,000 ரூபாய் என்றும், டெல்டா விவசாயிகளுக்கு 15,000 ரூபாய் என்றும் ரூ.1,005 கோடி வரை நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், சிவகங்கை மாவட்டம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கணக்கெடுப்பதில் ஏற்பட்ட தவறுகள் காரணமாக பல விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்படவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் வெளியிட்ட அறிவிப்பின் காரணமாக, பாதிக்கப்பட்ட விவசாயிகள் முறையாக விண்ணப்பங்களை அளித்திருக்கிறார்கள். அப்படி விண்ணப்பங்கள் அளித்த விவசாயிகளுக்கு உரிய நிவாரணத்தை நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

2013 அக்டோபர் 28] [திரு. சு. குணசேகரன்]

அதோடு, கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிற நிலையில், கடந்த கூட்டத் தொடரிலே கடுமையான நிதி நெருக்கடியிலும் இந்த நிவாரணத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மைய அரசு இதற்கான நிதி உதவியை வழங்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் வைத்திருந்தோம். ஆனால், மைய அரசு இதுவரை அதற்கான நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறதா? அப்படியானால், நமது மாநிலத்திற்கு வறட்சி நிவாரணமாக எவ்வளவு நிதி கொடுத்திருக்கிறது என்ற விவரத்தை நமது நாட்டு மக்களுக்குத் தெரிகிற வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, தேசிய காப்பீட்டுத் திட்டத்தில் இன்றைக்கும் நிவாரணம் வழங்கப்படாமல் இருக்கிறது. அதற்கான விரிவான விளக்கத்தை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் மறுபருவம் கூடியிருக்கிற இந்த நேரத்தில் உடன்டியாக நிவாரணத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகளை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2-10

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வறட்சி நிவாரணத் திட்டத்திற்கு மத்திய அரசு தன்னுடைய பங்காக எவ்வளவு நிதி வழங்கியிருக்கிறது என்கிற விவரத்தைக் கேட்டதோடு, தன்னுடைய தொகுதியில், சில இடங்களில் விவசாயப் பெருமக்களுக்கு வறட்சி நிவாரணங்கள் வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், எந்தவொரு மாநில அரசும் இதுவரை வழங்காத வறட்சி நிவாரணத்தை தமிழக மக்களுக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அறிவித்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அதன் அடிப்படையில், அன்றைய காலகட்டத்தில் வறட்சி நிவாரண விவரங்கள் வருவாய்த் துறையின் மூலமாகவும்,

[திரு. என்.டி. வெங்கடாச்சலம்] [2013 அக்டோபர் 28

வேளாண்மைத் துறையின் மூலமாகவும் கணக்கெடுக்கப்பட்டு, உரிய முன்மொழிவுகள் அந்தந்தப் பகுதியினுடைய வட்டாட்சியர், கோட்டாட்சியர் மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, அந்த வழிகாட்டுதல்களின்படி, மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளைச் சார்ந்த விவசாயப் பெருமக்களுக்கும் வறட்சி நிவாரணங்கள் முழுமையாக வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த நேரத்தில் சுட்டிக்காட்டுகிறேன்.

வறட்சி நிவாரணத்தைப் பொறுத்தவரையிலே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு 19,660 கோடி ரூபாயை மத்திய அரசாங்கத்திலிருந்து எதிர்பார்த்து, தமிழக அரசின் சார்பாக முன்மொழிவுகளை அனுப்பியிருந்தது. தொடர்ந்து தமிழகத்தைப் புறக்கணித்து வருகின்ற மத்திய அரசாங்கம், வறட்சி நிவாரணத்திலும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசைப் புறக்கணித்திருக்கிறது என்பதற்கு அத்தாட்சியாக, பத்தொன்பதாயிரம் கோடி ரூபாய்க்கும்மேல் நம்மால் முன்மொழிவுகள் அனுப்பப்பட்டும், மத்திய அரசாங்கம் வெறும் 624.69 கோடி ரூபாயை மட்டும் வழங்கி, இந்த நிலையிலும் தமிழகத்திற்கு ஓரவஞ்சனையை செய்திருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் மணல், தாது மணல் போன்ற பிரச்சினைகள் உருவெடுத்திருக்கிற இந்தநேரத்தில் சாதாரண விவசாயிகள் தங்களுடைய நிலங்களுக்குத் தேவையான செம்மண், கரம்பை மண் போன்றவற்றை அள்ளுவதற்கும், தாங்கள் வெட்டிய கிணற்றின் மண்ணை அப்புறப்படுத்துவதற்கும், பண்ணைக் குட்டைகள் வெட்டுகிற நேரத்தில் கூடுதலாக இருக்கக்கூடிய மண்ணை அப்புறப்படுத்துவதற்கும் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள். வருவாய்த் துறையினரிடம் அனுமதி கேட்கின்ற நேரத்தில் ஒவ்வொன்றிற்கும் தனித் தனியாக அனுமதி பெற வேண்டுமென்று சொல்கிறார்கள். கிராம நிருவாக அலுவலர் அனுமதி கொடுக்கின்றார். அந்த அனுமதிச் சீட்டை

வைத்துக்கொண்டு மண்ணை அள்ளினாலும், காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து கைது செய்கிறார்கள். மாட்டு வண்டியாக இருந்தாலும், டிராக்டராக இருந்தாலும் காவல் துறையினர் பிடித்து, ஒரு மாதம், இரண்டு மாதம் என அதை காவல் நிலையத்திலே வைத்து, கிட்டத்தட்ட 25,000 ரூபாய், 75,000 ரூபாய் என்று அபராதம் விதிக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு மோசமான நிலை தமிழ்நாட்டிலே தொடர்ந்து நிலவிக்கொண்டிருக்கிறது. உடனடியாக விவசாயிகள் தங்களது சொந்த நலனுக்காக அள்ளக்கூடிய. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவைக்குத் தவறான தகவலைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கிராம நிருவாக அலுவலர் மண் அள்ளுவதற்கு அனுமதி கொடுத்ததற்குப் பின்னால், காவல் துறை கடுமையான நடவடிக்கை எடுக்கிறது என்று எந்த அடிப்படையில் சொல்கிறார் என்பது தெரியவில்லை. எந்தக் குட்டையாக இருந்தாலும் சரி, தனியாருடைய பட்டா நிலமாக இருந்தாலும் சரி, இப்பொழுது பசுமைத் தீர்ப்பாயத்தின் வாயிலாக சுற்றுச்சூழல் துறையிடமிருந்து அனுமதி பெற்றதற்குப் பின்னால்தான் மண்ணை எடுக்க வேண்டும் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த வகையில், அனுமதி இல்லாமல் இருந்திருந்தால் மட்டும் காவல் துறை நடவடிக்கை எடுத்திருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு ஏதாவது ஒரு நிகழ்வைச் சொல்வாரென்றால், அவருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வண்டி மண் அல்லது கிணற்று மண் அள்ளுவதற்குக்கூட அனுமதி வாங்குவதில் எவ்வளவு பெரிய சிரமம் இருக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும். வருவாய்த் துறை அதிகாரிகளைப் பொறுத்தவரையில், பிரச்சினை இல்லை; ஓரளவு சமாளிக்கலாம். ஆனால், காவல் துறை இதில் தலையிட

[திரு. சு. குணசேகரன்] [2013 அக்டோபர் 28

வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? காவல் துறைக்கென சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள் நிறைய இருக்கின்றன; அவற்றில் கவனம் செலுத்தலாம். ஆனால், அதை விட்டுவிட்டு, மாட்டு வண்டியில் மண் அள்ளுவதை, ஒரு வண்டி கிணற்று மண் அள்ளிக் கொண்டு போவதை காவல் துறை பிடித்து, கிட்டத்தட்ட, 25,000 ரூபாய் 75,000 ரூபாய் என அபராதங்கள் விதிப்பது மக்களிடையே மிகப் பெரிய பதற்றத்தை உருவாக்குகிறது என்பதைக் கவனப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். கிராம நிருவாக அதிகாரிகளோ, கனிம வளத் துறை அதிகாரிகளோ, பொதுப் பணித் துறை அதிகாரிகளோ சட்ட விரோதமாக மண் அள்ளுபவர்களைப் பிடித்துக்கொண்டு போய் காவல் நிலையத்திலே ஒப்படைப்பார்கள். காவல் துறையினரே நேரடியாகச் சென்று, அந்த வண்டியைப் பிடித்து, அபராதம் போடுவதற்கு அவர்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை என்பதை முதலில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். காவல் துறை fine போட்டதற்கு நீங்கள் ஏதாவது ஆதாரம் கொடுத்தால், நிச்சயமாக நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம். ஏனென்று சொன்னால், காவல் துறைக்கு இருக்கின்ற அதிகாரத்திற்குட்பட்டு, வண்டி over load-ஆக இருந்தால் அதற்காக fine போடுவார்கள். ஆனால், அதை விட்டுவிட்டு மாட்டு வண்டியில் மண் அள்ளிக்கொண்டு வருவதை காவல் துறை பிடித்து fine போடுகிறார்கள் என்று நீங்கள் சொல்வதை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது. அதற்கு முன்னாலேயே வருவாய்த் துறை, கனிம வளத் துறை அல்லது பொதுப் பணித் துறை அதிகாரிகள் யாராவது பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்திருப்பார்கள். அதுதான் உண்மை.

பிற்பகல் 2-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: காவல் துறையினர் அதை பிடித்து, F.I.R. பதிவு செய்து வருவாய்த் துறைக்கு அனுப்புகிறார்கள். வருவாய்த்

2013 அக்டோபர் 28] [திரு. சு. குணசேகரன்]

துறையினர் fine போடுகிறார்கள். காவல் துறைக்கு இந்த வேலையே தேவையில்லை. ஒரு மாட்டு வண்டியில் அல்லது ஒரு Tractor-ல் கிணற்று மணலை அள்ளுவதைத் தடுக்க வேண்டியது ரெவின்யு அதிகாரிகள் பார்க்க வேண்டிய வேலை. எனவே, இதில் காவல் துறை தலையிட வேண்டிய தேவையில்லை. ரெவின்யு அதிகாரிகள் பிடித்து காவல் துறையிடம் அவர்களை ஒப்படைத்தால் அதில் தவறு கிடையாது. ஆனால், காவல் துறையே நேரடியாக...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணல் பிரச்சினையில் அவர்களுக்கு எவ்வளவு யூனிட் மணல் தேவைப்படுகிறது என்பதற்கு அவர்களிடம் முன்னனுமதி நடைச் சீட்டு தரப்படுகிறது. அந்த நடைச் சீட்டுடன் மணல் அள்ளிக் கொண்டு சென்றால், அவர்களை யாரும் தடுத்து நிறுத்த முடியாது. நடைச் சீட்டு இல்லாமல் மணல் அள்ளிக் கொண்டு செல்கின்றவர்களைக் காவல் துறையினர் சரிபார்ப்பார்கள். நடைச் சீட்டு அவர்கள் கையிலிருந்தால், விட்டுவிடுவார்கள். நடைச் சீட்டு இல்லாமல் முறைகேடாக மணல் அள்ளிக் கொண்டு சென்றால், F.I.R. போட்டு, தாலுகா அலுவலகத்தில் தாசில்தாரிடம் ஒப்படைப்பார்கள். சம்பந்தப்பட்ட கோட்டாட்சியர் அவர்கள் சட்டப்படியாக அதற்குரிய அபராதத் தொகையை அவர்களிடமிருந்து வசூலிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வார்கள் என்பதனை நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது மணல் அல்ல, கரம்பை மண். கண்மாயில் இருக்கக்கூடிய கரம்பை மண்.

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணல் மட்டுமல்ல, கிராவல், மணல், எந்த மணலாக இருந்தாலும் அனுமதி பெற்றுத்தான் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும். அனுமதியில்லாமல் எந்த மணலையும், எந்த கிராவலையும் எடுத்துச் செல்வதற்குச் சட்டத்தில் இடமில்லை.

[2013 அக்டோபர் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது உச்ச நீதிமன்றத்தினுடைய உத்தரவு. பசுமைத் தீர்ப்பாயமும், உச்ச நீதிமன்றமும் ஏற்கெனவே 18-5-2013-ல் வெளியிட்டதை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு, அனைத்து மாநில அரசுகளுக்கும் ஒரு தாக்கீது அனுப்பியிருக்கின்றது. எந்த இடத்தில் மணல் எடுத்தாலும் மாநிலத்தினுடைய சுற்றுச்சூழல் துறையின் அனுமதி பெற்றுத்தான் எடுக்க வேண்டுமென்று பசுமைத் தீர்ப்பாயம் ஆணையிட்டிருக்கின்றது. ஏதோ மாநில அரசு ஆணையிட்டதைப் போல சொல்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவுசெய்து தெரிந்துகொள்ள வேண்டும். அது Supreme Court Order என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், உரையை முடியுங்கள்.

திரு. சு. குணசேகரன்: என்னுடைய சிவகங்கை தொகுதியில் பாப்பாங்குளம் என்ற கிராமத்தில் கடந்த ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதி திடீரென்று எந்தவிதமான முன்னறிவிப்பும் இல்லாமல், சரியான நில அளவு இல்லாமல் காவல் துறை மற்றும் சிலருடைய தூண்டுதலால் 28 தலித் மக்களுடைய குடியிருப்புகள் இடித்து, தகர்க்கப்பட்டன. அதன் பிறகு மிகப் பெரிய பதற்றம் அங்கு ஏற்பட்டது. ஆனாலும், மாவட்ட ஆட்சித் தலைவர் உள்ளிட்ட அனைவரும் இணைந்து அந்தத் தவறை சரி செய்யும்விதமாக, பல நல்ல நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். அதனடிப்படையில், அந்த மக்களுக்கு பல்வேறுவிதமான நிவாரண உதவிகளை நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அரசு விரைவாக நிறைவேற்றியது. ஆனாலும், இடிக்கப்பட்ட அந்த வீடுகளை மீண்டும் கட்டிக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கோரிக்கையில், ரூபாய் 30 இலட்சம் அளவில் கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த வீடுகளை இன்னும் கட்டிக் கொடுக்காத நிலையில், இந்தப் பிரச்சினை மீண்டும், மீண்டும் ஒரு பதற்றத்தை அங்கு தோற்றுவிக்கிறது. எனவே, ஏற்பட்ட தவறுக்கு ஒரு நிவாரணமாக, அந்த மக்களுக்கு உடனடியாக அந்த 28 வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசுக்கு அனுப்பியிருக்கிற கருத்துருவின் அடிப்படையில், நிதி ஒதுக்கீடு செய்து வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

2013 அக்டோபர் 28] [திரு. சு. குணசேகரன்]

அதைப்போல, தமிழ்நாடு முழுவதும் பாதாள சாக்கடைத் திட்டம் அமல்படுத்தப்பட்டிருக்கிறது. அதைச் சுத்தம் செய்கிற நேரத்தில் விபத்து ஏற்பட்டு, தொழிலாளர்கள் மரணமடைகிறார்கள். கடந்த மாதம் சிவகங்கையில் தனியார் இரண்டு பேரைக் கூப்பிட்டுச் சென்று பாதாள சாக்கடையைச் சுத்தம் செய்கிற நேரத்தில் மரணமுற்று இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சு. குணசேகரன், 15 நிமிடங்களுக்குமேல் ஆகிவிட்டது. உரையை முடியுங்கள்.

திரு. சு. குணசேகரன்: ஆனால், இதுவரை அதற்கான எந்தவித நிவாரணமும் கிடைக்காத நிலை நீடிக்கிறது. ஆகவே, நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு சென்று, அப்படி பாதிப்பு ஏற்படக்கூடியவர்களுக்கும் முதல்வரின் நிவாரண நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குரூப்-1 வயது வரம்பை 45 வயதாக உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்கிறேன். ஆசிரியர் தகுதித் தேர்வு மதிப்பெண்கள், இட ஒதுக்கீடு அடிப்படையில் மாற்றியமைக்கப்பட வேண்டும். இப்பொழுது 60 விழுக்காடு மதிப்பெண்கள் என்று இருக்கிறது. அதைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் தொடர்ந்து வைக்கிறார்கள். அதையும் செய்துதர வேண்டும்.

பிற்பகல் 2-20

அதைப்போல, இன்றைக்கு தமிழ்நாடு அரசினுடைய பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான நிதியாதாரத்தைப் பெற்றுத் தருவது 'டாஸ்மாக்' நிறுவனம். 20 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு இலாபத்தை அது ஈட்டிக் கொண்டிருக்கிறது. ஆனால், அந்த டாஸ்மாக் நிறுவனத்திலே பணியாற்றக்கூடிய பணியாளர்களுக்கு எந்தவிதமான. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆசிரியர்களுக்கான தகுதித் தேர்வில் 60 மதிப்பெண்கள் என்றிருப்பதைக் குறைக்க வேண்டும்; அதுவும் பிற்படுத்தப்பட்ட

[திரு. பி. பழனியப்பன்] [2013 அக்டோபர் 28

சமுதாயத்தினருக்கு, பட்டியலினத்தைச் சார்ந்தவர்களுக்கு அதைக் குறைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் குழந்தைகளுக்கான கட்டாய உரிமைக் கல்விச் சட்டத்தை 2009-ல் கொண்டு வந்தது. அந்தக் கட்டாய உரிமைக் கல்விச் சட்டத்தில், குழந்தைகளுக்குக் கிடைக்கின்ற வாய்ப்புகள் எவையெவை; ஆசிரியர்களை எவ்வாறு நியமிக்க வேண்டுமென்ற சில அம்சங்களையெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனடிப்படையிலே, மூன்றாவது முறையாக தமிழக முதல்வராக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்று, ஆட்சிக்கு வந்தவுடனேயே, 2011 ஆம் ஆண்டே, குழந்தைகளுக்கான இலவசக் கல்வி கட்டாய உரிமைச் சட்டத்தை அமல்படுத்திய மாநிலம், தமிழ்நாடு மாநிலம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நிலையில், தேசிய ஆசிரியர் தேர்வு குழுமம் (National Council for Teacher Education) ஆசிரியர்களை எவ்வாறு தேர்வு செய்ய வேண்டுமென்று சில விதிமுறைகளை வகுத்திருக்கிறது. பல்கலைக்கழகத்தில் ஒரு பேராசிரியரை நியமிக்க வேண்டுமென்றால், பல்கலைக்கழகம் அதற்கென சில விதிமுறைகளை நிர்ணயித்திருக்கிறது. அதைப்போல, பள்ளிக்கூடத்திலே பணிபுரிகின்ற ஆசிரியர்களைத் தேர்வு செய்வதில்கூட சில விதிமுறைகளை வைத்திருக்கிறார்கள். அவர்கள் வகுத்திருக்கிற விதிமுறைகளின் அடிப்படையில்தான், ஆசிரியர்களுக்கான தேர்வு நடத்தப்படுகிறது.

அந்த அடிப்படையிலே, ஓர் ஆசிரியர் தேர்வு பெற வேண்டுமென்று சொன்னால், குறைந்தபட்சம் 60 விழுக்காடு மதிப்பெண்கள் பெற வேண்டுமென்று ஒரு நியதி இருக்கிறது. அந்த அடிப்படையில் 150 மதிப்பெண்களுக்கான தேர்வாக அது நடத்தப்படுகிறது. அதில் 90 மதிப்பெண்கள் பெறுபவர்கள், அதாவது 60 சதவிகித மதிப்பெண்கள் பெறுவர்களுக்கு அந்த வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் அந்தந்த மாநில அரசு விரும்பினால், அந்தத் தகுதித் தேர்வின் மதிப்பெண்ணைக் குறைத்துக் கொள்ளலாம். இது முதன்முதலாக அமல்படுத்தப்பட்டபோது, அதிக எண்ணிக்கையில் ஆசிரியர்கள் தேர்ச்சி பெறவில்லை. இதைக் கருத்திலே கொண்டு, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

2013 அக்டோபர் 28] [திரு. பி. பழனியப்பன்]

இது ஆசிரியர் தகுதித் தேர்விற்கான போட்டி என்பதால், இதிலே குறைந்த மதிப்பெண் பெறுபவர்களை நாம் தேர்வு செய்தால், மாணவர்களுக்குச் சரியாகக் கிடைக்க வேண்டிய அந்த உரிமை, குழந்தைகளுக்குக் கிடைக்க வேண்டிய கல்வி, பாதிக்கப்படும். ஆகவே, வேண்டுமானால் அவர்களுக்கு மீண்டும் ஒரு தேர்வை நடத்தி—அவர்களுக்கு ஒரு பயிற்சி கொடுத்து, தேர்வு நடத்தி—அதிலே அவர்கள் வெற்றி பெற ஒரு வாய்ப்பை வழங்கலாம் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆலோசனையின்பேரில், இது கொண்டுவரப்பட்டது. இது மாணவர்களுக்கு, குழந்தைகளுக்குப் போய்ச் சேருகிற ஓர் அடிப்படைக் கல்வி. அவர்கள் தரமான கல்வியைப் பெறவேண்டும்; அதற்குத் தகுதியான ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதனடிப்படையில்தான் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்தின்மூலமாக இதற்கான தேர்வை நடத்தி, இன்றைக்குத் தகுதியான ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி கே. பாலபாரதி, என்ன? (குறுக்கீடு) என்ன விளக்கம்? உறுப்பினர்கள் எல்லாம் பேசி முடித்துவிட்டார்கள். இன்னும் அவர் பேச வேண்டும்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு சின்ன விளக்கம் கேட்க விரும்புகிறேன். பட்டதாரி ஆசிரியர்கள் கடந்த முறை தேர்வு எழுதியபோது, 90 மார்க் வாங்கியவர் தேர்ச்சி பெற்றார். இந்த முறை, இரண்டாவது முறை, அதே ஆசிரியர்கள் தேர்வு எழுதுகிறபோது, 96 மார்க் வாங்கியவர் fail ஆகிவிட்டார். 90 மார்க் வாங்கியவர் ஆசிரியராகத் தேர்வு செய்யப்பட்ட சூழ்நிலையில், இப்போது 96 மார்க் வாங்கியவர் தேர்வு செய்யப்படவில்லை. இந்த cut-off மதிப்பெண்ணை எப்படி நீங்கள் தீர்மானிக்கிறீர்கள்? இது கொஞ்சம் சிரமத்தையும், சிக்கலையும் தருகிறது. நம்முடைய தமிழக இளைஞர்கள் படித்துவிட்டு வேலைக்காகக் காத்திருக்கிறார்கள். ஆகவே, இந்த cut-off மதிப்பெண்ணை சீராகத் தீர்மானிப்பதன்மூலம் அவர்கள் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு உதவியாக இருக்கும். எனவே, அதைப் பரிசீலிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

[2013 அக்டோபர் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பொறுத்தவரையில், இரண்டு முறையிலே தேர்வு நடத்தப்படுகிறது. அதாவது, இடைநிலை ஆசிரியர்களுக்கான தகுதித் தேர்வை நடத்தி, ஆசிரியர்கள் அதன்மூலமாக தேர்வு செய்யப்படுகிறார்கள். முதுகலை / பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அது போட்டித் தேர்வு. இது எழுத்துத் தேர்வு. அந்தத் தேர்வுக்கும், இந்தத் தேர்வுக்கும் சம்பந்தமில்லை. பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், போட்டித் தேர்வு. போட்டித் தேர்வில் தேர்வு பெற்றவர்களை இட ஒதுக்கீடு அடிப்படையில், அவர்களில் யார் அதிக மதிப்பெண் பெற்றிருக்கிறார்களோ, அந்தத் தர வரிசையின் அடிப்படையிலே, பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். ஆனால், தொடக்கக் கல்வியைப் பொறுத்தவரையில், தகுதித் தேர்வில் வெற்றி பெற்றவர்கள் ஆசிரியர்களாகப் பணியமர்த்தப்படுவார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் ஒத்துழைப்புக் கொடுங்கள்; மணி 2-25 ஆகிவிட்டது.

பிற்பகல் 2-25

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாஸ்மாக் பணியாளர்களின் பல்வேறு கோரிக்கைகளை, அவர்களை அழைத்துப் பேசி, அந்தக் கோரிக்கைகளைத் தீர்த்து வைக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: உங்கள் உறுப்பினர் கோரியதற்குத்தான் நான் பதில் சொல்கிறேன். அதாவது, முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், cut off கிடையாது, அதிக மதிப்பெண்கள் யார் பெறுகிறார்களோ, அவர்களை அடிப்படையாக வைத்துத்தான் ஆசிரியர் பணியில்

2013 அக்டோபர் 28] [திரு. ப. பழனியப்பன்]

அமர்த்தப்படுவார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்களுக்கு இதுபற்றிய நுட்பம் நன்றாகத் தெரியும். தெரிந்திருந்தும் அவர் இந்தக் கேள்வியை இங்கே எழுப்பியிருக்கிறார். எவ்வாறு மருத்துவக் கல்லூரிகளில் cut off marks நிர்ணயம் செய்யப்படுகிறது என்றால், மொத்த இடங்கள், தேர்வு எழுதும் மாணவர்கள் வாங்கக்கூடிய மதிப்பெண்கள் ஆகியவை மேலிருந்து கீழாக வரும். வருடத்திற்கு வருடம் cut off marks சதவீதம் கூடும் அல்லது குறையும். அதைப்போலத்தான் பி.எட். தேர்வு எழுதியவர்களில், இருக்கின்ற பணியிடங்களுக்குத் தகுந்தாற்போல் cut off mark-ஐ முடிவு செய்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், உரையை முடியுங்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட்டுறவு வங்கிகளுக்கு தமிழ்நாடு முழுவதும் அதிகமான ஊதிய உயர்வை அளித்திருக்கிறார்கள். மிக்க மகிழ்ச்சி. ஆனால், அதே நேரத்தில் அதை பல்வேறு வடிவங்களில் வடிவமைத்து, மாநில தலைமை வங்கிக்கு 21 சதவீதம் என்றும், சிவகங்கை, திருநெல்வேலி, தஞ்சாவூர், நீலகிரி உள்ளிட்ட 4 மாவட்டங்களுக்கு வெறும் 7 சதவீதம் என்றும், 1,700 கோடி ரூபாயை பல்வேறு விதமாகப் பிரித்து, இப்பொழுது ஊதிய உயர்வை அளித்திருக்கிறார்கள். பல்வேறு காரணங்களால், அந்த வங்கியின் இலாபம் கடந்த ஆண்டு குறைந்திருந்தது, அதை ஒத்துக்கொள்கிறேன். இருந்தாலும் இலாபம் என்பதை போனஸ் கணக்கிடுவதற்காக வைத்துக்கொள்ளலாமே தவிர, ஊதியத்திற்குக் கணக்கிட முடியாது. ஊதியம் என்பதற்கு உச்ச நீதிமன்றமே சம வேலைக்கு, சம ஊதியம் என்ற தீர்ப்பை அளித்திருக்கிறார்கள். எனவே, அந்தத் தீர்ப்பின் அடிப்படையில், இலாபம் ஈட்டக்கூடிய வங்கிகளுக்கு, வேறு வழியில் அந்த ஊழியர்களுக்கான பணப் பயனைத் தரலாம். ஆனால், ஊதியத்தை தமிழ்நாடு முழுவதும் ஒரே சீராக வழங்குவதுதான் சிறப்பாக இருக்கும். அந்த அடிப்படையில். . .

[2013 அக்டோபர் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சு. குணசேகரன், உட்காருங்கள். நேரமாகிவிட்டது. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிவகங்கை மாவட்ட கூட்டுறவு வங்கியில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு தமிழ்நாடு முழுவதும் உள்ள கூட்டுறவு வங்கிகளில் வழங்குவதுபோல், ஒரே சீராக ஊதிய உயர்வைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். கூட்டுறவு வங்கிகளின் வாழ்வாதாரத்தை அடிப்படையாக வைத்துத்தான் பணியாளர்களுக்குச் சம்பளங்கள், ஊதிய உயர்வுகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு கனிவான வேண்டுகோள். நீங்கள் அதைப் புரிந்துகொள்ள வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அமைந்த பிறகு, மேற்படி வங்கிகளில் பணிபுரிந்த வங்கிப் பணியாளர்களுக்கு 31-12-2012வுடன் இந்த ஊதிய உயர்வின் காலகட்டம் முடிந்துவிட்டது. 1-1-2013 முதல் ஊதிய உயர்வு வழங்க வேண்டிய காலச் சூழ்நிலை. அப்படிப்பட்ட சூழ்நிலையில், மாண்புமிகு அம்மா அவர்கள் பதிவாளர்களை அழைத்து, இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆணையிட்டதன்படி, பதிவாளர் அவர்கள் மேற்படி வங்கியின் செயல்பாடுகளை ஒவ்வொரு மாவட்ட வாரியாகப் பகிர்ந்தளித்து, கீழ்க்கண்ட விகிதாச்சாரப்படி கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகள் கண்டறியப்பட்டு, அதனடிப்படையில் வங்கிப் பணியாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை தாழ்மையோடு இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

21 சதவீத சம்பள உயர்வு மாநில வங்கிக்குக் கொடுக்கப்பட்டுள்ளதாக இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த மாநில வங்கியானது 16,000 கோடி ரூபாய்க்குமேல் வணிகம் செய்து தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது. தமிழ்நாடு மாநில தலைமை வங்கி ஒரு பிரிவாகவும், (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், சொல்வதைக் கவனியுங்கள், கேட்டுக்கொள்ளுங்கள். 1,700 கோடி ரூபாய்க்குமேல் வணிகம் செய்து, தொடர்ந்து இலாபம் ஈட்டிக்கொண்டிருக்கின்ற வங்கிகள் ஒரு பிரிவாகவும், 1,700 கோடி ரூபாய் வரை வணிகம் செய்து தொடர் இலாபத்தில் இயங்குகின்ற வங்கிகள் ஒரு பிரிவாகவும்,

2013 அக்டோபர் 28] [திரு. செல்லூர் கா. ராஜு]

நடப்பு இலாபத்திலும், குவிந்த நட்டத்திலும், (குறுக்கீடு) அதாவது கொடுக்கக்கூடாது என்பது அல்ல. அதற்கும் வாழ்வாதாரம் வந்துவிட்டால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கொடுக்கத் தயாராக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் ஒன்றை தெரிந்துகொள்ள வேண்டும். தற்போது நிதியமைச்சராக இருக்கக்கூடிய திரு. ப. சிதம்பரம் அவர்களின் அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, அந்த வங்கியே செயலிழக்கக் காரணமாக இருந்தது. அதை நீட்டித்துக் கொடுத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். அந்த வகையில், இந்த வங்கியைப் பாதுகாக்கக்கூடிய பொறுப்பும், கடமையும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், இங்கேயிருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கும் இருக்கிறது என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

பிற்பகல் 2-30

அந்த வகையில், இந்த வங்கி நான்காவது category-ல் வருகிறது. நான் என்னுடைய பதிலை முதலில் சொல்லிவிடுகிறேன். நீங்கள் அதனைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். 31-3-2012 வரை இந்த வங்கிகளுடைய செயல்பாட்டிற்கிணங்க, 20 சதவிகிதம், 21 சதவிகிதம், 15 சதவிகிதம் என்று இப்படி பிரித்துக் கொடுத்து, இந்த நான்கு மாவட்ட வங்கிகள் மட்டும் நடப்பு இலாபத்திலும், குவிந்த நட்டத்திலும் இருக்கிறது. இப்படி இருக்கின்ற காரணத்தினால்தான் இன்றைக்கு சம்பள உயர்வு கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை. வாழ்வாதாரத்தில் இந்த வங்கிகள் மேன்மையடையும்போது, நிச்சயமாக, அங்கே பணியாற்றும் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே ஆணையிட்டுள்ளார்கள். இதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இதுவரை வரலாறு காணாத அளவிற்கு ஊதிய உயர்வை முன் தேதியிட்டு, arrears-வுடன் வழங்கியிருக்கிற ஒரே முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை எந்த அரசும் வழங்கவில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள்தான் வழங்கியிருக்கிறார்கள். இதனை அனைத்துப் பணியாளர்களும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். ஒரே ஒரு சங்கம் மட்டும் அதை எதிர்த்து இன்றைக்கு போராடுவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களையும் அழைத்து பதிவாளர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்

[திரு. செல்லூர் கா. ராஜு] [2013 அக்டோபர் 28

அவர்கள் சொன்னதுபோல் ஒரே மாதிரி கொடுக்க வேண்டுமென்று சொன்னால், வாழ்வாதாரத்தை அந்த வங்கி திரும்பவும் இழந்துவிடும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் ரிசர்வ் வங்கியிடமிருந்து லைசென்ஸ் பெற்றிருக்கிறது. மீண்டும் இந்த ஊதிய உயர்வு கொடுக்கும்பட்சத்தில், அது வாழ்வாதாரத்தை இழந்துவிடும் என்ற சூழ்நிலையில்தான் அந்தப் பணியாளர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்கவில்லை. அங்கே பணியாற்றும் பணியாளர்கள் ஊதிய உயர்வு கேட்டு போராடவில்லை, ஆர்ப்பாட்டம் பண்ணவில்லை, கோரிக்கை வைக்கவில்லை, கேட்காமலேயே கொடுத்திருக்கிறார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். வாரி, வாரி வழங்கியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பாராட்டுதல்களை நீங்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், உங்கள் உரையை சீக்கிரம் முடிக்க மாட்டீர்களா? நேரம் இப்போது 2-32 ஆகிவிட்டது. இன்னும் இரண்டு உறுப்பினர்கள் உரையாற்ற வேண்டும்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6-7-2010 அன்று செய்துகொண்ட 12(3) ஒப்பந்த அடிப்படையில், கூடுதலாக 7 சதவிகித ஊதிய உயர்வு கொடுக்க வேண்டுமென்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த விவரங்களை காலத்தின் அருமை கருதி, உங்கள் அறையில் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவுதான், மாண்புமிகு உறுப்பினர், உங்கள் உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள் குணசேகரன். புது சப்ஜெக்ட்டிற்குள் போக வேண்டாம். (குறுக்கீடு) புது சப்ஜெக்ட்டை மற்றொரு நாள் பேசிக்கொள்ளலாம். உட்காருங்கள். (குறுக்கீடு) நிறைய வாய்ப்புகள் உங்களுக்கு வரும், இப்பொழுது உட்காருங்கள். (குறுக்கீடு) பிறகு பேசலாம். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது உட்காருங்கள். (குறுக்கீடு) பேசாமல் இருங்கள். நேரம் என்ன ஆகிறது என்று பாருங்கள், 2-33 ஆகிவிட்டது. (குறுக்கீடு) திரு. சு. குணசேகரன், ஒரே ஒரு நிமிடத்தில் உங்கள் உரையை முடிக்க வேண்டும்.

2013 அக்டோபர் 28]

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மற்றும் அரசு உதவிபெறக்கூடிய பள்ளிகளில் மடிக்கணினி வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால், அரசுப் பள்ளிகளில் கூடுதலான பாடப் பிரிவுகள் இல்லாத காரணத்தினால், சுய நிதி அடிப்படையில் பாடப் பிரிவுகளைத் துவங்கியிருக்கிறார்கள். அந்தப் பாடப் பிரிவுகளில் படிக்கக்கூடிய மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்காமல் இருப்பது உண்மையிலேயே வருத்தமாக இருக்கிறது. எனவே, அதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும், இதோடு சேர்த்து சொல்லிவிடுகிறேன். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், நீங்கள் முதலில் உட்காருங்கள். (குறுக்கீடு)

திரு. சு. குணசேகரன்: அரசு உதவிபெறும் ஆரம்பப் பள்ளி முதல் மேல்நிலைப் பள்ளிகள் வரை ஆசிரியர் பணி நியமனம் செய்கிறீர்கள், ஆனால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன். (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசு உதவிபெறும் பள்ளிகளில் சுயநிதிப் பாடப் பிரிவுகளில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கப்படுவதில்லையென்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். பொதுவாக, தேர்தல் வாக்குறுதியின்போது மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கக்கூடிய மாணவ, மாணவியர்களுக்கும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் படிக்கக்கூடிய மாணவ, மாணவியர்களுக்கும் விலையில்லா லேப்-டாப் வழங்கப்படும் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பு, ஆட்சி அமைத்தவுடனேயே மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் இந்தத் திட்டத்திற்காக ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கித் தந்தது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதன் அடிப்படையில், இன்றைக்கு அரசு மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கக்கூடிய மாணவ, மாணவியர்களுக்கும், அரசு உதவிபெறுகிற மேல்நிலைப்

[திரு. பி. பழனியப்பன்] [2013 அக்டோபர் 28

பள்ளிகளில் படிக்கக்கூடிய மாணவ, மாணவியர்களுக்கும், அரசுக் கல்லூரிகளில் படிக்கக்கூடிய மாணவ, மாணவியர்களுக்கும், அரசு உதவிபெறும் கல்லூரிகளில் படிக்கக்கூடிய மாணவ, மாணவியர்களுக்கும் லேப்-டாப் வழங்கப்பட்டு வருகின்றது. இந்தச் சூழ்நிலையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசுப் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகளில் சுயநிதி பாடப் பிரிவுகளில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கும் நீங்கள் லேப்-டாப் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையைச் சொல்லி இருக்கிறீர்கள். பொதுவாக அரசு உதவிபெறும் பள்ளிகள், சுயநிதி பாடப் பிரிவுகளைத் தொடங்குகிறபோது, அவர்கள் அரசாங்கத்திற்கு விண்ணப்பிக்கிறார்கள். நாங்கள் ஏற்கெனவே அரசு உதவி பெறும் பாடப் பிரிவு மாணவர்களைச் சேர்த்து நடத்தி வருகிறோம். எங்களிடம் கட்டட வசதி இருக்கிறது. எங்களிடம் நிலப்பரப்பு வசதி இருக்கிறது. நாங்களே ஆசிரியர்களைப் போட்டுக்கொள்கிறோம். அரசாங்கம் எந்தவிதமான உதவியும் செய்யத் தேவையில்லை. இப்படிச் செய்ய நாங்கள் எப்போதும் உதவி கேட்க மாட்டோம் என்று ஓர் உத்தரவாதம் வழங்கியதன் அடிப்படையில், எழுதிக் கொடுத்ததன் அடிப்படையில்தான் அந்த சுயநிதி பாடப் பிரிவுகளைத் தொடங்குவதற்கு அரசாங்கம் அனுமதி அளிக்கிறது. ஆகவே, இது ஏழைக் குழந்தைகளுக்காக இருக்கக்கூடிய திட்டம். உதவிபெறும் பள்ளிகளில் அரசாங்கப் பாடத்திற்கு மட்டும்தான் வழங்கப்படும். சுயநிதிப் பாடப் பிரிவில் அங்கு அவர்கள் கட்டணம் வாங்கிக் கொண்டுதான் படிக்க வைக்கிறார்கள். இலவசக் கல்வியில் படிக்க வைப்பதில்லை. அரசு உதவி பெறக்கூடிய பள்ளிகளில் கட்டணம் வசூலித்துக் கொண்டுதான் அவர்கள் அந்தப் பாடங்களைப் படிக்க வைக்கிறார்கள். ஆகவே, அந்தத் திட்டம் சுயநிதிப் பாடப் பிரிவுகளில் படிக்கக்கூடிய மாணவர்களுக்குப் பொருந்தாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள்.

***திரு. ஆர். சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்களின் மனதில் நிற்பவர் யார்? என்கிற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.

2013 அக்டோபர் 28] [திரு. ஆர். சீனிவாசன்]

அவர்கள் பாடலின் வரை வரிகளுக்கேற்ப இன்று தமிழக மக்களின் மனதில் நீங்காத இடம் பிடித்து, தமிழக மக்களுக்காக வாழ்ந்து, பல்வேறு சாதனைகளை செய்து, பொற்கால ஆட்சி நடத்தி வரும் பொன்மனத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அமர்ந்திருக்கும் திசை நோக்கி எனது நன்றி கலந்த வணக்கத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் முதற்கண் சமர்ப்பித்து, எனது சிறிய உரையைத் துவங்குகிறேன்.

தமிழக வரலாற்றில், சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த சுதந்திர தின விழாவில், எங்களது ஆற்காடு நகராட்சியைத் தமிழகத்திலேயே மூன்றாவது சிறந்த நகராட்சியாகத் தேர்வு செய்து, பாராட்டி, பரிசு தந்து, சான்றிதழ் வழங்கிய மனித தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எங்களது ஆற்காடு நகராட்சியின் சார்பாகவும், ஆற்காடு நகர மக்களின் சார்பாகவும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காவேரி நடுவர் மன்றம் அமைக்கப்பட்டு 22 ஆண்டுகளாகியும் தமிழக மக்களை வஞ்சித்து வந்தது மத்திய அரசு. மாண்புமிகு அம்மா அவர்களின் சிறந்த அறிவாற்றலாலும், இடையறாத முயற்சியினாலும் போராடி காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை உச்ச நீதிமன்றத்தின்மூலம் இந்திய அரசிதழில் வெளியிட்டு தமிழ்நாட்டிற்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் பெருமை தேடித் தருவதில் மகத்தான வெற்றி பெற்று, வருங்கால சந்ததியினரும் பயன்பெறும் வண்ணம், சாதனை புரிந்திட்டார் நம் தானைத் தலைவி அம்மா அவர்கள். இலங்கை அதிபர் ராஜபக்சேவை போர்க் குற்றவாளி எனப் பிரகடனம் செய்யவும், இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்க வேண்டுமெனவும், காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளக் கூடாது எனவும் தமிழக சட்டமன்றத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானங்களை நிறைவேற்றித் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களின் நெஞ்சங்களிலும், இலங்கைவாழ் தமிழ் மக்களின் நெஞ்சங்களிலும் பால்வார்த்த நம் தங்கமான தலைவியை இந்த நல்ல நேரத்தில் நாடே தொலைநோக்குப் பார்வையுடன் பார்த்துக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய் இல்லாமல் நாம் இல்லை. இதுவரை மக்களுக்காக, இன்னமும் மக்களுக்காக, இனியும் மக்களுக்காக என்றிருக்கும் எங்கள் தாயே! தங்கத்

[திரு. ஆர். சீனிவாசன்] [2013 அக்டோபர் 28

தாரகையே! தமிழகத்தின் சங்கத் தமிழ் மகளே! தினந்தோறும் ஒளிரும் திராவிட திருவிளக்கே! எங்கள் குலவிளக்கே! பகைக்கு இருப்பாய், பாசத்தின் இருப்பாய், வீரத்தின் தொகுப்பாய் விளங்கும் எங்கள் அன்னையே! வல்லரசு நாடுகளும் வாழ்த்துகின்ற நல்லரசு தந்துகொண்டிருக்கும் எங்கள் தலைவியே! மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மகத்தான ஈராண்டிற்கு மேலாக இவ்வரசு, யாரும் இதுவரை செய்திடாத எண்ணற்ற சாதனைத் திட்டங்களை வகுத்தும், செயல்படுத்தியும் வருகின்றது.

தேர்தல் வாக்குறுதிகளை, சீராக, செம்மையாக மக்கள் பயன்பெறும் விதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவற்றைக் குறைந்த கால அளவிற்குள் இம்மாமன்றத்தில் எடுத்துக்கூற இயலாது என்றாலும், அவற்றில் சிலவற்றை எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மாவின் நல்லரசில் மக்கள் போற்றும் மகத்தான விலையில்லா அரிசி, மங்கையருக்கு தாலிக்குத் தங்கம், இல்லத்தரசிகளின் எண்ணங்களை ஈடேற்றும்விதமாக பணிப் பளுவினைக் குறைக்க விலையில்லா மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி வழங்கும் திட்டம், தமிழக மாணவ, மாணவிகள் உலகத் தர கல்வியில் ஏற்றம் பெறும் வகையில் அவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி மற்றும் நோட்டுப் புத்தகங்கள் போன்ற 14 வகையான படிப்பிற்கான உபகரணங்கள், பொதுமக்கள் ஏற்றம்பெறும் வகையில் விலையில்லா கறவை மாடுகள், ஆடுகள், முதியோர் ஓய்வூதியத் திட்டம், அம்மா திட்டத்தின்மூலம் பொதுமக்களின் குறைகளை உடனடியாகத் தீர்வு செய்து வருவது போன்ற மகத்தான திட்டங்கள் எண்ணற்றவை.

பள்ளி மாணவர்களுக்கு உயர்ந்த கல்வித் தரத்துடன் சத்தான சத்துணவுத் திட்டத்தில் 13 வகையான உணவுகளை அளித்து மகத்தான வரலாறு படைத்து வரும் நல்லரசாகவும் திகழ்ந்து வருகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் தொலைநோக்குத் திட்டம் 2023-ன்மூலம் தமிழகம் தலைசிறந்த மாநிலமாகத் திகழ்ந்திடும் வகையில் திட்டங்களை வகுத்த அரசின் மேலும் ஓர் குடிநீர்த் திட்டம், மக்கள் போற்றும் அம்மா குடிநீர்த் திட்டம். 'வயிற்றுக்குச் சோறிட வேண்டும், இங்கு வாழும்

2013 அக்டோபர் 28] [திரு. ஆர். சீனிவாசன்]

மனிதருக்கெல்லாம்' என்ற மகாகவி பாரதியாரின் வரிகளுக்கேற்ப ஏழை, எளிய, நடுத்தர மக்கள் வயிறார உணவு உண்ணுவதற்கு மக்களின் ஏகோபித்த வரவேற்புடன் சிறப்பாகச் செயல்படும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த அம்மா உணவகங்கள்.

பிற்பகல் 2-40

கடந்தகால தி.மு.க. ஆட்சியில் பாழ்பட்டுக் கிடந்த மின் துறையைச் சீர்செய்து, மீண்டும் மின் துறை ஒளிரும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையினை மக்கள் பாராட்டுகிறார்கள். அல்லும், பகலும் உழைத்திட்ட அம்மாவின் சீரிய நடவடிக்கையில் தமிழகம் மிகைமின் மாநிலமாக ஒளிரும் காலத்தை மிக விரைவில் காணப் போகிறோம்.

கடலும், காற்றும் சேர்ந்தால் அலைகள் பிறக்கும்; கல்லும், உளியும் சேர்ந்தால் சிலைகள் பிறக்கும்; அழகும்; ரசனையும் சேர்ந்தால் கலைகள் பிறக்கும்; சிந்தனையும், செயலும் சேர்ந்தால் சாதனைகள் பிறக்கும்; சாதனைகளும், நீங்களும் சேர்ந்தால் சரித்திரம் பிறக்கும்; ஆம். நீங்கள் சரித்திரத்தின் பிறப்பு, அதுவே உங்கள் பிறப்பின் சிறப்பு. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த முதல் துணை மானியக் கோரிக்கையில் சென்னைக்கு அருகில் நெம்மேலியில் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைப்பதற்கு மேலும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழக விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் நல்லரசு, விவசாயிகளுக்கு சூரிய சக்தியின்மூலம் இயங்கும் பம்பு செட்டுகள் அமைத்திட நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் இணை உணவு அளிப்பதற்காகக் கூடுதல் செலவினத்திற்கு மேலும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவிப்புக்கு ஏற்ப நெசவாளர்களுக்கு சூரிய சக்தியுடன் பசுமை வீடுகள் கட்டித்தர மேலும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் 'John Hay College of Criminal Justice'. இது நியூயார்க்கில் உள்ள புகழ்பெற்ற போலீஸ் பயிற்சிக் கல்லூரி. அக்கல்லூரியின் புத்தகம் அம்மாவின் சிந்தனையை, அம்மாவின் ஆட்சித் திறனை, அம்மாவின் அதிவேக செயல்திறனை,

[திரு. ஆர். சீனிவாசன்] [2013 அக்டோபர் 28

அம்மாவின் ஆளுமைத் திறமையை, நுனிநாக்கு ஆங்கிலப் புலமையை, வியந்து பாராட்டிப் பதிவு செய்துள்ளது. வழக்கமாக அகில உலகிற்கே அமெரிக்காதான் வகுப்பு எடுக்கும். ஆனால், நம் அம்மா அமெரிக்காவிற்கே வகுப்பு எடுக்கும் ஆசிரியை ஆனார். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைய சூழலில் அம்மாவின் பிரவேசம்தான் இன்னொரு இமயமாய் இந்தியாவைக் காக்கும். நமது தென்னகத்தின் பொன்னரசி, நாளைய தினம் பாரதத்தின் பேரரசியானால், இந்தியா வல்லரசாகும். இந்தியாவை நல்லரசு ஆளும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு மனிதன் வீதியில் அடிபட்டு விழுந்து கிடந்தால், விழுந்து கிடந்தவன் வேறு யாரும் அல்ல, அது நான் என்று உணர்பவனே வைணவன் என்கிறது இராமானுஜ தரிசனம்.

சிலுவையில் அறைந்தவர்களுக்கு பாவ மன்னிப்பு வேண்டிய பெருங்கருணையாளர்-கர்த்தர் இயேசு.

தன்னுடைய சிறிய தந்தை அம்சாவின் உடலைப் பிளந்து ஈரலைச் சுவைத்த இந்தாவையும், அருமை மகள் ஜைனப்பையும், ஈட்டியால் குத்திய அப்பாரையும் மன்னித்த அருளாளர் நபிகளார்.

அருள்மிகு இராமானுஜர், கர்த்தர் இயேசு, அருளாளர் நபிகளார் வழியில் தமிழக மக்களின் துயர் துடைக்கும் 'மகாத்மா', நாளைய பாரத மக்களைப் பாதுகாக்கும் 'பரமாத்மா'. அம்மா அவர்களின் 'வீடு தேடி வரும் அம்மா திட்டம்'. மினி பேருந்துகளை மக்களின் பயன்பாட்டிற்காக அறிவித்து பல சாதனைகள் செய்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். உலகிற்கே வழிகாட்டியாய் விளங்கும் ஒப்பில்லாத் திட்டம் அம்மாவின் மழைநீர் சேகரிப்புத் திட்டம்.

தினம், தினம் புதிய திட்டங்கள். அறிவிப்புகள் வந்தவுடன் அரசாணைகள். ஆணைகளுக்கு உடனடியாக நிதி ஒதுக்கீடு. ஒதுக்கீடுகள் உடனடியாக பயனாளிகளைச் சென்று அடைதல் என புயலின் வேகத்தில் புதிய திட்டங்கள் வரிசையாய்ப் புறப்பட்டன. திட்டங்கள் யாவும் ஓட்டு நலத் திட்டங்கள் அல்ல. அவை அனைத்தும் நாட்டு நலத் திட்டங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவின் சீர்மிகு திட்டங்கள். கடவுளின் இருப்பிடமாம் கோயிலைக் காத்திடும் ஆலய பராமரிப்புத் திட்டம். பசிப்பிணி போக்கும் அன்னதானத் திட்டம். இந்தியாவிலேயே

2013 அக்டோபர் 28] [திரு. ஆர். சீனிவாசன்]

முதன்முறையாக பெண் கமாண்டோ படை அமைக்கும் சிரிய திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்தகால ஆட்சியிலே வேலைவாய்ப்பின்மை, பாதுகாப்பின்மை, நீதியின்மை, நிதியின்மை, கடமையின்மை, கொள்கையின்மை என பல்வேறு இன்மைகள். தமிழ்நாட்டில் இன்னும் சொல்லப்போனால், ஆட்சியில் அவர்களுக்கே பெரும்பான்மையின்மை.

இருண்டு கிடந்த தமிழகத்தை மீட்டெடுத்தவர் எங்கள் அம்மா அவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் எந்தக் கொள்கையை வைத்து ஆட்சியைப் பிடித்தாரோ அந்தக் கொள்கைகளைப் புறம் தள்ளிவிட்டு, தமிழ்நாட்டின் உரிமைகளை விட்டுக்கொடுத்து, தன்னலத்திற்காகவும், அரசியலில் தனக்கு எதிராக உள்ளவர்களை அழிப்பதற்காகவும் காங்கிரஸின் காலடியில் சரணாகதி அடைந்தவர்கள் யார்? இலங்கைத் தமிழர்கள் அழிய உறுதுணையாக இருந்தது யார்? காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்யாமல் பார்த்துக்கொண்டது யார்? முல்லைப் பெரியாறு பிரச்சினையில் வாய்மூடி மௌனியாக இருந்தது யார்? சில்லறை வணிகத்தில் அந்நிய முதலீட்டிற்கு ஆதரவாக வாக்களித்தது யார்? தமிழர்களுக்கு எதிரான தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை ஆதரித்தது யார்? என தொடர் துரோகம் செய்த தமிழினத் துரோகி யார்?

தமிழக மக்களின் நலனை அடகு வைத்து தன்னலத்தை நிறைவேற்றிக்கொள்ளும் மனிதநேயமற்ற சுயநலவாதி யார் என்பதையும், இதுபோன்ற துரோகச் செயல்களை எல்லாம் கட்டவிழ்த்துவிட்டு காட்டு தர்பார் ஆட்சியை நடத்திக்கொண்டிருந்த ஊழல் பேர்வழிகளை மக்கள் சக்தியால் முறியடித்து அவர்களைப் புறமுதுகு காட்டி ஓடவைத்து, நாட்டிலே நல்லாட்சி மலரச் செய்துள்ள நம் தானைத் தலைவி அம்மா அவர்களை இந்த நாடறியும், நாட்டு மக்களும் நன்கு அறிந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் பணிவான வேண்டுகோள். எனது தொகுதிக்குட்பட்ட. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொகுதிக் கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள். பதிவு செய்து கொள்ளலாம்.

[திரு. ஆர். சீனிவாசன்] [2013 அக்டோபர் 28

திரு. ஆர். சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'உலகத்தின் தூக்கம் கலையாதோ,
உள்ளத்தின் ஏக்கம் தொலையாதோ,
உழைப்பவர் வாழ்க்கை மலராதோ,
ஒருநாள் பொழுதும் புலராதோ'

என்பது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாடல் வைர வரிகள். அந்தப் பாடல் வரிகளை மெய்ப்பிக்கும்வகையில், உலகத்தின் தூக்கம் ஒரு நாள் கலையும், மக்கள் உள்ளத்தின் ஏக்கமெல்லாம் ஒரு நாள் தொலையும், உழைப்பவர் வாழ்க்கையும் ஒரு நாள் மலரும், அந்த ஒரு நாள் பொழுது புலரும்போது, அந்த நாள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் டெல்லி செங்கோட்டையிலே பாரதப் பிரதமராக வீற்றிருக்கும் நாளாக இருக்க வேண்டுமென மேசையைத் தட்டும் ஒலி) எல்லாம் வல்ல இறைவனை வேண்டி, வணங்கி, என்னையும் இம்மாமன்றத்தில் பேச வைத்து, அழகு பார்த்த மனிதப் புனிதர், மாணிக்கத் தலைவி, மாண்புமிகு "அம்மா" அவர்களுக்கு எனது கோடானு கோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.

பிற்பகல் 2-45

தொகுதிக் கோரிக்கைகள்: விளையாட்டு வீரர்களைக் கண்டறிவதிலும், ஊக்கப்படுத்துவதிலும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நிகர் அவர்களே!

வேலூர் மாவட்டத்திற்கு 46 ஏக்கர் நிலம் விளையாட்டுத் திடலுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் 1991, 1996 ஆம் ஆண்டு வழங்கியுள்ளர்கள். அதனை மேம்படுத்தி உள் விளையாட்டு அரங்கங்கள், மைதானங்கள் என அனைத்து வசதிகளை உள்ளடக்கிய விளையாட்டு அரங்கம் அமைத்துத் தர வேண்டுகிறேன்.

ஆற்காடு தொகுதி மக்கள் ஏற்றம் பெறும் வகையில் கலவையில் ஓர் அரசுக் கலைக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுகிறேன்.

கணியம்பாடி ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தித் தர அம்மா அவர்களின் பொற்பாதங்களில் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

2013 அக்டோபர் 28] [திரு. ஆர். சீனிவாசன்]

திமிரியில் ஓர் அரசு பாலிடெக்னிக் கல்லூரி அமைக்கவும், ஆற்காடு நகரத்தில் உள்ள பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்யவும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆற்காடு, திமிரி ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள், ஆற்காடு பேருந்து நிலைய நெரிசலைத் தவிர்க்க 70 அடி புறவழிச் சாலை அமைக்கவும், ஆற்காடு நகரில் கழிவுநீர் பாலாற்றில் கலப்பதைத் தடுக்கும் வகையில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கவும், ஆற்காடு நகரத்தைச் சுற்றியிருக்கும் கழிவுநீர் கால்வாய்களைப் புதுப்பித்து தரவும் கோருகிறேன்.

விவசாயிகள் நலன் கருதி கலவை மற்றும் ஆற்காடு நகரத்தில் ஒரு நேரடிக் கொள்முதல் நிலையம் அமைக்கவும், விவசாயிகள் தங்கள் நிலங்களில் விளையும் விளைபொருட்களைப் பாதுகாக்க ஆற்காடு தொகுதியில் ஒரு சேமிப்புக் கிடங்கு (3000 டன்) அமைத்துத்தரவும் கோருகிறேன்.

ஆற்காடு நகரத்தில் உள்ள காவல் நிலையத்திற்குக் காவலர் குடியிருப்பு ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன். ஆற்காடு நகரத்தின் வழியாகச் செல்லும் பொதுப் பணித் துறை கால்வாய்களைச் சீரமைத்துத் தர வேண்டுகிறேன்.

12,000 மக்கள்தொகை கொண்ட கணியம்பாடி ஊராட்சியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்திட வேண்டுகிறேன்.

ஆற்காடு தொகுதியில் உள்ள வளவனூர் கிராமத்திலிருந்து சென்னை-பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையை இணைக்கும் ஆற்றுப்பாலம் அமைத்துத் தரக் கோருகிறேன் (2 கி.மீ). இந்தக் கிராமத்திலிருந்து தேசிய நெடுஞ்சாலையைச் சென்றடைய 5 கிலோமீட்டர் ஆகும். ஆனால் சுற்றி வந்தால் 40 கி.மீ. ஆகும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திமிரி ஒன்றியம், ஆரூர் ஊராட்சியில் பொன்னம்பலம் செல்ல பெரிய மடுவு ஒன்று உள்ளது. இந்த மடுவின் குறுக்கே பொதுமக்களின் பயன்பாட்டிற்கு பாலம் அமைத்துத்தர ஆணையிடுமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

கணியம்பாடி ஒன்றியம், நாகநதி ஆற்றுப் பாலத்திற்கு இடையே புதிய பாலம் ஒன்று கட்டித்தருமாறும், இந்தப் பாலத்தினால் 30

[திரு. ஆர். சீனிவாசன்] [2013 அக்டோபர் 28

கிராம மக்கள் பயனடைவார்கள் என்பதையும் மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விளையாட்டுப் போட்டிகளை எடுத்துக் கொண்டால், அதிகமாக உலகளவில் நடைபெறும் போட்டிகளிலும், தெற்காசிய போட்டியிலும், காமன்வெல்த் போட்டியிலும் பளு தூக்கும் போட்டியில்தான் நம் வீராங்கனைகள் அதிக தங்கப் பதக்கங்கள் பெற்றுள்ளனர். மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே உலகளவில் நடந்த பளு தூக்கும் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற மல்லேஸ்வரி என்ற வீராங்கனைக்கு இந்தியாவிலேயே மாண்புமிகு அம்மா அவர்கள்தான் பரிசு வழங்கி, பாராட்டியுள்ளீர்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்துள்ள விளையாட்டுப் போட்டிகளில் பளு தூக்கும் போட்டியையும் சேர்க்குமாறு தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

உலக அளவில் ஜெர்மனி மற்றும் ஐந்து நாடுகளில் மட்டுமே உள்ள நவீன குப்பை அள்ளும் இயந்திரத்தை (Dust bin) இந்தியாவிலேயே தமிழ்நாட்டில், முதன் முறையாக எங்கள் ஆற்காடு நகராட்சியில் செயல்படுத்த நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் பணிந்து வணங்கி கேட்டுக்கொள்கிறேன்.

கணியம்பாடி ஒன்றியம், அடுக்கம்பாறை ஊராட்சி, மேட்டுஇடையம்பட்டி, நஞ்சுகொண்டாபுரம் ஆகிய கிராமங்களில் உள்ள ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளைத் தரம் உயர்த்தி உயர்நிலைப் பள்ளிகளாக மேம்படுத்தித் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வணங்கி கேட்டுக்கொள்கிறேன்.

கணியம்பாடி ஒன்றியம், மூஞ்சூர்பட்டு ஊராட்சி, ஆற்காட்டான் குடிசை கிராமத்தில் ஏற்கெனவே மூலிகைப் பண்ணை செயல்பட்டு வருகிறது. மேலும், இந்தப் பண்ணையை விரிவுபடுத்த நிதி ஒதுக்கீடு செய்ய ஆணை வழங்குமாறு மாண்புமிகு அம்மா அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கணியம்பாடி ஒன்றியம், மூஞ்சூர்பட்டு ஊராட்சியில் சுமார் 500 ஆண்டுகள் பழமை வாய்ந்த அருள்மிகு ஸ்ரீ லட்சுமி நரசிம்ம சுவாமி பெருமாள் கோயில் உள்ளது. இந்தக் கோயிலை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கோயில் புனரமைப்புத்

2013 அக்டோபர் 28] [திரு. ஆர். சீனிவாசன்]

திட்டத்தின்கீழ் சீரமைக்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆற்காடு ஒன்றியம், அரும்பாக்கம், ஆதி திராவிடர் காலனிக்கு பகுதிநேர கூட்டுறவுக் கடையும், கணியம்பாடி ஒன்றியம், துத்திப்பட்டு ஊராட்சி, காமராஜர் நகர், மூஞ்சூர்பட்டு ஊராட்சி, தெற்குப் பகுதி, கணியம்பாடி பாரதி நகர், வல்லம் ஊராட்சி, சந்தனக் கொட்டாய் ஆகிய பகுதிகளுக்குப் பகுதிநேர கூட்டுறவு நியாய விலைக் கடைகளை ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி கேட்டுக்கொள்கிறேன்.

கணியம்பாடி ஒன்றியம், அடுக்கம்பாறை ஊராட்சியில் உள்ள ஓட்டேரியை தூர்வாரி, செம்மைப்படுத்தி நீர்த்தேக்கம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள், ஐந்து நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013-2014 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மருத்துவப் படியை ஆண்டொன்றுக்கு ரூ.10,000/-லிருந்து ரூ.12,000/- ஆக உயர்த்தி சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்தமைக்குத் தமிழக அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் கடந்த மே மாதம் சென்னை மாநகரக் காவல் துறையினருக்கு உணவுப் படி ரூ.100/-லிருந்து ரூ.200/- ஆக இரட்டிப்பு செய்து தரப்படுமென்று கூறப்பட்டது. கடந்த வாரம் சென்னை மாநகரக் காவல் ஆணையர் அலுவலக உத்தரவின்படி ஆய்வாளர்களுக்கு 25 நாட்கள் உணவுப் படியும், விடுப்பு நாட்களுக்கு E.T.R. (Extra Time Remuneration) வழங்கவும், உதவி ஆய்வாளர்கள் மற்றும் ஆய்வாளர்களுக்கு 30 நாட்கள் உணவுப் படிக்குப் பதிலாக 25 நாட்கள் மட்டுமே வழங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே, மீதமுள்ள ஐந்து நாட்களையும் சேர்த்து 30 நாட்களுக்கும் உணவுப் படி வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[திருமதி எஸ். விஜயதரணி] [2013 அக்டோபர் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 23-8-2010-க்கு முன்னர் சான்றிதழ்கள் சரிபார்ப்பு முடிந்த, பட்டதாரி ஆசிரியர்கள், இளநிலை ஆசிரியர்கள் பணி நியமனங்களுக்கு, ஆசிரியர் தகுதித் தேர்வு தேவையில்லை எனவும், அவர்களுக்குக் காலிப் பணியிடங்களில் பணி வழங்குமாறும் ஆணை பிறப்பித்த உயர் நீதிமன்ற மதுரைக் கிளையின் உத்தரவை அமல்படுத்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகக் கூட்டுறவுத் துறையில் காலியாகவுள்ள உதவியாளர் பணியிடங்களுக்கு எழுத்துத் தேர்வும், நேர்முகத் தேர்வும் முடிவுற்ற நிலையில், பணியாளர்களைப் பணி நியமனம் செய்ய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழக அரசு வறட்சி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ள நிதியென்பது ரூ.1,346 கோடி என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று தெரிவித்துள்ளார்கள். அதில் கிட்டத்தட்ட 50 சதவிகிதமான ரூ.624.69 கோடியை மத்திய அரசு வழங்கியிருக்கிறதென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, மத்திய அரசிடம் கோரிய ரூ.19,000 கோடி இதுவரை செலவிடவில்லையென்பது உறுதியாகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சமூக நலத் துறையின்கீழ் பணிபுரியும் சத்துணவுத் திட்ட அங்கன்வாடிப் பணியாளர்களை, முழுநேர ஊழியர்களாக வகைமாற்றம் செய்து, அரசு ஊழியர்களாகத் தரம் உயர்த்த ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் ஆவின் நிறுவனத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு, 2012-2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், நான் வைத்த கோரிக்கையின் அடிப்படையில், பென்ஷன் வழங்கப்படும் என்று மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் பதில் கூறினார்கள். ஆனால், இதுநாள்வரை வழங்கப்படவில்லை. பென்ஷன் வழங்கும் திட்டம் எந்த நிலையில் இருக்கிறதென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவின் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது

2013 அக்டோபர் 28] [திரு. வி. மூர்த்தி]

சம்பந்தமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, அதற்குண்டான கமிட்டி அமைக்கப்பட்டு, அந்தத் திட்டம் ஆய்வில் உள்ளதென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள திருநங்கைகள், திருநம்பிகளுக்கு கல்வி, வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு வழங்கி, அவர்களுக்கு சமூகத்தில் அங்கீகாரமும், உரிய மரியாதையும் கிடைத்திட அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது கோரிக்கையை ஏற்று, தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்விக்கு இணையாக, ஆங்கிலவழிக் கல்வி புகுத்தப்பட்டமைக்கு நான் என்றென்றும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி பாராட்டுவேன். ஆங்கிலவழிக் கல்வி அளிக்கப்படும் தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை எத்தனை என்று அறிய விரும்புகிறேன். அதில், எத்தனை மாணவ, மாணவியர் கல்வி பயின்று பயன்பெறுகின்றனர் என்று அறிய விரும்புகின்றேன். இதுநாள்வரை நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கையையும் அறிய விரும்புகிறேன்.

மாநில வன விலங்கு வாரியத்தை உடனே உருவாக்கி, தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு எடுக்கப்பட்டுள்ள வன விலங்கு சரணாலய நிலங்களை வகைமாற்றம் செய்ய ஒப்புதல் வழங்கவும், தேசிய வன விலங்கு வாரியத்திற்கு அனுப்பி, மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்திற்குப் பரிந்துரை செய்யவும் சட்ட ரீதியான நடைமுறைகளைக் கடைப்பிடித்து வகைமாற்றம் செய்து, பணிகளை நிறைவு செய்ய அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 அக்டோபர் 28

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி விரிவாக்கப் பணிகளுக்கான முன்னனுமதி பெறுவதற்கு மத்திய அரசின் அனுமதி கேட்டதற்கு, அனுமதி மறுத்துவிட்டது. அவர்கள் கேட்ட அத்தனை விவரங்களையும் நாங்கள் கொடுத்திருக்கிறோம். அவ்வளவு விவரங்களைக் கொடுத்தும் மத்திய சுற்றுச்சூழல் துறை அனுமதி வழங்க மறுத்துவிட்டது. ஆகவேதான், மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று வழக்கு தொடுத்திருக்கிறார்கள். முடிந்தால் உங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி மத்திய அரசிடமிருந்து அதற்கு அனுமதி பெற்றுத் தந்தால், அதனைத் தமிழ்நாட்டிற்கு நீங்கள் செய்த சேவையாக நாங்கள் நினைப்போம். மத்திய அரசு மறுக்கிறது, மாநில அரசு இங்கே முயற்சிக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறீர்கள். தீர்வு உங்களிடம் தான் இருக்கிறது. தீர்வுக்கு ஏற்பாடு செய்யுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: புது subject-க்குப் போகாதீர்கள். ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ஒத்துழைப்பு எந்த நேரத்திலும் உறுதியாகக் கிடைக்கும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில வன விலங்கு வாரியத்தை அமைத்து ஓர் ஒப்புதல் பேப்பரை அனுப்பி வைத்துவிடுங்கள். இது சட்டரீதியான நடைமுறைதான். இதை செய்துவிட்டாலே அந்தப் பணி முடிந்து போய்விடும். இதற்கு நாம் court, case என்று அலையவேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே விண்ணப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி கோரிக்கைகளை அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்: கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி, மார்த்தாண்டம் பேருந்து நிலையப் பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டுக்குத் திறந்துவிட வேண்டும்.

2013 அக்டோபர் 28] [திருமதி எஸ். விஜயதரணி]

மார்த்தாண்டம் பேருந்து நிலையத்திற்கு மார்ஷல் நேசமணி பெயர் சூட்ட ஆவன செய்ய வேண்டும்.

குமரி மாவட்டம், குழித்துறை உட்கோட்டத்திற்குச் சொந்தமான சாலையான அருமனை-பனிச்சமூடு 33/4 மீட்டர் அகலச் சாலையை அகலப்படுத்தி, பலப்படுத்தி இருவழிச் சாலையாக மாற்ற வேண்டும். தற்போது கொடுக்கப்பட்ட ஒப்பந்தம் வெறும் 20 mm-க்குத்தான் போட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், மிகவும் மோசமான குழிகளுடன், பழுதடைந்து இந்தச் சாலை இருப்பதாலும், மழை அதிகம் பெய்யும் இடங்கள் என்பதாலும் இன்னும் சாலையை அதிக பலத்துடனும் போட அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பேச்சிப்பாறை-கோதையாறு சாலை குண்டும், குழியுமாக உள்ளது. அதனைச் சீரமைக்க வேண்டும் மற்றும் மலையோரச் சாலைகளில் மரணக் குழிகள் உள்ளன. அதுமட்டுமல்லாது, குமரி மாவட்டத்தின் அனைத்துச் சாலைகளும், பிற மாவட்டச் சாலைகளும் சீரமைக்கப்படவேண்டும்.

குமரியின் நீராதாரங்களான பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு அணைகளைத் தூர் வாரி, கரைகளைப் பலப்படுத்திச் சீரமைக்க வேண்டும்.

குமரியின் 2,050 குளங்கள் தூர்வாரப்பட்டும், குமரி விவசாயிகளின் ரத்த நாளங்களான பாண்டியன் கால்வாய், தோவாளை கால்வாய், சிற்றார் பட்டணங் கால்வாய், திற்பரப்பு வலது கரை, இடது கரைக் கால்வாய்கள், பி.பி. கால்வாய், என்.பி. கால்வாய் உட்பட அனைத்து கிளைக் கால்வாய்களின் கறைகள் பலப்படுத்தப்படவில்லை. கரைகளைப் பலப்படுத்தியும், உடைந்து பெயர்ந்து போன மடைகள், ஷட்டர்களை சீரமைக்கவும் அரசு ஆவன செய்ய வேண்டும்.

விளவங்கோடு தொகுதி, குழித்துறை, தாமிரபரணி ஆற்றில் தேங்காய்பட்டணம், முஞ்சிறை, அதங்கோடு, முளகுமூட்டுக் கடவு, விளாத்துறை அஞ்சாலிக்கடவு, திக்குறிச்சி ஆகிய பகுதிகளில் தடுப்பணை கட்டப்பட வேண்டும்.

குழித்துறை, தாமிரபரணி ஆறு வாவுபலி பொருட்காட்சி திடல் அருகே சுற்றுலாத் துறைமூலம் படகு குழாம் அமைக்க வேண்டும்.

[திருமதி எஸ். விஜயதரணி] [2013 அக்டோபர் 28

குமரியின் சிறப்பு என்று முன்னோர்களால் கருதப்பட்ட ஏ.வி.எம். கால்வாயின் கழிவுகளை அகற்ற வேண்டும். அதனை மீண்டும் பயன்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டும். அதில் படகுப் போக்குவரத்து ஏற்படுத்தவும், கடலிலிருந்து உப்பு நீர் உட்புகாமல் இருக்கவும், சுனாமி போன்ற நேரங்களில் அதில் உள்ள கழிவுகள், போன முறை நிகழ்ந்தது போல் மக்களுக்கு ஆபத்தாக ஆவதைத் தவிர்க்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏ.வி.எம். கால்வாய் சீரமைக்கப்பட வேண்டும்.

விளவங்கோடு தொகுதி, மேல்புறம் ஊராட்சி ஒன்றியம், வெள்ளாங்கோடு ஊராட்சி, சிதறால் மலைக்கோயிலைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டும்.

கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட நட்டாலம் ஊராட்சி, நட்டாலம் சிவன்கோவில், மறைசாட்சி தேவசகாயம் பிள்ளை பிறந்த இடங்களை ஒருங்கிணைத்து ஆன்மீக சுற்றுலாத் தலம் அமைக்கப்பட வேண்டும்.

குமரி மாவட்டத்தில் மார்த்தாண்டம், குழித்துறை, படந்தாலுமூடு, திருவட்டாறு ஆகிய பணிமனைகளிலிருந்து இயக்கப்படும் ஓட்டை, உடைசல், கைப்பிடி இல்லாத இருக்கைகள் மழை நேரங்களில் ஒழுகும் கூரையுடைய, மோசமான நிலையில் பயணம் செய்ய லாயக்கற்ற தகுதியில்லாத, பாதுகாப்பில்லாதப் பேருந்துகளை மாற்றிவிட்டு மத்திய அரசின் JNNURM திட்டத்தின்கீழ் நிதி பெற்று, புதிய பேருந்துகளைக் குமரி மாவட்டம் முழுவதும் இயக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

குமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் துறை, பள்ளம் துறை, விளவங்கோடு தாலுகா, வள்ளவிளை துறை, தூத்தூர் துறை, மார்த்தாண்டம்துறை ஆகிய கடற்கரையோரக் கிராமங்களில் மீன் இறங்கு தளங்கள், மீன் பதனிடும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வர வேண்டும்.

விளவங்கோடு தாலுகா, கடற்கரை ஓரமாக தேங்காய்பட்டணம்-இரயுமன்துறை இடையே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைக்க வேண்டும்.

விளவங்கோடு தொகுதி, கடையாலுமூடு பேரூராட்சி, திற்பரப்பு பேரூராட்சிகளை இணைக்கும்விதமாக கோதையாற்றின் குறுக்கே தெற்பக்கடவு பகுதியில் புதிய பாலம் கட்டப்பட வேண்டும்.

2013 அக்டோபர் 28] [திருமதி எஸ். விஜயதரணி]

விளவங்கோடு தொகுதி, கடையாலுமூடு பேரூராட்சி, வலிய ஏலா பகுதியிலுள்ள 171 வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

விளவங்கோடு தொகுதி, கடையாலுமூடு பேரூராட்சி, வலிய ஏலா பகுதியில் குடியிருக்கும் 182 வீடுகளுக்குச் சொந்தமான 97.36 ஏக்கர் நிலத்தைக் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்கிவிட்டு, அதுபோன்று இருமடங்கு பரப்பளவு உள்ள அரசு புறம்போக்கு நிலத்தை பாதுகாக்கப்பட்ட காடுகள் துறைக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனது கோரிக்கையை ஏற்று அந்தப் பேரூராட்சியும் தீர்மானம் நிறைவேற்றி மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்துள்ளது. அந்த நிலங்களின் வகைமாற்றத்திற்கு மத்திய அரசுக்கு தமிழக அரசு உடனே பரிந்துரை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருவட்டாறு ஊராட்சி ஒன்றியம், பேச்சிப்பாறை ஊராட்சி, மணியன்குழி அஞ்சல், அன்பு நகர் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு அரசு வழங்கிய குடியிருப்பு மனைகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலை, விவேகானந்தர் நினைவு பாறைக்கிடையே புதிய உயர்மட்டப் பாலம் அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

விளவங்கோடு வட்ட வழங்கல் அலுவலகம், விளாத்துறை ஊராட்சி, காப்புக்காடு ஊரைச் சேர்ந்த ராமச்சந்திரன் ஜெபா என்ற ஏழை கூலித் தொழிலாளி வறிய நிலையில் உள்ளார். அவரது குடும்ப அட்டை எண் 30/டபிள்யூ/0006838 வெள்ளை அட்டையாக (கவுரவ அட்டை) உள்ளது. இவரது ரேசன் கார்டை அரிசி கிடைக்கும் பச்சை அட்டையாக மாற்ற அரசு ஆவன செய்ய வேண்டும். இதுபோன்று குமரி மாவட்டம் மற்றும் தமிழகம் எங்கும் தகுதியான ஏழைகளுக்கும் பச்சை (அரிசி) ரேசன் அட்டை வழங்க வேண்டும்.

விளவங்கோடு தொகுதி, மார்த்தாண்டம் வழியாக குலசேகரம்-கொல்லங்கோடு பேருந்து, குளச்சல்-மார்த்தாண்டம்-குலசேகரம், நாகர்கோவில்-கொல்லங்கோடு (வழி திங்கள் நகர், கருங்கல், புதுக்கடை) நாகர்கோவில்-கடையாலுமூடு ஆகிய வழித்தடங்களில் புதிய பேருந்துகள் மற்றும் மகளிர் சிறப்புப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

[திரு. எஸ். விஜயதரணி] [2013 அக்டோபர் 28

விளவங்கோடு தொகுதி, முல்லையாறு குறுக்கே பல்லிக்கூட்டம் ஊரில் தடுப்பணை அமைத்து நெய்யார் இடது கரை சானல் கிளைகளான வன்னியூர், பரக்குன்று, செம்மாங்காலை, இடைக்கோடு, குடுக்கச்சிவிளை, மாலைக்கோடு வரை முடியும் கால்வாயைத் தோண்டி கால்வாய் அமைத்து பல்லிக்கூட்டம் வரை நீடிக்க வேண்டும்.

விளவங்கோடு தொகுதி, உண்ணாமலைகடை பேரூராட்சியையும், பாகோடு பேரூராட்சியையும் இணைக்கும் திக்குறிச்சி-வள்ளக்கடவு பாலம் மற்றும் தாமிரபரணி ஆறு குறுக்கே கட்டப்படும் பாலப் பணியும் விரைவுபடுத்தப்படவேண்டும்.

விளவங்கோடு தொகுதி, மலையோர குக்கிராமங்களுக்கு அரசு சிற்றுந்து இயக்க ஆவன செய்ய வேண்டும்.

குமரி மாவட்டத்தில் தரமான ரப்பர் உற்பத்தி செய்யப்படுவதால் மார்த்தாண்டத்தில் ரப்பர் ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டும்.

விளவங்கோடு தொகுதி, களியக்காவிளை பேரூராட்சியில் களியக்காவிளை ஊரில் அமைந்துள்ள மீன் சந்தையை நவீனப்படுத்த வேண்டும். குமரி மாவட்டம், செண்பகராமன் புதூரில் ரப்பர் பூங்கா அமைக்கப்பட வேண்டும். குமரி மாவட்டம், மார்த்தாண்டத்தில் ஐ.டி. பார்க் அமைக்கப்பட வேண்டும்.

குமரி மாவட்டம், விளவங்கோடு, கல்குளம் தாலுகாக்களை நிருவாக வசதிக்காகப் பிரிக்க வேண்டும். விளவங்கோடு தாலுகாவுக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டும். விளவங்கோடு தொகுதி, மார்த்தாண்டம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு நல்லூர் பேரூராட்சி, முளங்குழியில் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்ய வேண்டும். விளவங்கோடு தொகுதி, குழித்துறை, உண்ணாமலை கடை, பளுகல், களியக்காவிளை அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டும்.

விளவங்கோடு தொகுதி, கடையாலுமூடு பேரூராட்சி, கடையால் அரசு ஆரம்ப, மேல்நிலைப் பள்ளிகளுக்கு உட்கட்டமைப்பு வசதி மேம்படுத்தப்பட வேண்டும். பத்துகாணி ஆதி திராவிட பள்ளியைத் தரம் உயர்த்தி, வசதிகள் செய்துதர அரசு ஆவன செய்ய வேண்டும்.

2013 அக்டோபர் 28] [திருமதி எஸ். விஜயதரணி]

விளவங்கோடு தாலுகா, முஞ்சிறை அரசு மேல்நிலைப் பள்ளிக்கு வகுப்பறை கட்டடம், ஆய்வகம், நூலகம் அமைக்கப்பட வேண்டும். விளவங்கோடு தொகுதி, பளுகல் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு நூலகக் கட்டடம் கட்டப்பட வேண்டும். கல்குளம் தாலுகா, திருவட்டாறு ஊராட்சி ஒன்றியம், பழுதுபட்ட கோதையாறு அரசு நடுநிலைப் பள்ளிக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்ய வேண்டும்.

விளவங்கோடு தொகுதி, கடையாலுமூடு பேரூராட்சி, இடைக்கோடு பேரூராட்சி, பளுகல் பேரூராட்சி, பாகோடு பேரூராட்சி, அருமனை பேரூராட்சி, நல்லூர் பேரூராட்சி ஆகிய பேரூராட்சிகளுக்குச் சுத்திகரிக்கப்பட்ட, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

விளவங்கோடு தொகுதி, உண்ணாமலைகடை, கிராயங்குழி நெடுஞ்சாலையை சிமென்ட் கான்கிரீட் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தொடக்கப் பள்ளி தொடங்க வேண்டும் என்று சொன்னால், மத்திய அரசுக்கும் பங்கு இருக்கிறது, மாநில அரசுக்கும் பங்கு இருக்கிறது. சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின்கீழ் பள்ளிகளைத் தொடங்க வேண்டும் என்று மத்திய அரசு கட்டாயக் கல்வித் திட்டத்திலே நிதியினை வழங்கி வருகிறது. இந்த ஆண்டு புதியதாகத் தொடக்கப் பள்ளி தொடங்கப்பட வேண்டும் என்று ஒரு பைசா நிதிகூட மத்திய அரசால் வழங்கப்படவில்லை. இப்போர்பட்ட சூழ்நிலையில், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் மாநில அரசின் நிதி ஆதாரத்தை வைத்தே தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில், பள்ளிக்கூடங்கள் இல்லாத இடங்களில், 54 தொடக்கப் பள்ளிகளை ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் எவ்வளவு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரங்களையெல்லாம் கேட்டிருக்கிறார்கள். 2013-2014 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

[திரு. பி. பழனியப்பன்] [2013 அக்டோபர் 28

இதுவரையில் 51 ஆயிரத்து 757 ஆசிரியர்கள் தேர்வு வாரியம்மூலம் தேர்வு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஆங்கிலவழிக் கல்வி வாயிலாக எத்தனை மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்று கேட்டார்கள். 1 இலட்சத்து 21 ஆயிரம் மாணவர்கள் புதியதாக ஆங்கிலவழிக் கல்வியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள் கேட்ட கேள்விக்கு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அதாவது, டெல்டா பகுதி விவசாயிகளுக்கு நிவாரண உதவித் தொகையாக ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் வீதம் 3.16 இலட்சம் ஏக்கர் பரப்பிற்கு 541.50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 3 இலட்சத்து 52 ஆயிரத்து 213 விவசாயிகளின் வங்கிக் கணக்கில் ரூ.526.26 கோடி வரவு வைக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தையும், டெல்டா அல்லாத விவசாயப் பகுதிகளுக்கு 50 சதவீதத்திற்கு மேல் பயிர் சேதமுற்ற விவசாயிகளுக்காக கிட்டத்தட்ட 835 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, இதுவரை 817 இலட்சத்து 36 ஆயிரத்து 941 விவசாயிகளுக்கு 804 கோடி ரூபாய் அவர்களது வங்கிக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்கள். ஆனால், வறட்சி நிலையைக் கருத்தில்கொண்டு, தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 19,665.13 கோடி ரூபாய் கேட்டு மத்திய அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டது. திருமதி விஜயதரணி அவர்கள் பேசுகின்றபொழுது 19 ஆயிரம் கோடி ரூபாயைச் செலவழிக்கவில்லை என்ற கருத்தை இங்கே பதிவு செய்தார்கள். இந்த 19,665 கோடி ரூபாய்க்கு, வறட்சி ஏற்பட்டதனால் நம்முடைய மாநிலம் என்னென்ன வகையில் பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டது என்ற விவரம் இன வாரியாக அறிக்கையாக மத்திய அரசுக்குத் தரப்பட்டிருக்கின்றது. அதை என்னுடைய பதிலுரையில் விளாவாரியாக நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். இப்பொழுது அந்தந்த விவசாயிகளுக்கு

2013 அக்டோபர் 28]

ஏற்பட்டிருக்கின்ற இழப்பிற்கு நிவாரணமாகத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு இதைத் தந்து உதவி செய்திருக்கின்றார்கள் என்ற விவரத்தினையும் மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (29-10-2013) செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-54 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

34. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய (மூன்றாம் திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 17/2012) 1-10-2012 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என நிர்ணயித்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 5-9-2012 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 81-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1919ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348 (பி) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு மற்றும் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).]

35. 2012 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (இரண்டாம் திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 48/2012) 1-1-2013 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என நிர்ணயித்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 26-12-2012 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 130-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [(1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1978) 88(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).]

[2013 அக்டோபர் 28

36. 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பயணப்படி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து பொது (நிருவாகம்-I மற்றும் சட்டமன்றம்) துறையின் 11-7-2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 691-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [(1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).]

37. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களுக்கான (முன்னாள் உறுப்பினர்களுக்கான மருத்துவ கவனிப்பு மற்றும் சிகிச்சை) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து பொது (நிருவாகம்-I மற்றும் சட்டமன்றம்) துறையின் 23-7-2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 787-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [(1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)].

38. 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (எம்1) துறையின் 25-6-2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 76-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [(1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1975) 58(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).]

39. சென்னையிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் இரண்டாம் உறுப்பினரது வேற்றுப்பணிக் காலத்தினை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள காலத்திற்கு நீட்டிப்பு செய்தது குறித்து 17-5-2013 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (இ2) துறையின் அரசாணை (3டி) எண்.4-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [(2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

26. 2013-2014 ஆம் ஆண்டின் "கூடுதல் செலவுக்கான" மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

2013 அக்டோபர் 28]

27. 2013-2014 ஆம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்)

28. 2013-2014 ஆம் ஆண்டின் முதல் துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

29. சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் ஏழாவது அறிக்கை. (2013-2014)

30. சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் எட்டாவது அறிக்கை. (2013-2014)

31. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (ஒன்பதாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

32. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (பத்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

33. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (பதினொன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

34. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (பன்னிரெண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

35. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (பதின்மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

36. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (பதினான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

37. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (பதினைந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

38. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (பதினாறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

* * * * *